186

Presen to the [illegible]

[illegible]

2 [illegible]

2-3 [illegible]

3.

1-(48, ~~[illegible]~~ 53)-192-248

2-(55, ~~[illegible]~~ 61,)-219-264

3-(62, ~~[illegible]~~ 72)-264-288

4-(73—80)-288-324

5-(81—84)-324-342

6-(84—89) 343-368

7-(89—97)-368-384

8-(97—104)-385—418

9-(104—111) 418-448

10-(111—117)-448-472

11-(117—122)-472-496

12-(122—128) 496-520

உ

சிவமயம்.

ஸிவஜ்ஞாநபோதம்

இதற்கு
சமஸ்கிருத சுலோகத்திற்கு
ப்ரம்மஸ்ரீ அவதூம்ரக்ஷேத்திரநிவாசி
விஸ்வேஸ்வர சாஸ்திரியாரவர்கள்
பதவுரையும்,
மெய்கண்டதேவர்
இயற்றிய தமிழ்ச்சூத்திரமும்,
வார்த்திகப்பொழிப்புரையும்,
பாண்டிப்பெருமாள் விருத்தியும்.

இவை
கோ-சண்முகசுந்தர முதலியாரவர்களால்
சிவஞானபோதயந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டன.

சர்வஜித் ௵ ஆவணி ௴
சென்னை, சிந்தாதிரிப்பேட்டை.

சிவமயம்.

சிவஞானபோதோற்பத்தி.

உலகங்களுக்குநடுவா யிலக்ஷமியோசனையுந்நதமு முப்பத்திராயிரம்யோசனை விஸ்தீர்ணமுமுடைத்தாய், பசும்பொன் விறமாயிருக்கும் மஹாமேருவினுச்சியினடுவே சோதிசிகரமென்னும் பெயரையுடைத்தாய், இருபதினாயிரம் யோசனையுந்நதத்தையும் விஸ்த்தீர்ணத்தையுமுடைத்தாய், இரசிதம்போலும் படி... லுயிர்மலையாயிருக்கிற மஹாகைலாசத்தினடுவே; சுத்... ஸ்வரூபமாகிய வடவிருக்ஷமூலத்திலே சுத்தவித்தி...ான மந்திரசிம்மாசநத்தின்மீது பக்குவான்மாக்களு... சசங்காரநிமித்தமாக தக்ஷணாபிமுகமாக வெழுந்தரு... ஸ்ரீ கண்டபரமேஸ்வரனை, பிரமவிஷ்ணு இந்திராதி... ம சர்வருஷிகணங்களுஞ் சேவித்திருக்க, பரமகிருபாளுவான ஸ்ரீ நந்திகேஸ்வரநாயனார் சுவாமியைப் பிரதக்ஷணக்கிரம... வாதசவாரஞ் சாஷ்டாங்கமாகநமஸ்கரித்துக் ... கி,சுவாமீ? சர்வாநுக்கிரகார்த்தமாகத் தக்... சாஸ்திரவியாக்கியாந முத்திராசகிதமாக வடியேங்களுக்கு ...வைப்பிரசாதித்ததால் கிருதார்த்தரானோம். சிருஷ்டிகாலத்திலே சுவாமியநுக்கிரகம்பண்ணிய வேதாகமங்கள் வெகுவிஸ்தாரமாகையால்,அவையெல்லாமோதியுணருஞ் சத்தியில்லாமையால், சமுத்திரகலசநியாயமாக வவரவர்களறிந்தமாத்திரங்கொண்டு பூர்வபக்ஷமுஞ் சித்தாந்தமுமாக வநேக சாஸ்திரங்கள்பண்ணினார்கள்; அதனாற்சமயங்களுமநேகமாயிற்று: அச்சந்தேகங்களெல்லா நிவிர்த்தியாகிப் பரமப்பிரயோசனமாகிய மோக்ஷத்தையடைவதற்கு சங்கிரகமாகவுபதேசிக்க வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்த பிரஸ்னையாவன?

(க) சகத்தானது.—அநாதியோ-ஆதியோ.

(உ) சகத்து,சுவாபிகமோ - ஏதுவுள்ளதோ.

(௩) ஏதுவானது, காலகன்மாதிமாத்திரமோ - சேதநவேதுவோ.

(௪) சேதநன்றான், சமுசாரியோ - நித்தற்கற்பாந்தமுக்தனோ - அநாதிமுக்தனோ.

(௫) அநாதிமுத்தன்றான், அநேகனோ - ஏகனோ.

(௬) அவன்றனக்குத்தான் இலக்ஷணமேது.

(௭) அந்தக்கத்தாவினுடைய சத் பாவத்திலே பிரமாணமேது.

(௮) அவன்நாமமேது.

(௯) அப்படியொருவன்சித்தித்துள்ளளவில், சகத்து நிருபாதானமோ - சோபாதானமோ - சூந்யோபாதானமோ - பரமாணுபாதானமோ - பிரதானோபாதானமோ - கேவலம் பிரமோபாதானமோ - கேவலம் மாயோபாதானமோ - ஈஸ்வரசத்தியதிஷ்டிதமாயோபாதானமோ.

(௧௦) சகத்துற்பத்தி, சங்காதரூபமோ-ஆரம்பரூபமோ-விவர்த்தரூபமோ - பரிணமரூபமோ - காரணசமூகரூபமோ -விர்த்திரூபமோ.

(௧௧) ஈஸ்வரன்சகத்சிருஷ்டியைப்பண்ணுகிறது, கன்மாநபேக்ஷயோ - கன்மசாபேக்ஷயோ.

(௧௨) கிருத்தியம்பண்ணுவது,லீலையோ-பிரயோசநத்தையுத்தேசித்தோ.

(௧௩) உத்தேசம், ஸ்வப்பிரயோசநமோ - பரப்பிரயோசநமோ.

(கச) கிருத்தியங்கள் பண்ணுமிடத்து, கரணநிராபே க்ஷையோ கரணசாபேக்ஷையோ.

(கரு) கரணந்தான், தேகவியாபாரமோ - பஞ்சேந்திரிய ங்களோ - அந்தக்கரணங்களோ - விந்துவோ - சத்தியோ.

(கசு) சத்தியாகில், அந்தச்சத்தி அநேகையோ - ஏகை யோ - சிவனுக்குச் சம்யுக்தையோ - சமவேதையோ - சடரூபை யோ - சித்ரூபையோ.

(கஎ) சிவனுக்கு பின்னலக்ஷண லக்ஷியமானஜீவன், ஞ [illegible] தேகமோ - இந்திரியசமஷ்டியோ - பிராணவாயு [illegible] அந்தக்கரணவர்க்கமோ - ஆலயவிஞ்ஞானமோ - இவைபி [illegible]மோ.

[illegible] அந்நியமாகில், சடமோ - சித்தோ - அகர்த்தாவோ - [illegible] - அணுவோ - மத்தியமபரிமாணமோ - விபுவோ.

(ககூ) ஆன் [illegible] ஏகனோ - அநேகனோ - கிஞ்சிஞ்ஞனோ - சர்வஞ் [illegible] பஞ்சகோற்பத்திஞானோ பாவமோ - மித் [illegible] வாசனையோ - அநிர்வசநியா வித் தை [illegible]மோ.

[illegible] அந்தஆணவமலம், அதிரவ்வியரூபமோ - திரவியரூ டமோ.

(உக) திரவியரூபமாகில், ஜந்நியமோ - அஜந்நியமோ.

(உஉ) இந்தமலத்திற்கு மான்மாவிற்குஞ் சம்பந்தம், சம வாயமோ - சம்யோகமோ. (சையோகம்=சமயோகம்.)

(உங) இந்தமலம், பிரதிபுருஷபிந்நமோ - சர்வஜீவசாதா ரணமோ - விசித்திரசத்தியுடையதோ - விசித்திரசத்தியில்லாத தோ - அநித்தியமோ - நித்தியமோ.

(உச) இந்தமலத்தையுடைய ஜீவன், சுவதந்திரனோ - பரதந்திரனோ.

(உரு) பரதந்திரனாகில் தன்நிர்வாகமாயிருக்கிற ஈஸ்வரவியாபாரமானது, கரணரூபமோ-சந்நிதிமாத்திரமோ.

(உசா) சந்நிதியாவது, சமீபமாயிருக்கையோ-சத்திசமீபமோ - காரியோன்முக்கிய விசிஷ்டசத்தியோ.

(உஎ) இப்படிச்சந்நிதிமாத்திரத்திலே ஆன்மாக்களைப்பிரேரிக்கிறஈஸ்வரன்,பிரமாணவிர்த்திப்பிரகாசியனோ-ஞானசொரூபனோ - சர்வப்பிரகாரத்தினாலுமதிர்ஸ்ஸியனோ-சொரூபஞானப்பிரகாசனோ - ஞானஸ்வரூபமாத்திரமோ-ஞானானந்தஸ்வரூபியோ - விர்த்திஞானப்பிரகாசியனோ- ஆன்மஸ்வரூபஞானப்பிரகாசியனோ.

(உஅ) அந்தஈஸ்வரசத்பாவத்திலே, ஆகமம் பிரமாணமோ - ஆகமமும் பாரிசேஷமும் பிரமாணமோ.

(உகூ) இந்தப்பிரமாணத்தினுடைய பிரமாண்ணியமானது, பரதோவா-ஸ்வதோவா.

(௩0) இந்தப்பதிக்கு, அந்நியமாகச்சொல்லப்பட்ட பசுவிற்கும் பாசத்திற்கும் இலக்ஷணமேது.

(௩க) இந்தப்பசுக்களுக்கு, மோக்ஷத்திலே சாதனமில்லையோ - உண்டோ.

(௩உ) அதுதான், கன்மமேசாதனமோ - ஞானகன்மசமுச்சயஞ்சாதனமோ. கன்மவேதுவான ஞானஞ்சாதனமோ.

(௩௩) ஞானமுங்கனமமும், ஸ்வதந்திரசாதனமோ - அங்காங்கிபாவசாதனமோ.

(௩ச) கன்மஞானத்திற்கு, ஐந்நியபாத்தியோபகாரமோ - ஆராதுபகாரமோ.

(௩௫) அந்தஞானம், சிவசீவர்களுக்குப் பேதவிஷயஞான மோ - அபேதவிஷயஞானமோ - பேதாபேதவிஷயஞான மோ - தாதாத்மகஸ்வரூபமோ.

(௩௬) இந்தஞானத்திற்கு ஏதுவான சைவாகமத்திற் க திகாரி த்ரைவர்ணிகரோ - ஸ்ரீருத்திரத் துவிஜபந்துக்களோ, சாதுர்வர்ணத்தி னவர்களுமோ.

(௩௭) ஆகமாதிகாரிகள், கேவல நாலுவர்ணத்தி னவர்க ளுமோ - சமஸ்காரவிசிஷ்டரோ.

(௩௮) அந்தசமஸ்க்காரந்தான், ஸ்மார்த்தமோ - சைவ மோ [illegible]

[illegible]சவந்தான், சமயவிசேஷமோ-நிர்வாணதீக்ஷையோ.

[illegible] நிர்வாணதீக்ஷையிலே, வர்ணமாத் திரத்திலே அ [illegible] - முமுக்ஷுவோ.

[illegible] [illegible]ந்த முமுக்ஷுவின் இலக்ஷணமேது.

[illegible] [illegible]யைப்பண்ணு மாசாரியனிலக்ஷணமேது.

(௪௩) [illegible]சாரியன்றான், ஜீவன்முத்தனோ-சிவனோ

(௪௪) தீக்ஷையிலே சோதிக்கப்படு மந்திர பத வர்ண புவ னதத்துவங் கலையென்னு மவைகளினுடைய சொரூபமேது.

(௪௫) இந்தஅத்வாவைச் சோதிக்குமடைவேது.

(௪௬) தீக்ஷாநந்தரம், பரமமுத்தனோ - ஜீவன்முத்த வி யவஹாரமுண்டோ.

(௪௭) ஜீவன்முத்தர்க்கு, கிஞ்சித் கிருத்திய மில்லையோ-உ ண்டோ.

(சஅ) ஜீவன்முத்தியவத்தையில், ஆகாமியமேறுமோ-நீ ருதோ.

(சகூ) ஏறுதற் குபாயமேது.

(ரு0) முத்தியானதுதான், தேக விநாசமோ-பிரகிருதிபு ருஷவிவேகத்தைப்பண்ணிப் பிரகிருதிக்குப் புறம்பாயபுருஷமா த்திரமாயிருக்கையோ - ஞானசத்திவிச்சேதமோ - ஆத்தியந்தி கதுக்கவிச்சேதமோ - உலோகாக்கரத்தை யடைவதோ - நித் தியமான ரூபத்தைப்பெறுவதோ - அணுவாதியைப்பெறுவ தோ - கணுதிபத்தியமோ - பாஷாணவஸ்திதமோ - அவிர்ய சந்நிய வித்தியா நிவிர்த்தியோ - சிவசாயுச்சியமோ.

(ருக) அந்தச்சிவசாயுச்சியந்தான், சிவகுணசங்கிராந்தி யோ - சமுத்பத்தியோ - சிவசமாவேசமோ - ஆன்மாவிலேலக்ஷ ணக்குள்ள சர்வஞ்ஞத்துவாதி அபிவியத்தியாய சிவசமமாயிரு ப்பதோ - அகண்டாகாரசச்சிதாநந்தாத்துவய சிவாநந்யா நுபவாத்ம சாக்ஷாத்காரமோ: என்னுமித்தியாதி சந்தேகங்க ளெல்லாம் நிவிர்த்தியாம்படிக்கு அநுக்கிரகம்பண்ணவேணு மென்றுவிஞ்ஞாபனம்பண்ண.

ஸ்ரீ தக்ஷணாமூர்த்தி பகவான் சந்தோஷித்து, நந்திகேஸ் வரபகவான் சிரஸ்ஸிலே ஸ்ரீ அத்தத்தை வைத்து, நீர் பண்ணி ன பிரஸ்னே உலோகாநுக்கிரகமாச்சுது; இங்ஙன மொருவர்க்கு ம் பிரஸ்னே பண்ணக்கூடாது.

சிருஷ்டிகாலத்திலே பரமசிவம் சதாசிவமூர்த்தியை யதி ஷ்டித்து, மஹேசகளகப்பிரகாரமென்றும் பிரதி சங்கிராப்பிர

காரமென்றும் இருவகைத்தாயருளின பிரணவாதி சிவர்கள் பத்துப்பேர்க்கும் அநாதிருத்திராதியான உருத்திரர் பதினெட்டுப்பேர்க்கும் ஆக விருபத்தெட்டுப்பேர்க்கும் காமிகாதி வாதுளாந்தமான ஆகம மிருபத்தெட்டையும் பிரதி சங்கிதாப்பிரகாரமாக வருளினு லநுக்கிரகம் பண்ணினுர்.

இந்த விருபத்தெட் டாகமங்களையு மஹேளசப்பிரகாரமாக அநந்தேஸ்வரதேவர்க்கு அநுக்கிரகம்பண்ண, அந்தப்பிரகாரமே அநந்தேஸ்வரதேவர் நமக் கநுக்கிரகம் பண்ணினுர்.

அதிலே * இரௌரவாகமத்திலே † பாச விமோசனப் படலத்திலே அநுஷ்டுப் சந்தசாக துவாதச சூத்திரஞ் சர்வாகமசாரமாயிருக்கும்; அதை யுமக்குபதேசம்பண்ணுகிறும், அ[illegible] தேவமுனிகணங்களிடத்திலே பக்குவமறிந்து நீரும்போ[illegible]று "ஸ்ரீ புந் நபுஞ்சகாதித்துவா" தித்தியாத் துவாதச சூத்திரத்தை[illegible]னுடைய வர்த்தத்தையு மநுக்கிரகம்பண்ண:—

* [illegible]வம்=ருருஎன்பவர்க்கு ஆதியில் உபதேசித்தருளியதால் [illegible]மெனப் பெயர் கொண்டது. இஃது வடநூற் சிவ[illegible]க உரை யச்சிட்டிருப்பதில் கூறுகின்றது.

† பாச விமோசனப்படலம் ரௌரவாகமத்தில்—எஅ—வது படலம், கஉ வது அத்தியாயம் - துவாசசூத்திரம் - சிவஞானபோதம்.

அந்த நந்திகேஸ்வர பகவான், சநற்குமார மகாருஷிக்கநுக்கிரகம்பண்ண, அவர் சத்தியஞான தரிசகர்க் கநுக்கிரகம்பண்ண, அவர் பரஞ்சோதி மஹாமுனிக் கநுக்கிரகம்பண்ண, அவர் கிருபாவசத்தினுலே யித்தேசத்தெழுந்தருளித் திருவெண்

ணய்நல்லூரிலே சாம் சித்தராக அவதரித்திருக்கும் மெய்கண்ட தேவ சிவாசாரியரை இந்தச் சிவஞானபோதத்தை மொழிபெயர்த்துத் தமிழாகச்செய்து பக்குவான்மாக்களுக் குபதேசியுமென்று அநுக்கிரகம்பண்ண, அவ்வாறே மொழிபெயர்த்து முன்னூற்பெயராகவே யுரைத்துத் தம்முடைய சிஷியர்கள்-௪௯-பேருக்கு மநுக்கிரகித்துத் தம்முடைய பிரதான சிஷியராகிய அருணந்திதேவ சிவாசாரியாரை யிதை விஸ்தரித் தொருகிரந்தஞ் செய்யும்படி ஆஞ்ஞாபித்தனர்.

இச்சரித்திரம், சிவஞானசித்தியாருக்கு. சிவாக்கிரயோகிகள் எழுதிய உரையிலிருப்பதை எடுத் திவ்விடம் அச்சிடுவிக்கப்பட்டது.

திருவாதவூரராகிய மாணிக்கசுவாமிகளுக்கு அநுக்கிரகம்செய்தியம் குருந்தமரத்தடியில் குருமூர்த்த ரூபமாக எழுந்தருளிய போதும் இச்சிவஞானபோதத்தையே அநுக்கிரகித்ததாக திருவாதவூர்புராணம் திருப்பெருந்துறைச்சருக்கும் ௩௰-௩௯-செய்யுள் கூறுகின்றன.

"செங்கைமீது, பொருந்தமுறும் புத்தகமே தையவென்னப் பொய்ம்மையிலாச்சிவஞான போதமென்றார்" "என்றலுமேசிவமேதுஞானமேதிங் கிலங்கியிடும்போதமேதியம்புவீரே, லன்று வடநீழலில்வர்திருந்தார்நீரே யடிபேணுமுமக்கடிமையாவேனென்ன, நின்றசிவமொன்றதனைத் தேர்தன்ஞான நிகழ்போதந்தேர்ந்ததனைத் தெளிதலாமென், றுென்றியநற்பொருள்வினவி நிற்பார்சிந்தை யுருகும்வகையுரைசெய்தாருவமையில்லார்" என்பதனாலுணர்க.

இந்நூற்சிவஞானபோதமொன்றே ஞானார்த்தவிளக்கத்திற் குரியதென்பதை தெள்ளிதிற்றுணியப்படும்.

உ

சிவமயம்.

மெய்கண்டதேவர் தோற்றப் பிரபாவம்.

௧—திருப்பெண்ணாகடத்துச் சைவ வேளாளரில் அச்சுதன் என்னும் ஒருவர் மிகுந்த நற்குண நற்செய்கை யுடையராய் [illegible]துரந்தரராய்த் திருவெண்காட்டுச்சிவாலயத்தி லெழுந்தருளியிருக்கும் சிவபிரானுக்கு வந்தனை வழிபாடுசெய்பவராயிருந்தனர்.

அவர் "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த — மக்கட்பேறல்லபிற" என்ற சிந்தையையுடையராய்த் தனக்குப் புத்திரப்பேற்றைவிரும்பி தனக்கான்மார்த்தமாயுள்ள சுவேதவனம் என்னும் திருவெண்காட்டில் பிரம்மவித்தியாநாயகி சமேத சுவேதாரணியேசுரரை வழிபட்டுத் திருஞானசம்பந்த சுவாமிகளாலியற்றிய திருவெண்காட்டுத் தேவாரப்பதிகத்தில் "பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடுள்ளநினை - வாயினவேவரம்பெறுவ ரையுறவேண்டாவொன்றும் - வேயனதோளுமைபங்கன் வெண்காட்டுமுக்குளநீர் - தோய்வினையாரவர்தம்மைத் தோயாவாந்தீவினையே" என்னும்,- ௨ - வது பாசுரத்தில் 'பிள்ளையினோடுள்ள நினைவாயினவேவரம்பெறுவர்—வெண்காட்டு முக்குளநீர்தோய் வினையார்' என்னுங்கருத்தைக் கடைப்பிடித்து முக்குளநீரில் ஸ்நாகஞ்செய்து சிவபெருமானைத் தியானித்துத் தவஞ்செய்வாராயினர்.

ஸ்வேதம்-வெண்மை, வநம் - காடு=சுவேதவநம் - திருவெண்காடு. சோழநாட்டி லுள்ளது. சுவாமியார் பெயர் - சுவேதாரணியேசுரர், தேவியார் - பிரம வித்தியாநாயகி. முக்குளநீர் - அவ்விடத்துள்ள தீர்த்தத்திலொன்று, அத்தீர்த்தம் பரமசிவத்தின் முக்கண்ணினின்றும் மூன்றுதுளிகளாய் அவ்விடத்தில் தேவியாருக்குத் திருநடனங்காட்டியபோது தோன்றியது. இதனைத் திருவெண்காட்டுப்புராணத்தாலறிக.

௩—அச்சுதப்பெயரோன் தவத்திற்கிரங்கி மௌனநிலையையுடைய ஒருபுத்திரனைச் சிவபெருமான் அக்குளத்தின் படிக்கரையில் அவர்முன்னர் தோற்றுவிக்கச்செய்து இதனையுன்மகவாய் வளர்க்கக்கடவை என அசரீரிவாக்களித்தனர். அவ்வசரீர வாக்கினைக்கேட்டு குழந்தையிருக்கக்கண்ட சிவநேசத்தபோதனச் சைவவேளாளர் மிகவும் சந்தோஷமெய்தி அக்குழந்தையைத் தழுவியெடுத்து மார்போடணைத்துத்தமதுமனைவிபாலளித்தனர்.

௪—பின்பு அவ்விருவரும் அக்குழந்தைக்கு சுவேதவநப் பெருமான் அநுக்கிரகித்த மூர்த்தமாதலால் காரணந்தோற்றச் *சுவேதவநப்பெருமான் என்னுந்திருநாமஞ்சூட்டி மிகுபோராநந்தத்துடன் வளர்த்துவந்தனர். ஊரவர்யாவரும் இக்குழந்தையாரோ பழுதுடையாள் பெற்றுள்ளதுபோலும்; அதைக் குளத்தருகி லெறிந்துவிட இச்சைவர் பிள்ளை பித்துகொண்டே சிவபிரான் அநுக்கிரகித்ததெனை எடுத்து வளர்த்துவருகின்றனர் என நிந்தைகூறத் தொடங்கினார்.

௫—ஊரவர் கூறும் நிந்தையை பொறுத்திலராய் "எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்—பண்புடை மக்கட்பெறின்" என்பதன்றோ உலகியலிற் சிறந்தது. அஃதங்ஙனமாகச் சி

---

*பட்டினத்துப் பிள்ளையார்க்கும் இக்காரணத்தாலே திருவெண்காடரெனப் பெயரிடப்பட்டது.

பிரான் நமக்கு இவ்வண்ணம் அமைத்திட்டது நம்முடைய முன்வினையேபோலும்.

௬—"அவாவிலார்க்கில்லாகுந்துன்பம் அஃதுண்டேற்—றவா அது மேன்மேல்வரும்" என்னும் வாக்கியப்படி நமக்கு இவ்வளவா துன்பமே விளைக்கின்றது, யாதுசெய்வோம்! என வருந்தி, வருகையில் சிவச்செயலால் திருவெண்ணெய் நல்லூரிலிருந்து தன் பத்தினியின் சகோதரர் காங்கேயபூபதி தன் வீட்டிற்குவந்த [illegible]ர்த்துண்டு அவ்விடத்தில் நடந்துள்ள யாவையும் நோக்கி அ[illegible]ந்தையைத் தான் சில நாள் வளர்த்துவருவதாய் தன் [illegible]னர்மாட்டுவினவி விடைபெற்றுத் தம்மிடத்தெடுத்துச் சென்று சுவேதவனப்பெருமானை வளர்த்துவந்தனர்.

௭—[illegible]ந்தை இரண்டுபிராயத்தில் வீதியில் மணலிட்டு விக்கள்[illegible]ம்சித்தத்தன்மையால் சிவபிரானை யர்ச்சித்துர்[illegible]த்தும் நிற்கும்போது, அவ்வழியில் கிருபாமூர்த்தியாய் எழுந்தருளிய பரஞ்சோதிமாமுனிவர் இக்குழந்தையின் பரிபக்குவத்தினையும், [illegible]ந்தையின்மாட்டுத் தம்மனம் கவர்ந்திழுக்கும் தன்மையையும், சிவபிரான் செயலையும், ஞானதிருஷ்டியாலறிந்து; அக்குழந்தைக்கு உடனே சைவதீக்ஷைசெய்து, சுவேதவனப்பெருமான் என்னும் பிள்ளைத்திருநாமத்தினை மாற்றி மெய்கண்டதேவனென்னும் தீக்ஷாநாமந் தந்து, தான் சந்தானபரம்பரையாய்ப் பெற்றுள்ள சிவஞானபோதத்தினைத் தந்து, அதின் பொருள்களை யுபதேசித்துத் தமிழுலக முய்யும்பொருட்டுச் சிவஞானபோதத்தினைத் தமிழாகச் செய்யக் கட்டளையிட்டுச் சென்றனர்.

அ—மெய்கண்டதேவர் ஐந்துபிராயத்திற்குள் தினது ஆன்மார்த்த பரார்த்த பூஜாவிசேஷங்களால் திருவெண்ணெய் கல்லூரிலெழுந்தருளியுள்ள பொல்லாப்பிள்ளையாரால் வேதசிவாகமங்களையும் சிவஞானபோதத்தின் பொருள்களையும் நன்கு போதிக்கப் பயின்று வந்தனர். அல்லாமலும் சிவஞானபோதத்திற்குப்பொல்லாப்பிள்ளையார் செய்து தந்த சூர்ணிகையைக்கொண்டு தமிழ்நூல் சிவஞானபோதமும் அதற்கு வார்த்திக உரையும் செய்தனர்.

கூ—இவ்வாறு பயின்று வரும் அவை, அவ்வூரிலுள்ளோர்கட்குத்தெரிந்தவையன்று ; மெய்கண்டதேவர் தான் அந்தரங்கமாய்க் கேட்கும்பொருள்களைச்சிந்தித்தும் தெளிந்தும் நிட்டைகூடியும் வருவதன்றி வேறொரு சிந்தனையும் செயலுமில்லாது மௌனமாயிருப்பதை, ஊரவர் கண்டு இக்குழந்தை ஊமைப்பிள்ளைபோலும்; ஐயோ! ஈதென்னபாவம்! என்றுங்கூறிவந்தனர்.

கா—இச்சொல் குழந்தையை வளர்த்துவருபவருக்குத் தன் மைத்துனர் கொண்டதுன்பத்தினு மதிகமாயிருந்தது.

கக—ஒருநாள் பொல்லாப்பிள்ளையாருச்குப்பூசைசெய்யும் சிவத்துவிசர் அக்கோயிலுக்குப் பூசைசெய்து சென்றபின் மீட்டும் அக்கோயிலுக்குச் சுவாமி தரிசனார்த்தமாய் வரநேரிட்டது. அப்போது அக்கோயிலில் யாதோவொரு சந்தடி கேட்பதைச் செவியுறுத்துச்சற்றுத்தூரத்திலேயேநின்றுஅதனை ஆராயும்போது, பிள்ளையாரும்ஊமைக்குழந்தையும்ஆசாரிய சிஷியபாவமாய் உத்தரப் பிரதியுத்தர ஆக்ஷேபசமாதானங்கள் செய்து வருவதைக்கண்டு அத்தியாச்சரியமடைந்து, உடனே ஊரிற்சென்று

பிள்ளையை வளர்த்துவருபவருக்கு அதிக ஆவலுடன் தெரிவிக்க; அதனைக்கேட்ட சைவவேளாளர் நம்பிக்கையின்றி ஆதிசைவருடன் கூடித் திருக்கோயிலருகில் வந்து அவ்விடத்து நடக்குஞ் செய்திகள் யாவையும் ஆதிசைவர் தெரிவித்தவண்ணம் உண்மையாகக்கண்டு, இருவரும் கோயிற்குட்சென்று பொல்லாப்பிள்ளையாருடன் குழந்தையையும் வணங்கி, ஊரவர்கூறும் நிந்தனைகட் காளாக்காமல் இனி யாவருங்காண வாய்பேசிவரவேண்டுமென்று குறையிரந்துகேட்ப, அவரன்பிற்கு அவ்வாறு திருவுளமிரைந்து அன்றுதொட்டு வேண்டுங்காரியங்கட்கு வார்த்தையாடிவந்தனர்.

சஉ—இச்செய்தி சிலதினத்துள் அவ்வூர்முழுவதும் பரவிற்று.

சங—திருத்துறையூர் சகலாகம பண்டிதரென்னும் அருணந்தி சிவசாரியார், தமது சிஷியவர்க்கத்தின் வேண்டுகோட்படி திருவெண்ணெய் நல்லூர்க்கெழுந்தருளி வேதசிவாகமங்களைப் பாடமோதி வரும்போது; சிஷியர்கள் மெய்கண்டதேவர் வசிக்குமிடத்திற்கு நேரே போய்வருவதை மெய்கண்டதேவர் கண்டு, ஒருநாள் அந்தச் சிஷியர்களை அழைத்து அவர்கள் கேட்டுவரும்பாடங்களில் கருதலாயுள்ள பொருள்கட்கு உரைகேட்க, அவர்கள் அவ்விடத்திற்குப் பொருள் தெளிவாய்ப் பாடஞ்சொல்லவில்லையென: மெய்கண்டதேவர் அதன்பொருள்களை ஏது திருஷ்டாந்த பூர்வகமாயும் ஆக்ஷேபசமாதாநங்களுடனும், பரபக்ஷ சுபக்ஷங்களாய்த் தெளிவித்தனர், சிஷியர்கள் மிகவும் ஆநந்தசந்தோஷகரராய் விடைபெற்றுச் சென்று நித்தியமும் அ

ருணந்திசிவாசாரியாரிடம் சென்று திரும்புகாலையில் தங்கள் சந்தேகங்களை மெய்கண்டதேவரிடம் தெரிவித்துச் சந்தேகநிவர்த்தி செய்யத்தொடங்கினர்.

௧௪—அருணந்திதேவர் சிஷியர்கள் நாளாவட்டத்தில் அவரிடம்செல்வதை விட்டு, மெய்கண்டதேவரிடம் பாடங்கேட்க்கத்தொடங்கினார்கள்

௧௫—அருணந்திசிவாசாரியார் தமது சிஷியர்கள் வரவரக்குறைவுபடுவதையும் மெய்கண்டதேவருடைய பிரபாவங்களையுங் கேட்டுப் பொறாமையுற்று; சிறுபிள்ளையாவது சிலைப்பிள்ளையாரிடம் பாடங்கேட்பதாவது ஆகமார்த்தங்களின் சந்தேகங்கள் தெளிவிப்பதாவதென்று மிகவும் ஆராய்ச்சியுடையராய்; அதனைத்தெளிந்துவருவேமென மெய்கண்டதேவர் வசிக்குமிடத்திற்குச் சென்றனர்.

௧௬—மெய்கண்டதேவரிடம் அருணந்திசிவாசாரியார் வந்த சமயம் சாஸ்திரப்பயிற்சிசெய்யுங் காலமாயிருந்தது. அருணந்திசிவாசாரியார் தம்முடைய சிஷியர்கள் யாவரும் அங்கு பாடங்கேட்பதைக் கண்டு கோபங்கொண்டிருப்பதைச் சிஷியர்கள் கண்டு எழுந்து வந்தனைவழிபாடு செய்தார்கள் மெய்கண்டதேவர் இவையாவையும் பாராமல் தன்மட்டே கவனித்திருந்தனர்.

௧௭—அருணந்திசிவாசாரியார் குலத்தினாலும் வயதினாலும் வித்தையினாலும் சிறந்ததன்னை மெய்கண்டதேவர் மதியாமலிருப்பதைக்கண்டு; மனவருத்தமுற்று, சிஷியர்களைநோக்கி பாடங்கேட்பித்து அதன்மூலமாய் தர்க்கித்து வெற்றிகொள்ள உத்தேசித்து: சிஷியர்களுக்குப் பாடங்கேட்கும்படி குறிப்பித்தார்.

௧௮—சிஷியர்கள் பாடங்கேட்கத்தொடங்கினார்கள். ஏதுதிரு, ஷ்டாந்த ஆக்ஷேப சமாதான பரபக்ஷ சபக்ஷங்களை மெய்கண்ட தேவர் கூறிவருவதைக்கேட்ட அருணந்திசிவாசாரியர், மெய்கண்டதேவரைநோக்கி ஆணவமலமென்பது யாது? அதனை யெவ்வண்ணம் தரிசித்தல்? எனவினாவினர்.

௧௯—மெய்கண்டதேவர் அருணந்திசிவாசாரியருடைய அதி தீவிரபக்குவத்தா லமைந்த அதிநுட்பபுத்தியை நோக்கித் தமது கிருபாநோக்கத்தால் அவர்கேட்டவினாவின்சந்தேகந்தெளிந்து சிவஞானமடையும்படி சக்ஷு தீக்ஷைசெய்தருளினர். அங்ஙனம், அப்பார்வையின் விசேஷத்தால் அருணந்திசிவாசாரியார் தாம்வினாவிச் செருக்குற்று நிற்பது ஆணவமலத்தின்தன்மையெனவும், அங்ஙனம் ஆசிரியர்தன்னை நோக்கி மீட்டும் தம்மையே பார்த்திருப்பதுபோல், தாமும் புறத்துள்ளவிஷயங்களைநோக்கி அவ்விஷயங்களை யவாவுடன்ஆராய்ந்துசென்று பற்றுவதிபாது என்று தமக்குள் நாடியறியவேண்டுமென்றும்' அப்படியாராயப்புகின்ஆணவமலத்தின்றன்மைவெளிப்பட்டு அடங்குமென்வும் யூகித்தறிந்து, இங்ஙனம் இம்மௌனஞானக்குறிகளாலுணர்த்திய தேசிகரே நம்மையாளுடைய தேசிகரெனத்தீர்மானித்து மெய்கண்டதேவர் திருப்பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து நின்றனர்.

௨௦—மெய்கண்டதேவரும் தெய்வத்திருக்குறிப்புணர்ந்து அருணந்திசிவாசாரியருக்கு விதிப்படி அநுக்கிரகஞ்செய்து, தாம் பரஞ்சோதிமுனிவரால் அநுக்கிரகித்துக் தட்டளையிட்டருளியபடி செய்த தமிழ் நூற் சிவஞானபோதமும், பொல்லாப்பிள்ளையார் அநுக்கிரகித்த ஷைசூர்ணிகையும், ஷை நூலுக்கு வடநூற் சாம்பிரதாயப்படி தாம்செய்த வார்த்திகப்பொழிப்புரையும் கொடுத்து; இதனை உலகத்தார் எளிதாகத்தெளியும் வண்ணம்

சகலாகமங்களின் திருஷ்டாந்தக்கருத்தையுமடக்கி யோர் நூல் செய்யும்படி கட்டளையிட்டனர்.

மெய்கண்டதேவருக்குச் சிஷியர்கள்—சகூ. அவர்களுள் சிவஞானபோதத்தின் வழிநூல்செய்து சிவஞானசித்தியெனப் பெயரிட்டவர் அருணந்திசிவாசாரியார். உண்மைவிளக்கங்கூறியவர் திருவதிகை மநவாசகங்கடந்தார்.

அருணந்திசிவாசாரியார், மெய்கண்டதேவர் சந்நிதியில் தாம்வினவிய வினாக்களுக்கு அவர் திருநோக்காற் றமக்கு பொருள்விளங்கியதை; இருபாவிருபஃதென்னும் நூலாகக்கூறினர்.

மநவாசகங்கடந்தார், மெய்கண்டதேவர் தமக்குபதேசித்த உண்மைப்பொருளை உண்மைவிளக்க மெனக் கூறினர்,

இவை சேர்ந்து சைவசித்தாந்தசாத்திரம் கச.

மெய்கண்டதேவர் விபவங்களைக்கேட்கப்பெற்ற தாய் தந்தைகளும் நன்மாமனும் "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச்—சான்றோ னெனக்கேட்டதாய்." என்ன மிகவு மனக் களிப்புற்றனர்,

தமிழ் நூற்
சிவஞானபோதச் சிறப்பு.

வேதம் பசு வதன்பால் மெய்யாகம நால்வ
ரோதுந் தமிழதனி னுள்ளுறுநெய் - போதமிகு
நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ்நூலின் றிறம்,

வேதாகம மொன்றென்பதற்கும்
நால்வரோதுந்தமிழ் அவற்றின் பொருள் என்பதற்கும்,
பிரமாணம்.

வயஞு-ு வெஉ ஶிவாமஉயொஹெ-ஜஃ
நவஶ ுாஉ வெஜொவி ஶிவாமஉ.

வேதசிவாகமங்கட்கு பேதங்காண் கிலம் வேதமே சிவாகமம் என்பது-நீலகண்டபாஷியம்.

வேதமொ டாகம மெய்ய மிறைவனூ
லோதும் பொதுவும் சிறப்புமென் றுன்னுக
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே.

என்பது திருமூலர் திருமந்திரம் ஆறந்தம் உஅ-செ.

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழு முனிமொழியுங் - கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லு
மொருவா சகமென் றுணர்.

என்பது ஔவையார் நல்வழி—சo வது, செ.

சந்தானகுரவர்களின்

பெயர்.	பரிபூரண ஸ்தலம்.	மாசம்.	நக்ஷத்திரம்.
மெய்கண்டதேவர்.	திருவெண்ணெய்நல்லூர்.	ஐப்பசி.	ஸ்வாதி.
அருணந்திசிவாசாரியார்.	திருத்துறையூர்.	புரட்டாசி.	பூரம்.
மறைஞானசம்பந்தசிவாசாரியார்.	திருக்காளாஞ்சேரி.	ஆவணி.	உத்திரம்.
உமாபதிசிவாசாரியார்.	கொற்றவன்குடி.	சித்திரை.	அஸ்தம்.

‘சித்திரையத்த முமாபதி யாவணித் திங்கடனி
லுத்தரஞ் சீர்கொண் மறைஞான சம்பந்த ரோதுகன்னி
சுத்தமெய்ப் பூர மருணந்தி யைப்பசி சோதிதன்னில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

இவர்களைச் சந்தானகுரவர்களென்பது சைவசித்தாந்தத்தினுண்மையை வெளிப்படுவித்துப் போதித்துவருதலானும் இவர்கள் காலந்தொடங்கி சிஷியவர்க்கத்தவர்கள் பரம்பரைச் சாம்பிரதாயங்கள் ஏற்பட்டுவருதலானும் கூறப்படுகின்றது.

சைவசித்தாந்த சாத்திரம்
பதினான்கினையுமுணர்த்துஞ்செய்யுள்.

உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மைப் பிரகாசம் - வந்தவருட்
பண்புவினா போற்றி கொடி பாசமிலா நெஞ்சுவிடு
வுண்மைநெறி சங்கற்ப முற்று.

உ

சிவமயம்.

உரைவகை.

சிவஞானபோதத்திற்கு மெய்கண்டதேவர் வார்த்திகவுரையொன்றும் பாண்டிப்பெருமாள் பதவுரையொன்றும், விருத்தியாகிய இவ்வுரையொன்றும், சிவஞானமுனிவரால் சூத்திர வார்த்திகங்கட்கும், உதாரணச்செய்யுட்களுக்கு மியற்றிய சிற்றுரையொன்றும், திராவிடபாஷியமென்னும் பேருரையும் வழங்கிவருகின்றன.

மெய்கண்டதேவரியற்றிய சூத்திரவார்த்திகங்கள் வடநூற்பயிற்சி யுடையார்க்கே தெளிவாகுமன்றி யேனையோர்க் கெளிதா யுணரப்படுவதன்று. இதைநோக்கியே மெய்கண்டதேவர் தமது சிஷியர்களிற் சிறந்த அருணந்திசிவாசாரியருக்கு இதனைத்தெளிவாக்கி யோர் நூல்செய்யும்படி கட்டளையிட்டனர். அருணந்திசிவாசாரியாரும் முதனூல் சிவஞானபோதத்திற்கு ஆகமங்களின பொருள்கள்தோன்ற சிவஞானசித்தியைச் செய்தனர். இச்சித்தியாரே இதன்பொருளை விளக்குவதற்கும் மற்றைத் தமிழ் நூற்களிற் கூறியசைவசித்தாந்தங்கட்கும் உரைக்கற்போலிருக்கின்றது.

பாண்டிப்பெருமாள் விருத்தியுரையானது சிவஞானபோதத்தின் பொருள்களை யுணர்த்தி, சைவ சம்பிரதாயப்பொருள்களை வெளிப்படுத்தி, வழிநூலாகிய சிவஞானசித்தியின் கருத்தைச் செய்யுட்களோடும் உதகரித்துக்காட்டி, வாசிப்போர்களின் கருத்தைப் போராநந்தத்தில் எளிதிலடையச்செய்விக்கும் கருவியா

யிருக்கின்றது. இதனைவாசித்தநுபவிக்கப் பெற்றவர்கட்கு வேறுரையில் கருத்துச்செல்லாதென்பதே துணிபு. நிச்சயம்! நிச்சயம்! நிச்சயம்!

பாண்டிப்பெருமாள் மெய்கண்ட சந்தானத்தார் என்பது அவர் உரையானும் - ருஉக-வது, பக்கம்கூறிய உரைச்சிறப்புப்பாயிரத்தானும் விளங்கும்.

இவர்சரித்திரம் வேறுவகையாற் காண்பதரிதாயிருக்கின்றது.

சிவஞானமுனிவர்உரை, இலக்கண இலக்கியங்களோடு வடநூற்பயிற்சியும் சிறிதுடையோர்க்கே புலப்படும்.

இவரது சரத்திரம் காஞ்சிப்புராணப் பதிப்புரையிற் காண்க.

வடநூற் சிவஞானபோதசுலோகத்திற்கு * அவதும்ரக்ஷேத்திரவாசியாகிய ப்ரம்மஸ்ரீ விஶ்வேஶ்வரசாஸ்திரியாரவர்களால் பதவுரையெழுதி யுதவிபுரியப்பட்டதுமன்றி, சமஸ்கிருதவுரையுந் தந்து, அவற்றையச்சிடும் வழக்களைப் பரிசீலித்தும் உதவிபுரிந்தனர்.

இவர்செய்நன்றி "பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி னன்மை கடலிற் பெரிது" "உதவி வரைத்தன் றுதவி யுதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து" என யாம்பாராட்டுவேம்.

* (அவதும்ரம்-அத்திமரம்,) இதனாற்சிறந்த க்ஷேத்திரம் திருவொற்றியூர்.

சிவமயம்.

ப தி ப் பு ரை.

௧—சைவசித்தாந்த சாத்திரங்கள் (௧௪) க்கும் உரை யச்சிட்டுத்தொடங்கி திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், உமாபதி சிவாசாரியா ரியற்றிய சிவப்பிரகாசமுதலிய - ௭-சாத்திரங்களை, சிவஞானசித்தி பரபக்ஷம் மகவாசகங்கடந்தார் உவமை விளக்கம் இவைகளை அச்சிட்டுமுடித்துச் சிவஞானபோதத்திற்கும் தெளிவான ஓருரை யச்சிடுவது கருதி இவ்வுரையை யச்சிடுவித்தனன்.

௨—இதில் ௧-இல் சிவஞானபோத உற்பத்தியும், ௨—வது மெய்கண்டதேவர் தோற்றப்பிரபாவமும், ௩—வது உரையாசிரியர்களின் உரைவிபரமும், ௪—வது பதிப்புரை விபரமும், ௫—வது சிவஞானபோத படனவிதியும், ௬-வது அகராதி அட்டவணையும், அச்சிட்டிருக்கின்றனன்.

௩—நூலாரம்பத்தில் சைவர்களின் பாராயணத்தின் பொருட்டு — ரௌரவாகம சிவஞானபோத சூத்திரமும் அதற்கு மெய்கண்டதேவர் தமிழ்நூற் சூத்திரமும்—, ௨—(அ)ம்-பக்கமுதல் (௧அ) வரை, கிரந்தசூத்திரங்கட்குத் தமிழுரையும், ௩—(௨௭)முதல் (௪௭) வரை தமிழ்நூற் சூத்திரங்கட்கு வடநூன்மரபைத்தழுவி நூலாசிரியர் மெய்கண்டதேவர் தாமே யியற்றிய அதிகரணப்பகுப்பும் வார்த்திகப்பொழிப்பும், இவையிற்றுக்கு ஆதரவாய் பொல்லாப்பிள்ளையார் அநுக்கிரகித்தருளிய சூர்ணிகைகளும், ௪—(௪அ) முதல் (௧௨௭) வரை மூல உரை ஷெ வார்த்திகத்திற்குச் சிவஞானமுனிவர் விரித்துக்கூறிய பொருளும், ௫—(௧௨அ) முதல் (௫௨௩) வரை பாண்டிப்பெருமா

ள் உரையும், அவற்றின் சிழ்க்கோடெளிடடு சிவஞானமுனிவர் உரையை ஆங்காங்குப் பிரித்துத் தெளிவாக்கியும் அச்சிட்டிருக்கின்றேன். சிவஞானமுனிவர் உரை யை விரும்புவோர்க்கு இஃது தெளிவாய்க் காட்டும். செய்யுட் பாடபேதங்கள் அவ்வவ்வுரையிற் கவனிக்கவேண்டும்.

௩—தமிழ்நூற் பயிற்சியுடன் வட நூலை யுணர்ந்தவர்களும் சிவஞானபோதத்தை யாராய்ச்சிசெய்யவேண்டுமெனபது அறியவசியமெனக்கருதிக் கிரந்த லிபியினும் பௌஷ்கரம் மிருகேந்திரமுதலிய ஆகம உதாரணங்களுடன் உரை அச்சிட்டிருக்கின்றேன்.

௫—இவைகளையும்; இன்னும் இதற்காதரவாய் இப்போது அச்சிட்டுவரும் தமிழ்நூற் சிவஞானசித்தியாருக்கு சிவாக்கிரயோகியர்முதலியோர் உரைவிசேஷங்களடங்கிய மறைஞானதேசிகருரையும், கிரந்தசித்தாந்தசாராவளிக்குத்தமிழ்உரையும், சைவர்களாயுள்ளார்யாவர்க்கும் இன்றியமையாத கருவிநூலாயிருப்பதால்பொருளுள்ளவொவ்வொருவர்களும்முன் பணங்கொடுத்து வாங்கிக்கொள்வார்களாகில் சிவஞானபோதஅச்சுக்கூடம் தழைத்தோங்கி இன்னும் நீலகண்ட பாஷியம் பௌஷ்கராகமவிருத்தி முதலியவற்றை அச்சிட்டுக் கொடுத்துவருமென் பதில்தடையிராது.

உ

சிவமயம்.

சிவஞானபோத படனவிதி.

௧—அதிநுட்பபுத்தியும் அதிதீவ்ரபக்குவமும் அமைந்துடையார்க்குச் சிவஞானபோத சூத்திரத்திற்கு வார்த்திக முதலிய பொருள்கள் தானேவிளங்கும்.

௨—ஏனையோர் சற்குருபால் சிவதீக்ஷையுடையவர்களாய்ச்சைவநெறிபூண்டு சிவஞானபோதசூத்திரம் (௧௨)யும் நித்திய பாராயணஞ்செய்து அவரோஹணமாய்ப் பொருள்கேட்டல்வேண்டும்: அஃதாவது, சூத்திரவெண்பாக்களுக்குப் பாண்டிப்பெருமாள் விருத்திஉரையை (௧௨௩) வது, பக்கமுதல் சிவஞானசித்தி உதாரணத்துடன் வாசித்துப் பின் வார்த்திகமுதலிய பொருள்களை வாசித்தல்வேண்டும்.

௩—இவ்வாறு ஒருமுறை வாசித்தலில் பொருள்புலப்படாவிடில் இருமுறை மூன்றுமுறை முழுவதும் வாசிக்கில் பொருள் தெளிவாய் வெளிப்படும்.

௪—இனி இதனினும் புலப்படாவிடில் தமக்கு ஆன்மார்த்த மூர்த்தியை இடைவிடாது தியானித்துப் பரார்த்தமூர்த்திகளுக்கு அபிஷேகாதிவிபவங்களால் சிறப்பிக்கில், அரியவும் எளியவாய் விளங்குமென்பது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

௫—இதுமுதலிய சைவநூல்களின் பொருள்களை யோதியுணர்வதற்குத் தக்கவர்கள் நேரிடாதவர்கள் எம்மாட்டோதியுணர விரும்பின் அவர்கள் சைவசீலத் தவர்களாய்வரின் எம்மாற் றெரிந்தவரை தெளிவிக்கத் தடையிராது.

இங்ஙனம்,

☞ கொ - சண்முகசுந்தர முதலியார்

சிந்தாதிரிப்பேட்டை,

சிவஞானபோத

சூத்திரத்திற்கு	கிரந்த சூத்திர உரையின் பக்கம்.	தமிழ் சூத்திர உரையின் பக்கம்.	சூத்திரக் கருத்து அதிகரணம்-வார்த்திகம் - சூர்ணிகையின் பக்கம்.
க	அ	கருஉ	உ0
உ	கூ	உககூ	உஉ
ங	,,	உசுரு	உச
ச	க0	உஅகூ	உஅ
ரு	கக	ஙஉச	உகூ
சு	கஉ	ஙசங	,,
எ	கங	ஙசுஅ	ஙஉ
அ	கச	ஙஅரு	ஙச
கூ	கரு	சகக	ஙசு
க0	கசு	சசஅ	ஙஅ
கக	கஎ	சஎஉ	,,
கஉ	கஅ	சகூசு	ச0

சிவஞானபோத

சூத்திரத் தற்கு,	அதிகரணத தொகை;	சூர்ணிகைத் தொகை:	உதாரண வெண்பா.
க	ங	ங	ரு
உ	ச	ச	கo
ங	எ	எ	எ
ச	ங	ங	எ
ரு	உ	உ	ச
சு	உ	உ	சு
எ	ங	ங	ரு
அ	ச	ச	கூ
கூ	ங	ங	அ
கo	உ	உ	சு
கக	உ	உ	சு
கஉ	ங	ச	அ
‡ புறனடை.க			
ஆஉ.	ஙஅ	ஙகூ	அஉ

இவற்றிற்குச்செய்யுள் சசு-ம், பக்கம் காண்க.

‡நெய்க்குடமேனு நீர்க்குடமேனும்வைப்பார் குறடாலுங்கல் லானும் புறத்தடுத்துவைப்பர், அவையக்குடத்தினையுஞ் சாயா மற்காத்துப் புறத்துவருமிடையூறுகளையுநீக்கும்,அதுபோலச்சூ த்திரத்துட் சொல்லப்பட்ட பொருளை யாப்புறுத்தானுமுதற் சூத்திரத்துளில்லாத பொருளைத் தழீஇயானுநிற்பது புறனடை யெனவுணர்க - இஃது ஒத்துப்புறனடை அதிகாரப்புறனடை சூத்திரப்புறனடை பிண்டப்புறனடை நூற்புறனடை எனப்ப லவகைப்படும். என்னை (ஒத்ததிகாரஞ் சூத்திரம் பிண்டம் யா த்த நூலென வைத்தாம் புறனடை) என்பதோத்தாகலின் பு றநடை-எனவுமோதுப.

சிவஞானபோத செய்யுட் குறிப்பகராதி.

இப்போதச்சிட்டிருக்கும்
சிவஞானபோதயந்திரசாலை
புத்தகங்களின் விபரம்.

சிவஞானபோத விருத்தியுரை.	க - சு - 0
திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், இருபாவிருபஃது, உண்மைவிளக்கம், திருவருட்பயன், வினாவெண்பா, கொடிக்கவி, உண்மைநெறி விளக்கம், போற்றிப்பஃறொடை, சங்கற்பநிராகரணம், இவற்றினுரை.	க - கஉ - 0
சிவஞானசித்தியார் பரபக்ஷவுரை.	க - அ - 0
சிவப்பிரகாச வியாக்கியானம்.	க - அ - 0
திருமூலர் திருமந்திரம்.	0 - கஉ - 0
இலிங்கபுராணம்.	க - அ - 0
கூர்மபுராணம்.	உ - அ - 0
விநாயககவசம், சிவகவசம், சத்திகவசம், திரிபுரை அகவல், திரிபுரைதோத்திரம், காமாட்சியம்மன் அகவல், விநாயகர் அகவல், கந்தர்சஷ்டி கவசம்.	0 - 0 - கூ
சௌந்தரி - யானந்தலகரி மூலம்.	0 - 0 - கூ
அபிராமி யந்தாதி.	0 - 0 - கூ
கந்தரநுபூதி மூலமும் - உரையும்.	0 - 0 - கூ
சரஸ்வதிதோத்திரம், சரஸ்வதியந்தாதி.	0 - 0 - ந
ஆத்திசூடி கொன்றைவேந்தன் மூலம்.	0 - 0 - உ
ஷை உரை.	0 - 0 - கூ
வாக்குண்டாம் மூலமும் - உரையும்.	0 - க - 0
நல்வழி. ஷை ஷை	0 - க - 0
சமஸ்கிருத சிவஞானபோத சவ்வியாக்கியானம், ஆகம உதாரணங்களுடன்.	0 - சு - 0

உ

சிவமயம்.

இப்போதச்சிட்டுவருவன.

சிவஞானசித்தியார் சுபக்ஷத்திற்கு சிவாக்கிரயோகியர் முதலியோர் உரைவிசேஷங்களடங்கிய மறைஞானதேசிகருரை.

சமஸ்கிருத சித்தாந்த சாராவளிக்குத் தமிழுரை.

இவைகளையும், சைவாகமமுதலிய பழைமையாயுள்ள (இதுவரை அச்சிடாத) சைவகிரந்தங்களையும், சஞ்சிகைபூர்வமாய் அச்சிட்டுத் தருவதற்கு ஆரம்பித்திருக்கின்றேன். மாதம் க-இ கா கூ தடங்கிய சஞ்சிகை க-இ ரூ கால் வீதம் வருஷம் க-இ ரூ மூன்று முன்பணம் அனுப்புவோர்கட்கு மாதமாதம் ஒவ்வொரு சஞ்சிகை அனுப்பப்படும்.

இங்ஙனம்,

சர்வஜித்து வு
ஆவணி மீ

கொ-சண்முகசுந்தர முதலியார்
சிந்தாதிரிப்பேட்டை.

உமாமஹேஶ்வராப்யாம் நம:

ஶிவஜ்ஞாநபோதம்

[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible] ௧

உ

சிவமயம்.

சிவஞானபோத சூத்திரம்.

விநாயகர் வணக்கம்.

கல்லானிழன்மலை வில்லாரருளிய
பொல்லாரிணைமலர் நல்லார்புனைவரே.

அவனவளதுவெனு மவைமூவினைமையிற்
றோற்றியதிதியே யொடுங்கிமலத்துளதா
மந்தமாதி யென்மனார்புலவர். ௧

அவையேதானே யாயிருவினையிற்
போக்குவரவு புரியவாணையி
னீக்கமின்றி நிற்குமன்றே. ௨

உளதிலதென்றலி னெனதுடலென்றலி
னைம்புலனொடுக்க மறிதலிற்கண்படி
லுண்டிவினையின்மையி னுணர்த்தவுணர்தலின்
மாயாவியந்திர தனுவினுளான்மா. ௩

அந்தக்கரண மவற்றினொன்றன்றவை
சந்தித்ததான்மாச் சகசமலத்துணரா
தமைச்சரசேய்ப்பநின் றஞ்சவத்தைத்தே. ௪

விளம்பியவுள்ளத்து மெய்வாய்கண்மூக்
களந்தளந்தறியா வாங்கவைபோலத்
தாந்தமுணர்வின் றமியருள்
காந்தங்கண்ட பசாசத்தவையே. ௫

ஸூத்ரஸ்யாஸ்ய ஸங்க்ஷேபார்த்தஸ்யாஸ்ய ப்ரஜ்ஞாஸாவேக
ஶம்ஸோஹ வஸ்துஸ்திதிர்ஜ்ஞேயம் ப்ருதோ விஶே-
ஷார்த்தயோ: ॥ ௬

நாஸ்தி ஸ்வஸ்திநியதா கிம்சந வித்யதே உதேதியம் ।
ப்ரபஞ்ச ஶிவயோர்வேத்தா யஸ்ய ஸூக்தாதயோ:
ப்ரமக் ॥ எ

ஸ்வதஸ்ஸவேஹ ப்ரிய வ்யாபயேச் த்வாம் நவேத்ஸ்தி
பொயித: ஸம்வேக்த்தாநுமாணாநந்த்யாய ந்யா
ப்ராப்நோதி தத்வம் ॥ அ

த்ருஶ்யாத் நித்ரேஷ் ஸம் தஸ்மா வ்ருத்தி ஶீவிக்ஷம் ।
ஸ்வபா ஶிவபத ஸ்தாயாம் ப்ராயே த்வமோக்ஷஸ்ய
ஸேயம் ॥ ௯

ஶிவேநைக்யம் கதஸ்ய ஸ்ய ததயீந ஸ்வவ்ருத்திக: ।
ஜ்ஞாயாத் ஸர்வ்வத்ரேஷாவ்ருத்திர்வாந்த ஹந்தி தாந் ॥

த்ருஶ்யாதர்ஶ்யதயா த்ருஷ்டா தஸ்யாத்ருஶ்யதா ஶிவ: ।
த்ருஷ்டா த்ருஷ்டாநாம் ஸ்வக்ரப்யாதா வேத்தாவகாஶக

உணருருவசத்தெனி னுணராதின்மையி
னிருதிறனல்லது சிவசத்தாமென
விரண்டுவகையி னிசைக்குமன்னுலகே. ௬

யாவையுஞ்சூனியஞ் சத்தெதிராதலிற்
சத்தேயறியா தசத்திலதறியா
திருதிறனறிவுள திரண்டலாவான்மா. ௭

ஐம்புலவேடரி னயர்ந்தனைவளர்ந்தெனத்
தம்முதல்குருவுமாய்த் தவத்தினிலுணர்த்தவிட்
டந்நியமின்மையி னரன்கழல்செலுமே. ௮

ஊனக்கண்பாசமுணராப்பதியை
ஞானக்கண்ணினிற் சிந்தைநாடி
யுராத்துனைத்தேர்த்தெனப் பாசமொருவத்
தண்ணிழலாம் பதிவிதி
யெண்ணுமஞ் செழுத்தே. ௯

அவனேதானே யாகியவந்நெறி
யேகனாகி யிறைபணிநிற்க
மலமாயைதன்னொடு வல்வினையின்றே. ௰

காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம்போற்
காணவுளத்தைக் கண்டுகாட்டலி
னயராவன்பி னரன்கழல்செலுமே. ௧௧

௬

ஶிவஜ்ஞாநபோதஃ.

ஜ்ஞாநேந்த்ர ப்ராப்ய ஸத் ஶேஷாம் ஹஜேந்த்ரேஷு
ஶிவாஶ்ரயஃ । ஸர்வ வித்யா ஸ்ரீஶிவஜ்ஞாநபோதே
ஶைவார்த்த நிர்ணயஃ॥ ௰௨

ஶிவஜ்ஞாநபோதம் ஸம்பூர்ணம்.

ரௌரவாக்யாகமே ஶைவஸித்தாந்தஸம்ஹிதே நா
த்ரிகே । ஶிவஸூக்தேஷு ஸாராம்ஶஸ்தஸ்யைவ
நந்திநே॥

செம்மலர்நோன்றாள் சேரலொட்டா
வம்மலங்கழீஇ யன்பரொடுமரீஇ
மாலறநேய மலிந்தவர்வேடமு
மாலயந்தானு மரனெனத்தொழுமே. கஉ

சிவஞானபோதசூத்திரம் முற்றிற்று

தனியன்.

எந்தை சனற்குமர னேத்தித் தொழவியல்பா
னந்தி யுரைத்தருளு ஞானநூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் றாரணியோர் தமுணர
வேதுதிருட் டாந்தத்தா லின்று.

உ

ஶிவஜ்ஞாநபோதம்

ப்ரதமஸூத்ரம்

க — ஸ்த்ரீபும்நபும்ஸகாதித்வாத் - ஜகத: - கார்யதர்ஶநாத் - அஸ்தி - கர்தா - ஸ: - ஹ்ருத்வா- ஏதத் - ஸ்ருஜதி - அஸ்மாத் - ப்ரபு: - ஹர: ||

அந்வயம்.	அர்த்தம்.
ஜகத:	பிரபஞ்சத்திற்கு
கர்தா	கர்த்தாவானவர்
அஸ்தி	உண்டு
கார்யதர்ஶநாத்	காரிய ரூபமாய் காணுதலி[னால்
ஸ்த்ரீபும்நபும்ஸகாதித்வாத்	அவளவனதுவென்னும் [தநுகரணாதிகளாய் வருகையால்]
ஸ:	அந்தகர்த்தா
ஏதத்	இந்த பிரபஞ்சத்தை
ஹ்ருத்வா	சங்கரித்து
ஸ்ருஜதி	சிருஷ்டிக்கிறார்
அஸ்மாத்	இந்த காரணத்தால்
ஹர:	சங்காரகர்த்தா
ப்ரபு:	எஜமானன். [ஈஸ்வரன்] (க)

ஶ்லோகம்.

௨ — அந்ய: - ஸந் - வ்யாப்திதோ - அநந்ய: - கர்த்தா - கர்மாநுஸாரத: - கரோதி - ஸம்ஸ்ருதிம் - பும்ஸாம் - ஆஜ்ஞயா - ஸமவேதயா. ||

அந்வயம்.	அர்த்தம்.
வ்யாப்தித:	சாக்ஷாத்கார ரூப ஞானத்தால்
அநந்ய:	வேறில்லாதவரான [தால்
கர்த்தா	கர்த்தாவானவர்
அந்ய: - ஸந்	[அவனவ ளது வென்பதற்கு] வேறா யிருந்துகொண்டு
ஸமவேதயா	பிரி வில்லாம லிருக்கிற
ஆஜ்ஞயா	ஆணையினால் (ஆஞ்ஞா சக்தியினாலே)
கர்மாநுஸாரத:	அவரவர் செய்த வினைக் கிடாக
பும்ஸாம்	ஆன்மாக்களுக்கு
ஸம்ஸ்ருதிம்	சுக துக்காதி வியா பாரத்தை
கரோதி	செய்யாநிற்கிறார். (௨)

ஶ்லோகம்.

௩ — நேதித: - ஸ்ம்ருதிதோ'க்ஷாணாம் - ஸுஷுப்த்யபாவாத் - போதத: - ஸ்வாபே - நிர்போகத: - போதே - போத்ருத்வாத் - அஸ்தி - அணு: - தநௌ.

அந்வய:	அர்த்த:
தநௌ	சரீரத்தில்
நேதித:	இல்லை யென்கையினாலும்
மமதோத்ரேகாத்	மமதையினுடைய ஆதிக்கத்தாலும்
அக்ஷோபரதி போதத:	இந்திரியங்களுடைய ஒடுக்கமாகிய ஸ்வப்பன அவஸ்தையினாலுண்டான அறிவினாலே
ஸ்வாபே	சுஷுப்தி காலத்தில்
நிர்போகத:	அறி வில்லாமையாலும்
போதே	சாக்கிரத்தில்
போத்ருத்வாத்	அறிகிறதினால்
அணு:	ஆன்மா
அஸ்தி	உண்டு. (௩)

பதச்சேத:

ஆ — ஆத்மா - அந்த:கரணாத் - அந்ய: - அபி -
அந்வித: - அக்ஷ்ணா ஸசிவவத் - அவஸ்தாபஞ்சகஸ்த: -
ஸம்ஸ்தித: - அமாத்ய: - ஸ்வஸ்த்ரீக்ய:. ||

அந்வய:	அர்த்த:
அந்த:கரணாத்	அந்தக் கரணத்தைக் காட்டிலும்
அந்ய: அபி	வேறா யிருந்த போதிலும்

அமாத்ய ராஜவத்	மந்திரியும் ராஜாவும்போல
ஸங்கத:	கூடினவனும்
அவஸ்தாபஞ்சகஸ்த:	[சாக்கிர முதலிய] அவஸ்தா பஞ்சகத்தி லிருக்கிறவனும்
மலாவ்ருத:	மலங்களாலே மூடப்பட்ட
ஸ்வாத்மஜ்ஞம்	ஆன்ம ஞானத்தை யுடையவனை
ஆத்மா	ஆன்மாவானவன்
ஸ்யாத்	இருப்பன். (௪)

பதச்சேதம்.

௫ — விதந்தி - அக்ஷாணி - ஸம்யோகாத் - ந - ஸ்வயம் - ஸ: - ச - ஸம்புநா - தச்சக்தி - ஶிவ: - வேத்தி - ந - காந்த: - அயோவத் - ஸ: - தம் - நயேத். ||

அந்வயம், அர்த்தம்.

அக்ஷாணி	இந்திரியாமனது
ஸம்யோகாத்	ஆன்மாவின் பிரேரணையோடு கூடிக்கொண்டு விஷயங்களை
விதந்தி	அறிகிறது
ஸ்வயம்	தானே
ந	அறிகிறதில்லை

ஸோऽபி	அந்த ஆன்மாவும்
ஸாஹநா	பரமசிவத்தோடு கூடி அறிகிறது
ஶிவ:	பரமசிவம்
தத்விகாரீவத்	[பாலன - திரோதான]விகாரமுள்ளவரோ வென்றால்
ந	இல்லை
காந்த:	காந்தமானது
க்ரியாவத்	இரும்பை [சேஷ்டிப்பிப்பதுபோல்]
ஸ:	அந்தப் பரமசிவம்
தம்	அந்த ஆன்மாவை
நியத்	விகாரப்படுத்துவர் (௫)

[பசுலக்ஷணமுடிந்தது]

ஷஷ்டஸூத்ரம்.

௬ — த்ருஶ்யத்வே - அஸத்பாவ: - த்ருஶ்யத்வே - ஜடிதா - ஹிதே - பராத்மா - தத்விலக்ஷணே - ஜ்ஞேயம் - ஶிவம் - விது: - புதா:. ||

அந்வய:. அர்த்த:.

+ பராத்மா — பரம சிவத்தினுடைய

+ பர-சுகம்;—ஆத்மா = ஆக்தி-உண்டாகிறது=சுகத்தை உண்டாக்குகிறவன் என்பது கருத்து.

ரூபம்	[ஞான]ரூபமானது
அக்யாதிஶ்சேத்	காணக்கூடாததனால்
அஸத்த்வ:	[சச விஷாணம் போல்] பொய்ப்பொருளாம்
க்யாதிஶ்சேத்	காணக்கூடுமென்றால்
ஜடதா	ஜடபதார்த்தமாக
பவேத்	ஆகும்
தத்வ்யதிரிக்தம்	அறியப்படாததும்
ஜ்ஞேயம்	அறியப்பட்டது மான-இரண்டுவகைக்கும்வேறாக
ஶிவஜ்ஞா:	[சிவ] ஞானிகள்
பரம்ஶிவா:	பரமசிவத்தை
விது:	அறிகிறார்கள். (௬)

ஸப்தம ஸூத்ரம்.

௭ — ந - அசித் - சித் - ஸந்நிதௌ - கிந்து - ந - வித்த: - தே - உபே - மித: - ப்ரபஞ்சஶிவயோ: - வேத்தா - ய: - ஸ: - ஆத்மா - தயோ: - ப்ருதக்

அந்வயம்.	அர்த்தம்.
அசித்	பிரபஞ்சமானது
சித்	சித்தாகிய [ஞான சொரூப மாகிய]
ஸந்நிதௌ	[சிவ]சந்நிதானத்தில்

ந	[பிரகாசிக்கிற] தில்லை
கிந்து	[பின்] யாதெனில்
தே	அந்த
உபே	இரண்டும் [பிரபஞ்ச- சிவம் இரண்டும்]
அந்யோந்யம்	ஒன்றுக்கொன்று
நவித்த:	அறிகிறதில்லை
ப்ரபஞ்சஶிவயோ:	பிரபஞ்சசிவங்களை
வேத்தா	அறிகிறவன்
ய:	எவனோ
ஸ:	அவன்
தாப்யாம்	அந்தப்பிரபஞ்சசிவங்களுக்கு
ப்ருதக்	வேறான
ஆத்மா	ஆன்மாவென்று சொல்லத் தக்கவன். (எ)

அஷ்டமஸூத்ரம்.

அ — ஸித்த்வா - ஸஹ - இந்த்ரியவ்யாதேஷு: - ஸ்வாம் - ந - வேத்தி - இதி - போதித: - குருணா - அதாநு - ஸம்ஸாரணா - ஸநந்ய: - அநந்ய: - ப்ராப்நோதி - தத்பதம். ||

அந்வயம். அர்த்தம்.

அநந்ய:	முமுக்ஷுவானவன்

இந்த்ரியவ்யாதை:	இந்திரியங்களாகிற வேடர்களோடு
ஸஹ	கூட
ஸ்தித்வா	இருந்து
குருணா	ஆசாரிய ருடமான [சிவத்தாலே]
த்வம் ந வேத்ஸி	உன்னுடைய சொரூபத்தை அறிகிலை
இதி	என்று
போதித:	போதிக்கப்பட்டவனாய்
வ்யாதாந்	இந்த இந்திரியங்களாகிற [வேடர்களை]
முக்த்வா	விட்டு
அநந்யஸ்தம்	சிவத்தைக் காட்டினும் வேறுகிறவனைக் கொண்டு
தத்பதம்	அந்த [சிவ] சொரூபத்தை
ப்ராப்நோதி	அடைகிறான். (அ)

பஞ்சமம்.

௧ — வித் - ஹ்ருதா - ஸூத்ர நி - ஹ்ருஷ்வா - ரம் ஸம் - த்யக்த்வா - ப்ருத்திம் - ஸ்வீகாரம் - ஸர்வா - ஶிவ பக்ஷாயாம் - ப்ராப்தே - பஞ்சாக்ஷரீம் - ஸஜ்ஞ: -

அந்வய:. அர்த்த:.

ஸஜ்ஞ:	[சிவ] ஞானமுள்ளவன்

ப³ஹி꞉கரணவ்ருத்திம்	கானலுக் கொப்பாகிய [பஞ்சேந்திரிய]வியாபாரத்தை
த்யக்த்வா	விட்டு
த்³ருஷ்ட்யா	ஞான திருஷ்டியினால்
ஸ்வாத்மநி	தன்னிடத்தில்
பரம் ஶிவம்	பரமசிவத்தை
த்³ருஷ்ட்வா	பார்த்து
ஶிவபத³ச்சா²யாம்	பரமசிவத்தின் பாத நிழலை
ப்ராப்ய	அடைந்து
பஞ்சாக்ஷரம்	பஞ்சாக்ஷரத்தை
த்⁴யாயேத்	தியானிக்கவேண்டியது

பத³ச்சே²த³꞉.

௧ — ஶிவேந - ஐக்யம் - க³த꞉ - வஶீ - தந்மய꞉ - ஸர்வகர்த்ருக꞉ - உமாபாத³ஸம்ஸ்ப்ருஷ்ட꞉ - ஸ்வ்பூர்த்தி - ஸாநந்த³மஶ்நுதே. ||

அந்வய꞉. அர்த²꞉.

வஶீ	[அந்தக்கரணத்தை] வஶீகரித்தவன் = வசப்படுத்தினவன்
ஶிவேந	பரமசிவத்தோடு
ஐக்யம்	ஐக்கியத்தை

ப்ராப்த:	அடைந்தவனும்
மலமாயாகர்மபி: அஸம்ஸ்ப்ருஷ்ட:	[ஆணவ] மலத்தாலும் - மாயையினாலும் - கர்மத்தாலும் - தொடப்படாதவனாகவும்
ததத்யீந:	பரமசிவத்தினிடத்திலேயே ஸ்வாதீனமான
ஸ்வவ்ருத்திக:	தன்னுடைய வியாபாரத்தை யுடையவனாய்
ஸ்வாநுபூதிமாந்	[சிவ ஸ்வரூப மான] தன்னுடைய அநுபவத்தை யுடைத்தானவனாய்
பவதி	ஆகிறான். (௪௦)

பதச்சேத:

[illegible] — நேத்ராப்யாம் - ஈக்ஷித: - ச - ஆத்மா -
தஸ்ய - ஈக்ஷிதா - ஶிவ: - தஸ்மாத் - தஸ்ய -
வாநாம் - ஶக்திம் - ஸம்யக்ஸ்ய - ஆத்மஸ்வரூபவிலோகநே ||

ஸந்தி,	ஸம்பந்த.
ஆத்மா	ஆன்மா வானவன்
நேத்ராப்யாம்	கண்களை

ஸூ ௮ ஶிவஜ்ஞாநபோதே

த³ர்ஶயித:	[ஞாபகஞ் செய்கிறவன்] அறிவிக்கிறவன்
தஸ்ய	அந்த ஆன்மாவையும்
ஶிவ:	பரமசிவமானவர்
த³ர்ஶயிதா	அறிவிக்கிறார்
தஸ்மாத்	ஆகையால்
ஆத்மோபகாரகே	ஆன்மா [தனக்குப்போகமோக்ஷங்களை] உபகாரஞ் செய்கிற
தஸ்மிந்	அந்தப்பரமசிவத்தினிடத்திலே
பராம்	திருடமான
ப⁴க்திம்	அன்பை
கார்யாத்	செய்யவேண்டியது. (௧௧)

ஸங்க்³ரஹ:

ஸூ — உக்தேப்⁴ய: - ப்ரமாணேப்⁴ய: - ஸத: - சே[illegible]ஷம் - ஸர்வஜ்ஞம் - வேஷம் - ஶ்ரீ[illegible]யம் - ஸர்வம் - விசார்ய - ஶிவஜ்ஞாநபோதே [illegible] ஸர்வாத்மநிர்ணய[illegible]

அந்வயம்.	அர்த்தம்.
முக்தயே	முத்தியின் பொருட்டு
ஸந்த:	[ஞானசிவா] சாரியனை
ப்ராப்ய	அடைந்து
தேஷாம்	[அந்த]சைவர்களுடைய
வேஷம்	[பஸ்ம ருத்ராக்ஷாதி] அடையாளங்களையும்
ஶிவாலயம்	சிவாலயத்தையும்
ஸேவேத்	தொழவேண்டியது
ஏவம்	இந்தப் பிரகாரம்
ஶிவஜ்ஞாநபோதே	சிவ ஞான போதமென்கிற [சாஸ்திரத்தில்]
ஶைவஸித்தாந்தநிர்ணயம்	சைவ சித்தாந்தத்தின் முடிவை
விந்த்யாத்.	அறியவேண்டியது. (௧௨)

ஶிவஜ்ஞாநபோதவ்யாக்யாநம்

ஸம்பூர்ணமாஸீத்.

உ

சிவமயம்.

சிவஞானபோதம்.

௧-வது, சூத்திரம்.

அவனவளதுவெனு மவைமூவினைமையிற்
றோற்றியதிதியே யொடுங்கிமலத்துளதா
மந்தமாதி யென்மனார்புலவர்.

அதிகரண மென்னும் கண்ணழிவு.	வார்த்திகம் என்னும் பொழிப்புரை.
௧—அவ னவ ளதுவெனு மவை மூவினைமையின்	ஈண்டுத்தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின் - உளதாய் ஒருவ னொருத்தியொன் றென்று சுட்டப்பட்ட பிரபஞ்ச முற்பத்தி திதி நாசமுடைத் தென்றது.
௨—தோற்றிய திதியே யொடுங்கி மலத்து உளதாம்	இனி இல்லதற்குத் தோற்றமின்மையின் உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் - ஒடுங்கினசங்காரத்தின்வழியல்லது உற்பத்தி யில்லை யென்றது.
௩—அந்த மாதி யென்மனார் புலவர்.	இனிச் சுட்டுணர்வாகிய பிரபஞ்சஞ் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்தரமின்றி நிற்றலான் - சங்காரமே முதலென்றது.

கருத்துரை.

என்பது சூத்திரம் என்னுதலிற்றோவெனின்,—சங்காரகாரணனாயுள்ள முதலேயே முதலாக வுடைத் திவ் வுலகமென்பது ணர்த்துத னுதலிற்று.

இதன் பொழிப் புரைத்துக்கொள்க.

சூர்ணிகை என்னும் கருத்துரை.

தொகை.

சகம் பிறப் பிருப் பிறப்பாகிய முத்தொழிலை யுடையது. (௧)

அது அரனாலே யுண்டயது.(௨)

மற் றிருவரு முத்தொழிற் பவர்கள். (௩).

௧—சூத்திரம்,
அதிகரணம் - ௩ க்கு
சூர்ணிகை ௩,

௨—வது, சூத்திரம்.

அவையேதானே யாயிருவினையிற்
போக்குவரவு புரியவாணையி
னீக்கமின்றி நிற்குமன்றே.

க—அவையே தானேயாய் — ஈண்டு அத்துவித மென்ற சொல்லானே யேக மென்னின் ஏகமென்று சுட்டுவ துண்மையின், அத்துவித மென்ற சொல்லே யந்நிய நாத்தியை யுணர்த்துமாயிட்டு - இவ்வான்மாக்கள்பலவு முதல்வன் றானேயாய் நிற்கு மென்றது.

௨—ஆணையின் இருவினையின் — இனி இவ்வான்மாக்களுக் கிருவினை முதல்வனாணையின் வருமென்றது - ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை யவன தாக்கினை யாதலான்

௩—போக்கு வரவு புரிய — இனி இவ் வான்மாக்கண் மாறிப் பிறந்து வருமென்றது. - தோற்றமுமீறு முள்ளதற் கல்லது உளதாத லின்மையான்,

௪—நீக்கமின்றி நிற்கும். — இனி நீக்கமின்றி நிற்குமன்றே யென்றது- அவன் ஏகானேக மிரண்டுமின்றிச் சர்வ வியாபியாய் நிற்றலான்

௩ - எ - ன்—புநருற்பவம் வருமாறுணர்த்துத லுதலிற்று.

அரன் உயிர்களி லிரண்டறநிற்பன். (௧)

உயிர்களுக்குக் கன்ம பல்லினையரனே கொடுப்பன். (௨)

உயிர்கள் அச்சுமாறியே பிறக்கும்.

அரன் சர்வ வியாபகன். (௩)

௨—௬ - ம்,
அ - ௩ க்கு
சூர் - ௬.

ஆக ௬ - ௨ க்கு
அ - எ, சூர் - எ,

௩—வது, சூத்திரம்.

உளதிலதென்றலி னெனதுடலென்றலி
னைம்புலனொடுக்க மறிதலிற்கண்படி
லுண்டிவினையின்மையி னுணர்த்தவுணர்தலின்
மாயாவியந்திர தனுவினுளான்மா.

௧—இலதென்றலின் ஆன்மா வுளது

ஈண்டு இலதென்றலின் ஆன்மா வுளதென்றது - எவற்றினையும் அன்றன்றென விட்டு ஆன்மா இலதென்றுநிற்பது உளதாதலின் அதுவே அவ்வான்மாவாமென்றது.

௨—எனதுடல் என்றலின் ஆன்மா வுளது.

இனி எனதுடலென்றலின் ஆன்மா வுளதென்றது- என் பதி என் மனை என்றாற்போல; என்கை என்கா லென நிற்பதுளதாதலின், அதுவே அவ்வான்மா வா மென்றது.

௩—ஐம்புலன் அறிதலின் ஆன்மாவுளது

இனி ஐம்புல னறிதலின் ஆன்மாவுளதென்றது - ஐம்புலனாகிய சத்த பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியாமையின், இவ்வைந்தினு மைம்பயனு மறிவதுளதாதலின், அதுவே அவ் வான்மாவா மென்றது.

ரு - ஏ - ன்—ஆன்மப்பிரகாச முணர்த்துத லுதலிற்று.

இல்லை யென்கின்ற வறிவுடனே சொல்லுகையினாலே யறிவுயிருண்டு. (க)

எனதுடலென்ற பொருட்பிறிதின் கிழமையாகச் சொல்லுகையினாலே, உடற்கு வேறுயிருண்டு. (உ)

ஐந்தையு மொருவனே யறிதலின் ஒவ்வொன்றை மாத்திர மறிகின்ற வைந்திற்கும் வேறுயிருண்டு. (௩)

௪—ஒடுக்க மறிதலின் ஆன்மா வுளது

இனி ஒடுக்க மறிதலின் ஆன்மா வுளதென்றது - கனவின்கட் கனவு கண்டாமென்றுங் கண்டிலமென்றும் நிற்ப துளதாதலின் அதுவே யவ்வான்மாவா மென்றது.

௫—கண்படில் உண்டிவினை யின்மையின் ஆன்மா வுளது

இனி கண்படி லுண்டி வினை யின்மையி னான்மா வுளதென்றது - ஒடுங்கின விடத்து இன்ப துன்பஞ் சீவனம் பிரகிருதிக் கின்மையின், ஒடுங்காதவிடத்துஇன்ப துன்பஞ் சீவியாநிற்ப துளதாதலின், அதுவேயவ்வான்மாவா மென்றது.

௬—உணர்த்த உணர்தலின் ஆன்மா வுளது

இனி உணர்த்த வுணர்தலி னான்மா வுளதென்றது - அவ னறிந்தாங் கறிவனென் றறிவிக்க வறிந் துபதேசியாய் நிற்ப துளதாதலின் அதுவே யவ்வான்மாவா மென்றது.

௭—மாயா வியந்திர தனுவினுள் ஆன்மா வுளது.

இனி மாயா வியந்திர தனுவினு ளான்மாவுள தென்றது - அவை தாம் வெவ்வேறுபெயர் பெற்று நிற்றலான்.

கனவுடலை விட்டு நனவுடலி
லே வருகையினாலே அக்கனவுட
லுக்கு வேறு யுயிருண்டு. (ச)

நித்திரையிலும் பிராணவா
யுத்தொழிற் பண்ணவுஞ் சரீரத்
திற்குப் புசிப்புந் தொழிலு மில்
லாதபடியினாலே, பிராணவாயு
வுக்கு வேறு யுயிருண்டு. (ரு)

மறந்து மறந்து நினைக்கின்ற
படியினாலே மறவாம லிருக்கிற
வரனுக்கு வேறு யுயிருண்டு (சா)

எல்லாத் தத்துவங்களுக்கும்
வெவ்வேறு பெய ரிருக்கிற படி
யினாலே, அந்தத் தத்துவங்க
ளுக்குவேறு யுயிருண்டு. (எ)

ந—சூ - ம்,
அ - எக்கு, சூர் - எ.

ஆக சூ - நக்கு
அ - கசா, சூர் - கசா

ச—வது, சூத்திரம்.

அந்தக்கரண மவற்றினொன்றன்றவை
சந்தித்ததான்மாச் சகசமலத்துணரா
தமைச்சரசேய்ப்பநின் றஞ்சவத்தைத்தே.

க—அந்தக்கரண மவற்றி னொன்றன்று:- இவ் வான்மா வாவது அந்தக்கரணங்களாயுள்ள மனோ புத்தி யாங்கார சித்தங்களி லொன் றன் றென்றது - அவை தாம் பிரகாசமாய் நின்றே யப்பிரகாசமாய் நிற்றலான்.

உ— சகசமலத் துணராது (அமைச் சர சேய்ப்ப) அவை சந்தித்தது ஆன்மா:- இனி இவ்வான்மா சகசமலத்தினு லுணர்வின் றென்றது - அதுதான் ஞான திரோதகமாய்மறைத்துக்கொடு நிற்றலான்.

ந—அமைச் சர சேய்ப்ப நின் றஞ்சவத்தைத்தே:- இனி இவ்வான்மா சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனாய் நிற்குமென்றது-; அதுதான் மலசொரூபத்தின் மறைந்து அரூப சொரூபியாய் நிற்றலான்.

ரு—வது, சூத்திரம்.

விளம்பியவுள்ளத்து மெய்வாய்கண்மூக்
களந்தறிந்தறியா வாங்கவைபோலத்

சூ - ௭ - ன்—இதுவுமது.

அந்தக்கரணங்களுக் குயிருட னேகூடி யொன்றித் தொழிலில் லாதபடியினாலே, அந்தக்கரண ங்களுக்கு வேறா யுயிருண்டு. (௧)

மலமறைப்பா லுயிர்க் கறிவில்லை (௨)

௪— சூ - ம்,
அ - ௩க்கு, சூர் - ௩.

ஆக சூ - ௪க்கு
அ - ௧௭, சூர் - ௧௭.

உயிர் மூன்றவத்தைப்படும்(௩)

தாந்தமுணர்வின் றமியருள்
காந்தங்கண்ட பசாசத்தவையே.

க—விளம்பிய வுள்ளத்து மெய் வாய் கண் மூக் கௌந்து நின் றறியா

ஈண்டு ஐயுணர்வுக ளான்மா வா லுணருமென்றது - அவற்றி ஞ லான்மா வொற்றித்துக் காணி னல்லது அவை யொன்றையும் விடையியா வாகலான்.

உ—ஆங் கவைபோலத் தாந்தமுணர்வின் றமியருள் காந்தங் கண்ட பசாசத் தவையே.

இனி இவ்வான்மா தன்னாலே யுணருமிந்திரியங்களைப்போலத் தானுந்தன்னையுணராது நிற்றலால் இதுவுந் தமது முதலாலேயுணருமென்றது.

௫—வது, சூத்திரம்.

உணருருவசத்தெனி னுணராதின்மையி
னிருதிறனல்லது சிவசத்தாமென
விரண்டுவகையி னிசைக்குமன்னுலகே.

க—உணருரு வசத்தெனி னுணரா தின்மையின்

ஈண்டு அறிவினாலறியப்பட்ட சுட்டு அசத்தென்றது-அவை தாம் பிரகாசமாய் நின்றே யப்பிரகாசமாய் நிற்றலான்.

உ—இருதிற னல்லது சிவ சத்தாமென விரண்டுவகையி னிசைக்கு மன்னுலகே.

இனிப் பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்க வேண்டுவ தின்மையானும் அப்பிரகாசத்தினுக்குப் பிரகாசமின்மையானும் இவ்விரண்

சூ - எ - ன்—இவ் வான்மாக்களிடத்துத் தமது முதலுபகாரமுணர்த்துதனுதலிற்று.

உயிராலே தத்துவங்களெல்லாந் தொழில் செய்யும். (க)

நி—சூ - ம்,
அ - உ க்கு, சூ - உ:

அரனாலே யுயிர்களெல்லா மறியும். (உ)

ஆக சூ - நி க்கு
அ - கக; சூ - கக;

சூ - எ-ன்—சத்தும் அசத்தும் வரைசெய் துணர்த்துதனுதலிற்று.

உயி ரறிவினாலே யறியப்பட்டவெல்லா மழியும். (௩)

தன்மையு மின்றி வாக்கு மனோதீதகோசரமாய் நின்ற வதுவே சத்தாயுள்ள சிவமென் றுணரற் பாற்று.

எ—வது, சூத்திரம்.

யாவையுஞ்சூனியஞ் சத்தெதிராதலிற்
சத்தேயறியா தசத்திலதறியா
திருதிறனறிவுள திரண்டலாவான்மா.

௧—யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராதலிற் சத்தே யறியாது

ஈண்டுச் சத்தினிடத் தசத்துப் பிரகாசியா தென்றது - மெய்யினிடத்துப் பொய் யப்பிரகாசமாய் நிற்றலான்.

௨—அசத் திலதறியாது

இனி யசத்தினுக் குணர்வின் றென்றது -அதுதா னிருபிக்கி லின்றாகலான்.

௩—இருதிற னறிவுள திரண்டலா வான்மா.

இனி இருதிறனறிவுள திரண்டலாவான்மா வென்றது- இவ்விரண்டினையு மறிவதா யுட்டேசியாய்நின்ற வறிவு இரண்டன்பாலு முளதாய்,உள்ள அதுவே யவ்வான்மாவாமென்றது.

௬—சூ-ம்,
அ-உக்கு, சூர்-உ.

அப்பிரமேயமாக வறியப்பட்டவனே யரன். (உ) ஆக சூ-௬க்கு அ-உக, சூர்-உக.

சூ-எ-ன்—மேலதற்கோர் புறனடை யுணர்த்துத னுதலிற்று.

அரன்பாசத்தையநுபவியான்.

பாசம் அரனை யநுபவியாது (உ)

எ—சூ-ம்,
அ-௩க்கு, சூர்-௩.

உயிர் அவ்விரண்டினையு மநுபவிக்கும். (௩) ஆக சூ-எக்கு அ-உ௪, சூர்-உ௪.

அ—வது. சூத்திரம்.

ஐம்புலவேடரி னயர்ந்தனைவளர்ந்தெனத்
தம்முதல்குருவுமாய்த் தவத்தினிலுணர்த்தவிட்
டன்னியமின்மையி னரன்கழல்செலுமே.

௧—தவத்தினி லுணர்த்த — ஈண்டு இவ்வான்மாக்கட்கு முன்செய் தவத்தான் ஞானநிகழு மென்றது - மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டி யல்லது மோக்ஷத்தைக் கொடா வாகலான்.

௨—தம் முதல் குருவுமாய் — இனி இவ்வான்மாக்களுக்குத் தமது முதல்வனே குருவுமா யுணர்த்து மென்றது - அவன் அந்நிய மின்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்.

௩—ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தென — இனி இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான்மயங்கித் தம்மை யுணராவென்றது - அவை தாம் பளிங்கிலிட்ட வண்ணம்போல், காட்டிற்றைக் காட்டி நிற்றலான்.

௪—விட்டு அந்நிய மின்மையின் அரன்கழல் செலுமே. — இனி இவ்வான்மா தன்னை யிந்திரியத்தின் வேறுவான் காணவே தமது முதல் சீபாதத்தை யணையுமென்றது—அவை தாம்

இ - ள் - ன்—ஞானத்தினை யடையு முறைமையினை யுணர்த்துதல் நுதலிற்று.

உயிர்க்கு நல்லறிவு தவத்தினாலே வரும். (௧)

உயிர்க்குச் சற்குருவாய் வருவ தரனே. (௨)

உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றறக்கண்டவிடத்தே தன்னையு மறியமாட்டாது. (௩)

ஊசல் கயிறற்றாற் றாய்தாளேயே
யாந் துணையான்.

௯—வது. சூத்திரம்.

ஊனக்கண்பாசமுணராப்பதியை
ஞானக்கண்ணினிற் சிந்தைநாடி
யுராத்துனைத்தேர்த்தெனப் பாசமொருவத்
தண்ணிழலாம் பதிவிதி
யெண்ணுமஞ் செழுத்தே.

க—ஊனக்கண் பாச முணராப் பதியை ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி

என்டு அம்முதலை ஞானக்கண்ணினாலே காண்க வென்றது-அவன் வாக்குமனாதீத கோசரமாய்நிற்றலான்.

உ—உராத் துனைத்தேர்த் தெனப்பாசமொருவத் தண் ணிழலாம் பதி

இனி அசத்தாயுள்ளவனைவே தங்களை யசத்தென்று காணவுளதாய்நிற்பது ஞான சொரூபமென் றுணரற்பாற்று.

௩—விதி யெண்ணு மஞ் செழுத்தே.

இனி இவ்விடத்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை விதிப்படி யுச்சரிக்க வென்றது,— இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்புதின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாதலின், அது நீக்குதற் கென்க்கொள்க.

உயிர் பஞ்சேந்திரியங்களிற் பற்றற்றாற் றன்னையுமறியும். (௪)

அ—சூ - ம்,
அ - ௪க்கு, சூர் - ௪.

ஆக சூ - அ - க்கு
அ - உஅ, சூர் - உஅ.

சூ - ள் - ன்— ஆன்மசுத்தி பண்ணுமா றுணர்த்துத னுதலிற்று.

உயிர் அரன் ஞானத்தினாலேயே அரனைக் காணும். (௧)

உயிர் பாசத்திலே பற்றற்றால், அரன் வெளிப்படுவன். (௨)

௯—சூ - ம்,
அ - ௩க்கு, சூர் - ௩.

பஞ்சாக்ஷர ஜபம் பண்ணினால், வாதனாமலம் போம். (௩)

ஆக சூ - ௯க்கு
அ - ௩௧, சூர் - ௩௧.

௧0—வது சூத்திரம்.

அவனேதானே யாகியவந்நெறி
யேகனாகி யிறைபணிநிற்க
மலமாயைதன்னொடு வல்வினையின்றே.

௧—அவனே தானேயாகி யவந்நெறி யேகனாகி

என்றிப்பரமேஸ்வரன் இவ்வான்மாவாய் நின்றமுறைமையால் அவனிடத்தேகனாய்நிற்கவென்றது - அவ்வாறு நிற்கவே யானெனதென்னுஞ் செருக்கற்றுஅவனது சீபாதத்தை யணையுமாகலான்.

௨—இறை பணி நிற்கமலமாயைதன்னொடு வல்வினை யின்றே.

இனி இறை பணி வழுவாது நிற்கவென்றது - அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யாராகவே யஞ்ஞான கன்மம் பிரவேசியா வாகலான்.

௧௧—வது சூத்திரம்.

காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம்போற்
காணவுளத்தைக் கண்டுகாட்டலி
னயராவன்பினரன்கழல்செலுமே.

௧—காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம்போற் காணவுளத்தைக்கண்டு காட்டலின்

என்றுஇவ்வான்மாக்கள் அவனையின்றி யவைந்தொன்றையும் விடயியா வாகலான்-அவனும்அவற்றதுவிடயத்தை யுணருமென்றது

சூ - எ - ன் - பாசக்ஷயம் பண்ணுமா றுணர்த்துகின்றது.

அரனுடன் ஒன்றாகினில். (க)

௧௦—சூ - ம்,
அ - உ௪௬, சூர் - உ.

உன்றொழி லெல்லா மரன் ப
ணியென்றே கொள். (உ)

ஆ௯ சூ - ௧௦௪௬
அ - ௫௫, சூர் - ௫௫.

சூ-ள-ன்—பரமேஸ்வரனது சேபாகத்தை யில்லையா முணர்த்துகின்றது.

ஞானிக்கு வருகின்ற விடயங்களை யரனே யனுபவிப்பன். (க)

உ—அயரா வன்பி னரன்கழல் செலுமே. இனிப் பத்தியினான் மறவாதேத்த வவனது சீபாதத்தை யணையுமென்றது - அவ னந்நியமின்றிச் செய்வோர் செய்திப்பயன் விளைத்து நிற்றலான்.

கஉ—வது சூத்திரம்.

செம்மலர்நோன்றாள் சேரலொட்டா
வம்மலங்கழீஇ யன்பரொடுமரீஇ
மாலறநேய மலிந்தவர்வேடமு
மாலயந்தானு மரனெனத்தொழுமே.

க—செம்மலர் நோன்றாள் சேரலொட்டா வம்மலங் கழீஇ ஈண்டு ஆணவ மாயை காமிய மென்னு மலங்களைக் களைகவென்றது - அவைதாம் ஞானத்தினை யுணர்த்தா தஞ்ஞானத்தை யுணர்த்துமாகலான்.

உ—அன்பரொடு மரீஇ இனி சிவபத்தர்களோ டிணங்குகவென்றது - அல்லாதா ரஞ்ஞானத்தை யுணர்த்துவ ராகலான்.

ங—மாலற நேய மலிந்தவர் வேடமு மாலயந்தானு மரனெனத் தொழுமே. இனி பத்தரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேஸ்வரனெனக் கண்டு வழிபடுகவென்றது - அவன் மற்றிவ்விட

கக—சூ - ட்,
அ - உ க்கு, சூர் - உ.

அரனை மறவாமலன்பிருந்தால் அவ்வரனிடத்திலே யைக்கமாகப்போவன். (உ)

ஆக சூ - கக க்கு
அ - நுறு, சூர் - நுறு:

சூ - எ - ன — அசிந்திதரூப் நின்ற பதியைச் சிந்திக்குக் கண்டு வழிபடுமா றுணர்த்துத லுதலிற்று.

மும்மலங்களையுங் களைக. (க)

சிவ ஞானிகளுடனே கூடுக. (உ)

ங்களிற் பிரகாசமாய் நின்றேயி
ல்லாத விடத்துப்பிரகாசமாய் நி
ற்றலான்.

இனி யிவ்விடங்களில் வழிபடு
க வென்றது -நரம்பு நாடி முத
லானவற்றைத் தானதுவாய் வ
ரும் புருடன் அவைபற்றாவாறுப்
புருடனுமாகலான்.

சிவ ஞானிகளையுஞ் சிவலிங்கத் தையுஞ் சிவனென்றே தேறி வழி படுக. (௩)

௧௨ — சூ - ம்,
அ - ௩, வார் - ௧.
சூர் - ௪.

வழிபடாமையை யொழிக (௪)

ஆக சூ - ௧௨க்கு
அ - ௩௯, வார்த்திகம் - ௩௧
சூர் - ௩௯,

வடநூற் சிவஞானபோதத்திற் கியைந்த
தமிழ்நூற் சிவஞானபோத சூத்திரத்திற்கு

வசுத்துரை — அதிகரணம் — வார்த்திகம் — சூர்ணிகை

முடிந்தது.

சிவஞானபோத சூத்திரம்—சூரணை—வெண்பா இவற்றின் றொகை.

சூத்திரமீ ராறினுக்குச் சூரணைமுப் பானென்பா [னை
னேத்தவெண்பா வெண்பா விரண்டனைத்துஞ் - சேர்த்ததொ
நூற்றுமுப்பான் மூன்றிவற்றை நன்னூலார்வி ளையந்துணர்
வேற்றுருக்கொள் ளாருறுவர் வீடு. [கோர்

சூத்திரத்திற்கு சூரணையின் றொகை.

மூன்றுநான் கேழுமூன்றே முடிந்தபி னிரண்டிரண்டே
மூன்றுநான் மூன்றுநன்றாய் முடிந்தபி னிரண்டிரண்டே
யென்றநான் கிறுதாமே யிவையீரா றிலக்கத்துள்ளே
யென்றமுப் பானென்பானை யெனக்கர னிரங்கினானே. (௨

சூத்திரத்திற்கு வெண்பாவின் தொகை

ஐயொருப தேழேழு மாங்கமைந்த நாலாறு
மையொன்ப தோரொட்டோ டாறாறுந் - துய்யவெட்டோ
டெண்பத்து மொன்றுஞ் சிவஞான போதத்தின்
மன்னாருளும் வெண்பா வகை. (௩

சூத்திரக் கருத்து.

முதற்பதி யரனேனைபந்து முன்னத்து விதமிரண்டே
யிதற்பின னனுமானத்தா லெண்ணிலா வுயிர்கண்மூன்றே
யதற்பின யவத்தைநான்கே யகமறுந் திடமேவைந்தே
செதற்பதி பிரிந்தலன்றே தெரிவிக்க லுயிர்ப்பேழே. (௪

மறைப்பினை நீக்கிஞான வாரியை நினைக்கவெட்டே
சிறப்புடை யுபாயந்தம்மாற் றெளிவித்த லுயிரையொன்பா
னறுத்திடன் மலங்கட்பக்கே யழுந்தலே சிவத்திலொன்றே
தெப்பணி கொளாபிரண்டே - சிவஞான போதஞ்சித்தி. (௫

சிவஞானமுனிவர் சிவஞானபோதச் சிற்றுரையில் கஉ-சூ-ம், ச-வது வார்த்திகத்தை, புறனடையெனச் சில பிரதிகளினும், ச-வது அதிகரணமெனச் சிலபிரதிகளினும் கூறப்பட்டுளது: இவை கஉ-வது சூ-முதலில், அதிகரணம் பகுத்தவிடத்தில், மூன்றதிகரணமெனப் பகுத்துளதாதலின் வார்த்திகமும் விசேடமும் கூறியவிடத்து நான்காமதிகரணமெனக் காட்டுதல் பொருந்தாது. வார்த்திகப் புறனடை எனவே கொள்ளல்வேண்டும்.

அற்றேல், அதிகரணத்தையேனும் நான்காய்ப் பகுத்துரைத்தல் வேண்டும்; அவ்வாறு பகுத்தற்கு அதிகரணங்களின்றாரமையான் வருவித்துரைத்த கடா விடையாகிய வார்த்திக மாத்திரமே கூறப்பட்டுளது.

ஆதலினால் கஉ—சூ-ம், ச-அ, என்பதனை உரையாசிரியர் சிவஞானமுனிவர் எழுதிய சிற்றுரைப்பொருளின்படி புறனடையெனவே கொள்ளல் வேண்டும்.

சூரணை வகுத்தநுக்கிரகித்தவர் திருவெண்ணெய் நல்லூரில் திருவுருக்கொண்ட பொல்லாப்பிள்ளையார்.

வார்த்திக முரைத்தவர் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவர்.

இங்ஙனம், சூர்ணிகையை அநுசரித்து வார்த்திகமும், வார்த்திகத்தை யநுசரித்து அதிகரணங்களும் பகுத்திருக்கின்றன.

சூத்திரங்கள் கஉ—க்கும், சூர்ணிகையை வரையறுத்துச் செய்யுள் ஏற்பட்டிருக்கின்றது.

முதற் சூத்திர முதல் பதினொராஞ்சூத்திரம்வரை சூர்ணிகைக்குச் சரியாய் அதிகரணம் வகுத்து, இப் பனிரண்டாஞ் சூத்திரத்தில் மூன்றுஞ் சூர்ணிகையிலேயே அதிகரண முடிவுபெற்றுளது: ச-வது சூர்ணிகைச்குப் பன்னிரண்டாஞ் சூத்திரத்திற்சென்றுநின்ற கருத்திற் கேய்யைய வார்த்திக மாத்திரமே கூறியிருக்கின்றது. (அதிகரணம் கூறப்படவில்லை.)

ஆதலால் கஉ-வது சூ-க்கு ச-வது அதிகரணம் என்பது ஏட்டுப் பிரதிகளின் வழு; புறனடை என்பதே துணிபு.

சிவஞானபோத சூத்திரத்திற்கு

சூர்ணிகை - ௩௯, வார்த்திகம் - ௩௯, அதிகரணம் - ௩௮.

அதிகரண வார்த்திகங்களின்
பாடபேதம்.

க—சூ, க-அ. அவனவளதுவெனுமவைமூவினைமையின் என்பதற்குப் பிரமாணங் கூறுகின்றது. பிரவஞ்சம் நித்தியம் என்றும், தோற்றமும் ஈறும் சுபாவம் என்றும், சார்பிற்றோன்றும் என்றும் சொல்வார்க்கு, அது அப்படி அன்று ஒரு கர்த்தாவை உடைத்து என்கின்றது.

உ—சூ, உ-அ. ஆணையி னிருவினை புரிய என்பதற்குப் பிரமாணங் கூறுகின்றது. இது கர்த்தாவினுடைய ஆணையினாலே ஒழிந்து ஆன்மாக்களுக்குப் புண்ணியபாவங்கள் கூடா என்பதும், அவை கூடுமிடத்து முன்புள்ளவை ஒழிந்து கூடா என்பதும், கூட்டுமிடத்து விருப்பு வெறுப்பின்றிக் கூட்டுவன் என்பதும் கூறுகின்றது.

உ—சூ, ங-அ. ஆணையிற் போக்குவரவு புரிய என்பதற்குப் பிரமாணங் கூறியது. இது ஆன்மாவுக்குத் தேகம் விட்டால் அறிவில்லை என்றும் மீண்டொரு தேகம் எடாதென்றும் சொல்வோர்க்கு அவை உண்டென்கின்றது.

ங—சூ, க-அ. இலதென்றலின் ஆன்மா உளதென்பதற்குப் பிரமாணங் கூறு முகத்தானே பதி பசு பாசமாகிய முதல் மூன்றும் இல்லை. உடம்பே அறியும் என்றவனைப்பற்றி அந்த மூன்று முதலும் உண்டென்றும், உடம்பறியாது உடம்புக்கு வேறாகிய ஆன்மா அறியுமென்றுங் கூறுகின்றது.

ங—சூ, எ-அ. மாயாகாரியங்களால் ஆக்கப்பட்டியந்திரப்பாவைபோலும் உடம்பின்கண்ணே அம்மாயாகாரியங்கள் வெவ்வேறு பெயர் பெற்று நிற்றலால், அவ்வுடம்பிற்கு வேறாய் ஆன்மா உளது என்றது.

ச—சூ, க-ரை. இச்சூத்திரம் வேறு கூறவேண்டியது என்னை எனின், மேற்பிரமாணத்தால் அறிவிக்கப்பட்ட ஆன்மாவுக்கு இலக்கணங் கூறுகின்றது.

ச—சூ, க-அ. அந்தக்கரணம் அவற்றின் ஒன்றன்று என்றது. அவை தாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான், அந்தக்கரணங்கள் தமக்குக் கீழுள்ளவற்றை நோக்கும் இடத்துச் சித்தாயும், தம்மை நோக்கும் இடத்து அசித்தாயும் நிற்றலால், என்றும் சித்தாயே நிற்கும் ஆன்மாவானது அந்தக்கரணங்களுள் ஒன்றன்றும்.

ச—சூ, உ—அ. அவை சந்தித்தது ஆன்மா என்றது, அந்தக்கரணங்களின் இயல்பும், அவற்றிற்கு ஆன்மா வேறென்பதுங் கூறுகின்றது.

ச—சூ, ங—அ. ஆன்மா சகசமலத்தினால் உணர்வின்று என்றது, அதுதான் ஞானதிரோதமாய் மறைத்துக்கொண்டு நிற்றலான், அந்தச் சகசமலமாவது ஞானத்திற்குத் திரோதமாய் அதனை மறைத்துக்கொண்டு நிற்றலினால், ஆன்மா சகசமலத்தினால் உணர்வின்று என்றதாம்.

பாடபேதப் பிரதிகளில் ச—வது சூத்திரத்திற்கு அதிகரணம் சஅ கூறுவது பொருளுக் கேர்கக் கூறியுள தேனும், இதற்குச் சூரணிகை மூன்றே யன்றி-நான்கு கூறப்படாமையின் அவ்வாறுபிரித்து அச்சிடவில்லை.

மெய்கண்டதேவரியற்றிய வார்த்திகத்திற்கு சிவஞானமுனிவர் — உரை.

க—சூத்திரக் கருத்துரை.

எ-து. சூ-ம். எ-னின். சங்காரகாரணனுயுள்ள முதலேயேமுதலாகவுடைத்து இவ்வுலகம் என்பதுணர்த்துத னுதலிற்று:— இது சூத்திரக்கருத்துரைக்கின்றது.

இ-ள். நிவிர்த்தி கலைமுதலிய பஞ்சகலைகளுட்பட்ட ஐவகைச்சங்காரத்துள் இறுதிக்கண்ணதாகிய மாசங்காரத்தைச் செய்யும் வினைமுதலாயுள்ள முதல்வனையே தனக்கு முதற்கடவுளாகவுடைத்து, அவனவளதுவென்று இவ்வாறு சுட்டியுணரப்படுவதாய உலகம் எனவேதாகமங்களுட் கூறப்படுவதனை அநுவாதவளவையா னுணர்த்துதலைக் கருதிற்று இச்சூத்திரம். எ - று.

ஏகாரம், இயைபின்மை நீக்குதற்கும், பிறிதினியைபு நீக்குதற்கும் பொதுவாய் நின்ற பிரிநிலை.

இதன்பொழிப்பு உரைத்துக் கொள்க.

இஃது இவ்வுரைமுகத்தாற் கேட்போரால் உரைவகை பற்றிச் செய்து கோடற்பாலதொன்றனை அறிவுறுத்துகின்றது.

இ-ள்.சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு முன்னர்க் கண்ணழித்துரைக்கும் பொழிப்புரை பற்றி உரைத்துக்கொள்க. எ - று.

எனவே, இங்ஙனம் இருவகைப்படும் பொழிப்புரையுட் கண்ணழித்துக் கடாவிடைகளானுரைக்கும் வார்த்திகமாய பொழிப்புரை மாத்திரையே யாமீண்டுரைக்கின்றும்; பிண்டமாகக்கொண்டுரைப்பதாய பொழிப்புரை இதுபற்றி யுணர்ந்துகோடல் எளிதாகலின், அஃதியா முரைக்கின்றிலம் என உரைமுகத்து மாணுர்க்கு அறிவுறுத்தவாறாயிற்று.

இஃது, ஏனைச் சூத்திரங்களினும் உய்த்துக்கொண் டுணர்தற் பொருட்டு, முதற்கண் வைக்கப்பட்டது.

இச்சூத்திரத்துள் அவனவளதுவெனு மவை மூவினைமையின் என்பது ஓரதிகரணம், தோற்றிய திதியே யொடுங்கியுளதாம் என்பது மூன்றதிகரணத்தை யுள்ளடக்கி நிற்பதோரதிகரணம், அந்தமாதி யென்மனார் புலவர் என்பது ஓரதிகரணம், ஆக முக்கூற்றது இச்சூத்திரமென்றுணர்க. இம்மூன்றும் முறையே ஒன்றற்கொன் றேதுவும் பயனுமாய் ஒரு பொருண்மேல் வருதலின், ஒரு சூத்திரத்தாற் கூறினார்.

தன்னாற் கூறப்படும் பொருளும், அதன்கணையப்பாடும், அதற்குப் பிறர் கூறும் பக்கமும், அதனை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிவும், இயைபும், என்னும் இவற்றது நிலைக்களம் அதிகரணமெனப்படும்.

க—சூ, முதலதிகரண வார்த்திகம்.

ஈண்டு, தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே
கிடத்தலின்-உளதாய் ஒருவ னொருத்தி யொன்
றென்று சுட்டப்பட்ட பிரபஞ்ச முற்பத்தி தி
தி நாசமுண்டத் தென்றது.

அந்வயம்—ஈண்டு, உளதாய் ஒருவன் ஒருத்தி
ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்ப
த்தி திதி நாசமுடைத்து என்றது.

எ-து. மே-ள். எ-னின். மூவினையுடைத்தோ அன்றோ வென்னும் ஐயப்பாட்டின்கண், நித்தமாய்க் காணப்படும் பிரபஞ்சத்தை மூவினையுடைத்தென்றல் பொருந்தாது ; என மீமாஞ்சகரும் உலோகாயதருங் கூறுங்கடாவையாசங்கித்து 'அவனவளது,' என்னுஞ் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ-ள். வெ-டை.

ஒருவனென்றும் ஒருத்தியென்றும் ஒன்றென்றும் இவ்வாறு அவயவப்பகுப்புடைத்தாயும், பலவேறு வகைத்தாய்ச் சடமாயும், சுட்டியறியப்படுவதாயுமிருத்தலின், இம்மூன்றேதுவானும் பிரபஞ்சந் தோன்றி நின்றழியுமென்பது துணியப்படுமென்பார், உளதாயொருவ னொருத்தி யொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சமென உடம்பொடு புணர்த்தோதினார்.

உளதாய்ச் சுட்டப்பட்ட வெனவியையும். உளதாகச் சுட்டப்படுதல், முயற்கோடு முதலியனபோலத் திரிவையங்களா னன்றி மெய்யாகச் சுட்டப்படுதல்.

> தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்
> தலின்.

எ-து. ஏது எ-னின். காட்சியளவைக்கு எய்தாதனைப்பன வெல்லாம் பிரமாணமாகாவென உலோகாயதர் கூறுங்கடாவை யாசங்கித்துக் காட்சியளவைபற்றியும் மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள். உற்பத்தியும் நாசமுங் காணப்பட்ட திதியின் பக்கத்தே காணக் கிடத்தலின், உளதா யொருவ னொருத்தி யொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்து என மேற்கொண்டது. எ-று.

க—சூ, உ - அ வா - ம்.

> இனி, இல்லதற்குத் தோற்றமின்மையின் உள்ள
> தற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மை
> யின் - ஒடுங்கின சங்காரத்தின் வழியல்லது உ
> ற்பத்தியில்லையென்றது.

என விங்ஙனஞ் சொற்பல்காலைப் பொருட்டுத் துணிந்ததாக வைத்துரைத்தாராயினும், பொருளியைபிற்கேற்ப இதனை மூன்றாதிகரணமாக வைத்துரைப்பது ஆசிரியர் கருத்தெனக் கொள்க ; அஃதாமாறுகாட்டுதும்:—

இனி, உலகமுள்ளது என்றது.

எ-து. மே-ள். எ-னின். உலகம் இல்பொருளாய்த் தத்தஞ் சார்பிலே தோன்றியழிதல் இயல்பென்றலே அமைவுடைமையின், அது மூவினை யுடைத்தாயினும் தோற்றுவாதொருவனை யுடைத்தாதல் செல்லாது எனப் புத்தநூலார் சொல்லுங்கடாவை யாசங்கித்து 'திதி' என்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ-ள். வெ-டை.

இல்லதற்குத் தோற்றமின்மையின்.

எ-து. ஏது எ-னின். உள்ளதாதல் யாங்ஙனம் என்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள் இல்பொருளாகிய முயற்கோட்டிற்கு முக்காலத்துமுற்பத்தியின்மையின், ஈண்டுற்பத்தி காணப்படுதலான், உலகமுள்ளது என மேற்கொண்டது. எ-று.

இனி, உலகஞ் செய்வோனையுடைத்து என்றது.

எ-து. மே-ள். எ-னின். உள்பொருளெனப்பட்ட பிரபஞ்சம் தத்தமுதற்காரணத்தினின்றுந் தானே தோன்றியழியும், இதற்கொரு நிமித்தகாரணமாய் ஒரு கருத்தா வேண்டாம் எனச் சாங்கியர்கூறுங் கடாவையாசங்கித்து 'தோற்றிய' என்னுஞ் சூத்திரக் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ-ள். வெ-டை.

உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்
மையின்.

எ-து. ஏது எ-னின். அதற்குப் பிரமாணமென்னை என்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள். மண்முதலியவற்றினுள்ளதாகிய கடமுதலிய பொருட்குக், குயவன் முதலிய செய்வோனையின்றி வினைதன் முதலிய செய்தொழில் நிகழாமையின்; உலகம் இவ்வியல்பிற்றுகலான் இனி இவ்வுலகஞ்செய்வோனையுடைத்து என மேற்கொண்டது. எ-று.

இனி, ஒடுங்கின சங்காரத்தின் வழியல்லது உற்பத்தியில்லை யென்றது.

எ-து. மே-ள். எ-னின். இத்துணையுங் கூறியவாற்றான், உலகத்தைத் தோற்றுவிப்பான் உண்டெனப்பட்ட கருத்தா திதிகருத்தா சிருட்டிகருத்தா முதலியோரில் ஒருவனே யாதலையும் எனப் பாஞ்சராத்திரி முதலியோர் கூறுங்கடாவை யாசங்கித்து 'ஒடுங்கியுளதாம்' என்னுஞ் சூத்திரகூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ-ள். உலகம் தானொடுங்குதற்கு நிலைக்களமான சங்கார கருத்தாவினின்றன்றி உளதாகாது. எ-று.

ஒடுங்கினவென்னும் பெயரெச்சஞ் சங்காரமென்னும் இடப்பெயரோடு முடிந்தது. சங்காரம் ஆகுபெயர்.

அல்லதில்லை என்று எதிர்மறை முகத்தாற்கூறியது, வினைகடவுளாரின் உளதாகாமை யாப்புறுத்தற்பொருட்டு.

இதனுள் ஒடுங்கின என்பதனாற் போந்த குறிப்பேதுவை புலப்படக்காணுமாறு.

ஆண்டு ஒடுங்குதலின்.

எ-து. ஏது. எ-னின். அதற்குப் பிரமாணமென்னை என்னுங்
டாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள். யாது யாண்டொடுங்கும், அஃததனினுற்பத்தியாம்;
ண்ணிற்குடம்போலும் என்னும் அவினுபாவத்தாற் பிரபஞ்
ஞ் சங்காரகாரணன்மாட் டொடுங்குதலின், மீளத் தோன்று
கால் ஆண்டுநின்றுந் தோன்றுதலே பொருத்தமுடைமையி
, அவ்வாறு மேற்கொண்டது. எ-று.

இவ்வாறு மூன்றதிகரணப் பொருளும் இரன்கட்போந்தவா
ம், இவ்வாறுரையாக்காற் பொருளிடைபுடாரையுந் ...
வுணர்வாற், கண்டுகொள்க.

க—ரு, ரு - அ - வா - ம்.

இனி, சுட்டுணர்வாகிய பிரபஞ்சஞ் சுட்டுணர்
வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுத
ந்தரமின்றி நிற்றலான் - சங்காரமே முதலெ
ன்றது.

அ—இனி, சங்காரமே முதலென்றது.

எ-து. மே-ள். எ-னின். ஒடுங்கின சங்காரத்தினல்லதுற்பத்
யில்லை, எனவே சங்காரகருத்தா உலகிற்கு முதற்கடவுளெ
பது போந்ததாயினும், தேர்முதலாயின பலர் கூடிச்செய்யக்
ண்டலின்; அவற்றினும் அதிவிசித்திரமான உலகத்திற்கு ம
றுமத்தன்மையராய முதற்கடவுளர் உண்டெனக்கோடும் எ
னும் அநேகேசுரவாதிகண்முதலியோர் மதம்பற்றி நிகழுங்
டாவை யாசங்கித்து 'அந்தமாதி' என்னுஞ் சூத்திரக்கூற்றைக்
ண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ-ள். சங்காரகருத்தா ஒருவனே உலகிற்கு முதற்கடவுளெ
றது. எ-று.

சங்காரம் ஆகுபெயர். ஏனையோர் முதல்வராகாரெனப் பிரித்தலையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

சுட்டுணர்வாகிய பிரபஞ்சஞ் சுட்டுணர்வின்றி
நின்ற சங்காரத்தின் வழி யல்லது சுதந்தரமி
ன்றி நிற்றலான்.

எ-து. ஏது. எ-னின். அதற்குப் பிரமாணமென்னை யென்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள். ஒன்றொன்றாய்ச் சுட்டியறிவதாகிய உருவும் அருவுமென் றிருவேறுவகைப்பட்ட பிரபஞ்சம், அவ்வாறு சுட்டியறிதலின்றி எவ்வுலகும் ஒன்றுபறிந்து நின்ற சங்காரகருத்தாவின் வழிப் பரதந்திரமாய் நிற்பதல்லது தனக்கெனச் சுதந்திரமுடைத்தாய் நிற்பதன்றாகலால்; சங்காரகாரணனொருவனே உலகிற்கு முதற்கடவுளன்றி, ஏனையோர் முதற்கடவுளரல்லரென மேற்கொண்டது. எ-று.

பிரபஞ்சத்திற்குச் சுதந்தரமின்மையுஞ் சங்காரகாரணனுக்குச் சுதந்திரமுண்மையும் ஏதுமுகத்தார் காட்டுவார் சுட்டுணர்வாகிய பிரபஞ்சமெனவும், சுட்டுணர்வின்றி நின்ற சங்காரமெனவும், ஈரிடத்தும் உடம்பொடு புணர்த்தோதினார். சுட்டுணர்வுடையதனைச் சுட்டுணர்வென்றது உபசாரம்.

ஈண்டுப் பிரபஞ்சமென்றது சேதனப்பிரபஞ்சத்தை; பிரிநிலையேகாரத்தான் விலக்குதற்குரியது அதுவே யாகலின்.

தேர் முதலாயின பலராற் செய்யப்படினும் அப்பலரும் ஒருவனேவல்வழி நின்றேசெய்ப வாகலானும், வேதத்துட் காரணவாக்கியங்களிற் சுட்டுணர்வினராகிய நாராயணன் இரணியகருப்பன் இந்திரன் அங்கி சூரியன் முதலியோரைக் காரணமென்றது குயவன்போல் அவாந்தரகாரணமாதல் பற்றியே

யாகலின் அவையெல்லாம் ஆகுபெயராற் சங்காரகாரணனாகிய முதற்கடவுளையே யுணர்த்தி நிற்குமாகலானும், செய்துஞ் செய்வித்தும் எல்லாத்தொழிற்கும் வினைமுதலாய் நிற்கு முதற்கடவுள் சங்காரகருத்தா வொருவனே யென்பது கருத்து.

உ—சூ. க - ரை.

எ-து. சூ-ம் எ-னின். புனருற்பவம் வருமா றுணர்த்துத னுதலிற்று.

எ-து. க-ரை. எ-னின். சூத்திரக் கருத்துணர்த்துத னுதலிற்று.

இ-ள். உலகம் ஒடுங்கியினின்றும் மீளவுளதாமாற்றை வகுத்துணர்த்து முகத்தானே துணைக்காரண முதலியன இல்வழி இறைவன் உலகிற்கு நிமித்தகாரணனாதல் சாலுமாறு யாங்ஙனம் என்னுங்கடாவை யாசங்கித்து, அவற்றதுண்மைக்குப் பிரமாணமுணர்த்துதனுதலிற்று இச் சூத்திரம். எ-று.

சூத்திரவியைபும் இதனானே விளங்கும்.

ஒடுங்கியுளதா மென்றவழி ஒடுங்கியினின்றும் மீளவுளதாயவது எவ்வாறென்று அவாய் நிற்றலின், அவ்வவாய் நிலைப்பற்றிப் புனருற்பவமே ஈண்டுக் கூறப்பட்டது.

இதனுள் அவையே தானேயாய் என்பதோரதிகரணம், ஆணையினிருவினையின் என்பதோ ரதிகரணம், போக்கு வரவுபுரிய என்பதோ ரதிகரணம், ஆணையி னீக்கமின்றி நிற்குமன்றே என்பதோ ரதிகரணம், ஆக நாற்கூற்றது இச் சூத்திரமெனக் கொள்க,

---

உ—சூ, க - அ - வா-ம்.

ஈண்டு, அத்துவித மென்ற சொல்லானே யேக மென்னின ஏகமென்று சுட்டுவ துண்மையின்,

அத்துவிதமென்ற சொல்லே யந்நிய நாத்தியை யுணர்த்துமாயிட்டு - இவ்வான்மாக்கள் பலவு முதல்வன் றானேயாய் நிற்கு மென்றது.

அந்—ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்றானேயாய் நிற்கும் என்றது.

எ-து. மே-ள். எ-ளின். மேன் முதற்கடவுளல்லவென விலக்கப்பட்டு நின்ற சேதனப்பிரபஞ்சமும் முதல்வனும், பொன்னும் பணியும்போல் அபேதமோ, இருளும் வெளியும் போற் பேதமோ, சொல்லும் பொருளும்போற் பேதாபேதமோ என்னுமையப்பாட்டின்கண், அம்மூன்றனுள் ஒரோவொன்றேபற்றி அவ்வம்மதத்தார் கூறும் கடாவை யாசங்கித்து 'அவையேதானேயாய்' என்னும் சூத்திரத்தின் முதற் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ-ள். வெ-டை.

ஈண்டும் இறட்டுற மொழிந்து கொள்க.

இதனானே, ஒருவிடயத்தைக் காணுங்கால் ஆன்மபோதம் கண்ணொளியெனத்தானென வேறின்றி உடனாய் நின்று காணுமாறுபோல, முதல்வன் புனருற்பவஞ் செய்யுங்கால் உயிர்களோடு உடனாய் நின்று செய்வனென்பதூஉம், பெறப்பட்டது.

அத்துவிதமென்ற சொல்லானே ஏகமென்னில் ஏகமென்று சுட்டுவதுண்மையின் - அத்துவிதமென்ற சொல்லே அந்நிய நாத்தியை யுணர்த்துமாயிட்டு.

எ-து. ஏது. எ-னின். முதல்வன் அவ்வாறு மூவகையுமாய் நிற்பனென்றற்குப் பிரமாணமென்னை என்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள். அத்துவிதமென்ற சொல்லின் அகரம் -இன்மை அன்மை மறுதலை என்னு முப்பொருளுணர்த்துமன்றே அவற்றுள்

௫௬ - ௫ள பக்கத்தில் உ—ரு. க-அ, த்தில்

அத்துவிதம் என்ற சொல்லானது, ந துவிதீயம்=அத்து விதீயம் எனநின்றது.

அஃதாவது, ந லோபப்பட்டு அ தோன்றிற்று.

(லோபம் - கெடுதல்.)

இது, பாணினி. உ-வது அத்தியாயம், உ-ம் பாதம், ௬-வது நஞ், என்னும் சூத்திரவிதி.

உதாரணம். ந பிராமணஹ=அப்பிராம்மணஹ, ந பாம்சுல=அபாம்சுல.

(பாம்சுல=குற்றமுள்ளவன்.) எ-ம்.

சாந்தோக்கிய உபநிஷத்திலும், ஏகமேவா துவிதியம் என்பதில் ந துவிதீயம்=அத்துவிதீயம் எனவே உதஹரிக்கின்றது.

தமிழில் பேர் அகத்தியத்தினும் எழுத்திலக்கணக் காண்டம் ௫-வது, வடபதப்படலத்தில்.

"எதிர்மறைவடசொற் கிசைந்த மொழிமுதல் - உயிர்வரிலநு மொற்றிலவ்வுமாம்". என்னை, வடசொற்களில் அன்மைப் பொருளையுணர்த்துமிடத்து மொழிக்குமுதலில் உயிர்வரின் அந உம், மெய்வரில் அ உம் தோன்றும் என்பதாம்.

உ - ம். ஆசாரமின்மை - அநாசாரம், ஆதியின்மை - அநாதி, என உயிர்முதல்மொழிக்கு அநறும், களங்கமின்மை - அகளங்கம், களமின்மை - அகளம், யோக்கியமின்மை - அயோக்கியம் என மெய்முதல்மொழிக்கு அ—உம் வருவனவறிக.

அத்துவிதம் என்ற சொல்லினும் துவிதம் என்னும் மொழிக்

ரு - து - என்னுமெய்யெழுத்து முதலில்நின்றதால் எதிர்மறைப்பொருளை யுணர்த்தும்பொருட்டு ந கெட்டு அ தோன்றிற்று.

நேமிநாதம் எழுத்ததிகாரம் கஅ—செய்யுள்.

"நேர்ந்த மொழிப்பொருளை நீக்க வருநகரஞ், சார்ந் துடலாயிற் றன்னுடல்போஞ் - சார்ந்ததுதா, னுவியேற் றன்னுவி முன்னுகும்". எ-ம்.

வீரசோழியத்தில் சந்திப்படலம் கக - வது செய்யுள்.

"சொன்னமொழிப்பொரு ணீக்குநகரமச் சொன்முன்மெய்யேல் அந்நிலையாக வுடல்கெடுமாவி முன்னுகிலது, தன்னிலை மாற்றிடும்——வடமொழி வாசகத்தே" எ-ம். கூறியவிதியுங்காண்க.

இதனுல் உ—ரு, க-அ, த்தில் கூறிய அத்துவிதம் என்ற சொல்லின்முன்னின்ற அகரம் ந கெட்ட அ எனக் கொள்க.

இனி அத்துவிதீயம் என்பதற்கு இன்மையாகிய எதிர்மறைகூறவேண்டில் அநத்துவிதீயம் எனக்கூறல் வேண்டும். அதுவோ இரண்டுமின்மை ஒன்றுமின்மையைக்கூறி நாஸ்திகத்தைக்காட்டும்.

இவ்விதியினீங்கி இயல்பாய்வரும் வடசொற்களும் சில உள.

அவை:— ந க்ஷத்திரம் — க்ஷத்திரம் - நழுகாமலிருக்கிறது.

ந முசி — முசி விடுகிறது.

ந குலம் — குலம் சாதி.

ந கம் — கம் இந்திரியம்.

ந காம் — காம் போகிறது. எனவருவன.

இன்மைப் பொருள்பற்றி அத்துவிதமென்ற மொழி மாத்திரை யானே ஒரு பொருளென்றல் பொருத்தமுடைத்தெனில், தானே தன்னை யொன்றெனக் கருதல்வேண்டாமையின், அவ்வாறு கருதும் பொருள் வேறுண்டென்பது பெறப்படுதலானும்; எண்ணுப்பெயர்மேல் வந்த அகரம் - அன்மைப்பொருண்மாத்திரையே யுணர்த்திப் பொதுமையினிற்பதன்றி, ஏனைச்சொற்களின்மேல் வந்த அகரம்போல இன்மை மறுதலைப்பொருள்களை யுணர்த்துதல் வழக்கின்கணின்மையின், அத்துவிதமென்கின்றமொழி தானே பிறிது காரணம் வேண்டாது வேறின்மையை யுணர்த்தி நிற்குமாகலானும், ஈண்டிவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் றானேயாய் நிற்குமென மேற்கொண்டது. எ-று.

ஆகலானென்பதற்கு ஆயிட்டென்பது அக்காலவழக்குப்போலும்; அற்றாகலினன்றே + "நீயோ செய்யாய் நின்மலனாயிட்டு" என்றார் வழிநூலாசிரியரும்; இனி "மழைபெய்து குளநிறைந்தது" என்புழிப்போல ஆயிடலாலென்பது ஆயிட்டெனத் திரிந்ததென்றலுமொன்று.

எண்ணும்மை விரித்துரைக்க.

வேறின்றி உடனாதல் பெறப்படவே, பொருண்மையாற் பேதமென்பதூஉம் கலப்பினால் அபேதமென்பதூஉம் தாமேபோதருமென்பது கருத்து.

உ—ரூ, உ - அ - வா-ம்.

இனி, இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வனாணையின் வரும் என்றது.

எ-து. மே-ள். எ-னின். முதல்வன் அவ்வாறு உயிர்களோ

+ இருபாவிருபது. ச -செ. 'கூறியமூன்று'

டியைந்து நின்று புனருற்பவஞ் செய்யுங்கால் உலகத்துப்போல் அவனுக்குத் துணைக்காரணமுதலியன வேண்டப்படுமோ படாவோ என்னும் ஐயப்பாட்டின்கண், முதல்வனது சுதந்திரத்திற்கும் அளவிலாற்றற்கும் இழுக்காய் முடியுமாகலின், அவனுக்கு அவை வேண்டப்படா எனப் பரிணாம வாதிகள் கூறுங் கடாவை யாசங்கித்து 'ஆணையி னிருவினை யின்' என்னும் சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ-ள். வெ-டை.

ஈண்டு இருவினையென்றது முற்பிறவிகளினீட்டப்பட்டு மாயையிற் கட்டுப்பட்டுக் கிடந்த புண்ணிய பாவங்களை யென்க; எனவே, மாயையினுண்மையும் பெறப்பட்டது. இவை வேண்டப்படுதல்பற்றி முதல்வன் சுதந்திரத்திற்கு இழுக்கில்லை யென்பார், முதல்வனாணையின் வரும் என்றார்.

ஒரு நகரியைக் காப்பான் பாடி காவலிட்டாங்கு
அவை அவனதாக்கினை யாகலான்.

எ - து. ஏது. எ - வின். ஆணையேயமையும், இருவினையெற்றுக்கு என்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ - ள். ஒரு பட்டணத்தைப் புரக்கும் வேந்தன் பாடி காவற்றொழிலைக் களைகணுவானொருவன் மாட்டு வைத்தாற்போல, எல்லாவறிவு முதன்மை யநுக்கிரகங்களுடையஅம்முதல்வன், புனருற்பவத்தைச் செய்வதாகிய தன தாணையை, அவ்விருவினைகண்மாட்டுவைத்து நடாத்துதலே முறையாகலான்; இனி யிவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வனாணையின் வரும் என மேற்கொண்டது. எ - று

முதல்வன் செய்யுஞ் செய்தியெல்லாம் உலகத்தோடொப்ப நிகழ்வனவாகலின் ஈண்டைக்கு அரசன்செய்தி உவமையாயிற்று.

பாடிகாவலாவது களைகணுவானொருவனைக்கொண்டு வேந்தன் செய்விப்பதொரு தண்டத்தொழில்விசேடம். அது × "கோடிகாவனைக் கூறாத நாளெல்லாம்—பாடி காவலிற் பட்டுக் கழியுமே" என்னுந் திருப்பாட்டானு மறிக. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறெல்லா முரைப்ப.

உ—சூ. ந - அ - வாம்.

இனி, இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்து வருமென்றது.

எ-து. மேல். எ-னின். புனருற்பவம் சடத்துக்கன்றிச் சித்துக்குமுளதாயினன்றே முற்செய்வினையே ஈண்டைக்கு வருமென மேற்கூறிய தமையும், அஃதுண்டோ இல்லையோ என்னுமையப் பாட்டின்கட் குடமுடைந்தவழிக் குடாகாயம் ஆகாயத்தோடு கூடுமாறுபோல, உடம்பு நீங்கிய வழி உயிர் பிரமத்தோடு கூமென்னுஞ் சுருதிபற்றி, இறந்தவுயிர் மீளப் பிறப்பதில்லையெனக் கிரீடாப் பிரமவாதிகள் கூறுங் கடாவை யாசங்கித்து 'போக்குவரவு புரிய' என்னும் சூத்திரத்தின் மூன்றாங் கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ - ள். வெ - படை.

வருதல் தொன்றுதொட் டவ்வாருதல்.

மாறுதல்-ஈண்டிறத்தலென்பது 'போக்கு வரவுபுரிய' என்னு மூலத்தானும், ஏது வுதாரணங்களோடு உடாகிய இயைபானுமுணர்க. இஃதுணராது அச்சு வேறுபடுதலென்றுரைப்பாருமுளர். அஃதீண்டைக்கியாதுமியையாமை யுணர்க.

× திருநாவுக்கரசு நாயனார் திருக்கோடிகா -திருக்குறுந்தொகை. சு—செ. 'நாடி' காரணன்.

தோற்றமுமீறும் உள்ளதற்கல்லது உளதாதலி
ன்மையான்.

எ - து. ஏது. எ - னின். அதற்குப் பிரமாணமென்னை யெ
ன்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ - ள். உற்பத்தியும் நாசமுந் தொடர்ச்சியாயுள்ள பொருட்
கன்றி ஏனைப்பொருட்கு உற்பத்தி கூடாமையான், இனி இவ்வா
ன்மாக்கள் மாறிப் பிறந்து வருமென மேற்கொண்டது. எ - று,

தோற்றமும் ஈறுமென்னு முறைமைகளை எதிரது தழீஇயின
வாகக் கோடலிற்றொடர்ச்சியாயென்பது போந்தவாறறிக. உள
தாதல்-ஈண்டுத் தோன்றுதல்.

இனி இவ்வாறன்றிக் குடாகாயவுவமையேபற்றி இருவினையா
ன் வரும் புனருற்பவம் உயிரின்பொருட்டுச் சிவத்துக்கேயாமெ
னச் சிவாத்துவிதிகள் கூறுங்கடாவை யாசங்கித்தும்,மூலப்பகு
தியிற்றோன்றும் புத்திதத்துவத்திற்கே அதுவெனச்சாங்கியர்
கூறுங்கடாவை யாசங்கித்தும், மேற்கோடனுதலிற்று இவ்வதி
கரணமெனக்கொண்டு; தோற்றமும் ஈறும் அவ்வுரிமையுள்ளதற்
கேயன்றி ஏனையவற்றிற்கு உளதாதலின்மையான்,இவ்வான்மாக்
களே மாறிப் பிறந்துவருமென மேற்கொண்டதென்றுரைப்பினு
மாம். இப்பொருட்கு உரிமையென்பது அவாய்நிலையான் வந்தது.

உளதாதலென்னும் ஒருமை தோற்றவீறுகளோடு தனித்தனி
சென்றியையும்.

ஆன்மாக்களேயென்னும் பிரிநிலையேகாரம் விகாரத்தாற்றொ
க்கது.

இனி மாயாவாதி முதலியோர் மதத்தை மறுத்தற்பொருட்டு
மேற்கொண்டதென்பாருமுளர். அத்துவிதமென்றசொல்லானே
அவரை மறுத்து ஆன்மாக்களைப் பெறுவித்தமையின், ஈண்டவர்
மதம்பற்றிக் கடா நிகழ்தற் கோரியைபின்மையுணர்க.

உ—சூ, ச - அ - வாக்ம்.

இனி, நீக்கமின்றி நிற்குமன்றே யென்றது.

எ - து. மே - ள். எ-னின். அங்ஙனம் புனருற்பவமாதற் கேது வாய் இருவினைகளைச் செலுத்தி நிற்பதெனப் போந்த ஆணை யெ னப்படுஞ் சத்தியாவது, முதல்வனின் வேறோ அன்றோ வெனும் ஐயப்பாடின்கட், பொருட்குச் சத்தி வேறென்னு மீமாஞ்சகர் மு தலியோர் மதமும், அன்றென்னும் நையாயிகர் முதலியோர் மத மும் பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து 'நீக்கமின்றி நிற்கும்' எ ன்னும், சூத்திரத்தின் இறுதிக் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோ டனுதலிற்று.

இ - ள். முதல்வன் தன தாணையாகிய சிற் சத்தியோடு சம வேதமாய் நிற்பன். எ - று.

அன்னியயோகவியவச்சேதம்-அயோகவியவச் சேதம்-என்ற ற்றொடக்கத்து வடசொற்கள் பிறிதினியைபு நீக்குதல்-இயைபி ன்மை நீக்குதல்-என்றற்றொடக்கத்தனவாக மொழிபெயர்த்து வழங்கப்படுமாறுபோல, சமவாயமென்னும் வடமொழி தமிழி ன்கண் நீக்கமின்றி நிற்றலென மொழிபெயர்த்து வழங்கப்படு மென்றுணர்க. வடமொழி இரண்டாஞ்சூத்திரத்திறுதியின் ஆ ணை முதல்வனோடு சமவேதமாய் நிற்குமென ஆணைமேல் வைத் தோதியதனை, ஈண்டு முதல்வன்மேல்வைத்தோதினார். கன்மன ழிப்புழி இருவினை முதல்வனாணையின் வருமெனக் கூறிப்போந் த ஆணை, ஈண்டுக் கூறுமையே இனிது விளங்குமென்னுங்கருத் தாற் சொற்பல்காமைப்பொருட்டு அதனை யொழித்தெடுத்துக் கொள்ளப்பட்டது. இப்பொருள் சாணமாட்டாதார் சருவவி யாபியாய் நிற்றலாலென்னும் ஏதுவின்பொருளே மேற்கோளுக் கும் பொருளாகக் கொண்டுரைப்ப. அது கூறியது கூறலாதலு மன்றி மொழிபெயர்த்தல்யாப்பிற்கேலாமையுமறிக. ஈண்டுச் ச

மவாடமென்றது தாதான்மிய சம்பந்தத்தை. அஃதாவது பொருளான் ஒன்றேயாயும் ஒருவாற்றாற் பேதமாதற்கு உரிமையுடைமை.

அவன் ஏகாநேக மிரண்டுமின்றிச் சருவவியாபி
யாய் நிற்றலான்.

எ - து. ஏது. எ - னின். அதற்குப் பிரமாண மென்னை யென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளை வலியுறுத்துத லுதலிற்று.

இ - ள். அம்முதல்வன் ஒன்றே வேறேயென்னும் இருதன்மையுமின்றி அவ்விரண்டற்கும் பொதுவாய் எங்கணும் வியாபியாய் நிற்றலான்,இனி ஆணையி னீக்கமின்றி நிற்குமன்றே, என மேற்கொண்டது. எ - று.

அவினு பாவ முணர்த்துவார், ஏகா நேகமிரண்டு மின்றியென மேற்கோளிற் போந்த பொருளை அநுவதித்துச் சருவ வியாபியாய் நிற்றலானென ஏதுக் கூறினார். சருவ வியாபியாய் நிற்றல், அவையே தானே யாய் என்னும் அதிகரணத்தாற் சாதிக்கப்பட்டமையின் அதனை ஈண்டேதுவாக வைத்து, ஆணையினீக்கமின்றி நிற்கும்என்னு மேற்கோளைச் சாதித்த வாறு.

ந—ரு, க - ரை.

எ - து. ரு - ம். எ - னின். ஆன்மப்பிரகாச முணர்த்துத னுதலிற்று.

எ - து. க - ரை. எ - னின். சூத்திரக்கருத் துணர்த்துத னுதலிற்று. ய

இ - ள். மேல் அவையே தானே யென் றெடுத்துக் கொள்ளப்பட்ட உயிர், சூனிய முதலியவற்றுள் ஒன்றாகற் பாற்றென அவ்வமதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து, உயிர் அவற்றிற்கு

வேறாயுண்டென்பது கருதலளவையான் விளக்கி, மேலைச் சூத்திரத்தின் உயிர் கண்மேல் வைத்தோதிய முதல்வனதிலக்கணத்தை வலியுறுத்துதல் மூன்றாஞ் சூத்திரத்தின் கருத்து. எ-று.

முதன்மையுடைமை பற்றி உலகிற்கு நிமித்தகாரணமாகிய பதிப்பொருளுண்டென்பது முதற் சூத்திரத்துட்கூறி, காரணமாதற் பொதுமையான் இயைபுடைமை நோக்கித் துணைக்காரண முதற்காரணங்களது தன்மையும் அவற்றான் உலகங் காரியப்படுமாறும், இரண்டாஞ் சூத்திரத்துட் கூறி, அவற்றாய பயன் கோடற்குரிய பசுக்களது தன்மைக்குப் பிரமாணம் ஈண்டுக் கூறுகின்றாரென்றுணர்க. இதனானே சூத்திரவியைபும் இனிது விளங்கும்.

ஈண்டு மேற்கோள் ஒன்றாயினும், எழுவகைமதங்களை வேறுவேறு மறுக்குமேதுக்கள் ஏழாகலான், ஆன்மாவுளது என்னுமேற்கோள் அவற்றொடு தனித்தனிசென்றியைதலின், ஏழதிகரணத்தாயிற்று இச்சூத்திரமென்றுணர்க. இதனுட்கூறிய வேதுவே யேதுவும் மேற்கோளும் அதுவேயாகலான், ஏனைச்சூத்திரங்களுட்போல வேறேதுக் கூறவேண்டாமையின், இவையேதுவாமாறும் இவற்றான் மேற்கோளைச் சாதிக்குமாறும், இனிது விளக்கி வலியுறுத்துதன் மாத்திரையே ஈண்டுரைக்கப்படுவதெனக் கொள்க.

---

௩ — சூ, ௧ - அ - வாம்.

ஈண்டு, இலதென்றலின் ஆன்மாவுளதென்றது.

எ-து. மே-ள். எ-னின். சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, அந்தக்கரணான்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணான்மவாதி, விஞ்ஞானான்மவாதி, சமுகான்மவாதி என்னு மெண்மருள், அந்தக்கரணான்மவாதிகள் ஆன்மாவின இ

லக்கணங் கூறும்வழி அநுவாதமுகத்தான் மறுக்கப்படுதலின் அவரை யொழித்து ஒழிந்த எழுவர் மதங்களையும் முறையே மறுத்து உயிருண்மை சாதிப்பான் றொடங்கி, அவற்றுள் இது சூனியமே யான்மாவென்னு மாத்துமிகர் கூறுங்கடாவை யாசங்கித்து 'இலதென்றலின் ஆன்மா வுளது'என்னும் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்துமேற்கோடனுதலிற்று.

இ - ள். வெ - டை.

ஆன்மாவிலதென்றலினென வருவித்துரைக்க.

எவற்றினையும் அன்றன்றெனவிட்டு ஆன்மா இலதென்று நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாமென்பது.

எ - து பொ - ரை. எ - னின். ஆன்மா இலதென்றலே பற்றி அஃதுண்டெனக் கோடல், முயற்கோடில்லையென்னு மேதுவால் அஃதுண்டெனச் சாதித்தலோடொக்கும், என்னுங்கடாவை யாசங்கித்து அதன் குற்றமிய முணர்த்துத னுதலிற்று:

இ-ள். ஆன்மா இலதென்னுஞ் சூனியான்மவாதிகளும் இல்லையென வாளா கூறுதலமையாமையின், உடல் பொறி விடயமனைத்தினையும் முறையானே இஃதான்மாவன்று இஃதான்மாவன்றென ஒரோவொன்றாகக் கழித்து, இவ்வாறாகலின் ஆன்மாவென்பது சூனியமென்று அங்ஙனங் கூறுபவாகலான், அவற்றை ஒரோவொன்றாக விட்டு அங்ஙனங்கூறிக்கொண்டு நிற்பதோரறிவுண்மையின், அவ்வறிவே மேல் அவையே தானேயாமெபன்பதனுள் ஆகமவளவையாற் சாதித்துப்போந்த ஆன்மாவென்றவாறும். ஈண்டிலதென்றலின் ஆன்மாவுளதுஎன மேற்கொண்டது. எ-று.

அங்ஙன மறியுமறிவுஞ் சூனியமேயெனின், அஃது என்னையின்றுண்மலடி யென்பதனோடொக்கு மென்றொழிக வென்பது கருத்து.

இன்மை ஈண்டுச் சூனியப்பொருட்டு. சூனியமாவது உள்ளதுமன்று இல்லதுமன்று இரண்டுமாவதுமன்று வேறுமன்றெனப்படும் பாழ்.

ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

௩—சூ, ௨ - அ - வாம்.

இனி, எனதுடலென்றலின் ஆன்மாவுளதென்றது.

எ - து. மே - ள். எ - ளின். அவ்வறிவு உடம்பின்கணன்றி நிகழக் காணாமையானும், நான் நுணுகினேன் பருத்தேனென உடம்பினையே நானென்று வழங்கக் காண்டலானும், உடம்பேயான்மாவெனத் தேகான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்து 'எனதுடலென்றலின்' என்னுஞ்சூத்திரத்தி னிரண்டாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ-ள். வெ-டை.

நான் பருத்தேன் சிறுத்தேன் கரியேன் மனிதன் பார்ப்பானென உடம்பின் குணவிசேடங்களை உபசாரத்தால் உயிருக்கேற்றி வழங்கினும், யானுடம்பு யான்கை யான்கால் எனவுடம்பை அவ்வாறு வழங்குவாரின்றி, எனதென வேற்றுமைப்படவே யாவரும் வழங்கக் காண்டலின், அதுவே உயிர் வேறுண்டென்பதனை அறிவுறுக்குமென அவன் வழங்குமுறையேபற்றி அவனை மறுத்தவாறு.

என்பதி என்மனையென்றற்போல, என்கை என்காலென நிற்பதுளதாகலின், அதுவே அவ்வான்மாவாமென்றது.

எ-து. பொ-ரை. எ-ளின். எனதுடலென்பது பிறிதின் கிழமைப் பொருட்படாது தலைமாத்திரையாய் நிற்குமிராகுவை

இராகுவினது தலையென்று வழங்குமாறுபோல, அபேதம் பற்றியே வழங்கப்படுமென அமையுமென்னுங் கடாவை யாசங்கித்து அதன்றுற்பரிய முணர்த்துத லுதலிற்று.

இ-ள். இராகுவினது தலையென்றாற்போல்வன சிறுபான்மை வழக்கமாதலின், ஆண்டொற்றுமைப்பொருள்கோட லமையும். ஈண்டவ்வாறன்றி என்பதி என்மனைவி என்பொருள் என்று வழங்கு மாறுபோல என்கை என்கால் என்கண் என்செவி என்பொறி என்பிராணன் என்னறிவெனப் பலவாற்றானும் பெரும்பாலும் உலகத்து வழங்கக் காண்டலின் இவ்வழக்க மிகுதிப்பாடு பிறிதின்கிழமைப் பொருட்கணன்றி வாராமையான், அங்ஙனங் கூறிக்கொண்டு நிற்கும் பொருள் வேறொன்றுண்டென்பது பெறப்படுதலின், அதுவே மேலுரையளவைபற்றிச் சாதித்த ஆன்மா வென்றவாறும். எனதுடலென்றலின் ஆன்மாவுளதென மேற்கொண்டது. எ-று.

௩—௫, ௩-அ-வா-ம்

இனி ஐம்புலனறிதலின் ஆன்மா வுளதென்றது.

எ-து. மே-ள். எ-னின். ஐம்பொறிகள் ஐம்புலன்களையுமறியுமென்றல் எல்லார்க்குமொப்ப முடிந்தமையின், அவை உடல்போற் சடமன்மை பெறப்படுதலானும், அவற்றை எனதென்னும் வழக்கம் பெரும்பான்மையன்றாகலானும், அவையே உயிராதலமையுமென இந்திரியான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்து 'ஐம்புலனறிதலின்'என்னும் மூன்றாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட லுதலிற்று.

இ-ள். வெ-ட.

ஐம்புலனாகிய சத்த பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியாமை யின் இவ்வைந்தினாலும் ஐம்பயனு மறிவதுளதா கலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

எ-து. பொ-ரை. எ-னின். ஐம்புலனறிதலின், ஆன்மா ஐம்பொறியின் வேறெனச் சாதித்தற்கேதுவாமாறு யாங்ஙன மென்னுங் கடாவை யாசங்கித்து அதன்குற்பரிய மூணர்த்து கி னுதலிற்று.

இ-ள். வெ-ளிடை.

க—ரு, ச - அ - வா-ம்.

இனி ஒடுக்கமறிதலின் ஆன்மாவுளதென்றது.

எ-து. மே-ள். எ-னின். + "தேசவிந் திரியங்கட்கு நிகழறி வேதனாற் காண்டும்" என நீவிருங் கோடலின், அவ்விந்திரி யங்களின் வேறாய் அங்ஙனமறிவது புரியட்டக வுடம்பேயா மெனவமையும், அது புறத்து 'நிகழாதாயினும் அகத்தே நின்று இந்திரியங்களைப் புறத்திற் செலுத்தி யறியுமெனக் கோடுமெ னச் சூக்குமதேகான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்து ஒடுக்கமறிதலின், என்னும் நாலாங் கூற்றைக் கண்ணழித்து ரைத்து மேற்கோட. னுதலிற்று.

இ-ள். ஐம்பொறிகளு மொடுங்கின சொப்பனத்தானத்தின் கண் நிகழ்ந்தவற்றை யறிதலின் ஆன்மா வேறுண்டு. எ-று. ஒடுக்கம் ஆகுபெயர்.

+ சிவஞானசித்தி, க—ரு, கூச. செ.—'ஓசைகந்தபரிச'

நனவிற்கட் கனவுகண்டா மென்றுங் கண்டில மென்றும் நிற்ப துளதாதலின் அதுவே யவ்வா ன்மாவா மென்றது.

எ-து. பொ-ரை. எ-னின். சொப்பனத்தி னிகழ்ந்தவற்றை யறிவதுஞ் சூக்குமதேகமேயாகலின், இது சித்தசாதனமாமா மென்னுங்கடாவை யாசங்கித்து அதன்குற்றப்பாடுணர்த்துத னுதலிற்று.

இ-ள். வெ-டை.

இஃதென்சொல்லிய வாறோவெனின், ஒடுக்கமறிதலின் என்றது ஒடுக்கத்தி னிகழ்ந்தவற்றை நனவின்கண் மயங்கியறிதலென்றற் பொருட்டாதலாற் சித்தசாதனமாதற் பான்மையைத் தெளிய விடுத்தவாறென்பது. கனவுகண்ட சூக்குமவுடம்பே நனவின்கண் அதனை யறியுமாயிற் கண்டபடியறியாது மயங்கியறிதற் கூடாமையின், உயிர்க்காயின் அதுபோல் ஒருதன்மைத்தாகலின்றி அகத்துச் சேறலும் புறத்துச்சேறலும் வேறுபட்டுமயங்குமாகலான், அதுபற்றி மயங்கியறிதற் கூடுமாகலின், அங்ஙனமறியுமுயிர் வேறுண்டென்பது கண்டுகொள்க.

௩—சூ, ௫-௮-வா-ம்.

இனி, கண்படில் உண்டிவினையின்மையின் ஆன்மாவுளதென்றது.

எ-து. மே-ள். எ-னின். சொப்பனத் தானமாக்கினையின்றித் தொழிற்படாத சூக்குமதேகம்போலன்றி, சுழுத்தி தானங்களினுந் தொழிற்படுவதாய பிராணவாயுவே, அடங்குதல் விரிதல்செய் தறிவதாகிய ஆன்மாவாதலுடைத்தெனப் பி

ான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்து 'கண்படில் ண்டிவினை' என்னும் சூத்திரத்தினைத்தாங்கூறுகின்றைக் கண் ழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ-ள். வெ-டை.

உண்டிவினை உம்மைத்தொகை. அஃது × "உண்டியும் வினையுமின்றிக் கிடந்து" என வழிநூலாசிரியர் கூறியவாற்றானு ணர்க.

ஒடுங்கினவிடத்து இன்பதுன்பஞ் சீவனம் பிரகிருதிக்கின்மையின் ஒடுங்காதவிடத்து இன்பதுன்பஞ் சீவியாநிற்பதுளதாதலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

எ-து பொ-ரை. எ-ளின். கண்படைகொண்டவழி உண்டிவினையில்லையென்றது உடற்கோ பிராணவாயுவுக்கோவென வினாவிலுக்கு, உடம்பு உயிரன்மையான், அதற்கவை யில்லாமை றி ஈண்டைக்காவதோரிழுக்கில்லை; இனிப் பிராணவாயுவுக் ன்னின், அது துயின்றெழுந்தபின்னர்ச் சுகமாகத் துயின் னென்றறிதல் பிறிதோராற்றாற் பெறப்படாதென்னும் அரு த்தாபத்தியான், ஆண்டும் இன்ப துன்ப நுகர்ச்சியுண்டென்ப பெறும். விழித்துழிப்போல உறங்குழியும் பிராணவாயு பங்குதலான் வினையுண்மையுங் கண்டாமாதலின், அதற்கு வையாண்டில்லையென்றல் மாறுகோள்போலு மென்னுங்கடா யாசங்கித்து அதன் குற்றமுணர்த்துத னுதலிற்று.

இ-ள். ஈண்டு உண்டியென்றது விடயங்களிலிடமாக வரும் பதுன்ப நுகர்ச்சியை. வினையென்றது உடம்பு சேட்டித் யாகலின், இவ்விரண்டும் பிராணவாயுவை யொழித்தே

× சிவஞானசித்தி, சு-சூ. ௫)—செ. 'கண்டுணர்'.

ழுந்த கருவிகளெல்லா மொடுங்கிய துயிலிடத்து அவ்விரியங்கா நிற்பவும் உடம்பின்கண்ணே நிகழ்தலின்மையின், அவையொடு ங்காத நனவினிடத்து அவையிரண்டும் அதன்கணிகழ்தலுண் மையின், அவ்வின்மை யுண்மைகட்கேதுவாகக் கருவிகளை யொ டுக்கியும் ஒடுக்காது நிற்பதியாது அதுவே அவ்வான்மா வென்ற வாறும். கண்படில் உண்டு வினையின்மையின் ஆன்மாவுளதெ ன மேற்கொண்டது. எ-று.

பிராணவாயுவை யொழித்தொழிந்த கருவிகளென்பது ஆ றலான் வந்தது.

இன்பதுன்ப நுகர்ச்சியை இன்பதுன்பமென் றுபசரி தார்.

சீவனம் - சீவித்தல். சேட்டித்தலென்றதாம்.

செவ்வெண்டொகை விகாரத்தாற்றொக்கது.

சீவியாநிற்படுதன்பது சீவியாநிற்றலென்னுந் தொழிற்பெ ர் மாத்திரையாய் நின்றது. "உறங்குவது போலும்" என் ழிப்போல.

உளதென்றது தனித்தனி சென்றியையும்.

துயின்றுழியும் விழித்துழியுந் திரிபின்றி ஒருதன்மைத்தா ல்பற்றி உடம்பு பிரகிருதியெனப்பட்டது, பிரகிருதிக்சென் து உருபு மயக்கம்.

இரண்டுகாலத்துமொப்ப வியங்குதல்பற்றிப் பிராணவா வைப் பிரகிருதியெனக்கொண்டு, அதற்கவை யின்மையினெ றுரைப்பாரும், பிரகிருதி விகாரமாகிய சித்தத்திற்கு அ யின்மையினென வுரைத்துச் சுழுத்தியின் கண்ணுந் தொழி

வைசாய சித்தமேயுயிரொன்னுஞ் சித்தான்மவாதிகளை மறுத்தற்கெழுந்த திவ்வதிகரணமென் றுரைப்பாருமுளர்.

௩-சூ, ௬-அ-வா-ம்.

இனி, உணர்த்த வுணர்தலின் ஆன்மாவுளது என்றது.

எ-து. மே-ள். எ-னின். பிரமப்பொருள் மேற்கூறிப்போந்த சடப்பொருள்கள் போலன்றிச் சித்தாகலான், அதுவே உயிராதலமையுமென விஞ்ஞானான்மவாதிகள் கூறுங்கடாவையாசங்கித்து. 'உணர்த்த உணர்தலின்' என்னும் ஆறுங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ-ள். தொழிற்படுங் கருவிகளொன்றுமின்றிக் கேவலமாய் அதீதாவத்தையினின்றுழி அறியுமாறின்றிப் பின்னர்க் கலைமுதலிய கருவிகளால் அறிவிக்கவறிந்து வருதலுண்மையின், எக்காலத்துந் திரிபின்றி யறிந்தாங்கறிந்து நிற்குஞ் சித்தாகிய பிரமத்திற்கு இது தகாமையான் அங்ஙன முணருமான்மா வேறுண்டு. எ-று.

உணர்த்தவுணர்தலெனவே முன்னுணராது கிடத்தல் பெற்றாம்.

அவனறிந்தாங் கறிவனென் றறிவிக்கவறிந்து உபதேசியாய் நிற்பதுளதாதலின் அதுவே யவ்வான்மாவா மென்றது.

எ-து. பொ-ரை. எ-னின். அறிந்தாங்கறிவதாகிய பிரமப்பொருள் அவிச்சைக்காலத்துக் கருவிகளோடுங் கூடியன்றி யறியாதெனக் கோடுமாகலின், அதுபற்றி உயிர் வேறுண்டென்றல்

பொருந்தா தென்னுங் கடாவை யாசங்கித்து, அவ்வளவினவன் மகிழுக வென்னுநியாயத்தால் வேறு மதன்குற்றப்பரிய முணர்த்துத லுதலிற்று.

இ-ள். கருவிகளோடு கூடியவழியுந் தன்னியல் புணருமாறின்றி, அம்முதல்வன் இதுபோல மறந்து மறந்தறிதலின்றி, அறிந்தவ றேயறிந்து நிற்கும் பேரறிவுடையனென வேதாகமங்களானறிவிக்கவறிந்து, குரவனறிவுறுக்கு முபதேச மொழியைப் பெற்றுடையதாய் நிற்பதொான் றுளதாகலின்; அதுவே மேலுரையளவையாற் சாதித்துப் போந்த ஆன்மாவென்றவாறும். உணர்த்த வுணர்தலின் ஆன்மாவுளதென மேற்கொண்டது. எ-று.

அறிந்தாங் கென்பது அப்பொருட்டாதல் "எண்ணிய வெண்ணியாங் கெய்துப" என்பதனுனாறிக. இதற்குப் பிற வாறுமுரைப்ப. அவையெல்லாம் பொருந்தாமை யோர்ந்துணர்க.

௩—ரு, எ - அ - வா-ம்.

இனி, மாயாவியந்திர தனுவினுள் ஆன்மாவுள தென்றது.

எ-து. மே-ள். எ-னின். உடம்புமுதலியவற்றுள் ஒரோவொன்றே ஆன்மாவாதலின்றென்றதொக்கும், அவற்றுள் ஒன்று குறைந்தவழியும் அறிவு நிகழாமையானும், எல்லாங் கூடியவழி அது நிகழ்தலானும், அனைத்துங்கூடிய சமுதாயமே உயிராதலமையுமெனச் சமூகான்மவாதிகளாகிய சௌத்திராந்திகர் வைபாடிகர் கூறுங்கடாவை யாசங்கித்து 'மாயாவியந்திரதனு' என்னும் சூத்திரத்தினிறுதிக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட லுதலிற்று.

இ-ள். மாயாகாரியங்களான் யாக்கப்பட்டியன்ற சூத்திரப்பாவைபோலு முடம்பின்கண்ணே அவற்றிற்கு வேறாய் ஆன்மா வுண்டு. எ-று.

எனவே, அவையெல்லாம் மாயையின் காரியங்களாய் நிலைபெறுதனவாகலின், நிலைபேறுடைய உயிராகாவென்றவாறாயிற்று.

மாயை ஆகுபெயர். இகரம் விரித்தல்விகாரம்.

அவை தாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்றலான்.

எ-து. ஏ-து. எ-னின். சித்தமுஞ் சித்தப்பகுதியுமாகிய அகச்சமுதாயமைந்தும் மாயாகாரியமென்பது எம்மனோர்க்கு உடம்பாடன்மையின், அதுபற்றி ஆன்மா வேறுண்டெனச் சாதித்தலமையுமாறென்னை யெனுங்கடாவை யாசங்கித்து அவ்வாவினவன் மகிழுமாறுவென்னு நியாயம்பற்றி வேறுமோராற்றாற் சாதித்த னுதலிற்று,

இ-ள். நீ ஐந்து கந்தமெனக் கொண்ட மாயாகாரியங்கள் ஆன்மாவெனப் பெயர் பெறுமாறின்றி வேறு வேறு பெயர்பெற்று நிற்பனவாகலான், மாயாவியந்திரத்துவினுள் ஆன்மாவுளதென மேற்கொண்டது. எ-று.

வேறு வேறு என்பது வெவ்வேறெனமரீஇற்று.

ச—ரு, க - ரை.

எ-து. சூ-ம். எ-னின். இதுவுமது.

எ - து. க-ரை. எ-னின். சூத்திரக் கருத்துணர்த்துத னுதலிற்று.

இ-ள். பிரமாணம் இலக்கணமிரண்டானும் பொருளுண்மை பெறற்பாற்றெனனு முறைமைபற்றி, மேற்பிரமாணத்தாற் பெறு

விக்கப்பட்ட பதி பாச பசுக்களுக்கிலக்கணம் எதிர்நிரனிறை யாக வைத்துக் கூறுவான் றொடங்கி, அவற்றுள் இது மேலடு க்க நின்ற ஆன்மாவினிலக்கணங் கூறுத லுதலிற்று.

சொற்பல்காமைப்பொருட்டும், ஒத்து வேறுய வழியும், இயை புடைமை யுணர்ந்துகோடற்பொருட்டும், ஈண்டு இதுவுமதுவெ ண மாட்டெறிந்துரைத்த ஆசிரியர், இங்ஙனமுரைத்துக்கோ டற் கேற்பவன்றே ஆண்டு ஆன்மாவினதுண்மையுணர்த்து து லுதலிற்றெனச் சிறந்தெடுத்தோதாது பொதுப்பட ஆன்மப் பிரகாசமுணர்த்துதனுதலிற்றென்றதூஉமென்க. இவ்வாறன் றி மேலைச்சூத்திரத்தின் ஆன்மாவினதுண்மை கூறுமுகத்தாற் றொகுத்தோதிய அஞ்சவத்தையை ஈண்டிலக்கணங் கூறுமுகத் தான் விரித்தோதப்படுதலின், இதுவுமது வென்றது மேலைச் சூத்திரப்பொருளோடு மாட்டெறிந்ததென் "றுரைப்பினுமாம். இதனுலுஞ் சூத்திரவியைபு இனிது விளங்கும்.

இதனுள் அந்தக்கரணமவற்றி ளொன்றன்றென்றது ஓரதி கரணம், ஒன்றன்றாயினுஞ் சகசமலத்துணரா தமைச்சரசே ப்பவவை சந்தித்ததென்றது ஓரதிகரணம், அமைச்சரசேய் ப்பநின்றஞ்சவத்தைத்தேயென்றது ஓரதிகரணம், ஆக மூன் றதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

ச—சூ, க - அ - வா-ம்.

ஈண்டு, இவ்வான்மாவாவது அந்தக்கரணங்க ளாயுள்ள மனோபுத்தியகங்கார சித்தங்களில் ஒன்றன்று என்றது.

எ-து. மே-ள். எ-னின். ஏனையவெல்லாம் வெவ்வேறு பெ யர் பெற்று நிற்பனவாகலான் உயிராகா ஆயினும், மனமுதலிய

அந்தக்கரணங்கள் சிந்தையைச் சிவனென்றுஞ் சிவனைச் சிந்தையென்றும் இங்ஙனமுயிரெனும் பெயரானும் வழங்கப்படுதலுண்மையானும், இந்திரிய முதலியவற்றை அவ்வாறு கூறுமையின் அஃதாகுபெயரென்றற்கேலாமையானும், அவையே தனித்தனி ஆன்மாவாமென்றல் அமைவுடைத்தென அந்தக்கரணான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்து 'அந்தக்கரண மவற்றினொன்றன்று' என்னும் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இது மேலைச்சூத்திரத்துள் ஓதற்பாலதேயாயினும், ஈண்டிலக்கணங்கூறும் வழியும் அவற்றொடு சந்தித்து அமைச்சரசெய்ப்ப நிற்பதென அவத்தைக் கேதுவாக எடுத்தோதவேண்டுதலின் ஈரிடத்து மெடுத்தோதுதல் "சில்வகையெழுத்தின் செய்யுட் டாகித்—சொல்லுங் காலை யுரையகத்தடக்கி—நுண்மையொடு புணர்ந்த வொண்மைத் தாகி" என்னுமிலக்கணத்ததாய சூத்திரத்துக்கேலாமையான் அதுபற்றி விதிமுகத்தானன்றி அநுவாதமுகத்தான் ஈண்டுணர்த்தப்பட்டது.

இ-ள். வெ-டை.

ஈண்டு அந்தக்கரணமென்றது உள்ளந்தக்கரணமாகிய கலாதிகளினுஞ் செல்லாமைப்பொருட்டு மனோபுத்தியகங்கார சித்தங்களிலெனக் கிளந்தெடுத்துரைத்தார். கலாதிகளுண்டெனக்கொண்டோரின் உயிர் வேறுண்டெனக்கொள்ளாதார் இன்மையின் ஆண்டாசங்கை நிகழாமையானும் அமைச்சரோடு உவமிக்கப்பட்டு அவத்தைக் கேதுவாவன அம்மனமாதியேயன்றிக் கஞ்சுகத்தோடு உவமிக்கப்பட்டு அதீதத்தினு நீங்காது உடனிற்பனவாய கலாதிகளன்மையானும் அவற்றை ஈண்டெடுத்தோதவேண்டாமையின், மனமுதலிய புறவந்தக்கரணங்களே ஈண்டுக் கூறநின்றனவென்பது கருத்து.

அவைதாம் பிரகாசமாய்நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

ஏ-று: ஏது. எ-னின். × "மனம் புத்தி யகங்காரஞ்சித்த நான்கு, மருவியான்மா வேதென்ன வரும்" எனநீயிருங் கோடலின், உயிர் அவற்றுளொன்றுதலையுமென்றற்படுமிழுக்கென்னையென்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்த லுதலிற்று.

இ-ள். அவ்வந்தக்கரணங்கடாம் தம்மிற் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாய்நின்றே தம்மை நோக்கி அசித்தாய் நிற்றலால், தன்னை நோக்கியுஞ்சித்தாய் நிற்கும் இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாயுள்ள மனோபுத்தியகங்காரசித்தங்களில் ஒன்றன்றென மேற்கொண்டது. எ-று.

எனவே, உயிரான் அதிட்டிக்கப்பட்டு ஐம்பொறிகளறிந்த விடயங்களுள் ஒன்றனை இஃதியாதாகற்பாற்றெனச் சித்தஞ்சிந்தித்தறியும், யான் சிந்தித்தேனென்றறியமாட்டாது. மனம் அதனை இஃதின்னதாகற்பாற்றெனவும் அஃதாமோஅன்றோவெனவும் இவ்வாறு சங்கற்ப விகற்பஞ்செய்தறியும், யான் சங்கற்ப விகற்பஞ்செய்தேனென்றறியமாட்டாது. அகங்காரம் அதனை இன்னதெனத் துணிவேன் யானென்று ஒருப்பட்டெழுந்தறியும், யானொருப்பட்டெழுந்தேனென்றறியமாட்டாது. புத்தி அதனை இன்னதிதுவென நிச்சயித்தறியும், யானிச்சயித்தேனென்றறியமாட்டாது. ஆகலான் அவ்வாறின்றி அவற்றொடு கூடி யான் சிந்தித்தேன் பற்றினேன் எழுந்திருந்தேன் நிச்சயித்தேனென்றும் அதன்பின் அதுவதுவாய்ப் பரிணமித்துச் சுகதுக்க மோகரூபமாய்த் தன்மாட்டுவந்த புத்திதத்துவத்தின் பரிணாமங்களைக் கலாதிகளோடு கூடி நின்று இது சுகம் இது துக்கம் இது மோக

சிவஞானசித்தி, சூ—௪, செ - ௨. 'கருவியா.

னென்றறிந்தும், யான்சுகித்தேன் யான் றுக்கித்தேன் யான் மோகித்தேன் என்றறிந்தும், இங்ஙனம் பிறவற்றை நோக்கியுந் தன்னை நோக்கியுஞ் சித்தாகிய ஆன்மாத் தம்மை நோக்கிச் சித்தாகாது அந்தக்கரணங்களின் ஒன்றுமாறியாண்டையுமென மறுத்தவாறாயிற்று. ×"இவன்றானும் புத்தியுஞ்சித் திவனோ புத்தி" யென வழிநூலாசிரியர் கூறியதும் இவ்வியல்பு நோக்கி.

ஈண்டுப் பிரகாசம் அப்பிரகாசம் என்பன சித்து அசித்தென்னும் பொருளவாம்.

ஏனையோரை நோக்கி அரசனுக்கு அணுக்கராதற் சிறப்புப்பற்றி அமைச்சரை அரசென்று உபசரித்துக் கூறப்படுமாறுபோல, புறக்கருவிகளை நோக்கி ஆன்மாவுக்கு அணுக்கமாய் நிற்றற்சிறப்புப்பற்றி மனம்புத்தியகங்காரஞ்சித்தநான்குமறிவி யான்மாவே யென்ன உபசரித்துக் கூறப்படுதலின் மறுப்போரென்றொழிக. சூழ்ச்சித் துணையாதல்பற்றி அந்தக்கரணங்கள் அமைச்சரையொக்குமெனவே, ஏனைக்கருவிகள் ஏனைப்பரிசனங்களை ஒக்குமென்பது பெற்றாம். அது ஞானாமிர்தத்திற் காண்க.

மேலைச் சூத்திரத்தோதிய ஏதுக்களை ஈண்டைக்கு மெய்யுமாயினும், சிறந்தமை பற்றி வேறெடுத்துக் கூறினார்.

சு—சூ, உ - அ - வா-ம்.

இனி, இவ்வான்மா சகசமலத்தி னுணர்வின் றென்றது.

எ - து. மே-ள். எ-வின். ஆன்மா அந்தக்கரணங்களி னொன்றன்றாயின், அவற்றொடு சந்தித்து நிற்றற் சேதுவென்னை யெண அவர் கூறுங்கடாவை யாசங்கித்து 'சகசமலத் துணா

× சிவஞானசித்தி, கக—சூ, செ - கக. 'சிவன்றி..'.

ராது' என்னும் சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைக்கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று

இ-ள். வெ-படை.

ஆகந்துகமலங்களி னீக்குதற்குச் சகசமலமெனவிசேடிக்கப்பட்டது. படவே, உயிர் முதல்வனைப்போல் அந்தக்கரணமுதலியவற்றின் வேறாய சேதனப்பொருளாயினுஞ் செம்பிற்களிம்புபோல வேறுகாரணமின்றி மூலமலந் தன்னோடு உடனாய்நிற்றலில், தன்னியல்பானுணருமாறின்றிக் கருவிகளைக் கூடிநின்றுணர்வதாயிற்றென விடுத்தவாறாயிற்று. இதனானே மலத்துளதாமென மேற்பிரமாணத்தாற் பெறுவிக்கப்பட்ட மூலமலத்திற்கு ஈண்டிலக்கணங் கூறினாரென்பது பெறுதும். அறியாமையைச் செய்தலாகிய கேவலத்தினிகழுமியல்பே மலத்திற்குச் சிறப்பிலக்கணம், கருவிகளோடு கூடி அவத்தையுறுவதாகிய விபரீதவுணர்வைச் செய்யுஞ் சகலத்தினிகழு மியல்பே பொதுவியல்பாகலான், மலத்திற்கு இருவகை யிலக்கணமும் ஈண்டே பெறப்பட்டன.

அது தான் ஞானதிரோதகமாய் மறைத்துக்
கொடு நிற்றலான.

எ-து. ஏது. எ-னின். சகசமலத்தினாலுணர்வின்றியொழியிற் பின் கருவிகளோடு கூடியவழி அறிவுண்டாமாறியாங்ஙனமெனச் சற்காரியவாதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள். அச்சகசமலமாவது ஞானத்திற்குத் திரோதகமாய் அதனை யில்லை யென்னும்படி மறைத்துக்கொண்டு நிற்றலான் இனி இவ்வான்மா சகசமலத்தினால் உணர்வின்றென மேற்கொண்டது. எ-று.

மலத்தினதிலக்கணம் வடமொழி வழக்குப்பற்றிக் கூறுவார் ஞானதிரோதகமாயெனவும், அதனைத் தமிழ்மொழியான் விளக்

ருவார் மறைத்துக்கொடு நிற்றலானெனவுங் கூறினு ராகலான்; அது கூறியது கூறலன்மை யுணர்க. திரோதகமென்னும் வடமொழி மறைத்தலைச் செய்வதென்னும் பொருட்டாய் வினைமுதன்மேனின்ற வினைப்பெயர்.

இதனானே ஞானுபாவமே அஞ்ஞானமென்பார் மதமும் மறுக்கப்பட்டது; அபாவம் ஒருகாரியத்தைச் செய்யமாட்டாமையின்.

சு—ரூ, ஈ. - அ - வாம்.

இனி, இவ்வான்மா சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்தைகளுய்நிற்குமென்றது.

எ-து. மே-ள். எ-னின். இருளகப்பட்ட கண் விளக்கோடு கூடியவழி விடயங்களைக் காண்டலேயன்றி வெவ்வேறவத்தைப்படுமாறில்லை, அதுபோல மலத்தகப்பட்ட உயிர் கருவிகளோடு சந்தித்தவழிஒருதன்மைத்தாயறிதலே அமைவுடைத்து; அவ்வாறன்றி மேலைச்சூத்திரத்தோதிய முறையான் ஐம்புலனறிந்தும் ஒடுக்காறிந்தும், உண்டி வினையின்றிக் கிடந்தும், உணர்த்தவுணர்ந்தும்,இங்ஙனம் வெவ்வேறு அவத்தைப்படுமாறியாங்ஙனமென அவர்கூறுங்கடாவை யாசங்கித்து 'அமைச்சரசேய்ப்ப' என்னும் சூத்திரத்தின் இறுதிக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடலுதலிற்று.

இ-ள். வெ-டை.

அவத்தைபெனப்படுவன பலவுளவாகலின், அவற்றுள் ஈண்டு இக்கவத்தையெனப்பட்டவை யாவையென்னும் ஐயநீக்குதற்குக் கிளந்தெடுத்துரைத்தார்

அவத்திதன் என்னும் வடமொழி ஆதீஉவழிச்சொல்லாற் கூறி யது அம்மதப்பற்றி.

அமைச்சரசேப்ப நிற்றலானென்பதூஉம் ஈண்டு வருவித்துரைத்துக்கொள்க. கொள்ளவே, × "படைகொடு பவனிபோதும்" வேந்தன் "கடைதொறும் விட்டுவிட்டுக் காவலுமிட்டு" அந்தப்புரத்திற் செல்லுமாறுபோல ஆன்மா அங்ஙனம் அஞ்சவத்தைப்படுதல் அமைவுடைத்தென விடுத்தவாறாயிற்று.

> அதுதான் மலசொரூபத்தின் மறைந்து அரூப
> சொரூபி யாய் நிற்றலான்.

எ-து. ஏது. எ-னின். அரசன்போல் உயிர் அங்ஙனமஞ்சவத்தைப்படுமாயின் வியாபகத்திற்கிழுக்காய் முடியும்போலுமென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள். அவ்வுயிர்தான் மலவடிவின் மறைப்புண்டவழி அருவுடம்பாகிய தத்துவசொரூபியாய் நிற்றலான், அத்தத்துவங்கள் தொழிற்படுவதை வேறுபாடுபற்றி இனி இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமென்னும் பஞ்சாவத்தைதனாய் நிற்குமென மேற்கொண்டது. எ-று.

"சீவனே வியாபி யவத்தையி லிழிந்து திரும்புதல் குற்றமாங் கருவி, சேருதல் பிரித லில்லையா முறையிற் செயப்படுங் கருவியே தெரியுந், தாவிலாவறிவு தங்கினவிடமே தனுமுயிர்க் கிருப்பிடம்" என்றதூஉம் இப்பொருள் பற்றியென்க.

தத்துவவன்னரூபனாதல் வீடு பெற்றுழியும் உண்டுபோலுமென்னு மாசங்கை நிகழாமைப்பொருட்டு, மலசொரூபத்தின் மறைந்தென மேற்கூறிப்போந்ததனை வழிமொழிந்துகொண்டு அரூபசொரூபியாய் நிற்றலென்று ஏதுக்கூறினார்.

மறைந்தவழியென்றது மறைந்தெனத் திரிந்துநின்றது.

× சிவஞானசித்தி, ௪—௫, செ-௩௨

௫—சூ, ௧-ரை.

எ-து. சூ-ம். எ-னின். இவ்வான்மாக்களிடத்துத் தமது முதலுபகார முணர்த்துத னுதலிற்று.

எ-து. க-ரை. எ-னின். சூத்திரக்கருத்துணர்த்துத னுதலிற்று.

இ-ள். ஐந்தவத்தைப்படும் வழிக் கருவியும் உயிரும் அமைச்சும் அரசுமேய்ப்ப நிற்பின் அவையே யமையுமாகலான், முதல்வனால் ஆண்டைக் காகற்பாலதொரு பயனில்லைபோலுமென்னுங் கடாவை யாசங்கித்து, ஆண்டும் இன்றியமையாது வேண்டப்படுவதாய முதல்வனுடைய உதவியை அறிவிக்குமுகத்தானே இரண்டாஞ் சூத்திரத்திற் கூறிய துணைக்காரண முதற்காரணங்களை இலக்கண முணர்த்துதல் இவ்வைஞ்சாஞ் சூத்திரத்தின் கருத்து. எ-று.

இதனானே சூத்திரவிடையும் இனிது விளங்கும்.

மாயை கன்மங்கள் திரோதானசத்திக்குக் கருவியாய் அதனுடங்குதலிற் றமது முதலுபகாரமெனப்படுந் திரோதானசத்தியதிலக்கணங் கூறவே அவற்றதிலக்கணமுங் கூறியவாறாதலறிக.

இதனுள் விளம்பிய வுள்ளத்து மெய் வாய் கண் மூக் களந்தறிந்தறியா என்றது ஓரதிகரணம், ஆங் கவைபோலத் தாந்தமுணர்வின் றமியருள் காந்தங்கண்ட பசாசத்தவையே என்றது ஓரதிகரணம். ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

கு—ரூ, - க - அ - வா-ம்.

ஈண்டு, ஐயுணர்வுகள் ஆன்மாவாலுணருமென்
றது.

எ-து. மே-ள். எ-னின். தாமரையிலையி னீர்போற் புருடன்பற்றற்று நிற்பப் புருடன் சந்நிதியிற் புத்திதத்துவமே ஐம்பொறிவழியான் விடயங்களையும் அறியுமெனவமையும், அவ்வாறன்றிக் கருவிகளோடுகூடிப் புருடனே அவற்றைப் படுமென மேற்கூறிய தனையுமாறென்னையெனச் சாங்கியநூலார் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து 'விளம்பிய வுள்ளத்து'என்னும் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ-ள். வெ-டை.

உணர்விற் கேதுவாகிய பொறிகளை உணர்வென் றுபசரித்தார்

அவற்றினால் ஆன்மா வொற்றித்துக் காணின
ல்லது அவை யொன்றையும் விடயியாவாக
லான்.

எ-து. ஏது. எ-னின். அதற்குப் பிரமாணமென்னை யென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ-ள். அவ்வைம்பொறிகளோடும் உயிர் ஒற்றுமைப்பட்டு நின்றறிந்தாலன்றி அவை ஒருவிடயத்தையும் விடயிக்கமாட்டாவாகலான், ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவாலுணருமென மேற்கொண்டது எ-று.

ஆன் உடனிகழ்ச்சிப் பொருட்கண் வந்தது.

உம்மை இழிவுசிறப்பு, முற்றுமாம்.

எதிர்மறை முகத்தாற் கூறினார், இன்றியமையாமை விளக்கற்கு.

ரு—சூ, உ - அ - வா - ம்.

இனி இவ்வான்மா தன்றாலே யுணருமிந்திரியங்களை ட்போலத் தானுந் தன்னை யுணராது நிற்றலால்-இது வுந் தமது முதலாலே யுணருமென்றது.

அறு—இனி இதுவுந் தமது முதலாலே யுணரு மென்றது.

எ-து. மே-ள். எ-னின். கருவி சடமாகலிற் சித்தாகிய பிரானன்றி அமையாவாயினுஞ் சித்தாகிய உயிர் முதல்வனது பகாரத்தை யவாய் நிற்பதன்று; அவாவுமாயின், முதல்வனும் வ்வாறே பிறிதொன்றனுபகாரத்தை அவாவுமெனப் பட்டு ம் வரம்பின்றியோடும் என ஈசுரவவிகாரவாதி முதலியோர் றுங்கடாவை யாசங்கித்து 'ஆங்கவைபோல,என்னுஞ் சூத்திர தின் பிற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலி து.

இ-ள். வெ-ண்ட.

தமது முதலென்பது யானெம்மூர் புகுவன் நீ நும்மூர் புகு வ யென்புழிப்போல வேறுமுடிபு கோடலிற் பால்வழுவன் புணர்க.

உம்மை இறந்தது தழீஇயவெச்சம்.

இம்முறைமை தமக்கொரு முதலுடையவற்றிற்கேயன்றி அ ப்பொருட்கின்மையின் வரம்பின்றியோடுமாறில்லை யென்

பார், தமது முதலென்று உடம்பொடு புணர்த்தோதினு
தம்முணர்வின்றமியென்றது மது.

தத்துவங்களுமுயிருந் தமக்கொரு முதலுடையனவா
ம் முதல்வனுக்கு அஃதின்மையும் மேற்கூறிப்போந்த சூத்
ங்களாற் பெறப்பட்டனவென்பது கருத்து.

இவ்வான்மா தன்னாலே யுணரு மிந்திரியங்க
ளைப்போலத் தானுந் † தன்னையுணராது நிற்
றலான்.

எ-து. ஏது. எ-னின். உயிர் ஐம்பொறியிற் சடமன்மை
ன் அவற்றை யெடுத்துக் காட்டி. மேற்கோடல் ஈண்டைக்
மையாதென்பாரை நோக்கி அதனைச் சாதித்த லுதலிற்று.

இ-ள். வெ-ளிடை.

சடமுஞ் சேதனமுமாய வேறுபாடெற்றித் தம்முள் ஒவ்
வாயினுந் தம்மையுந் தமது முதலையும் அறியமாட்டாமை
கண் ஐம்பொறியும் உயிருந் தம்முள் ஒக்குமாகலின், அதுபற்
அங்ஙனமேற்கோடலமையுமென்பது கருத்து.

சூ—ரு, க - ரை.

எ-து. ரு-ம். எ-னின். சத்தும் அசத்தும் அ
றைசெய் துணர்த்துத லுதலிற்று.

எ-து. க-ளா. எ-னின். சூத்திரக்கருத் துணர்த்துத லு
லிற்று.

---

† தன்னை யுணராது என்பதற்குத் தன்னையுந் தன் முத
லினையு முணராது எனப் பொருள் கொள்ளப்படும். தன்
தன்முதல்வன்.

இ-ள். மேலைச்சூத்திரத்தானுங் கூறிப்போந்த பொருள்க ள், யாது சத்து யாது அசத்தென்னும் ஐயநீக்குதற்குச் சத்தி யல்பும் அசத்தினியல்பும் இவையென அவ்விரண்டும் இலக் கணத்தாற் றம்முண்மயங்காதவாறு வரைந்து வைத்துணர் த்தி; உண்மையதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யுமுகத்தா ன் இலக்கணவோத்துட் கூறுதற்கு எஞ்சிநின்ற பதிப்பொரு ளிலக்கணங் கூறுதல் இவ்வாற்றுஞ் சூத்திரத்தின் கரு த்து. எ-று.

இதனானே சூத்திரவிடையும் இனிது விளங்கும்.
இதனுள் உணருருவசத்தெனின் உணராதின்மையின் என்றது ஓ ரதிகரணம், இருதிறனல்லது சிவசத்தாமென இரண்டுவகை யிசைக்கு மன்னுலகே என்றது ஓரதிகரணம், ஆக இர ண்டதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

சூ—௬, க - அ - வா - ம்.

சுட்டு, அறிவினாலறியப்பட்ட சுட்டு அசத்தெ ன்றது.

எ-து. மே-ள். எ-வின். மேலைச்சூத்திரத்தின் 'அளந்தறி ந்தியா' என்றதனை உடம்படாது பிரபஞ்சம்போல முதல் னும் அளவைகளான் அளந்தறிபொருளேயாமென நையா யிகர் முதலியோர் கூறுங்கடாவையும், எல்லாப்பொருளுஞ் சத்தாகலின் அளந்தறிபொருளுஞ் சத்தேயாமெனச் சாங்கி யர் கூறுங்கடாவையு மாசங்கித்து 'உணருருவசத்தெனின்' என் னுஞ் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மே ற்கோடலுற்றிற்று.

இ-ள். சுட்டறிவினால் அறியப்பட்ட சுட்டுப்பொருளெல் லாம் அசத்து. எ-று.

சுட்டு அருபெயர்.

சிவஞானத்தா லறியப்படுதலை நீக்குதற்கு அறிவிரு(ளெ)
விசேடித்தார்.

ஈண்டு அறிவென்றது ஒன்றை முந்தி அதுவதுவாகச் சுட்டி(க்) காணும் அளவையறிவினையென்பது ×"அறிவி னறிந்த யா(வு)மசத்தாத லறிதி" என்ற புடைநூலாசிரியர் மீள அங்ஙன(ம்) தெரித்தோதியவாறுபற்றி யுணர்ந்துகொள்க.

அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாச
மாய் நிற்றலான்.

எ-து. ஏது. எ-னின். உள்ளதென்னு முணர்விற்கு விடயமாய் உபலத்தியைப் பயப்பிக்கும் பிரபஞ்சத்தை இல்லையென்னு முணர்விற்கு விடயமாய் அநுபலத்தியைப் பயப்பிக்கு(ம்) இல்பொருளோடொப்ப அசத்தென்றல் அமையுமாதியாங்ங(ன)மெனவும், சத்தாகிய பிரபஞ்சத்தைச் சுட்டப்படுதன்மாத்திரையான் அசத்தென்றல் சற்காரியவாதத்திற் கிழுக்காம்போலுமெனவும், முறையே அவ்விருவர்மதம்பற்றிக் கூறுவா(ரை) நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள். அச்சுட்டுப்பொருள்கடாம் இராசதகுணமிகுதிப்பாட்டான் உள்ளதென்னும் உணர்விற்கு விடயமாய் உபலத்தியைப் பயப்பித்து நின்று, தாமே தாமதகுணமிகுதிப்பாட்டான் இல்லையென்னு முணர்விற்கு விடயமாய் அநுபலத்தியைப் பயப்பித்து நிற்றலான், ஈண்டறிவி னறியப்பட்ட சுட்டு அசத்தென மேற்கொண்டது. எ-று.

× சிவப்பிரகாசம், உண்மை ௨-ஞு—௭.

ண்டுப் பிரகாசம் அப்பிரகாசமென்பன உபலத்தி அநுபல
த்தியென்னும் பொருளவாய் அவை நிகழ்தற்கிடனாகிய பொரு
ண்மேனின்றன.

இது நையாயிகரை நோக்கி மேற்கோளைச் சாதித்தவாறு.
இனி இதனையே இரட்டுற மொழிந்துகொண்டு, அவைதாங் கா
ரியவவத்தையிற் றூலமாய் விளங்கிநின்றே காட்சிப்புலனாய்ச்
சடுதியின் மறைந்து சூக்குமமாய்க் காரணவவத்தையின் விள
ங்காது நிற்கும் இவ்வேற்றுமையுடைமையான், அங்ஙனம் புல
னாகாத காரணப்பொருள்களை நோக்கிக் காரியப்பிரபஞ்சம்
அசத்தாதல் சாலுமாகலின், ஈண்டறிவினாலறியப்பட்ட, சுட்டு
அசத்தென மேற்கொண்டதென்றவாறு எனவும் உரைத்துக்
கொள்க.

சூ—கு, உ - அ - வா-ம்.

இனி, பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்க வேண்டிய தி
ன்மையானும், அப்பிரகாசத்தினுக்குப் பிரகாசமின்
மையானும், இவ்விரண்டுதன்மையு மின்றி வாக்கு
மனாதீதகோசரமாய் நின்ற வதுவே சத்தாயுள்ள சி
வமென் றுணரற்பாற்று.

அ-ம்— இனி, இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்
கு மனாதீதகோசரமாய் நின்ற வதுவே சத்தா
யுள்ள சிவமென் றுணரற்பாற்று.

எ-து. மே-ள். எ-னின். மேல் உணர்பொருளியல்பும் உண
ராத பொருளியல்புங் கூறுமுகத்தான் அசத்தினியல்பை வரை
செய்துணர்த்தியவழி இரண்டும் இவ்வாறாகலான், இவற்றின்
வேறாய முதல்வனதியல்பாவது மாயாவாதி கூறும் அநிர்வச

னம்போலுமென்னுங் கடாவை யாசங்கித்து 'இருதிறனல்லது' என்னும் சூத்திரத்தின் பிற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ-ள். வெ-டை.

வாக்கெனப்படு நாதமுடிவான பாசஞானத்தை வாக்கென்றும், அவற்றின் வேறாய பசுஞானத்தை மனமென்றும் உபசார வழக்காற் கூறினார்.

வாக்குமனாதீத கோசரமாய் நின்ற. எ-து. அவ்விரண்டின் விருத்திகளைக் கடந்து அதீதமாயும் ஒற்றுமைப்பட்டு நின்றுணரும் அநுபவஞானமாத்திரைக்கே விளங்கிக் கோசரிப்பதாயும் நின்றவென்றவாறு.

அவ்வாறு நின்றபொருள் இதுவென அளவைகளான் அறிய வாராமைபற்றி அதுவேயென மகாவாக்கியத்திற் கூறியதனை அநுவதித்துச் சத்தாகிய சிவமாதலைச் செவியறிவுறுத்தார்.

வாக்குமனாதீதம் என்பது தமிழ்நூன்முடிபு. மரவடி மராடியென மரீஇயினாற்போல, மனவதீதம் மனாதீதமென மரீஇயிற்று. அதீதகோசரமென்பது வடநூன் முடிபு.

வாக்குமனாதீதப் பொருளாகலின் உணருருவாந்தன்மையும், கோசரப்பொருளாகலின் உணராதாந்தன்மையும் இல்லையென்பது பெறப்படுதலின், இவ்விரண்டுவகையு மின்றி யென்றார்.

> பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவதின்
> மையானும், அப்பிரகாசத்தினுக்குப் பிரகாசமி
> ன்மையானும்.

எ-து. ஏது. எ-னின். இவ்விரண்டு வகையுமில்லாத பொருள் அநிர்வசனமாய் நிற்பதென்னை வாக்குமனாதீத கோசர

மாய் நிற்பதென்றற்குப் பிரமாணமென்னை யென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த லுதலிற்று.

இ-ள். வாக்குமனங்களா லோதியுணரப்படுவதாய சிர்வசனப்பொருட்கு முன்னர்க் கூறப்படுஞ் சாதனங்களின்றி அறியற்பாலதாக வேண்டாமையானும், ஒருவாற்றானும் அறியப்படாத அநிர்வசனப்பொருட்குச் சாதனத்தினின்றும் அறியப்படுமாறின்மையானும், இனி இவ்விரண்டுந் தன்மையுமின்றி வாக்கு மனாதீதகோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமென்றுணரற்பாற்றென மேற்கொண்டது. எ-று.

உணர்தற்பாற் றென்றார் உணர்தலருமைநோக்கி.

பிரகாசம் அப்பிரகாசமென்பன உபசாரவழக்கு.

எ—சூ, க - ரை.

எ-து. சூ-ம். எ-னின். மேலதற்கோர் புரணை யுணர்த்துத லுதலிற்று.

ஏ-து. க-ரை. எ-னின். சூத்திரக்கருத் துணர்த்துத லுதலிற்று.

இ-ள். நூலாருந் தொகுநியாயம்பற்றி மேலையாறுசூத்திரங்களினுஞ் சிவாகமங்களிற் கூறப்படும் முப்பொருள்களது பொதுவியல்பு, பிரமாணமுகத்தானும் இலக்கணமுகத்தானும் ஆராய்ச்சி செய்துணர்த்தியருளியவர் அம்முப்பொருள்களது சிறப்பியல்பெனப்படும் உண்மை, சாதனமுகத்தானும் பயன்முகத்தானும் ஆராய்ச்சிசெய் துணர்த்துவான் புகுந்து, முதற்கண் மூன்று சூத்திரங்களான் அவற்றையுணர்ந்து அடைதற்குரிய பயன் பெறுதற் கேதுவாகிய சாதனங் கூறத்தொடங்கினார். அவற்றுள் இச்சூத்திரம் 'உணருருவசத்து,' 'யாவையும்' 'இருதிறனல்லது சிவசத்

து, எனவும்மேலைச்சூத்திரத்தான் வரைசெய்துணர்த்தியவழி அங்ஙனமறியும் பொருள் அவ்விரண்டனுள் ஒன்றோ வேறோ வென்னும் ஐயப்பாட்டின்கண், அவ்விரண்டினுள் ஒன்றாகற்பாலதென்பார் மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்துக்குப் புறனாகவெடுத்து ஓரொழிபாகிய சதசத்தினியல்பு வரைசெய்துணர்த்து முகத்தானே சாதித்துப் பயன்பெறுதற்குரிய அதிகாரியாவது இதுவென்ப துணர்த்துதனுதலிற்று. எ-று.

அதிகாரமும் ஒத்தும் வேறாயவழியும் இடைபுணர்ந்து தொடற்பொருட்டுக் கருத்துரை அவ்வாறு செய்தாரென்பது.

இப்புறனடையை வடநூலார் வாக்கியசேடமென்ப.

இதனுட் கூறப்படு மூன்றதிகரணமும் மூன்றுபுறனடையோது மென மலையாமைப்பொருட்டு ஓர் புறனடையென்றார். முன்னையவிரண்டும் இறுதியதிகரணத்தைச் சாதித்தற்கேதுவாய் ஒருபொருண்மேல் வந்தனவேயாம் என்பது கருத்து.

ஒன்றனை யறிந்தவழி அதனானாய பயன்பெறுதற்குரிய முயற்சிசெய்யலுறுவார்க்கு அதனைச் சாதிக்குமாற்றல் தமக்குண்டென்பதூஉம், சாதித்ததனால் வரும் பயன் இதுவென்பதூஉம், அதனைப் பயப்பித்தற்குரிய சாதனமாவது இதுவென்பதூஉம், அதுவருவாயும் உணர்ந்தாலன்றி, அதன்கண் மனவெழுச்சி செல்லாமையின்; ஈண்டோதப்படுஞ் சாதனஞ்செய்து பயன்பெறுதற்குரிமையுடைய அதிகாரியினியல்புணர்த்துவதாய இச்சூத்திரம் முதற்கண்வைக்கப்பட்டது.

இதனுள் யாவையுஞ் சூனியஞ் சத்தெதிராகலிற் சத்தேயறியாதென்றது ஓரதிகரணம், அசத்திலதறியாது என்றது ஓரதி

ரணம், இருதிறனறிவுளதிரண்டலாவான்மாவென்றது மூன்றதிகரணம். ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

எ—சூ, க - அ - வா-ம்.

ஈண்டு, சத்தினிடத்து அசத்துப்பிரகாசியாதென்றது.

எ-து. மே-ள். எ-னின். "தந்திடுஞ் சிவனவன்றன் சத்திதன்னி னின்றே" எ-ம். "கூடுமொளி வளர்குழலை மாதை மேவி." எ-ம். "தாரகமாமத்தன்றுணிற்றல்." எ-ம். "விமலனுக்கோர் சத்தியாய்." எனவும். "உலகமேயுருவமாக" எ-ம். "அத்துவா மூர்த்தியாகி." எ-ம். "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி—நின்றவாறே." எ-ம். கூறப்படுமியல்புடைய பிரபஞ்சத்தைச் சத்தெதிர் சூனியமென்றல் அவசித்தாந்தமாய் முடியும்போலும் எனவும், "மண்டிய வுணர்வுயிர்க்காய் மன்னிநின்றறியும்" எனவுங் கூறுஞ் சிவாத்துவிதசைவர் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து 'யாவையுஞ் சூனியம்' என்னும் சூத்திரத்தின் முதற்கூற்றிற்போந்த ஏதுவைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ-ள். சுட்டுணர்வின்றி நின்றறியுஞ் சிவசத்தின்முன்னர்ச் சுட்டியறியப்படும் அசத்தாய பிரபஞ்சம் விளங்கித் தோன்றாது. எ-று.

ஈண்டுச் சூனியமென்றது விளங்காமைப்பொருட்டென்பார் பிரகாசியாதென்றார். இக்கருத்தே பற்றி "முனைத்திடாதசத்துச் சத்தின் முன்னிருள்" என்றார் வழிநூலாசிரியரும். முனைத்திடாமையாவது இது குடம் இஃதாடையென எம்மனோ ராற் சுட்டியறியப்படுமாறுபோல முதல்வனாற் சுட்டியறியப்ப

[illegible]வதாய் வேறு நில்லாமையாம். ஆகவே ஈண்டுச் சத்தெதிர் யாவையுஞ் சூனியமென்றது கொண்டு அவசித்தாந்தமாதல் யாண்டையதென மறுத்துச் சத்தறியாதென்றதனை வலியுறுத்தியவாறுகாண்க.

மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்.

எ-து. ஏ-து. எ-னின். முற்றுணர்வுடைய சிவத்துக்கு அசத்தை விடயிப்பதாய சுட்டுணர்வும் உண்டென்றாற்படும் இழுக்கென்னையென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள். தன்னியல்பாகிய இயற்கையுணர்வின் முன்னர்ப் பொதுவியல்பாகிய செயற்கைச்சுட்டுணர்வு பிரகாசித்து நில்லாமையான், ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாதென மேற்கொண்டது. எ-று.

பிரகாசித்துநிற்றலின்மையாவது, இயற்கையுணர்வோடொப்ப ஒருங்குநில்லாமை. எக்காலத்து நிலைபெறுவதாய தன்னியல்பே மெய்யெனவும், இடையே தோன்றிமறைவதாய பொதுவியல்பே பொய்யெனவுங் கூறப்படுவனவாகலான், அவை ஈண்டைக்கேற்புடைய அறிவின்மேனின்றன. இஃதறியாதார் உரைப்பனவெல்லாம் மேற்கோளைச் சாதித்தற்குரிய ஏதுவாதல் செல்லாது கூறியது கூறலாய் முடியுமென்றொழிக.

எ—ரு, உ - அ - வா-ம்.

இனி, அசத்தினுக்கு உணர்வின்றென்றது.

இ-து. மே-ள். எ-னின். சத்து அசத்தையறியாதாயினும், அசத்தென்னப்பட்ட தநுகரணபுவனபோகங்களுள் ஒன்றாய

கரணம், விளக்குப்போல் விகாரமின்றி நிற்கும் ஆன்ம சந்நிதி யிற் பெத்தநிலைக்கண் அசத்தாய விடயங்களையறிந்தாற்போல முத்திநிலையிற் சிவகரணமாய் நின்று சிவத்தையறியுமென்றாலும், கண்ணாடியினிழல்போல ஆன்மசந்நிதியின் அதன்கணறிவுண்டாமென்றாலும் அமைவுடைத்துப்போலுமெனச் சிவசங்கிராந்தவாதி மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து 'அசத்திலதறியாது' என்னுஞ் சூத்திரத்தின் இரண்டாங்கூற்றிற் போந்த வேதுவைக் கண்ணழித்துரைத்து மேற்கோட ளுதலிற்று.

இ-ள். வெ-டை.

சூத்திரத்தின் இதனென்றது அறிவிலதென்னும் பொருட்டென்பார் உணர்வின்றெனவுரைத்தார்.

ஈண்டு அசத்தென்றது தத்துவப்பிரபஞ்சத்தை; ஏனைப்பிரபஞ்சத்திற்கு அறிவின்மை சாதிக்கவேண்டாமையின்.

அதுதானிரூபிக்கில் இன்றாகலான்.

எ-து. எ-ஞ. எ-னின். பதிஞானபசுஞானங்களையொப்பப் பாசஞானமொன்றென வைத்தெண்ணப்படு முரிமையுடைமையாலதனை அறிவுடைத்தன்றென்றல் பொருந்தாதென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த லுதலிற்று.

இ-ள். அவ்வறிவாவது தூலமாய் நோக்கும்வழி அவ்வசத்துக்கு உள்ளதுபோலத் தோன்றினும் ஐயந்திரிபின்றி மாசறுகாட்சியான் ஆராயும் வழி அதன்கண் இல்லாதாகலான், இனி அசத்திற்குணர்வின்றென மேற்கொண்டது. எ-று.

எனவே, பாசம் வாயிலாக உயிரின்கணிகழு ஞானமே பாசஞானமென்று உபசரித்துக் கூறப்படுமதனைப் பாசத்திற்குளாது

சிய ஞானமெனக் காண்டல் நிரூபியாதவழிப் படும் மடமையே பிறிதில்லையென்றவாறாயிற்று.

---

௭ — சூ, ௬ - அ - வா - ம்

இனி, +இருதிறனறிவுள திரண்டலா வான்மா வென்றது.

எ-து. மே-ள். எ-னின். சிவசத்தின்றன்மையே உயிர்க்குந் தன்மையாவதன்றி வேறில்லையாகலிற் சத்தே அசத்தைச் சுறியுமென்னுஞ் சிவாத்துவிதசைவரையும், உயிர்க்குந் தன்மையென்பதொன்றின்மையின் அசத்தே சத்தை அறியுமென்னுஞ் சிவசங்கிராந்தவாதசைவரையும் மறுத்து, சத்தா மசத்துந் தம்முளறியுமாறில்லையென மேற்சாதித்தவழி இரண்டும் இவ்வாறாயின், இவற்றையறியும்பொருள்வேறென்னை யென்பாரை நோக்கிப் பாரிசேடவளவையான் அவ்விரண்டின் வேறாய் உயிர்க்குத் தன்மையுண்டென்பது விளக்கிச் சதசத்தி னியல்பை யுணா செய்துணர்த்துத னுதலிற்று.

இ-ள் வெ-டை.

ஈண்டு இரண்டலாவான்மா இருதிறனறியுளா தென்றது சுத்தெதிர் நில்லாத அசத்துஞ் சத்துந் தம்முள் ஒன்றாய் நின்றறியப் படாமையான், இருதிறனறிவுளது இரண்டலா வான்மாவேயாம்; தம்முள் ஒன்றொன்று அநுபவிக்கப்படாத ஞாயிற்றையும் விடயத்தையும் அநுபவிக்குங் கண்போலுமென அநுமானங்கூறிக்காண்க. அவை உயிரானும் அறியப்படாதவழிப் பயப்பாடின்றிச் சூனியமாய் முடியுமாகலான் உயிர் அறிதற்றன்மைத்து என்பது பெற்றெனவுணர்க.

+ இரனுள் அதிகரண பதமே வார்த்திகமாகிய வாறுகாண்க

இவ்விரண்டினையுமறிவதாய் உபதேசியாய் நின்றவறிவு இரண்டன்பாலுமுளதாய், உள்ளவதுவே அவ்வான்மாவாமென்றது.

எ-து. பொ-ரை. எ-னின். இருதிறனறிவென்னுந் தொகைச்சொல் விரியுங்காற்படும் பொருள்வேறுபாடு விளக்குமுகத்தான், உயிர்க்குத்தன்னியல்பு வேறு வேறு கூறுஞ் சமயங்களெல்லாம் மறுக்கப்படுமாறுணர்த்துத னுதலிற்று.

இ-ள். இவ்விரண்டினையும் அறிவதாய். எ-து. மேற்கூறிப்போந்தசத்தையும் அசத்தையும் அறியுந்தன்மைத்தாய்—உபதேசியாய். எ-து. அறிவிக்க அறியுந்தன்மைத்தாய்—இரண்டன்பாலுஞ் நின்ற அறிவு உளதாய். எ-து. அவ்விரண்டின்கண்ணுஞ் நிலைபெற்ற அநுபவவறிவுள்ளதாய்—உள்ள அதுவே அவ்வான்மாவாமென்றது. எ-து. இவ்வாறுள்ள பொருள்யாது அதுவே சத்தும் அசத்துமல்லாத சதசத்தாகிய உயிரென்றவாறும். இருதினறிவுள திரண்டலாவான்மாவென மேற்கொண்டது. எ-று.

ஆயென்னும் வினையெச்சமூன்றும் உள்ளவென்னும் பெயரெச்ச வினைக்குறிப்போடு முடிந்தன.

இருதிறனறிவென்னும் தொகைச்சொல் ஈண்டு மூன்றுபொருளின் மயங்கிற்றென்னுங் கருத்தான் இவ்வாறு மொழிந்தார். அவற்றுள் இருதிறனையுமறியுமறிவென்னும் இரண்டாம்வேற்றுமைத் தொகைப் பொருள்பற்றி இவ்விரண்டினையு மறிவதாயெனவும், இருதிறனால் விளங்கிய வறிவென்னும் மூன்றாம்வேற்றுமைத் தொகைப்பொருள்பற்றி உபதேசியாயெனவும், இருதிறனிலுமுள்ள வறிவென்னும் ஏழாம்வேற்றுமைத் தொகைப்பொருள்பற்றி நின்றவறிவு இரண்டன்பாலுமுளதாயெனவும், உரைக்கப்பட்டன.

இவ்விரண்டினையு மறிவதாயுள்ள வதுவென்பதனால் இரண்டும் இவ்வாறாயின் இவற்றை யறியும் பொருள் வேறென்னையென்னுங் கடாவுக்கு விடைகூறி, அவ்விருவர் மதங்களையும் அவற்றோடொருதன்மையவான சமயங்களையும் மறுத்தவாறு.

உபதேசிபாயுள்ளவதுவென்றதனால் உயிர் அறிவிக்கவேண்டாது தானேயறியுமியல்பிற்றென்னுஞ் சமவாதசைவர் - ஈசுரவிகாரவாதசைவர் - ஐக்கவாதசைவர் மதங்களையும், அவற்றோடொருதன்மையவான சமயங்களையும் மறுத்தவாறு.

இரண்டன்பாலுமுளதாயுள்ள வதுவென்பதனால், ஆன்மாவினறிவு சத்தோடுகூடுமாறில்லையென்னும் பாடாணவாதசைவர் பேதவாதசைவர் மதங்களையும், சத்தோடு கூடியவழி ஒன்றாய்ப் போதலேயன்றி அதன்பாலுளதாமாறில்லையென்னுஞ் சுத்தசைவர்மதத்தையும், அவற்றோடொருதன்மையவான சமயங்களையும் மறுத்தவாறு.

இவ்விரண்டினையுமறிவதாமெனவே அவ்வறியுந்தன்மை இவ்விரண்டின்றன்மைபோலன்றி இருளொளியலாக் கண்டன்மைபோல வேறாயதோர் தன்மையென்பதூஉம், உபதேசியாமெனவே அஃகாசாயத்தின் குணமாய ஒசையினியல்புபோலத் தன்னை விளக்குவதாகிய வியஞ்சகமுள்வழி விளங்குவதோர் தன்மையென்பதூஉம், இரண்டன்பாலுமுளதாமெனவே அத்தன்மை படிகம்போலச் சார்ந்ததன்வண்ணமாம் அழுந்துந் தன்மையென்பதூஉம் பெறப்பட்டன.

அ—ரு, க - ரை.

எ-து. சூ-ம். எ-னின். ஞானத்தினை யுண ருமுறைமையினை யுணர்த்துத னுதலிற்று.

எ-து. க-ரை. எ-னின். சூத்திரக்கருத்துணர்த்துத னுத லிற்று.

இ-ள். அவ்வான்மாவின் அறிவாவது மேலிருதிறனென் றதனுள் அசத்தான் விளங்கி அசத்தின்பாலுளதாய் அசத்தினை யறிந்து நின்றவாறும், சத்தான் விளங்கிச் சத்தின்பாலுளதாய்ச் சத்தினையறிந்து நிற்குமாறும், தரிசிக்குமுறைமையினை யுணர்த் துமுகத்தாற் சாதித்தற்குரிய அதிகாரந் தனக்குண்டென மே லைச்சூத்திரத்தானறிந்த ஆன்மாவுக்குச் சாதித்தலாற் பெறப் படும் பயனும், அதற்குச் சிறந்த சாதனமாவதும், அது வருவா யும், இவையென்ப துணர்த்துதல் இவ்வெட்டாஞ் சூத்திரத்தி ன் கருத்து. எ-று.

இதனானே சூத்திரவியையபும் இனிது விளங்கும்.

இதனுள், தவத்தினிலுணர்த்த என்றது ஓரதிகரணம், தம்மு தல் குருவுமாய் என்றது ஓரதிகரணம், ஐம்புலவேடரினயர்ந்த னை வளர்ந்தெனை என்றது ஓரதிகரணம், விட் டன்னியமின்மை யி னரன்கழல்செலுமே என்றது ஓரதிகரணம், ஆக நான்க திகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

அ—ரு, க - அ - வா-ம்.

ஈண்டு, இவ்வான்மாக்கட்கு முற்செய் தவத் தான் ஞான நிகழுமென்றது.

எ-து. மே-ள். எ-னின். மேற்கூறிப் போந்த சாதகராற்செ

...ப்படுஞ் சாதனமுமா, அது வருவாயும், வேறு வேறாகக்கூறு ஞ் சாமர்த்தரை நோக்கி 'தவத்தினில் உணர்த்த' என்னும் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோ ட ணுதலிற்று.

இ-ள். வெ-படை.

மேற் கூறிப் போந்த இயல்புடைய ஆன்மாக்களுக்கென்பார் இவ்வான்மாக்களுக்கென்றார்

படிமுறையானன்றி இவ்வொருபிறவியிற்செய்த தவங்கா னே அமையாதென்பதுணர்த்துதற்கு முற்செய்தவமென விசே டித்தார்.

ஈண்டு ஞானமென்றது குரவனுணர்த்தியவாறு சிவஞா னங் கடைக்கொண்டு அறிவதாகிய சாதனவழியின்மேற்று.

நிகழ்தல்-ஐயந்திரிபின்றி விளங்குதல்.

மேற் சரியை கிரியாயோகங்களைச் செய்துழி
நன்னெறியாகிய ஞானத்தைக்காட்டியல்லது
மோக்ஷத்தைக்கொடாவாகலான்.

எ-து. ஏ-று. எ-னின். தவங்களே சாதனமாதலையும் ஞா னமேற்றுக்கென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த ணுத லிற்று.

இ-ள். வெ-டை.

ஈண்டுத் தவமெனப்பட்டன பிறவல்லவென்பார் சரியைகி ரியாயோகங்களெனக் கிளந்துரைத்தார்.

கிரியாயோகங்களென்னும் உம்மைத்தொகை யடநூன் முடிபு. கிரியாயோகமிரண்டற்குந் தீக்கை யொன் றென்பது தோன்ற அவ்விரண்டனையுந் தொகுத்தோதிச் சரிதையைத் தனிழுக்குரிய விற்றான் வேறு வைத்தார்.

அருணடையபிள்ளையார் முதலாயினார்க்குத் தவமின்றியும் ஞானநிகழ்ந்தவாறென்னையென்னுங் கடாவை விடுத்தற்கு மேற்செய்துழியென ஈண்டும் வலியுறுத்தார்.

மேலாகிய உண்மைச்சரிதை கிரியாயோகங்களை யெனினுமையையும்.

காட்டிக்கொடுக்குமெனற்பாலதனை எதிர்மறைமுகத்தாற்கூறினார், ஞானத்தை யின்றியமையாமை யுணர்த்துதற்கு. சரிதை கிரியா யோகங்களைச் செய்துழி யென்றது உபலக்கணமாகலின், தீக்கை பெற்றுழி அதுவும் ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடாதெனக் கொள்க. அவையெல்லாம் ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடாமையை வலியுறுத்துவார், நன்னெறியாகியவெனஞானத்தை விசேடித்தார். நன்மையெனப்படுவன வெல்லாவற்றினுஞ் சிறந்த தன்மையாவது வீடுபேறென்பது. அதனைத் தலைப்படுதற் கேதுவாய்ச்சிறந்தநெறியாகலின் ஞானம் நன்னெறியெனப்பட்டது. வீட்டிற்குநெறியென அவ்வச்சமயத்தாராற் கூறப்படுவனவனைத்துந் தன்கண்ணே வந்து கூடநின்ற பெருநெறியாகலானும் அது நன்னெறியெனப்பட்டது. நன்னெறி சன்மார்க்கமென்பன ஒருபொருட்கிளவி.

அ—சூ, உ - அ - வா-ம்.

இனி, இவ்வான்மாக்களுக்குத் தமது முதலே குருவுமாயுணர்த்துமென்றது.

எ-து. மேல்-ள். எ-னின். மேற்கூறியவாற்றான் நிகழு ஞானத்தை யுணர்த்துவார் கலைஞானங்களை யுணர்த்துவார்போல நம்மனோரில் ஒருவராதலுமையுமெனச் சாங்கியர் நையாயிகர் முதலியோர் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து 'தம்முதல்குருவுமாய்' என்னும் சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ-ள். மேற்கூறியவாற்றாற் சரியை முதலிய மூன்றும் முற்றியபின்னர், இம்முற்றுதலானே மலபரிபாகஞ் சத்திநிபாதம் நிகழ்ந்து தத்துவஞானத்தின அவாவுதலையுடைய உயிர்கட்கு, இதுகாறுந் தமக்கு முதலாய் உண்ணின்றுணர்த்தி வந்த பரம்பொருளே அப்பருவமறிந்து குருமூர்த்தமா யெழுந்தருளிவந்து அதனை யறிவுறுக்கும். எ-று.

எனவே, ஏனையோர்க்கு அது கூடாதென்றவாறுமாயிற்று.

இக்கருத்தே பற்றி + "அசத்தறுநோய்க் குள்ளின ரன்றிய தனைச், சகத்தவருங் காண்பரோ தான்" என்றார் புடைநூலாசிரியரும்.

ஏகாரந் தேற்றம்.

அவன் அந்நியமின்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்.

எ-று. ஏது. எ-னின். மாயாவொருவன் மாயாவுருவினையேயான்; ஏயுமெனின், எம்மனோரிலொருவனுப் முடியுமாகலின்

+ திருவருட்பயன், அருளுருநிலை. உ—செ.

தமது முதற் குருமூர்த்தி ஆகாரமாகத்தரித்துநின்றுணர்த்து மென்றதே அமைவுடைத்தெனப் பொதுவகையான் அதிட்டா னபக்கங் கூறுவாரை நோக்கி, சிறப்புவகையான் ஆவேசபக்க மாமாறுணர்த்தி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ-ள். அம்முதல்வன் பாலினெய்போல மறைந்து வேருய் நிற்றலின்றிச் சுத்தான்ம சைதன்னியமே தனக்குச்சொரூபமாகக் கொண்டு தயிரினெய்போல ஆண்டு விளங்கிநிற்றலான், இவ்வான்மாக்களுக்குத் தமது முதற்ருனே குருவுமாயுணர்த்துமென மேற்கொண்டது. எ-று.

பாலினெய்போல வேருய் மறைந்து நின்று செலுத்தப் படுவனவற்றினும் பொதுவாய்ச் செல்வதாகிய அதிட்டானபக் கங் கொள்வார்க்கு ஏனைச்சமயகுரவருங் குரவராவான்சேற லின், அஃது ஈண்டைக் கமைவுடைத்தன்றென்பதாம்.

சைதன்னியமென்ருர் மாசு தீர்ந்ததென்ப துணர்த்துதற்கு.

அ—ரு, ௯. - அ - வரம்.

இனி, இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மய ங்கித் தம்மை யுணராவென்றது.

எ-து. மே-ள். எ-னின். விடயஞானத்தை விளக்கும்ஐம் பொறிகளே தத்துவஞானத்தை விளக்குதற்குமமையும், தம் முதல் குருவுமாதல் வேண்டாவெனச் சிவசங்கிராந்த வாதசை வர் மதம் பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து 'ஐம்புலவேடரி ன்' என்னும் சூத்திரத்தின் மூன்ருங் கூற்றைக் கண்ணழித்து ரைத்து மேற்கோட னுதலிற்று.

இவ்வாறுரையாக்கால், இனியென்பதனு ணுணர்த்தப்படும் மேலையதிகரணத்தோடுளதாகிய இயைபு பெறப்படாமை யறிக.

இ-ள். வெ-டை.

உணர்வு ஆகுபெயர்

அவை தாம் பளிங்கிலிட்ட வண்ணம்போற் கா
ட்டிற்றைக் காட்டி நிற்றலான்.

எ-து, ஏது. எ-னின். அறிவை விளக்குங் கருவியான்மை யச்சு நிகழுமா றியாங்ஙனமென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ-ள். படிகத்தின் வைத்த பலவேறுவகைப்பட்ட நிறங்கள் அப்படிகவொளியைக் கீழ்ப்படுத்துத் தத்த மியல்பினையே விளக்கி நிற்குமாறுபோல, அவ்வைம்பொறிகடாம் ஆன்மசொரூபத்தைக் கீழ்ப்படுத்துத் தம்மாற்காட்டப்பட்ட தத்தம் விடயமாத்திரையே அவ்வான்மாவுக்குக் காட்டி நிற்பனவாகலான்; இனி யிவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மை யுணராவென மேற்கொண்டது. எ-று.

விடயங்களுள்ளும் அவ்வவிடையமாத்திரையே அவ்வவிந்திரியங் காட்டவல்லுமென்பார் காட்டிற்றையென ஒன்றறிசொல்லாற் கூறினார்.

அ—ரூ, ச - அ - வா-ம்.

இனி, இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின்

வேறுவான் காணவே தமது முதல் சீபாதத்
தை யிணையுமென்றது.

எ-து. மே-ள். எ-னின். பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்டார்க்கு அதுவேயமையும், கருவிகள் நீங்கியவழிச் செய்யக் கடவதொரு முயற்சி கூடாமையின் ஆண்டுமெய்ப்பொருட்குத் தைவமாதல் பெறப்படாதெனப் பேதவாதசைவர் முதலியோர் கூறுங்கடாவை யாசங்கித்து 'விட்டஙிய மின்மையின்' என்னும் சூத்திரத்தின் நான்காங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ-ள். வெ-டை.

இந்திரியத்தின் வேறுபவழிக் கேவலத்தை யணைதலு முண்மையின் அதனை நீக்குதற்பொருட்டு வேறுகவென்றொழியாது வேறுவான் காணவென்றார்; காண்டலே அதற்கமையு மென்றவாறு.

ஏகாரந் தேற்றத்தின்கண் வந்தது.

ஊசல் கயிறற்றாற் றாய்தரையே யாந்துணை
யான்.

எ-து. ஏ-று. எ-னின். அவ்வாறு காண்டலே சீபாதத்தை யணைதற்குச் சாலுமென்பது யாங்ஙனமென்பாரை நோக்கி, உவமையின் வைத்துக்காட்டிய மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள். ஒருவன் ஏறியிருந் தாடுதற்கு ஆதாரமான ஊசல் கயிறற்றதாயின் அவனுக்கு உற்றுழியுதவுந் தாய்போல, ஆண்டுத் தாரகமாவது நிலனேயன்றிப் பிறிதில்லையென்னும் ஒப்புமையான்;

இனி யிவ்வான்மாத் தன்னை யிந்திரியத்தின் வேறுவான் காணவே தமது முதல் போதத்தை யணையுமென மேற்கொண்டது. எ-று.

வியாபகப் பொருட்குக் காட்சிவிசேடமே நீக்கமாகலின் அறுதல் அதற்கு உவமையாயிற்று.

கூ—ரு, க - ரை.

எ-து. ரு-ம். எ-னின். ஆன்மசுத்திபண்ணுமா
றுணர்த்துத னுதலிற்று.

எ - து. க - ரை. எ - னின். சூத்திரக்கருத்துணர்த்துத னுதலிற்று.

இ-ள். தம்முதல் குருவுமாயுணர்த்தக் கேட்டு அதனைச் சிந்தனைசெய் துணருமா றுணர்த்து முகத்தான், ஐம்புலவேடரின் வளர்ந்த வாலாமை நீக்கி, உயிர் தன்னைத் தூய்மைப்படுத்துமாறுணர்த்துதல் இவ்வொன்பதாஞ் சூத்திரத்தின் கருத்து. எ-று.

சூத்திரவியைபும் இதனானே இனிது விளங்கும்.

சிவப்பிரகாசத்துத் 'தான் பணியை நீத்தல்' என்றோதப்படும் ஆன்மசுத்தியாவது இறைபணிநிற்கவென வருகின்ற சூத்திரத்திற் பெறற்பாலதாகலானும், அழுக்கு நீக்கமே அறுவைக்குச் சுத்தியாமாறுபோலப் பாசக்ஷயமே உயிர்க்குச் சுத்தியாவதன்றி

வேறன்மையானும், பாசக்ஷயம்பண்ணுமுன்னர்ச் சுத்தியாதல் டாமையானும், வருகின்ற சூத்திரத்தின் கருத்தாய்நின்ற ஆன்மசுத்தி பண்ணுமாற்றைப் 'பதியை நாடி' எனவுந் 'தண்ணிலாம்பதி' எனவுஞ் சிவதரிசனம் பண்ணுமாறே யுணர்த் துதற்கெழுந்த இச்சூத்திரத்தின் கருத்தாக வைத்துரைத்ததென்னையோவென மலையற்க ; சிவதரிசனத்தினிகழ்வது ஆன்மசுத்தியென்னும் உடனிகழ்ச்சி யுணர்த்துதற்கு ம் தம்முள் வேறுபாடு சிறுபான்மையுடையனவாய இவ்விருசூத்திரமும் ஒரு பொருண்மேலனவென்ப துணர்த்துதற்கும் இவ்வாறுரைத்தாராகலின், அஃதங்ஙனமாக. ஆன்மா தன்னை யிந்திரியத்தின் வேறுவான்காணவே தமதாமுத பாதத்தை யணையுமென்றலின், அக்காட்சியே அதற்சுமையு சுத்தியெற்றுக்கெனின், அஃதொக்கும். நிருவிகற்பமாய்க் ாண்டலும், இரட்டுறக் காண்டலும், தெளியக்காண்டலுமென காட்சிமூவகைப்படும். இம்மூன்றும் அதிபரிபக்குவ முடை ார்க்குக் கேட்டமாத்திரையே ஒருங்கு நிகழுமாயினும், ஏனை யார்க்குக் கேட்டல் சிந்தித்தல் தெளிதலென்னுஞ் சோபான றையினன்றி நிகழாமையின், அவரைநோக்கிச் சிவரூபத்தி னிழும் ஆன்மதரிசனத்தின் பின்னாகச் சிவதரிசனத்தி னிகழும் ன்மசுத்தியும் ஒருதலையான் வேண்டப்படுமென் றுணர்ந்து காள்க. × "நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கு நி வுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாகி—யாசையொடு ம து மிங்கு மாகியல மருவோ ரரும்பாச மறுக்கும்வகை யருளி வழி யுரைப்பாம்," என வழிநூலாசிரியரும் இக்கருத்தே ற்றி யோதினர்.

× சிவஞானசித்தி, சுபக்கம், அ - கு,—செ. ௩௧. 'பாசிபடு'

இதனுள், ஊனக்கண் பாசமுணராப்பதியை ஞானக்கண்ணி னிற் சிந்தை நாடி என்றது ஓரதிகரணம், உராத்துனைத் தேர்த் தெனப் பாசமொருவத் தண்ணிழலாம் பதி என்றது ஓரதிகர ணம், விதியெண்ணு மஞ்செழுத்தே என்றது ஓரதிகரணம், ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

கூ—சூ, க - அ - வா - ம்.

ஈண்டு, அம்முதலை ஞானக்கண்ணினாலே காண்க வென்றது.

எ-து. மே-ள். எ-னின். மேலைச் சூத்திரத்தோதியவாற் றான் முதல்வன் பாசவறிவால் நாடப்படுவனல்லனாயினும் பசு வறிவால் நாடப்படுவனென்றற்கு இழுக்கென்னையெனச் சிவச மவாதசைவர் மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து 'ஊன க்கண்பாச முணரா' என்னும் சூத்திரத்தின் முதற்கூற்றைக் க ண்ணழித்துரைத்து மேற்கோட் னுதலிற்று.

ஏகாரம் தேற்றம்.

அவன் வாக்கு மனாதீதகோசரமாய் நிற்ற லான்.

எ-து. ஏது. எ-னின். ஏனைஞானங்களா னறியப்படாது சிவஞானத்தா னறியப்படுமென்றற்குப் பிரமாணமென்னை யெ ன்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ-ள். வாக்குமனாதீதகோசரமாய் நின்ற அதுவே என்புழி யுரைத்தாம்.

ஆண்டுப் பொதுவகையாற் பெறப்பட்டதனை ஈண்டேதுவா
வைத்து வாக்கு மனாதீதமாயுங் கோசரமாதல் பிறிதொன்
ற் பெறப்படாதென்னும் அருத்தாபத்தியான் ஞானக்கண்,
லே காணப்படுமென்பது தாமே போதருமென மேற்கோ
ச் சாதித்தார்.

கூ—ரு, உ - அ - வா - ம்.

இனி, அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்
தென்று காண உளதாய் நிற்பது ஞானசொரு
பமென் றுணரற்பாற்று.

எ-து. மே-ள். எ-னின். அஃமுதலை ஞானக்கண்ணாலே
ாண்கவென்றுணர்த்தியவழி அந்தஞானக்கண்ணைப் பெறு
ாறு யாங்ஙனமென நிகழும் அவாய் நிலையை நீக்குதற்பொரு
டு மேலதற்கோர் புறனடையாயெழுந்த 'உராத் துனைத்தேர்
தென்' என்னும் இச்சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைக்
ண்ணழித்துணர்த்து மேற்கோ ளுதலிற்று.

இ-ள். வெ-ளட.

பாசமொருவத் தண்ணிழலாம்பதி யென்புழிப் பாசமென்ற
து காரியப்பிரபஞ்சத்தையென்பார் அசத்தாயுள்ளவென்றும்
சொற்பல்காமைப்பொருட்டு ஏதுப்பொருளை உருவகமுகத்தா
ன் உடம்பொடுபுணர்த்துக் காட்டுவார் பிரபஞ்சத்தை யென்று
து வன்னபேதங்களையென்றும், வியாபகப்பொருளுக்கு ஒருவுத
லாவது உணர்ச்சி விசேடமேயாமென்பார் அசத்தென்றொழிய
வென்றது காணவென்றும், தண்ணிழலாய் நிற்றல்புதிதன்றெ
ன்பார் உளதாய் நிற்பதென்றும், பதியென்றது ஆகுபெயராற்
பதிஞானத்தின் மேனின்றதென்பார் ஞானசொருபமென்றும்

இஃதுருபவத்தினன்றிச் சொல்லளவையின் அறிய வாராதெ(ன)
பார் உணரற்பாற்றென்று முரைத்தார். இஃதேகதேச வுரு(வ)
கம்.

இசனுட் பெறம்படுமேதுப்பொருளை ஏனையவற்றுட்போல
மேற்கோளின் வேறுவைத்துக் காணுமாறு:

> இனி, அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்று காணவுளதாய் நிற்பது ஞான சொரூபமென்றது, வேற்றியல்பாகிய வன்னபேதங்களை வேற்றியல்பென்று கண்டு கழிப்பின், உளதாய் நிற்பது படிகசொரூபமாந்துணையான் எனவரும்.

இ-ள். படிகசொரூபத்தைக் காட்டாது மறைத்து நின்ற வேற்று நிறங்களை இவை நிலையுதலிலவாகிய வேற்றுநிறங்களெனக் கண்டுநிற்பின், அவ்வழி நிலையுதலுடைத்தாய் விளங்கி நிற்பது பளிங்கினது சொரூபமாமென்னு மொப்புமையான் நிலையுதலுடைய தற்சொரூபத்தைக் காட்டாது மறைத்து நிற்கும் நிலையுதலிலவாயுள்ள பிரபஞ்சத்தை, இவை நிலையுதலுடையன வல்லவென்று விவேகித்தறியின்; அங்ஙனநிராலம்பமயமாய் விளங்கித் தோன்றுவது ஞானசொரூபமென மேற்கொண்டது. எ-று.

வன்னபேதமாவது சித்திரமெனக்கொண்டு சுவர்மேல் வைத்துரைத்தலு மொன்று.

அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்று காண்டலாவது ஆசிரியனறிவுறுத்த உபதேசட்பொருளினுரைத்து நின்று + "அ

+ சிவஞானசித்தி, ௯-௬,-அ—செ. 'குறித்தடி'.

ட குணமெட்டுச் சித்திக் கோகனதன் முதல்வாழ்வு குலவுப
மெல்லாம்—வெறுத்துநெறி யறுவகையுமேலொடுகீ ழடங்க''
ாரணரூபத்தினில்லாமையால் வெறும்பொயென நினைந்தி
த்தல்.

கூ—சூ, ரு - அ- வா-ம்

இனி, இவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதி
ப்படி யுச்சரிக்க வென்றது.

எ-து. மே-ள். எ-னின். ஆன்மாவைச் சுத்திபண்ணுதற்
ப் பாசமொருவியவழித் தண்ணிழலாய்ப் பிரகாசித்த ஞான
சாரூபமொன்றே அமையுமாகலின், இவ்விடத்தில் இனிச்செய்
க்கடவதொன்றில்லை யென்பாரை நோக்கி 'விதியெண்ணு மஞ்
சுழுத்தே, என்னும் சூத்திரத்தின் மூன்றுங்கூற்றைக் கண்ண
த்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ-ள் பாசமொருவி ஆண்டுத் தண்ணிழலாய்ப் பிரகாசித்த
ானக்கண்ணுற் பதியைச் சிந்தை நாடியபின்னர், அவ்விடத்து
திருவஞ்செழுத்தையும் விதிப்படி கணிக்கவென மேற்கொண்
து. எ-று.

இறந்தது தழீஇயவெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அ
ருகலினன்றே + "பின்னுமோசைதரு மஞ்செழுத்தை விதி
படி யுச்சரிக்க" என்றார் வழிநூலாசிரியருமென்க.

ஈண்டு ஸ்ரீ பஞ்சாக்கரத்தையென்றது முத்தி பஞ்சாக்கரக்
த. திருவஞ்செழுத்தாற் சாதிக்கப்படும்பொருளும் அதுவே

× சிவஞானசித்தி, சுபக்கம், கூ-சூ, க—செ. பாசஞானத்
ாலும்.

யாகலான் வேறு வகுத்துக் கூறவேண்டாமையின், விதிப்படியென மாட்டெறிந்தொழிந்தார்.

இவ்வாசிரியர் மாட்டெறிந்தது உணராதார், சாதிக்கு நிற்குமுறை வேறே, ஓது முறைவேறேயெனச் சித்தாந்தவழக்கொடு முரணிக் கூறுவர். நிற்குமுறைமையு மோதுமுறைமையுந் தம்முளியைபில்வழி அஃது அதற்குச் சாதனமாமாறு யாண்டையதென்றொழிக.

மானதம் மந்தம் உரையெனக் கணிக்குமாறு மூவகைப்படும். அவற்றுட் சுத்தமானதமெனப்படும் அறிவாற்கணித்தலே ஈண்டு உச்சரித்தலென்பார் சூத்திரத்துள் உச்சரிக்கவென்றது எண்ணுகவென்றார். வடமொழிச் சூத்திரத்துத் தியானிக்கவென்றதும் அது. இன்னும் இதன்கட்படும் இயல்பெலலாம், உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், கொடிப்பாட்டு, நெஞ்சுவிடுதூது முதலியவற்றுட் காண்க, ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும், அஞ்ஞானத்தை வேம்புதின்றபுழுப்போல நோக்கிற்றை நோக்கிநிற்குமாதலின், அது நீக்குதற் கெனக்கொள்க.

எ-று. ஏது. எ-னின். அந்தரங்க வழிபாடாகலின், அச்சித்துள் நின்ற பதியைச் சிந்தித்தலுக்கண்டு வழிபடுமாற்றைச் சாரவைத் தோதுதற்பாலதாகிய இதனைச் சித்தசாதனமாய் ஈண்டு விதித்தல் எற்றுக்கென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்ததலிற்று.

இ-ள். வேம்புதின்ற புழு அதனைபொருவிக் கரும்பு தின்னத்த லைப்பட்டு அதன்சுவை தெரிந்துழியும் பயிற்சிவயத்தான் நோக் கிற்றை நோக்கிநிற்குமாறுபோல,அசத்தாயுள்ள வன்னபேதங் களை அசத்தென்று கண்ட உயிர்களுக்கு அதனுள் ஞானசொ ரூபம் விளங்கி ஞேயங்காட்டப்பட்ட விடத்தும் அவை பயிற்சி வயத்தாற் பண்டைச்சிற்றுணர்வைநோக்கிநிற்குமாகலின், அவ் வாதனை நீக்குதற்பொருட்டு ஈண்டைக்கு வேண்டப்படுதலான், இனி ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி யிவ்விடத்து உச்சரிக்கவெ ன மேற்கொண்டதெனக்கொள்க. எ-று.

இவ்விடத்தென்றதனால் அணைந்தோர் தன்மையைச் சார வைத்து மேற்கோடற்குரிய ஸ்ரீ பஞ்சாக்கரத்தையென வருவி த்துரைத்துக்கொள்க. எனக்கொள்கவென்று உடம்படுப்பித்த தும் அதுபற்றி. இக்கருத்து நோக்கியன்றே புடைநூலாசிரியர் அஞ்செழுத்தருணிலையை ஆன்மலாபத்தின் பின்னாக அணைந் தோர்தன்மையைச் சாரவைத் தோதியதூஉமெனக.

"வானோக்கி வாழும்" "கோனோக்கி வாழும்," என்றாற்போ ல ஈண்டு நோக்கென்றது மனவெழுச்சி விசேடத்தை.

பிரகாசித்தவழியென்பது பிரகாசித்தெனத்திரிந்தது.

ஈண்டு ஞானமென்றது அசத்தை அசத்தென்று கண்டவழி விளங்குவதெனப்பட்ட ஞானசொரூபத்தை. அஞ்ஞானமெ ன்றது அதற்கு மறுதலையாகிய சுட்டுணர்வையெனவுணர்க. அ து நீக்குதற்கெனக் கொள்கவெனவே, சித்த சாதன மன்றென் பதும் பெறப்பட்டது.

கO—சூ, க - ரை.

எ-து. சூ-ம். எ-னின். பாசக்ஷயம் பண்

னும்மாறுணர்த்துத னுதலிற்று.

எ-து. க-ரை. எ-னின். சூத்திரக்கருத்துணர்த்துத னுதலிற்று.

இ-ள். மேல் ஏழாஞ்சூத்திரமுதலிய மூன்றானும் முறையே சாதிக்கும் பொருளதியல்பும், சாதித்துப்பெறப்படும் பொருளதியல்பும், சாதிக்குமாறுமுணர்த்தி, இனி அச்சாதனத் தானாய பயனியல்பு வகுத்துக்கூறுவானெடுத்துக்கொண்டார். அப்பயனாவது பாசவீடுஞ் சிவப்பேறுமென இருவகைப்படும். அவ்விரண்டனுட் சுட்டுணர்விறுகிய ஏகதேசநோக்கத்தைத் திருவஞ்செழுத்தின துச்சரிப்பாற் பற்றறத்தடைத்தவழிப் பெறப்படுவதாகிய மேலைச்சூத்திரத்தினெடுத்துக்கொண்ட ஆன்மசுத்திப்பயனாகிய பாசவிடுதியைச் செய்துகொள்ளுமாறு, மேற்சிந்தனை செய்தபொருளைத் தெளியுமாறுணர்த்துமுகத்தானுணர்த்துதல் இப்பத்தாஞ்சூத்திரத்தின்கருத்து. எ-று.

இதனானே சூத்திரவியைபும் இனிது விளங்கும்.

இதனுள், அவனேதானேயாகியவந்நெறி யேகனாகி என்றது ஓரதிகரணம், இறைபணிநிற்க மலமாயைதன்னொடு வல்வினையின்றே என்றது ஓரதிகரணம், ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

க0—சூ, க - அ - வா-ம்.

ஈண்டு, பரமேஸ்வரன் இவ்வான்மாவாய் நின்ற
முறைமையான் அவனிடத்தேகனாகி நிற்கவெ
ன்றது.

எ-து. மே-ள். எ-னின். ஞானம்பிரகாசித்த முதற்பொருளைக்கண்டான்மாத்திரையே வீடுபெற்றிற்கமையுமெனச் சிவசமவாதசைவர் முதலியோர் மதம்பற்றி நிகழுங் கடாவையாசங்கித்

து 'அவனே தானே' என்னும் சூத்திரத்தின் முதற்கூற்றைக் க ண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ-ள். வெ-படை.

அவ்வாறு நிற்கவே யானெனதென்னுஞ் செ
ருக்கற்று அவனது சீபாதத்தை யணையுமாக
லான்.

எ-று. ஏது. எ-னின். அஃதெற்றுக்கென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ-ள். அங்ஙனமொற்றுமைப்பட்டு நின்றாலே யானும் எனது ம் எனப் பகுத்து நிற்கும் மயக்கவுணர்விற் கேதுவாய மலநீங் கி அம்முதல்வனது திருவடியாகிய சிவானந்தத்தைப் பெறுமா கலான், அச்செருக்கறுதிக்குக் காரணமாதல்பற்றி ஈண்டுப் பர மேஸ்வரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிட த்து ஏகனாகிநிற்கவென மேற்கொண்டது. எ-று.

அவ்வாறுநில்லாத்வழி மலமறுதலு, அஃதறுதவழிச் சீபாதத் தையணைதல் பெறப்படாதென்பார் நிற்கவேயெனத் தேற்றே காரத்தாற் கூறினார்.

யானெனப்படுவது ஞாதிரு. எனதெனப்படுவன ஞானஞே யங்கள்.

அறுவது பண்பின்கிழமையும் உணர்ச்சிக்கிழமையும் பற்றிவந் தது.

ஒருமை தனித்தனிசென்றிடையும். செருக்கு அருபெயர்.

அற்றணையுமென்றது மறைபெய்து குறிநின்றயும் என்றற்போ லக் காரணகாரியப்பொருள்பற்றி வந்த செயவெனெச்சத்திரிபு.

அ

க0—சூ, உ-அ-வா-ம்.

இனி, இறைபணி வழுவாது நிற்கவென்றது.

எ-து. மேல். எ-னின். உடம்பு நிற்குங்காறும் அதுகொண்ட வினைப்பயனும், அதனையநுபவித்தற்குத் துணைக்காரணமாய் உடனிற்கு முயற்சியும், ஒருவாற்றானும் நீக்கலாகாமையின்; அவை அவ்வழியேகனாகி நிற்றற்குத் தடையாதலைக் கடக்குமாறில்லைபோலுமெனச் சுத்தசைவரீருயினார் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து 'இறை பணி நிற்க மலமாயை' என்னும் சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ-ள். வெ-டை:

நிற்றலாவது சலியாது நிலைபெறுதலென்பார் வழுவாது நிற்கவென்றார்.

'ஈண்டிறைபணியென்றது யாதெனின்' அஃது ஆசிரியர்தாமே முன்னர்த்தெரித்துரைக்கின்றமையின் இனிது விளங்கும்.

> அவனருளா லல்லது ஒன்றையுஞ் செய்யானாக
> வே அஞ்ஞான கன்மம் பிரவேசியாவாகலான்.

எ-து. ஏது. எ-னின். ஏகனாகிநிற்றலேயமையும், இறைபணி நிற்றலெற்றுக்கென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள். தன்செய்திக்கு முதல்வன் செய்தியை இன்றியமையாத ஆன்மாச் செய்வனவெல்லாம் அவனருளின்வழி நின்று செய்யுமாயின், மாயேயமுங் கன்மமும் ஏகனாகி நிற்றற்குத் தடையாய் வந்து தாக்கா ஆகலான்; அவை தாக்காமைப்பொருட்டுச் செய்யப்படுமுபாயமாதல்பற்றி இனி 'இறைபணி வழுவாது நிற்க' வென மேற்கொண்டது. எ-று.

அஞ்ஞான கன்மம் உம்மைத்தொகை.

மலமின்றுதல் மேற் பெறப்பட்டமையின் ஈண்டஞ்ஞானமென்றது மாயையின் காரியமாகிய மயக்கத்தையென்பது பெற்றும். உடம்பு நசிக்குமளவும் அவை மாய்வனவல்லாமையின் அறுமென்றாது பிரவேசியாவென்றார்.

கக—சூ, க-ரை.

ஏ-து. சூ-ம். எ-னின். பரமேஸ்வரனது சீபாதங்களை யணையுமா றுணர்த்துத னுதலிற்று.

ஏ-து ,க-ரை. எ-னின். சூத்திரக்கருத்துணர்த்துத னுதலிற்று.

இ-ள். அங்ஙனம் ஏகனாகி யிறைபணிநிற்பார்க்கு அறிவிச்சை செயல்கள் விடயித்தற்குரிய தோரிடைபு ஆண்டுப் பெறப்படாமையின், விடயமாவதொன்றில்லைபோலும் என்னும்வாதிகளை நோக்கி, விடயித்தலில்வழி ஆண்டுப்புத்தர்கூறு மாயைவிஞ்ஞானம்போலச் சூனியமாமெனப்பட்டு, குணஞ் சூனியமாகவே குணியுஞ்சூனியமாய் முடியுமாகலான்; அஃதேலாமையின், ஆண்டவை யியைபுபற்றி விடயிக்குமாறுணர்த்து முகத்தானே பயனிரண்டனுள் முடிவா யெஞ்சிநின்ற சிவப்பேறு கூடுதலாய நிட்டையினியல்புணர்த்துதல் இப்பதினோராஞ் சூத்திரத்தின் கருத்து. எ-று.

இதனானே, சூத்திரவியைபும் இனிது விளங்கும்.

அற்றேல், ஏகனாகியிறைபணிநின்றார்க்கு இனிச் செய்யக்கடவ தொன்றின்மையானும், இருணீக்கமும் ஒளிவிளக்கமும் உடனிகழ்ச்சியாயவாறுபோலப் பசுத்துவநீக்கமுஞ் சிவத்துவவிள

ச்சமும் இடையீடின்றி உடனிகழ்வனவாகலின் வேறோத வே
ண்டாமையானும், முதனூலுட் சுவாநுபூதியாகிய சிவப்பேற்
றைப் பத்தாஞ்சூத்திரத்துட் பாசநீக்கத்தோடு ஒருங்குவைத்
தே யோதலானும், அதனையீண்டு வேறுவைத்தோதல் அமையா
துபோலுமெனின்; அறியாது கடாயினாய்: ஏகனாகியிறைபணி
நிற்பது துரியநிலைக்கண்ணதாகிய அருணிலையேயாகலின், ஆண்டு
மலநீங்கிய துணையானே சுகப்பிரபைமாத்திரையே விளங்கு
வதன்றி அதீதநிலைக்கண்ணதாகிய சிவத்துவவிளக்கமெனப்படு
ம் பரமசுகம் விளங்காமையின், அது விளங்குதல் அவனருளா
லல்லதொன்றையுஞ் செய்யாமைமாத்திரையால் அமையாமை
யின், அதற்கு வேறு மாண்டுச்செய்யக்கடவதுண்டென்பது தா
னே போதருதலானும், இருணீக்கத்தின் ஒளிவிளக்கம்போலப்
பசுத்துவ நீக்கத்தின் அருள்விளக்கமாத்திரையேயன்றி ஆனந்த
விளக்கமும் உடனிகழாமையானும், அவ்விரண்டற்கும் வேறுபா
டு முன்னர்க்காட்டப்படுமாகலானும், முதனூலிற் பாசக்ஷயம்
பண்ணுமாறுணர்த்திய வழிப் பாசநீக்கமாத்திரையே முத்தியெ
னக்கொண்ட வாதிகளை மறுத்தற்பொருட்டுப் பாசநீக்கம்பெ
ற்றோனே சுவாநுபூதியுடையவனாவனெனப் பதினோராஞ்சூத்
திரஞ்செய்தற்குத் தோற்றுவாயாந்துணையே பத்தாஞ்சூத்திர
த்திற் செய்துவைத்துச் சுவாநுபூதிநிகழ்ச்சிக்கண் ஓதற்பாலன
வெல்லாம் பதினோராஞ்சூத்திரத்துட் கூறுதலின், ஒன்பதாஞ்
சூத்திரத்தின் எடுத்துக்கொண்ட ஆன்மசுத்தி பண்ணுமாறு ப
த்தாஞ்சூத்திரத்திற் சென்றியைந்து முற்றுப்பெற்றாற்போலப்
பத்தாஞ்சூத்திரத்தின் எடுத்துக்கொண்ட சுவாநுபூதிநிலை பதி
னோராஞ்சூத்திரத்திற் சென்றியைந்து முற்றுப்பெறுதலான், அ
தன்கண் மலையாமைப்பொருட்டு ஆசிரியர் சுவாநுபூதிமானாவ
னென்பதனையும், அரன்கழல்செலுமெனப் பதினோராஞ்சூத்திர
த்தானே ஒருங்குவைத்தோதினாராகலின், அது மாறன்மையா

னும், அவ்வாறின்றி மொழிபெயர்த்தல் யாப்பால் நூல்செய்து ரைப்பான் புகுந்த ஆசிரியர் வேறுபடச் செய்துரையாராகலா னுமென்பது. இதனானே, முதனூலிற் சுவாநுபூதிமானென வாளாகூறியதனைப் பதினொராஞ்சூத்திரத்துப் பத்திசெய்க வென்றதன் பின்னாகக் கொண்டுகூட்டி வைத்துரைத்தலே அதன் கருத்தென்பதூஉம் பெறப்பட்டது. அற்றாகலினன்றே, பத்தாஞ்சூத்திரம் பாசக்ஷயம்பண்ணுமாறுணர்த்திற்றெனவும், பதினொராஞ்சூத்திரம் பரமசிவனது சீபாதங்களை யணையுமாறுணர்த்திற்றெனவுங் கருத்துரைசெய்ததூஉமென்க. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்ப.

இதனுள், காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம்போற் காணவுள்ளத்தைக் கண்டு காட்டலின் என்றது ஓரதிகரணம், அதனை அயராவன்பினரன்கழல் செலுமே என்றது ஓரதிகரணம், ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

கக—சூ, க - அ - வா-ம்.

ஈண்டு, இவ்வான்மாக்கள் அவனையின்றியமையாது ஒன்றையும் விடயியாவாகலான் - அவனும் அவற்றது விடயத்தை யுணருமென்றது.

அ-று—அவனும் அவற்றது விடயத்தையுணருமென்றது.

எ-து. மே-ள். எ-னின். முதல்வன் உயிர்க்குக் காட்டுமுபகாரமாத்திரனாயே யுள்ளதென்னும் வாதிகளைநோக்கி அத்துவித நிலையுணர்த்துதற் கெடுத்துக்கொண்ட சூத்திரத்தின் 'காணுங் கண்ணுக்கு' என்னும் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ-ள். முதல்வனும் உயிர்களானுணரப்படும் விடயத்தை உடனின்றுணருவன். எ-று.

உம்மை உயிர்களுணர்தலேயன்றியெனை இறந்தது தழீஇயிற்று.

இஃதறியாதார் ஈண்டுணருமென்றது அறிவித்தற்கேதுவா யறியுமென்றுரைப்பாருமுளர். அவ்வாறுரைப்பிற் சித்தசாதனமாமாகலானும், ஈண்டைக்கியைபின்மையானும் அதுபோலியென்றொழிக.

அவையே தானேயாயெனவும், தாந்தமுணர்வின்றமியருளெனவும், மேற்பொதுவகையாற் கூறிப் போந்த அத்துவிதத்தை ஈண்டுக் காணுமுபகாரத்தின் வைத்துணர்த்தி இனிது விளக்கியவாறு.

இவ்வான்மாக்கள் அவனையின்றியமைந்து ஒன்
றையும் விடயியாவாகலான்.

எ-து. ஏது, எ-னின். கண் சடமாகலானும், காண்டற்பயன் உயிர்க்கேயாகலானும், கண் காண்புழி உயிரும் உடனின்று காண்டல் பெறப்படும் கண்போல் உயிர் சடமன்மையானும், உணர்தற்பயன் உயிர்க்கேயாகலானும், அதனையெடுத்துக்காட்டி அவனும் அவற்றது விடயத்தையுணருமென்றல் அமையாதென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தலுதலிற்று.

இ-ள். விளக்கொளி கண்ணொளியோடு கலந்து கண்ணொளியோடு கூட உருவத்தினுங் கலந்தாலன்றி அஃதவ்வுருவத்தைக் காண்டலின்றாயவாறுபோல, அறிவிக்கவறியும் இயல்பினவாய உயிர்களும் முதல்வனதுணர்வு தம்மோடு விரவி நின்று தம்மோடு கூடச்சென்று விடயத்தினும் விரவிநின்றால், அறிவு விளங்கி அதனை அறியும் இயல்பினவன்றித் தனித்தமையவுமாட்டா, தனித்தொன்றனை விடயிக்கவுமாட்டாவாகலான், அறிவ

விளங்குதன்மாத்திரைக்கேயன்றி விடயத்தைப்பற்றுதற்கண்ணும் முதல்வன் உடனின்றறிதல் ஒருதலையான் வேண்டப்படுதலான், ஈண்டு அவனும் அவற்றது விடயத்தையுணருமென மேற்கொண்டது. எ-று.

அவனையின்றியமையாமையிற் காட்டுமுபகாரம் விளங்கினாற்போல, அவனையின்றி ஒன்றையும் விடயியாமையிற் காணுமுபகாரமும் இனிது விளங்குமென்பார்; அவனையின்றியமைந்தொன்றையும் விடயியாவாகலானென்றார்.

அமைந்து விடயியாவென்றதனைக் "கந்தித்துச் சுழலும்" என்றாற்போலக்கொள்க.

உம்மை முற்றும்மை.

விடயியா என்றது பெயரடியிற் பிறந்த எதிர்மறைவினை. * "எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றை யறிந்தியற்றி யிடாவுயிர்க ளீசன்றானுஞ்—செவ்விதினி னுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்ப—னிவ்வுயிர்க டோற்றும்போ தவனையின்றித் தோற்றா விவற்றினுக்கும் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு—மவ்வுயிர்போ னின்றிடுவ னாதலானு மரனடியை யகன்று நிற்ப தெங்கே யாமே" என வழிநூலாசிரியர் இதனை விரித்தோதியவாறுமுணர்க. எவ்விடத்துமென்றது பெத்தமுத்தியிரண்டினுமென்பதாம். இதனுள், 'இறையடியை யின்றியமைந் தொன்றையறிந்தியற்றியிடாவுயிர்கள்' எனவும் 'ஈசன்றானெங்குமாய்ச் செறிந்து நிற்பன்' எனவுங் கூறியது விடயத்தின்கட்படு நிகழ்ச்சிக்கெனவும், 'இவ்வுயிர்கடோற்றும் போதவனையின்றித் தோற்றா' எனவும் 'அவ்வுயிர்போனின்றிடுவன்,

---

* சிவஞானசித்தி, சுபக்கம், ௧௧-௫, ௭—செ.

எனவுங் கூறியது உயிரின்கட்படு நிகழ்ச்சிக்கெனவும் கொள்க. அவ்வாறு கொள்ளாக்கால் இருகாற் கூறுதல் புனருத்தியாய்முடியுமென்றொழிக. இனி விளக்கொளி கலத்தல் ஈரிடத்தும் வேண்டப்படுமென்பதூஉம், "விளக்கொளிகலந்தவற்றை" எ-ம். × "விளக்கின்சோதி கலந்திடும்" எ-ம். புடைநூலாசிரியர் வகுத்தோதியவாற்றானுணர்க. அஃதங்ஙனமாக, பரமுத்தியில் உயிர்க்கு விடயமாவது ஒன்றின்மையின் வழிநூலாசிரியர் எவ்விடத்துமென்றது அமையுமாறென்னையெனின்;—அறியாதுகூறினாய்: ⁞ "சுத்த வநுபோகத்தைத் துய்த்தலனு" எ-ம். + "ஒன்றிநின் றுணரு முண்மை." எ-ம். பிறாண்டும் இவ்வாறே யோதுப வாகலின், பரமுத்தியில் உயிர் சிவானந்தாநுபூதியை விடயித்தலுண்டெனவும், அது முதல்வனே இன்றியாகாமையின் அவனும் ஆண்டவ்வநுபூதியை உடனின்றறிவனெனவுமுணர்க.

கக—சூ, உ - அ - வா - ம்.

இனி, பத்தியினான் மறவாதேத்த வவனது சீபாதத்தை யணையுமென்றது.

எ-து. மே-ள். எ-வின். ஏகனாகி நின்றார்க்கு அவ்வினைப்பற்றி அறிவிச்சைசெயல்கண் மூன்றும் ஆண்டு விடயிக்குமாறு யாங்ஙனமென்பாரை நோக்கி, நிட்டையினியல்புணர்த்ததற்கெடுத்துக்கொண்ட 'அயரா வன்பின்' என்னும் இரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ-ள். சூத்திரத்துரைத்தவாறுபற்றி யுரைத்துக்கொள்க.

× சிவப்பிரகாசம், உண்மை, அ—செ. கண்ணொளி.

⁞ உண்மைவிளக்கம், ருக—செ. முத்திதனில்.

+ சிவப்பிரகாசம், உண்மை, ௯எ—செ. ஒன்றிரண்டாகி.

"இத்தைகயாயு மறிவுடையனாயன்புசெய்ய" என வழிநூலாசிரியருமோதுதலின் ஈண்டுமறவாது பத்தியினாலேத்தவெனச் சூத்திரப்பொருட்கேற்ப மாறிவைத்துரைத்துக்கொள்க. ஏத்தவென்றது உபசாரவழக்கு.

அன்பு பத்தி காதலென்றாற்போல்வன இச்சை மீதூர்தற் பொருளவாகலான், அது பரமுத்தியினுமுண்டென்பதுணரார், பத்தியாவது சீவன்முத்திநிலைக்கே செய்யப்படுவதொரு சாதனம் போலுமெனமயங்கித் தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்ப. பரமுத்தியின்கண் இச்சை நிகழாதவழிச் சிவபோகம் அநுபவமாதல் செல்லாமையானும், சீவன்முத்திநிலைக்கே கூறுவதொன்றாயிற் "செம்மலர் நோன்றாள்" என்னுஞ் சூத்திரத்து ஒருங்குவைத்தோதவமையும் சூத்திரம் வேறுசெய்ய வேண்டாமையானும், அவ்வுரை போலியென்றொழிக.

அவன் அந்நியமின்றிச் செய்வோர் செய்திப்
பயன் விளைத்து நிற்றலான்.

எ-து. ஏது. எ-னின். பத்தியினான் மறவாதேத்தினும் அவனது சீபாதத்தை யணைதல் பரமுத்தியினன்றி முடியாதென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ-ள். அம்முதல்வன் வேறு நில்லாது செய்வோர் செய்வனவற்றை யறிந்து அவ்வச்செய்திக்குத் தக்க பயனை மிகச்செய்யலாயின், அவ்வப்பொழுதே விளைவித்தும் அல்லுழிக் காலாந்தரத்தின் விளைவித்தும் உடனாய் நிற்பனாகலான், இனிப் பத்தியினான் மறவாதேத்தவே அம்முதல்வனது சீபாதத்தையணையுமென மேற்கொண்டது. எ-று.

கஉ—சூ, க -ரை.

எ-து. சூ-ம். எ-னின். அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுமாறுணர்த்துத னுதலிற்று.

எ - து. க - ரை. எ - னின். சூத்திரக்கருத்துணர்த்துத னுதலிற்று.

இ-ள். அயராவன்பினரன்கழல் சென்ற முத்தர்க்குச் சீவன் முத்திநிலைக்கண் அவ்வறிவிச்சை செயல்கள் ஓரோவழிப் புறத்துச் செல்லுங்கால் அவை செல்லுமிடம் இவையென்பதுணர்த்து முகத்தான் வாக்குமனாதீதமாய்ப்பத்தியினுன்மறவாதேத்த நின்றமுதல்வனை வாக்குமனங்களுக்குக் கோசரமாம்படி தெளியக் கண்டு வழிபடுமாறுணர்த்துதல் இப்பனிரண்டாஞ் சூத்திரத்தின் கருத்து. எ-று.

சூத்திரவிளைபபும் இனிதுவிளங்கும்.

இதனுள், செம்மலர் நோன்றாள் சேரலொட்டா வம்மலங்கழீஇ என்றது ஓரதிகரணம், அன்பரொடு மரீஇ என்றது ஓரதிகரணம், மாலறநேய மலிந்தவர் வேடமு மாலயந்தானு மரனெனத் தொழுமே என்றது ஓரதிகரணம், ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

கஉ—சூ, க - அ - வா-ம்.

ஈண்டு, ஆணவமாயைகான்மியமென்னு மலங்களைக் களைகவென்றது.

எ-து. மே-ள். எ-னின். சீவன்முத்தர்க்கு ஒருதலையான் முன்னர்ச்செய்யக்கடவதிதுவென 'செம்மலர் நோன்றாள்' என்னும் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ-ள். வே-டை,

கன்மமலமே தன் மூலத்தை நோக்கிக் கான்மியமெனவும் படும். காமியமெனப் பாடமோதி, ஆகாமியங் காமியமெனத் தலைக்குறைபென் றுரைப்பாருமுளர்.

அவை தாம் ஞானத்தை யுணர்த்தாது அஞ்ஞானத்தை யுணர்த்துமாகலான்.

எ-து. ஏது. எ-னின். "மலமாயை தன்னொடு வல்வினையின்றே" எனப் பாசநீக்கம் மேலே பெறப்பட்டமையின், மெய்யுணர்ந்து நிட்டைகூடியபின் அவை களையப்கிடத்தல் யாங்ஙனமென்பாரை நோக்கிச் சூத்திரத்தின் உடம்பொடுபுணர்த்தோதிய பொருளைத் தெரித்துணர்த்தி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள். அம்மலங்கண்மூன்றும் மெய்யுணர்ந்து நிட்டைகூடிஞர் மாட்டும் யாதானுமோராற்றானுழைந்து தம்மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்துப் பிறவிக்கு வித்தாகிய பண்டை விபரீதவுணர்வை மேற்படுத்துவனவாம். ஆகலான், அஃதவர்க்காகாமையின் ஈண்டு ஆணவமாயை கான்மியமென்னு மலங்களைக் களைகவென மேற்கொண்டது. எ-று.

உணர்த்துதல் உணர்விற்கேதுவாதல்.

ஈண்டு அஞ்ஞானமென்றது விபரீதவுணர்வை.

கஉ—ரூ, உ - அ - வா-ம்

இனி, சிவபத்தர்களோ டிணங்குகவென்றது.

எ-து. மே-ள், எ-னின். அம்மலங் கழீஇயினார்க்கு அவ்வந் நிலைபெறுத்துவதாய் அதன்பின்னர்ச் செய்யக்கடவது இது

வெனை 'அன்பரொடு மரீஇ' என்னும் சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ-ள். வெ-டை.

ஈண்டுச் சிவபத்தரென்றது பத்தியினான் மறவாதேத்தி முதல்வனது சீபதத்தையணைந்த சீவன்முத்தர்மேற்று.

இணங்குதல் நட்புச்செய்தல். சிவபத்தர்களோடிணங்குகவெனவே, எதிர்மறைமுகத்தான் ஏனையரோடிணங்கற்கவென்பதூஉம் பெறப்பட்டது.

> அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவராக
> லான்.

எ-து. ஏ-து. எ-ின். உறவும் பகையுமொழித்த மெய்ஞ்ஞானிகள் சிலர்மாட்டு நட்புஞ் சிலர்மாட்டு நட்பின்மையுமுடையராதல் சால்பன்றென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ-ள். வெ-டை.

அல்லாதார் அஞ்ஞானத்தையுணர்த்துமாறு ×"தெய்வமென்பதோர் சித்தமுண் டாகி—முனிவி லாததோர் பொருளது கருதலு—மாறு கோடி மாயா சத்திகள்—வேறு வேறுதம் மாயைக டொடங்கின—வாத்தமானா ரயலவர் கூடி—நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்—சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்—பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்—விரத மேபரமாகவே தியரும்—சரதமாகவே சாத்திரங் காட்டினர்—சமயவாதிக டத்த மதங்களே—யமைவ தாக வரற்றிமலைந்தனர்" என்றற்றொடக்கத்துத் திருவாக்குக்களானறிக. மும்மலங்க

× திருவாசகம் - ச—போற்றித் திருவகவல்.

ன் அஞ்ஞானத்தை யுணர்த்துதல், இலக்குவாய்த்தழி ஏதுவாதன் மாத்திரையே. சிவபத்தரல்லாதார் அவ்வாறின்றி இலக்குவாயாதவழியும் வாய்க்குமாறு செய்துகொண்டு பலவகையுபாயங்களானுந் தம்மோடொப்ப விபரீதவுணர்வைச் செலுத்திவேவிடுவராகலான், அம்மலங்களினுங் கொடியராகிய இவரை அவற்றினுமஞ்சிவிட்டொழிதலே அறிவுடைமைக்குச் சால்பென்பதாம்.

கஉ—ரு, ந - அ - வாம்.

இனி, பத்தரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேஸ்வரனெனக் கண்டு வழிபடுகவென்றது.

எ-து. மே-ள். எ-னின். அன்பரொடு மரீஇயினார்க்கு அம்மருவுதலை நிலைபெறுத்துவதாய் அதன்பின்னர்ச் செய்யக்கடவதிதுவென 'மாலற நேய மலிந்தவர்' என்னும் சூத்திரத்தின் மூன்றாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ-ள். வெ-டை.

காண்டல் ஐயுறவின்றித் தெளிதல்.

காமக்கிழத்தியர் வடிவிற் காணப்படும் ஆடை சாந்து அணிகலன்முதலாயின காமுகரை வசீகரித்து இன்பஞ்செய்யுமாறுபோல, மெய்யுணர்வுடையாரைக் காட்சிமாத்திரையின் வசீகரித்து இன்பஞ்செய்தல்பற்றித் திருவேடத்தையுஞ் சிவாலயத்தையுமென்றுபசரித்தார். அது + "சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங் கொங்கையிற் செங்குங்குமம்—போலும் பொடியணி மார்பிலங்குமென்று புண்ணியர் போற்றிசைப்ப" வென்னு

+ சேந்தனார் - திருப்பல்லாண்டு, அ—செ.

க் திருவாக்கானுமறிக. திருவேடத்திளியல்பு "தூய வெண்ணீ று துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமு—நாயகன் சேவடி தைவரு சிந்தையு நைந் துருகிப்—பாய்வது போலன்பி னீர்பொ ழி கண்ணும் பதிகச் செஞ்சொன்—மேயசெவ் வாயு முடையா ர் புகுந்தனர் வீதி யுள்ளே." "சிந்தை யிடையறு வன்புந் திரு மேலி தன்னி லசைவுங்—கந்தை மிசையாங் கருத்துங் கையுழ வாரப் படையும்—வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலி திருநீறு—மந்தமி லாத்திரு வேடத் தரசு மெதிர்வந் தணைய" "கண்ட கவுணியக் கன்றுங் கருத்திற் பரவு மெய்க் காதற்—றொண்டர் திருவேட நேரே தோன்றிய தென்று தொழுதே" என்றற்றொடக்கத்துத் திருவாக்குக்களானு மறிக.

அவன் மற்றிவ் விடங்களிற் பிரகாசமாய் நின் றே அல்லாதவிடத்து அப்பிரகாசமாய் நிற்ற லான்.

எ-று. ஏ-து. எ-னின். மெய்யுணர்வுடையார்க்குப் பகுப்பி ன்றி எங்கணும்பரமேசுவரனெனக்காண்டலே பொருத்தமுடை மையானும், நின்ற திருத்தாண்டகமுதலியவற்றுள் அவ்வாறோ துதலானும், திருவுருத்திரத்துட் பகுப்பின்றி உயிர்ப்பொருள் உயிரில்பொருளெல்லாவற்றையுந் தனித்தனியெடுத்தோதி வழி பாடு கூறுதலானும், ஈண்டிவற்றை மாத்திரையே விதந்துகொ ண்டோதிய தென்னையென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த துதலிற்று.

இ-ள். அம்முதல்வன் யாங்கணும் வியாபகமாய் நிற்பினும் இவ்விரண்டிடத்துமாத்திரையே தயிரினெய்போல விளங்கி நிலைபெற்று அல்வழியெல்லாம் பாலினெய்போல வெளிப்ப டாது நிற்றலான் இனிப்பத்தராது திருவேடத்தையுஞ் சிவால

யத்தையும் பரமேஸ்வரனெனக் கண்டு வழிபடுகவென மேற்கொண்டது. எ-று.

மற்று உரையசை.

எப்பொருட்கண்ணுமிறைவன் கலந்துளனென்பது தெளிந்து கோடற்பொருட்டுத் திருவுருத்திரத்தின் அவ்வாறோதப்பட்டதெனக் கொள்க.

௧௨—சூ, ௪—புறநடை - வா-ம்.

இனி, இவ்விடங்களிற் வழிபடுக வென்றது.

எ-ஈ. மே-ள். எ-னின். மேற்கூறிப் போந்த மூன்றுஞ்சீவன் முத்தர்க்குத் தாமேயுளவாம் இலக்கணமாகலின், அநுவாதமாக வைத்துணத்தற்பாலனவாகிய இவற்றைக் கலைக இணங்குக வழிபடுகவென விதியாக வைத்தோதிய தென்றுக்கென்பாரை நோக்கி, அதனை அவற்றொழிபாகக்கொண்டு சாதித்தற்கு மேற்கோடனுதலிற்று.

இ-ள். வெ-ண்ட.

இவ்விடங்களென்றது மேற்கூறிய இரண்டனையும்.

வழிபடுகவென்னும் எடுத்தலோசையான் அநுவதித்துணர்க்குவதே யமையுமென்பாரை நோக்கி விதித்தலை வலியுறுத்தவாறு. இனம்பற்றிக் கலைதல் இணங்குதல்கட்கும் இஃதொக்கும்.

நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய் வரும் புருடன் அவையாகாவாறு அப்புருடனுமாகலான்.

எ-து. ஏது. எ-னின். எய்தியதனை விதித்தல் படனுடைத்தன்றுபோலுமென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ-ள். நரம்புமுதலிய தாதுக்களின்கண் வேற்றுமையின்றி அதுவது தானாய் வருகின்ற உயிர் நாடியோ என்போ நரம்புச்க்கோவையோவென்று இங்ஙனம் மைமறியாய்ப் பார்ப்பார்க்கு அந்நரம்பு நாடிமுதலியவையாகாது அவற்றின் வேறுமாயினாற்போல, உயிர்க்குயிராகிய அம்முதல்வனும் உயிர்ப்பொருள் உயிரில்பொருளெல்லாவற்றினுங் கலப்பான் அதுவது தானாகியும் பொருண்மையான் அல்லனாகியும் நிற்பனாகலான், அதுவது தானாய்க் காணுங் காட்சிபற்றியெய்திய வழிபாடு அல்லனாய் நிற்றலைக் காணுங் காலெய்தாதாகலின், அவ்வழிபு மெய்துவிக்க வேண்டுதலான், இனி இவ்விடங்களின் வழிபடுகவென விதித்தோதியது. எ-று.

அவையாகாவாறப்புருடனுமெனவே அவ்விடத்தெய்துவித்தல் ஒருதலையான் வேண்டுமென்பது தாற்பரியமாயிற்று.

மேற்கோளின் இவ்விடங்களை யென்னாது இவ்விடங்களினென வேற்றுமைப் படுத்தோதியதூஉம் இஃதுணர்த்து கோடற்பொருட்டு. இதனானே, எய்தாததெய்துவிப்பதூஉம், எய்தியதிகந்து படாமற் காப்பதூஉம், எய்தியதனை யொருமருங்கு மறிப்பதூஉம் என்னும் விதிமூன்றனுள், இஃதெய்திய திகந்துபடாமற் காத்ததென்பது போந்தவாறுணர்க.

வாறு உவமவுருபுபட நின்றது.

முதலானவற்றை யென்பது உருபு மயக்கம்.

மெய்கண்டதேவர்

சிவஞானபோத வார்த்திகத்திற்கு, சிவஞான முனிவர் உரை
முற்றும்.

சிவமயம்.

சிவஞானபோத விருத்தியுரை.

கல்லா னிழன்மலை வில்லா ரருளிய
பொல்லா ரிணையடி நல்லார் புனைவரே.

(என்பது விநாயகர் துதி.)

இ-ள். கல் ஆல் நிழலார். எ-து. — கல் ஆலினுடைய நிழலிலே எழுந்தருளியிருந்தவர்.

எனவே தம்மை வழிபட்டவர்களை யநுக்கிரகிக்கை காரணமாகச் சரியை கிரியாயோக ஞானமாகிய வாகமங்களை யருளிச்செய்தவர் என்பதாம்.

மலைவில்லார் எ-து. — மகம்மேருவாகிய மலையை வில்லாக வளைத்தவர்.

எனவே தம்மை வழிபடாதவர்களை நிக்கிரகித்தவர் எ-ம்.

ஆர் என்பதனை இரண்டிடத்துங் கூட்டுக.

அருளிய - பொல்லார் எ-து. — அவரா லருளப்பட்ட பொல்லாதபிள்ளையாரென்னுந் திருநாமத்தையுடைய மூத்தநாயனார்.

இணை யடி நல்லார்புனைவரே. எ-து. — அவருடைய விரண்டு ஸ்ரீபாதங்களையும் அறிவாலுயர்ந்த தவங்களையுணர்ந்த ஞானவான்கள் சூடுவார்கள்—என்றவாறு.

எனவே சிட்டரையநுக்கிரகித்தும், துட்டரை நிக்கிரகித்துஞ் செய்யவல்லவரே கர்த்தா என்பதாம்.

ஆதலால், அவரா லருளப்பட்ட மூத்தநாயனாரும் அத்தன்மையினொன்றாயிற்று.

அது வழிபடுவோருடைய பாசத்தை நிக்கிரகித்து, மோக்ஷத்தை அநுக்கிரகிப்ப தென்னும் பொருட்டாயிற்று.

ஞானவான்க ளவருடையசீபாதங்களைப் புனைவார்களெனவே யாமு மதுசெய்யக் கருதினமென்ப தாயிற்று.

இவ்வுரையாசியர் இந்நூலின்காப்பையே தமதுரைக்கும் காப்பாகக் கொண்டு, பாயிரத்தின் முன்னர் காப்பினிற்கு உரைகூறினர். இவ்வாறு சிறப்புப்பாயிரங்கள் நூல்களிற்கு இடையும் கடையும் வருவனவும் பெரும்பாலும் காணப்படுகின்றது.

பாண்டிப்பெருமாள் பதவுரை.

பொல்லார் -பொல்லாப் பிள்ளையார். எனவே பாசவிக்கினங்களைப் போக்கும் விக்கினேசுரராதலினாலே அந்தப் பாசத்துக்குப் பொல்லார் என்பதாம்.

நல்லார்-பதி பசு பாசங்களை உணர்ந்த ஞானிகள்.

சிவஞானமுனிவர் உரை.

காமிகமுதலிய சைவாகமங்களின் ஞானபாதத்தி னுள்ளதாகிய ஆசங்கை நீக்கி அவற்றின் பொருளுண்மை பொது வியல்பு சிறப்பியல் பென்று இருவேறுவகைப்படுத்துக் காட்டிப் போதித்தற்கு இரௌரவாகமத்தினெழுந்த சிவஞானபோத நூலினைத் தமிழுலக முய்தற்பொருட்டு மொழி பெயர்த்துச் செய்து, பொழிப்புரைப்பா னெடுத்துக்கொண்ட வாசிரியர், சாக்கிரத்தே அதீதத்தைப் புரியுந் தமக்கு இடையூறு சிறிது மணுகாமை அறிந்தாராயினும், ஆன்றோ ராசாரம் பாதுகாத்தற்பொருட்டும், மாணுக்கர்க் கறிவுறுத்தற்பொருட்டும், முதற்கண் இடையூறு நீ

க்குதற் குரிய விநாயகக் கடவுளை வாழ்த்துவதாகிய மங்கலவா ழ்த்துக் கூறுகின்றார்.

இ-ள். கல்லால் நிழல். எ-து. அருள்வடிவாகிய கல்லால நிழலின் கண்ணே எழுந்தருளி யிருந்து—மலைவு இல்லார். எ-து நந்திப்பெருமானுக்கு இந்நூலான் மலைவு தீர்த்தருளிய முதலா சிரியர்—அருளிய. எ-து. மேன்மேற் கருணைகூர்ந் தருளுதற் பொருட்டு,—பொல்லார் இணை மலர். எ-து. பொல்லாத பி ள்ளையாருடைய ஞானசத்தி கிரியாசத்தியென்னும் இரண்டு தி ருவடித் தாமரைகளை—நல்லார். எ-து. கேட்டுச் சிந்தித்து த் தெளிந்த மெய்யன்பர்—புனைவரே. எ-து. தம்முடைய ஞானசத்தி கிரியாசத்திக்கு வியாபகமாகக் கொண்டு தாட லைபோல் அடங்கி நிற்பர். எ - று.

நல்லார் புனைவரெனவே, ஏனையோர்க்கு அது கூடாதென் பதாயிற்று.

மூவகை வாழ்த்துள் இது பொருளியல்புரைத்ததெனக் கொ ள்க.

அருளிய வென்பது செய்தியவென்னும் வாய்பாட்டு வினையெ ச்சம்; அது புனைவரென்னும் பிறவினை கொண்டது.

இல்லார் இல்லாகச்செய்தாரெனப் பண்படியிற் பிறந்த வி னைப்பெயர்.

அருளிய பொல்லாரெனப் பெயரெச்சமுடிபாக வைத்துரை ப்பினு மமையும்.

மலைவில்லாரருளிய பொல்லார்தாள் புனைவரெனவே, அவ்வி ருவருந் தம்முள் வேற்றுமையின்மை பெற்றாம். உலகத்துப் பு தல்வர்கண்மாட்டுச் செய்யும் வழிபாடு தந்தையர்க்குக் களிபே ருவகை பயப்பிக்கு மாகலின், அந்நயம் பற்றி அங்ஙனங் கூறிய வாறாம்.

அருணந்திதேவர் இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

சூத்திரம்.

மலர்தலை யுலகின் மாயிரு டிமியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போ லீண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் ணிருடீர்ந்
தருந்துயர்க் குரம்பையி னான்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
வுயர்சிவ ஞான போத முரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச்சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே.

என்-து. பாயிரம்.

"ஆயிரமுகத்தானகன்றதாயினும் பாயிரமில்லது பனுவலன்றே" என்பவாகலின் பாயிரமுரைத்தே நூலுரைக்கற்பாற்று. பாயிரமாவது நூற்கின்றியமையாதது.

அது பொதுப்பாயிரமெனவுஞ் சிறப்புப் பாயிரமெனவு மிருவகைப்படும்.

பொதுப்பாயிர மாவது, எல்லாநூற்கும் பொதுவாய் வருவது.

சிறப்புப்பாயிர மாவது, தன்னா லுரைக்கப்படும் நூற்கின்றியமையாதது.

பொதுப்பாயிரவிதி.

அவற்றுட் பொது நான்கு வகைப்படும்.

அவை கற்பிக்குமாசிரியனது முறைமையும், அவன் கற்பிக்கு முறைமையும், அதற்கு மாணாக்கனியல்பும், அவன் கற்கு முறைமையும்—ஆம்.

"ஈவோன்றன்மை யீதலியற்கை கொள்வோன்றன்மை கோடன்மரபென - வீரிரண்டென்ப பொதுவின்றொகையே". என்பவாகலின்.

கற்பிக்கு மாசிரியரு மிருவகையார்.

கற்கப்படுவோருங் கற்கப்படாதோருமென.

அவருட் கற்கப்படுவோர் நான்கு வகைப்படுவர்.

"மலை நிலம் பூவே துலாக்கோலென் றின்ன, குலைவி லுணர்வுடையோர்".

மலைபோல் எ-து. தான்கூறிய பொருளைப் பிறனொருவன் றிரிவுகாட்டியவழி நிலைகுலையாது திரிவுபடாமற் கூறுதல்.

நிலம்போல் எ-து. தான் கூறியபொருளைப் பிறனொருவன் றிரிவுகாட்டியவழி யாண்டுவெகுளாது அறிவுறுத்துதலுந் தன்னை வழிபட்டாற்குத் தக்ககற்பித்தலும்.

பூப்போல் எ-து. கேட்டோர்க் கின்பம்பயக்குமாறு கூறுதலும், மற்றிதற் செளிதாக மெல்லியவாகக் கூறுதலும்.

துலாக்கோல்போல் எ-து. இருவராசிரியர் தம்முண் மாறுபட்டு வினவியவழி யதனது நிலைமையைத் துணிந்து கூறவல்லவனாதல்.

இன்னும் "மலை நிலம் பூவே துலாக்கோல்" என்றதனால், நிலைமையும், பொறையுடைமையும், மெல்லியனாதலும், நடுவுநிலைமையும் ஆகிய வொழுக்கமுங் கொள்க.

கற்கப்படாதோரு நால்வகையார்.

" கழற்பெய்குடமே மடற்பனை முடத்தெங்கு, குண்டிகைப் பருத்தியோ டவையென மொழிப".

கழற்பெய் குடம்போல் எ-து. சொரியுங்காலத் தொருங்கு விழும். அதுபோலக் கொள்வோனுணர்வு சிறிதாயினுந் தான் கற்றதெல்லா மொருங்குரைத்தல்.

※ மடற்பனைபோல் எ-து. ஆசாரிய னுணர்வுடையனாயினுங் கற்பார்க்குக் கிட்டுதலருமை.

முடத்தெங்குபோல் எ-து. தன்னைப் போற்றுவாரிடத்துப் பழம்விழாது பிறர்மனைக்கண் விழத்தும். அதுபோல் வழிபடுவோர்க்குப் பயன்படாது பிறர்க்குப் பயன்படுதல்.

குண்டிகைப்பருத்திபோல் எ-து. குடத்தின்கணிட்ட பருத்தி யொருங்குகொள்ளக் கருதுவார்க்குச் சிறிதேயொழிய வாங்குதற்கருமைபோல், உணர்வுடையோர்க்குச் சிறிதே யுரைத்தல்.

※ மடற்பனைபோல் எ-து. பிறராற் கிட்டுதற் கரிதா யினிதாகிய பயின்களைக் கொண்டிருத்தல். என்றார் நச்சினார்க்கினியர். தொல்காப்பியம் எழுத்ததிகாரம் பாயிரம் -க-கு, உரை.

ஈதலியற்கை எ-து. ஆசிரியன் கற்பிக்குமுறைமை.

"ஈதலியல்பே யியம்புறக்கிளப்பிற், பொழிப்பேயகல நுட்ப மெச்சமெனப், பழிப்பில்பல்லுரை பயின்றநாவினன், புகழ்ந் தமதியிற் பொருந்துமோரையிற், றிகழ்ந்தவறிவினன் றெய்வம் வாழ்த்திக், கொள்வோனுணர்வகை யறிந்தவன்கொள்வரக் கொடுத்தன்மரபெனக் கூறினர்புலவர்".

இதன்கட் பொழிப்பு எ-து. தொகுத்துரைத்தல்.

அகலம் எ-து. விரித்துரைத்தல்.

நுட்பம் எ-து. கடாவிடை கூறுதல்.

எச்சம் எ-து. கடாவறத் துணிந்தபொருள்.

"பாடங்கண்ணழி வுதாரணமென்றிவை, நாடிற்றிரிபில வுரை த்தல் பொழிப்பே".

"தன்னூன்மருங்கினும் பிறநூன்மருங்கினுந், துன்னியகடா வின் புறந்தோன்று விகற்பம், பன்னியவகல மென்மனார் புல வர்".

"ஏதுவி னாங்கவை துடைத்த னுட்பம்".

"துடைத்துக்கொள் பொருளை யெச்சமென்ப".

என்பனவற்றாற்கொள்க.

மதி எ-து. திங்கள், (நாள்=கிழமை,) நாள் பக்கங் கரணம் யோகமென்ற வைந்தாம் - என, அவற்றிற் பொருந்துந் திங்க ளும், பொருந்து நாளுமென்றதாம்.

கொள்வோன்றன்மை யிருவகைப்படும், கற்பிக்கப்படுவோரு ம் கற்பிக்கப்படாதோருமென.

அவருட் கற்பிக்கப்படுவோர்.

"அவர்தாம் - தன்மகனாசான் மகனேமன்மகன், பொருணனிகொடுப்போன் வழிபடுவோனே, யுரைகோளாளனோ டிவரெனமொழிப".

இதனானே அறுவகையரென்றுகொள்க.

இனிக் கற்பாரியல்பு.

"அன்னங்கிளியே நன்னிறநெய்யரி, யானையானே றென்றிவைபோலக், கூறிக்கொள்ப குணமாண்டோரோ".

அன்னம்போல் எ-து. பாலுநீருங்கலந்தவழி நீருண்ணாது பாலுண்ணும். அதுபோலப் பல்லுரை கேட்டவழி நல்லுரை கொள்ள வல்லனாதல்.

கிளிபோல் எ-து. அது சொல்லிற்றுச்சொல்லும். அதுபோல வாசிரியன்கூறியது பிறழாமற் கூறுவது.

நன்னிறம்போல் எ-து. "எந்நிறந்தோய்தற்குமேற்பதாத னன்னிறத்தியல்பென நாடினர்கொளலே."

நெய்யரிபோல் எ-து. பன்னாடை. அதுநெய்யினையேற்றவழிக் குற்றமுள்ளது மேலே தோற்றுவிக்கும். அதுபோலக் கேட்டவற்றுட் குற்றமுள்ளனவெடுத்து விடுவவல்லனாதல்.

யானைபோல் எ-து. யானை ஒருவன் செய்ததனை மறவாது. அதுபோற்கற்றது மறவாமை.

ஆனேறுபோல் எ-து. ஓசைகேட்கும்வழி யதன்மேலொருப்பட்டவுளத்ததாய்க்கேட்கும். அதுபோலக் கேட்குங்காலொருப்பட்டவுள்ளத்தனாய்க் கேட்டல்.

இனிக் கற்பிக்கப்படாதாரெண்வகையாராம்.

"மடிமானிபொச்சாப்பன் காமுகன்கள்வ, னடுநோய்ப்பிணி யாள னுருச்சினத்தான், றடுமாறு நெஞ்சத்தவனுள்ளிட் டெண்மர், நெடுநூலைக் கற்கலாதார்".

என்பதனாலறிக.

கல்லாதாரியல்பு.

"குரங்கெறிவிளங்கா யெருமையாடே, தோணியென்றுங் கடைபெனமொழிப".

குரங்கெறிவிள்ங்காய்போல் எ-து. விளாவின்கட் குரங்கிருந்தவழிக் காய்கோடலாற்றான் கல்லினா னதனையெறிய, அது விளங்காய்கொண்டெறியும். அதுபெற்றாற்போல, வழிபடாதொழிந்துகொள்ளா தொருபொருளைக்சடாவிக் கேட்டா லவ்வழி யவன்கூறியவுரையைத் தனக்குப் பொருளாகக் கோடல்.

எருமைபோல் எ-து. ஒரு குளத்திற் றண்ணீருண்டால் அதனைக் கலக்குமாறுபோல, பொருள்கேட்டோன் அதனைத்திருவுசொல்லிக் கொள்ளாமை.

ஆடுபோல் எ-து. தனக்குவயிற்றுக் கொருதூற்றிலே கறிக்கலாயினும் பல்தூற்றினுஞ்சென்று கறிக்கும். அதுபோல, ஓர் நூலைக்கற்கக் காணாது பலநூலுங் கற்கமுயறல்.

தோணி எ-து. தானாக வியங்கமாட்டாது இயக்குவார் வழியியங்குமாறுபோல, ஆசிரியன்சொன்னபொழுது வல்லனாய் அவனதுநீக்கத்துக் காணமாட்டாமை.

"செவ்வன்றெரிகிற்பான்மெய்ந்நோக்கிக் காண்கிற்பான், பல்லுரையுங்கேட்பான் மிகப்பெரிதுங்காதலான், றெய்வத்தைப் போலமதிப்பான்றிரிபில்லா, னிவ்வாறு மாண்புடையார்க்குரைப்பவே, செவ்விதினூலைத்தெரிந்து".

இதனானறிக.

இனிக் கோடன்மரபு வருமாறு:—

"கோடன்மரபு கூறுங்காலைப், பொழுதொடுசென்று வழிபடன்முனியான், முன்னும் பின்னு மிரவினும்பகலினு, மகலாஞகிய யன்பொடுபுணர்ந்தாஅங், காசறவுணர்ந்தோன் வாவெனவந்தாஅங், கிருவெனவிருந்து சொல்லெனச்சொல்லிப், போவெனப்போகி நெஞ்சுகளனாகச், செவிவாயாகக் கேட்டவை கேட்டவை, வல்லனாகிப் - போற்றிக்கோட லதுவதன்பண்பே".

"எத்திறமாசா னுவக்குமத்திற, மறத்திற்றிரியாப் படர்ச்சி வழிபாடே".

"அனையநல்லோன் கேட்குவனாயின், வினையினுழப்பொடு பயன்றலைப்பாடாஅன்".

"ஆசானுரைத்தவை யமைவரக்கொளினுங், காற்கூறல்லது பற்றலவாகும்".

"அவ்வினையாளரொடு பயில்வகையொருபாற், செவ்விதினுரைப்ப வவ்விருபாலு, மையறுபுலமை மாண்புநனி யுடைத்தே".

இவற்றானுமறிக.

சிறப்புப்பாயிர விதி.

இனிச்சிறப்புப் பாயிரமாவது:—

"ஆக்கியோன் பெயரே வழியேயெல்லை, நூற்பெயர்யாப்பே நுதலியபொருளே, கேட்போர்பயனோ டாயெண்பொருளும், வாய்ப்பக்காட்டல் பாயிரத்தியல்பே".

"காலங்களனே காரணமென்றிம், மூவகையேற்றி மொழிநருமுளரே".

என்பனவற்றாற் பதினொருவகைப்படும்.

ஆக்கியோன் பெயர் எ-து. நூல்செய்த வாசிரியன்பெயர்.

வழி எ-து. இன்னதன் வழித்தோன்றல்.

எல்லை எ-து. வழங்குமெல்லை கூறுதல், (நூலினதளவு கூறலுமாம்.)

நூற்பெயர் எ-து நூலின்பெயர் கூறுதல்.

யாப்பு எ-து. "தொகுத்தல் விரித்தல் தொகைவிரிமொழிபெயர்த்தல்" என நான்கினுள் ஒன்றை யாத்தல்.

நுதலியபொருள் எ-து. கற்றதனாற் பயனாகிய விடி கூறல்,

காலம் எ-து. நூல் தோன்றிய காலங் கூறல்.

களன் எ-து. தோன்றிய விடங் கூறல்.

காரணம் எ-து. நூல் செய்ததற்குக் காரணங்கூறல்.

அவை யிந்நூலகத்து வருமாறு. பாயிரசூத்திரப் பொருளுரைப்ப விளங்கும்.

* இப்பாயிர உதாரணச் சூத்திரங்கள் தொல்காப்பியம் எழுத்ததிகாரப்பாயிரத்துட் காண்க.

பாயிரப் பொருள்.

மலர்தலை யுல
கின் மாயிருடிமி
யப்- பலர் புகழ்
ஞாயிறு படரின
ல்லதைக்- காண்
டல் செல்லாக்க
ண்போல் எ-து.

இடமகன்ற வுலகின்கண்ணுண்டாய மகத்தாகிய விருணிங்கப் பலசமயத்தாராலும் புகழப்பட்ட வாதித்தன் வரினல்லது காட்சியை யுடைத்தாகாத கண்போல.

ஈண்டிய-பெரும் பெயர்க் கடவுளிற் கண்டு கண்ணிரு டீர்ந்-தருந்துயர்க்குரம்பையி னான்மாநாடி. எ-து.

எங்குந்தானாகி நிறைந்த பெரிய பெயரையுடைய கர்த்தாவாலே (தன்னுடைய இச்சாஞானக்கிரியையாகிய சைதன்னியத்தை, காட்டமும் அக்கினியும்போல மறைந்து நிற்பதான) அஞ்ஞானமாகிய மூலமலந்தீர்ந்து, அரிய துயரத்தையுடைய (புண்ணிய பாவங்களாற் செறியப்பட்ட) உடம்பிலே யான்மாவை யாராய்ந்து கண்டு.

ஒன்றினொன்று தோன்றிவருதலையுடைய பஞ்சபூதக்கூட்டரவை 'மலர்தலையுல'கென்றார். உலகத்தை மறைத்துநின்ற விருளாதித்தனாலேபோனவிடத்துக் கண்ணுக்குப்பிரகாசமுண்டாய் அந்தப்பிரகாசத்தினாலே காட்டினஆதித்தனையு மறைந்துநின்றபிரபஞ்சத்தையு மறைத்தவிருளையுங்கண்டாற்போல, ஆன்மாவுந் தன்னைமறைத்துநின்ற மூலமலங் கர்த்தாவினுடையதிருவருளாலே போனவிடத்து ஞானக்கண்ணுடைத்தாய், அந்தஞானக்கண்ணாலே காட்டினகர்த்தாவையு மறைந்துநின்றதன்னையு மறைத்தமூலமலத்தையுங் காண்டலிற் கடவுளிற் கண்டென்றார். எல்லாப்பெயரையுங்கடந் தப்பாலாய்நிற்றலாற் பெரும்பெயர்க்கடவுளென்றார். அன்றியும் பதியே ஆசாரியனாய் வருகின்றமுறைமையாற் பெரியபெயரையுடைய வாசாரியனாலே கண்டென்றுமாம். ஆன்மாநாடிக் கண்டெனவே பதிஞானத்தாலே பாசத்தைநீக்கி ஆன்மாவைக் காணவேண்டுகையாற் பதி-பசு-பாசத்தினுடைய உருபம் - சொருபம் - சுபாவம் - வியாத்தி - வியாபகமும், தரிசனமும், பதிசத்தி சாலங்களினாலே பஞ்சகிருத்தியம்பண்ணுகின்ற முறைமையும், அவையிற்றினாலே யான்மாக்கள் தொழிற்பட்டுவருகின்ற முறைமையும், அவைதான் ஆன்மாககளுக்குக் கிருத்தியப்படுகிற முறைமையும், பின்பு சத்தி

திபாத முண்டாமுறைமையும், பலபிரகாரங்களாகிய முத்தியில க்கணங்களும், அவையிற்றிற் பரமுத்தியேமுத்தியென்னுமு றைமையும் ஆராய்ந்து கண்டென்றார்.

மயர்வற எ-து. மயக்க மற.

அநு நூல் பின்னொடுமுன் மலையாமலென்றதாம்.

நந்தி முனிகண ஸ்ரீநந்திகேசுரர், ருஷிகணங்களிற் ச த்தளித்த-வு னற்குமாரபகவானுக்கு, (பரமேச்சுரன்தம ர் சிவஞான க்கருளிச்செய்த முறைமையை,) அருளிச் போத முரைத் செய்த மிக்க சிவஞானபோதத்தை அருளிச் தோன் எ-து. செய்தவன்.

முனிகணமாவார்;—அகத்தியன்-புலத்தியன்-சனகன்-சனந ன்-சனந்தன்-சனற்குமாரன-குசிகன்-குற்சன்-வான்மீகன்-வா மதேவன்-வைசம்பாயன்-தும்புரு - வியாதன்-வசிட்டன்-விசு வாமித்திரன்-சித்திரசேனன்-யாதுதிரன்-கோதமன்-கவுதமன் சீராகன்-கௌருகன்-காலவாச்சியன்-வஞ்சமன்-அங்கிசமன்- ருசபாலீசன்-துர்வாசன்-தைட்டியதமன்-நாரதன்-நாராயண ன்-பாரத்துவாசன்-கபிலன்- கன்னன்-காசிபன் - காவேடன் பராசரன்-மார்க்கண்டேயன்-என்றுசொல்லப்பட்ட விவர் மு லாயினோர்.

இந்நூல் வந்த முறைமை:—"போதமிகுத்தோர் தொகுத்த பதமைக்கே பொருந்தினோ ரிவர்க்கன்றிக்கதிப்பாற்செல்ல, வதுநெறியெனுமவர்கட்கறியமுன்னூ ளிறைவனருணந்திதனக் யம்பநந்தி, கோதிலருட்சனற்குமாரற்குக்கூறக் குவலயத்தி வ்வழியெங் குருநாதன்கொண்டு, தீதகலவெமக்களித்த ஞா நூலைத் தேர்ந்துரைப்பன் சிவஞானசித்தியென்றே"என்ப னூலறிக.

இந்தச் சிவஞானசித்தியின்நூலின் வழிநூலாதலான் மேலு மிவ்வாறு காட்டும்பொருளுணர்க.

பெண்ணைப் புனல் சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன் - பொய்கண்டகன்ற மெய்கண்டதேவன் - பவநனிவன்டகை கடந்தவரடி புனைந்த தலைமையோனே எ-து.

பெண்ணையாற்று நீராற் சூழப்பட்ட வெண்ணெய்நல்லூரிற் சுவேதவனப் பெருமாளென்னும் பிள்ளைத்திருநாமத்தை யுடையவன். அசத்தை அசத்தென்று கண்டு சத்தைத்தெரிசித்த மெய்கண்டதேவனென்னுஞ் சிறப்புப்பெயரை யுடையவன். பிறவியாகிய வலியபகையை வென்ற (ஸ்ரீநந்திகேச்சுரதேவர், சனற்குமாரபகவான், சத்தியஞானதரிசனிகள், பரஞ்சோதி மாமுனிக ளென்னும்) தபோதனர்களுடைய சீர்பாதங்களைச் சூடின மேம்பாட்டை யுடையவன் எ-று.

எனவே பரமேச்சுரன் ஸ்ரீநந்திகேசுர தேவர்க்கு அருளிச்செய்து தொகுத்துரைத்த பன்னிரண்டு கிரந்தத்தையும் பன்னிரண்டு சூத்திரமாக மொழிபெயர்த்துப் பொல்லாத பிள்ளையார் பிரகிடட்சத்தருளி செய்ய, அதற்கேற்ற உதாரண வெண்பா அவையடக்க மொன்றுட னெண்பத்து மூன்றாக வருளிச்செய்தவர் எ-ம்.

மொழி பெயர்த்தல் கிரந்தத்தைத் தமிழாகச் செய்தல்.

இதன்பொழிப்பு:— இடமகன்ற வுலகின்கண் மகத்தாகிய விருள்போக யாவரும் புகழப்பட்டவாதித்தன் வரினல்லது காட்சி யுண்டாகாத கண்போல, எங்கு நிறைந்துநின்ற பெரிய பெருமையுடைய கத்தாவாலே கண்டு, தன்னிடத் துண்டாகிய மூல மலத்தைக் கெடுத்து, அரிய துயரையுடைய வுடம்பிலே ஆன்

அருணந்திதேவர் சண்பைத்தலைவர் எனக் கூறப்படுதற்குக் காரணம் என்னை?

மாவை யாராய்ந்து கண்டு, பின்னொடுமுன் மலையாமல் நந்திகேசுரர் ருஷிகணங்களிற் சனற்குமார பகவானுக் கருளிச்செய்த சிவஞானபோதத்தைத் தமிழாக வருளிச்செய்தவன்; சுவேதவனனாகிய மெய்கண்ட தேவன்: தவரடி புனைந்த தலைமையோன் எ-று.

“தோன்றுதோற்றித் துறைபலமுடிப்பினுந், தான்றற் புகழ்தல்தகுதியன்றே” என்பதனால், நூற்செய்தவன் பாயிரஞ்செயற்பாலனல்லன். அதுசெய்வார் தன்னாசிரியனாதல், மாணாக்கனாதல், தன்னோ டொருங்கு கற்றோனாதலாம். தான் செய்யினும் பிறன்போலக் கூறல்வேண்டும். அதனால் இந்தப் பாயிரஞ்செய்வார் யாவரெனில், அவர்மாணாக்கராகிய இதன்வழி சிவஞானசித்தியென்னுநூலைச் செய்தாரும் நாற்பத்தொன்பது பெயரிற் சண்பைத்தலைவனாயனாருமாகிய அருணந்திதேவதம்பிரான்.

இதனுட் சிறப்புப்பாயிரம் பதினொன்றும் வருமாறு:—ஆக்கியோன்பெயர் சுவேதவனப்பெருமாளாகிய மெய்கண்டதேவன். வழி நந்திமுனிகணத்தளித்தது. எல்லை கேட்போரது பொருண்முடிவு. நூற்பெயர் சிவஞானபோதம். யாப்பு மொழிபெயர்த்தல். நுதலியபொருள் பதிபசுபாசங்களுணர்த்தல். கேட்போர் பொல்லாதபிள்ளையார். பயன்சுவாநுபூதியாகநேயத்தழுந்தல். காலம் சத்திநிபாதநிகழ்தல். களன் திருவெண்ணெய்நல்லூர். காரணம் போதமிகுத்தோர் தொகுத்தபேசமைக்கேபொருந்தினோ ரிவர்க்கன்றிக் கதிப்பாற்செல்ல வேதநெறியெனு மிவர்கட்கறிய வுணர்த்துதல். இத்தனையும் பாயிரமுரைக்கப்பட்டது.

சிறப்புப்பாயிர முடிந்தது.

சிவஞானமுனிவர் உரை.

சைவாகமங்களி னுளவாகிய நாற்பாதங்களுள் வைத்து ஞானபாதத் தோதிய பொருள்களை யாராயும் ஆராய்ச்சி இந்நூலின்க ணெடுத்துக்கொள்ளப்பட்டது. இது கேட்டலுறுவார்க்கு இதனாற்போந்த பயன் யாதோவெனவும், இது கேட்டற்குரியார் யாவரெனவும், இதனா னுதலப்படும் பொருள் யாதெனவும், இதனைப் பயப்பிக்குங் கருவியாய் இதற்குமுன் ஒருதலையா னுணர்தற்பால தியாதெனவும், இதனை வழங்குதற்கிட்டபெயர் யாதெனவும், இஃதியாண்டு வழங்குவதெனவும், இதன் முதனூல் யாதெனவும், இந்நூல் செய்தார் யாவரெனவும், பலவாற்றா னாசங்கை நிகழுமன்றே; அவ்வாசங்கை நீங்கி மனவெழுச்சி சேறற்பொருட்டு இந்நூன் முகத்துரைக்கப் படுவதாகிய சிறப்புப் பாயிரம்:—

இ - ள். மலர் தலை உலகின் மா இருள் துமியப் பலர் புகழ் ஞாயிறு படரின் அல்லதைக் காண்டல் செல்லாக் கண் போல். எ - து. விரிந்த விடத்தையுடைய ஞாலத்தின் கண்ணே துன்னிய பெரிய புறவிருள் கெடும்படி பல சமயத்தாரானும் புகழப்படுகின்ற பரிதியங்கடவுள் உதய கிரியினின்றும் போந்தாலன்றிக் காட்சி யெய்தமாட்டாத கண்ணொளிபோல, —அருந் துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி. எ - து. பொறுத்தற்கரிய துயரங்களுக்கெல்லாம் ஒருநிலைக்களமாய்ச் சத்த தாதுக்களாற் பொத்திய குரம்பையாகிய காணப்பட்ட உடம்பானே காணப்படாத ஆன்மாவையும் பரமான்மாவையும் அநுமான வளவையான் வைத்தாராய்ந்து அவற்றது தடத்த லக்கணமெனப்படும் பொதுவியல்புணர்ந்து,—கண் இருள் தீர்ந்து. எ - து. அவ்வுணர்ச்சியானே கருதி யுணரப்படும் அகவிருளாகிய ஆணவ மலத்தினின்று நீங்கி,—ஈண்டிய பெரும் பெ

யர்க் கடவுளிற் கண்டு. எ-து. அது நீங்கிய வழி எல்லா நூல்களுந் தன் பொருளேயாகத் திரண்டு கூடிய பெரும்பெயரெனப்படும் ஒரு வார்த்தையாகிய மகா வாக்கியத்தான் எடுத்தோதப்படும் முதற் கடவுளது திருவருளானே அப்பொருள்களது சொரூபவிலக்கணமெனப்படுஞ் சிறப்பியல்பை அநுபூதியிற் கண்டுணர்ந்து,—மயர்வு அற. எ-து. இம்முறையானே மயக்க வாசனையற்றுச் சிவாநுபவம் பெறுதற்பொருட்டு,—நந்தி முனி கணத்து அளித்த. எ-து. சீகண்டதேவர்பாற் கேட்டருளிய நந்திப்பெருமான் சனற்குமார முனிவன் முதலிய முனிவர்கணங்கட்கு முறையானே அளித்தருளப்பட்ட,—உயர் சிவஞானபோதம். எ-து. சரியை முதலிய மூன்று பாதப் பொருள்களை ஆராயு நூல்களின் மேற்பட்ட சிவஞானபோதமென்னும் வடநூலை,—உரைத்தோன். எ-து. மொழிபெயர்த்துக் கூறி வார்த்திகமெனப்படும் பொழிப்புரை செய்தோன்—பெண்ணைப் புனல் சூழ் வெண்ணெய்ச்சுவேதவனன் எ-து பெண்ணையாற்று நீராலே சூழப்பட்ட திருவெண்ணெய் நல்லூரின் அவதரித்தருளிய சுவேதவனப் பெருமானென்னும் பிள்ளைத் திருநாமமுடையான்—பொய் கண்டு அகன்ற மெய்கண்டதேவன். எ-து. பொய்ச்சமயங்களின் பொருள் இதுவிதுவென்று கண்டு கழிப்பித்த காரணத்தாற் பெற்ற மெய்கண்ட தேவனென்னுஞ் சிறப்புத் திருநாமமுடையான்—பவம் நனி வன்பகை கடந்த தவர் அடி புனைந்த தலைமையோன். எ-து. பிறவியாகிய மிக்க வலிய பகையினை வென்ற தவத்தோர் தனது திருவடியைப் புனைந்து கோடற்கேதுவாகிய தலைமைப் பாட்டினையுடையோன் என்றவாறு.

படரிற் காண்டல்செல்லுங் கண்ணெனற் பாலதனை எதிர் மறைமுகத்தாற் கூறினார், இன்றியமையாமை விளக்குதற்கு. இ

ப்பொருள் பற்றிக் கண்மேல் வைத்துக் கூறினாரேனும், உவமேயப் பொருட்கேற்பக் காண்டல்சேறற்குப் படர்ந்த ஞாயிறு போலென்பது கருத்தாகக் கொள்க.

இருட்கேட்டிற்கும் நிருவிகற்பஞ் சவிகற்பமென்னும் இருவகைக் காட்சிக்கும் ஞாயிறு இன்றியமையாச் சிறப்பிற்றாயவாறுபோல; மலத்தீர்விற்கும், ஆராய்ச்சி அநுபூதியென்னும் இருவகை யுணர்விற்கும், இன்றியமையாச் சிறப்பிற்றாயது இந்நூலென்பார், துமியப் படரினல்லதைக் காண்டல் செல்லாக் கண்போனுடித் தீர்ந்து கண்டு மயர்வற வளித்த சிவஞானபோதமென்றார்.

தலைமைபற்றி அருந்துயர்க்குரம்பையி னென்றாரேனும், இனம்பற்றிக் கரணம் புவன முதலியனவும் உடன் கொள்ளப்படும்.

அருந்துயர்க் குரம்பையி னுடப்படுவதாகிய பொதுவியல்பு முன்னாறு சூத்திரத்தானும், பெரும்பெயர்ப்பொருளிற் காணப்படுவதாகிய சிறப்பியல்பு பின்னாறு சூத்திரத்தானுமோதுப.

நாடியெனவே அநுமானவளவையா னென்பதூஉம், கண்டெனவே அநுபூதியி லென்பதூஉம், தாமே போதரும்.

பொதுவியல்பு அளவைமுகத்தானும் இலக்கணமுகத்தானுங் கூறப்பட்டுக் கேட்டல் சிந்தித்தல் என்னும் இருதிறத் தானுணரப்படும்; சிறப்பியல்பு சாதநமுகத்தானும் பயன்முகத்தானுங் கூறப்பட்டுக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டையென்னு நான்குதிறத்தா னுணரப்படும்.

இஃதென்சொல்லிய வாறோவெனின்:—இவ்விருவகை யியல்பும் வேறு வேறு கூறும் ஆகமங்களின் பொருளொருமை உணரமாட்டாது ஓரோ வொன்றேபற்றி ஐக்கவாதமுதற் பலதிற

த்தான் வேறுபட்டுத் தம்முண் மாறுகொண்டு மயங்குவார்க்கு அங்ஙனமயங்காது அவற்றின் பொருளொருமை யுணர்தற்கு எழுந்தது இந்நூலென்றவாறாயிற்று. சிவஞானபோதமென்பதூஉம் இக்காரணத்தாற் பெற்ற பெயரென்பது வடமொழிச் சிவஞானபோதத் திறுதிச் சூத்திரத்தோதியவாறு பற்றியுணர்க.

சரியைமுதலிய மூன்று பாதப்பொருளை ஆராயு நூல்களாவன; சோமசம்புபத்ததி முதலாயின. அந்நூல்களின் மேற்பட்ட சிவஞானபோதமெனவே, அந்நூல்களுணர்ந்த பின்னர் இந்நூல் கேட்கற்பாற்றென்பது பெறப்பட்டது; படவே, முன்னர்த் தீக்கையுற்றுச் சிவாகமங்களை யோதி அதன்பின்னர்ச் சரியாபாத முதலியவற்றை ஆராயுநூல்களை முறையே கேட்டு அவ்வாறொழுகி மனந்தூயராய் நித்தியாநித்திய வுணர்வு தோன்றிப் பிறவிக்கஞ்சி வீடுபேற்றின் அவாமிக்குடையராய் வந்த அதிகாரிகளுக்கு இந்நூலுணர்த்துக வென்பது போந்ததெனக் கொள்க.

"உயர் சிவஞானபோதமெனவே யாப்பும் கேட்போரும் நுதலிய பொருளும் நூற்பெயரும், நாடித் தீர்ந்து கண்டு மயர்வறவெனவே நுதலிய பொருளின்வகையும் பயனும், நந்தி முனிகணத்தளித்தவெனவே வழியும், வெண்ணெய்ச்சுவேதவனன மெய்கண்டதேவனெனவே ஆக்கியோன் பெயரும், தமிழ் வழங்கு நிலமே இந்நூல் வழங்குநிலமென எல்லையும் போந்தவாறுணர்க. வடநூலார் யாப்பை ஆனந்தரியமென்றும், நுதலிய பொருளை விடயமென்றும், கேட்போரை அதிகாரிகளென்றும், பயனைப் பிரயோசனமென்றுங் கூறுப. யாப்பு - சம்பந்தமென்பாருமுளர்.

* இவ்வுரையாசிரியராகிய சிவஞானமுனிவர் இப்பாயிரத்தை இந்நூற்கு முதற்கண்வைத்து, தமதுரைக்குக் காப்பாகிய தெய்வம் வாழ்த்துதலை தமது ஆசிரியற் மேற்கூறி இப்பாயிரத்திற்கு முன்வைத்திருக்கின்றர்.

அது:—

"கயிலாயபரம்பரையிற் சிவஞானபோதநெறி காட்டும்வெண்ணெய்ப், பயில்வாய்மைமெய்கண்டான் சந்ததிக்கோர்மெய்ஞ்ஞானபாநுவாகிக், குயிலாரும்பொழிற்றிருவாவடுதுறைவாழ் குருநமச்சிவாயதேவன், சயிலாதிமரபுடையோன் றிருமரபுநீடூழி தழைக்கமாதோ" என்பதாம்.

வெண்பா.

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை யெமையிகழார் - தம்மை
யுணரா ருணரா ருடங்கிஐந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

தம்மையுணர்ந்து எ-து. தம்மைத் (தம்முடையதேகத்துக் கந்நியமென்பதனை) யறிந்து.

அது ஆன்மதரிசநம். ஆன்மதரிசநம் பண்ணுமிடத்துப் பாசதரிசநம்பண்ணி நீக்கவேண்டுதலிற் பாசதரிசநமுங் கூறினராயிற்று.

தமையுடைய தன்னுணர்வார் எ-து. தம்மை யடிமையாகவுடைய சிவனை யுமறிவார்.

இது சிவதரிசநம். எனவே பதிபசுபாசங்களையுணர்ந்த ஞானவான்களென்பதாயிற்று.

எம்மையுடைமையெமை யிகழார் எ-து. (அவர்கள் சுவாநுபூதியாகிய ஞேயத்தழுந்திச் சிவனோடொன்றுபட்டவர்களாதலால்) எம்மையடிமையாக வுடையவர்கள்; யான்சொல்லு நூலுக்குக் குற்றஞ்சொல்லார்கள்.

தம்மையுணரா ருணரார் எ-து. அத்தன்மையாகிய தம்மையறியாதவர்கள், (பாசபந்தியாய் நிற்கின்ற முறைமையும், அந்தப்பாசநீங்கிச் சிவனுடனின்றுணர்த்துகின்ற முறைமையும்,) அறியார்கள். ஆகையால்,

உடங்கியைந்து தம்மிற் புணராமை கேளாம் புறன் எ-து. அவர்களுடன்கூடிப் பொருந்தியிராதபடியாலே யவர்கள் வாக்காற் குற்றங் கேட்பதில்லை எ-று.

என்றது, வேதாகமபுராணங்களின் பொருளுணர்ந்த ஞானவான்களிந்நூலிற் குற்றமுண்டாயினுங் குற்றந்தீர்த்துக் கொள்வரென்றும், உலகநூலை யுணர்ந்தோர்க்கிப்பொருடெரியாமையால் அவர்கள் சொல்லுங் குற்றம் குற்றமில்லையென்றும், இந்நூல் ஞானவான்களுடனல்லது பிறருடன் கூறுவதாகாதென்பது முணர்த்தவே, அவையடக்க முணர்த்தினாராயிற்று.

இது கர்ணபரம்பரையாய்க் குருபரம்பரையாய் வருநூலாதலா லிச்சந்தானத்தார்க்கன்றிப் பிறர்க்கிப்பொருள் தெரியாதென்பதூஉங் கூறிற்றென்பது முணர்க.

இது அவையடக்கம்.

சிவஞானமுனிவர் உரை.

இஃது அவையடக்கங் கூறுமுகத்தானே ஈண்டெடுத்துக் கொண்ட சித்தாந்தசைவத்தி னுயர்வும் ஏனைச்சமயத்தார்களி ழிபுங் கூறுகின்றது.

இ - ள். தம்மை உணர்ந்து தமை உடைய தன் உணர்வார். எ - து. உடைப்பொருளாகிய தம்மியல்பினை உணர்ந்து தம்மையுடையானாகிய தலைவனையுணருஞ் சித்தாந்த சைவர்— எம்மை உடைமை எமை இகழார். எ-து. தமக்குடைப்பொருளாகிய எம்மையுடையராகலின் எம்மைக்(குற்றங்களைக்கிக் குணங்கொண்டு கோதாட்டுவதன்றி) இகழ்தல் செய்யார்; ஆகலான் எம்மாற் செய்யப்படு நூலையும் அவ்வாறு கைக்கொள்வர்.— தம்மை உணரார் உணரார். எ-து. அங்ஙனந் தம்மையுணராதார் தம்மையுடையானாகிய தலைவனையு முணரார். ஆகலான் —உடங்கு இயைந்து தம்மிற் புணராமை. எ-து. அவர் ஒருங்கே குழீஇக்கொண்டு தம்மிற்றாமே சேராது முரணுதலால்,— புறன் கேளாம். எ-து. அவர் எம்மையும் எம்மாற்செய்யப்படு நூலையும் இகழ்ந்துரைக்கும் மொழியை யாம் பொருளாகக் கொள்ளாம். எ-று.

ஆகலான் எம்மாற்செய்யப்படுநூலையும் அவ்வாறு கைக்கொள்வரென்பது குறிப்பெச்சம்.

தன்னையென்னும் இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது.

உடைமை புணராமை என்புழி இன்னுருபு விரித்துரைக்க.

தம்மையுணராரெனப் பொதுப்படக் கூறுதலானே, தமொரு பொருளுண்டென்பதே உணராத உலோகாயதரும், தம்மைக்

குணிப்பொருளென் றுணராத புத்தர் சாங்கியர் மாயாவாதிகளும், தம்மை முதல்வனுக்கு உடைப்பொருளென் றுணராத ஏனைச்சமயத்தாரும் அடங்குவர். பாஞ்சராத்திரிகளும் சிவாத்துவித சைவரும், தம்மை உடைப்பொருளெனக் கொள்ளினும், அவருட் பாஞ்சராத்திரிகள் உடைப்பொருளாகிய தமக்கு அணுப்பரிமாணங் கோடலானும், உடையானுக்குப் பரிணாமங்கூறுதலானும், உடையானல்லாதானை உடையானென மயங்கிக்கோடலானும், சிவாத்துவிதசைவர் உடையானது சிற்சத்திக்குப் பரிணாமங்கூறுதலானும், பிறவாற்றானும், அவருந் தம்மை உணராரேயென்பது.

புறன்-புறச்சமயம்பற்றி இகழ்ந்துரைக்குமொழியும் புறங்கூற்று மொழியுமென்பது இரட்டுறமொழிதலென்னுமுத்தியாற் கொள்க. புறங்கூற்றுமொழியாவது முக்கூற்றுப் புறச்சமயங்களின் வேறுள பாடாணவாத சைவர் முதலியோர் முன்னன்றிப் புறத்தே இகழ்ந்துகூறு மொழியென்க.

க — சூத்திரம்.

அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோன்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்தமாதி யென்மனார் புலவர்.

இதன் கருத்து:—பிரபஞ்ச மாயாமலத்திலே தோன்றி யொடுங்குமென்பதூஉம், அது ஒரு கர்த்தாவாலொழிந் துண்டாகாதென்பதூஉம், கூறுகின்றது.

இ-ள். அவனவளதுவெனுமவை எ-து. அவனென்றும் அவளென்றுஞ் சுட்டப்பட்ட உயர்திணையும், அதுவென்று சுட்டப்பட்ட அஃறிணையுமாகிய அவை.

மூவினைமையில் எ-து. சிருட்டி திதி சங்காரமாகிய மூன்று தொழிலை யுடைத்தாகி வருதலாலே.

தோன்றிய திதியே யொடுங்கிமலத் துளதாம் எ-து. (மாயாமலத்தின் கண்ணே) தோன்றி நின்ற முறைமையே யொடுங்கி மீளவு முண்டாம்.

அந்தமாதி யென்மனார் புலவர் எ-து. (அத்தொழில்கள் தானே யுண்டாகாது; அதற்குக் கர்த்தா வொருவன்) அந்தத்தி னுள்ளானென்று சொல்வார்கள், வேதாகமபுராணங்களை யுணர்ந்த ஞானவான்கள் எ-று.

ஆதி = கர்த்தா, அந்தம் = அந்தத்திலுள்ளான் எ-து. எக்காலத்தும் அழிவுபடாத சிற்சொரூபத்தையுடையானென்றதாம். சங்காரகர்த்தாவென்றுமாம்.

"ஒருவனோடொருத்தியொன்றென் றுரைத்திடுமுலகமெல்லாம், வருமுறைவந்துநின்றுபோவதுமாதலாலே, தருபவனொருவன் வேண்டுந்தான்முதலீறுமாகி, மருவிடுமநாதிமுத்த சித்துருமன்னிநின்றே" என்னும்வழிநூலானுமுணர்க. சித்-க-கூ, க—செ.

இப்பொருள் சாத்திரத்தானுஞ், சம்பிரதாயத்தானும், அளவைப்பிரமாணங்களானுமுணர்த்துமாறறிக.

சாத்திரமுஞ் சம்பிரதாயமுமேயன்றி யளவையென்பதென்னையெனின்? சாத்திரமும் அளவைகளையொழிந் துணர்த்தமாட்டாதாதலின் அது நூற்கின்றியமையாதது.

உ-ம். "அருளினாலாகமத்தே யறியலாமளவையாலுந், தெருளலாஞ் சிவனை ஞானச் செய்தியாற்சிந்தையுள்ளே, மருளெலா நீங்கிக்கண்டு வாழலாம்பிறவிமாயா, விருளெலா மிரிக்கலாகு மடியரோடிருக்கலாமே". எ-ம். "மறையினாலயனால் மாலால் மனத்தினால்வாக்கான் மற்றுங், குறைவிலாவளவையாலுங் கூறொணாதாகிநின்ற, விறைவனார் கமலபாத மின்றியானியம்புந்தன்மை, நிறையினார்குணத்தோர்க்கெல்லா நகையினை நிறுத்துமன்றே" எ-ம். சித் - சுப - பாயி, சு—ரு—செ.

அளவைப்பிரமாணங்க ளின்றியமையாமல் வருமாறு காண்க.

அளவை யிதன்வழிநூலான் வந்தவாறுணர்க.

சிவஞானமுனிவர் உரை.

ஈண்டு ஆசிரியர், முதனூலிற் கூறியவாறே சிவாகமங்களினோதப்படும் ஞானபாதப்பொருளெல்லாவற்றையும் பொதுஉண்மையென்று இரண்டாகத்தொகுத்து, பிரமாணவியல் இலக்கணவியல் சாதனவியல் பயனியலென நால்வகைப்படுத்து, பிரமாணவியல் மூன்றுபாதத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கண்

உலகிற்கு முதற்கடவுள் சிறப்புவகையானுண்டென்னும் ஆகமப்பிரமாணத்தை வலியுறுத்துவதாய அநுமானப்பிரமாணங் கூறுகின்றார்.

இதன் பொழிப்புரைத்துக் கொள்க. என ஆசிரியர் கூணைதந்தமையின், கண்ணழித்துரை பற்றிச் சூத்திரத்திற்குப் பதப்பொருள் கூறுதும்.

இ-ள்: அவன் அவள் அது எனும் அவை-புலவர்.எ-து. அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் இவ்வாறுபகுத்துப் பலவாய்ச்சுட்டி யுணரப்படுஞ் சொல்லும் பொருளுமாய இருகூற்றுப் பிரபஞ்சத்தொகுதி, தோற்றம் நிலை இறுதியென்னும் முத்தொழிலுடைமையால்; ஒருவனாற் றோற்றப்பட்டதாய உள்பொருளேயாம். அது தோன்றுங்கால் தாளெடுங்குதற்கு ஏதுவாய் நின்ற கடவுளினின்றும் சகசமல நீங்காமையால், அது நீங்குதற்பொருட்டு மீளத் தோன்றுவதாம். இவ்வாறாகலின், சங்காரத்தொழிலைச்செய்யுங் கடவுளே உலகிற்கு முதற்கடவுள்; ஏனையோர் அன்னரல்லர் எனக் கூறுவர் அளவைநூலுணர்ந்தோர்.

அவை -தொகுதி; சுட்டுப்பெயரெனக்கொள்ளின், உளவெனப்பிரித்துப் பயனிலையாக்கித், தாமென்பதனை அசைநிலையாக வைத்துரைத்து, ஆக்கச்சொல் வருவித்துக்கொள்க.

வினைமை வினையுடைமை.

தோன்றியவென்னாது தோற்றியவெனப் பிறவினைவாய்பாட்டானோதுதலின், அதற்குரிய வினைமுதல் அவாய்நிலையான் வந்தது. தோன்றியவென்னும் பெயரெச்சந் திதியென்னுஞ் செயப்படுபொருட்பெயர் கொண்டது. திதியா யொருவனாற் றோற்றப்பட்டதென்பார் தோற்றிய திதியென்றார். திதியென்றது ஈண்டு உள்பொருளென்னுந் துணையாய் நின்றது.

மூவினையுடைமையால் உள்பொருளாதலும், அவ்விரண்டுமுடைமையால் நிமித்தகாரணனையுடைத்தாதலுந் துணியப்படுமென்பார், மூவினைமையிற் றோற்றிய திதியேயென்றார்.

ஏகாரந் தேற்றம். ஒடுங்கியென்பது பெயர். உருபுகள் தொக்குநின்றன.

அந்தத்தைச்செய்யுங் கடவுளை அந்தமென்றது உபசாரம்.

காணப்பட்டவுலகாற் காணப்படாத கடவுட் குண்மைகூறவேண்டுதலின், தோற்றிய திதியேயெனவும், ஒடுங்கியுளதாமெனவும், உலகின்மேல்வைத்துக் கூறினார். கருத்துரையுட் கூறியதும் அது நோக்கி.

அளவை வருமாறு:— சிவஞானசித்தியார்.

அளவைகாண்டல் கருதலுரை யபாவம்பொருளொப் பா
றென்ப, ரளவைமேலு மொழிபுண்மை யைதிகத்தோடியல்
பெனநாள், களவைகாண்பா ரவையிற்றின் மேலுமறைவ ரவை
யெல்லா, மளவைகாண்டல் கருதலுரை யென்றிம்மூன்றி ன
டங்கிடுமே.

(இ-ள்.) அளவை - அளவைப்பிரமாணமாவது.

காண்டல்—பிரத்தியக்ஷம். [பிரதி-அக்ஷம்=பிரத்தியக்ஷம். அக்ஷம் - இந்திரியம், பிரதி-விஷயம்= இந்திரிய விஷயம்.]

அதாவது, கண் - செவி - வாய் - மூக்கு - மெய் இவ்வைந்திந்திரியங்களும் தத்தமக்கு விஷயமான உருபம் - சத்தம் - இரதம் - கந்தம்-பரிச மிவையிற்றை யுணர்தல். [அக்ஷம் - கண்; பிரதி - அது காண்கிற வொளி.] எனினுமாம்.

கருதல் — அநுமானம்.

அதாவது, அநுமானத்தாலேதோற்று மநுமேயத்தையறிதல்,

உரை - ஆகமம்.

இவை மூன்றும் மேல்விரித்துரைப்பதனாலறிக.

அபாவம் - அபாவம். [பாவம் = உள்ளது, அபாவம் = இல்லாதது] அது இல்லதனையில்லையென்றல்.

அஃதாவது, உலகத்தாரில்லையென்று மதித்தபொருளைத் தானுமில்லையென்றுகோடல். அஃதென்போலவெனில்? முயற்கோடில்லை யென்றவழி யதனையுண்டோவென்று மபங்காமற் றானுமில்லையென்றுகோடல். அது சித்தினிடத்து அசித்தறியாதென்றால் அஃதொக்குமென்றுகோடல்.

பொருள் - அருத்தாபத்தி.

அஃதாவது, கங்கையிலே யிடைச்சேரியிருப்பதென்றால் ஆற்றுக்குள்ளொன்றுணராமல் அதன் கரையிலே யென்றுணரலாம். அது உடம்பறியுமென்றால் உடம்புசடமாகையாலறியாது, உடம்பினுள்ளே ஆன்மா நின்றறிகின்றதென வுணர்தல்.

ஒப்பு - உவமம் - உவமானமென்பதுமது. [உவமம் - ஒன்றோடொன்றையொப்புறுத்தல்.]

அஃதாவது, ஆமாவை ஆப்போன்றிருக்குமென்றுகேட்டவன் அதனைக்காட்டகத்துக்கண்டபொழுதுஅந்த ஆவோடுவமித்துப் பார்த்துணர்தலாம். அது சாத்திரம் சம்பிரதாயங்களாற்கேட்ட பொருளை யுவமையாலறிதல். அன்றியும் உவமங்காட்டியுரைப்பினுமாம். அதுஇன்னதின்னதுபோலு மென்றலாம். மாயையும் பூதாதியும் மண்ணுங் கடமும்போலு மென்றும், ஆன்மாவு மூலமலமும் செம்புங்காளிதமும் போலுமென்றும், பதியினுடைய கிருத்தியம் ஆதித்தனைப்போலு மென்றும் பொருளுரைப்பினுமமையும்.

ஆறு என்பர் அளவை - அளவையாறு மொருவர் சொன்ன அடைவென்று சொல்லுவார்கள்.

மேலும் - இவையொழிந்தும்.

ஒழிபு - மீட்சிமொழி. (பாரிசேடம்) அஃதாவது, கீழைச்சேரி தோற்றதென்றால், மேலைச்சேரிவென்றதென்பது சொல்லாமலுணர்தல். அது ஒருவன் முத்திபெற்றானென்றால் பாசச்சேதம்பண்ணினானென்பது சொல்லாமலறிதல்.

[பாரிசேஷமாவது, பாரித்துச் சேஷித்தல் = கூட்டிக்கழித்தல்.] அஃதாவது, மூவரிருந்தவிடத்தே ஒரு களவைநாடில், நாங்களிருவருமல்லவென்றால் நின்றவன் கள்வனாவன். அது போகம் பதி பசு பாசங்களில் யாதுக்கோவென்றவழிப் பதிக்குமன்று பாசத்துக்குமன்றென்றாற் பசுவுக்காமெனவறிதல்.

உண்மை - சம்பவம்.

அஃதாவது, ஒருகல் நிறைபையிர்க்குதென்றால் அதுகாக்குமெனவறிதல். ஒருவன் சந்நிதியிலே பிரபஞ்சங் கிருத்தியப்பட்டு வருகுதென்றால், அவ னித்த முத்த சுத்தனாகி நிராதாரனாகிச் சிற்சொரூபனாகி யிருக்கின்ற பரமேஸ்வரனெனவறிதல்.

ஐதிகம் - ஐதிகம்.

அஃதாவது, உலகத்தா ரொரு மரத்தின்கண்ணே பேயுண்டென்றாற் றானு மஃதுண்டென்றுகோடலன்றி உண்டோவில்லையோவென் றையப்படாதொழிதல். உலகத்தார் சாத்திரங்களாலே மகமேருமுதலாயின வுண்டென்றாற்றானுமுண்டென்று கொள்ளுதலன்றி உண்டோவில்லையோவென்றையப்படாதொழிதல்.

ஒடு - என்னொடு.

இயல்பு - இயைபு.

[இயைபெனினும் - சுபாவமெனினும் - தன்மையெனினுமொக்கும்.] ஆனைமே லிருந்தவன் தோட்டியுடையவனென்றால்

பிறிதோர் கோட்டியென் றுணராமல் யானைத் தோட்டியென் றுணர்ந் ததனைக் கொடுத்தல். என்றது, ஒரு சொல்பலவாகியவிடத் ததற்கேற்பனவறிந்து பொருள்கூறுதலாம்.சிவமென்பது பலபொருள்படுமாதலால் அஃதறிந்துகூறுதல். அஃதாவது "தத்துவமெண்மூன்றுஞ்சென் றுன்மதத்துவத்தொடுங்கும், வித்தையிலொடுங்குமாறு சிவத்தினிலொடுங்குமூன்று,நித்தத்தத்துவமிம்மூன்று மென்பர்களிரண்டுநின்ற, சுத்தமாஞ்சிவத்தொடுங்குந் தோற்றமுமதுபோலாகும்"—என்றதன்கண் சிவமென்றதனைச் சுத்தமாயையெனக் கொள்ளுதலாம். அப்படிவருவனகாண்க. சித் - உ - சூ, எஉ—செ.

எனநான்களவைகாண்பார் - என்றிப்படியும் நாலளவை சொல்வார்கள்.

அவையிற்றின்மேலு மறைவர் - அவைபத்து மொழிந்துவேறுஞ் சிலபிரமாணங்கள் சொல்வார்கள்.

அவையெல்லா மளவை காண்டல் கருதலுரை பென்றிம்மூன்றி னடங்கிடுமே - இந்தப்பிரகாரத்தின் மேற்சொல்லப்பட்ட பிரமாணங்களெல்லாம் பிரத்தியக்ஷம் அநுமானம் ஆகமம் என்னு மூன்றினு ளடங்கும். எ-று.

பூர்வக்காட்சி யநுமானமுதலிய மேல்வருமாற்றுலறிக. இவை யநுமானத்தே யடங்குமாறறிக. மேலுமிப்படி வந்துழிக்காண்க. (௬)

மாசறுகாட்சியையந் திரிவின்றிவிகற்பமுன்னு, தாசறவறிவதாகு மநுமானமவிநாபாவம், பேசுறுமேதுச்கொண்டு மறைபொருள் பெறுவதாகும், காசறுமுரையிம்மானத் தடங்கிடாப் பொருளைக்காட்டும்.

இ-ள். மாசறுகாட்சியையந் திரிவின்றி விகற்பமுன்று தாசறவறிவதாகும் - குற்றமற்ற பிரத்தியக்ஷமாவது, ஐயமுந் திரிவுமின்றி விகற்பத்தினுஞ் செலாமற் குற்றமற வறிவதாகும்.

அநுமான மவிநாபாவம் பேசுறு மேதுக்கொண்டு மறைபொருள் பெறுவதாகும். - [விநு=நீங்குதல், அவிநு=நீக்கமற்றது : பாவம் உள்ளது] அநுமானப் பிரமாணமாவது, -நீக்கமற்றதா யுள்ளதாகச்சொல்லப்பட்ட வேதுக்கொண்டு மறைந்த பொருளைக் காணப்படுவதாகும்.

நீக்கமாகச் சொல்லப்பட்ட வேதுக்களு முளவோவென்னில்? அவையுஞ் சிலவுள. அவை பொருந்துவதும், பொருந்தாதுமாய்வரும் அவை வருமாறு:—

ஏதுவென்றும், பொதுவென்றும், எச்சமென்றும், முதலென்றும், நான்குவகையாம்.

ஏது = புகையைக்கண்டு நெருப்புண்டென வறிதல்.

அவை தப்பவருவதுமுண்டு தப்பாமல் வருவதுமுண்டு. தப்பாமல்வருவது நெருப்பைவிட்டுநீங்காமல் மறுமைப்பட்டுப் புலப்படும் புகையாகிய காரணவநுமானத்தாலே யநுமேயத்தை யறிதல்.

பொது = யானைமேலிருந்தோன் காளமூத, அந்தவோசை கேட்டவன் சாதகமாயுள்ளதோ ரொற்றுமையாயுள்ள யானைக் கோரொற்றுமைப்பா டின்றாவிருந்தும், அந்தக்காளவோசைக் கேட்குந்தோறும் அந்தவிடத்தே யானையுண்டெனவறிதல்.

இவையிற்றிற் சாமானிய வநுமானமாகிய காளம் யானையொழியவூதலுங்கூடும். [பொதுவெனினும் சாமானியமெனினு மொக்கும்.]

எச்சம்=ஆற்றிலே வெள்ளம்வர அந்தக்காரியவேதுவைக் கொண்டறுதியிட்டிதற்குக்காரணமாகிய மழை மலைத்தலையின் கண்ணே யுண்டென வுணர்தல்.

[காரியமெனினு மெச்சமெனினு மொக்கும்.] காரியவநுமானமாகிய வெள்ளம் மலையில் மேகம் பெய்யாதொழிய வணையுடைந்து வரவுங்கூடும்.

முதல்=சூன்முதிர்ந்தமுகிலைக்கண்டு அச்சூல் காரணவேதுவாகக் காரியமாயுள்ள மழைபெய்யுமென் றுணர்தல். [முதலெனினுங் காரணமெனினுமொக்கும்.] காரணவநுமானமாகிய சூல்முதிர்ந்தமேகம் பெய்யாதொழிபவுங்கூடும்.

நின்றவநுமானங்களெல்லாமுங் கருதியுணரப்படுதலாற் கருத்தளவாகி யநுமானத்துளடங்கும்.

புகையுங்காளவோசையும் நிகழ்காலம் - வெள்ளம்வரவு இறந்தகாலம் - முகில்எதிர்காலம்.

காசறு முரை யிம்மானத் தடங்கிடாப் பொருளைக் காட்டும் - குற்றமற்ற சாத்திரப்பிரமாண மிந்தவநுமானத்து ளடங்காதபொருள்களைக் காட்டும். எ-று.

இவையிற்றுக்கு மேல்வரும் புறனடையடக்கங்களில் விரிக்குமாற்றுலறிக. (உ)

கண்டபொருளையிரட்டுறவே கருதலையந்திரியவே, கொண்டறிரியாம்பேர்சாதி குணமேகன்மம்பொருளெனவைந், துண்டவிகற்பவ்வுணர்வினுக்குப் பொருளினுண்மை மாத்திரத்தின் விண்டலில்லாவறிவாகும் விகற்பமில்லாக்காட்சியே.

இ-ள். கண்ட பொருளை யிரட்டுரவே கருதலையம் - காணத்தக்கதொருபொருளை யிரண்டுபடக்கருதல் ஐயக்காட்சியாம்

அது குற்றிகொல்லோ மகன்கொல்லோ தோன்றுகின்ற வுருவென்றல். அஃதாவது, பிரபஞ்ச மொருவன்படைக்கப்பட்டதோ ? தானேயுண்டானதோ ? என்றையப்படுதல். அன்றியும், சங்கரிப்புண்ட பிரபஞ்சம் சிவனிடத்தே யொடுங்குகின்றதோ? மாயையினிடத்தே யொடுங்குகின்றதோ? என் றையப்படுதலுமாம்.

திரியவே காண்டல் திரிவாம் - பிரபஞ்சந் தானேயுண்டானதென்றுஞ் சிவனிடத்தே யொடுங்குமென்றுங் கோடல் திரிபுக்காட்சியாம்.

திரிபுக்காட்சியாவது உண்மைப்பொருள் வேறுபடக்கோடல்.

பேர்சாதிகுணமே கன்மம் பொருளெனவைந்துண் டவ்விகற்பவுணர்வினுக்கு எ-து. விகற்பித்தறியுமறிவுக் கிது இன்ன பெயரையுடைத்தென்றும், இன்ன சாதியிலேயென்றும், இன்ன குணமுடைத்தென்றும், இன்னதொழிலுடைத்தென்றும், இன்னநிறமுடைத்தென்று முண்டாகும்.

விகற்பம் - வேறுபடுதல். பொருளென்பதற்குப் பேர்சாதிகுணங்கன்மம் ஆகியநாலையுமுடைய மூலம் பொருளென்றும்.

பொருளினுண்மை மாத்திரத்தின் விண்டலில்லாவறிவாகும் விகற்பமில்லாக் காட்சியே - அவையிற்றினையுடைய வகனது சொரூபமாத்திரத்தை யொருமாத்திரையிலே பகுத்தறியாமல் அறிவதாகும் விகற்பமில்லாக்காட்சி. எ-று.

தற்பிரியா பாவம் - அப்பிராந்தி. அது, மூன்றுகாலமுமின்றி தன்மை முன்னிலை படர்க்கையின்றிப் பெயர் முதலாயினவின்றித் தன்னறிகாட்சி. அது சுவாநுபூதியாக வுணர்வதென்

றும். தவமிக்காரோயதற்குச் சான்றென்பதாம். "கண்டவர் விண்டிலர்" என்பதூஉமது. (௩)

பாண்டிப் பெருமாள் பதவுரை.

ஐயம் - பசுவோ மரையோ என ஐயப்படுதல்.

திரிபு - பழுதையைப் பாம்பெனவும், இப்பியை வெள்ளி எனவும், திரிபாகக் கொள்ளல்.

விகற்பக்காட்சி - சவிகற்பக்காட்சி.

விகற்பமில்லாக்காட்சி - நிர்விகற்பக்காட்சி.

காண்டல்வாயில் மனந்தன்வே தனையோடியோகக் காட்சியென, வீண்டுநான்கா மநுமானந் தனக்கும்பிறர்க்குமென்றிரண்டாம், மாண்டவுரை தந்திரமந்திரத்தோ டுபதேசச்சொலெனமூன்றாம், பூண்டவளவைக் கெதிர்புலன்றன் னியல்பு பொதுவென் றிரண்டாமே.

இ-ள். காண்டல் - பிரத்தியட்சம். அஃதாவது,

வாயில்- இந்திரியப் பிரத்தியட்சம்

மனம் - மானதப்பிரத்தியட்சம்

தன்வேதனை - ஸ்வவேதனாப்பிரத்தியட்சம்

ஓடு - எண்ணொடு

யோகக்காட்சி - யோகப்பிரத்தியட்சம்

எனவீண்டு நான்காம் - என்று நால்வகையாம்.

காட்சி யெவ்விடத்துங் கூட்டுக.

× அநுமானம் தனக்கும் பிறர்க்கு மென்றிரண்டாம்-அநுமானமாவது, அநுமேயத்தை யதற்கேற்றவுறுப்புக்கொண்டு தானறிதலும் பிறர்க்கறிவித்தலுமென விரண்டு வகையாம்.

மாண்டவுரை தந்திரமந்திரத்தோ டுபதேசச் சொல்லென மூன்றும் - மாட்சிமையையுடைய ஆகமப்பிரமாணம் தந்திரகலையென்றும், மந்திரகலையென்றும், உபதேசகலையென்றும், மூன்று வகையாம்.

பூண்டவளவைக்கெதிர்புலன் + தன்னியல்பு பொதுவென் றிரண்டாமே - இப்படிச்சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கு ஏற்பட்டபிரமேயம் தன்னியல்பென்றும் பொது வியல்பென்று மிரண்டாம். எ-று.

எதிர்தல்—தோன்றுதல், புலம் — பிரமேயம்=தோன்றும் பிரமேயம். இவைமேல் விரிக்குமாற்றாலறிக. (சு)

பாண்டிப்பெருமாள் பதவுரை.

× தன்பொருட்டநுமானம், பிறர்பொருட்டநுமானம் = அவை, ஸ்வார்த்தாநுமானம், பரார்த்தாநுமானம் என்னவுமாம்.

+ தன்னியல்பு, பொதுவியல்பு = தற்சுபாவம், சாமானிய சுபாவம் என்னவுமாம்.

அந்நிய சாதியுந் தன்சாதியு மகன்றுநிற்றல், தன்னியல் பன்னிடத்தைத் தவிர்ந்துதன் சாதிக்கொத்தல், துன்னிய பொதுவியற்கை சொன்னவிவ் விரண்டினுள்ளே, மன்னிய பொருள்கள்யாவு மடங்கிடு மானமுற்றால்.

இ-ள். அந்நியசாதியுந் தன்சாதியு மகன்று நிற்றல் தன்னியல்பு - தனக்கந்நியமான சாதியையும், தன்னுடைய சாதியையும் நீங்கி, தானொரு தலைமைபெற்று நிற்றல்; தன்னுவுண்டாகிய வியல்பாம்.

அஃதாவது, மா என்பது ஒருமரந் தனக்கந்நியமான இருப்பைமரத்தினுங் கூடாமல், தன்சாதியாகிய மாமரத்தினு நில்லாமல், தனக்குத் தலைமையுண்டாகிய தேமாவென்று பேர்பெறுதலாம்.

இனி, சொன்னவிவ் விரண்டினுள்ளே மன்னிய பொருள்களியாவு மடங்கிடு மானமுற்றால் (என்று கூறுதலால்) பதிபசு பாச மூன்று மிவ்வா றுமாறுணர்க. மானமுற்றால்—கருதலுற்றால்=அளந்தறியுமிடத்து எ-ம்.

அந்நியத்தைத் தவிர்ந்து தன் சாதிக்கொத்தல் துன்னிய பொதுவியற்கை - அந்நியசாதியிற் செல்லாமற் றலைமையும் பெருமற் றன்னுடைய சாதி குணத்திலே நிற்றல் பொருந்திய பொதுவியல்பாம்.

அஃதாவது, மாவென்னுமரம் இருப்பையிற் செல்லாமற் றலைமைபெருமற் றன்னுடைய மாவென்னும் பேரைப் பெற்றுநிற்றல்.

இவை பதி பசு பாச மூன்றினுடனு மாமாறென்னையெனின்? பதி தனக்கந்நியமான ஆன்மாவுமாகாமல், தன்னுடைய சிற்சொரூபமாயும் இராமல், தனது ஏகசத்தியாலே பஞ்சகிருத்தியம் பண்ணுதல் தன்னியல்பு.

ஆன்மாவும் ஆகாமல், பஞ்சகிருத்தியமும் பண்ணுமல், சிற்சொரூபமாயிருத்தல் பொதுவியல்பாம்.

ஆன்மா தனக்கந்நியமான பாசங்களுடனு மாகாமற் றன்னுடைய ஆன்மவர்க்கத்துடனுங் கூடாமற், சம்பிரதாயம்பெற்றவழி சீவன் முத்தனென்றுபெயர் பெறுதல் தன்னியல்பாம். சம்பிரதாயம்=அனுக்கிரகம்.

"கேவல சகலசுத்த மென்னுமூன் றவத்தையான்மா, மேவுவ ன் கேவலந்தன் னுண்மைமெய்ப் பொறிகளெல்லாங், காவலன் கொடுத்தபோது சகலனுமலங்களெல்லா, மோவின வாயிராம ற் றனதுள சத்தியாலே" பஞ்சகிருத்தியம்பண்ணுதல் தன்னி யல்பு.

இனி ஆன்மாவு மாகாமற் பஞ்சகிருத்தியமும்பண்ணமல் சிற்சுகவியல் "போதுசுத்தமுடைய னுற்பவந்துடைத்தே" எ ன்பனவற்றாலறிக. சித் - ச - சூ, ௩எ —செ.

தனக்கந்நியமான பாசங்களுடனுமாகாமற், சீவன் முத்த னென்னும் பேருட்பெறுமற் றன்னுடைய சுபாவத்தே நிற்றல் பொதுவியல்பாம்.

தற்சுபாவமாவது "உயிரெனப்படுவதிந்த வுடலின்வே றுள தாயுற்றுச், செயிருறு மிச்சாஞானச் செய்திக ளுடையதாகிப், பயிலுறு மின்பதுன்பப்பலன்களுநுகரும்பார்க்கிற், றுயிலொடு மஞ்சவத்தைப்படுமுண்மை துரியாதீதம்" சித்-௩-சூ, க—செ.

மாயை தனக்கந்நியமான கன்மங்களுமாகாமல், றன்னுடை யசுபாவத்தினும் நில்லாமல், கரணமுதலாகிய பெயர்பெற்றுக் கலைமுதலாகிய தத்துவங்களைக்கொடுத்து நிற்றல் தன்னி யல்பு.

மாயை கன்மங்களுமாகாமல் கத்தாவேவல்வழிநின்று கலைமு தலாகிய தத்துவங்களையுங்கொடாமல், தன்னுடைய சுபாவத் தேநிற்றல் பொதுவியல்பாம். "நித்தமா யருவாயேக நிலையதா யகிலத்துக்கு, வித்துமா" என்பதனில் "மாயை மயக்கமுஞ்செ ய்யுமன்றே" என்பதனாலறிக. சித் - உ - சூ, ருங —செ.

விந்து மோகினி மானென்று கூறப்பட்ட உபாதானமென்று [illegible]

"விந்துவின் மாயையாகி மாயையி னவ்வியத்தம், வந்திடும் விந்து தன்பால் வைகரி யாதிமாயை, முந்திடுமராகமாதி முக்குண மாதிமூலந், தந்திடு மாஞ்சிவன்றன் சந்நிதிதன்னி னின்றே." என்பதனு லுபாதான மூன்று மறிக. சித் - க-கூ, கரூ—செ. (ரு)

உயிருடனுணர்வுவாயி லொளியுரு வாதிபற்றிச், செயிருறுவிகற்பமின்றித் தெரிவதிந்திரியக்காட்சி, யயர்விலிந் திரியஞானமைம்புலன் சார்ந்துயிர்க்கண், மயர்வறவந்த ஞான மானதக்காண்டலாமே.

இ-ள். உயிருடனுணர்வுவாயி லொளியுரு வாதிபற்றிச், செயிருறு விகற்பமின்றித் தெரிவதிந்திரியக்காட்சி - ஆன்மாதனக்குடனாகிய வறிவிடமாகப்பற்றி யொளியாகிய உருபமுதலாயினவற்றைக் குற்றமுறும் விகற்பமின்றியறிவது வாயிற்காட்சியாம்.

ஒளியாகிய உருவென்க. உருவாதி, உரூபம்-சத்தம் - பரிசம்-இரதம்-கந்தம் - இவையைந்துமாம். வாயிலிடமும் புலனுமாகும், வாயிற்பற்றியென்க. இவையிற்றின தன்மையாகிய பொருளைப் பகுத்தறியாம லிந்திரியங்களோடு முற்றுநில்லாமல் ஆன்மா அஞ்ஞானத்தால் அறிவதை இந்திரியக் காட்சியென்றார். "விண்டலில்லா வறிவாகும் விகற்பமில்லாக் காட்சியே" என்றதற்கு மிதற்கும் வேறுபாடென்னையெனின்? இது ஆன்மா அஞ்ஞானத்தாலறிவது, அது பரஞானத்தாலறிவது. (உ-ம்) "பரஞானத்தாற் பரத்தைத்தரிசித்தார் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள்பாரார் பார்க்க, வருஞானம் பலஞான மஞ்ஞான விகற்பம் வாச்சியவாசகஞானம் வைந்தவற்றின் கலக்கந், தருஞானம் போக ஞாதிரு ஞானஞேயந் தங்கிய ஞானஞ்சங்கற்பனைஞானமாகுந், திருஞானமிவையெல்லாங் கடந்தசிவஞானமாதலாற் சீவன் முத்தர் சிவமேகண்டிருப்பர்" என்பதனுலறிக. சித் - சக - கூ, உ—செ.

அயர்வி லிந்திரியஞான மைம்புலன்சார்ந்துயிர்க்கண், மயர்வறவந்தஞான மானதக்காண்டலாமே' எ-து. அப்படி விகற்கப்மறக்கண்ட விந்திரியக்காட்சி கண்முதலாகிய புலனைந்தையுஞ்சார்ந்து ஆன்மாவினிடத்தே மயக்கமறவந்த ஞானம் மனத்தாற்காணும் மானதக் காட்சியாம். எ-று.

இது பாசஞானமெனவறிக. "வேதசாத்திரமிருதிபுராணகலைஞானம் விருப்பசபைவைகரிபாதித் திறங்கண்மேலா, நாதமுடிவானவெல்லாம் பாசஞான நணுகியான்மா விவைகிழநாடலாலே, காதலினானான்பிரமமென்னுஞானங் கருதுபசுஞானமிவனுடலிற்கட்டுண், டோதியுணர்ந்தொன்றொன்றாயுணர்ந்திடலாற்பசுவா மொன்றாகச்சிவனியல்பினுணர்ந்திடுவன்காணே" என்பதனுலுமறிக. சித் - சு - சூ உ— செ. (சு)

அருந்தின்பதுன்பமுள்ளத் தறிவினுக்கராகமாதி, தருந்தன் வேதனையாங்காட்சி சமாதியால் மலங்கள்வாட்டிப், பொருந்திய தேசகால மியல்பகல்பொருள்களெல்லா, மிருந்துணர்கின்றஞான மியோகநற் காண்டலாமே.

இ-ள். அருந்தின்பதுன்பமுள்ளத் தறிவினுக்கராகமாதி தருந்தன்வேதனையாங்காட்சி எ-து. ஆன்மஞானத்துக்கு இச்சாஞானக்கிரியைகள்தரு மின்பதுன்பங்களை யருந்துதல் தன் வேதனைக்காட்சியாம். (அது ஆன்மா தான் அந்தந்த விஷயங்களை நின்றுபுசிக்குமவதரம்)

சமாதியால் மலங்கள்வாட்டிப்பொருந்திய தேசகாலமியல்பகல் பொருள்களெல்லா மிருந்துணர்கின்றஞான மியோகநற்காண்டலாமே - இயமம்-நியமம்-ஆசனம்-பிராணாயாமம்-பிரத்தியாகாரம் - தாரணை-தியானங்களுடனேகூடிய சமாதியாலே இந்திரியங்கள் சீவியாதபடியகற்றிப் பொருத்தமுடை

த்தாகிய தேசகாலசுபாவங்களும் விரிந்தபொருள்களையு மோரிடத்தேயிருந்தறிகின்றவறிவு நல்லயோகத்தாற்காணும் யோகக்காட்சியாம். எ-று.

இது அணிமா - மகிமா - இலகுமா - கரிமா-பிராப்தி - பிராகாமியம் - ஈசத்துவம் - வசித்துவம் என்னு மட்டமா சித்தி முதலாயின பொருந்தி விந்து நாத சொரூபமாகிய வுண்மையைப்பார்த்திருப்போரது தன்மையாம். இத்தன்மையையுடையோ ரெல்லாத்தேசத்துமுண்டாகிய செல்காலம் வருங்காலங்களும் அவ்விடங்களிலுண்டாகிய சுபாவங்களும் பொருள்களுங் கண்டிருப்பரொன்றதாம்.

இனி யிவையொழிந்து கண்டுணராமை, உணர்ந்ததையுணர்தல், நினைப்புஎனச் சில போலிகளுங் கூறுப. அவை வருமாறு:—

கண்டுணராமையாவது—சிலவற்றைக் கண் டதன்பெய ரறியாதிருத்தல்.

உணர்ந்ததை யுணர்தலாவது முன்பு குளிர்வந்துற்றகாலத்து நெருப்பு மருந்தொன் றறிந்தான் பின்பதற் கிதுமருந்தென்றுள்ளங் கொள்ளல்.

நினைப்பாவது - குழவிப்பருவத்தே தந்தை தாயையிழந்தோன்காரணங்கருதாது தினக்கின்னார் தந்தை தாயென்று பிறர் சொல்வதனைக் கருதிக்கோடல்.

இம்முறைமைப்போலிகள் மேல்வருமாற்றால் அறிக. பரபட்சம் உலோகாயிதன் மறுப்பு (க) "உள்ளதாவதுகண்டதென்றுரைகொண்ட தென்னுலகத் துநீ,பிள்ளையாய்வளர்கின்றநாளுனைப் பெற்றதாயொடுதந்தையைக், கள்ளமேபுரிகாலனருமி ...

ணவிண்டொருகாளையாய்,மெள்ளவேயுளரென்றுகொண்டு விரு ம்புமாறுவிளம்பிடே” இதுநினைப்பு.

பிரத்தியக்ஷ முடிந்தது.

பக்கமூன்றின்மூன்றேது வுடையபொருளைப்பார்த்துணரத், தக்கஞானந்தன்பொருட்டாம் பிறர்பொருட்டாமநுமானம், தொக்கவிவற்றூற்பிறர்தெளியச்சொல்லலாகுமச்சொல்லும், மி க்கவந்நுவயத்தினொடு வெதிரேகச்சொலெனவிரண்டாம்.

(இ-ள்) பக்கமூன்றின் - பட்சம், சபட்சம்,விபட்சம் என்னு மூன்றிடத்தினும்.

மூன்றேதுவுடையபொருளைப் பார்த்துணரத்தக்கஞானந் த ன்பொருட்டாம் - ஏதுவு நிமித்தமுங் காரணமுமாகும் இயல் பு, காரியம், அநுபலத்தி, என்னுமூன்றேதுவுடையபொருளை க் கண்டறியத்தக்க வறிவு தன்னுடையபொருட்டாம்.

பிறர்பொருட்டாம் - பிறரறியும்பொருட்டு

அநுமானந் தொக்கவிவற்றூற் பிறர்தெளியச் சொல்லலாகு ம் - காரியமுதலாயின ஏதுக்கொண்டு காரணத்தைக் காண்ப து பிறர்மனந்தெளிய வுரைக்கலாகும், பிறர்பொருட் டநுமான மாம்.

அச்சொல்லு மிக்கவந்நுவயத்தினொடு வெதிரேகச்சொல் லெனவிரண்டாம் - அப்படிச்சொல்வது மிகுந்த வொற்றுமைப் பட்ட சொல்லுடனே வேற்றுமைப்பட்ட சொல்லென விரண் டாம். எ-று.

அந்வயம் - பொருந்தமுடையது, வெதிரேகம்-பொருந்தா தது. இவை விரிக்குமாற்றாலறிக. (அ)

மூன்றுபக்கம் பக்கநிகர் பக்கநிகரில் பக்கமெனத், தோன்றும் பக்கந் துணிபொருளுக் கிடமாமுவமை நிகர் பக்க, மான்றபொருள்சென் றடையாது விடமாநிகரில்பக்கமுத, லேன்றவிரண்டும் பொருளுண்மைக் கிடமாமொன்று பொருளின்றும்

இ-ள். மூன்றுபக்கம் - முன்சொன்ன மூன்றுபக்கம்.

பக்க நிகர்பக்கம்நிகரில்பக்கமெனத் தோன்றும் - பக்கமென்றும், ஒத்தபக்கமென்றும், ஒவ்வாதபக்கமென்றும், தோன்றப்படுவதாகும். அவை பட்சம், சபட்சம், விபட்சம்என்பவையாம்.

பக்கந் துணிபொருளுக்கிடமாம்-பட்சமாவது சாதநங்கொண்டு சாத்தியத்தைத் துணியும்பொருளுக் கிடமாயிருக்கும்.

அஃதாவது, இந்தமலை தன்னிடத்தே நெருப்பையுடைத்தென்று சுட்டிக் கூறுதற்கிடமாவது. அது - சுபாவவேது, அஃதெத்தாலென்னில்? புகையாலென்றல் காரியவேது.

உவமை நிகர்பக்கம் - சபட்சமாவது, ஒன்றை யுவமித்துக்காட்டுமிடமாம்.

ஆன்றபொருள் சென்றடையாத விடமாம் நிகரில் பக்கம் - விபட்சமாவது, சாத்தியமாகியபொருள் சென்று கூடாதவிடமாம்.

முதலேன்ற விரண்டும் பொருளுண்மைக்கிடமாம் - முன்சொல்லப்பட்ட பட்சம் சபட்சம் இரண்டும், சாத்தியப் பொருளுண்டாதற்கிடமாம்.

ஒன்றுபொருளின்றும் - விபட்சம்சாத்தியமாகிய பொருள்சாதிப்பதற் கிடமல்லவாம். எ-று.

இவை மேல்வரும் புறனடைச் சூத்திரத்தாலறிக. (௬)

ஏது மூன்று மியல்பு காரியத்தோடநுப லத்தியவை, யோதினியல்பு மாமரத்தைக் காட்டலுறுகாரியம் புகைதன், னாதியானவனல் காட்ட லாகுமநுபலத்தியது, சீதமின்மை பனியின்மை காட்டலாகுஞ் செப்பிடினே.

இ-ள். ஏதுமூன்றுமியல்புகாரியத்தோடநுபலத்தி - முன்சொன்னவேதுக்கள்மூன்றும் இயல்பேது, காரிய வேது, அநுபலத்தியேதுவென்றும்.

அவையோதில் - அவையிற்றைமுறைமையாகச்சொல்லில்.

இயல்புமாமரத்தைக்காட்டல் - இயல்பேது மாவென்பதுமரத்தைக்காட்டி நிற்றல்.

அஃதாவது, பொருளுண்மைசுட்டலாம். அதுவுண்டுண்டெனுசுட்டப்படுதல். அது, பதியுண்டு, பசுவுண்டு, பாசமுண்டென்று சுட்டப்படுதலாம்.

உறுகாரியம் புகைதன்ஆதியானவனல்காட்டலாகும் - மிக்க காரியமாகிய புகை, காரணமாகிய நெருப்பைக்காட்டுந்தன்மையாம்.

என்றது, பிரபஞ்சங் காரியமாயிருத்தலால், காரியம் செய்வோனின்றி யில்லையாதலால், காரியம் கத்தாவைக்காட்டிற்று. பசுவுக்கு தேக மசேதநமாதலா லிந்த தேகத்தை நடத்துவாரொருசைதன்னிய னுண்டென்று காட்டிற்று. பாசத்துக்குக் காரணமின்றிக் காரியந்தோன்றாதென்பதனாற் காரியமாகியபிரபஞ்சங் காரணமாகியமாயையைக் காட்டிற்று.

அநுபலத்தியது சீதமின்மைபனியின்மை காட்டல்போலுஞ் செப்பிடினே - அநுபலத்தியேதுவாவது, குளிரில்லாமை பனியில்லாமையைக் காட்டுதல்போலும் சொல்லுமிடத்து எ-று.

என்றது யாதொன்று யாதொன்று காரணமில்லையாகிறது காரியமுமில்லை என்பதாம்.

எனவே கத்தாவாகியகாரணம் இல்லையாகிற் பிரபஞ்சகாரியமுமில்லை, ஆன்மாவில்லையாகிற் றேகமுமில்லை, மாயையில்லையாகிற் பிரபஞ்சமுமில்லை என்றதாம். மண் இல்லையாகின் கடமில்லை என்பதுபோல். (௪௦)

புகையாலனலுண்டடுக்களைபோ லென்னப்புகறலந்நுவயம், வகையாமனலில்லாவிடத்துப் புகையின்றுகுமலரினொடு, முகையார்நீரிற்போலென்று மொழிதல்வெதிரேகச்சொலிவை, தொகையாருறுப்பைந் தொடுங்கூடச் சொல்லுவாரு முளர்துணிந்தே

இ-ள். புகையாலனலுண்டு - புகையுண்டாதலா லம்மலையிடத்துநெருப்புண்டு.

இது பிரதிஞ்ஞை - பிரதிஞ்ஞையெனினும் பட்சமெனினும், மொக்கும். அஃதெங்ஙனேயென்னில்?

அடுக்களைபோல் - அட்டிலிடத்துப் புகையுமனலுங்கூடக் காணுந்தன்மைபோல்.

இதுதிட்டாந்தம். திட்டாந்தமெனினும் - சபட்சமெனினும், ஒத்த பட்சமெனினு மொக்கும்.

என்னப்புகற லந்நுவயம் - என்றிப்படிச்சொல்லுவ தொற்றுமைப்பாட்டையறியவியர்றியது. அந்வயம்.

வகையாமனலில்லாவிடத்துப்புகையின்றும் - கூறுபடுத்திச்சொல்லும் நெருப்பில்லாதவிடத்துப் புகையில்லையாம். அஃதென்போலவென்னில்?

மலரினொடுமுளையார்நீரிற் போலென்று மொழிதல்வெதிரேகச்சொல் - மலரினுடனே முளை, நிறைந்தநீரில்லாவிடத் தில்லையாகுற்போல என்றுகூறுதல் வேற்றுமைப்பாட்டையுடைய சொல்லாம். வேதிரேகச்சொல்.

முளை - தாமரை. வெதிரேகமெனினும் விபட்சமெனினும் —ஒவ்வாதபட்சமெனினும்— மீட்சிமொழியெனினும்—ஒழிபு—எனினும் ஒக்கும். அதுஇரண்டாவதுவலியுறுத்தல். அது நெருப்பையுடைத்தல்லாத தியாதோரிடம், அவ்விடத்துப்புகையில்லை: புனலில்லாதவிடத்துத் தாமரையில்லாதாற்போல வென்று பொருளினது மீட்சிமொழியாய்த் தறுமீயதிட்டாந்தத்திற்கு நன்றாகிய காரியவேதுவாயிற்று. இனிவிசுவம்பொய்யென்றல் தன்னுடையப்பட்சம். அஃதென்னென்னில்? பண்ணப்படுதலான்: என்பது, பட்சத்தின்கண்ணேயுள்ளதாகிய தோரியுல்பாகியவேது. யாதுபொருள் யாதொருவன்காரியமாகச் செய்யப்பட்டது, அநித்தம். அதுஎன்போலவென்னில் கடம்போலவென்றல் காரியவேதுவாகியசபட்சமாம். யாதொன்று பண்ணப்படாதது, அனித்தமல்ல. என்போலவென்னில்? பதி பசு பாசம்போலவென்றல், விபட்சம். யாதோரிடத்துப்புகையுள்ளதவ்விடத்து நெருப்புண்டென்னு மந்நுவயத்தாலும், யாதோரிடத்துநெருப்பில்லை யவ்விடத்துப்புகையில்லை, புனலில்லாவிடத்துத் தாமரையில்லாதாற்போலவென்னும் வெதிரேகத்தாலும், புகை நெருப்பையுஞ்சாதித் திடமுஞ்சாதித்தவாறுபோல, யாதொன்றுகாரியமாயுள்ள தவ்விடக்துக் காரணமுண்டென்னும்அந்நுவயத்தானும்; யாதோரிடத்துக்காரணமில்லையவ்விடக்துக்காரியமில்லையென்னும் வெதிரேகத்தானுங்: காரியமானபிரபஞ்சம் தனக்குக்காரணமான மாயையுஞ் சாதித்துத், தோற்றுவிக்குங்கர்த்தாவையுஞ் சாதித்ததெனவறிக.

இவை தொகையாருறுப்பைந்தொடுங்கூடச் சொல்லுவாருமு ளர்துணிந்தே - இப்படிச்சொல்லப்பட்டவிவை தொகுதிபொ ருந்திய வைந்தவயவத்தோடுங்கூடச் சொல்லுவாரு முண்டு தெளிந்து. எ-று.

ஐந்தவயவமாவது—பட்சம் - ஏது - திட்டாந்தம் - உபநய ம் - நிகமனம்.

இனி பட்சமாவது, மலைநெருப்பையுடைத்தென்றல்.

ஏதுவாவது,காணுதநெருப்பை மலையுடைத்தென்ற தென்னை யென விஞயவழிக், காரணமாகியநெருப்பினது காரியமாகப் பு கையவ்விடத்துத்தோன்றுதலாலே யது அதற்குப் பொருந்திய காரியவேது.

திட்டாந்தமாவது, அஃதென்போ லவென்னில், புகை யுள்ள விடத்தே நெருப்புண்டாம், அடுக்களைப்போலவென்ன ச்செப்புதல்.

உபநயமாவது, மேற்கூறியவேதுவைப் பட்சத்தேவருவித் தல். அதுமலைபுகையுடைத்தென்றல்.

நிகமனமாவது, மேற்கூறியபட்சத்திடத்துப்புகையுடைத்தா காலால் நெருப்புடைத்தெனக்கூட்டுதல். இது அந்தவேது வை இரண்டாவதும் வலியுறுத்கலாம்.

சொல்லுவாருமுளர் என்றவுமையாற் சொல்லாதாருமுள ரென்பதாம். அதுஉபநயமும் நிகமனமும் முன்சொன்னமூன்றி லுமடங்குமாதலாலெனவறிக. எனவேயவைமூன்றுஞ் சிறப்பு டையவாம் (உ-ம்) "பூபூதராதி-யோவரவுஞற்று மொருவனையு டைத்துப்- பொருவிகாரியமாதலிற்கடம்போ-லென்னிற்கோ தின்திருங்கடமதனை -டியற்றியவொருவனை யொருங்குடன்க ண்டோ -ளெழிந்திகலிகிரு கடங்-கண்டாலிவையுமவனெ

ணக்கொண்டாங் - குண்டோவுலக முயற்றுடனொருவற்-கண்டு மாறறிவு முண்டிவனெனவெனிற்—கண்டதில்மான முனக்குக் கொண்டல் கோள் - கிரிவளர்தூம மதனிலெரிவள-ரட்டிலொண்புகை யயலனலுணர்ந்து - மோட்டிளைப்பிறங்க லொள்ளழலோட்டிய - தென்னைவிசேடசமனியத் தியாகிற்பனெனில் -விசேடமென்னின் மன்றேகாட்சி - யலதில்லை சமனிய மாட்சியதென்றிடிற் - சடலொடுசெய்வோற் காண்டோன்மன்ற-மரனவிதந்தனி னென்றுவோதுவ - னொருவன்றீதுரு செயலென்றற்றேல் - மாகமாகியவினையா லெற்றேபாக - மியைதலிற் கடவற்றினு மொண்குண மன்னலில் - அவைபோலாகிய வழியுமழிபவை - செயலென்றேதுருஃதுந் தீதறுசெயலே"—இதை ஞானமிர்தத்துப் பதியிலக்கணஞ்சாதிக்கு மிடத்திந்த வைந்துறுப்பும் வந்தவாறுகாண்க.

இப்பொருள் முன்விரித்தமுறையே பதிபசுபாச மூன்றுக்கும் வருமாறு விரித்துப் பொருளுரைக்குமாறறிக. (கக)

போது நாற்றத்தாலறிதல் பூர்வக்காட்சி யநுமானம், ஓதுமுறையாலறிவினளவுணர்தல் கருதலநுமானம், நீதியான் முற்கன்ம பல நிகழ்வதிப்போதிச்செய்திக், காதியாக வரும்பயனென் றறிதலுரையாலநுமானம்

இ-ள். போதுநாற்றகதாலறிதல் பூர்வக்காட்சியநுமானம்- ஒருபூவைக்காணுதிருக்க இதனதுமணத்தாலே யின்னபூவென்பது பண்டுகண்டுணர்ந்த வநுமானம்.

ஓதுமுறையா லறிவினளவுணர்தல் கருதலநுமானம்- ஒருவன்சொல்லும் வசநத்தா லவனுடைய வறிவினெல்லையையறிவது கருத்தநுமானம்.

நீதியான் முற்கன்மபலம் நிகழ்வதிப்போதிச்செய்திக் காதியாகவரும்பயனென்றறித லுரையாலநுமானம் - இந்த சநத்

இவிந்தத்தொழிலுக்குத் தோற்றமாய்வருகின்ற பிரையோசக முறையாக முன்புசெய்த புண்ணியபாவங்களினுடைய பிரையோசகத் தோற்றமென்றறிவது சாத்திரப்பிரமாணமாம். எ-று.

இது, பிரத்தியட்ச வநுமானமும், கருத லநுமானமும், சாத்திர வநுமானமுங் கூறியவாறறிக. (௧௨)

"அநுதியே யமலனுய வறிவனூலாகமந்தான், பிநுதிமா றின்றிப்பேணல் தந்திர மந்திரங்கள், மநுதிகளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மையாகும், தநுதி யீறிலாதான்றன்மை யுணர்த்துவ துபதேசந்தான்

இ-ள். அநுதியே யமலனுய வறிவனூ லாகமந்தான் பிநுதிமாறின்றிப் பேணல் தந்திரம் - எக்காலத்தும் நின்மலனுகிய சர்வஞ்ஞன் அருளிச்செய்யப்பட்ட சாத்திரங்களைப் பின்னொடு முன்மலையாமல்விரும்பிக் கற்றறிவது தந்திர கலையென்றுபெயராம்.

மந்திரங்கள்மநுதிகளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மையாகும் - மனமுதலாயின கருவிகளையடக்கித் தான் வழிபடுதெய்வத்தை யுச்சரிப்பன மந்திர கலைகளாகும்.

தநுதியீறிலாதான் றன்மையுணர்த்துவ துபதேசந்தான் - தனக்கு முதலு முடிவுமில்லாத கத்தாவினுடைய வுண்மையயறிவிப்ப துபதேசகலை. எ-று. (௧௩)

ஈண்டுப் பக்கப்போலிநான் கேதுப்போலி பொருமூன்றாய், வேண்டு மெழுமூன்றுக விளங் குவமைப்போலி யீரொன்பான், காண்டுந்தோல் வித்தானமிரண் டிருபத்திரண்டாங் கருதிலிவை, யாண்டுமொழிவ ரவையெல்லா மளக்கிலறுபத்தைந்தாகும்.

இ-ள். ஈண்டுப்பக்கப் போலி நால்கு-இவ்விடத்து முன் செய

ன்ன பக்கப்போலி நான்கு.

போலியென்பது வடமொழிக்கு ஆபாசமென்றதாம்.

ஏதுப்போலி யொருமூன்றாய் வேண்டு மெழுமூன்றாக - ஏதுப்போலியாவ தொருமூன்றுவகையா யிருபத்தொன்றாக விரும்பிவரும்.

ஆக விருபத்தொன்றும் நாலும் இருபத்தைந்து. இது பக்கப் போலி.

விளங்கு உவமைப்போலி யீரொன்பான் - விளக்கமுடைய திட்டாந்தப்போலி பதினெட்டு.

ஆக விருபத்தைந்தும் பதினெட்டும் நாற்பத்துமூன்று.

காண்டுந்தோல்வித்தான மிரண்டிருபத்திரண்டாம் - காண்பேமாகிய விபக்கத்தான மிரண்டு வகையாய் இரண்டுகூறுபாடாய் இருபத்திரண்டாம்.

சருதிலிவை யாண்டுமொழிவ ரவையெல்லாமளக்கி லறுபத்தைந்தாகும் - விசாரிக்கில் இவையெல்லா மந்தந்த விடங்களிலே சொல்லாநிற்பர்கள். அவையெல்லாந்தொகைகூட்டி யறுபத்தைந்தாம். எ-று.

ஆக-௬௫—ம், ௨௨—ம், ௬௫.

ஆண்டு மொழிவரென்றது, பக்கம்-ஏது-திட்டாந்தம்-வெதிரேகம் என்னு நாலிடத்தினும் என்றதாம்.

அவற்றுட் சில வருமாறு:—

பக்கப்போலி நான்காவது—அப்பிரசித்த விசேடணம், அப்பிரசித்தி விசேடியம், அப்பிரசித்தோபயம், அப்பரிசித்த சம்பந்தம்.

அப்பிரசித்த விசேடணமாவது—[அப்பிரசித்தம் - பிரசித்தமல்லாதது. விசேடணம்-துணிவு.] அஃதாவது, தத்தமக்கு மாத்திரம் தமக்குள்ள சாத்தியா சாத்தியமாயுள்ள துணிவு தாமறியாதிருத்தல். அஃது பௌத்தன் தனக்குமாறாகிய சாங்கியனைக்குறித்துச் சத்தத்துக்குக் கேடுண்டென்றால், அவனுலகத்துக்குப் பொருளெல்லாவற்றையுங் கேடில்லையாகக் கொண்ட கோட்பாடறியாது, சிலபொருளைக் கேடுண்டென்று கொண்டாற்போல, சத்தமொன்றினையு மெடுத்துக் கேடுண்டென்றமையால், அவனது விசேடணமாகிய சாத்திய தன்மந்தெரியாதாம். இதனாலே சாங்கிய னித்தவாதியெனவும், பௌத்தன் அநித்தவாதியெனவு மறிக.

அப்பிரசித்த விசேடியமாவது—தம்முடைய வெதிரிக்குத் தாங்கூறுந்தன்மை தெரியாதிருத்தல். அஃதாவது, சாங்கியன் மாறுநின்றபௌத்தனைக்குறித்து ஆத்மா சைதன்னியவானென்றால் அவன் ஆன்மாவென்பதொன்றில்லையென்னும் வாதியாதலின், அவன் ஆன்மாவாகிற தன்மை தெரியாதிருத்தலாம். எனவே சாங்கியன் ஆன்மவாதியெனவறிக.

அப்பிரசித்தோபயமாவது—[உபயம்-இரண்டு] அஃதாவது, தமக்கு மாறாயினார்க்குள்ள தன்மியும்-சாதகமாகிய தன்மமுமாகிய அவ்விரண்டு மாறனிசையாமையா லவை தெரியாதிருத்தல். அது வைசேடிகன் பௌத்தனைக் குறித்துச் சுகமுதலாகிய காரியத்துக்குக் காரணமாகியது ஆன்மாவென்றால், சுகமுதலாகிய காரியமுங் காரணமாகியஆன்மாவும் அவ்விரண்டும் அவனிசையாமையால், அவனது தன்ம தன்மி யிரண்டுந் தெரியாதாயிற்று. இதனாலே வைசேடிகன் சுகதுக்கமும் ஆன்மாவுங்கொண்டான், பௌத்தன் அவ்விரண்டுங் கொண்டிலனெனவறிக.

அப்பிரசித்தசம்பந்தமாவது—தமக்கு மாறுய்நின்றவ ஞாய்ந்துதுணிந்தபொருளைத் தானுமவனுக்குப்பொருந்தச் சாதிக்குக்கொடுத்தல். அஃதாவது, சாங்கியன் றனக்குமாறுகின்ற பௌத்தனைக்குறித்துச் சத்தமநித்த மென்றுகூறின் பௌத்தன்கோட்பாடு மதுவாதலின் வேறவனுக்குச்சாதிக்கவேண்டுவதில்லையாயிற்று.

இன்னுமிவைநாலுமின்றி வருவனவுமுள.

அவையாவன:—பிரத்தியட்சவிருத்தம், அநுமானவிருத்தம், சுவசனவிருத்தம், உலகவிருத்தம், ஆகமவிருத்தம்,ஆகவிருத்தம் ஐந்தாம். [விருத்தம் - மாறு.]

அவற்றுள்; பிரத்தியட்சவிருத்தமாவது—[விருத்தம்-மாறு] பொருந்திய காட்சியைமாறுகொள்ளுதல். அது, சத்தஞ்செய்தலா லறியப்படாதென்றல்.

அநுமானவிருத்தமாவது—கருதலாகியபிரமாணத்தை மாறுபடக்கூறல். அஃதாவது, எல்லாருக்கும் புலப்பட வநித்தமாகிய கடத்தை நித்தமெனக்கூறல்.

சுவசனவிருத்தமாவது—தான்கூறியசொற்றனே தனக்குமாறுயடக்கூறல். அஃதாவது, என்தாய் மலடியென்றல். [சுவசனம்-தன்சொல்.]

உலகவிருத்தமாவது—உலகத்தார்கூறுங்கூற்றுக்குமாறுகக்கூறல். அஃதாவது, மதிசந்திரனல்லவென்றல்.

ஆகமவிருத்தமாவது—தனது நூற்பொருளுக்கு மாறுபடக்கூறல். அஃதாவது, நித்தஞ்சாதிக்கும் வாதியாயுள்ள வைசேடிகன் அநித்தமாகிய சத்தத்தை நித்தமென்றுகூறல்.

இவையொன்பதும் பக்கப்போலி.

பக்கப்போலிமுற்றிற்று.

இனிஏதுப்போலிவருமாறு:—

ஏதுப்போலிமூன்றுகூறாய்வருமென்றது—அசித்தமென்றும், அநேகாந்திகமென்றும், விருத்தமென்றும்வரும்.

அவற்றுள், அசித்தமாவது—உபயாசித்தம், அந்நியதாசித்தம், சந்தேகாசித்தம், ஆச்சரியாசித்தம், எனநாலாம்.

அவற்றுள், உபயாசித்தமாவது— [அசித்தம் சித்தத்துக்குப்பிரகாசமல்லாதது, உபயம்- இரண்டு=சாதநமாகியவேது விரண்டுவாதிகளுக்குமில்லையாதல்.] அஃதாவது, சத்தம் அநித்தம். அஃதெத்தாலென்னில்? கண்ணுக்குத் தோற்றுதலாலென்றதாம்.

அந்நியதாசித்தமாவது—தனக்குமாறாய்நின்றவாதிக்குப்பொருந்தியவேதுவல்லவாயிருத்தல். அஃதாவது, சத்தம்பண்ணப்படுதலால் அநித்தமெனமாறாய்நின்றோன்கூறில், சத்தமறைதலும் வெளிப்படுதலு மல்லது பண்ணப்படுதல் சாங்கியன் கொள்ளாமையின், சத்தம்பண்ணப்படுதலாகச்சொல்லுதல் அவனுக்கு அசித்தமாயிற்று எனவே அவ்வாதிகளுக்குப்பொருந்தினவேதுவேகொண்டு பொருள்சாதிக்கவேண்டுமென்றுகொள்க. சாங்கியனுக்குச் சத்தத்துக்குட்பொருளெல்லா மறைதலல்லது கேடில்லையென்ப தவன்துணிவானவாறுகாண்க.

சந்தேகாசித்தமாவது—கூறுநின்றவேதுஐயமாய்நிற்கிறபொருள் சாதித்தல். அஃதாவது, ஆவியோ பனியோ தோன்றுகின்றதென ஐயமுறுநிற்ப, அதுபுகை அவ்விடத்தேநெருப்புண்டென்றுகூறுதல்.

ஆச்சரியாசித்தமாவது—மாறாய்நின்றவாதிகருத்தறிய வேதுவிற்குப்பொருந்திய தர்மியில்லையாகிய வேதுவைக்காட்டல்.

அஃதாவது, சாங்கியன் ஆகாசம் சத்தமாகியகுணத்தாலே குணியாமென்னில்? ஆகாசம் பொருளல்லவென்னும் பௌத்தனுக்கு அதனது குணியாகியதன்மி யசித்தமாயிற்று.

அசித்திவேது முடிந்தது.

அநேகாந்திகம்வருமாறு:—

அநேகாந்திகம் - ஒன்றுபலவாதல். எனவே, அறிவிரண்டிற்கு நிற்றலின் அநேகாந்திகமாயிற்று.

அநேகாந்திகம்—சாதாரணம், அசாதாரணம், சபக்கதேசவிருத்திவிபக்கவியாபி, விபக்கதேசவிருத்தி சபக்கவியாபி, உபயதேசதேசவிருத்தி, விருத்தாவியவகாரி, எனவாறும்.

அவற்றுள், சாதாரணமாவது—பொருள்சாதித்தற்குக்கூறுமேது சபக்கத்திற்கும் விபக்கத்திற்கும் பொதுவாயிருத்தல். அஃதாவது, சத்தம் நித்தமறிபப்படுதலாலென்று கூறுதல். அவ்வறிபப்படுவது நித்தமநித்தமென்று சொல்லப்பட்டவிரண்டிற்கும் பொருந்தும். அதுபொருந்துமாறு, கடம்போன்றவநித்தத்தை யறியுமறிவோ ஆகாசத்தைப்போன்ற நித்தத்தையறியுமறிவோவென்றுகூறுதலாம். இதனுலாகாசம்நித்தமெனறு கொண்டானெனவறிக.

அசாதாரணமாவது—தான்பொருந்திய பக்கத்துண்டாகியவேது, சபக்கத்தின்கண்ணும் விபக்கத்தின்கண்ணுமில்லையாதல். அஃதாவது, சத்தம் அநித்தம் கேட்கப்படுதலாலென்றுகூறின் கேட்கப்படுதலாகிய வேது சத்தமாகியபக்கத்தின்கண்ணே யுண்டாவதல்லது ஆகாசமாகிய சபக்கத்தின்கண்ணும் கடமாகியவிபக்கத்தின்கண்ணு மின்றாகலி னையம்பொருந்தி அநேகாந்திகமாயிற்று.

சபக்கதேகவிருத்தி விபக்கவியாபியாவது—பக்கத்துக்கூறியவேது சபக்கத்துண்டாய் விபக்கத்துக்கண்ணுகியிருத்தல்வேண்டும். அவ்வாறொழிந்து சபக்கத்தின்கண் ணொருகூற்றின்கண்ணுண்டாய் விபக்கத்துக்கண் முழுதுமுண்டாதல். அஃதாவது, சத்தந்தொழிலிடைத்தோன்றுதாகும்; அநித்தமாதலாலெனக் கூறியவழி, யவ்வநித்தமெனமேற்கூறியவேதுச்செயலிடைதோன்றுதைக்குச் சபக்கமாகிய மின் ஆகாசமென்னு மிரண்டினுள்ளும், அநித்தவேது மின்னின்கட்புலப்பட்டு ஆகாசத்துக்கட்புலப்படாதாகலின், அவ்வநித்தங் கடமுதலாயினவற்றிற் பொருந்துதலிற் கடம்போலவழிந்துசெயலிடைத்தோன்றுமோ? மின்போலேயழிந்து செயலிடைத் தோன்றுதோவென்று கூறுதலாம்.

இவையெல்லா மாகாசமழியாதெனக்கொண்ட பௌத்தன் கூறுங் கூற்றெனவறிக.

விபக்கதேகவிருத்தி சபக்கவியாபியாவது— பக்கத்துக்கூறியவேது விபக்கத்துக்கண் ணொருகூற்றின்கண்ணுண்டாய்ச் சபக்கத்துக்கண் முழுதும்பொருந்துதல். அஃதாயது, சத்தஞ்செயலிடைத்தோன்றும் அநித்தமாதலானென்றவழி அவ்வநித்தவேது சத்தந்தோன்றுதலாகிய பக்கத்திற்கும், விபக்கமான மின் ஆகாசமென்னு மிரண்டினுள்ளு மின்னின்கட்புலப்பா டாகாசத்தின்கட் புலப்படாது. சபக்கமான கடமுதலானவற்றில் முழுதுங்கிடைத்தலா லேகாந்தமல்ல. அது மின்போல அநித்தமாய் தொழிலிடைத் தோன்றுதோ? கடம்போல அநித்தமாய்த் தோன்றுமோவெனக் கூறுதலாம்.

உபயதேகதேசவிருத்தியாவது— கூறப்படுமேது சபக்கத்தின்கண்ணும் விபக்கத்தின்கண்ணு மோரிடத்துநிகழ்தல். அஃதாவது, சத்த நித்தம் அமூர்த்தமாதலானென்று கூறியவ

ழி, அமூர்த்தமாகியவேது நித்தத்துக்குச் சபக்கமாகிய வாகாச பரமாணுவிரண்டினு மாகாசத்தின்கணிகழ்ந்து ரூபமாகியபரமாணுவின்க ணிகழாமையானும், அநித்தமாகிய விபக்கமான கடஞ் சுகமுதலாயினவற்றில் அநித்தமானசுகத்தின்கண்ணே அமூர்த்தவேதுநிகழ்ந்து அநித்தமானகடத்தின்கண்ணே அமூர்த்தநிகழாமையானும், நித்த மநித்தமென்று சொல்லப்பட்ட சபக்க விபக்கத்துக்க ளிரண்டினும் விட்டுநிகழ்ந்தமையா லேகாந்தமல்லவாய் அமூர்த்தமாகிய வாகாசம்போல நித்தமாகிய அமூர்த்தமாகிய சுகம்போல அநித்தமோவென்றுகூறுதலாம்.

[மூர்த்தம் - உருபம், அமூர்த்தம் - உருபமில்லாதது.]

விருத்தர்வியவகாரியாவது—சொல்லப்படு மொருபொருட்டானே மாறுபட்டுவரு மேதுவிரண்டிற்கு மிடங்கொடுத்தல். அஃதாவது, சத்த மநித்தந் தொழிலிடைத்தோன்றலால். அதற்குப்பொருந்திய திட்டாந்தம்யாதெனில்? அத்தொழிலிடைத்தோன்றற்கு சபக்கமாயுள்ள கடாதியென்ன; சத்தத்தினு மநித்தஞ்சாதிப்பானாகிய வைசேடிகனும், நித்தச் சத்தப்பிரமித்த மநித்தங்கேட்கப்படுதலாற் சத்தத்துவமெனப் பெயர்பெற்ற சத்தப்பிரமம்போலவெனக்கூறுதலின் இவ்வாறிரண்டு மொருபொருளின்கண்ணே மாறுபாடாகிய அநித்தம்நித்தங்கள்கூறப்படுதலின் ஐயநிகழ்ந் தேகாந்தமல்லவாயிற்று.

அநேகாந்தமாகியவேதுப்போலி முடிந்தது.

இனிவிருத்தம்வருமாறு:—

விருத்தம்— தன்மசொரூபவிபரீதசாதகம், தன்மவிசேடவிபரீதசாதகம், தன்மிசொரூப விபரீதசாதகம், தன்மிவிசேடவிபரீதசாதகம், எனநாலாம்.

அவற்றுள், தன்மசொரூபவிபரீத சாதநமாவது—தான் கூறியவேதுவினாலே சாத்தியமாகக் கருதப்பட்ட பொருளினது வடிவுகெடுதல். அஃதாவது, சத்தம் நித்தம், பண்ணப்படுதலாலென்றால்; பண்ணப்படும்பொருள் அநித்தமாதலிற் சொல்லப்பட்டவேது நித்தத்தைவிட்டு அநித்தஞ்சாதித்தலால் மாறுபாடாயிற்றென வறிக.

தன்மவிசேட விபரீதசாதநமாவது— தான்கூறியவேதுத் துணியப்பட்ட பொருளின்கண் ணுளதாகிய சிறப்புக்கெடச் சாதித்தல். அஃதாவது, கரணமுதலாகிய விந்திரியங்கள் பிறனொருவனுக்கிய ஆன்மாவினுடைய பொருளென்பது பக்கமும், அஃதெத்தாலென்னில்? தொக்குநிற்றலினென்பது ஏதுவும், அஃதெனபோலவென்னில்? சயனாசனங்கள்போலவென்ற சபக்கமுங்கூறியவழி; தொக்குநிற்றலினென்றவேது சயனாசனங்களின கூட்டம் பிறனுக்குப பொருளானாற்போல, கண்முதலிய விந்திரியங்களும் பிறனுடைய பொருளாகச் சாதித்துச் சயனாசனத்து ளவயவங்களையுடைய புருடனைப்போலக் கண்முதலிந்திரியத்தற்குப் புருடனாகச்சாதிக்கிற அவயவமில்லாத ஆன்மாவை யவயவமுளதாகச் சாதித்தலின், அச்சாதித்தல்தான் தன்மியின்கணுளதாகிய சிறப்பைக்கெடுத்தலின் மாறுபாடாயிற்று. [தனமத்தையுடையது தன்மி.]

தன்மிசொரூபவிபரீத சாதநமாவது—[விபரீதம் - மாறுபாடு.] தான் துணிந்துகூறப்பட்ட தன்மியாகிய பொருளினது வடிவைத் தான்கூறிய வேதுத் தானேமாறுபடுத்தல். அஃதாவது, உண்டென்று சொல்லப்பட்ட வுண்மைப்பொருளானது பொருளுமன்று பண்புமன்று தொழிலுமன்று எனக்கூறியதன்னுடைய பக்கத்துக்கு, எத்தாலென்னில்? தானொருபொருளுமாய்ப் பண்புக்குந்தொழிலுக்கும் வேறுதலாலென வேது

கூறி ; அஃதென்போலவென்ன; சாமாநியமாகிய பொதுவும் விசேடியமாகிய சிறப்பும்போலத் திட்டாந்தங்கூற, பொருளும் பண்பும் தொழிலு மொன்றுய்நின் றவையிற்றினிடத்து மிற்கும். உண்டென்றுசொல்லப்பட்ட உண்மை யவற்றின் வேருதலா லென்றுகாட்டப்பட்ட வேதுப்பொருளும், பண்பும், தொழிலும்,என்றுசொல்லப்பட்ட மூன்றினுடையஉண்மைத்தன்மை யேதுப்படுத்திக்காட்டப் பொதுவாகியவுண்மையி லுண்மைசாதிக்கப்படும் பொருட்கண் ணில்லாமையிற் காட்டப்பட்ட திட்டாந்தத்திற் பொதுவாகிய சாமாநியத்தை யொழிந்து சிறப்புப் பிறிதொன்றி லாமையானும், உண்டென்று பகர்ந்த உண்மைத்தன்மையை யில்லாமை யாக்குதலால் வேருதலென்னுமேது மாறுகொண்டதாயிற்று.

இதற்கு ஏது, வேருதல். திட்டாந்தம், பொதுவும் சிறப்பும்.

தன்மிவிசேடவிபரீத சாதநமாவது—தன்மியுடைய விசேடமின்மைசாதித்தல். அஃதாவது, பாவமாகிய உண்மைப் பொருள், பொருளுமல்ல பண்புமல்ல தொழிலுமல்ல வென்னுந் தன்னுடைய பக்கத்திற்கு, தானொருபொருளாய்ப் பண்புக்குந் தொழிலுக்கும் வேருதலாலென முன்னங்காட்டிய வேதுவே யிதற்கு ஏதுவாதலின், பாவமாகிய வுண்மை தன்னை யுள்ளதென்றறிவித்தது. அதன்கண்ணே யுளதாயிருப்பதோர் தொழிலாதலால் குணங் கன்மங்களோ டொற்றுமைப்படுக இவற்றொடு வேருதலென்று காட்டப்பட்ட வேதுவினது விசேடத்தைக் கெடுத்தலாதலால் மாறுண்டாயிற்று.

விருத்தவேது முடிந்தது.

ஏதுப்போலி மூன்றுவகையானும்வந்தது, பதினுறு மேலுமிப்படி வருவனவற்றுற்காண்க.

ஏதுப்போலி முடிந்தது.

திட்டாந்தப்போலி வருமாறு:—

திட்டாந்தமு மிருவகைப்படும். அவைவருமாறு.—சாதநதன்மவிகலம், சாத்தியதன்மவிகலம், உபயதன்மவிகலம். ஐய அந்நுவயம், விபரீதவந்நுவயம் என சாதன்மியதிட்டாந்த மைந்தாம்; சாத்தியவியாவிருத்தி, சாதநவியாவிருத்தி, உபயவியாவிருத்தி, ஐயவெதிரேகம், விபரீதவெதிரேகம் என வைதன்மியதிட்டாந்த மைந்தாம். ஆகப்பத்தாம்.

சாதநதன்மவிகலமாவது—[விகலம்-சுருங்கல்.] சாதநமாயுள்ள பொருளுஞ் சாத்தியமாயுள்ளபொருளு மிரண்டுமெடுத்துக்காட்டின்கண்ணே யுளதாகவேண்டும். அவ்வாறன்றிச் சாதநங்குறைவுபடவருவது, சத்தம், நித்தம், வடிவுடைத்தல்லவாதலால். அஃதெங்ஙனேயென்னில்? யாதொருபொருள் வடிவுடைத்தல்லாதது அப்பொருள் நித்தமாதல் காண்டல் பொருந்திற்று, பரமாணுக்கண்ணே யெனக்கூறியவழித்திட்டாந்தமாகக் காட்டப்பட்ட பரமாணு நித்தமாகிய தன்மையையுடைத்தாய வடிவுடைத்தாதலின், சாத்திய தன்மம் நித்தத்துவங் குறைவின்றி, சாதநதன்மம் வடிவின்மை குறைவுபடுதலாயிற்று. இவன் பரமாணு அழியாது வடிவுடைத்தென்று கொண்டவனென வறிக.

சாத்திய தன்மவிகலமாவது—காட்டப்பட்ட திட்டாந்தத்திலே சாத்தியதன்மங் குறைவுபடுதல். அஃதாவது, சாத்தியமாயுள்ளபொருளுஞ் சாதநமாயுள்ள ஏதுவு மிரண்டுமெடுத்துக் காட்டின் கண்ணே யுளதாகவேண்டும். அவ்வாறன்றிச் சாதநமாயுள்ள வேதுநிறைந்து சாத்தியமாயுள்ளபொருள் குறைபட வருதலாம். வருமாறு, சத்தம் நித்தம். அஃதெங்ஙனேயென்னில்? அமூர்த்தமாதலால். அஃதென்போலவென்னில்? யாதொருபொருள் வடிவில்லாதது நித்தம், புத்தியைப்போலவெ

ன்றால்? எடுத்துக் காட்டாகக் காட்டப்பட்ட புத்தி வடிவில்லையால் நின்றே அநித்தமாதலால், சாதநம் வடிவில்லாமை நிறைந்து, சாதிக்கப்படுவதான நித்தத்துவங் குறைவுபாடாயிற்று.

உபயதன்ம விகலமாவது—காட்டப்பட்ட திட்டாந்தத்திலே சாத்தியமாயுள்ள துணிபொருளுஞ் சாதநமாயுள்ள வேதுவும் நிறையவேண்டும். அவ்வாறொழிந்து, அவ்விரண்டுங் குறைவுபடுதல்.

இந்த வுபய தன்மவிகலம் உள்பொருட்கண்ணும் இல்பொருட் கண்ணும் வரும்.

அவற்றுள், உள்பொருட்கண் வரும் உபயதன்மவிகலமாவது—துணியப்பட்ட பொருட்கண்ணே சாத்தியமாயுள்ள பொருளுஞ் சாதநமாயுள்ள வேதுவுமாகிப் பொருந்துவருமிரண்டுங் குறைவுபடக் காட்டுதலாம். அஃதாவது, சத்தம் நித்தம் என்னும் பக்கமும்-வடிவின்மையாலென்னு மேதுவுங் கூறியவழி, யாதொரு பொருள் யாதொருவடிவில்லாதது நித்தம் கடம்போலெனக் கூறில், அவ்வாறெடுத்துக் காட்டப்பட்ட கடந் தானுண்டாகிச் சாதிக்கப் படுவதாயுள்ள நித்தத்துவமுஞ் சாதநமாயுள்ள வடிவின்மையு மிரண்டுங் குறைவுபட்டது.

இல்பொருட்கண் வரும் உபயதன்ம விகலமாவது—இல்லாத பொருளின் கண்ணே, சாத்தியமாகிய துணிபொருள் சாதநமாகிய பொதுவு மாகிய விரண்டுங் குறையக்காட்டுதல். அஃதாவது, சத்தம் நித்தம் வடிவின்மையா லென்றவழி யாதொருபொருள் யாதொருபொருள் வடிவுடைத்தல்லாதது நித்தம் ஆகாசம்போலவென்னு மெடுத்துக்காட்டின் கண்ணே சாதிக்கப்படும் பொருளினதியல்பாகிய நித்தமுஞ் சாதனமாயுள்

ள பொருளினதியல்பாகிய வடிவின்மையுமாகிய விரண்டும் ஆகாசம்பொருளல்ல வென்னும் பௌத்தனுக்கு, அவ்வாகாசத்தின் கண்ணில்லாமையாலே குறைவுபடும். உண்டென்னுஞ்சாங்கியனுக்கும் அவ்வாகாசம் அநித்தமாய் வடிவுடைத்தாதலால் அவனுக்குங் குறைவுபடும்.

ஐபவந்நுவயமாவது — சாத்தியமாகியபொருளுஞ் சாதகமாகியவேதுவுந் தம்மிற்பொருந்துங் கூட்டவளவு கூறாதே யங்தச் சாத்தியத்தன்மையைக் காட்டுதல். அஃதாவது, சத்தம் அநித்தம், பண்ணப்படுதலால். யாதொருபொருள் யாதொருபொருள் பண்ணப்படுவது அநித்தமென்றுகூறு மொற்றுமைப்பாடுகூறாதே, கடத்தின்கண்ணே பண்ணப்படுதலும் அநித்தமுங் காணப்பட்டதென்று கூறியவழி, அவ்விரண்டிற்கு மொற்றுமைப்பாடுதெரியாதாகும். ஆதலா லையமாயிற்று.

விபரீதவந்நுவயமாவது— பண்ணப்பட்ட கடமுதலாயினவற்றினும், பண்ணப்படாத மின்முதலாயினவற்றினும், இவ்விரண்டுகூற்றின் கண்ணுங்கிடக்கும் அநித்தத்திற்கும் பொதுவாகிய சாத்தியதன்மத்தாலே, கடமுதலாயின அநேகப் பொருட்கட் கிடக்கும் பண்ணப்படுவதாய சாதநதன்மத்தை யறுதியிடுதல். அஃதாவது, சத்தம் அநித்தம், பண்ணப்படுதலாலெனின்? யாதொருபொருள் யாதொருபொருள் பண்ணப்படும் அநித்தமெனச் சாதநதன்மத்தாலே சாத்தியதன்மத்தைக் கருதி, யாதொருபொருள் யாதொருபொருள் பண்ணடுவதென விபக்கமாகிய சாத்தியதன்மத்தாலே சாதநதன்மத்தைக் குறித்தல். அந்தப்பொதுவாகிய சாதநஞ் சாத்தியத்தையின்றியும் நிகழ்தலின் மாறுபாடாயிற்று.

சாதன்மியதிட்டாந்த முடிந்தது.

இனி வைதன்மியதிட்டாந்தம் வருமாறு:—

சாத்திய வியாவிருத்தியாவது—[வியாவிருத்தி - மீளுதல்.] சாதநதன்மமாகியவேது மீண்டு, சாத்தியதன்மமாகிய பொருள் மீளாதொழிதல். அஃதாவது, சத்தம் நித்தம் வடிவில்லையாதலி னென்றால், யாதொருபொருள் யாதொருபொருள் நித்தமாயுள்ளது வடிவில்லை, அஃதென்போலவெனில், பரமாணுவைப்போல வென்றுகூறில், அவ்வாறு வைதன்மியவேது வெடுத்துக்காட்டாகக் காட்டப்பட்ட பரமாணு நித்தமாய் வடிவுடைத்தாதலால் அச்சாதநம் வடிவுடைத்தல்லாமை மீண்டு சாத்தியமாயுள்ள பொருள் மீளாதொழிதலை யுடைத்தாயிற்று.

சாதநவியாவிருத்தியாவது— காட்டப்பட்ட வைதன்மிய வெடுத்துக்காட்டின்கட் சாத்தியமாகியபொருள் மீண்டு சாதநமாகியபொருள் மீளாதொழிதல். அஃதாவது, சத்த மநித்தம் வடிவுடைத்தாதலினென்றால், யாதொருபொருள் யாதொருபொருள்நித்தமுமல்ல வடிவுடைத்துமல்ல தன்மம் போலவென்றால், வைதன்மிய வெடுத்துக்காட்டாகக் காட்டப்பட்ட தன்மம் வடிவுடைத்தல்லவாய் நின்று அநித்தமாதலிற் சாதிக்கப்படும் பொருளாகிய அநித்த மீண்டு வடிவுடைத்தல்லாமை மீளாதொழியலாயிற்று. [தன்மம்—புண்ணியம்] அழியாமனின்றாட்டுதலின் அநித்தமன்றென்றார்.

உபயவியாவிருத்தி யிருவகைப்படும். அவை யுள்பொளிருள்கண்ணு மில்பொருளின்கண்ணும் வரும்.

உள்பொருட்கண் உபயவியாவிருத்தியாவது—உள்பொருட்கண்ணே சாத்தியமாயுள்ள பொருளுஞ் சாதநமாயுள்ள வேதுவு மீளாதபடி வைதன்மியதிட்டாந்த மெடுத்துக் காட்டாகக் காட்டப்படுதல். அஃதாவது, சத்தமநித்தம் மூர்த்தமாதலாலென்றவழி யாதொருபொருள் அநித்தமுமல்ல அது வடிவுடை

த்துமல்ல; ஆகாசம்போலவென்று வைதன்மிய வெடுத்துக்கா
ட்டாகக் காட்டியவழி, ஆகாசம் பொருளென்னுஞ் சாங்
கியன்முதலாயினோர்க்கு, ஆகாசத்தின்கண்ணே நித்தமும் மூர்த்த
மும் மிரண்டுங் கார்யமாகில், சாத்தியமாகிய பொருளினது நித்
தமுஞ் சாதனமாகிய வேதுவினது வடிவின்மையுங் கண்டி
லவாயிற்று.

இப்பொருட்கண் உபயவியாவிருத்தியாவது— சத்த நித்த
ம் அமூர்த்தமாதலாலென்றவழி, யாதொருபொருள் யாதொ
ருபொருள்நித்தமுமல்ல வடிவுடைத்தென்றுமல்ல ஆகாசம்
போலவென வைதன்மிய வெடுத்துக்காட்டாகக்காட்டில்; ஆகா
சம் பொருளல்லவென்னும் பௌத்தனுக்கு ஆகாசந்தானே யி
ன்மையானல், சாத்தியமாகிய பொருளினது நித்தமுஞ், சாத
னமாகிய வேதுவினது வடிவுண்மையு மிரண்டு மீட்சி மீளாமை
யு மில்லையாயிற்று. நித்தமுமல்ல வடிவுடைத் தன்றுமன்றெ
ன்றது, அநித்தமுமாய் வடிவுடைத்தாயிருக்குமென்றதாம்.

ஐயவெதிரேகமாவது—சாத்தியமாகிய பொருளில்லாதவிட
த்துச் சாதனமாகிய வேதுவின்மை சொல்லாதேவிடுதலாம்.
அஃதாவது, சத்த மநித்தம்பண்ணப்படாமையா லென்றல், யா
தொருபொருள் யாதொருபொருள் அநித்தமுமல்ல பண்ணப்ப
டுவதல்லாததுமல்லவென்னும் வேற்றுமைவாய்பாடு தெரிய
ச்சொல்லாது, கடத்தின்கண்ணே பண்ணப்படுதலும் அநித்
தமுங் கண்டேமாதலா னென்றவழி, யவ்வேற்றுமை வாய்
பாடு தெரியாதாயிற்று.

விபரீதவெதிரேகமாவது—பிரிக்கும்பொருளைப் பிரிக்கும்வா
ய்பாட்டாற் பிரியாது தலைதடுமாறாகக்கூறல். அஃதாவது; ச
த்தம்அநித்தம் மூர்த்தமாதலானென நின்றவிடத்து, யாதொரு
பொருள் யாதொருபொருள்நித்தமுமில்லை யவ்விடத்துமூர்த்த

முமில்லையென்றே,யாதோரிடத்து அமூர்த்தமில்லையவ்விடத்து நித்தமுமில்லையென்றால் வெதிரேக மாறுபடுமெனக்கொள்க.

மேலுமிவ்வாறுவரும் போலிப்பொருள்களெல்லாம் வந்துழிக்காண்க.

அளவை முடிந்தது.

அளவைச் சிறப்பு.

பண்ணில்லாற் கில்லாத பாடற் பயன்போன்றுங்
கண்ணில்லாற் கில்லாக் கவின்போன்று—மெண்ணிலா
வஞ்சொ லளவை யறியா தவற்கில்லைச்
செஞ்சொ லளவின் சிறப்பு.

ஆசிரியர்வணக்கம்.

எண்ணிறந்த கல்விதனை யெண்ணியா விட்டாலும்
விண்ணிறைந்த கீர்த்தி விளைந்தாலுங்—கண்ணிறைந்த
பேரின்ப வெள்ளம் பெறக்கிடையா நெஞ்சமே
சீரின்ப வாசானைத் தேடு.

தனியன்.

பெத்தமறு பாண்டிப் பெருமாள் சிவஞான
சித்தி யளவைக்குந் தேர்ந்துணர்ந்த - முத்தித்
திடமுடைய வண்மைச் சிவஞான போதத்
துடனெழுதி னனல் லுரை.

அளவைக்கு
பாண்டிப்பெருமாள் உரை
முடிந்தது.

௧-வது, 'அவனவளது' என்னுஞ்சூத்திரத்துக்குதாரணம் வருமாறு.

வெண்பா.

பூதாதி யீறு முதலுந் துணையாகப்
பேதாய் திதியாகும் பெற்றிமையி—னோதாரோ
வொன்றொருவன் றன்றி யுளதா யிறக்கண்டு
மன்றென்று முண்டென்ன வாய்ந்து.

இது பிரபஞ்சம்நித்தமென்றும், தோற்றமுமீறுஞ் சுபாவமென்றும்சார்பிற்றோன்றுமென்றும்,சொல்வோர்கு; அவையப்படியல்ல, ஒருகத்தாவுண்டென்கிறது.

இ-ள். பேதா அறிவில்லாதவனே.
ய் எ-து.

என்றது, பிரபஞ்ச மநாதியேநித்தம், தோற்றமு மீறுமில்லையென்கிற வறியாதவனே !

பூதாதி திதி பிரபஞ்சம் நிற்கின்ற முறைமையிலே.
யாகும் பெற்றி
மையில் எ-து.

ஈறு முதலுந் சங்காரமுந் தோற்றமு முண்டாக யாவ
துணையாக வோ ருஞ் சொல்லாரோ? சொன்னதொக்கும்.
தாரோ எ-து.

அநாதிநித்தமலத் தொன்றுதலும் இறுதலு மியல்பு, தோற்றி லோர்சார்பிலேதோன்றும், அதற்கொரு சத்தாவு மில்லை யெ ன்பையாகில்?

ஒன் றொன்றி — ஒருபொருளிலே யொருபொருள் தோன்
றிரண்டியுளதா — றி நின்றழிவதனைப் பிரத்தியக்ஷமாகக்கண்
பிறக் கண்டு மன் — டுவருகச்செயும், நீ சொல்லுஞ் சுபாவமுந்
றென்று முண் — சார்புமல்லவென்றும், அந்தமென்று தொ
டென்ன வாய்ந் — ழிலுக்கு மொரு கர்த்தா உண்டென்றும்,
தி ... எ-து. — ஆராய்ந்து யாவருஞ்சொல்லாநிற்பரோ.
யான் சொல்லவேணுமோ எ-று.

என்னவும் என்றும் உம்மை தொக்கு நின்றது.

ஓ... என்றதனை யிரண்டிடத்துங் கூட்டுக. அது தாப்
பிசை.

இதற்கு சிவஞானசித்தியார் ௧௩-இல், உ-ம்.

"உதிப்பது மீறுமுண்டென் றுரைப்பதிங் கென்னைமுன்னோர்
மதித்துல கநாதியாக மன்னிய தென்பரென்னி
லிதுக்கியா னநுமானுதி யெடேனிப்பூ தாதியெல்லாம்
விதிப்படி தோற்றிமாயக் காணலானே மேதினிக்கே". (உ)

"இயல்புகாண் டோற்றிமாய்கை யென்றிடி னியல்பினுக்குச்
செயலதின் றியல்புசெய்தி செய்தியே லியல்பதின்று
மியல்பதாம் பூதந்தானே யியற்றிடுஞ் செய்திமென்னிற்
செயல்செய்வா னொருவன்வேண்டுஞ் செயற்படுஞ் சேதனத்தால்"

"நிலம்புன லனல்காலகான நிறுத்திடு மழிக்குமாக்கும்
மலந்தரு மொருவனிங்குப் பண்ணிட வேண்டாவென்னி
லிலங்கிய தோற்றநிற்ற லீறிவை யிசைதலாலே
நலங்கிளர் தோற்றநாசந் தனக்கிலா நாதன் வேண்டும்". (௩)

'சார்பினிற் றோற்றமெல்லாந் தருபவ னில்லையென்னிற்
றறினில் ஓதற்கோதோற்ற முள்ளதற் கோர்செப்பா

யோரினில் லதுவுந்தோன்று துள்ளதே லுதிக்கவேண்டாஞ்
சோர்விலா திரண்டுமன்றி நிற்பது தோன்றுமன்றே". (ரு)

என்பதனால் இதன்வழி நூலார் விரித்துரைத்தவா றறிக.

இது, பிரபஞ்சமொருகர்த்தாவை யுடைத்தென்னும் பக்கமும், அஃதெங்ஙனமெனின்? காரியமாயிருத்தலால் என்னுமேதுவும், அந்நுவயமாகிய சாதநசாத்தியப் பொருட்டாயினவா றறிக. (க)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். உள்ளதன்பால் அவ்விரண்டுங் கிடத்தல் யாங்ஙனம் என்னுங் கடாவையாசங்கித்து ஏதுவைவலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். பேதாய். எ-து. காட்சியளவைகளானும் அறியப்படாத மடவோனே—பூதாதி. எ-து. பூதமுதற்காரணமாகவுடைய பிரபஞ்சத்திற்கு—திதி ஈறும்முதலும் துணை ஆகஆகும். எ-து. திதி, நிகழ்வழி நாசமும் உற்பத்தியுந் தனக்குத் துணைக்காரணமாகக்கொண்டே நிகழாநிற்கும். அற்றாயினும் ஒன்று தோன்ற ஒன்று நிற்ப ஒன்றழிவதன்றி ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கேயழியக் கண்டிலமாலெனின்;—ஒன்று ஒன்றின்பெற்றிமையின்தோன்றி உளதாய் இறக்கண்டும். எ-து. ஒவ்வொரு காலவிசேடத்திற் சாதிபற்றி ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கேயழிவதனைக் கண்டவைத்தும்—என்றும் அன்று உண்டு என்ன ஆய்ந்து ஓதாரோ எ-து. என்றாயினும் அதற்குரியகாலம் வருமென்று உலகத்திற்கும் அங்ஙனமாதலுண்டென்று அக்காட்சிபற்றி ஆராய்ந்து சொல்லார்களோ உன்னைப்போலும் மடமையில்லாதோர் எ-து

பூதாதி அன்மொழித்தொகை. பூதத்துக்கு மேலுளவாய தத்துவங்கள் உலோகாயதருக்கு உடம்பாடன்மையின், பூதமுதலாய தத்துவங்களெனவுரைத்தல் ஈண்டைக்கேலாமையறிக.

பூதாதிக்கென நான்கனுருபு விரித்துரைக்க; அது பின்னருஞ் சென்றியையும். ஆகுமென்பது முற்றுவினை.

ஈண்டுப் பெற்றிமை என்றது சாதியை.

ஓகாரம் எதிர்மறை.

ஒன்றொன்றினென்பது "ஒன்றொன்றுப் பார்த்துணர்வ தன்னைமே" என்றாற்போல அடுக்குமொழி; அது காலவிசேடமாதல் என்று மன்றெனப் பின்வருதலாற் பெற்றாம்.

ஒருங்கேயென்பது சொல்லெச்சம்.

ஒன்றொன்றிற்றோன்றியுளதாயிறுதலாவது "பயில்வித்தெல்லாங் - காரிடமதனிற் காட்டுமங்குரங் கழியும் வேனில்" என்பதனானறிக. சித் - ௬ - ௧ - ௫, ௯—௭.

"கண்டும்" உம்மைசிறப்பு.

௧—௫, முதலதிகரணம் முடிந்தது.

இலயித்த தன்னி லிலயித்த தாமலத்தா
லிலயித்த வாறுளதா வேண்டு - மிலயித்த
தத்திதியி லென்னி லழியா தவையழிவ
தத்திதியு மாதியுமா மங்கு.

௧-து. இல்லதற்கு ஏது சங்கரிப்புண்டபிரபஞ்சஞ் சங்கரித்தகத்தாவாலொழிந்து தோன்றுமென்பதாம். எனவேஇல்லதற்குத் தோற்றமில்லையாதலானும், உள்ளது தோற்றுவிக்கவேண்டா வாதலானும், உள்ளதுமில்லதுமா யிருப்பது தோன்று

மென்பதுந்தோன்றுமிடத்துச்செய்வோனையொழிந்து காரியப் படாதென்பதூஉம், மண்ணிற்கடாதி யொழிந்துபடாநிதோன். ருதவாறுபோலத்தோன்றுமிடத்தல்லது தோன்றுதென்பதூஉ ம், கத்தாவினிடத் தொடுங்காது மாயையிலே யொடுங்குமென் பதூஉம், ஆதலாற் சங்காரகத்தாவேமுதல்வனென்பதூஉங் கூ றுகின்றார்.

இ-ள். இலயித் சங்கரித்த கர்த்தாவாலே.

த தன்

வில் எ-து.

இலயித்த தா சங்கரிப்புண்டபிரபஞ்சம் உண்டாம்.

ம். எ-து.

அஃதென்போலவென்னில்? ஒருவன் கற்றசொல்லும் பொ ருளும் அவன் கருத்திலே யொடுங்கி வேண்டினவிடத்தே விரி யுமாறுபோலவும், சாக்கிராதியாகிய அவத்தைகள் ...ன்மாவி னிடத்திலே யொடுங்கித் தோன்றுமாறுபோலவும் ஆம்.

அஃதப்படியாகில், கர்த்தாவினிடத்தே யொடுங்கின பிர பஞ்ச மீளவுந் தோன்றுவானே னென்கின்றுயாகில்?

மலத்தா லிலே மாயையிலே யொடுங்கி மீளவுமந்தமு யித்தவா றுளதா றைமையிலே தோன்றும்.

வேண்டும் எ-து.

எனவே, கர்த்தாவினிடத்துத் தோன்றுது மாயை யுபாதா னமென்பதாயிற்று.

அவ்வாறென்றது, உள்ளது மில்லதுமாகிய பூதாதி தோன் றுமென்பதூஉம்,மண்ணிற் கடாதியொழிந்து படாதி தோன்று றுபோலத் தோன்றுவதல்லது தோன்றுதென்பதூஉமாம்.

இலயித்தது அத்திதியிலென்னில் எ-து.

பிரபஞ்சஞ் சேரச் சங்காரப்படாது சில நிற்கச் சிலசங்காரப்படும். அந்தச்சங்காரப் பட்டது நின்றவையிற்றிலே மீளவுமுண்டாம் என்கின்றாயாகில்?

அழியாதவை யழிவதத்திதியு மாதியுமாமங்கு எ-து.

மகாசங்காரத்து, நீயழியாமற் சிலநிற்கு மென்று சொல்கின்றவையெல்லாஞ் சேர வழியும், நிற்றலும் தோற்றமு மவையிற்றுக் குண்டாகையால். எ-று.

இப்பொருள் சித்தியார் - க—சூ.

“[illegible] பொருளுஞ் சொல்லுங்கருத்தினிலொடுங்கித் தோன்றும், பெற்றியுஞ் சாக்கிராதி யுயிரினிற் பிறந்தொடுக்க, முற்றதும் போலவெல்லா வுலகமு முதித்தொடுங்கப், பற்றொடு பற்றறநின்றி நின்றனன் பரனுமன்றே.” (௩௧)

“உயிரவை யொடுங்கிப்பின்னு முதிப்ப[illegible] [illegible]ன்னிற், செயிருறு மலத்தினாகுஞ் சிதைந்ததே தென்னிற்சித்தத், [illegible]யர்மொழி காரியங்க ளழியுங்கா ரணங்கிடக்கும், பயிரு காரிய[illegible] ப[illegible]டுபோற் பண்ணுமீசன்”. (௩௨)

“[illegible] நின்றதொன் றுளதேலுண்டா - மில் [illegible] தோற்றமு மிசையாதாகு, முள்ளகா ரணத்து[illegible] காரிய முதிக்குமன்னி, யில்லாதாம் படங்கடாதி யெழிற்கு மியற்றுவோனும்.” (௯)

“[illegible]பொரு ளொருவனின்றி யு[illegible] தாகுமென்னி[illegible], [illegible] [illegible]டேயின்றாந் தன்மையின் றின்றேலுண்டா[illegible], [illegible]ருவின் றிலதுகாரிய முதலுள தாகுமென்னி[illegible], கருதுகா[illegible]மு முண்டாந் தோற்றமுஞ் சத்தாவாலாம்” (௭)

"ஓரிட மழியப்பின்னு மோரிட நிற்குமொக்கப், பாரிடம
ழிவதின்று மென்றிடிற் பயில்வித்தெல்லாங், காரிடமதனிற்
காட்டு மங்குரங் கழியும் வேனில், சீருடைத் துலகுகாலஞ்
சேர்ந்திடப் பெயர்ந்துசெல்லும்". (௬)

என்பன வற்றா லிதன்வழி நூலார் விரித்துரைத்தவாறறிக.

இனி, இலயி சங்கரிப்புண்ட பிரபஞ்சம் அளிக்கின்ற
த்த தத்திதியி கத்தாவாலே யென்கின்றாயாகில்? சங்கரிப்
லென்னில் எ-து. புணரூது அவை யழிவது அந்த வளித்தலு
ம்படைத்தலும் சங்காரத்தே சங்கரிப்பு
ண்ணும்.

அத்திதியு மாதி அளித்தலும் படைத்தலும் சங்கார
யுமா மங்கு எ-து. கத்தாவினிடத்தேயாம். எனபாரு முளர்.

சங்கார கத்தாவே கத்தாவென்றும் மாயையுபாதானமென்
றுங் கூறலிற் றன்னுடைய பக்கமாயிற்று. இந்தப்பக்கத்து
க்கு ஏதுவுந் திட்டாந்தமும் மேல்வருவனவற்றா லறிக. (௨)

சிவஞானமுனிவர் உரை.

இலயித்த தன்னி லிலயித்த தாமலத்தா
லிலயித்த வாறுளதா வேண்டும்

எ-து. உ-ம். எ-னின். உலகம் உள்ளதாயின் உள்ளதற்கு உ
ண்டாகவேண்டுவதில்லையாகலாற் சற்காரியவாதம் அடாதன
னப் புத்தர் கூறுங்கடாவையாசங்கித்து இல்லதற்குத்தோற்ற
மின்மையின் என்றவேதுவை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள், இலயித்தது இலயித்த தன்னில் ஆம். எ-து. உள்ள
தாயினுஞ் சங்காரகாலத்தின்ஒடுங்கிய தாகலான் அவ்வொடு
ங்கியவுலகம் தானொடுங்குதற்கு நிலைக்களமான சங்காரகருத்

தாவினின்றும் படைப்புக்காலத்தின் மீளவுளதாம். அற்றேல் ஒடுங்கியது ஒடுங்கியவாறே யொழியாது மீளவுண்டாகவேண்டாம்: வேண்டுமாயின், முன்னொடுங்காது நிலைபெறவே யமையும்: அவ்வாறன்றி ஒடுங்கி மீளவுளதாவது எற்றுக்கெனின்;—மலத்தால். எ-து. உள்ளதாகிய உலகம் கருமமலம் பரிபாகமாதற்பொருட்டு ஒடுங்கி ஆணவமலம் பரிபாகமாதற்பொருட்டு மீளவுமுண்டாம். அற்றேல் முன்னின்ற பிரபஞ்சம் நாசமாக வேறு தோன்றுமென்னாமல் அதுவே ஒடுங்கி நின்று மீளவுளதாமென்றற்குப் பிரமாணம் என்னையெனின்;—இலயித்தவாறு உளது ஆ வேண்டும். எ-து. எஃதெவ்வாறு நின்றொடுங்கிற்று அஃதவ்வொடுங்கியவாறே உளதாதல் எல்லாராலும் விரும்பப்படும். எ-று.

எனவே அந்நியமமில்லையாயின் நெற்கமுகாய்நீளாது நெல்லாய் நீளுதற்கு ஏதுவென்னையென்னுந் தருக்கமே அதனையறிவுறுத்துமென்றவாறாயிற்று. சற்காரியவாதத்தினியல்பு "தந்து முதல்காரகம்" என்னும் ஞானாமிர்தத்தினுங் காண்க.

இதனானே, இல்லதுமுள்ளதுமல்லாத பொருளொன்றுமென்னுஞ் சூனியவாதிகளும், இல்லதுமுள்ளதுமாய பொருளொன்றுமென்னும் அநேகாந்தவாதிகளும் மறுக்கப்பட்டவாறறிக.

இலயித்த, தத்திதியி லென்னி னழியா தலையழிவ
தத்திதியு மாதியுமா மங்கு.

எ-து. உ-ம். எ-னின். இனிச் சற்காரியவாதத்தின்அவ்வகாரியங்கள் தத்தமுதற்காரணத்தொடுங்குமெனவே கோடலின், உலகிற்கு முதற்காரணமாகிய மூலப்பகுதி வாசுதேவனுருவாகலான், உலகம் அவன்மாட்டொடுங்குமென்றலே அமைவுடைத்தன்றி முதற்காரணத்தின் வேறாய நிமித்தகாரணமெனக் கொண்ட சங்காரகருத்தாவின் மாட்டொடுங்குமென்றல்

பொருந்தாதெனப் பாஞ்சராத்திரிகள் கூறுங்கோளை யாசங்கித்து; ஒடுங்கின சங்காரத்தின் எனவும் இலயித்ததனின் எனவும் கூறிப் போந்த குறிப்பேதுவை வலியுறுத்துதலுமாயிற்று.

இ-ள். இலயித்தது அத்திதியில் என்னின். எ-று. 'உலகமொடுங்கியது அந்தமலப்பகுதிவடிவாய திதிகாரணமாயின்,—அவை அறியாது. எ-று. நீ அங்ஙனங்கொள்ளினும் மூலப்பகுதிக்கு மேலுள்ள புவனங்கள் அதனுல் வியாபிக்கப்படாமையிற் கீழுள்ள ஏகதேசமாத்திரையே யொடுங்குவதன்றி மாயாகாரியத்தொகுதி முழுவதூஉம் ஒடுங்காது. அற்றேல், மாயாகாரியத்தொகுதி முழுவதூஉம் யாண்டொடுங்குவதெனின்,—அத்திதியும் ஆதியும்' ஆம் அந்த அறிவு. எ-று. அந்தத் திதிகடவுளும் படைப்புக்கடவுளுந் தோன்றுதற்குக் காரணமாகிய அச்சங்காரக்கடவுளிடத்தே அவ்வொடுக்கப்பட அறிவதாம் அத்தொகுதி, எ-று.

இவ்வெண்பாவினை "செய்யுட்க ளோசை சிதையுங்காலீரளபு—மைபப்பா டின்றி யமையுமா—மைதீரொற், றின்றியுஞ் செய்யுட் கெடினொற்றை யுண்டாக்கு—குன்றுமேலொற்றளபுங் கொள்" என்பதுபோல இரண்டதிகாரணப்பொருள்படுமாறு இருதொடராக வைத்துரையாக்காற் பொருளிலைபுபடாண்மை யறிக.

இலயித்த வென்னும் பெயரெச்சம் தன்னென்னும் இடப்பெயரோடு முடிந்தது.

இலயித்ததென்றது ஏதுப்பொருண்மை யுணரநின்ற பெயர் இலயித்ததெனச் சற்காரிய வாதங் கூறவே இலயித்த வவத்தையின் அவ்வக்காரிய சத்தி சமூகமாய்ச் சூக்குமமாய் நிற்பதொன்றுண்டு. அதுவே முதற்காரணமெனப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாகிய மாயையுண்மையும் பெறப்பட்டது.

ஆவென்பது முதனிலைத்தொழிற்பெயர். வேண்டுமெனச் செ யப்படுபொருளைச் செய்ததுபோலக் கூறினார்.

[illegible]லை தொகுதி; அஃறிணைப்பன்மைப்பெயரொன்பார்க்கு அ ழியாது அழிவின்றென்னும் ஒருமைகளோடியையாமையும் உத்த ரமாகாமையுமுணர்க.

நிறியும் ஆறியும் ஆகுபெயர். ஆமங்கு பெயரெச்சமுடிபு.

இ[illegible]பமதத்தையும் மறுத்தற்பொருட்டுப் படைப்புக்கடவுளையும் உடன் கூறினார்.

நிமித்தகாரணனாகிய முதல்வன் உலகிற்கு முதற்காரணனல் லனாயினும் முதற்காரணமாகிய மாயைக்கு ஆதாரமாய்நிற்ற லின், உலகம் ஆண்டொடுங்கி ஆண்டுநின்று தோன்றுதல் அமை யுமென்பது வருகின்ற வெண்பாவிற் பெறப்படும்.

வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா
மத்தன்றா ணிற்ற லவர்வினையால் - வித்தகமாம்
வேட்டுவனா மப்புழுப்போல் வேண்டுருவைத் தான்
கொடுத்துக், கூட்டரனே மண்போற் குளிர்ந்து. (௫)

க-து. மாயையிடத்துள்ளது தோன்றுமென்பதூஉம், அது தோன்றுமிடத்து வினைக்கீடாகத் தோன்றுமென்பதூஉம், தோ ற்றுவிப்போன் தன்னுடைய சத்தியாலே தோற்றுவிப்ப னென் பதூஉம், ஆன்மா வழிந்து தோன்றுதென்பதூஉம், கூறுகின் றது.

இ-ள். வித்து அங்குரந் தோன்றினவாற்றாலே (அது)
ண்டா (தோன்றத்தக்க) வித்தையுள்ளதாம்.
மூலமு

லொத்த
வா எ-
து.

எ-து. பிரபஞ்சந் தோன்றி நின்றழியும், நீர் சொல்லுகின்ற மாயை யுபாதானமாக ஒடுங்குவது தோற்றுவ தாகாது. அஃ தென்போல வென்னில்? ஒரு மரத்தின்க ணுண்டாகிய சாகை முதலியன வுதிர்ந்து மீளவும் அதன் கண்ணே புக்குப் புறப்பட்டாற்போல வென்போற்கு, அந்தச் சாகைமுதலியன அதற்குக் காரணமாகிய வித்துண்டாகவே யுண்டென்றதாம். எனவே வித்தில்லையாகிற் சாகைமுதலியனவு மில்லையாமென்பதாயிற்று.

தாரகமா மத்தன் ருள் எ-து. (அந்தமாயைக்குத்தாரகம்யாதென்னில் கர்த்தாவினுடைய பராசத்தி தாரகமாம் அஃதென்போல வென்னில்?

மண்போற்கு ளிர்ந்து. எ-து. ஈரத்தையுடைய மண்போலக் குளிர்ந்து. எ-று.

குளிர்ந்த வெனத்திரிக்க.

ஈரம்-கத்தா—மண்-சத்தி.

அந்தக்கத்தா நிற்கின்றபடி யெப்படி யென்கின்றீயாகில்?

நிற்றல் வித்தகமாம் எ-து. அவனிற்கின்ற முறைமை சொல்லக்கூடாது, ஆச்சரியமாயிருக்கும்.

“சீலமோ வுலகம்போலக் கொண்ணீ, நிலைசெயல் கடவுட் கண்ணே” என்பதனாலறிக. சித் - சுப - க—சு, ௬௨—செ.

அவர் வினையால் எ-து. (ஆன்மாக்கள்) அவரவர் செய்த கன்மத்தாலே.

அரன் வேண்டுருவைத் தான் கொடுத்துக் கூட்டும் வேட்டுவஞமப்புழுப் போல். எ-து.

சங்காரகத்தா வேண்டின ரூபத்தைக் கூட்டு முறைமை வேட்டுவளியனு லாகத்தக்க புழுப்போலும். எ-று.

இ-து. மாயாகாரியந் தோன்றி யழியு மாறுபோல ஆன்மாவுந் தோன்றுவ தழிவதா மென்போருக் கில்லையென்று மறுத்ததாம். அஃதாவது, வேட்டுவளிய னிறந்த புழுவுக் குயிருந் தேகமுங் கொடுத்ததில்லை. உயிர் நிற்க உருபம் வேறுச்சியது. அதுபோல, ஆன்மாநிற்க வதன்வினைக்கீடாக வேண்டினரூபத்தைக் கொடுப்பனென்றதாம்.

இதனை, அச்சுமாறுதென்போருக்குக் காட்டுவாருமுளர் அது இரண்டாஞ் சூத்திரத்தே வருகின்ற தாதலாற் புனருத்தி கூறுமெனவறிக. எனவே, மாயை முதற்காரணம், சத்தி துணைக்காரணம், கத்தா நிமித்தகாரணன் என்றாராயிற்று.

அது, "காரியங் காரணங்கள் முதல்துணை நிமித்தங்கண்டாய், பாரின்மண் டிரிகைபண்ணு மவன்முதல் துணைநிமித்தம்,— தேரின்மண் மாயையாகத் திரிகைதன் சத்தியாக,—வாரியன் குலாலனாய்நின் றாக்குவ னகிலமெல்லாம்" என்பதனாலறிக.

சித்-க-சூ, உஅ—செ.

மாயை யென்றது சுத்தமாயையும் அசுத்தமாயையும்.

மாயை யுபாதான மென்னுந் துணிபொருட் பக்கத்துக்குப் பிரபஞ்சங் காரியமாய் வருதலாலெனக் காரியம் ஏதுவும் வித்து முளையும் போலவெனச் சபக்கமும், வித்தில்லையாகில் இலைமுதலாயின வில்லையென விபக்கமும், கூறியவாறறிக.

ஆன்மா வழிந்து தோன்றுதென்னும் பக்கத்துக்குப், புழுப்போல வென்னுஞ் சபக்கம் கூறியவாறு காண்க.

மாயைக்குத் தாரகஞ் சத்தியென்னும் பக்கத்துக்கு மண்போல வென்னும் சபக்கம் கூறியவாறு காண்க.

சித்தியார் க—ரு.

“தோற்றமு நிலையுமீறு மாயையின் செறிப்பதென்றே, சாற்றிடு முலகம்வித்துச் சூக்காதி யணுக்களாக, வேற்றதே லீண்டிநிற்கு மில்லதே யிசைவதின்றாம், மாற்றநீ மறந்தாயித்தால் மாயையை மதித்திடாயே” (கச)

“மாயையி னுள்ளவஞ்சம் வருவது போவதாகும், நீயிதிங் கில்லையென்னி னிகழ்ந்திடுமுயலிற்கோடு, போயுகு மிலைகளெல்லா மரங்களிற் புக்குப்போதி, ஞயிறு மதுவுமென்னிற் காரணங் கிடக்கவாமே” (கரு)

“விந்துவின் மாயையாகி மாயையி னவ்வியத்தம், வந்திடும் விந்துதன்பால் வைகரி யாதிமாயை, முந்திடு மராகமாதி முக்குண மாதிமூலந், தந்திடுஞ் சிவனவன்றன் சந்நிதி தன்னில்நின்றே” (கசா)

‘வைகரி செவியிற்கேட்ப தாயத்த வசநமாகி, மெய்தரு முதானவாயு மேவிட விளைந்தவன்னம், பொய்யற வடைவுடைத் தாய்ப் புந்திகா ரணமதாகி, யையமில் பிராணவாயு வடைந் தெழுந் தடைவுடைத்தாம்” (உ0)

“உள்ளுணர் வோசையாகிச் செவியினி லுறுதல்செய்யா, தொளிரிய பிராணவாயு விருத்தியை யுடையதன்றித், தெள்ளிய வக்கரங்கள் சிந்திடுஞ் செயலதின்றி, மெள்ளவே யெழுந்துநிற்கு மத்திமை வேறதாயே” (உக)

"வேற்றுமைப் பட்டவன்னம் வெவ்வேறு விபாகமாகித், தோற்றுத லடைவொடுக்கிச் சொயம்பிர காசமாகிச், சாற்றிய மயிலினண்டந் தரித்திடுஞ் சலமேபோன்றங், காற்றவே யுடையதாகிப் பைசந்தி யமர்ந்துநிற்கும்" (உ௪)

"சூக்கும வாக்கத்துள்ளே சோதியா யழிவதின்றி, யாக்கிடுமதிகாரத்துக் கழிவினைத் தன்னைக்கண்டால், நீக்கமிலறிவானந்த முதன்மைநித் தியமுடைத்தாய்ப், போக்கொடு வரவினைப்பு விகாரமும் புருடனின்றும்" (உ௫)

"மண்ணினிற் கடாதியெல்லாம் வருவது குலாலனாலே, பண்ணிய வுருவமெல்லா மியற்றுவ னீசன்றானுங், கண்ணுகாரியங்களெல்லாங் காரண மதனிற்காண்பன், பண்ணுவ தெங்கேநின்றிங் கென்றிடிற் பகரக்கேளாய்" (உ௬)

என்பதென விதன்வழிநூலா ரிப்பொருளுரைத்தவாறு காண்க. (௫)

சிவஞான முனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். உலகந் தனக்கு முதற்காரணமாகிய மாயையிலொடுங்குவதன்றி நிமித்தகாரணன் ஒருவனுண்டெனக் கொள்ளினும் அவன்மாட்டொடுங்குமென்றல் பொருந்தாமையின், யாது யாண்டொடுங்கும் அஃததனினுற்பத்தியாம் என்னும் அவிநாபாவத்தான் மாயையிலொடுக்கிய உலகத்தை மாயையே தோற்றுவிக்கும் இதற்கோரிறைவன்வேண்டா எனச் சாங்கியநூலார் மதம்பற்றி நிகழுந்தடைவையாசங்கித்து உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் என்றுமது வைவலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். மண்போல் குளிர்ந்து வித்து உண்டா மூலம் முளைத்தவா தாரகம் ஆம் அத்தன் தாள் நிற்றல் அவர் வினையால்

வித்தகம் ஆம். எ-று. மாயையும் உலகமும் வித்தும் அங்குரமும் போலுமாகலின் வித்துக்கு ஆதாரமாகிய நிலங்குளிர்ந்தவழி அதன்கண் வித்துள்ளதாகஅதனினின்றும் அங்குரந்தோன்றிய வாறுபோல மேலைவெண்பாவின் 'இலயித்தது' என்றதனாற் பெறப்பட்ட மாயை தனக்காதாரமாய் நின்று தோற்றுவிக்கும் இறைவனது சத்தியின் கணுள்ளதாய் நிற்றலால், அச்சத்தி சங்கற்பித்தவழி அவரவர் வினைக்கீடாக அவ்வவக்காரியங்களை அவ்வவ்வியல்பிற் பிறழாமற் பயக்குஞ் சதுர்ப்பாடுடைத்தாம்: அல்லுழி உடைத்தன்று. நிலங்குளிர்ந்தவழி அதன்கட்கிடந்தன்றி வித்து முளைபைத் தோற்றுத வாறுபோலும். ஆகலான் மாயையினொடுங்கித் தோன்றிய உலகம் அதற்காதாரமாய் நின்ற இறைவன் சத்தியினொடுங்கித் தோன்றியதேயாம். எ-று.

ஆகலானென்பது முதல் குறிப்பெச்சம். இது கிழங்கினின்றுந் தோன்றிய தாமரையைப் * பங்கயமென்பதனானுமறிக. வழிநூலாசிரியர் "உயிரவை யொடுங்கிப் பின்னு முதிப்பதெனரன்பால்." எ-ம். "உலகவ னுருவிற்றோன்றி யொடுங்கிடும்." எ-ம். ஓதியதூஉம், உலகவ னுருவிற்றோன்றி யொடுங்குமாறு வாதுளாகமத்தில் வகுத்தோதிய தூஉம், இவ்வியல்பு நோக்கியென்க. இஃதறியாதார் இன்றோரன்னவற்றைத் தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்ப. சித்-௧—௫, ௩௨ - ௨௮.

* பங்கம்-ஜம்=பங்கயம். பங்கம் - சேறு, ஜம் - சனித்தல்-தோன்றல்=சேற்றில் தோன்றியது.

உவமவினை பொருளினும் பொருளை உவமையினுஞ் சென்றியையும்.

உண்டாகவெனச் சற்காரியத்தை வலியுறுத்துதல், வித்தில்வழி நிலத்தினின்றும் அங்குரந் தோன்றுதலாறுபோல, மாயை

யில்வழிப் பிரமத்தினின்றும் உலகந்தோன்றுமெனப் பரிணாம வாதிகளையும், மாயை அநிர்வசனமென்னும் மாயாவாதிகளையும், வித்துநிலனும்போலென்றதனுன் மாயை முதல்வனின் வேறுபொருளன்றென்னுஞ் சிவாத்துவிதசைவர் பாஞ்சராத்திரிகளையும், மறுத்தவாறுமாயிற்று.

முதல்வன் பலவேறு வகைப்படச் சங்கற்பித்தவாறென்னை யென்னுங்கடாவை யாசங்கித்து, அவர் வினையாலென்முர்.

வித்தகம் விசித்திரமென் றுரைப்பினு மமையும்.

அற்றேல், தன்வயத்தானன்றி வினைவயத்தாற் றோற்றுவிப்பான் இறைவனுகானெனின்.

வேட்டுவன் ஆம் அப்புழுப்போல் வேண்டு உருவைத்தான் கொடுத்துக் கூட்டானே. எ-து. வேட்டுவனுகலை விரும்பும் புழுவிற்கு வேட்டுவன் விரும்பிய வடிவினைக் கொடுக்குமாறுபோல, இறைவனும் அவரவர் வேண்டுமுருவினைக் கொடுத்து அவ்வினைக்குத் தக்க பயன்களையுங் கூட்டுவனுகலான் அது கொண்டு சுதந்திரத்திற் கிழுக்கென்னை. எ-று.

ஆகலான் அதுகொண்டு சுதந்திரற் கிழுக்கென்னை யென்பது குறிப்பெச்சம்.

போம் அரை. குளிர்ந்த வழியென்பது குளிர்ந்தெனத் திரிந்து நின்றது.

நிற்றலினென்னும் ஐந்தாவது விகாரத்தாற்றொக்கது. ஏகாரம் எதிர்மறை.

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்
றாக்காது நின்றுளத்திற் கண்டிறைவ - னாக்காதே

'கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்
கண்டவனி னிற்றின்றுங் கட்டு (௯)

இது, கத்தா பிரபஞ்சகிருத்தியஞ் செய்கின்ற முறைமையும், அந்தக்கிருத்தியமெல்லா மநுக்கிரகமென்றும், அப்படிக் கிருத்தியஞ்செய்கைச்சே அதிலொரு சற்றும் பிரயோசனமின்றி விகாரமற் றிருப்பனென்கின்றதுங் கூறுகின்றது.

இ-ள். இறை கத்தா.
வன். எ-
து.

அன்றே. எ-து. அநாதியிலே.

காலத்திற் று காலம்போல வென்றிடுந் தாக்காத எக்காது நின் றுள ல்லாவான்மாக்க ளிடத்திலும் ஒக்கநின்று த்திற்கண்டு. எ- அவரவர்செய்த கன்மங்களைப்பார்த்து.
து.

காலம்போல வென்றது, செல்காலம் வருகாலம் நிகழ்காலம்போல வென்றதாம். அந்தமூன்றுகாலமுங் காண்பார்க்குக் காலமாய் நின்றதல்லது அது தானசைவின்றி நிற்கை யுபோல் தற்சுபாவங் குறையாமல் நிற்பனென்பதாம்.

கார்காலம் வேனிற்காலம் போலவென்றுமாம். அது, கார்காலத்துண்டாம் பலங்கள் வேனிற்காலத் துண்டாகாது, வேனிற்காலத் துண்டாம் பலங்கள் கார்காலத் துக்குண்டாகாது. அவ்வாறுபோலப் பக்குவமறிந்து செய்வனென்பது மாம்.

எனவே காலங் கத்தாவென்போருக்கு அல்லவென்பது மாயிற்று.

தாக்காது நின்றெனவே பற்றின்றி நிற்றல்கூறினார்.

உளத்தினின்றெனவேசர்வாமன்ாக்களிடத்தும் பக்கப் பிரதி பக்கமற நிற்றல் கூறினார்.

கண்டெனவே-நித்த முத்த சுத்தனாய் சிற்சொரூபனாய் அவிகாரியாயுள்ள கத்தா பார்த்தானென்பதனால், சர்வான்மாக்களும் பிறவியி லழுந்தாமல் முத்திபெறவேணுமென்று பார்த்தான் என்பதாம். எனவே அவன் கிருத்தியமெல்லா மநுக்கிரமென்பதுவுங் கூறினார்.

நோக்காது அளியாமலளித்து.
நோக்கி. எ-து.

நொடித்து. எ- அழியாமலழித்து.
து.

ஆக்காதே.எ-து. படையாதே படைத்து.

நோக்காமனோக்கி யென்பதனாலே நொடியாமனொடித்து ஆக்காதேயாக்கியெனக் கூறுக.

இன்றுங் கட் இப்பொழு தித்தன்மைத்தாகச் செய்யுந்
டு இற்று எ-து. செயலித்தன்மைத்து. அஃதெந் தன்மை பென்னில்?

கண்டகனவுண தான் கண்ட கனவைச் சுத்தகத்துவங்
ர்விற் கண்ட நன களால் அறிந்த வறிவாலே முன்பு கண்டுபோ
வுணர்க் கண்ட ந்த நனவிலே விளங்கக்கண்டவனைப் போல
வனின் எ-து. யறிந்தனன். எ-று.

எ-நு. கனவுகண்ட புருஷனுக்கு அது புசிதல்லவாய்க் காணுமிடத்துப் பொய்யல்லவுமாய் நனவில் மெய்யல்லவுமாய் அதி லொருபிரயோசநமின்றி யிருந்தாற்போல, பிரபஞ்சங்

காரியப்பட்டு வருகச்சே புதிதல்லவுமாய்ப் பொய்யுமல்லவாய் மெய்யுமல்லவாய்த் தனக்கொரு பிரயோசநமு மின்றி யிருப்பனென்பதாம்.

எனவே விகாரம் அவிகாரமின்றி யிருப்பனென்பதூஉங் கூறிற்றாயிற்று.

காலத்தின் என்னும் இன்னும், கண்டவனின் என்னும் இன்னும், உவமைக்கண் வந்தன.

கத்தா கிருத்தியஞ் செய்கைச்சே பற்றற் றிருப்பனென்னும் பக்கத்துக்குக் காலம்போல வென்னுஞ் சபக்கமும், தனக் கொரு பிரயோசநமு மின்றி அவிகாரியா யிருப்பனென்னும் பக்கத்துக்குக் கனவுகண்டவனைப் போலுமென்னுஞ் சபக்கமுங் காட்டியவாறு காண்க. இப்படிக் கிருத்தியமுஞ் செய்கின்ற கத்தாவினுடைய சத்தி பலவோவென்றும், சத்தியினுடைய வடிவேதென்றும் வினாயவாறும். "ஒன்றதா யிச்சாஞானக் கிரியையென்றொரு மூன்றாகி, நின்றிடுஞ் சத்தி" (௬௩) என்று நிறுத்தியவாறு மிதன்க ணடக்கிக் கூறுக.

இற்று என்பதனால் "சத்திதான் பலவோவென்னிற்றானொன்றே யநேகமாகி, வைத்திடும்" (௬௧) "சத்திதன் வடிவேதென்னில் தடையிலா ஞானமாகும்" (௬௨) என்பனவற்றாலறிக.

"தோற்றுவித் தளித்துப்பின்னுந் துடைத்தருள் தொழில்கண் மூன்றும்" (௫௩) "உரைத்தவத் தொழில்கள்மூன்று மூவருக் குலகமோத, வரைத்தொரு வனுக்கேயாக்கி" (௫௪) "இறுதியாங் காலந்தன்னி லொருவனே" (௫௫) "சொன்னவித் தொழில்க ளென்னைக் காரியந்தோற்றவென்னில்" (௫௬) "அழிப்பிளைப் பாற்றலாக்கம்" (௫௭) "காலமே கடவுளாகக் கண்டனந் தொழிலுக் கென்னில்" (௬௦) என்பன விதன்வழி நூலார் சித்தியார், க—இல் விரித்துரைத்தவாறறிக. (ச

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-வின். மேலையுதாரணத்திற்கூறியவாற்றான் உலகிற்கு முதற்கடவுள் உண்டெனக்கொள்ளினும்அவன் படைப்பு முதலியன தொழில் செய்வானாயின் விகாரமெய்தி அதனிற்பந்தமுறுவா னென்னுமவர்மதம்பற்றி நிகழுங்கடாவையாசங்கித்து ஏதுவை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். இறைவன். எ-து. முதல்வன்—காலத்தின் தாக்காதுநின்று. எ-து. இறப்பு நிகழ்வு எதிர்வு முதலியனவாய் வேறுபட்டு எல்லாத்தொழிலுஞ்செய்துந் தனக்கு விகாரமின்றி நிற்குங்காலம்போல விகாரப்படாது நின்று,—ஆக்காதே கண்டு. எ-து. பிரபஞ்சத்தைக் கரணத்தாற்படையாது சங்கற்பமாத்திரத்தானே படைத்து,—நோக்காது நோக்கி கொடுத்து. எ-து. அவ்வாறே காவாது காத்து அழிபாதழித்தலால்,—இன்று ஆம் கட்டு. எ-து. இவ் வமலனுக்குப் பந்தமில்முதல்—உளத்தில் கண்டநனவு உணர்வில் கண்ட கனவுஉணரக் கண்டவனில் இற்று. எ-து. கற்றநூற் சொல்லும் பொருளும் உள்ளத்திற் றோன்றுங்கால் உள்ளம் அவற்றிற்றொடக்குண்ணாதவாறுபோலும், கனவின்கட் கண்டவற்றைப் புறத்துவிடயங்களையறிந்து வந்த நனவுணர்வின்கண்ணே விளங்கவறிந்தவன் அப்பொழுது அவற்றிற் றொடக்குண்ணாதவாறுபோலுமித்தன்மைத்து. எ-று.

எனவே, இஃதிவ்வாறாக வென்றெண்ணுதலாகிய சங்கற்பமாத்திரையாற் செய்வதூஉம் கரணத்தாற்செய்வதூஉ மென வினைமுதல் இருவகைப்படுமென்பதூஉம்; கரணத்தானன்றிச் செய்யமாட்டாத குயவன் முதலியோர் சங்கற்பமாத்திரையாற்செய்யுமுதல்வனுக்கு வினைமுதலாதற் பொதுமைபற்றி

ஒருபுடையுவமையாதலன்றி முற்றுவமையாதல் செல்லாமை யானும், சங்கற்பமாத்திரையாற் செய்யுஞ் செய்திக்குக் கட்டு ண்டன்முதலிய குற்றங்கள் பகைப்பொருளாகலானும், அவை யாண்டுளவாதற்கோரியை பின்றென்பதூஉம் கூறி ஏதுவை வலி யுறுத்தவாறு காண்க.

ஆக்குதல் - படைத்தல் - காண்டலும் அது. நோக்குதல்-கா த்தல். நொடித்தல்-அழித்தல்; அது "நொடித்தான்மலை", என் பதனானுமறிக.

ஆக்காது நோக்காது என்றமையால் நொடியாதென்பதுவ ருவித்துரைக்கப்பட்டது. நொடித்தலான் என்பது நொடித் தெனத்திரிந்தது.

அன்றே அசை; அநாதியேயெனினுமமையும்.

இன்மூன்றும் உவமவுருபுகள்.

உளத்தென்பதற்குச் சங்கற்பத்தாலென்றுரைப்பினுமமை யும்.

இன்றுங்கட்டு என்பது "அருங்கேடன்" என்பதுபோலநி ன்றது.

☞ க—கு, இரண்டாமதிகரண முடிந்தது.

ஒன்றலா வொன்று ளுளதாகி நின்றவா
றொன்றலா வொன்றிலவை யீறுத—லொன்றலா
வீறே முதலதனி லீறலா வொன்றுபல
வாறே தொழும்பாகு மங்கு. (கு)

இது, பிரபஞ்சந் தோன்றி நின்றொடுங்குவது மாயையி லேயாகில், அந்த மாயையேயமையாதோ? கர்த்தா வேண்டு மோ? என்போருக்கு மாயை சடமென்று சாதிக்கின்றது.

இ-ள். ஒன்றலாவொன்றுளதாகி நின்றவாறு எ-து. இதுவென்று சுட்டிக் காணப்படானுமாய், பிரபஞ்ச கிருத்தியத்தைச் செய்கையினாலே காணப்படுவானுமாகிய கத்தாவால் பிரபஞ்சந்தோன்றி நின்ற முறைமையாலே

ஒன்றலாவொன்றி லவையிருத்தல் எ-து. இதுவென்று சுட்டிக்காணப்படாதுமாய், பிரபஞ்சகிருத்தியத்துக் குபாதானமுமாய் நிற்றலாலே, காணப்படுவதாகிய மாயையிலே யவை சென் றொடுங்குதலையுடைத்து.

அவையென்றது தோற்றமும் நிற்றலுமாகியஅவை. "ஆதியோடியமேதகுமாயை" என்னு ஞானாமிர்தத்தில் "அளவினைவலிநிற்று" என்பதனு லறிக.

ஒன்றலா வின்ற முதல் எ-து. அப்படியாகில் இதுவென்று சுட்டிக் காணப்படாததாய் எல்லாஞ்சென்றொடுங்குதற்கிடமாகியமாயையே முதன்மை யுடைத்து.

முதன்மை - தலைமை. எ-து. கத்தா வேண்டாவென்றாலும். அது, பிரபஞ்சகிருத்தியஞ் சாதகங்கொண்டே சாத்தியமாகி கத்தாவையுங் கண்டேம், அதுபோல மாயையுங்கண்டேம், தலா வொருதன்மையாயிருந்தது. அவ்விரண்டினுக்கு மத்தமையா லொன்றேயமையாதோ? அஃதன்றியும், எல்லாந் தோன்றி நின் றொடுங்குமிட மாயையாயிருந்தது; கத்தா இது னே, வேறுவேண்டாவென்றதாம்.

அதனில். எ-து. அந்த மாயையினிடத்து நீசொல்லுகின்ற கர்த்தத்துவமில்லை.

ஈறலா வொன்று எ-து. பிரபஞ்சம் அழியும்பொழுது தானுங் கூடவழியாதோ? கர்த்தத்துவ மின்றி சடமாயிருக்குமென்பையாகில்? அது அழியாத தொருபொருள்.

அன்று எ-து. அதுதா னெக்காலத் துள்ளதென்பையாகில்? அநாதி.

பலவாறேநெர் அது எல்லாமுறைமையாலுங் கத்தாவுக் கூர்பாகும். எ-து. கேவற்றொழில் செய்துவரும். எ-று. பலவாற்றானு மென்றது அசித்தாசையானுந் தனக்கென வொருசுதந்திரமில்லையானு மென்றதாம்.

அன்றியும் அருவிலே யுருவந்தோன்றுமோ வென்றும், விந்துவின்கண் ணுண்டாகியகாரியங்களெவ்வாறென்றும், சத்தாவுக் கவை யுருபமானு லாகாதோ? ஒன்றலா வொன்றுசவேறு மோவென்றும், வினுயினுர்க்குக் கூறலுமாம். இப்பொருள் "அருவினிலுருவந்தோன்றி யங்காங்கிபாவமாகி" "அருவுருவீனுதாகும் விகாரமுமவிகாரத்தில், வருவதுமில்லையென்னில்" 'வித்தைகளவித்தையீசர் சதாசிவமென்றிவர்க்கு" "மூவகையணுக்களுக்கு முறைமையால்விந்துநாத, மேவியதில்லையாகில்" "பந்தமும் வீடுமாய பதபதார்த்தங்களல்லான்" "உலகினையீன்றுநின்ற தரனுருவென்பதோரா" "வித்தையோடீசர்சாதக்கியஞ்சத்திசிவம்" "சிவனுருவருவுமல்லன் சித்தினோடசித்துமல்லன்" என்பன பலவு மிதன்க ணடங்கியதாதலால் வழிநூலார் விரித்துரைத்தவாறறிக,

சித் - க—கு, உஎ - உஅ - உகு - உகூ - சச - சஅ - கூகூ - எ0—செ.

தொழும்பாகு மென்றதனால் மாயாகாரியமு மழியாதென்பதாம். இப்பொருள் "கருது காரணமுண்டாகக் காரியமுள்ளதாகி வருதலாலநாதியைய மற்றொருகடவுளித்தைத் தருதலாலாதியாக்ச் சாற்றலுமாகும்" என்பதனாலறிக.

மாயை சத்தாவல்லவென்பதற்கு "புத்திமாக்காரியத்தாற் பூதாதிபுருடன்றானு - மத்தனுகரணப்பெற்று லறிதலா மவற்றைமாயை" என்னும்வழிநூலானும். "என்னையி நுவெளி னுலருக்குபாதானமில்லை யிறைவனலதெளி னசித்தச் சித்தினிடத்துதியா, மன்னியுரனெனில் முதல்உளன்கொ லென்னில்மாயைதான் சித்துருவாய்மருவமாட்டா" என்னுஞ் சார்புநூலானுமறிக.

சித்-க—ரு, கரு - கஎ - சிவப்பிரகாசம் பொது-கக-செ.

இவை யைந்தும்வெண்பாவானுஞ் சத்தாவுக்குமு மாயைக்கும் பக்ஷமேது திட்டாந்தம் உபநயனம் நிகமனம் கூறியவாறறிக.

அஃதெப்படியென்னில், பூதாதி என்பதனிலொரு சத்தா உண்டென்னும் பக்ஷமும், அஃதெத்தாலென்னில் பிரபஞ்சங்காரியமாயிருத்தலா லக்காரியத்தைச் செய்வானுண்டென்பதனால் காரிய ஏதுவும், நோக்காதென்பதனிற் காலம் போலவும் கனவுகண்டவன்போலவும் என்னுந் திட்டாந்தமும், இந்தவெண்பாவில் உபநயன நிகமனமுங் கூறினார்.

இலையித்தன்னில் என்பதனில் மாயையுண்டென்னும் பக்ஷமும், வித்துண்டாமென்பதனிற் காரியமாயிருத்தலாலென்னு ஏதுவும், வித்துமுளையும்போலவென்னும் திட்டாந்தமும், இந்தவெண்பாவில் உபநயன நிகமனமுங் கூறியவாறுங்காண்க.

இவைசாமாநியமாகிய பொருட்போல விசேடமாகிய சாதகசாத்தியப் பொருட்டாயினவாறு காண்க. (ரு)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அங்ஙனமாயினும், சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் பலவாயினாற்போலச் சுட்டுணர்வின்றிநின்றசங்காரமும் பலவுளவெனக் கோடும், ஒன்றேயென்றற்குப் பிரமாணமென்னை யென்னுங்கடாவை யாசங்கித்து ஏதுவை வலியுறுத்ததனுதலிற்று.

இ-ள். அவை. எ-து. சேதநப்பிரபஞ்சத்தொகுதி—ஒன்று அலா ஒன்றால். எ-து. உருவும் அருவுமென்னும் அவ்விருகூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்றல்லாத ஒப்பற்ற பரம்பொருளாலே—உளது ஆகி நின்றவாறு. எ-து. சிருட்டிப்பட்டுத் திதிப்பட்டவாறே—ஒன்று அலா ஒன்றில் ஈறுதல். எ-து. அந்தப்பரம்பொருளின்கண்ணே சங்காரப்படுதலால்—ஒன்று அலா ஈறே முதல். எ-து. அச்சங்காரக்கடவுளொருவனே உலகிற்கு முதற்கடவுள். அற்றேல், இவ்வாறு முத்தொழிற்படுஞ் சேதநப்பிரபஞ்சம் வீடுபெற்றவழிச் சுட்டுணர்வின்றிச் சிவசமமாமென வேதத்தும் ஆகமத்தும் ஓதுதலின் அவ்வழி அவையும் முதற்கடவுளாமென்றற்கு இழுக்கென்னையெனின்?—அதனில் ஈறு அலா ஒன்று. எ-து. அப்பரம்பொருள்போல் அழிவின்றி நித்தமாய சேதநப்பிரபஞ்சம்—அங்கு எ-து. வீடுபேற்றின்கண்ணும்—பலவாறே தொழும்பு ஆகும். எ-று. பலவாற்றானும் பரம்பொருளுக்கு அடிமையாம். எ-று.

இது சொற்பொருட்பின்வருநிலை.

காரியப்பிரபஞ்சஞ் சடமாகலானும், சேதநப்பிரபஞ்சம் அவிச்சையாற் கட்டுற்றுச் சுட்டுணர்விற்றாய் நிற்றலானும், இவற்றைத் தொழிற்படுத்தற்கு இவற்றின் வேறாய் ஒருமுதற்கடவுளுண்டென்பது பெற்றாம். பெறவே, பிரபஞ்சம் விசித்திர

காரியமாய்க் காணப்படுதலின், இவ்வாறு நடாத்தும் முதற்கடவுள் முற்றுணர்வும் அளவிலாற்றலும் பேரருளுஞ் சுதந்திரமும் முதலிய நிரதிசயகுணங்களுடையனென்பதூஉம் பெறப்பட்டது: படவே, இத்தன்மையனாகிய முதற்கடவுளொருவனே அமையுமாகலின் வேறு மத்தன்மையருண்டெனக்கொள்ளின் மிகையென்னுங் குற்றமாம்: அல்லதூஉம், இலக்கணத்துள் ஒருவாற்றானும் வேற்றுமையில்வழி இலக்கியம்பலவாதல் செல்லாதென்னுங் கருத்தால், ஒன்றலாவொன்றுளவா வரையறுத்தோதினார்.

ஏறே முதலென்றது முடிந்தது முடித்தல். ஏறு ஆகுபெயர். இறந்ததழீஇய எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது.

பலவாறாவன, இருணீங்கிய வழியுங் கண்ணுக்குக் காட்சி ஞாயிற்றை யின்றியமையாத வாறுபோல, மலநீங்கிய முத்தி நிலையினும் ஆன்மாவுக்கு அறிவு வியஞ்சகமாய் உடனின்றறிவிக்கு முதல்வனை யின்றியமையாதவாறும், கண்படிகம் ஆகாயம்போலச் சார்ந்ததன் வண்ணமாயன்றி முதல்வன்போலத் தனித்துநிற்கு மியல்பில்லாதவாறும், முதல்வன்போல் ஐந்தொழிற்கும் வினைமுதலா முரிமையின்றிச் சிவாநுபவ மொன்றினுக்கே யுரித்தாயவாறும், சர்வவியாபகமாயினும் முதல்வனைநோக்கத் தூலவறிவாகலான் விளக்கொளியுட் கண்ணொளிபோல முதல்வனின் வியாப்பியமாயன்றி நில்லாதவாறும் முதலாயின. அற்றேல், முத்திநிலையின் ஆன்மாச் சிவமாமென்னுஞ் சுருதிக்குப் பொருளென்னையெனின்? அஃது உண்மை யதிகாரத்துட் பெறப்படும். இதனானே சிவசமவாதி சங்கிராந்தவாதி உற்பத்திவாதி ஆவேச வாதி மதங்களும் மறுக்கப்பட்டன.

பதியுண்மைக்குப் பிரமாணங்கூறுவார் மலத்துளதாம் எனப் புனருற்பத்திக் கேதுக்கூறுமுகத்தான் மலத்துண்மைக்குப்

பிரமாணமும் உடன் கூறினார். அதனை ஈண்டு வேறதிகரணமாக வைத்துரையாராயினார்; அதிகரணத்திற்குரிய ஐயப்பாடு முதலியனவெல்லாஞ் சகசமலத்துணராதென அதனிலக்கணங்கூறும் வழிப் பெறப்படுதலால், ஈண்டு மிகைபட வேறோதல் வேண்டாமையின்.

௧—சூ, மூன்றுமதிகரண முடிந்தது.

௧—சூ, தொகைப்பொருள்.

இச்சூத்திரத் ததிகரணங்களாற்போந்த தொகைப்பொருளாவது:—தோற்றக்கேடுகள் தன்மை காட்சி முதலியஅளவைகளான அறியவாராமையிற் பிரபஞ்சம் நித்தப்பொருளேயாம். அன்றித் தோன்றி யழியுமெனக் கொள்ளினும், இப்பொருள் தத்தஞ் சார்பிற்றோன்றி நின்றழிதல் இயற்கையெனவமையும்; செயற்கையென்றற்கு ஓரேதுவின்மையின். மற்றுள்பொருளாயின், அதுவேயமையும், இறைவன் வேண்டா; இரண்டின் பொருள்கோடல் மிகையாகலின். வேண்டுமாயினும், மாயோன் முதலிய கடவுளரில் ஒருவனேயமையும் அவனையொழித்துச் சங்கார கருத்தா முதற்கடவுளென்றதற்குப் பிரமாண மென்னை? பிரமாணமுண்டாயினும், அவ்விசித்திரமாய பிரபஞ்சம் ஒருவனாற் செய்தல் கூடாமையின், மற்றும் அவ்வியல்பினராய முதற்கடவுளர் உளராதல்வேண்டும் என உலோகாயதர் மீமாஞ்சகர் புத்தர் சமணர் சாங்கியர் பாஞ்சராத்திரிகள் அநேகேசுரவாதிகள் மதம்பற்றிப் பூர்வபக்க நிகழ்ந்தவழி அவரை மறுத்துச் சித்தாந்தஞ் செய்து முதற்கடவுள் தன்மை பொதுவகையானுஞ் சிறப்புவகையானுங் கருதலளவையின் வைத்துணர்த்திய வாறெனவுணர்க.

இவ்வாறு சூத்திரந்தோறும் உணர்ந்துரைத்துக்கொள்க

௧—சூ, முடிந்தது.

உ — சூத்திரம்.

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே.

இ-ள். அவையே தானே யாய் எ-து. கத்தா முன்கூறப்பட்ட அவ னவ ளது வெனும் பிரபஞ்சமாய்.

ஆய் எனவே அல்லவாயென்பதூஉம், விட்டுநீங்காமலும் கூறப்பட்டது. எனவே ஆயுமா யல்லவுமா யுடனுமாகு மென்பதாம். [தான் = கத்தா.]

இருவினையிற் போக்குவரவு புரிய வாணையின் எ-து. தன்னுடைய வாக்கினையாலே, யான்மாக்கள் முன்புள்ள புண்ணியபாவங்களினாலே யிறந்து பிறந்துவர.

நீக்கமின்றி நிற்கு மன்றே எ-து. ஒழிவற நிறைந்துநிற்பன் அநாதிசுபாவமாக எ-று.

இது, கத்தா பிரபஞ்சமெல்லாமாய் அவையல்லவுமாய் அவையிற்றிற் குடனுமாய், தானவையிற்றிற் சிறிதுந்தோய்வின்றியொழிவறக்கலந்து ஆன்மாக்கள் முன்புசெய்த கன்மங்களுக்கீடாகத் தன்னுடைய சத்தியாலே பிறந்திறந்துவர, அநாதிசுத்தனு மொழிவற நிற்பனென்றதாம்.

(உ௬ம்.)

"உலகெலாமாகிவேறா யுடனுமாயொளியாயோங்கி
யலகிலாவுயிர்கள்கன்மத் தாணையினமர்ந்துசெல்லத்
தலைவனாயவற்றின்செய்தி தனக்கெய்தலின்றித்தானே
நிலவுசீரமலனாகி நின்றனனீங்காதெங்கும்".

என்ற வழிநூற்சூத்திரமுங் காண்க. சித் - உ—சூ, க—செ

சிவஞானமுனிவர் உரை.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. மேலைச்சூத்திரத்து எடுத்துக்கொண்ட சங்காரகாரணனாகிய முதல்வன் கலப்பினால் உடலின் உயிர்போல் அவ்வுயிர்களேயாய், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல் அவற்றின் வேறுமாய், உயிர்க்கு உயிராதற்றன்மையாற் கண்ணொளியின் ஆன்மபோதம்போல் உடனுமாய் நின்று, ஆணையென்னும் பரியாயப் பெயருடைய தனது சிற்சத்தியான் வரும் இருவினைகளான் அவை இறத்தல் பிறத்தல்களைப் புரியும் வண்ணம் அவ்வாணையிற் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பன். எ-று.

அவையே தானே யாயென்பதனை இரட்டுறமொழிந்து கொண்டுரைக்க. இக்கருத்தே பற்றி "உலகெலா மாகி வேறாயுடனுமாய்" என்றார் வழிநூலாசிரியரும். சித் - உ—சூ, க—செ.

மேலைச்சூத்திரத்தின் 'அந்தமாதி' என்புழி விகாரத்தாற் றொக்க பிரிநிலையேகாரத்தான் விலக்கப்பட்டு நின்ற சேதனப் பிரபஞ்சத்தை ஈண்டு அவையெனச் சுட்டிக்கூறினார்.

'ஒழிங்கியுளதாம்' என்றதற்சேற்ப ஈண்டும் போக்கினை முற்கூறினார்.

புரிதல் எப்பொழுதும் மேற்கோடல்.

ஆணையினென்பது சிங்கநோக்காய் இருவினையென்பதனோடு ம் நீக்கமின்றி யென்பதனோடும் இயைந்து பொருடந்து நின்றது. ஆண்டு 'இன்னுருபு முன்னர் ஏதுப்பொருட்கண்ணும், பின்னர் நீக்கப்பொருட் கண்ணுமாய் நின்றது. இன்னென்பது சாரியையெனக் கொண்டு ஈரிடத்தும் ஏற்கு முருபுகள் விரித்துரைத்தலு மொன்று.

அன்றே அசை; அநாதியே இவ்வாறு நிற்குமெனினு மமையும். ஆய்ப் புரிய நிற்குமெனவே, அச்செயல்களெல்லாம் முதல்வன் கரணத்தானன்றிச் சங்கற்பமாத்திரத்தாற் செய்வனென்பது பெறப்பட்டது.

இதனானே மேல் 'அந்தம்' என்று உத்தேசமா யெடுத்துக் கொண்ட முதல்வனுக்கு இலக்கணங் கூறியவாறுமாயிற்று. இது தடத்தலக்கணமெனப்படும் பொதுவியல்பு.

ஆணியினிருவினையினெனவே, தனது சிற்சத்தி துணைக்காரணம், இருவினையும் அதன்வழித்தாய துணைக்காரணம். இருவினையினெனவே அதற்குப் பற்றுக்கோடுண்டென்பதூஉம் பெற்றுமாகலின், அது முதற்காரணமென்பதூஉம் இருவினையிற் போக்குவரவுபுரியவெனவே ஒடுங்கியின் மீளவுளதாங்கால் இருவினைகட்சேற்பப் பலவேறுவகைப்பட்டு விரியுமென்பதூஉம் போந்தவாறு காண்க.

கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு பேரறைக்க வென்னென்றுங் - கொட்டி
யவனுள மாவில்லா னுளமவனு மாட்டா
தவனுளமா யல்லனுமா மங்கு. (௧)

இது, சர்வான்மாக்களிடத்துங் கத்தா விரண்டறநிற்கின்ற முறைமை கூறுகின்றது.

இ-ள். கட்டுமுறுப்புங் கரணமுங்கொண் டுள்ளமிட்டதொரு பேரழைக்க வென்னென்றுங்கு எ-து. — என்புதோல்நரம்பிறைச்சி முதலாயினவற்றுற் கட்டப்பட்டதேகத்தையுங் கரணங்களையுங்கொண்டுநின்று ஆன்மா தேகத்துக்கிட்டதொரு பெயரையொருவன்சொல்லி யழைக்கத் தானவையாய்நின் றென்னென் றாற்போல.

ஒட்டியவனுளமாகில்லான் எ-து. — சர்வான்மாக்களிடத்தும் வேறறக்கலந்துநிற்கின்ற கத்தா அப்படிநின்றானாகினும். அந்தவான்மாக்களாவானொருவனல்லன்.

உளமவனுமாட்டாது. எ-து. — அப்படி வேறறக்கலந்து நிற்கின்ற வான்மாக்களும், அந்தக்கத்தா வாகமாட்டாது.

அவனுளமாயல்லனுமா மங்கு எ-து. — கத்தா வான்மாவுமா யல்லவுமாய் நிற்பன் பெத்தமாகியவிடத்து எ-று.

ஆன்மாக்களிடத்தே கத்தா வேறறக்கலந்து நின்றும் நீங்கி நிற்பனென்னும்பக்கத்துக்கு, தேகத்துடனே ஆன்மா வேறறக்கலந்துநின்று நீங்குகின்றமை சபக்கமாயினவாறுகாண்க

எனவே ஆன்மாவுந் தேகமும் வேறென்பது முணரக்கூறிற்று ஆயிற்று.

அது "ஒன்றினமுடித்தல்" என்னுந்தந்திரயுத்தியால் தத்துவாதிகளாய் நிற்கின்ற கத்தாவைப் பாசபெத்தனாகிய ஆன்மாவோ டுவமித்தார். "சீவனுமிச்சாஞானச் செய்தியாற்சிவனையொப்பன்" என்பதனாலறிக. சித் - ச—கு, கூச - செ. அஃதெங்ஙனேயென்னில்? ஆன்மாவுங் கத்தாவைப் போலக் கத்தத்துவமுஞ் சர்வஞ்ஞத்துவமு முடையவனாகையானும், போக்குவரவின்றி யிருத்தலானு மவையவங்களுடனே கூடவும் நீங்கவும் வல்லனாதலானும், வியாத்தி வியாபகங்களை யுடையவனாதலானுமெனக்கொள்க. அஃதெங்ஙனேயென்னில்? கர்த்தத்துவமாவது, தான்செய்தபுண்ணிய பாவங்களைத் தப்பாமற் புசிக்கைக்குக் கத்தாவாதல். சர்வஞ்ஞத்துவமாவது, பெத்தமுத்திக ளிரண்டினுடைய அநுபவத்திசையிலுண்டாகிய சர்வஞ்ஞத்துவம் போக்குவரவின்றியிருத்தல். அதாவது, யாதோரவத்தை யடைந்ததாயினும் பெத்தத்தை விட்டுநீங்காமல் அவயவங்களுடனே கூடவும் நீங்கவும் வல்லனாவது யாதொருவிடயங்களினும்நின்று புசிக்குமிடத் தவையவையாய்நின்று புசித்துப் பின்பவையிற்றைநீங்கி விகற்பிக்க வல்லனாதல். வியாத்திவியாபகமுடையனாவது, கன்மம்புசித்தாற்குப் பொருந்தியபதி யாதோரிடம் அந்தந்தவிடங்களிலே நிறைந்துநிற்கையுடையனாதலுமாம், "உருவொடுகருவியெல்லா முயிர்கொடுநின்றுவேறாய், வருவதுபோலவீச னுயிர்களின்மருவி" என்றார்வழிநூலார். சித் - உ—கு, ரு - செ. (க)

சிவஞானமுனிவர் உரை.

எ-ற. உ-ம். எ-னின். ஒருபொருள் மூவகையியல்பையு மடைத்தாதல் யாங்ஙனம் என்னுங்கடாவை யாசங்கித்து அவற்றுள் அவையேயாதலை உவமைமுகத்தான் வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். உள்ளம் கட்டும் உறுப்பும் கரணமுங்கொண்டு. எ-து. உயிர் நரம்பு முதலியவற்றாற் பிணிக்கப்படும் உடம்பினையும் ஐம்பொறி முதலிய கருவிகளையுங் கைக்கொண்டுநின்று,— இட்டது ஒருபேர் அழைக்க என் என்றாங்கு. எ-து. சாத்தா கொற்றா எனவுடம்பிற் கிட்ட பெயராற் பிறரழைத்தவழித் தான் என்னையென வந்து நிற்றல் காண்டுமன்றே, இருவர் கைகோத்து நின்றுழியும் அவருள் அழைக்கப்பட்டோனேயன்றி ஏனோன் என்னையென்றல் உலகத்தின்மையின், அவ்வாறன்றி உடம்பின் பெயரான் அழைத்தவழி உயிர் என்னென்றற்குக் காரணம் ஏதுவேறாற் பெறப்படாமையின், அருத்தாபத்தி யளவையயினே அவ்வுயிர் உடம்பெனத் தானென வேற்றுமையின்றி அபேதமாய் நிற்றல் பெற்றாம். அதுபோல—ஒட்டி. எ-து. முதல்வன் உயிர்களின் அபேதமாய் ஒட்டி நிற்போனும்—அங்கு அவன் உளம் ஆகில்லான் உளம்அவனுமாட்டாது அவன் உளம் ஆய் அல்லனும் ஆம். எ-து. அவ்வாறொட்டிய வழி உயிர் உயிரோ, உடம்பு உடம்பே, உயிர் உடம்பாயொழியாது, உடம்பு உயிராகமாட்டாது. அவ்வாறாயினும், உயிர் உடம்பாயும் அதனின் வேறாயுநிற்கும். உடம்பு அங்ஙனநில்லாது, அதுபோல முதல்வன் முதல்வனே, உயிர் உயிரே, முதல்வன் உயிராயொழியான், உயிர்முதல்வனாகமாட்டாது. அவ்வாறாயினும் முதல்வன் உயிராயும் அதனின் வேறாயுநிற்பன். உயிர் அங்ஙனநில்லாது. எ-று.

அவனுளமாகில்லானுளமவனுமாட்டா தவனுளமாயல்லனுமா மங்கு என்றது ஒன்றாயும் ஒனறன்மைக்கு அநுபவங்காட்டிய வாறு.

, உறுப்பு ஆகுபெயர். ஏவனென்பது என்னென மரீஇயிற்று. ஒட்டியென்பது பெயர்; வினையெச்சமாகக் கொள்ளிற் சிறப்பு ம்மை விரித்துரைக்க.

ஒட்டுதல் - பொருந்துதல். அங்கு - அதுபோல.

ஒன்றென்ற தொன்றேகா ணொன்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசத் தோடுளைகா - ணொன்றின்று,
லக்கரங்க ளின்று மகரவுயி ரின்றே
யிக்கிரமத் தென்னு மிருக்கு.

இது, வேதத்திற் கத்தாவு மான்மாவு மிரண்டல்லவெனக் கூறியதென்போற் கிரண்டென்பதூஉம், ஆன்மாவுக்குக் கத்தா வையொழிந்து சேட்டையில்லையென்பதூஉங் கூறுகின்றது.

இ-ள். ஒன்றெ ன்றதொ ன்றேகா ன்ன எ-து. (வேதங்களெல்லாம் ஒன்றென்றுசொல் ல நீர் ஆன்மாக்களோடுங் கத்தா நிற்ப னென்று இரண்டாகச் சொல்கின்றதென்னை யென்பாயாகில்)? அந்தவேதங்க ளொன் றென்று சொல்லுகின்றது ஒத்தாரு மிக்கா ருமின்றி நித்தமுத்த சுத்தனாயிருக்கின்ற தனிமுதலைக்காண்.

ஒன்றே பதி ா-து. நானொன்றென்று சொன்னது மது தானென்னையாகில் ? அந்தத் தனி முத லே கத்தா, அது ஆன்மாவல்லவென் ு ாம்.

இது வேதத்திற் கடாகாச வாகாசம்போலச் சீவான்மா வென்றும், பரமான்மாவென்றும், பேர்வேற்றுமையொழிந்து ஒருவனே யுள்ளதென்று சொல்வோரைமறுத்தது.

நீ பசுவாமொ ஒன்றென்றுசொல்கின்ற நீதான்காண்
ன்றென்றநீ பா ஆன்மா. பாசபெத்தன்காண் நீ.
சத்தோடிலை கா
ண் எ-து.

நீ பாசபெத்தனெனவே அவன் சுத்தனென்பது மீட்சிமொழியாயிற்று.

அக்கரங்க ளி அகரமாகிய வுயிரில்லையாகில் நின்றவக்
ன்ரு மகர வுயி கரங்க ளோசைபெறுதலில்லையாம்.
ரின்றேல் எ-து.

ஒன்றின்ரு லி சத்தாவில்லையாகி லான்மாக்களுஞ் சே
க் கிரமத் தென் ட்டையில்லை, இந்த முறைமைபோல வெ
னு மிருக்கு எ-து. ன்னும் வேதங்கள் எ-று.

'அக்கரங்களின்றேற லகரவுயிரின்ரும்' என்றுபாடமாயின், அக்கரங்களில்லையாகி லகரவுயிருமில்லையாமென்க. அதுஆன்மாக்களில்லையாகில் கத்தாவுமில்லையென்றதாம். எ-து. கத்தாவையுணர்வாரில்லையென்றதாம் "மெய்யினியக்கம்அகரமொடுசிவணும்" தொல்காப்பியம் எழுத்ததிகாரம். மொழிமரபு கஉ—சூ.

கத்தாவுமான்மாவும் வேறறநிற்கின்றபக்கத்துக்கும், கத்தாவையின்றியான்மாச்சேட்டையில்லை யென்னும்பக்கத்துக்கும் 'அகாரமு மக்கரங்களுஞ்சபக்கமாயினவாறுகாண்க." ஒன்றெனமறைகளெல்லா முரைத்திடவுயிர்க ளொன்றி, நின்றனனென்றுபன்மை நிகழ்த்துவதென்னையென்னின்" என்றார்வழிநூலார். சித் - உரு, உ—௭.

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். வேதத்துள் அத்துவிதமென்றதூஉமன்றி ஏகமெனவுமோதுதலின் அதற்கு மறுதலையாய் உயிர்களொடொட்டி நிற்பனெனப் பேதப்படக் கூறுவதென்னை என்னுங்கடாவை யாசங்கித்து அச்சொற்குத் தாற்பரியங்கூறுமுகத்தால் தானேயாதலை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். இருக்கு ஒன்று என்றது ஒன்றே காண். எ-து. வேதம் ஒன்றென்றதற்குப் பொருள் ஒன்றென்பதேயாம்; வேறுபொருள்படாது.—ஒன்றேபதி. எ-து. அதற்குத் தாற்பரியம் பதிப்பொருளொன்றே; இரண்டில்லையென்பதாம்—ஒன்றுஎன்றநீ பசுவாம் எ-து. இஃதறியாது ஒன்றென்று சொல்லுகின்ற நீ அப்பதிப்பொருளின் வேறாய பசுவென்றறிவாயாக. பதியுஞ் சேதநமாக யானுஞ்சேதநமாக என்னைப் பசுவென்றதென்னையெனின்—பாசத்தோடு உளைகாண். எ-து. நீ மலத்தோடு கட்டுற்று நின்றாயாகலிற் பசுவெனப்பட்டனை. அற்றேல் இவ்வாறு வேற்றுமைகூறிற் பிரமமில்லையாயின் ஒருபொருளுமில்லையென்னும் வேதத்திற்குத் தாற்பரியமென்னையெனின்—அகரவுயிர் இன்றேல் அக்கரங்கள் இன்று ஆம்இக்கிரமத்து ஒன்று இன்று என்னும். எ-து. அகரவுயிரில்லையாயின் அக்கரங்களில்லையாமென்னும் இம்முறைபற்றி, வேதம் பிரமப்பொருள் இல்லையாயின் ஒருபொருளுமில்லையென்றோதும் அத்துணை. எ-று.

ஒன்றின்றலக்கரங்களின்றே மகரவுயிரின்றேலிக்கிரமத்தென்னும் என்றது வேறாகியும் வேறன்மைக்கு அநுபவங்காட்டிய வாறு.

இக்கிரமத்தாலென உருபு விரித்துரைக்க. இன்றென்னுமொருமை அப்பண்பின் மேனின்றது. காணென்பதனை மேலுங்கூட்டுக. ஆம் – அசை.

பண்ணையு மோசையும் போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா - மண்ணருள்
அத்துவித மாத லருமறைக ளொன்றென்னு
தத்துவித மென்றறையு மாங்கு.

இது, சத்தாவு மான்மாவு மிரண்டறநின்ற கலப்புக்கூறுகின்றது.

இ-ள். பண்ணையு மோசையும் போலப் பழமதுவு மெண்ணுஞ் சுவையும் போ லெங்கு மா மண்ணருள் அத்துவிதம் எ-று.

கத்தா வவ னவ ளது வெனும் பிரபஞ்சமெல்லா மொழிவறநிறைந்து இரண்டல்லவொன்றெனநிற்றல், பண்ணுக்கு நாதநின் றவையிற்றின்சொரூபங்களைநிறைபித்தாற்போலவும், பழமு மதிர்சொல்லப்பட்ட விரதமும்போலும்.

பண்ணு மோசையும் பாடுவாளையின்றி யில்லாமையால், முதல் மூன்றாயிற்று. எனவே, மாயைமுதலியவற்றை இரண்டறநின்று தன்னுடைய விச்சா ஞானக்கிரியைகளைக்கொண்டு தன்மை முன்னிலை படர்க்கையாலேநின்று நடத்துவனென்றதாம்.

பழமுமிரதமுமென்றது பழ மிரதத்தைப்பிரிந்திராது, இரதம் பழத்தைப்பிரிந்திராது, பழத்திலே யிரதநிறைந்துநிற்கும் அதுபோலப் பதியும் பிரபஞ்சமும் அநாதியிலே யிப்படியிருக்குமென்றதாம்.

ஆதலால் எ-து. இப்படியாதலாலே.

அருமறைக ளொன்றென்று சொல்லா தத்துவிதமென் றறையு மாங்கு. எ-து.

அரியவேதங்களொன்றென்று சொல்லா மலிரண் டல்லவென்று சொல்கின்றது; சொல்லி முடிக்குமிடத்து. எ-று.

எ-து. ஒன்றென்னுஞ் சொல்லில்லாமல் இரண்டல்லவென்றது எவ்வாறென்னில், இரண்டல்லவென்ற சொல்லாலேயொன்றென்னில் அப்படிச் சொல்லுகின்றதொன் றுண்டாகையாலே ஒன்றல்ல. ஆனாலிரண்டல்ல வென்றசொல்லாலே யிரண்டுமல்ல; எனவே ஒன்றுமல்லவாய் வேறறக்கலந்து நிற்கின்றமுறைமை கூறலாம். அதுகபுஞ்சக மென்றாற்போலவாம். கத்தா பிரபஞ்சத்தை வேறறநின்று சேட்டிப்பிக்கின்றானென்னும் பக்கத்துக்குப் பண்ணுமோசையும் சபக்கமாக்கி, வேறறவநாதியிலே நிற்கின்ற பக்கத்துக்குப் பழமுமிரதமுஞ் சபக்கமாயினவா றறிக. (ந)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். வேதம் ஏகமாயபிரமத்தை ஏகமென்றொழியாது பிரமம் அத்துவிதமெனவும் ஓரோரிடங்களின் ஓதுதலின் அத்துவிதம் இருபொருட்கண்ணதென்பார்க்கு ஏகமாய பிரமத்தை அத்துவிதமென்றல் பொருந்தாதாய்முடியும் என்னுங்கடாவை யாசங்கித்து அதனை நீக்குமுகத்தானே அவையே தானேயாதலை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும் எண்ணும் சுவையும்போல் எங்கும் ஆம் அண்ணல் தாள் அத்துவிதம் ஆதல். எ-து. பண்ணும் அதனின் வேறன்றுயெண்ணப்படும் இசையும்போலவும், பழமும் அதனின் வேறன்றுயெண்ணப்படுஞ்

சுவையும்போலவும், யாங்கணும் வியாபகமாய முதல்வன் றிருவருள் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்பதாகலான்—அருமறைகள் ஒன்று என்னாது அத்துவிதம் என்று ஆங்கு அறையும் எ-று. வேதங்கள் ஏகமென்னாது பிரமம் அத்துவிதம் என்று அவ்விடங்களிற் கூறும். எ-று.

ஆண்டுப் பிரமம் அத்துவிதமென்றது பிரமம் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்குமென்னும் பொருட்டாகலான், அஃதுஏகமென்பதோடு முரணுமாறில்லையென்பதாம்.

பண்ணையென்னும் ஐகாரம் பகுதிப்பொருள்விகுதி. பண்—பாலைப்பண் முதலாயின.

எங்குமாமண்ணருளென்ன விசேடித்தது, குண குணிகள்போல் உடனாயும் அவ்வாறுடனாகாமைக்கு அநுபவங்காட்டியவாறு. வியாப்பிய வியாபகமாதலொட்புமையாத்திரைபேபற்றிக் குண குணிகளை உவமை கூறினாரென்பது.

அரக்கொடு சேர்த்தி யணைத்தவக் கற்போ
லுருக்கி யுடங்கியைந்து நின்று - பிரிப்பின்றித்
தானே யுலகாம் தமியே னுளம்புகுதல்
யானே யுலகென்ப னின்று. (௪)

இது, அத்துவித மென்றதனை யொன்றென்றதர்கக் கருதி ஏகனுமென்போரை மறுத்து முன்சொன்னதனையே வலியுறுத்தியது.

இ-ள். அரக் பொன்மெழுகுடனே மணலையுங்கூட்டி
கொடு ப்பிடித்த சாணைபோல வட்டிலிங்கங்
சேர்த்தி கூட்டி மாணிக்கத்துடனே சேர்ந்த வெண்

யிணைந்த கற்போல வென்பாருமுளர்.
வக் கற்
போல்
எ-று.

உருக்கி யுடங்கி யைந்து நின்றுபி ரிப்பின்றித்தானே யுலகாம். எ-று.	கத்தாவும், பிரபஞ்சத்தைச் சேட்டிப்பித்து வேறறக் கலந்து நிறைந்து நின்று தானே பிரபஞ்சமென்னும்படியா யிருப்பன். [உருக்கல் - சேட்டிப்பித்தல்.]
தமியேனுளம் புகுதல் யானே யுலகென்ப வின்று எ-து.	இந்திரியங்களைநீங்கி யான்தமியனானவிடத் தென்னிடத்திலே புகுதலாலே, யான் பிரபஞ்சரூபியென்று சொல்வே னிப்பொழுது. எ-று.

உருக்கி யென்பதனை யுளம்புகுத்தலுடனே நெகிழ்வித்தென க் கூட்டுவாருமுளர். புகுதல் - புதிதாகப் புக்கதன்று, அநாதியிலே யேகிபவித்து நின்றமுறைமை. முன்புதோன்றும. வி ந்திரியங்களை நீங்கியவிடத்தே காண்டலா லிப்பொழுது பிரகாசித்ததெனவறிக.

பிரபஞ்சமுங் கத்தாவும் அத்துவிதமாய் நின்றமு றைமை இந்த நாலுவெண்பாவிலுங்கூறியவாறறிக.

கத்தாவும் பிரபஞ்சமும் வேறறக்கலந்து அத்துவிதமாய்நிற் பனென்னும் பக்கத்துக்கு, அரக்கொடு கூட்டிப்பிடித்த சாணை சபக்கமாயினவாறறிக.

இந்தவிது விவ்வாறு விரித்துரைத்தமையான் வழிநூலார் விரியாதவாறறிக. ஆதலாலே விரியாதது விரித்துரைத்தா ரெனவறிக. எனவே இரண்டுநூலும் ஒன்றென்றுயிற்று. இ வி வெண்பாவுக்கு விருத்தமாகவு மொருவிருத்தத்தே யிரண் டுவெண்பா வடக்கியும் வருவன மேலேகாண்க. (௪)

சிவஞானமுனிவர் உரை.

"எ-து. உ-ம். எ-னின். இங்ஙனம் வெவ்வேறுவமையெடுத்துக்காட்டின் அநேகாந்தவாதமாமென்னுங்கடாவை யாசங்கித்து, அஃதாகாமை உவமைமுகத்தான் விளக்கி மூன்றனையும் ஒருங்கே வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். உருக்கி அரக்கொடு சேர்த்தி அணைத்த அக்கற்போல் உடங்கு இயைந்து நின்று பிரிப்பு இன்றித் தானே உலகு ஆம். எ-து. அரக்கை யுருக்கி அதனோடு சேர்த்து அணைத்த கற்பொடி அவ்வரக்கினோ டொன்றாய் ஒருங்கியைந்து நீக்கமின்றி நின்றாற்போல, முதல்வன் உயிர்களின் ஒருங்குகூடி நின்று நீக்கமின்றி உடனாகலால், தானேயாம், உலகேயாம், தானே உலகேயாம். அற்றேல், வாமதேவமுனிவன் முதலியோர் யானே யுலகெல்லாமாயினேன் எனக் கூறுதலானும், சர்வஞானோத்தரத்தில் யானே யெல்லாமாய் அல்லனுமாய் உடனுமாய் நின்றேன் என்று உயிர் கண்மேல் வைத்தோதுதலானும், உயிர்களும் இவ்விலக்கணத்தனவாவான் செல்லும்போது மெனின்;—தமியேன் உளம் புகுதல் யானே உலகு என்பன் இன்று. எ-து. அம்முதல்வன் பாசக்கூட்டத்தி னீங்கித் தனியாய் நின்ற என்னகத்துச் சோகம்பாவனையாற் புகுந்து வேற்றுமையின்றித் தோன்றலான் யானே யுலகெல்லா மென் பேறுபெற்றேன்; இம்முத்திகாலத்து. ஆகலின், அதுபற்றி உயிர்களும் அவ்வாறுவான் சேறலின்று. எ - று.

அதுபற்றி உயிர்களும் அவ்வாறுவான்சேறலின் றென்பது குறிப்பெச்சம்.

இவ்வொற்றுமைபற்றியன்றே அருச்சுனர்கு கீதைநூல் செவியறிவுறுத்தகண்ணன் யானேயுலகெல்லாமாயினேனென்றதூஉ

ம், முதல்வனது விச்சுவரூபத்தைத் தான்காட்டியதூஉம், ஏனை யவற்றைக்கைவிட்டு என்னையே வழிபடுகவென்றதூஉம்; அதனை உறுதியாகக்கொண்ட அருச்சுனன் அவன் கூறிய கருத்துநோக்கிச் சாங்காறுஞ் சிவபூசைசெய்ததூஉம், கண்ணன்மேலிட்ட போதுகள் முதல்வன் திருமுடிமேற் கண்டதூஉமெனக. கண்ணன் உபமன்னியமுனிபாற் சிவதீக்கையுற்றுத் தன்னையுந் தலைவனையுமுணர்ந்தோனாகலிற் சிவோகம்பாவனையைத் தலைப்பட்டோனாதலறிக.

கலப்பாய்நிற்றலான் உலகேயாமென்பார் உடங்கியைந்து எனவும், பொருட்டன்மையால் வேறுநிற்றலால் தானே யாமென்பார் நின்று எனவும், உயிர்க்குயிராய் நிற்றலால் தானேயுமாமென்பார் பிரிப்பின்றி எனவுங் கூறினார்.

ஈண்டும் இரட்டுறமொழிந்து கொண்டுரைக்க.

இன்றியென்னுஞ் செய்தெனெச்சக்குறிப்பு மழைபெய்து குளம் நிறைந்தது என்புழிப்போலக் காரண காரியப்பொருட்டாய் நின்றது.

இவ்வதிகரணத்தானே பேதமென்றும் அபேதமென்றும் பேதாபேதமென்றும் பிணங்குஞ்சமயிகளையெல்லாம்மறுத்து, அம்மூவகையியல்புந் தன்கட்டோன்ற நிற்கும் அத்துவிதத்துண்மை ஏதுக்களானும் உவமைகளானும் உணர்த்தியவாறு. புடைநூலாசிரியரும் இவ்வதிகரணப்பொருளேபற்றி புறச்சமயத்தவர்க்கிருளாய்—தெரிக்கலுற்றும்" எனவகுத்தோதினார். சிவப்பிரகாசம். பாயிரம் - எ—செ.

உ—கு, முதலதிகரண முடிந்தது.

உள்ளதே தோற்ற வுயிரணையு மவ்வுடலி
னுள்ளதா முற்செய்வினை யுள்ளடைவே - வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன்விளக்குஞ் செய்யேபோற்
செய்வன் செயலணையா சென்று. (ரு)

இது, கத்தாவினுடைய வாக்கினையாலே யொழிந்து ஆன்மாக்களுக்குப் புண்ணியபாவங் கூடாதென்பதுவும், அது கூடுமிடத்து முன்புள்ளதொழிந்து கூடாதென்பதுவும், கூட்டுமிடத்து விருப்புவெறுப்பின்றிக் கூட்டுவனென்பதுவுங் கூறுகின்றது.

இ-ள். உள்ளதே தோற்ற வுயிரணையு மவ்வுடலின் எ-து. முன்புள்ள கன்மத்துக்குப் பொருந்தியுள்ள தொருதேகம்வந்துதோன்ற, அந்தத் தேகத்தே ஆன்மாச்சென்று பொருந்தும்.

உள்ளதா முற்செய்வினை எ-து. அநாதிசுத்தனாயிருக்கின்ற ஆன்மாவுக்குக் கன்மமுண்டானபடி ஏனென்கின்றாயாகின் ? அநாதிசுத்தனல்ல, முன்புசெய்த வினை அநாதியிலே யுள்ளதாயிருக்கும்.

உள்ளடைவே எ-து. தேகத்தை யுண்டாக்குவது கன்மமாயிருந்து கன்மந் தேகமின்றி யுண்டானவாறெங்ஙனேயென்று சொல்வையாகில் ? முன்புபோந்த முறைமையால். அஃதாவது, முன்பெடுத்த தேகம் கன்மத்தையுண்டாக்கும், அந்தக் கன்மம் தேகத்தையுண்டாக்கும், ஆதலால் இவையொன்றுக்கொன்று தொன்றுதொட்டு வித்து மரமும்போலவும், விளைவும் உணவும் வித்தையும்போலவும் வருமென்றதாம்.

வள்ளலவன் எ-து. [வள்ளல் அவன் - கத்தா] வள்ளலென்றும் விரும்பியது கொடுப்பனென்பதாம்.

அது பெத்தமுத்தி யிரண்டையுங் கொடுத்தல். தான்சொன்ன வேதாகமங்களின்வழியே யொழுகாதோர்க்குப் பெத்தத்தைக் கொடுப்பனென்றும், வழிபடுவோர்க்கு முத்தியைக் கொடுப்பனென்பதுமாம்.

செப்பவர் செய்திப்பயன்விளைக்குஞ் செய்யேபோற் செய்வன் எ-து. பெத்தமுத்திகளைக் கொடுக்கின்ற முறைமை யெப்படியென்னில்? யாதொரு வேளாண்மையைச் செய்யுமவர்கள் செய்த பிரயோசனத்தைக் கொடுக்குஞ் செய்போலக் கொடுப்பன்.

அது செந்நெலிடப் பூநிவிளையாதென்பதாம். எனவே கர்த்தாவுக்கு விருப்புவெறுப் பில்லையென்பதாயிற்று.

செயலணையா சென்று எ-து. இப்படிச் செய்கிறவன் விகாரியாகானோ வென்னில்? விகாரியாகான். அவன் சந்நிதிமாத்திரத்தே நடக்கும். அந்தச்செய் விகாரமின்றியிருக்க வதுவிளைந்தாற்போல வென்றதாம்.எ-று.

தழைமுதலிய இடுவார்க்குப் பயன்மிகக்கொடுத்தும், இடாதோருக்குக் குறையக்கொடுத்தும் செய்யும்செயல்போல வென்பாருமுளர். அது உவமையன்று, "இருவினை யின்பதுன்பம்" "பேறிழவின்பமோடு பிணிமூப்புச்சாக்காடென்னும்" "உடற்செயல்கன்மமிந்த வுடல்வந்தவாறேதென்னில்" "முற்செயல்விளைவிந்த முயற்சியோடநுபவித்தா - விற்செயல்பலிக்குமாறென்" "மேலைக்குவித்துமாகி விளைந்தவையுணவுமாகி - ஞாலத்துவருமாபோல" "அருளினூலுணர்ந்தநூலின்" "மருந்துவனு

ாத்த நூலின் வழிவரிற்பிணிகள்வாரா" "மண்ணுளேசிலவியாதி மருத்துவனருத்தியோடுந் - திண்ணமாயறுத்துக்கீறித் தீர்த்திடும்" என்பனவழிநூலாரிந்தவெண்பாவால் விரித்தவாறறிக. சித் - உ—ரு, ச - கூ - க0 - கக - கஉ - ௩௩ - ௩ச - ௩ரு—செ.

கத்தா விருப்புவெறுப்பின்றி ஆன்மாக்களைப் பிரித்துக் கூட்டுவனென்னும்பக்கமும், அஃதெத்தாலென்னில்? வினையாலென்னுமேதுவும், அஃதென்போலவென்னில்? செய்போலவென்னும் சபக்கமும், வினையில்லையாயிற் செயலில்லை யென்னும்விபக்கமும் கூறியவாறுகாண்க. (ரு)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். வினை உண்டென்பதற்கும், அதுவே உயிர்க்குப் பயனாய் வருமென்றற்கும், மேல் வினையேறுமாற்றிற்கும், அது முதல்வனையின்றி யமையாமைக்கும், பிரமாணமென்னையென்னுங் கடாவை யாசங்கித்து ஏதுவை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். உள்ளதே தோற்ற. எ-து. இல்லது தோன்றாதென்பது மேற்கூறிப்போந்தமையான், முன் உள்ளதாய புண்ணிய பாவமென்னும் இரு கூற்றுச் சஞ்சிதவினையே தன் பயனாகிய இன்பதுன்பங்களையும், அவை நுகர்தற்குரிய நிலைக்களமாகிய உடம்பினையுந் தோற்றுவிப்ப,—உயிர் அவ்வுடலின் அணையும். எ-து. அவ்வின்ப துன்பநுகர்ச்சி சடத்துக்குக் கூடாமையிற் சித்தாகிய உயிரே அவ்வுடம்பிற் பொருந்தி அவற்றையநுபவிக்கும். முன் வினையை ஈண்டநுபவித்தொழிந்தால் மேலைக்கு வினையுண்டாமாறியாங்ஙனமெனின்?—முன் செய் வினை உள் அடைவே உள்ளதாம். எ-து. முன் செய்த வி

னை அநுபவித்தற் கேதுவான முறைமையிலே மேலைக்கு வினையுளதாம். அற்றேல், அவ்வினையே பயனாக வருமென வமையும் முதல்வன் எற்றுக்கெனின்?—செய்பவர் செய்திப் பயன் வினைக்குஞ் செய்யேபோல். எ-து. உழவர் செய்யுந் தொழிற்குத் தக்கபயனை விளைநிலம் விளைவிப்பதன்றி அத்தொழிலானே விளைவிக்க மாட்டாததுபோல—வள்ளலவன் செய்வன். எ-து. உணவும் வித்துமாய்த் தொன்று தொட்டு வரும் அவ்வினைகளை வள்ளலாகிய முதல்வனே அவ்வுயிர்கட்குக் கூட்டுவன்:—செயல் சென்று அணையா. எ-து. அவ்வாறன்றி வினை தானே உயிர்கட்குப் பயனாய் வந்து பொருந்தமாட்டாது. எ-று.

வள்ளலென்றார், தற்பயன் குறியாது "வேண்டுவார் வேண்டிய" வாறே நல்கும் அருளுடைமை நோக்கி. திருநாவுக்கரசுநாயனார் திருமறைக்காட்டுத்திருத்தாண்டகம்,க—செ. "தூண்டு சுடரனைய;".

உள்ளடைவு உண்ணுதற்கேதுவாகிய அடைவென விரியும். ஏகாரம் ஏழாவதன்பொருட்கண் வந்தது. உள்ளுதல் ஈண்டநுபவித்தல். அதற்கேதுவாகிய முறைமையாவன, அநுபவித்தற்குத் துணைக்காரணமாகிய விருப்பு வெறுப்புக்கள். அவற்றின் சுணுண்டாமாறு முன்னர்க்காட்டுதும்.

மேல் முதல்வனுக்கு வினை வேண்டப்படுமென்பதற்கு அரசனையுவமைகூறினார்; ஈண்டு வினை முதல்வனையின்றியமையாதென்பது உணர்த்துதற்கு உழவுதொழிலையுவமை கூறினாரெனக் கொள்க.

அவ்வினையிற் செய்வதனி லவ்வினைஞர் தாஞ்சென்றங்
கவ்வினையிற் காந்த பசாசம்போ - லவ்வினையைப்

போரம லூட்டும் பிராணி ணுகராரோ
லார்தா மறிந்தணைப்பா ராங்கு.

இது, ஆன்மா கன்மத்துக்கிடாயின தேசத்தைத் தானே பொருந்து மென்போர்க்கும், கன்மந் தானேசென் றெருந்த கத்தைப்பொருந்தும் கத்தாவேண்டவென்போர்க்கும், அவையிரண்டை மறுத்துக் கத்தாவாலொழிந்தாகாதென்றது.

இ-ள். அவ்வி முன்புண்டான கன்மம்போலப் பின்புந்னையிற் கனமத்தைச் செய்யுமிடத்து.
செய்வ
தனில்.
எ-து.

இன்-உவமம் பொருள். என்றது முன்புண்டான கன்மம் புசித்துவருகச்சே யவனையறியாமல் ஆகாமிய மேறுமாபோலென்றதாம். எனவே முன்பு நா மின்னகன்மஞ்செய்தே மின்னகன்மம் புசிக்கின்றோம் மேலுமின்னகன்மஞ் செய்துகொள்ளுகின்றோமென்று ஆன்மா வறியாதென்றதாம். கன்மமு மின்னகன்மஞ் செய்தா னின்னதூட்டவேணும் மேலுமின்னதுசென்று பொருந்தவேணுமென்று மறியாதென்றுமாம்.

அவ் விணையர் பிராரத்தகன்மத்தைப் புசிப்பதான வாதாஞ்சென்றங் ன்மாக்கள் தாம் புசிப்பதான கன்மத்திலே சவ்விணைபி லவ் கூடி யந்தக் கன்மபலங்களை.
விணைபை எ-து.

காந்த பசாச காந்தத்தையு மிரும்பையு முகமொக்கம்போற் பேரா வொருவன் கூட்டுமாபோலக் கூட்டித் கபம லூட்டும் பி பாமற் புசிப்பிக்குங் கத்தாவாலே புசியார்ரானி ணுகராரோ களாகில்.
ல் எ-து.

என்றது - காந்தமும் வலித்துக்கொள்ளுந் தன்மையுடைத்து, பசாசமும் வலிகொடுக்குந் தன்மையுடைத்து, அவ்விரண்டு மொருதானத்திலேகிடக்கச்சே காந்தமும் வலித்துக்கொண்டதில்லை; பசாசமும் வலிகொடுத்ததில்லை; அவ்விரண்டையு மொருவன் முகநோக்கப் பிடித்தபொழுது காந்தமும் வலித்துக்கொண்டது, பாசமும் வலிகொடுத்ததுபோல வென்றதாம்.

ஆர்தா மறிந் யாவர்தா மவையிற்றை யறிந்துகூட்டத்தப்பா ராங் வல்லார், அந் தந்த யோனிகடோறும் அங்கு எ-து. தந்த வுலகங்கடோறும். எ-று.

என்பது, முன்புசெய்தவினையைப் புசிக்குமிடத்து அந்தவினையையுடையவர்கள் தாமாயறிந்து அந்தவினையைக் கூடிப் புசிக்கமாட்டார்கள். அந்தவினை தானறிந்துசென்று வினையுடையவர்களைக் கூடமாட்டாது. புசித்துவருகின்ற முறைமையுண்டாகையாலே ஆன்மாக்கள் செய்கின்ற கன்மங்களெல்லாங் கத்தாவே யறிந்து பக்குவாபக்குவங்களுக் கேடாகக் கூட்டிப் புசிப்பிப்பனென்றதாம். ஆர்தானென்றது வேறொரு தெய்வமில்லை யென்பதாம். அது "யாதொரு தெய்வங்கண்டீ ரத்தெய்வமாகி யெங்கு-மாதொருபாகனார் தாம் வருவர்" "இங்கு நான் சிலர்க்குப்பூசை யியற்றினல்" "காண்பவன் சிவனேயாகில்" "தாபரசங்கமங்கள்" "அரனடிக்கன்பர்"—என்பன விதன்வழிநூலால் விரித்தவாறறிக. சித்-உ—கூ, உறு-உசு - உஎ உஅ—௪ச.

ஆன்மாக்கள் செய்த கன்மங்களை யறிந்து கூடிநுகர்விப்பனென்றதற்கு "இதமகிதங்களெல்லா மிறைவனே" "இறைவனிங்கேற்பதென்னை" "நிக்கிரகங்டானும்தேசத்தால்" "தந்தைதாய்பெற்ற தத்தம் புதல்வர்கள்" என்பனவற்றாலறிக. "இம்

மையின் முயற்சியானே" "இருவினைச்செயலின்" என்பன மூ ன்செய்த கன்மம் புசிப்பதறிக. "செயல்களே பலத்தைச் செய்யும்" "செய்தவர் மனத்தே யெல்லாச்செய்தியும்" "தா னுஞ்செய்பொருடரித்தோர்" "உலகுடல் கரணங்கால முறுப ல" என்பனவற்முற் கத்தா கூட்டுமாறறிக. அவ்வவ்யோனி தோறுமவ்வவ்விடங்கடோறும். எ-து. ஆன்மாவு மறியாது கன்மமுமறியாதென்பதறிக. சித் - உ—கூ, கரு - கச - கரு - கசு - எ - அ - கஎ - உ0 - உக-உஉ—செ.

இப்படியிந்த வெண்பாவா லப்பலபொருளும் விரித்தவா றறிக.

கத்தா கன்மத்துக்கிடான தேகத்தை யான்மாக்களுக்குக் கூட்டுவனென்னுந் துணிபொருட் பக்கத்துக்கு, காந்தமும் பசா சமும்போலவென்னுஞ் சபக்கமும்; கூட்டானேற்கூட்டாதென் னும் விபக்கமும் வந்தவாறு காண்க. (கூ)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். இருவினை சடமாகலிற் சென்றணை யமாட்டாவாயினும், உயிர்கள் சேதநமாகலின் அவையே அவ ற்றது பயனை யறிந்து எடுத்துக்கொண்டு நுகரும்; வள்ளல் எ ற்றுக்கு என்னுங் கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்து த னுதலிற்று.

இ-ள். காந்த பசாசம்போல். எ-து. ஒருவனெடுத்து நே ரொக்கப் பிடித்தவழி இரும்பினை வலித்துக்கொள்ளுங் காந் தம்போல—அவ்வினையைப் பேராமல் ஊட்டும் பிரானின். எ-து. அவ்வினைப்பயன்களைப் பிறழாமல் நுகர்விக்கும் முத ல்வனால்—அவ்வினைஞர் தாம். எ-து. அவ்வினைகளைச் செய்

யும் ஆன்மாக்கடாம்—அவ்வினையைச் செய்வதனிற் சென்று அவ்வினையை நுகராரேல் ஆர் தாம் அறிந்து அணைப்பார். எ-று. அவற்றைச் செய்தற்கு நிலைக்களமாகிய உடம்பின்கட்பொருந்தி அவற்றதுபயனை அநுபவிப்பர்; அவ்வாறநுபவியாராயின், வேறே எவர்தாம் அவற்றையறிந்துகூட்டுவார்—ஆங்கு. எ-து. அறிவுஞ் சுதந்திரமுமின்றி மலத்தின் மறைப்புண்டு கிடக்கும் அப்பெத்தகாலத்து. எ-று.

ஒருவருமில்லை யென்பதாம்.

ஆன்மாக்களுக்குத் தமக்கென அறிவின்மையானும், வினை சடமாகலானும், 'மாயை தாரகமாமத்தன்றுணிற்றல்' எனப்போந்தமையானும், முதல்வனே 'அறிந்தணைப்பன்', எனப் பாரிசேடவளவை கூறுவார், 'பிரானினுகராரே லார்தா மறிந்தணைப்பார்' என்றார். இது சொற்பொருட் பின்வருநிலை.

நெல்லிற் குமியு நிகழ்செம்பினிற் களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று தொன்மையே - வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலார் பொன்வா
ளலர்சோகம் செய்கைமலத் தாம். (கூ)

இது, ஆணவ மாயை கன்மமென்னு மூன்றுமலமு மநாதி, கத்தா சருவஞ்ஞன், ஆன்மா கிஞ்சிஞ்ஞன் என்பதுவும், கத்தா அவிகாரியென்பதுவும் கூறுகின்றது.

இ-ள். நெல்லிற் குமியும் நிகழ்செம்பினிற் களிம்பு — நெல்லுக்கு முளையுந் தவிடு முமியுமநாதியே, செம்புக்குக் களிம்பு சொல்லுமிடத்துப் புதிதாகவுள்ளதல்ல, அநாதியிலேயுண்டானது.

ஞ் சொல்லி
ற் புதிதன்று
தொன்மை
யே எ-து.

ஏகாரம் தேற்றம்.

வல்லி மல கன்ம மன்றுளவாம். எ-து. — விலங்காகிய கன்மமலமும் ஆணவமலமு மாயாமலமு மவைபோல வனாதியிலே யுள்ளதாம்.

வள்ளலார் செய்கை எ-து. — கத்தா வினையிற்றைச் செய்யுஞ்செயல். ஆல் - அசை.

பொன் வாளலர் சோகம் செய்கை எ-து. — ஆதித்தனுடைய கிரணங்கள் அலர்வனவற்றை யலர்த்தியும், குவிவனவற்றைக் குவித்துஞ்செய்யுஞ் செயல்போலும்.

இப்படிச்செய்யவேண்டிய தென்னையெனின்?

மலத்தாம் எ-து. — ஆணவமலத்தைப் புசிக்குதல் காரணமாகவாம்.

மலமூன்று மொருகாலத்துளதென்பதுதோன்ற நெல்லுக்குமியும் செம்பிற்களிம்பும்போல வென்றும். எனவே, ஆன்மா வநாதிமலசம்பந்தனாய் வினைக்கீடாகக் கத்தாகூட்டின தேகத்தேநின்று பிராரத்தகன்மம் புசிப்பதென்பதனால் கிஞ்சிஞ்ஞத்துவமும், கத்தாவுக்குச் சர்வஞ்ஞத்துவமுங் கூறினார்.

ஆதித்தனுடைய சந்நிதியிலே யலர்வனவலர்ந்து குவிவன குவிந்துவர அவன் விகாரமற்றிருந்தாற்போல, கத்தாவும் விகாரமற்றிருப்பது கூறினார்.

ஆதித்தனுடைய ஒருகிரணம் பலவிதமானாற்போலக் கத்தாவினுடைய சிற்சத்தியும் பலவிதம். ஆண்டும், அப்பொழுது கத்தாவும் போகாதிகாரவானாகி யிச்சாஞானக்கிரியைகளையுடையவ னாவன். அப்பொழுது அந்தச் சிற்சத்தி இச்சாசத்தியென்றும், ஞானசத்தியென்றும், கிரியாசத்தியென்றும் பெயரையுடைத்தாம். "ஒன்றதாயிச்சாஞானக் கிரியையென்றொருமூன்றாகி - நின்றிடுஞ்சத்தி" என்றார்வழிநூலார். சித் - க—சூ, சுரு—செ.

மல மநாதியென்பதற்கு "ஒன்றதாயநேகசத்தி யுடையதாயுடனாயாதி யன்றதா" யென்றார். சித் - உ—சூ, அ—செ.

மாயாமல மநாதியென்பதற்கு "நித்தமாயருவாயேகநிலையதா' 'என்றார். சித் - உ—சூ, ருரு—செ.

கன்மமலமநாதியென்பதற்கு "தன்மமோடதன்மமாகித் தானிருபயனும்" அஃதெத்தாலென்னில்? ஆன்மாக்களினுடைய கன்மங்களுக்கீடாக வுண்டான தேகத்திலேநின்றும் - லயம் போகாதிகாரையாய் "தந்து-நன்மைதீமையினுமின்ப துன்பினுநாடிக்காண" என்றார் சித் - உ—சூ, ருக—செ.

கன்மமென்றது புண்ணியபாவங்கள். அது "இருவினைச்செயல்காணிம்மை யிரும்பொருளின்டம்வேண்டி - வருவினைசெய்யுங்காலை" என்பதனாலறிக. சித் - உ—சூ, அ—செ.

மாயையென்ற தியாதென்னில்? சுத்தமாயையும் அசுத்தமாயையும்.

இவையொன்றோ விரண்டோவென்னில்? அவை யொன்றாயிருக்கச்சே யிரண்டாயிருக்கும்.

அஃதென்போலவென்னில்? கண்ணாடியி லிருபுறமும்போல

ஆனாற் சுத்தமாயையிலுள்ளவை யெவை, அசுத்தமாயையிலுள்ளவை யெவையென்னில்?

சுத்தவித்தை - ஈசுரம் - சாதாக்கியம்-சத்தி - சிவம் - இவையைந்துஞ் சுத்தமாயையிலே தோன்றும். சூக்குமை - பைசந்தி - மத்திமை - வைகரியாதியாகியகலைகளுந் தோன்றும்.

அது ஞானமாய்நின்றபொழுது சிவமென்றுபெயராம்.

கிரியையாய்நின்றபொழுது சத்தியென்றுபெயராம்.

அந்தஞானமுங் கிரியையுந் தம்மிற் சமமொத்து நின்றபொழுது சதாசிவமென்றுபெயராம்.

அதில் ஞானங்குறைந்து கிரியையதிகமானபொழுது மகேசுமென்றுபெயராம்.

அதிற் கிரியைகுறைந்து ஞானமதிகமானபொழுது உருத்திரமாம்.

அது சுத்தவித்தை. இவையிற்றுக்கு முற்பிற்பாடில்லை, நின்ற நின்ற நிலைகளிலே பெயர்பெற்றன.

அன்றியும், விந்துவி லாயிரத்தொன்றிலே ஞானந்தோன்றியதென்றும், ஞானத்தி லாயிரத்தொன்றிலே கிரியைதோன்றிடதென்றும், இப்படி யிப்படி தோன்றினகிரமஞ் சொல்லுவாருமுளர். "வித்தைக ளவித்தை யீசர் சதாசிவ ரென்றிவர்க்கு வைத்துறும்பதங்கள்" சித் - க—௫, உ௫—௭. "ஞானமேயானபோது சிவன்றெழில் ஞானமொக்கில்"-௬௫. "வித்தையோ டீசர் சாதாக்கியஞ் சத்தி சிவங்களைந்தும்-சுத்தத்துவஞ் சிவன்றன் சுதந்தரவடிவமாகும்"- ௬௬. என்பனவற்றானறிக.

விந்துவின் மாயையாகி யென்பதனாற் சுத்தமாயை யசுத்தமாயை யிரண்டும் வேறல்லவென்பதறிக.

இனி, காலமுதலாகப் பிருதிவியந்தமாக வசுத்தமாயையிலே தோன்றும். அவைதோன்றுமாறு:

மாயையிலே காலமும் நியதியுங் கலையும் வித்தையு மராகமும் புருடனும் இவைதோன்றும்.

ஆக மாயையுடனேழு.

இவை, சுத்தமு மசுத்தமுமா யிருக்கும்.

முன்சொன்னகலையிலே மூலப்பிரகிருதிதோன்றும்.

அந்த மூலப்பிரகிருதியிலே இராசத - தாமத - சாத்துவிக மென்னும் மூன்றுகுணமுந்தோன்றும்.

அந்த மூலப்பிரகிருதியாகிய அவ்வியத்தத்திலே, சித்தமும் புத்தியுந் தோன்றும்.

அவ்வியத்தம் - மூலப்பிரகிருதி - மகான் - என்பனவொருபெயர்.

அந்தப்புத்தியிலே யாங்காரந்தோன்றும்.

அந்தவாங்காரம், பூதாதியாங்காரம் - வைகரியாங்காரம் - தைசதவாங்காரமென மூன்றும்.

தைசதவாங்காரத்தே, மனந்தோன்றும்.

வைகரியாங்காரத்திலே,ஞானேந்திரியமுங் கன்மேந்திரியமுந் தோன்றும்.

ஞானேந்திரியமாவன:—செவி-மெய் - கண் - வாய் - மூக்கு,

இவையிற்றின் விடயம்:—சத்த - பரிச - ரூப - ரச - கந்தம்

கன்மேந்திரியங்களாவன:—வாக்கு-பாத - பாணி - பாயுரு- உபத்தம்.

இவையிற்றின விடயமாவன:—வசன-கமன-தான-விசர்க்க-ஆனந்தம்.

முன்சொன்ன பூதாதியாங்காரத்தே, சத்த பரிச ரூப இரத கந்த மைந்துந் தோன்றும்.

சத்தத்திலே ஆகாசந் தோன்றும்.

பரிசத்திலே வாயு தோன்றும்.

உருபத்திலே தேயுதோன்றும்.

இரதத்திலே அப்புதோன்றும்.

கந்தத்திலே பிருதிவிதோன்றும்:

இந்தச்சத்தாதியும் வசனாதியும் ஒன்றுக்கொன்று ஆதாரமாம். ஆலும் விழுதும்போலென வறிக.

இப்பொருள் "மாயையிற்காலமோடு நியதிபின்கலாதிதோன்றி" "விச்சையிலராகந்தோன்றி" "வருங்குணவடிவாய்" "சித்தமாமவ்வியத்தம்" "ஆங்காரம் புத்தியின்கண்ணுதித்து" "மனமதுதைசதத்தின்வந்து" "நற்செவிதுவக்குக்கண்ணு" "வாக்கொடுபாதம்பாணி பாயுவோடுபத்தமைந்தும்" "ஓசைநற்பரிசரூபவிரதகந்தங்கள்" "சாற்றிய பஞ்சதன்மாத்திரைகளில்" என்பனவற்முலறிக. சித் - உ—௬, ௫௪ - ௫௬ - ௫௭ - ௫௮ - ௫௯ - ௬0 - ௬௧ - ௬௨ - ௬௪ - ௬௫—செ.

ஆகச்சுத்ததத்துவ மைந்தும், வித்தியாதத்துவ மேழும், ஆன்மதத்துவ மிருபத்துநாலுங்கூடி முப்பத்தாறும். "சுத்த தத்துவங்களொன்று முன்னமே சொன்னவைந்தும்" "ஐந்துசுத்தத்தின்கீழ்" என்பனவற்முலறிக. சித் - உ—௬, ௬௧-௭0—செ.

இவை தூலசூக்கம் பரமாநிற்கும். "தத்துவரூபமாகும் தருமுருவானவெல்லாம்" என்பனவற்முலறிக. ௭௧—செ.

ஒடுங்குமாறுணர்த்துவது "தத்துவமெண்மூன்றுஞ்சென் று, ன்மதத்துவத்தொடுங்கும்" என்பதனாலறிக. எஉ—செ.

இதிற் சிவ மென்றது - விந்துவை.

ஆணவமலத்தைப் போக்கவென்றது. "எல்லாமாய்த்தத் துவங்க ளியைந்ததெனணுவுக்கென்னில்" என்பதனாலறிக. சித்- உ—ரு. எகூ—செ.

ஆன்மா அநாதிமலசம்பந்தனென்றும், அந்த மலமூன்று மொருகாலத்துள்ளதென்றுங் கூறியபக்கத்துக்கு, நெல்லுக்கு மியுஞ் செம்பினிற்களிம்பும்போலவென்று சபக்கங்காட்டியவா றுகாண்க.

சத்தா வவிகாரியாயிருந்து பிரபஞ்சகிருத்தியம் பண்ணுவ னென்னும் பக்கமும், அஃதெத்தால்? மலத்தைநீக்கி முத்தி கொடுத்தற்கு எனவே அருள்காரணமாக வென்னுமிதுவும், அஃதென்போலவென்னில்? ஆதித்தனைப்போலவென்னுஞ் ச பக்கங்காட்டியவாறறிக.

மலத்தை நீக்கவெனவே முத்திகொடுக்கவென்பது தானே யாயிற்று. "மும்மலநெல்லினுக்கு முளையொடுதவிடுமிப்போ ல்" அன்றிப் பஞ்சமலமுங்கூறுமது. "மாயையின் காரியத் தை மாயேயமலமதென்று" என்பதனாலறிக. இவை விரித் துக்கூறுக. சித் - உ—ரு, அகூ - அஎ—செ. (கூ)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அவ்வினை ஆதியோ அநாதியோ? ஆதியெனின் முன்பில்லது இடையே தோன்றுமென்பது சற் காரியவாதத்துக்கேலாது; அநாதியெனின்? ஒருவர் கூட்டவே

ண்டுவதில்லையென்னுங் கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். நெல்லிற்கு உமியும் நிகழ் செம்பினிற் களிம்பும் சொல்லின் புதிது அன்று தொன்மையே. எ-து. நெல்லின்கணுமியும் செம்பின்கட்களிம்பும் எக்காலத்துளவாயினவென்று ஆராய்ந்து சொல்லுங்கால், அந்நெல்லுஞ் செம்பும் உளவாயின வன்றே உள்ளனவன்றி இடையேவந்தனவல்ல; அதுபோல,—வல்லி மலகன்மம் அன்று உளவாம். எ-து. மாயை மலம் கன்மமென்னு மும்மலம்களும் அநாதியேயுள்ளனவாம்—கமலத்து அலர் சோகம் பொன்வாள் செய் வள்ளலால் ஆம். எ-து. முன்னேயுள்ளதாய தாமரைப்பூ அலர்தலும் கூம்புதலும் ஞாயிற்றினாற் செய்யப்படுமாறுபோல அவை தத்தங் காரியக்களைச் செய்தல் முதல்வனாலேயாம். எ-று.

இஃதெடுத்துக்காட்டுவமை.

புதிதன் றென்பதனைத் தனித்தனிக் கூட்டுக.

தொன்மையி னுள்ளவற்றைத் தொன்மை என் றுபசரித்தார்.

ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

மாயை இறைவனுக்குப் பரிக்கிரகசத்தியாகலின், வல்லியென்றார்.

வினைக்குத் தொன்மைகூறுவார் இனம்பற்றி மாயைமலங்களுக்குந் தொன்மை கூறினார்.

மூலமலத்தின்காரியம் மோகம் மதமுதலாயின. இருவினையின்காரியம் இன்ப துன்பமுதலாயின. மாயையின்காரியம் தநுகரணமுதலாயின. வள்ளலாலாமெனவே திரோதானசத்தியது உண்மையும்பெற்றாம். அது பாகம் வருவித்தற்பொருட்டு மலத்தின்வழி நின்று மோகமுதலியவற்றைத் தொழிற்படுத்துவதாகிய சிவசங்கற்பத்திற் கேதுவாதல்பற்றி மலமென்

ருபசரித்துக் கூறப்படும். இவ்வாறு மல கன்ம மாயை திரோதானம் மாயாகாரியமென்னும் ஐவகைப்பாசமுங் கண்டுகொள்க.

இவற்றுண் மாயை, சுத்தமாயை அசுத்தமாயையென்றிருவகைப்படும். இவ்விரண்டினுட் சுத்தமாயையின் காரியமே அசுத்தமாயையென்பாரும், சுத்தமாயைபோல அசுத்தமாயையும் அநாதியேயாமென்பாரும், ஒன்றுதானே ஊர்த்துவமாயை அதோமாயையென் றிருவகைப்படுமென்பாரும் எனப் பலதிறத்தர் ஆசிரியர். இனி முதல்வனது கிரியாசத்தியே சுத்தமாயையெனப்படுமென்பாருமுளர். அது முதல்வனுக்குத் தாதான்மியசத்தியாகலிற் பரிக்கிரகசத்தியாகிய சுத்தமாயையாதல் யாண்டையதென்றொழிக.

சுத்தமாயையினின்றும் பஞ்சகலைகளும் நால்வகைவாக்குஞ் சிவதத்துவமைந்துஞ் சுத்தகாலமுதற் சுத்தநிலமீறுகிய முப்பத்தொன்றுந் தோன்றும்.

அசுத்தமாயையினின்றும் அசுத்தகாலமுதல் அசுத்தநிலமீறுகிய முப்பத்தொரு தத்துவங்களுந் தோன்றும்.

இத்தத்துவங்களெல்லாம் பொதுவுஞ்சிறப்பும் பொதுச்சிறப்புமெனத் தனித்தனி மூவகைப்பட்டு உயிர்கடோறும் வெவ்வேறுளவாம்.

கன்மமும் "நாசோற்பத்தி பண்ணிவரு மாதலா லநாதி" என்பதுபற்றிப் பிரபஞ்சம்போலப் பிரவாகா நாதியென்பாரும், சிவப்பிரகாசம், பொது. கசு. நண்ணியடு. "ஏகனேக னிருள்கரும மாயையிரண்—டாகவிவையாறுதி யில்." எ-ம். திருவருட்பயன். அறியுநெறி-உ—செ. "ஆணவ முதலன் றதுபோற் கருமமும்". எ-ம். ஒப்ப வோதுதல்பற்றி மூவகைவி

னைக்கும் முதற்காரணமாய மூலகன்மமொன்று அநாதிநித்தமாயுண்டென்பாருமென்று இருதிறத்தாராசிரியரென்க. இவ்வினையீட்டப்படுங்கால், மந்திரமுதலிய அத்துவாக்களிடமாக மனம் வாக்குக்காயமென்னும் மூன்றானீட்டப்பட்டு, தூலகன்மமாய் ஆகாமியமெனப் பெயர் பெற்று, பின்னர்ப் பக்குவமாங்காறுஞ் சூக்குமகன்மமாய்ப் புத்திதத்துவம் பற்றுக்கோடாக மாயையிற்கிடந்து, சாதி ஆயுள் போகமென்னும் மூன்றற்கு மேதுவாய் முறையே சனகந் தாரகம் போக்கியம் என்னு மூவகைத்தாய், அபூர்வம் சஞ்சிதம் புண்ணியபாவமென்னும் பரியாயப் பெயர் பெற்று, பின்னர்ப் பயன்படுங்கால் ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் ஆதிபௌதிகம் என்னு முத்திறத்தாற் பலதிறப்பட்டு, பிராரத்தமெனப்பெயர்பெறும்.

ஆதிபௌதிகமாவதுசடம் வாயிலாக வருவது.

ஆத்தியான்மிகமாவது சடத்தோடுகூடிய சேதநம் வாயிலாக வருவது.

ஆதிதைவிகமாவது ஒருவாயிலானன்றித் தெய்வந்தானே காரணமாகவருவது.

இன்னும் இவ்வினைகள், உலகம் வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கம் மாந்திரம் என்று ஐவகைப்பட்டு ஒன்றற்கொன்று ஏற்றமுடைத்தாய், முறையே நிவிர்த்திமுதலிய பஞ்சகலைகளினடங்கி, அசுத்தம் மிச்சிரம் சுத்தமெனப்படும் போகங்களைப் பயப்பிக்குமென்றறிக.

☞ உ—கு, இரண்டாமதிகரண முடிந்தது.

கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து
விண்டார்ந் தத்தூடு வினையினாற் - கண்செவிகெட்

உள்ளதே தோற்ற வுளமணுவாய்ச் சென்றுமனந்
தள்ள விழுங்கருவிற் றான். (எ)

இது, ஆன்மாவுக்குத் தேகம்விட்டால் அறிவில்லையென்றும், மீண்டொருதேகமெடாதென்றும் சொல்வோர்க்கு, அவையுண் டென்கின்றது.

இ-ள். கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து எ-து. ஆன்மா முன்புகண்டு பரிசித்துப்போந்த நனவிலுள்ள காரியங்களைத் தான்மறந்து கனவிலே நின்றறியுமறிவைப்போல.

கண்செவி கெட்டு எ-து. கண்செவிமுதலாகிய தூலசரீர மிறந்து.

உளமணுவாய் விண்ணூடுபடர்ந்துசென்று எ-து. ஆன்மா சூக்குமதேகத்துடனே ஆகாயம் வழியாகப்போய்.

வினையினால் எ-து. முன்புசெய்த கன்மங்களாலே.

உள்ளதே தோற்றம் எ-து. நரகசுவர்க்கமுதலிய போகங்களுக்கேற்ற தேகம் வந்துண்டாக.

மனந் தள்ள விழுங் கருவிற் றான். எ-து. மனத்தையும் தோற்பிக்கும்படி விரையக் கர்ப்பாதானத்தே விழும். எ-று.

மனந்தள்ள என்றது மனமுந்தோற்க வென்றதாம்.

மனம் நினைத்தவிடத்தே யோர்மாத்திரைக்குட்செல்லும், அதிலும் விரையச் செல்லுமென்றதாம். “வினைமாண்டபின் மனமாண்டெறிற்றுடில் பலபகுத்தவிடையிற்சேறல்” என்றார் ஞானாமிர்தத்தினும் “மலமாயைகன்ம மாயேயந்திரோதாயி

மன்னி" என்றார் வழிநூலார். சித் - உ—கூ, அஅ—செ.

விழுமென்றவும்மையால் விழாமற் பாவமிகுதிகளாலே பாடாணம்போற் கிடக்குமென்பதுமாம் அது "உடல்விடாயோனி பற்றி யுதிப்பினுமுதிக்கும்" என்பதனுலறிக. கூஎ—செ.

"பூதனுசரீரம்போனாற் புரியட்டருபந்தானே" என்பதனால் நரகசுவர்க்கபோகந் துய்ப்பதறிக. கூகூ—செ.

நனவின்கணுண்டாகிய கனவின்கண்மாறிச் சீவித்தாற்போல ஆன்மா தேகத்துக்கிடான அறிவுமாறி சீவித்து நிற்கும்.

அறிவுகெடாதென்றும், தேகமாறுமென்றும், சூக்குமதேகத்தோடேசென்று நரகசுவர்க்கந்துய்க்குமென்றுங் கூறிய பக்கத்துக்குக் கனவு சபக்கமாயினவாறுகாண்க. (எ)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம், எ-னின். புன்ருற்பவ மாங்காற் படும் இயல்புகளுணர்த்தி அதனை வலியுறுத்துத னுதலிற்று. கண் செவி கெட்டு உள்ளதே தோற்ற உளம் அத்தூடு விண்படர்ந்து கண்ட நனவைக் கனவு உணர்வில் தான் மறந்து மனம் தள்ள வினையினால் அணுவாய்ச் சென்று கருவில் விழுந்தான் எனக்கொண்டு கூட்டுக.

இ-ள். கண் செவி கெட்டு உள்ளதே தோற்ற. எ-து. கண் செவி முதலிய உறுப்புக்களையுடைய இவ்வுடம்பு கெட்டவழித் தனக்குக் கேடின்றிப் படைப்புக்காலந் தொடங்கிச் சங்கார காலமளவும் நிலைபெற்றுள்ளதாகிய சூக்குமதேகம் பூதசாரவுடம்பு முதலியனவாய்க் காரியப்பட—உளம் அத்தூடு விண்படர்ந்து. எ-து. உயிரானது அப்பூதசாரமுதலிய உடம்பின்கட் பொருந்தித் துறக்க நிரயங்களிற்சென் றநுபவித்துப் பின்னர்—கண்ட நனவைக் கனவு உணர்வின் தான் மறந்து. எ

-து. நனவின்கட் கண்டவற்றைக் கனுக்காணுங் காலத்து மறந்து அறிவு வேறுபட்டாற்போல, முன்னைக் கண் செவி கெட்டவாறும் உள்ளதே தோற்ற அத்துடு விண்படர்ந்தவாறும் ஆண்டநுபவித்தவாறுமாகிய இன்னோரன்னவற்றை மறந்து அறிவு வேறுபட்டு,—மனந் தள்ள வினையினால் அணுவாய்ச் சென்று கருவில் வீழுந் தான். எ-று. முன்னுடம்பு இறக்குங்கால் அடுத்த வினை காட்டுங் கதிநிமித்தம் பற்றி உயிர் அவாவுமாறு மனஞ்செலுத்துதலான் அக்கதிக்கட்சேறற் கேதுவாய் எஞ்சிநின்ற புண்ணியபாவசேடத்தாற் சூக்குமதேக மாத்திரையாய்ச் சென்று அம்மனந் தள்ளிய கதிக்கு அமைந்த அக்கருவின்கட்படும். எ-று.

இன் உவம வுருபு. தான் அசை. மறத்தற்குச் செயப்படு பொருள் அவாய் நிலையான் வந்தது.

விண்படர்ந்தென்னும் உபலக்கணத்தால் நிரயம்படர்ந்தென்பதூஉம் பெறுதும், படர்ந்தெனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார்.

அத்துடென்புழி அன்சாரியை விகாரத்தாற் றொக்கது. பொருந்தி யென்பது சொல்லெச்சம். வினை ஆகுபெயர்.

உடம்பு நீங்கிப்போங்கால் முதற்கட் கெடுவன கண்ணுஞ் செவியுமாகலின், அச்சிறப்பு நோக்கிக் கண் செவிகெட்டென்றுபசரித்தார். கெட்டவழியென்பது கெட்டெனத் திரிந்து நின்றது.

ஐம்பெரும் பூதத்தின் காரியமெனப்பட்ட தூலவுடம்பு சூக்கும வுடம்பின் காரியமா மாறென்னையென்னும் ஐயநீக்குதற்கு உள்ளதே தோற்றவென்றார்.

ஏகாரந் தேற்றம்.

ஆகாயமுதலிய தூலபூதங்கள் சத்தமுதலிய சூக்கும பூதங்களின் காரியமாதலின், அதுபற்றியே தன் மாத்திரை மயமாகிய சூக்குமவுடம்பிற் றோன்றுவதாய தூலவுடம்பு ஐம்பெரும் பூதமயமெனப் பட்டதன்றிப் பிறிதில்லையென்பது "பூதஞ்சரீரம் போனாற் புரியட்ட ரூபந் தானே யாதனா சரீர மாகி" எ-ம். சித் - உ—சூ, ௩௬—செ. "சூக்கும வடிவே தென்னிற் றூலகா ரணம தாகும்" எ-ம். ௪—சூ, ௧0—செ. "தூலமா முருவினுக்குச் சூக்கும முதல்." எ-ம். உ—சூ, ௫0—செ. "மாறியிவ் வுருவ மெல்லாம் வருவதெங்கேனின் றென்னிற் கூறிய சூக்கு மத்தாம்." ௭௭—செ. "விதிப்படி சூக்கு மத்தேயுருவரும்." எ-ம். ௪௬—செ. "மனுதிரு முடல்." எ-ம். ௧௧—சூ, ௩—செ. வழிநூலாசிரியரும் இவ்வாறே கூறியவாறு காண்க. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்ப. அதுதோன்றுங்கால் "காலமுற்று-நீக்கிடா மரம்பின் வேரோர் நீண்மர நிகழ்த்து" மாறுபோல உ—சூ, ௪அ—செ- "சூக்கும". சூக்குமவுடம்பு கெடாதுநிற்பத்தூலவுடம்பு "வேறுருகுறியாமாரம் வீரசங்கிலியுமா" தல்போல ௭௭—செ. வினைக்கீடாக அச்சுவேறுபட்டு "மதிக்கெழு கலைகள்போலவருவது போவதாம்." ௪௬—செ - "மாறியிவ்வுருவ." என்பதூஉம் வழிநூலாசிரியர் கூறியவாற்றானறிக.

அணு சூக்குமவுடம்பு.

தள்ள தள்ளுதலானென்க.

அக்கருவிலெனச் சுட்டுவருவிக்க.

தான் அசை.

உள்ளதே தோற்றவென்றதனால் உடற்றிரிவும், விண்படர்ந்தென்றதனால் இடத்திரிவும், கண்ட நனவைக் கனவுணர்விற்றான் மறந்தென்றதனால் அறிவுத்திரிவும் பெறப்பட்டன.

உள்ளதே தோற்றவென்றதனால் புதிது புதிதாய்த் தோன்றுதல் பற்றிச் சற்காரியவாதத்திற்கு இழுக்கின்மையும், அத்துரிவின்படர்ந்தெனவும் அணுவாய்ச்சென்று கருவில் விழுமெனவுங் கூறியதனால் போக்குவரவுபற்றி வியாபகத்துக்கு இழுக்கின்மையும், வினைச்சேடத்தாலென்றதனால் துறக்க நரகங்களின் அநுபவித்தொழிந்தமை பற்றிப் புனருற்பவகாரணத்திற்கு இழுக்கின்மையும், மனந் தள்ளவென்றதனால் அஃதெஞ்சுதற்கேதுவுங் காட்டியவாறு.

வேதத்துட்கூறப்படும் பஞ்சாக்கினிவித்தையின் இயல்புணர்த்துவார் கண் செவி கெட்டவழி விண் படர்ந்து மறந்தணுவாய்ச் சென்று கருவில் விழுமென்றார். பஞ்சாக்கினிவித்தையினியல்பு நீலகண்டபாடியத்திற் காண்க.

மறந்து விண்படர்ந்தெனக் கூட்டியுரைப்பாருமுளர். துறக்கநிரயங்களிற்படர்ந்து அநுபவிப்புழி அறிவுதிரியாமை புராணங்களுட்காண்க.

அரவுதன் றோலுரிவு மக்கனவும் வேறு
பரகாயம் போய்வருமப் பண்பும் - பரவில்
குடாகாய வாகாயக் கூத்தாட்டா மென்ப
தடாதுள்ளம் போமா றது. (அ)

இது, தூலசூக்குமங்க ளொன்றுகெட்டொன்றுதோன்றுமென்போர்க்கும், அறிவுகெடுமென்போர்க்கும், அச்சுமாறுதென்போர்க்கும், கத்தா ஆன்மாவுமாய்நின்று பின்தோன்றுதென்போர்க்கும், ஏகான்மவாதிகளுக்கும், அவையல்லவென்றும்; அறிவுந்தேகமுமாறிப்பிறக்குமென்றுங் கூறுகின்றது.

இ-ள். உள்ளம் ஆன்மா வொருதேகத்தைவிட் டொரு

போமா தேகத்தை யெடுக்கச்செல்லு முறைமையைத்
றது பர சொல்லில்.
வில் எ-து.

குடாகாய வா குடத்தினின்றவாகாயம் மகாவாகாயத்
காய மடாது தோடே கூடினாற்போலக் கூடுமென்பது
எ-து. பொருந்தாது.

இது வேதாந்தியை மறுத்தது.

கூத்தாட்டா ஒருவன் பலகூத்துக்கட்டி யாடினாற்போ
மென்ப தடா லு மென்பது பொருந்தாது.
து. எ-து.

இது ஏகான்மவாதியை மறுத்தது.

அரவு தன் றே பாம்பு தன்னுடைய தோலை யுரித்துப்போ
வுரிவும் எ-து. ட்டுப்போனாற் போலவும்.

இது, ஒன்றுகெட் டொன்றுதோன்றுமென்போர்க்குக் கூ
றியது.

அஃதாவது, தூலவுடம்பொழிந்து சூக்குமவுடம்பில்லையெ
ன்போற் குண்டென்றதாம். இப்பொருள் "சூக்குமங்கெ
ட்டுத்தூலந்தோன்றிடா" "விதிப்படி சூக்குமத்தேயுருவரு
ம்" "தூலமாமுடம்பினுக்குச் சூக்குமமுதல" என்பனவற்று
லறிக. சித் - உ—கூ, உஅ - சகூ - ருo—செ.

அக்கனவும் முன்னர்க்கூறிய கனவுபோலும்.
எ-து.

என்றது, தூலவுடம்புடனேகூடி நனவின்கண் கண்டுகேட்
டுண்டுயிர்த்துற்றறிந்த அறிவுகெடாமற் கனவின்கட் சூக்கும
தேகத்துடனே கூடிநின்றாற்போல வென்றதாம்.

எனவே, அறிவுகெடாதென்று மீளவும் வலியுறுத்திக் கூறி/யவாறறிக.

வேறு பரகா தம்முடைய வுடம்புவேறாகப் பரகாயப்யம் போய்வரு பிரவேசம் பண்ணுதலைச் செய்வோருடையம்ப்பண்பும் எ- முறைமையும்போலும். எ-று.
து.

எனவே, அச்சுமாறாதென்போருக்குக் கூறியதாம்.

இப்பொருள் "சங்கமந்தாபரங்கள் சரர்களாய்த் துப்பபொன்னில்" "வண்டுகளாகிமாறு மயிற்குட்டி" "அகலிகை கல்லதாளுள்" "செப்பிறைப்மாற வேறு"—"அவ்வவ யோனிதோறும்" என்பனவற்றா லறிக. சித்-உ—கூ, சக-சங-சச-சரு-சசு—செ.

சூக்குமங் கெடாதென்றும், அறிவுகெடாதென்றும், அச்சுமாறாதென்றும், கூறியபக்கத்துக்கு; அரவுபோலவும், அக்கனவுபோலவும், பரகாயப் பிரவேசம்போலவும், கூறிய சபக்சங்காண்க. "பன்னக மண்டசங்கள்" என்பனவற்றா லறிக. சித்-உ—கூ, ங அ—செ. (கூ)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். உயிர்க்குப் புனருற்பவமாகாமைக்கு வாதிகளான் எடுத்துக் காட்டப்படுங் குடாகாய வாகாய வுவமைக்குப் பொருள்கூறி, மேலதனை வலியுறுத்தூத லுதலிற்று.

இ-ள். அரவு தன் தோல் உரிவும் அக்கனவும் பரகாயம் போய் வரும் அப்பண்பும் பரவில் வேறு. எ-து. கண் செவி கெட்டவழி உள்ளதே தோற்ற அத்துடிவின் படர்தற்குப் பாம்பு

தோலுரித்துப் புதிதொருதோல் போர்த்துச் சேறலும், புருடன் நனவுடம்பி னீங்கிக் கனவுடம்பிற் சேறலும், யோகிகள் தம்முடம்பு நீங்கிப் பரகாயத்திற் சென்று மீடலுமாகிய இவ்வுவமைகள் மிக்கு வழங்குதற்கண் இவற்றிற்கு மாறாக—குடாகாய ஆகாயக் கூத்தாட்டு ஆம் என்பது அடாது. எ-து. குடவாகாயங் குடமுடைந்தவழி ஆகாயத்தோடு கூடுமாறு போல்வதோர் கூத்தாட்டாமென்று நீ கூறுதல் பொருந்தாது.—உள்ளம்போம் ஆறு அது. எ-து. சூக்குமவுடம்பு விட்டுப் போமாற்றிற்கே அவ்வுவமையாகலான். எ-று.

எனவே, உடல்விட்டுப் போமாற்றிற்கு இவ்விருவகை யுவமைகளும் ஆகமங்களிற் கூறுதலின், அவை தம்முண் முரணுதவாறு, அரவுதன்றோலுரிவு முதலியன தூலவுடல் விட்டுப் போமாற்றிற்கும், குடாகாயவுவமை சூக்குமவுடம்புவிட்டுப் போமாற்றிற்குமெனக் கோடல் பொருத்தமுடைமையின்; அவ்வேறுபாடுணராது குடாகாயவுவமையுந் தூலவுடம்புவிட்டுப் போமாற்றிற்கே போலுமென மலையற்கவென மேலதனை வலியுறுத்தவாறு காண்க.

மேலைவெண்பாவில் "கண்ட நனவைக் கனவுணர்விற் றான் மறந்து" என்றது அறிவு வேறுபடு முறைமைக்கு எடுத்துக் காட்டியதெனவும், ஈண்டு 'அக்கனவும்' என்றது அதனையே உடல் வேறுபடுமுறைமைக்கு எடுத்துக் காட்டியதெனவுந் தெரிந்து கொள்க.

பரவு முதனிலைத்தொழிற்பெயர். இல்லுருபு தொழினிகழ்ச்சிக்கண் வந்த ஏழாவது.

பரவுதல் எல்லார்க்கும் புலனுமாறு மிக்குநிகழ்தல்.

ஈண்டு உள்ளமென்றது சூக்குமவுடம்பை.

போமாற்றிற்கென்னும் நான்காவது விகாரத்தாற் றொக்கது; "ஐந்தவித்தா னாற்றல்" என்புழிப்போல.

குளவாம்பல் குளாம்பலென மரீஇயினாற்போலக் குடவாகாயங் குடாகாயமென மரீஇயிற்று.

ஆகாயக் கூத்தாட்டென்பது உவமத்தொகை. இதனை உம்மைத்தொகையாகக் கொண்டு குடாகாய வாகாயமுங் கூத்தாட்டும் போலென்றுரைப்பாரு முளர்.

☞ ௨—௯, மூன்றுமதிகரண முடிந்தது.

எங்குமுள னென்றளவை யொன்றன் றிரண்டென்னின்
எங்கு முளனன் றெவற்றெவனும்—அங்கண் [ன்
அவையவ னன்றில்லைப் பொன்னொளிபோ லீசன்
அவையுடமை யாளாநா மங்கு. (௧௦)

இது, கத்தா ஏகாந்தம் அநேகாந்தமின்றி அகண்டபூரணனாய் நிறைந்து நிற்றல் கூறியது.

எங்குமுள னென் றளவை யொன்றன் றிரண்டென்னில். எ-து. கத்தா, அவனவ ளதுவென்னு மவற்றுள் நிற்கின்றா னென்ற பிரமாணத்தாலே ஒருவனல்ல, பலவென்று நீ சொல்வாயாகில்? ஒன்றல்ல வெல்லாம் பலவென்பது தமிழ் நடை.

என்றது, கண்டிக்கப்படா னாதலாலொன்றல்லவென்றதாம்.

எங்கு முளன் எ-து. அவ னெவ்விடத்தும் பூரணமாகி நிறைந்து நிற்பன்.

எவற் றெவனு மன்று. எ-து. யாதொருபொருள் யாதொருபொருள்களிலே கண்டிக்கப்பட்டு நிற்பானல்லன்.

எனவே, அகண்ட பரிபூரணனென்றதாம்.

அங்கண் அவை யவனன்றில்லை. எ-று. அவனவ்வளது வென்றவை யெல்லாஞ் சத்தாவை யொழிந்து இல்லையாம்.

எனவே கத்தா பிரபஞ்சத்தை நீங்கி நில்லானென்பதாயிற்று. அஃதென்போல வென்னில்?

பொன்னொளி போல். எ-து. ஆதித்தனுடைய பிரகாசம்போல.

என்றது ஆதித்தனுடைய பிரகாசம் எங்குந் தானாய் நிற்கச் செயொன்றி னகப்படாமனின்றது போல வென்றதுவாம்.

அவை யுடை மையாளாநாமன் கு. எ-து, சத்தாவும் பிரபஞ்சமு மிப்படியாகில், முன் சொன்ன விந்துநாத வடிவாகிய சதாசிவ முதலியவை யெல்லா மெப்படி யென்னில்? அவை யவனுக் குடைமையா யேவற்றொழிற் செய்யு மவ்விடத்து. எ-று.

இப்பொருள் "சிவஞ்சத்திநாதம் விந்து சதாசிவன்" "சத்தியாய்விந்து சத்தியாய் மனோன்மனிதானுகி" "சத்திதானுதமாதிதானுகும்" "சிவஞ்சத்தி தன்னை யீன்றும்" என்பனவற்றுலறிக. சித்-உ—கு, எ௬-எ௫-எரு-எஎ—௪.

அவ்விடத்தென்றது அந்தந்தத் தொழில்களை யவர்கள் செய்யுமிடத் தென்றதாம்.

எனவே யவையிற்றுக்கு மித்தன்மை மயவென்றதாம்.

சத்தா வோரிடத்து மறைந்து நிற்பானுமல்லன், பலவாகக் கண்டிதப்பட்டு நிற்பானுமல்லன், எங்கு மொழிவற நிறைந்து

நிற்பன், என்னுந்துணிபொருட் பக்கத்தற்கு; அதித்தனைப்போ
லவென்னுஞ் சபக்கங் காட்டியவாறு காண்க.

அவை யுடைமை யாளாநா மங்கு என்பதற்கு அப்படிச் சொ
ல்லப்பட்ட பிரபஞ்ச முடைமையுமா யடிமையுமாய் வருமென்
பாருமுளர். (௪0)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். ஏதுவும் மேற்கோளுந் தம்முள்
அவிநாபாவமாமாறு யாங்ஙனமென்னுங் கடாவை யாசங்கித்
து அதனை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். எங்கும் உளன் என்ற அளவை ஒன்று அன்று. எ
-து. யாங்கணும் 'அவையே தானே' என மேற்கூறிய அளவை
யானே முதல்வன் ஒரு பொருளாதல் கூடாது. எ-று. ஒன்
றுயிற் கங்கைக்கரையினின்ற ஒருவனுடனே காவிரிக்கரையினு
ம் ஒருங்கு நிற்கமாட்டான், அதுபோல ஒருபொருள் ஓரிடத்து
ளதாதலன்றி யாங்கணும் வியாபித்து நிற்கமாட்டாதென்பதா
ம்.—இரண்டு என்னில் எங்கும் உளன் அன்று. எ-று. அற்றே
ல் முதல்வன் இருபொருளாய் நிற்குமெனக் கோடுமெனின் யா
ங்கணும் அவையே தானேயாயுளனாதல் கூடாது. எ-று. த
ன்மாட்டே வேற்றுமையுடையானுக்குப் பிறபொருள்களின் க
ண் வேற்றுமையின்றி வியாபித்து நிற்றல் சாலாதென்பதாம்.
அற்றேல் இவ்விரண்டோடு முரணுதலின் எங்குமுளனல்லனெ
னக் கோடுமெனின்;—எவற்று எவனும் அங்கண் அவை அவன்
அன்று இல்லை. எ-து. எவ்விடங்களினுமுள்ள எத்திறப்பொருளு
மாகிய அவ்விடத்து அவைசொல்லாம் அகரவுயிரின்மேல் அக்
கரங்களில்லையா மாறுபோல அம்முதல்வனை யின்றி யமையா
வாகலான் எங்குமுளனல்லனென்றல் பொருந்தாது. எ-று

ஆகலான் எங்குமுளனல்லனென்றல் பொருந்ாதென்பது குறிப்பெச்சம். அற்றேல் வேறு விடுக்குமாறென்னை யெனின்;— ஈசன் பொன் ஒளிபோல். எ-து. எங்குமுளனாகிய முதல்வன் ஞாயிறும் ஒளியும்போல ஒன்றாதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்த் தாதான்மியத்தாற் சிவமுஞ் சத்தியுமென் றிசைந்து நிற்கும். எ-று. அற்றேல் பசுபாசங்களும் வியாபகமெனக் கோடலின் அவையும் இம்முறைமை பற்றி ஏகாநேக மிரண்டுமின்றி முதல்வன்போலத் தத்தஞ் சத்திகளோடு தாதான்மியமாய் நிற்குமென்பது பெறப்படுதலான் முதல்வனொடு சமமாவான் செல்லுமெனின்;—அவை உடைமை நாம் ஆள் அங்கு. எ-து. அவ்வாறாயினும் முதல்வனது வியாபகத்தை நோக்கி வியாப்பியமாகலின் அப்பாசங்கள் உடைமையாம்; பசுக்களாகிய நாம் அடிமையாவேம், அம்முதல்வன் மாட்டு. எ-று.

அன்றெனப் பாடமோதுவாரு முளர்.

பாசங்கள் உடைமையாமாறும் பசுக்கள் அடிமையாமாறும் 'தாரகமா மத்தன்றுணிற்றல்' எ-ம். 'அதனி லீறலாவொன்று பலவாறே தொழும்பாகும்' எ-ம். மேற்பெறப்பட்டமையின், அவற்றை ஈண்டெடுத்துக் காட்டி ஆசங்கை நீக்கியவாறு.

என்றவென்னும் பெயரெச்சத்து அகரம் விகாரத்தாற் றொக்கது. "புகழ்புரிந்த" என்புழிப்போல. அவையான் என ஆனுருபு விரித்துரைக்க.

ஒன்றன்று உளனன்று என்புழி ஒன்று உளனென்னுந் தருமிவாசகங்கள் ஆகுபெயரால் அத்தருமங்களின்மேனின்றனவாகலான் உளனென்பதும் அஃறிணை யொருமையோடு முடிந்தது.

அன்மை கூடாமைப்பொருட்டு.

எவற்றெவனு மென்பது ஏழாம்வேற்றுமைத் தொகை. அஃ

றிணைக் கண்வரும் எவனென்னும் வினாவினைக் குறிப்புச்சொற் ஈண்டுப் பெயர்த்தன்மைப்பட்டு எவனுமென எஞ்சாப்பொருண்மை யுணர்த்தி நின்றது.

அன்றியென்னும் வினையெச்சம் செய்யுளாகலின் அன்றெனத் திரிந்தது.

இன்மை ஈண்டு அமையாமைப்பொருட்டு.

பொன் ஆகுபெயர்.

ஆம் என்பது உடைமையோ டியையும்.

பொன்னொளிபோ லீசனென்பது தொகை யுவமமாகலிற் பொது வியல்பு விரித்துரைக்கப்பட்டது.

இவ்வதிகரணத்தாற் போந்த தொகைப்பொருள், முதல்வன் வியாபகனாதலின் வியாபகப்பொருட்கு ஒன்றாய் நிற்றல்கூடாது; அது கூடாமைபற்றி இரண்டாய் நிற்பனெனின் வியாபகனாதல் கூடாது; வியாபியல்லனெனின் பசுபாசங்கள் அவனையின்றியமைதல் கூடாது; ஆகலான், முதல்வனொருவனே ஞாயிறுமொளியும்போலச் சிவமுஞ்சத்தியுமெனத் தாதான்மியத்தால் இருதிறப்பட்டுச் சருவவியாபியாய்ப் பொதுமையினிற்பனெனச் சமவேதமாய் நிற்குமாறு தெளிவிக்குமுகத்தானே தாதான்மியசத்தி யுண்மைக்குப் பிரமாணங் கூறியவாறுமென் றுணர்க. அஃதாமாறு,—தன்னை விளக்குவதூஉம், விடயங்களை விளக்குவதூஉம், தானேயாகிய ஞாயிறொன்றுதானே விடயங்களை விளக்குழிக் கதிரோனெனவுந் தன்னைவிளக்குழிக் கதிரோனெனவுந் தாதான்மியத்தால் இருதிறப்பட்டியைந்து நிற்றல்போல, புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரையாய்த் தன்னியல்பினிற்பதூஉம், புறப்பொருளை நோக்கிநின்றுணர்த்துவதூஉ

னாகிய இருதன்மையையுடைய பேரறிவாய சைதந்நியமொன்றே அங்ஙனம் புறப்பொருளை நோக்கி நிற்குநிலையிற் சத்தியெனவும், புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரையாய் நிற்குநிலையிற் சிவமெனவும், தாதான்மியத்தால் இருதிறப்பட்டடைந்து நிற்குமெனவுணர்க.

இனித் தீயின்சத்தியொன்றுதானே சுடுதல் அடுதல் முதலிய தொழில் வேறுபாட்டால் சுடுஞ்சத்தி அடுஞ்சத்தி யென்றற்றொடக்கத்துப் பலவேறுவகைப்படுமாறுபோல, சிவசத்தியொன்றே காரியவேறுபாட்டால் பரை ஆதி இச்சை ஞானம் கிரியை யென்று ஐவகைச்சத்திகளாயும்; முறையே ஐந்தும் நான்கும் எட்டும் பதின்மூன்றும் எட்டுமாகிய கூறுபாடுடைய ஈசானிமுதலிய ஐவகைச்சத்திகளாயும், ஆரணி செனனி முதலிய மூவகைச் சத்திகளாயும், நிவிர்த்தி பிரதிட்டை முதலிய ஐவகைச் சத்திகளாயும், வாமை சேட்டைமுதலிய அட்டசத்திகளாயும், பரவாகீசுவரி அபரவாகீசுவரி மனோன்மனி மகேசை உமை திரு வாணியென எழுவகைச் சிவபேதங்கட்கும் முறையே எழுவகைச்சத்திகளாயும், அத்தியான்மிகமெனப்படும் உன்மனை சமனை முதலிய கலைகளாயும், இன்னும் பலவேறுவகைப் பட்டு நிற்கும். அவ்வச்சத்திகளோடு புணர்ந்த சிவமும் அவ்வாறே பலவகைப்பெயர் பெற்று நிற்கும். அவ்வச்சத்திகட்கு இடமாய விந்துவும் அங்ஙனம் பலவேறுவகையான் விருத்திப்பட்டு அப்பெயர்பெறும். இவற்றினியல்பெல்லாம் ஆகமங்களுட்காண்க.

☞ உ—கூ, நான்காமதிகரண முடிந்தது.

☞ இரண்டாஞ்சூத்திர முடிந்தது.

௩—சூத்திரம்.

உளதில தென்றலி னெனதுட லென்றலி
னைம்புல னொடுக்க மறிதலிற் கண்படில்
உண்டி வினையின்மையி னுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தநுவி னுளான்மா.

இச்சூத்திர மென்னுதலிற்றோவெனின், ஆன்மரூபகம் சாதிக்கின்றது.

இ-ள். மாயா வியந்திர தநு வினு ளான்மா வுளது. எ-து.	மாயை முதலிய தத்துவங்களாலே யியந்திரிக்கப்பட்ட வுடம்பிலே ஆன்மா வுண்டு. அஃதெத்தா லென்னில்?
இல தென்ற லி னுளதுஎ-து.	இல்லை யென்று சொல்லுகையால் உளது.

இல்லை யென்கையா லுள்ளதாமென்ப தெங்ஙனே யென்னில்? இல்லை யென்று சொல்லப்பட்ட தொன்றுண்டே, அது தான் ஆன்மாவென்றதாம்.

எனதுட லென்றலி னுளது. எ-து.	என்னுடைய வுடம்பென்று சொல்லுகையா லுண்டு.

அஃதெங்ஙனே யென்னில்? என்னுடைய பொருளென்றவை யெல்லாம் வேறொன்றற்போல வென்றதாம்.

ஐம்புல னறிதலி னுளது. எ-து.	சத்தமுதலாகிய வைம்புலன்களையு மறிதலா லுளது.

ஒடுக்க மறித சாக்கிரமுதலாகிய வவத்தைகளிலே யொ
கி னுளது. எ டுங்கு முறைமை யறிதலா லுண்டு.
– து.

கண்படி லு துயிலுமிடத் தூணு முற்சாகமு மில்லை
ண்டி விணையின் யாதலா லுண்டு.
மையி னுளது.
எ – து.

உணர்த்த வு அறிவிக்க வறிகையா லுண்டு.
ணர்தலி னுளது.
எ – து.

உளதென்பதனை யெவ்விடத்துங் கூட்டுக.

"புனைவுறுசெய்யுட் பொருளையொருவழி வினைநின்றுவிள க்கினது விளக்கெனப் படுமே-முதலிடைகடையென மூவகை யான"—என்பதனால் இதனு ளான்மா வுண்டென்னும் பக்கத் துக்கு, சபக்கமுங் காட்டியவாறு காண்க. இவை மேல்வரு ம் வெண்பாக்களில் விரித்துக் கூறுமாறு காண்க.

சிவஞானமுனிவர் உரை.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. இலதென்றன்முதலி யஅறுவகையேதுக்களானும் மாயாவியந்திரதநுவென்னும் பெய ரண்டயாற்பெறப்படும் குறிப்பேதுவானும் இவற்றின்வேறாய் இ வ்வுடம்பினுள் உயிரெனப்படுவதொன்றுண்டு. எ-று.

இது பூட்டுவிற்பொருள்கோள்.

உளதென்றது சாதியொருமை. அறிதலினென்றது ஐம்புல னொடுஞ் சென்றியையும்.

தநுவினுளான்மாவுளதென்றேனும், காணப்பட்ட உடம்பாற் காணப்படாத உயிருக்குண்மை கூறவேண்டுதலின், இவ்வுடம்பு சூனியமுதலியவற்றின் வேறாய் ஆன்மாவையுடைத்தென உடம்பின்மேல் வைத்தோதுதல் ஆசிரியர்கருத்து. அற்றாகலினன்றே பதியுண்மை உலகின்மேல் வைத்தோதியதூஉமென்பது.

இனி, "இலதென்றலின்" எ-ரு. பிரமாணம்.

அன்றன் றெனநின் றனைத்தும்விட் டஞ்செழுத்தாய்
நின்றொன் றுளதுவே நீயனைத்தும் - நின்றின்று
தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை
தற்பரமு மல்லை தனி. (க)

இது, பதி பசு பாசமாகிய முதல் மூன்று மில்லை, உடம்பே யறியுமென்றவனைப் பற்றி அந்த மூன்று முதலு முண்டென்றும், உடம்பறியாது அந்த உடம்புக்கு வேறாகிய வான்மா வறியுமென்பதுவும், கூறுகின்றது.

இ-ள். அஞ்செழுத்தாய் நின்று. எ-து. *ல - வ - ர - ய - அ - என்னு மஞ்செழுத்தையு முடைய பூதங்களுடனே கூடி யது வது வென்னும்படி நின்று.

*உண்மைவிளக்கம் ௫—செ.

அனைத்து மன்றன்றென விட்டு நின்றொன்றுளதுவே நீ. எ-து. அப்படி நின்றவை யெல்லாத்தையு மிது வல்ல விதுவல்லவென்று நீங்கி நின்றதொன்றுண்டே அதுதான்கா ணான்மா.

அனைத்தும் நின் றின்று தர்ப். இந்திரியங்களெல்லாவற்றினு மிப்பொழுது கூடிநின்று கண்ணாடி யடுத்ததொன்றை

டணம்போற் காட்டலாற் சார் மாயை நீயல்லை. எ-து. க்காட்டி நிற்கச்சே யந்தக்கண்ணாடி யடுத்த தாகாத தன்மைபோலத் தேகாதி யவயவங் களைப் பொருந்தி உன்னைக் காட்டுதலாலே உன்னைப் பொருந்தி வருகிற மாயையின் காரியமாயுள்ளவை நீயல்லை.

தற்பரமு மல்லை தனி. எ-து. ஆறு லைம்புலன்க ளிடமாகநின் றெல்லாத்தையு மறிவேன் யானாகில் யானேகத்தா வென்பையாகில், யாதொன்றுக்கு மேலாயுள்ள தியாதொன்று அதற்கு மேலாயுள்ள தந்தட்பரம். அதுவுமல்லை நீ தனி யொருமுதல்காண். எ-று.

கண்ணாடி யடுத்ததனைக் காட்டி நின்றாற்போல வென்றுமாம். அஃதாவது, சடமாயுள்ள வவயவங்க ளான்மாவுக் குண்டாகிய விகாரங்களாலே பொருந்திய வின்ப துன்பங்களைக் காட்டி நிற்குமென்றதாம். இனி, கண்ணாடியைக் காண்பானொருவனுக்கு ஆதித்தப் பிரகாசமின்றிக் காண வொண்ணாதாற்போல, ஆன்மா விந்திரியங்க ளிடமாகநின்று சீவிக்கு மிடத்துக் கத்தாவா லொழிந்து சீவியாதென்பதுவுங் கூறினாராயிற்று. எனவே மூன்றுமுதலுந் தரிசிப்பித்தவாறு காண்க. கண்ணாடியை யொருவனெடுத்து நடத்தினாற்போலத் தேகத்தையு மொருவனெடுத்து நடத்துவனென்பதாம். எனவே ஆதித்தனில்லையாகிற் கண்ணாடியாலுஞ் சேட்டை யில்லையென்றதாயிற்று. "உடலின்வேறுயிரோனிந்த வுடலன் றேவுணர்வதென்னில்" —"தோற்பாவைக் கூத்துந்தொல்லைமரப்பாவையியக்க" என்றார்வழிநூலார். சித் - ௩—கூ, உ. ௯ —கூ, உ௯—செ.

பூதங்களிடமாகநின் றான்மா சீவிக்குமிடத்துக் கத்தாவின்றிச் சீவியாதென்றுங் கூறிய பக்கத்துக்கு, கண்ணாடியும் அதிற் றபொருளும் ஆதித்தனும் போலவென்னும் சபக்கமுள், அதித்த

பொருளுமாதித்தனு மில்லாதபொழுது கண்ணாடிக்குச் சேட்டை யில்லையென்னும் விபக்கமுங் காட்டியவாறு காண்க. (௧)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அவ்வறிவை உடல் பொறி விடய முதலியவற்றின் வேறாகப்பிரித்துக் காணுமாறும், அதுவே உயிராமாறுந் தெரித்துணர்த்தி, அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். அனைத்தும் நின்று. எ-து. உடல் பொறி விடயமுதலிய அனைத்தினும் அதுவது தானாகநின்று—அன்று அன்று என விட்டு. எ-து. முறையானே இது நானன்று இது நானன்றென வோரோவொன்றாகக் கண்டு நீக்கியவழி—அஞ்செழுத்தாய் ஒன்று நின்றுளது. எ-து. அவ்விடத்து அகரமுதலிய சூக்குமபஞ்சாக்கர ரூபமாயறிந்து வந்ததோரறிவு நிலைபெற்றுளதன்றே—அதுவே நீ. எ-து. அதுவுநானன்றெனக் கழிப்பின் அங்ஙனங் கழித்த உணர்வு வேறுண்டெனப்பட்டு மேலும் வரம்பின்றிப்போமாகலிற் சூக்குமபஞ்சாக்கரரூபமாய் நின்றறிந்து வந்த அவ்வறிவுதானே நீயென்பதறிவாயாக. அற்றேல் மாயையுஞ் சிவமுமுளவென்பது மேலைச்சூத்திரங்களாற் சாதிக்கப்பட்டமையின் அவையே அவ்வறிவினையு மறிந்து நீக்குமென வமையுமாகலான் வரம்பின்றியோடுமா றில்லையாலெனின்;—சார்மாயை. எ-து. நின்னாற் சாரப்பட்ட மாயை—அனைத்தும் நின்று இன்று தர்ப்பணம்போற் காட்டலான் நீ அல்லை. எ-து. நிலமுதலிய காரியமனைத்துமாய் நின்றொடுவிரவி நின்று இப்பெத்தகாலத்துக் கண்ணுக்குக் கண்ணாடிபோல் உனக்கறிவை விளக்கி நிற்றன் மாத்திரையே யன்றி அறிவதன்றாகலான் நீ அம்மாயையல்லை.—தற்பரமும் அல்லை. எ-து. மாயையான் விளங்கி யறியும் நீ அதற்கு அதீதமாகிய சிவமுமல்லை:—தனி. எ-து. அவற்றின்வேறு. எ-று.

விட்டவழியென்பது விட்டெனத் திரிந்துநின்றது.

அவ்வறிவாவது இதுவென்றுணர்த்துவார் அன்றன்றென நின்றனைத்தும் விட்டவழியென ஏதுப்பொருளை அநுவதித்து அஞ்செழுத்தாயொன்று நின்றுளதென அடையாளங் கூறினார். அஞ்செழுத்தாய் நின்றறியுமாறு வருகின்ற சூத்திரத்துட் பெறப்படும். இதற்குப் பிறவெல்லாங் கூறியது கூறலென்னும் வழுப்பட மேலுமோரியை பின்றி யுரைத்தார்.

அனைத்துநின் றென்புழி முன்னர்க்கண்ணுருபும் பின்னர் ஆக்கச்சொல்லுந் தந்துரைக்க. ஏகாரந் தேற்றம். தற்பரமென்றது குறிப்பேதுவாய் நின்றபெயர்.

அனைத்து நின்றின்று தர்ப்பணம்போற் காட்டலால் சார்மாயை நீயல்லை தற்பரமுமல்லை தனியென்றதனானே வருகின்ற அதிகரணங்களுக் கெல்லாந் தோற்றுவாய் செய்தவாறு மாயிற்று.

☞ ௩—கு, முதலதிகரண முடிந்தது.

'எனதுடலென்றலின். ௭-கு. பிரமாணம்.'

எனதென்ற மாட்டி னெனதலா தென்ன
துனதலா வுன்கைகா லாக்கை - எனதென்றும்
என்னறிவ தென்று முரைத்துநீ நிற்றிகா
ணுன்னிலவை வேறா முணர். (உ)

இது, உடம்பறியாதாகி லுணர்வறியாதோ வென்போருக்கு உடம்பு முயிரு மறியாதென்கின்றது.

(இ-ள்.) என ஒருவன் றன்னுடைய பதார்த்தத்தை எதென்ற ன்னுடையதென்று சொன்னபடியாலே.
மாட்டி

ல். ௭-று.

எனதலா தெ — தன்னுடைய பதார்த்தமல்லா தொழிந்(/)
ன்றுது. எ-து. தென்னுடைய பதார்த்த மல்லவென்று
சொல்லாது.

எனவே தன்னுடைய பதார்த்தத்தைத் தன்னுடையதென்று
ம், தன்னுடையதல்லா ததனைத் தன்னுடைய தல்லவென்றும்,
சொல்வ துலகவழக்கம் என்றதாம். ஆதலால்,

உனதலா வுன்னை காலாக்கை யென தென்று மென்னறிவ தென்று முரைத்து நீ நிற்றியால் உன்னி லவை வேறு முணர். எ-து. — உன்னுடைய தல்லாதகையுங் காலையு முடம்பையும் என்னுடைய தென்றும், உன்னுடையதல்லாத வறிவை என்னுடைய வறிவென்றும், நீசொல்லி நிற்கின்றாய். யாதொருபொருளை என்னுடையதென்றது அது தனக்குவேறுமாதலால் உனக்கு மவை வேறாயிருக்கும்; விசாரித்துப் பார். எ-று.

"எனதென்ற மாட்டி லெனதலா தென்னாது"—என்றதற்கு என்னுடைய தல்லவென்று சொல்லாதே என்னுடைய தென்று சொன்னபடியாலே யென்றுமாம்.

அறியப்படுவன யாவையும் அறிந்து யானிணைந்தேன், யான் செய்தேன், யான்சொன்னேன், என்று வருகையால்; அறிவையுடையது வேறென்றதாம். "என்னுடல் பொறிபிராணன்"—"பொன்னணி யாடைமாலை" "உடலியானல்லேனிந்த வுணர்வியானல்லவான கடனியாதென்னி" "புந்தியை மனமதென்று மனமது புந்தியென்றும்" என்றார் வழிநூலார். சித்-ச—கூ, உ௫-உ௬-உஎ-உஅ—செ.

எனவே ஆன்மா தேகாதியுடனே கூடி மனோ வாக்காலே ய

றிந்துரைத்துச்செய் தறிவினுக்கும் ஆதாரமாய் நிற்குமெனவ றிக.

இது, "எனதுடலென்றலி" னென்றதற்கு சாதநசாத் தியப்பொருட்டாகச் சம்பிரதாய திட்டியாக உடம்புக்கு ஆன்மா வேறென்னும் பக்கத்துக்கு, உலகவழக்கம் சபக்கமாயினவாறு காண்க. (உ)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். பதி மனை முதலியபொருள்கள் தம்மின் வேறுதல் கண்டு பிறிதின் கிழமைப்பொருள்பட எனதென்றாற் போலன்றிக் கை கால் முதலியவற்றைத் தற்கிழமைப் பொருள்பட எனதென்று கூறிநிற்றலின், அவ்விரு வேறுமொழியுந் தம்முளொக்குமா றென்னையென்னுஞ் சடாவை யாசங்கித்து அதனைவலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். எனது அலாது என்றது எனது என்றமாட்டின். எ-து. நீ உலோகாயதநூல் கேட்குமுன்னெல்லாம் பதி மனைவிமுதலிய புறப்பொருளையே உயிரெனக்கொண்டு மயங்கி நின்றுயன்றே, அக்காலத்து அவற்றை எனதன்றென வேறுகாணுது தனித்தனி எனதென்றே தற்கிழமைப்பொருளாகக் கூறிக் கொண்டு நின்றாற்போல,—உனது அலாது உன் கை கால் யாக்கை எனது என்றும் என் அறிவது என்றும் உரைத்து நீ நிற்றிகாண். எ-து. உனதன்றாகிய உன் கைகால் யாக்கைகளைத் தனித்தனி எனதென்றும் அங்ஙனமறிந்த பாசவறிவை என்னறிவதென்றுந் தற்கிழமைப்பொருளாகக் கூறிக்கொண்டு நீயொருபொருள் வேறு நிற்கின்றாய் காண்:—உன்னில். எ-து. உலோகாயதநூல் ஆராய்ந்த பின்னர்ப் பதி மனைவி முதலிய பொருள்கள் உனக்கு வேறுதல் கண்டாற்போலக் கை கால் முத

வியவற்றி னியல்புகளையும் ஏதுக்கண் முதலியவற்றான் ஆராய்ந்து பார்த்தியாயின்,—அவை வேறும் உணர். எ-து. அக்கை கான் முதலியன உனக்கு அந்நியமாம் அதனை யறிவாயாக. எ-று.

இன் உவமவுருபு.

உனதலா தென்பதனைக் கை கால் யாக்கைகளோடு தனித்தனி கூட்டுக.

☞ ௩—சூ, இரண்டாமதிகரண முடிந்தது.

"ஐம்புலனறிதலின்" என்றதற்குப் பிரமாணம்.

ஒன்றறிந்த தொன்றறியா தாகி யுடன்மன்னி
யன்றும் புலனைய வஞ்செழுத்தை - ஒன்றறித
லுள்ளதே யாகி யதுநீ தனித்தனிகண்
டுள்ளலவை யொன்றல்லை யோர். (௩)

இது, ஐம்பொறி யொழிய வான்மா வில்லையென்போர்க் குண்டென்கின்றது.

இ-ள். ஒன்றறிந்த தொன்றறியா தாகி யுடன் மன்னி யன்றும் புலன். எ-து. செவி மெய் வாய் கண் மூக்காகிய பொறிக ளுடலிலே யோரிந்திரிய மறிந்ததனை யோரிந்திரிய மறியாதாகி மாறுபடும்.

ஆய வஞ்செழுத்தை யொன்றறித லுள்ளதேயாகியது நீ. எ-து. ஐந்து பொறிகளுக்கும் விடயமாகிய சத்த பரிச ரூப ரச கந்தங்களெல்லாவற்றையும் அறிந்ததொன்றுண்டே அப்படியுண்டாகியது தான்காண் நீ.

நீ யென்றது ஆன்மா. அப்பொழுதும் பொறிகளன்றோ அறிந்த தென்கின்றாயாகில்?

தனித்தனி க ண் டுள்ளவை யொன்றல்ல யோர். எ - து.	பொறிகளோந்தமக்கு இடமான வைந்தையுந் தனியே தனியே கண்டித்து, செவிக்கு விடயமிது, கண்ணுக்கு விடயமிது, மெய்க்கு விடயமிது, வாக்குக்கு விடயமிது, மூக்குக்கு விடயமிது என்று நினைத்தலால்; அ

வையிற்றி லொன்றல்லை, நீ விசாரித்துப்பார். எ-று.

என்றது, அந்தந்த விடயங்களிலே போயவிடத் தழுந்தி சூட்சித்தறிந்து பின்பு நீங்கினவிடத் தவையிற்றைக் கருதி நிற்றலாலே, நிச்சயகத்தா வேறொருவன் வேறேயுண் டதனை யுனக்கேற்க விசாரித்துப் பாரென்றதாம். "அறிவதைம்பொறியே யென்னில்" என்றார் வழிநூலார். சித்-௩—௬, ௩—௪.

இது சாதக சாத்தியப்பொருட்டாகச் சம்பிரதாய திட்டியால் அறிவித்தது. (௩)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியா தென்றதொக்கும், ஐந்துமைந்துயிரெனக் கோடலின் அதனானெமக்காவ தோரிழுக்கில்லை; இனி இவ்வைந்தையுங் கொண்டு ஐம்புலனையும் ஒருபொருளே யறியுமெனின்? அதற்குப் பிரமாணங் கண்டிலம்: குடத்தைக் கண்ட யானே அதனைத் தீண்டினேனென மறித்துணர்வு நிகழ்தல் ஐந்துமோருடம்பின் கண்ணே நிலைபெறு மொற்றுமைபற்றியமையுமெனக் கோடுமென்னுங்கடாவையாசங்கித்து அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். உடல் மன்னி ஒன்று அறிந்தது ஒன்று அறியாதாகி

ள-து. உடம்பின்கண்ணே நிலைபெற்று ஒருவிடயத்தை யறிந்த இந்திரியம் மற்றொருவிடயத்தை அறியாதாய்—அன்றும் புலன் ஆய் அவ்வஞ்செழுத்தை. எ-து. அங்ஙனந் தம்முண் மாறுபடுஞ் சத்தமுதலிய புலன்களைச் சூக்குமபஞ்சாக்கரத்தாற் செலுத்தப்பட்டாராய்ந் தறிகின்ற அவ்வைம்பொறிகளின் றொழிற்பாட்டை—அறிதல் ஒன்று உள்ளதேயாகில். எ-து. கண் உருவத்தையறிவது செவி ஓசையையறிவதென்று இவ்வாறுணர்தலையுடையதோர் பொருள் இல்லதோ உள்ளதோவென வினாயினார்க்கு இல்லதெனின் இவ்வறிவு நிகழாதாதல் வேண்டுமாகலான் உள்ளதேயாமெனின்—அது நீ. எ-து. அவ்வாறுணர்வதியாது அதுவே நீயாகியவான்மா. அவ்வாறுணர்வனவும் அவ்விந்திரியங்களேயென்றுற் படுமிழுக்கென்னையெனின்—அவை தனித்தனி கண்டு உள்ளல். எ-து. அவ்விந்திரியங்கள் தத்தம்விடயங்களை வேறு வேறு கண்டறிதன்மாத்திரையேயன்றி இத்தொழிற்பாட்டையுடையேம் யாமெனவும் அறியமாட்டாவாகலான்—ஒன்று அல்லை ஓர். எ-து. அவ்வைந்தின் றொழிற்பாட்டையுமறிந்து அவற்றின வரும் பயனைகொள்வதாய நீ யவற்றின் வேறுவை அதனையாராய்ந்தறிவாயாக. எ-று.

ஆகியென்னுஞ் சிறப்புவினை ஆயென்னும் பொதுவினையோடு முடிந்தது; இவனுமிவளுஞ் சிற்றிலிழைத்துஞ் சிறுபறையறைந்தும் விளையாடுப என்றாற்போல. ஆயென்பது வினைத்தொகை. அவ்வஞ்செழுத்தென்க. அஞ்செழுத்தாற் செலுத்தப்பட்ட பொறியை ஆகுபெயரான் அஞ்செழுத்தென்றார் அஃதிருமடியாகுபெயராய் ஐம்பொறியின் றொழிற்பாட்டை யுணர்த்தி நின்றது.

உள்ளல் உள்ளலானென்க.

இம்மூன்றதிகரணங்களானுஞ் சாக்கிரத்திலிகழுமியல்புபற்றி ஆன்மாவினுண்மை சாதிக்கப்பட்டது.

☞ ௩—சூ, மூன்றுமதிகரண முடிந்தது.

"ஒடுக்க மறிதலின் என்றதற்குப் பிரமாணம்."

அவ்வுடலி னின்றுயிர்ப்ப வைம்பொறிக டாங்கிடப்பச்
செவ்வி தி னவ்வுடலிற் சென்றொடுங்கி - அவ்வுடலின்
வேறொன்று கொண்டு விளையாடி மீண்டதனை
மாறலுட னீயல்லை மற்று. (ச)

இது, பிராணவாயு வறியுமென்போர்க்கு அது அறியாதென்கின்றது.

(இ-ள்.) அந்தக் கரணங்களைக் கருவியர்கக்கொண்டு பிராணவாயு வறியுமென்கின்றாயாகில்?

அவ்வுடலில். எ-து. முன்ன ரல்லவென்று சொன்ன உடம்பிலே.

ஐம்பொறிக டாங்கிடப்ப. எ-து, செவி முதலாகிய பொறிக ளைந்துஞ் சேட்டையின்றிக் கிடப்ப.

நின்றுயிர்ப்ப. எ - து, பிராணவாயு நின்று உச்சுவாச நிச்சுவாசஞ்செய்ய.

செவ்விதி ன வ்வுடலிற் சென்றொடுங்கி. எ - து. முறைமையாக அந்தந்த வுடம்பிலே சென்றொடுங்கி,

அவ்வுடலி னென்றது உணர்த்து முறைமையின்றி ஆன்மா சாக்கிரமுதலாகிய அவத்தைகளிலே யொடுங்குமிடத்து அந்த ந்த வவத்தைகளுக் குண்டாகிய கருவிக ளாந்தந்தவிடத்துக் கு டம்பா மாதலாலென் வறிக.

அவ்வுடலின் வேறொன்றுகொண்டு விளையாடி மீண்டதனை மாறலுடன். எ-து.	அப்படி அவத்தைப்பட்ட அவ்வுடம்பிலே வேறோருடம்பையெடுத்துக்கொண்டு நின்று கனவிலேவியாபித்து மீண்டும் அதனையுடனேமாறுகையால்.
நீயல்லை. எ-து.	நீ யந்தப்பிராணவாயு வல்லை.
மற்று. எ-து.	கருவியென்ற அந்தக் கரணங்களும், அதற்கு.

"மற்றென்கிளவி வினைமாற் றசைநிலை"—இது வினைமாற்று. தொல்காப்பியம் சொல்லதிகாரம் இடையியல் - கசு—சூ.

உடனீயல்லை யென்றது உடம்பு நீயல்லை யென்பாரு முளர். அன்றியும், உடம்பும் நீயல்லை, பொறிகளும் நீயல்லை, பிராணவாயும் நீயல்லை, என உடனேறுவாரு முளர். அது புனருத்தியாம் "அறிந்திடும் பிராணவாயு" என்றார் வழிநூலார். சித்-ரு—சூ, ச—செ.

இதுவும், சாதந சாத்தியப்பொருட்டாகச் சம்பிரதாய திட்டயாலறிவித்தது. (ச)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். கனவின்கட் செல்லுமாறும், ஆண்டு நிகழுமாறும், மீள்வருமாறுமுணர்த்தி; அதனை வலியுறுத்துத லுகலிற்று.

இ-ள். அவ்வுடலின் நின்று உயிர்ப்ப ஐம்பொறிகள் தாம் கிடப்ப. எ-து. மேல் உயிரன்றெனக் கூறிப்போந்த தூலவுடம்பினின்று உயிர்ப்பனவாய ஐம்பொறிகள் ஆண்டே உயிர்ப்பொழிந்து கிடப்ப—அடங்கிச் செவ்விதின் அவ்வுடலில் சென்று. எ-து. அவை யங்ஙனங்கிடந்தவழிப்புறத்து நிகழுந் தொழிற்பாடெல்லாமடங்கி அவ்வுடம்பினுள்ளால் வருத்தமின்றிச் சென்று—அவ்வுடலின் வேறு ஒன்று கொண்டு விளையாடி. எ-து. அத்தூலவுடம்புபோல அதனின் வேறாயதோருடம்பைபெடுத்துக்கொண்டு வேறோராற்றாற்கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று விளையாடி—மீண்டு அதனை மாறல். எ-து. மீளவதனை மாறி மேற்சேறலான்—நீ உடல் அல்லை மற்று. எ-து. நீ அச்சூக்குமதேகமல்லை அதனின் வேறாவை. எ-று.

உயிர்ப்பவென்றது அன்பெறாத அகரவீற்றுப் பலவறிசொல். உயிர்த்தல் தொழிற்படுதல்.

தாமும் மற்றும் அசை.

மீண்டு மீள.

மாறல் மாறலானென்க.

இவ்வதிகரணத்தாற் சொப்பனத்தினிகழு மியல்புபற்றி உயிருண்மை சாதிக்கப்பட்டது.

௪—சூ, நான்காமதிகரண முடிந்தது.

“கண்படி லுண்டி வினையின்மையின்” என்றதற்குப் பிரமாணம்.

கண்டறியு மிவ்வுடலே காட்டொடுங்கக் காணாதே
யுண்டி வினையின்றி யுயிர்த்தலாற் - கண்டறியு

ருள்ளம்வே றுண்டா யொடுங்கா துடனண்ணி
லுள்ளதா முண்டிவினை யூண். (ரு)

இது, அவயவம் பொருளென்போர்க்கும், அரிசனமும் நீறுங் கூடினவிடத்தே யொரு சிவப்பெழுந்தாற்போலப் பூதக்கூட்டத்தேயோரறிவு தோன்று மென்போர்க்கும், அவையல்ல வென்கின்றது.

இ-ள். கண்ட எல்லாப்பொருளையுங்கண்டறியு மென்றறியு மிவ் விந்த வுடம்பு காட்டுகின்றவ னொடுங்கின வுட்லே பொழுது காண்பதில்லை.
காட் டொடுங்க
க்காணுதே எ-து.

இது அவயவம் பொருளென்போரை மறுத்தது. அஃதெப்படியென்னில்? கண்ணாகிய கருவியுங் காட்டுகின்ற வொளியு முண்டாயிருக்கக் கருத்து வேறாய் நின்றவிடத்துக் கண்ணொருபொருளையுங் காணுதபடியாலே அறிவுவந்து கூடிற்றில்லையாம். பின்பு கண் யாதொரு பொருளையுங் கண்டறிகையில் அறிவுவந்து பொருந்தியதாம். கையாற் கண்டறிகின்ற கண்ணுக்குக் கருதி அறிகின்ற வறிவு வேறே யுண்டென்றதாம்.

உண்டி வினையி உறக்கத்தி லூணு முற்சாகமுமின்றிக் கின்றி யுயிர்த்த டங் துயிர்க்கையினுலே யிந்த வுடம்பிலே லாற் கண்டறியு நின்று கண்டறிவது ஆன்மா.
முள்ளம் எ-து.

என்றது அவத்தைப்பட்டவிடத்துச் சுத்ததத்துவங்களையநுபவிக்கை யுடம்புக்கில்லை யாதலானும், விழித்தவிடத் தவற்றைஅநுபவிக்கை யுண்டாகையானும், அப்படியொருகாலத்தே அநுபவித்து மொருகாலத்தே யநுபவியாதிருந்தவும் ஆன்மா வென்றதாம்.

இதனையொருபஜமாக்கி நீகண்டறியுமென்ற விந்தவுடம்பு காட்டுகின்றவான்மா அவத்தைகளிலே யொடுங்கினபொழு தொருபொருளையுங்காணமல் ஊணுமுற்சாகமுமின்றிக்கிடந்து உச்சுவாசம் நிச்சுவாசஞ்செய்கையாலே கண்டறிவதுஆன்மா வென்று கூறுவாருமுளர்.

வேறுண்டா பூதக்கூட்டத்தே யறிவுண்டாமாகில் அயொடுங்கா துட ந்தவறி வொரு காலத்து மொடுங்காமலொ னண்ணி லுள்ள ன்றுபட்டுப் பொருந்தி யவத்தைகளிலு மூதா முண்டிவினை ணு முற்சாகமுமுண்டாம் எ-று. பூண் எ-து.

எனவே, உறக்கத்தில் ஊணு முற்சாகமுமின்றி விழித்தபொழு துண்டாய்வருதலால், நீசொல்லுகின்ற தல்லவென்பதாயிற்று.

இதுவுங் காரியங்கொண்டு காரணமறிதலாற் சாதநசாத்தியப்பொருளானவாறறிக. "கண்டுணர்புருடன்வேறு கனவுகண்டொடுங்கி" என்றார்வழிநூலார். சித்-ச—சூ, நூ—செ. (ரு)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். துயிலிடத்துக் கருவிகளெல்லாமொடுங்குதலின் இன்பதுன்ப நுகர்ச்சியுஞ் சேட்டையும் பிரகிருதிக்கில்லையாயினவாகலான் அதுபற்றிப் பிராணவாயுவையான்மாவென்றற் கிழுக்கென்னையென்னுங் கடாவை யாசங்கித்து அதனைவலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். கண்டு அறியும் இவ்வுடலே. எ-து. கண்டறிதற்கு நிலைக்களமான இவ்வுடம்பின்கண்ணே—காட்டுக் காணுதே ஒடுங்க. எ-து. காட்டாய கருவிகள் தொழிற்படாதே யொ

நிங்கவும்—உண்டிவினை இன்றி. எ-து. அவையொடுங்கியவழி உண்டியும் வினையும் பிரகிருதிக்கில்லையாகவும்—உயிர்த்தலான். எ-து. பிராணவாயு நிலைபெற்று இயங்குதலான்,—கண்டு அறியும் உள்ளம்வேறு உண்டு. எ-து. கண்டறியு முரிமையையுடைய உயிர் பிராணவாயுவின் வேருயுண்டு—ஒடுங்காது உடல் நண்ணில் ஊன் உண்டி வினை உள்ளதாம். எ-து. அவ்வுயிரொடுங்காது அவ்வுடலின்கண்ணெய்திற்றாயின் அவ்வுடம்பு கருவிகளின் ருெழிற்பாட்டானாய உண்டியும் வினையுமுடைத்தாம்:—ஆய். எ-ற. அதனையாராய்ந்தறிவாயாக. எ-று.

இது அருத்தாபத்தியளவை.

கண்டறிதல் ஒருபொருட்பன்மொழி.

இன்றியென்னும் வினைக்குறிப்புச் செயவெனச்சத்திரிபு. சிறப்பும்மைகள் தொக்கன- அவை "அறிந்திடா துடலுறக்கத் தரிவின்மை கரண மின்மை—யறிந்திடு முதலியாகி னதுநிற்கக் கரணம் போகா" என்னும் பொருள் விளைத்து நின்றன.

சித் - ந - சூ; ௬—செ. "அறிந்திடும்"

ஊன் ஆகுபெயர்.

உயிர் வேறுண்டென்றதனை வலியுறுத்துவார் உடம்பாட்டு முகத்தானு மோதினர்.

இவ்வதிகரணத்தானே சுழுத்தி துரியங்களி னிகழுமியல்புபற்றி உயிருண்மை சாதிக்கப்பட்டது. இதுகாறுஞ் சார்மாயை நீயல்லையென்றதனை வலியுறுத்தியவாறு.

ந—சூ, ஐந்தாமதிகரண முடிந்தது.

"உணர்த்தவுணர்தலின்" என்றதற்குப்பிரமாணம்.

அறிந்து மறிவதே யாயு மறியா
தறிந்ததையும் விட்டங் கடங்கி - யறிந்த

ஏதுவறிவு மன்றாகு மெய்கண்டா னொன்றி
னதுவதுதா னென்னு மகம். (சு)

இது, ஒருவனே சீவான்மாவுமாய் நிற்கையிற் கட்பேதமொழிந்து சர்வபேதமில்லையென்போற் குண்டென்கின்றது.

இ-ள். அறிந்தும். எ-து.	ஒருவன் சில பொருள்களை யறிந்தும்.
அறிவதே யாயும். எ-து.	மேலு மறியத்தக்க பொருளை யறிய வறிவிக்கத் தக்காரைத் தேடியும்.
அறியாது. எ-து.	சில பொருள்களை யறியாமலிருந்தும்.
அறிந்ததையும் விட்டடங்கி யறிந்தது. எ-து.	முன்பு அறிந்தவற்றையு மறியாமல் விட்டுச் சாக்கிர முதலாகிய அவத்தைகளிலே யடங்கி விழித்தவாறே யறிந்தவது.
ஏதுவறிவு மன்றாகும். எ-து.	எல்லாத்தையு மொருகாலத்தி லறிகின்ற கத்தாவல்லவாம்.
மெய்கண்டான். எ-து.	சத்தியத்தைத் தரிசித்தவன்.
அதுதான். எ-து.	அப்படி யறிகின்றவதுதான்.
அகம் ஒன்றின். எ-து.	ஆன்மா ஒன்றினது வென்னும் கத்தாவினுடைய வடிமையென்று சொல்வன் எ-று.

எனவே கத்தா சர்வஞ்ஞன், அவத்தைகளிற்படாதவன், சுகதுக்கங்களில்லாதவன்.

ஆன்மாகிஞ்சிஞ்ஞன், அறிவிக்கஅறிபவன், அவத்தைகளிலே பட்டுச் சுகதுக்கங்களையநுபவிப்பவன், ஆதலாற் சீவான்மா பரமான்மாவென்றதாம். சிவாத்துவிதியைமறுத்ததுமாம். "அறிந்திடுமான்மாவொன்றை யொன்றிலறிதலானும்-அறிந்தவைமறத்தலானு மறிவிக்க" என்றார்வழிநூலார். சித் - டு—சூ, ௩—செ.

இதுவுங்காரியங்கொண்டு காரணமறிதலாற் சாதநசாத்தியப்பொருட்டாயினவாறறிக. (சா)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். கருவிகளோடு கூடியவழியும் அவிச்சை நீங்காமையின் விடயங்கண்மாத்திரையேயறியுமன்றித் தன்னியல்பறியுமாறில்லை, அஃதுபதேசத்தாலறியற்பாலதேயாமாகலான் அதுபற்றி இழுக்கென்னையென்னுங்கடாவை யாசங்கித்து, அதனையும் மேற்கூறிய நியாயத்தா னுடம்பட்டு இன்னுமொருதாற்பரிய முரைக்குமுகத்தானே விடயங்களையறிவுழியும் படும் வேறுபாடுகூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று. அவனறிந்தாங் கறியுமாறும் உயிர் மறந்து மறந்தறியு மாறும் தெரித்துணர்த்தி வலியுறுத்துத னுதலிற் றெனினு மமையும்.

இ-ள். அறிந்தும் அறிவதே ஆயும் அறியாது. எ-து. கருவிகளெல்லாவற்றோடுங் கூடிச் சாக்கிரத்தானத்தினின்று விடயங்களையறியுமிடத்தும் ஒருங்கேயறியமாட்டாது ஒன்றனையேயறிந்தும் ஒன்றனையறியப்புகுவதாயும் முன்னறிந்தவொன்றனை அறியாதொழிந்தும்—அறிந்ததையும் விட்டுஅங்கு அடங்கி- எ-து. இங்ஙனமோரோவொன்றாக அறியப்பட்ட விடயத்தையும் இடையீடன்றி அறியமாட்டாது விட்டுவிட்டாங்கே ஐந்தவத்தைப்பட்டடங்கி—அறிந்தது எது. எ-து. மீளவறிந்து

வருதல் கண்கூடாகக் காணப்படுதலான் அங்ஙனமறிந்து வந்தப் பொருள் யாது அதுசடமன்றென்பது மேற்காட்டப்பட்டது முன்னருங் காட்டப்படும்—அறிவும் அன்று. எ-து. ஒன்றாக இயல்பாகவுணர்தலே பேரறிவாகலின் அதுவுமன்றும்—மெய் கண்டான் ஒன்றின். எ-து. இனிமெய்யாகிய சித்தாந்தநெறி யினையுணர்ந்தோன் வேறென்னையோவென மனமொருங்கியா ராயுமாயின்—அது அது தான்என்னும் அகம் ஆகும். எ-து. காட்டுமொளிக்கு வேறாய கண்ணொளிபோல அவ்வறிவிற்கு வேறாய் அதுவதுவே தானெனச் சார்ந்ததின்வண்ணமாய் நின் றறியுமியல்பையுடைய உயிராம். எ-று.

அறிந்தும் அறிவதேயாயும் என்னும் உம்மைகள் எண்ணின்க ண் வந்தன. அறியாதுமென்னு மெண்ணும்மை விகாரத்தாற் றொக்கது. அறிந்ததையுமென்னுமும்மை இழிவுசிறப்பு அறி வுமென்னுமும்மை இறந்தது தழீஇயது. ஏகாரம் அசைநிலை

அங்கு உணர்த்துமுறைமைத் தானமாகிய இலாடத்தி னென் றவாறு.

அறிந்ததையும் விட்டடங்கடங்கி யறியுமாறு வருகின்ற சூத்தி ரத்திறுதியினும், அதுவதுதானெனச் சார்ந்ததின்வண்ணமா மாறு உண்மையதிகாரத்தும் பெறப்படும்.

அறிந்துமறிவதேயாயு மறியாதறிந்ததையும் விட்டடங்கிய றிந்ததெது என்பதற்கு ஓதியதனை ஓதியபொழுதேயுணர்ந்தும் பலகாலோதியுணர்வதாயும் பலகாலோதியு முணர்தலின்றியும் உணர்ந்ததனையும் பின்னர் மறந்தொழிந்தும் இவ்வாறேறுதியுண ர்ந்ததியாதென் றுரைத்தலுமொன்று. இப்பொருட்கு அட ங்கியென்புழியும் எண்ணும்மை விரித்துரைக்க.

இங்ஙனம் மூவகைப்படுத்துரைக்கவே, உணர்த்தவுணர்தலெ ன்னுமேதுவான் முறையே அதீதத்தின்கணிகழு மியல்புபற்றிஞ

ம் சுத்ததினிகழுமியல்புபற்றியும் உணர்த்துமுறைமைக்கணிகழு மியல்புபற்றியும் உயிருண்மை சாதிக்கப்பட்டது. இது தற்பரமுமல்ல தனியென்றதனை வலியுறுத்தியவாறுகாண்க.

விஞ்ஞானமே ஆன்மாவென்னும் புத்தரின் யோகாசாரன் மதத்தை மறுத்தற்கெழுந்தது இவ்வதிகரணமெனக்கொண்டு அதற்கியையவுரைப்பாருமுளர்.

ரு—ரு, ஆறுமதிகரண முடிந்தது

"மாயாவியந்திர தநுவினுளான்மா" என்றதற்குப்பிரமாணம்,

கலையாதி மண்ணுந்தங் காணிலவை மாயை
நிலையாவாந் தீபமே போலு - மலையாமல்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடி லதுதநுவாய்
தானத்தின் வேறாகுந் தான், (எ)

இது, மாயையாலே வியந்திரிக்கப்பட்ட வுடம்பு வேறுவேறுபேர்களைக் கொண்டு நிற்றலா லான்மாவுண்டென்கின்றது. அஃதாவது, சித்துத்தானே உலகமாய்ப்பரிணமித்துஞ் சிவனுகியும்நிற்குமாதலா லெல்லாஞ் சித்தென்போர்க்கு, அஃதப்படியன்றென்று கூறுகின்றது,

இ-ள். கலையாதி மண்ணுந்தங் காணிலவைமாயை நிலையாவாம் எ-று. கலை - காலம் - நியதி - வித்தை - ராகம் புருடன், மனோ - புத்தி - யாங்காரம் - சித்தம், செவி - மெய் - கண் - வாய் - மூக்கு, வாக்கு - பாதம் - பாணி - பாயுரு - உபத்தம், சத்த - பரிச - ரூப - ரச - கந்தம், ஆகாயம் - வாயு - தேயு - அப்பு - பிருதிவி, இவை மாயாசரீரியமாய்த் தோன்றி நின்றொடுங்கும்.

தீபமே போலும் எ-து.	விளக்கிருக்கிற விடத்தையும் விளக்கென்றற்போலும்.
அலையாமல் ஞானத்தை முன் னுணர்ந்து எ-து.	தனக்கொரு கேடின்றிச் சிவனுடைய ஞானத்தை யிடமாக நின்றறிந்து.
நாடி லறுதறுவாய் எ-து.	விசாரிக்கில் அந்தக்கலையாதி மண்ணுந் தந் தனக்குடம்பாய்.
தான் எ-து.	ஆன்மா.
அத்தின் வேறுரும் எ-து.	அவையிற்றுக்கு வேறாகும் எ-று.

தான் - அசை. தீபமேபோலுமென்றது தகழியும் எண்ணெயுந் திரியுங்கூடி நின்றெறிந்ததீபத்தைச் சேர விளக்கென்றற்போலு மென்றதாம்.

எனவே, தேகத்துடனேகூடிநின்றொழிய வறியாதென்பது கூறினார்.

ஞானத்தைமுன்னுணர்ந் தென்றது தேகாதியுடனேகூடிநின்றறியினுஞ் சிவனாலொழிந் தறியாதென்பது கூறினாராயிற்று.

எனவே, கலையாதிமண்ணந்தமசித்து ஆன்மாவல்லவென்றுங் கூறினார். “அறிவுடல்சிந்தையான்மா வறிதலால்” எனருர்வழிநூலார். சித் - ௪—௬, ௨௯—செ.

ஆன்மா தேகாதியிடமாகநின்று அறியுமென்னும்பக்கத்துக்கு தீபம்போலுமென்னுஞ் சபக்கங்காட்டியவாறு காண்க

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அவை தனித்தனி வெவ்வேறு பெயர் பெறினுந் தொக்க சமுதாயத்தின்கண் ஆன்மாவென்ப பெயர் பெறுமெனக் கோடுமாகலின், அதுபற்றி யிழுக்கென்னையெனுங் கடாவை யாசங்கித்து அவை வெவ்வேறு பெயர்பெறும்வழியும் அவர் கூறியவாறு பெயர்பெறாது வேறுபெயர் பெறுமாறும், அவைமாயா காரியங்களேயாமாறும், அவை தொக்க சமுதாயத்தினும் ஆன்மாவெனப் பெயர்பெறாது வேறுபெயர் பெறுமாறு முணர்த்தி; அதனை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். காணின் கலை ஆதி மண் அந்தம். எ-து. அங்ஙனஞ் சமுதாயமாதற் குரியவை யாவையென்று அளவைகளா னறியப்புகிற் கலைமுத னிலமீறாகிய தத்துவங்களேயாம்:—அவை மாயை நிலையாவாம். எ-து. அவையனைத்தும் மாயையின் காரியங்களாகலின் நிலையுதலின்றிச் சிலகால நின்றழிவனவாம்:—ஞானத்தை அலையாமல் முன் உணர்ந்து நாடில். எ-து. அவை தொக்க சமுதாயத்தின் விளங்கித் தோன்றுவதாய ஞானத்தினியல்பை அசையாமற் கருத்தை யொருக்கி முன்னுணர்ந்து பின் அச்சமுதாயத்தை யாதென்றுராயின்,—அது தீபமே போலத் தநுவாம். எ-து. அச்சமுதாயங் கண்ணுக்கு விளக்குப்போலவுயிர்க்குத் தூலசூக்குமபரங்களாகிய உடம்பாம்.—தான் அத்தின் வேறு ஆகும் தான். எ-து. ஆதலாற் கண் விளக்கின் வேறாயினாற்போல உயிர் அவ்வுடம்பின் வேறாம். எ-று.

ஆமென்பது மேலுஞ் சென்றியையுட்.

மாயை ஆகுபெயர்.

தானென்பது முன்னைய தெழுவாய்; பின்னையது அசை.

அதனினென்பது அத்தினென மரீஇயிற்று. "இத்தை மெய்

யெனக் கருதி" என்புழிப்போல.

இதனானே தனியென்றதனை வலியுறுத்தவாறு.

☞ ௩—௬, ஏழாமதிகரண முடிந்தது.

இவ்வாறு மூன்றுசூத்திரத்தானும் சைவாகமங்களுட் கூறப்படும் பதிமுதலிய பொருள்களதுண்மை அநுமான வளவையான் வலியுறுத்தப்பட்டது. ஆகம வளவையே யமையுமாகலின் அநுமானவளவை மிகையாம் போலுமெனின்? ஆகாது: மந்த வுணர்வுடைய மாணுக்கர்க்கு வேற்றுச் சமய நூல்களை நோக்கியவழிச் சைவாகமப்பொருளின் மலைவு நிகழாமைப்பொருட்டும், கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டையென்னு நான்குவகையானன்றி ஆகமங்களைக் கேட்ட துணையானே அநுபவங் கூடாமையிற் சிந்தனை செய்து வன்மை மென்மையுணர்ந்து தெளிந்துகோடற்பொருட்டும் கருதலளவையும் வேண்டப்படுமாகலானென்க.

☞ மூன்றாஞ் சூத்திர முடிந்தது.

பொதுவியல்பு-பிரமாணவியன் முற்றிற்று.

ச—சூத்திரம்.

அந்தக் கரண மவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றைந்தவத் தைத்தே

இதுவும், ஆன்மரூபகஞ் சாதிக்கின்றது. இச்சூத்திரம் வேறு கூற வேண்டிய தென்னையெனின்? அவைபோலின்றி யிவை நீக்கமற்றவை யாதலால், பிறித்துக் கூறல் அருமைபற்றிக் கூறினார் எனவறிக.

இ-ள். ஆன்மா. ஆன்மா
எ-து.

அந்தக்கரண மவற்றி னொன் றன்று எ-து.	மனோ புத்தி யாங்கார சித்தமென்னும் அவையிற்றி லொன்றல்ல.
அவை சந்தித்தது. எ-து.	அவற்றுடனே கூடி நீக்கமற நின்றது.
சகசமலத் துணராது. எ-து.	செம்பிற்களிம்புபோலச் சகசமாய் நிற்கின்ற மூலமலத்தாலே ஒன்றையு மறியாது.
அமைச்சர சேய்ப்ப நின் றைந் தவத்தைத் தே. எ-து.	மந்திரிகள் முதலாயுள்ள பரிவாரத்தையு மிராசாவையும் போல நின்று ஐந்தவத் தையிலே பொருந்தும். எ-று.

அந்தக் கரண மென்றது - உட் கரண மென்றதாம். எனவே, புறக்கரணங்கூறி உட்கரணங் கூறுமாறுமாயிற்று.

சிவஞானமுனிவர் உரை.

பொதுவியல்பு— இலக்கணவியல்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. ஆன்மா அந்தக்கரணங்களாகிய மனம் புத்தி அகங்காரஞ் சித்தமென்னுநான்கனுள் ஒன்றன்றாயினும், நுண்ணுணர்வின்மையின் சூழ்ச்சித்துணைவராகிய அமைச்சரோடு கூடிநின்று தன்றொழினடாத்தும் அரசன்போல; சகசமலத்தினான் உணர்வின்றிக் கஞ்சுகம்போலுங் கலாதிகளாற் பொதுவகையான் உணர்வுநிகழினும் சிறப்புவகையான் நிகழுமாறு அவற்றாற் பெறப்படாமையின், சிறப்புவகையானுணருமாறு தனக்குச் சூழ்ச்சித்துணையாகிய அவ்வந்தக்கரணங்களோடு கூடி நின்று சாக்கிரமுதலிய ஐந்தவத்தையுடைத்தாம். எ-று.

எனவே, அங்ஙனநின்று அஞ்சவத்தைப்படுதல் ஆன்மாவுக்கிலக்கணமென்றவாறாயிற்று. இஃது உயிர்க்குத் தடத்தலக்கணமெனப்படும் பொதுவியல்பு.

ஒன்றன்றாயினும் சகசமலத்து உணராது அமைச்சரசேய்ப்ப அவற்றொடு சந்தித்துநின்று அஞ்சவத்தைத்தாமெனவினையும்.

உணராது சந்தித்தெதென்பது காரணகாரியப்பொருட்டாய் நின்றது. சந்தித்தது வினையெச்சமுற்று.

இவ்வாறன்றி ஆன்மா அவற்றினொன்றன்றாயினும் சகசமலத்துணராமையால் அவற்றொடு சந்தித்தது சந்தித்தவழி அவையுந் தானும் அமைச்சரசேய்ப்ப நிற்றலான் ஐந்தவத்தைத்

தாயிற்று எனவதிகரணம் பகுத்துக்கோடற்கேற்ப வேறுவே றுவினைமுடிபு செய்துரைத்தலுமொன்று.

வடமொழிச்சூத்திரத்தோதுதலின் ஈண்டும் ஆயினுமெனவ ருவித்து ஒருதொடராக வைத்துரைக்க. அந்தக்கரணம்வற்றி னொன்றன்றாயினுமெனவே, அவற்றினொன்றன்றாதலும் அநுவா தமுகத்தால் ஈண்டேபெற்றாம். இஃதுணராதார் அந்தக்கர ணமவற்றி னொன்றன்றென்றதனை வேறுதொடராக வைத்து ரைப்ப. அங்ஙனமுரைப்பின், முன் வருவனவற்றை அவாய் நின்று ஒருபொருண்மேல் வாராமையின் ஒருசூத்திரமாதற்கே லாமையறிக.

அவை சந்தித்ததென்புழி ஒடு உருபு விகாரத்தாற்றொக்கது; இரண்டாவது விரிப்பினுமமையும்.

ஆன்மா வென்பது மேலைச்சூத்திரத்தினின்றும் வருவி த்துரைக்கற்பாலதாகவும், ஈண்டு வேறோதியது ஒத்து வேறா தல்பற்றியென்றுணர்க.

ஆன்மாவென்னுஞ் சொற்குப் பொருள் வியாபகமென்பது உம் சித்தசித்தென்பதூஉமாம்.

மலத்து மலத்தாலெனவிரிக்க.

அமைச்சரசு அமைச்சரொடு கூடிய அரசென உருபும் பொ ருளும் உடன்றொக்கன.

காரணப்பொருட்டாய நின்றென்னும் வினையெச்சம் அஞ்ச வத்தைத்தென்னும் வினைக்குறிப்புமுற்றோடு முடிந்தது.

இனி, "அந்தக்கரண மவற்றினொன்றன்று"
என்றதற்குப் பிரமாணம்.

மன்மாதி யாலுணர்தன் மன்னு புலன்கண்
மனமாதி மன்புலனி னல்ல - மனமே

லுதித்தொன்றை யுள்ள முணர்த லதனி
னுதிக்குங் கடற்றிரையே யொத்து. (௧)

இது, அந்தக்கரண மறியுமென்போர்க்கு அவையறியாது ஆன்மா வறியுமென்கின்றது.

இ-ள். மனமாதியா லுணர்தன் மன்னு புலன்கள். எ-து.	மனோ புத்தி யாங்காரஞ் சித்தத்தினாலே கன்மத்துக்கீடாகப் பொருந்தினதொரு விடயத்தை யறிதலை யுடைத்து.

அந்தக்கரணங்களினிலே செவி மெய் கண் வாய் மூக்காகிய ஞானேந்திரியங்கள்.

மனமாதி மன்புலனி னல்ல எ-து.	ஞானேந்திரியங்கள் அந்தக்கரணங்களை உட்கரணமாகக்கொண்டு அறிந்ததாயினும், அந்தக்கரணங்கடா மன்னிலையாகிய ஞானேந்திரியங்களி லொன்றல்ல.
மனமேல் உதித் தொன்றை யுள்ளமுணர்த லதனின். எ-து.	மனமுதலாகியவவையுங் கன்மத்துக் கீடாகிய தொருபொருளிடத்தே தோன்றி ஆன்மாவாலே யறியுந்தன்மை அந்த ஞானேந்திரியங்களைப்போலும்.

உள்ளத்தாலுணர்தல் மூன்றும் வேற்றுமை. இன்பொருள். எனவே, இந்திரியங்களுக்கு மனாதியுட் கரணம், மனாதிகளுக்குக் கலாதியுட் கரணமெனவரும்.

உதிக்குங் கடற்றிரையே யொத்து. எ-து.	கடலுந் திரையும்போலு மெழுந்திருக்கும். எ-று.

ஆன்மா ஒரு பொருளையறியுமிடத்து மனதி யவ்விடத் துதிக்குமென்ற தெப்படியென்னில்? உதிக்கும்படி, கடலுங் கடலிடத்துத் திரையும்போல வுதிக்கும்.

கடல் - ஆன்மா, திரை - அந்தக்கரணம், காற்று - கன்மம், ஆகாசம் - விடயம்.

கன்மத்துக்கிடானதொரு விடயத்தை மனதியுட் கரணமாக ஒருபுலனிலே நின்று ஆன்மா வறியுமென்றார். "உணர்வன கரணமென்னில்" என்றார் வழிநூலார். சித் - சு—சூ, க—செ. அந்தக்கரணங்களாலே ஞானேந்திரியங்க ளறியுமறிவினும் ஞானேந்திரியங்களி லொன்றல்ல அந்தக்கரணங்களென்னும் பக்கத்துக்கு; ஆன்மாவாலே அந்தக்கரணங்களறியு மறிவினும் அந்தக்கரணங்களி லொன்றல்ல ஆன்மாவென்பது சபக்கமாயினவாறுகாண்க.

அந்தக்கரணங்களைக்கொண்டு ஆன்மாவறியுமென்னும் பட்சத்துக்கு, கடலுந் திரையும் சபக்கமாயினவாறு காண்க. அது, புண்ணியபாவங்களைப் பொருந்திக் கன்மத்துக்குப் பொருந்தினதொரு விடயத்தை யறுதியிட்டு நிற்கு மென்பதாம். (க)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அவ்வந்தக்கரணங்கள் தம்மிற்கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாமாறும், தம்மின்மேலுள்ளவற்றை நோக்கியுந் தம்மைநோக்கியும் அசித்தாமாறுந் தெரித்துணர்த்தி; ஏதுவை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். மனம் ஆதியால் உணர்தல் மன்னு புலன்கள். எ-து. மனமுதலிய அந்தக்கரணங்களாலுணரப்படுவன ஐம்பொறிக

ளாற்றரப்பட்டுப் புறத்தே நிலைபெற்ற விடயங்களாம்:—உள்ளம் உணர்தல் மனம் மேல் உதித்த ஒன்றை. எ-து. ஆன்மாவுணர்வது மனத்துக்கு மேலெனப்படும் புத்தியிற்றோன்றிய தொன்றனையாம்:—கடற்றிறையை ஒத்து உதிக்கும், எ-து. அவ்விருவேறுணர்வுங் கடலிடையெழுந்து கரைசாருந் திரைபோலப் பரம்பரையின் ஆன்மாவின்மாட்டு வந்து தோன்றும்:—அதனின் மனம் ஆதி மன் புலனின் அல்லன். எ-து. அதனானே மன முதலியன அவ்விடயங்களின் வேறாயினாற்போல ஆன்மாவும் அம்மனமுதலியவற்றின் வேறாம். எ-று.

உதிக்குமென்னும் பயனிலைக்கு உணர்தலிரண்டும் எழுவாய்.

செவ்வெண்டொகை விகாரத்தாற் றொக்கது.

புலனின் இன் உவமவுருபு.

அல்லனென ஆடூஉவறிசொல்லாற் கூறியது வடமொழி மதம்பற்றி.

உதித்தவென்னும் பெயரெச்சவீறு விகாரத்தாற்றொக்கது.

புத்தியிற்றோன்றிய தொன்றாவது சுகதுக்கமோகரூபவிடயம்.

பரம்பரையிற் றோன்றுதலாவது முன்னர் வாயிற் காட்சியுணர்வு தோன்றி அதன்பின் மானதக்காட்சியுணர்வு தோன்றி அதன்பின்னர்த் தன்வேதனைக்காட்சியுணர்வு உயிரின்கண் வந்து தோன்றுதல்.

இதனானே அந்தக்கரணங் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாமாறும், மேலுள்ளவற்றை நோக்கி அசித்தாமாறும், உயிர் அவ்வாறன்றி யாண்டுஞ் சித்தாமாறுங் கண்டுகொள்க.

"அவைசந்தித்ததான்மா" என்பதற்குப்பிரமாணம்.

சிந்தித்தாஞ் சித்தந் தெளியாதா மாங்காரம்
புந்தியா யாய்ந்து மனமாகும் - பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ள மிவ்வேறு
மவ்வேறும் போதுபோ லாங்கு. (உ)

அந்தக்கரணங்களின் சொரூபமும், அவையிற்றுக்கு ஆன்மா வேறென்றுங் கூறுகின்றது.

இ-ள். சிந்தித்தாஞ் சித்தம் எ-து. சித்தம் நினைதலை யுடைத்தாம்.

தெளியாதா மாங்காரம். எ-து. அகங்கார மகந்தைக்கிடமா யானென தென்பதுடைத்தா யென்னை யொப்பரில்லை யென்றெழுந்திருந்து தெளியாமலை யுடைத்தாம்.

புந்தியா யாய்ந்து. எ-து. புத்தியா யாராய்ந்து நிற்றலையுடைத்தாம்.

மன மாகும் பந்தித்து. எ-து. மன மொருபொருளை நினைவதுஞ் செய்து பற்றுதலையு முடைத்தாம்.

பற்றுதல் - பகுத்தறிந்து துணியாமலையமாய் நிற்றல். இப்பொருள் "சித்தமாமவ்வியத்தஞ் சிந்தனையதுவுஞ்செய்யும் "ஆங்காரம்புத்தியின்க ணுதித்தகந்தைக்கு வித்தாய்". மன மதனைசதத்தின் வந்தொருபொருளைமுந்தி—நினைவதுஞ் செய்தங்கைய நிலைமையினிற்கும்". என்பனவற்றாலறிக. சித் - உ—கூ, ருஅ - ருகூ - கூ0—செ.

வெவ்வேறுதா இப்படி யுள்ளவையிற்றுடன் அதுவது
னே துணிந் து வாய் நின்று அவற்றினது செயல்களை வே
ள்ளம். எ-து. றுவேருகவறிந் தறுதியிடுவேத் ஆன்மா.

வேறு வேருக வறிந்து அறுதியிட்டதெப்படியென்னில்?
சித்தத்துக்குப் பற்றுதல் தொழிலென்றும், அகங்காரத்துக்கு
வொன்றையுந் தெரியாமை யெழுந்திருக்கை தொழிலென்றும்,
புத்திக்கு ஆராய்வது தொழிலென்றும், மனத்துக்குப் பற்றுத
ல் தொழிலென்றும் அறிந்து, அவையிற்றுக்கு வேருத
லாம்.

அஃதெங்ஙனேயென்னில்? கைப்பதொன்று கைக்கின்றேமெ
ன் றறியாது. புளிப்பதொன்று புளிக்கின்றேமென் றறியா
து. உவர்ப்பதொன்று உவர்ப்பேமென் றறியாது. அவையி
ற்றினுடைய வறுவகைபிரதங்களையுமறிந்து இதுகைத்தது,
இது புளித்தது, இது தித்தத்தது, இது துவர்த்தது, இது
கார்த்தது, இது உவர்த்ததென் ருெருவன் சொன்னூற்போ
ல்ப வென்றதாம்.

இவ் வேருெம் இந்த அந்தக்கரணங்களாலே ஆன்மா
எ-து. வும் வேறுவேறு குணங்களை யுடைத்தா
ம். அஃதென்போல வென்னில்?

அவ் வேருெம் அப்படி வேறுவேறு குணங்களாய் நிற்
போதுபோ லா கின்ற ஆதித்தன்போல அவ்விடத்து. எ-று
ங்கு. எ-து.

அவ்வேருதல் - உதயகாலம், உச்சிக்காலம், அபராங்கிய
காலம், இவையில் ஒரு தன்மையாகிய ஆதித்தன் வேறுவேறு
குணமாய் நின்ருற்போல வென்றதாம்.

அவ்விடத்தென்றது, அந்தக்கரணங்களுடனேகூடி யொன்றுயழுந்தித் தன்மயமின்றி யவயிற்றினுடைய சொரூபகுணமாய் நிற்குமிடத்தென்றதாம்.

'அவை சந்தித்த தான்மா' என்றது. ஆன்மா அந்தக்கரணங்களுக்கு வேறென்று மவையிற்றுடனேகூடினபொழுதுங் குணம்வேறுபடுமென்றுங் கூறியபக்கத்துக்கு, ஆதித்தன் காலங்களுச்குவேறென்றுங் காலங்களாலே குணம் வேறுபடுமென்பது சபக்கமாயிற்று. இவை நீக்கற்கரிதாய்த் தகளியுந் திரியு நெய்யுந் தீபமும் போல நிற்குமெனவறிக. இப்படியறிந்தவர் தம்மையறிந்தவர். "தம்மையிற்றமக்கொருகேடில்லை" யென்றார் பிறரும். "கருவியாமனமும்புத்தி" என்றார் வழிநூலார். சித் - ச—கூ, ந—செ. (உ)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். மேற்பொதுவகையாற் கூறிப்போந்த அந்தக்கரணங்களினியல்பு சிறப்புவகையாற்கூறுமுகத்தான், மானதக்காட்சியுள்ளுங் கடற்றிரைபோலப் பரம்பரையின் வெவ்வேறாயுணர்வு நிகழுமாறுணர்த்தி உயிர்வேறாதலை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். உள்ளம். எ-து. புருடதத்துவமென நின்றவுயிர்—ஆங்கு. எ-து. வாயிற்காட்சியாற் கண்டவிடயங்களினொன்றனை மனமாதியானுணரும் மானதக்காட்சியின்கண்ணும் ஒருபெற்றித்தாதலின்றி—சித்தமாய்ச் சிந்தித்து. எ-து. சித்தமாய் நின்று இஃதியாதாகற்பாற்றெனச் சிந்தித்தும்,—மனம் ஆகிப் பந்தித்து. எ-து. அதன்பின் மனமாய் நின்று இஃதின்னதாகற்பாற்றெனப் பற்றியும்,—ஆங்காரம் ஆய்த் தெளியாது. எ-து. அதன்பின் ஆங்காரமாய் நின்று இஃதாமோ

அன்றே இதனை யின்னதெனத்தெளிவேன்யானெனத் தெளிவு பிறவாதெழுந்தும்,—புந்தியாய் ஆய்ந்து. எ-து. அதன்பின்னர்ப் புத்தியாய்நின்று இஃதின்னதெனத் தெளிந்தும்,—வெவ்வேறு தானே துணிந்து இவ்வேறும். எ-து. இங்ஙனம் வெவ்வேறாகவே யுணர்தலான் அவ்வாறுணரும் புருடன் இவ்வந்தக்கரணங்களின் வேறும்—போது அவ்வேறும் போல். எ-து. ஞாயிறுமுதலியவற்றோடு கூடிநின்று நாழிகை நாள் பக்கந் திங்கள் யாண்டு முதலியனவாய்ப்படும் பாகுபாடுசெய்யுங் காலதத்துவம் அஞ்ஞாயிறுமுதலிய வற்றின் வேறாயினாற்போல். எ-று.

ஆய்தல் ஈண்டு நிச்சயித்தற்பொருட்டு.

துணிதலென்பது அறிதலென்னும் பொருண்மாத்திரையாய் நின்றது.

தான் அசை. ஏகாரந் தேற்றம்.

இவ் அவ் என்பன வகரவீற்றஃறிணைப் பன்மைச் சுட்டுப் பெயர்.

வேறும் போதுபோலெனவே, ஆண்டு நீக்கப்பொருள் ஞாயிறுமுதலியனவென்பது தானே விளங்குமென்பது நோக்கி அவ்வெனச்சுட்டிபொழிந்தார். சாரியையும் உருபும் உடன்றொக்கன.

சிறம்பும்மை விகாரத்தாற் றொக்கது. ஆங்கும் வெவ்வேறு தானே துணிந்தெனவே மானதக்காட்சியும், இங்ஙன நால்வேறுவகைத்தாய் ஒன்றற்கொன்று முறையே ஏதுவும் பயனுமாய்க் கடற்றிரைபோலப் பரம்பரையிற் றோன்றுமென்றவாறாயிற்று.

செய்யுளாகலின் முறைபிறழ வைத்தார்.

அகார வுகார மகங்காரம் புத்தி
மகார மனஞ்சித்தம் விந்துப் - பகாதிவற்றை
நாத முளவடிவா நாடிற் பிரணவமாம்
போதங் கடற்றிரையே போன்று. (௫)

இது, அந்தக்கரணங்களுக்கு அக்கரங்கள் சொரூபமாமாறு கூறுகின்றது.

இ-ள். அகார வுகார மகங்கார ம் புத்தி. எ-து.	(இது, நிரை நிரை.) அகாரமாகிய அக்கரம் அகங்காரத்துக்குச் சொரூபம், உகாரம் புத்திக்குச் சொரூபம்.
மகார மனம். எ-து.	மகாரம் மனதுக்குச் சொரூபம்.
சித்தம் விந்து. எ-து.	விந்து சித்தத்துக்குச் சொரூபம்.
பகா திவற்றை நாத முள வடிவாம். எ-து.	இந்த அக்கரங்களை நீங்காததாகிய நாதம் ஆன்மாவுக்குச் சொரூபமாம்.
நாடிற் பிரண வமாம். எ-து.	இந்தவக்கரங்களைந்தும் விசாரிக்கில் பிரணவமாம்.
போதங் கட ற்றிரையே போ ன்று. எ-து.	இவை கூடினவவதரத்தில் ஆன்மாவுக்குண்டாமறிவு கடலிடத்துத் திரை யுகளித்தெழுந்திருந்தாற்போலும். எ-று.

அந்தக்கரணங்களையு மக்கரங்களையும் ஆன்மா பிரியாமனின்று உச்சாரணம் பண்ணுமிடத்து நாத முரூபமாய்ப் பிரணவ முரூபீகரிக்கும்பொழுது ஆன்மாவுக்குப் போதக் கடற்றிரை போலு மென்றதாம்.

அது, சந்திராதித்தர்க் கூட்டமாகிய வுவாவிலே கடல் கிளர்ந்தெழுந்தாற்போலு மென்றதாம்.

விந்துவினுண்டாகிய தோற்றக்கிரமத்திற் சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் வாக்குகளுலும் அந்தக்கரணங்களிலே பிரவேசித்து நிற்குமாகையினாலும், அந்தக்கரணங்களுக்கு அக்கரங்கள் வடிவானவாறறிக.

பிரணவத்தை யுச்சரிக்குமிடத்து உச்சாரணம் நாதசொரூபமாகையில் ஆன்மாவுக்குச் சொரூபம் பிரமநாதமென்பானெனவறிக.

இப்படி அக்கரங்களு மந்தக்கரணங்களும் வேறறநின்று வேருனற்போல ஆன்மாவும் அந்தக்கரணங்களும் ஏகிபவித்துநின்று வேருமென்பதுணர்க. "அவ்வுடனுவ்வுமவ்வு மனம் புத்தியாங்காரங்கள்" என்ருர் வழிநூலார். சித் - ச—சூ, ௩—செ.

அந்தக்கரணங்களும் அக்கரங்களும்கூடிச் சீவிக்கும் அவதரத்தில் ஆன்மபோதம் வெகுவிதமாக வெழுந்திருக்குமென்னும் பக்கத்துக்கு, கடலுந் திரையுமென்பது சபக்கமாயினவாறு காண்க. (௩)

சிவஞானமுனிவர் வுரை.

எ-து. உ-ம். எ-னின். அம்மானதக்காட்சியினிகழுஞ் சவிகற்ப வுணர்விற்கேதுவாய் அவற்றையுடனின்று செலுத்து

ம் அக்கரங்களிவையென்பதும் அவற்றானுணர்வு மாறிமாறித் தோன்றுமாறு முணர்த்துதனுதலிற்று.

இ-ள். வெ-டை.

"மன்னு மகார மனஞ்செலுத்தும் புத்தியினை—யுன்னுமுகார முபகரிக்கு—முன்னாகு—மாங்காரந் தன்னை யகாரஞ் செலுத்தியிடு—நீங்காத சித்தம் விந்துநேர்.,, என்பவாகலானும், ஈண்டோதிய முறையே முறையெனவும், "அவ்வுடனுவ்வுமவ்வு மனம்புத்தி யகங்கா ரங்கள்,, என வழிநூலாசிரியரோதிய எதிர்நிரனிறைப் பொருளெனவுங் கொள்க. "அவ்வுட னுவ்வு மவ்வு மனம்புத்தி யகங்கா ரங்கள்,, என்றதே முறையெனக் கொண்டு அதற்கியையக் கொண்டுகூட்டி யுரைப்பாருமுளர்.

துகளறுபோதம். கச—செ. சித் - ச - சூ, ௩—செ.

பகாதிவற்றை நாடிற் பிரணவமாமெனவும் போன்றாமெனவுங் கூட்டுக.

அந்தக்கரணங்களைச் செலுத்தும் அக்கரங்களைக் கூறுவார் ஒப்புமைபற்றிப் புருடனைச் செலுத்தும் அக்கரமும் உடன்கூறினார்.

உடனின்று செலுத்துதல்பற்றி அபேதமாக வைத்தோதப்பட்டன.

"நிகழ்ந்திடும் வாக்கு நான்கு நிவிர்த்தாதிகலையைப்பற்றி" சித் - க—சூ, உச—செ. அகரமுதலிய பஞ்சகலைவடிவாய் நின்று இவற்றை வேறுவேறு செலுத்துதல்பற்றிக் கணந்தொறும் நினைப்பு மறப்புமாகிய சகலகேவலங்கள் அதிநுட்பமாய்க் கறங்கோலைபோல மாறி மாறி நிகழுமெனவும், மாசகலத்தின் கட் கணந்தோறும் அந்நனமுணர்வுதித்தும் ஒடுங்கியும் வருதல் சமுத்திரத்தின்கட் புதிது புதிதாய்த் திரைதோன்

தியும் ஒடுங்கியும் வருமாறுபோலுமெனவுமுணர்க. கடற்றிரையுவமை மேற் பரம்பரையாய் உணர்வு வருதற்கெடுத்துக்காட்டினார்; ஈண்டுப் புதிது புதிதாய் வருதற்கெடுத்துக்காட்டினார்: ஆதலாற் புனருத்தியன்மை யுணர்க.

எண்ணில் வோங்காரத் தீசர் சதாசிவமாம்
நண்ணிய விந்துவொடு நாதத்துக் - கண்ணிற்
பகரயன்மா லோடு பரம னதிதெய்வ
மகரவுக ரம்மகரத் தாம். (௪)

இது, அக்கரங்கள் சடமாகையால் அதிதேவதைகளை யொழிந்து பிரேரகப்படாதென்கின்றது. எனவே, அந்தக்கரணங்களு மிவையிற்றைக்கூடி நிற்பினுஞ் சடமாகையால் ஆன்மாவை யொழிந்து பிரேரகப்படாதென்பதாம்.

இ-ள். எண்ணில் எ-து. முன் சொன்ன

ஓங்காரத்து நண்ணிய. எ-து. பிரணவத்தைப் பொருந்திய.

விந்துவுடனாதத்துக்கு. எ-து. விந்துவுக்கும் நாதத்துக்கும்.

அதிதெய்வம். எ-து. மிக்க தெய்வம் - பொருந்திய தெய்வமென்றுமாம்.

ஈசர் சதாசிவமாம். எ-து. ஈசுர தேவரும் சதாசிவ தேவருமாம்.

விந்துவுக்கு ஈசுரதேவர், நாதத்துக்கு சதாசிவதேவர்.

கண்ணில், எ-து. கருதில்.

பகரயன் மா சொல்லப்பட்ட பிரமாவும் விட்டுணுவு
லோடு பரமன். ம் உருத்திரனும் அதிதெய்வம்.
எ-து.

அகர வுகரம் அகாரத்துக்கும் உகாரத்துக்கும் மகா
மகரத்தாம். எ- ரத்துக்குமாம். எ-று.

அகாரத்துக்குப் பிரமா, உகாரத்துக்கு விட்டுணு, மகாரத்துக்கு உருத்திரன்; இவைநினைநினைஎண்ணில் ஓங்காரமென்பதற்கு ஓங்காரத்துக்குத்தெய்வ மெண்ணில்லை: இந்தத்தெய்வமெல்லாமென்றுமாம்.

கண்ணில்என்றவிதப்பால், அக்கரங்கள் பொருந்திய பிரணவத்தாற் பிரயோசநம் அக்கரங்களுக்குமில்லை பிரணவத்துக்குமில்லை அவற்றை யறிவோனுக்குப் பிரயோசநமாயிற்று; அதுபோலஅந்தக்கரணங்களுக்கு அக்கரங்களாலு மதிதேவதைகளாலும் பிரயோசநமில்லை: அக்கரங்களுக்கும் அதிதேவதைகளுக்கும் அந்தக்கரணங்களாற் பிரயோசநமில்லை, ஆன்மாவுக்கே பிரயோசநமென்பதாம். எனவே, அந்தக்கரணங்களும் அக்கரங்களும் அதிதேவதைகளும் தத்துவங்களாம் ஆன்மாவுக்கென்பதறிக. "தத்துவரூபமாகுந் தருமுருவானவெல்லாம்". சித் - உ—கு, எக—செ. "அயனரியானுமீசர் சதாசிவமதிதெய்வங்கள்". என்றார் வழிநூலார். சித் - சு—கு, சு—செ.

மனுதிகளுக்குச் சொரூப மக்கரங்களென்பதுவும், அக்கரங்களுக்கு அதிதேவதைகள் சதாசிவதேவர் முதலாயினரென்பதுவுஞ் சாத்திரப்பிரமாணமென வறிக.

அந்தக்கரணங்களைப் பிரிக்கவரிதாகையா லிப்படி யிந்த நாலு வெண்பாவாலுங் கூறினார் என வுணர்க. (௪)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அவ்வக்கரங்களுஞ் சடமாகலின் அவற்றை யதிட்டிக்கும் அதிதெய்வங்கள் இவையென்பதுணர்த்துதனுதலிற்று.

இ-ள். எண்ணில்வோங்காரத்து நண்ணியவிந்துவொடு நாதத்ததிதெய்வங் கண்ணில் ஈசரொடு கூறியசதாசிவமாம். அகரவுகரமகரத்ததிதெய்வங்கண்ணிற் பகரயன்மாலோடு பரமனாம். எ-று.

எண்ணில்வோங்காரம் எண்ணத்தின்கண் நிலவிய ஓங்காரமென வினைத்தொகை. எண்ணம் ஈண்டு மானதக் காட்சி.

ஒடு எண்ணின்கண் வந்தது.

ஈண்டு அயன் மால் பரமனென்றது சுத்தவித்தையின் வைகுவாரை. பரமன்=உருத்திரன். அகரவுகரம் மகரத்தாமென்புழி மகரம் இசைப்பொருட்டாய் ஒற்றில்வழி யொற்றாய்வந்தது.

௪—சூ, முதலதிகரணமுடிந்தது.

இனி, "சகசமலத்துணரா" என்பதற்குப் பிரமாணம்.

மாயா தநுவிளக்காய் மற் றுள்ளங் காணாதே
லாயாதா மொன்றை யதுவதுவாய் - வீயாத [போற்
வன்னிதனைத் தன்னுண் மறைத்தொன்றுங் காட்டம்
றன்னைமல மன்றணைத ருன். (ரு)

இது, சுத்தனாகிய வான்மாவை யுடம்புமறைத்த தென்போருக்கும், புருடனே யறிவனென்போருக்கும், ஆன்மாவினுடைய சொரூப சுபாவமும் மல மாயைகளினுடைய சொரூப சுபாவமுங் கூறுகின்றது.

இ-ள். மாயா தநு விளக்காய் மற்றுள்ளங் காணாதே லாயாதா மொன்றை யதுவதுவாய், எ-து.

ஆன்மா மாயையினுடைய சொரூபங் காட்டாகக்கொண்டு காணாதாகில் அந்தந்தவிடயங்களாய் நின்றாரு கன்மத்தைப் புசித்தறியமாட்டாது. (மற்று அசை.)

வன்னிதனைத் தன்னுண் மறைத் தோன்றுங் காட்டம்போற் றன்னைமல மன்றணைதறான் வீயாது. எ-து.

அக்கினியைக் காட்டமறைத்தும் அக்கினி கெடாதுபோல, ஆன்மாவையநாதியிலே மல மறைத்துநிற்றலை யுடைத்து. அப்படியாயினும் அந்த அக்கினி கெடாமனின்றாற்போல ஆன்மாவுந் தன்னுடையசைதந்நியங் கெடாது. எ-று.

இது, மலமென்பதொன்றில்லை மாயையினுடைய காரியமேயுள்ளதென்றும், மாயை யான்மாவினுடைய ஞானக்கிரியைகளை மறைத்துநிற்குமென்றும், சுத்தமாம் ஆன்மாவினுடைய அறிவை யுடம்புமறைத்ததென்றுங் கூறுவோர்க்கு, "போத காரியமறைத்து நிற்றலாற்புகல்மலங்கா ணாதலாங்குணமே யாகவுயிரினுள்விரவலாலே" "பருதியைமுகில்மறைப்பப் பாயொளிபதுங்கினாற்போ லுருவுயிர்மறைக்கின்ஞானக் கிரியைகளொளிக்குமாகும்". "புருடன்றன்குணமவித்தை யெனிற்சட

ம்புருடனுகும்— குருடன்றன்கண்ணிற்குற்றம் கண்ணின்றன் குணமோகூருய்". என்று மலமாகியவிருளை மாயைவிளக்கா கநின்று நீக்காதாகி லொன்றையும் ஆன்மாக் காணுதென்று கூறியவாறு காண்க. சித் - உ—கூ, அஎ - அ௩ - அ௫— செ.

என்றது, மாயை ஆன்மாவுக்குத் தநுகரணபுவநபோகங்க ளாய் நிற்றலானும், ஆன்மா சைதந்நியமான இச்சாஞானக்கிரி கைகள் கலாதிகளையும் கொண்டொழிந் தொன்றைச் சீவியா தாகையானும், அவையிற்றினுடைய சீவிப்பாலே பிருதிவி முத லாகிய தத்துவங்களுடனே அந்தந்த விடங்களிலேநின்று சீவி க்குமிடத்து மாயையின் மயக்கிலே யழுந்தி ஆணவமலத்தாலே யிரதிக்கப்பட்டுத் தன்மயமாகையை யடைந்துநின்று புசித்தல் வேண்டுகையால் கலாதிகளையும் அந்தக்கரணங்களையும் ஒ ழிந்து ஆன்மாவினுடைய விச்சாஞானக்கிரியை சீவியாதென்ற து. கலை சித்தத்துச்குட்கருவியாய்நின்றுகிரியையையெழுப்பவே ண்டுகையாலும், வித்தை புத்திக்குட் கருவியாய்நின்று ஞான த்தை யெழுப்பவேண்டுகையாலும், இராக மனதுக்கும் அகங் காரத்துக்கு முட்கருவியாய்நின் றிச்சையை யெழுப்பவேண் டுகையானுமெனவறிக.

இச்சாஞானக்கிரியையாவது:— கிரியை யான் செய்தேன் பிறர்செய்தா ரென்னுதி யானென்கை. ஞானம் யாதொன் றினும் அழுந்தினவிடத் துண்டானவறிவு. இச்சை இவ்விரண் டினும் புற்றுமிச்சை.

ஆனல் அந்தக்கிரியையும் ஞானமுமே யமையாதோ இச் சைவேணுமோவென்னில்? வேண்டிற்று. ஞானக்கிரியைகளி னுடைய சீவிப் பிச்சையையொழிந் தெழுந்திராதாகையானு ம், அந்த ஞானத்துக்குங் கிரியைக்கு முபாதாந மிச்சையாத,

லானும், ஞானக்கிரியைகளினிடமாக ஆன்மா நிற்கும் அவதர மிச்சையேவடிவாகையானு மெனவறிக.

இப்படிக்கொத்த விச்சையொழிந் தில்லையாதலாற் கிரியை முன்னாயிருக்கவு மிச்சையை முன்னாகக்கூறினார்.

தன்மயம். எ-து. ஞானத்தையும் ஞாதிருவையும் ஞேயத்தையும்.

ஞானமென்றது ஆன்மஞானத்தை, ஞாதிருவென்றது அந்த ஞானத்தையுடைய ஆன்மாவை, ஞேயமென்றது அந்த ஞானத்தாலே யறியப்பட்ட விடயத்தை.

இவையிற்றினின்ற தன்மையைத் தன்மயமென்றார். இவை யவ்விடத்தில்லையோவென்னில்? நேராகவில்லையன்று, உள்ளது தோன்றாது. அஃதெங்ஙனேயென்னில்? நாமிதனைப் புசிக்கின்றோமென்னும் அறிவும் புசித்தேமென்று அவையிற்றினல்லதிது தீயதிதுவென்று சொல்லப்பட்ட விசற்பஅறிவு மவ்விடத்தில்லையாதலால் அந்த அவதரத்துக் கில்லையென வறிக.

இப்படி மாயாபோகங்களைப் புசிக்கும் அவதரத்தும், அவ்விடத் தவையின்றி அத்துவிதமாயிருக்குமென்பது சுவாநுபூதியாலறிக.

சுவாநுபூதி யென்றது யாதொரு காரியத்தைச் செய்து செய்தகாரியந் தனக்கான பிரயோசநம் இப்படி இப்படியெனக் காண்கை.

யாதொரு விடயத்திலும் அழுந்தின திசையிற் காட்சியை இப்படியிவையிற்றைத் தரிசிக்கப்பட்டது முத்தித்திசையிலு மொக்குமாதலால், பெத்தமுத்தியிரண்டிலும் இப்படி அவை

யாமலிருக்கவேண்டு மென்னும் இடம் அறிவித்தாரென வறிக.

ஆன்மபோதத்தை மலமறைத்து நிற்கின்றதென்னும் பக்கத்துக்கு, காட்டமும் வன்னியுமென்று காட்டிய சபக்கங் காண்க.

மலமிருளு மாயைவிளக்கு மெனவறிக. "புகலுமலமொழித்தற்கு" என்றார் சார்பு நூலார். சிவப்பிரகாசம் - பொது உடு—செ. "யானேயின்னனுயினேன்" என்னும் ஞானமிர்தத்தில் "பெருமலமும் பிறழாமாயையு - மற்றவற்பிணிப்பேயாயினேனற்றவை - யிரண்டெனவிசைத்த லெனின் தெருண்டசின்-யாண்டுமொருவா தொழிவதுமீண்டுப் - பிரிந்துபுணர்ந்துறையும் பெற்றித்திருந்தது—மொன்றேபோலும் நன்றுநனியுணர-மறைத்தற்றெழில் பூண்பதுமதனைக்—குறைத்தற்செய்திக் குலவுவதோரிடை—யிரண்டலவென்பதெ னிருளருளிரிசுடர்—முரண்டரநின்ற முழுமலமாயை" என்றார். (ரு)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். ஆகந்துகமலமே ஞானதிரோதகமாதலமையும் வேறுமோர்மலமுண்டென்றல் மிகைபோலுமென ஐக்கவாதசைவர் முதலியோர் மதம்பற்றி நிகழுங்டாசங்கித்து, ஆகந்துகமலத்தானுஞ் சகசமலத்தானுஞ் செயப்படுங்காரியங்கட்குத் தம்முள் வேற்றுமை பெரிதாமாறுணர்த்துமுகத்தான் ஏதுவை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். உள்ளம் மாயா தநு விளக்கு அக் காணுதேல் ஒன்றை ஆயாது ஆம். எ-து. உயிர் ஆகந்துகமலமெனப்படும் மாயாகாரியமாகிய உடம்பு தனக்குக் காட்டாகக்கொண்டு காணுதாயின் ஒருவிடயத்தையுமறிவதில்லையாம்—மலம் தன்னை அன்

று அணைதல் தான். எ-து. சகசமலம் உயிரை அநாதியே ப
ற்றிநிற்றல்—அது அது ஆய் வீயாத வன்னிதனைத் தன்னுள் ம
றைத்து ஒன்று ஆம் காட்டம் போல். எ-து. காட்டமுத
லியவற்றுள் அதுவதுவேயாய்நின்றுந் தனக்குக் கேடில்லாத
வன்னியைத் தனக்குண் மறைத்துவைத்து ஒன்றேயாய்நிற்குங்
காட்டம்போலும். எ-று.

எனவே, காட்டாய் நின்று விடயங்களையறியும்வண்ணம் உ
யிர்க்கறிவை விளக்குதல் மாயையின் செய்தி; அவ்வறிவைத்
தடை செய்துகொண்டு நிற்றல் மலத்தின் செய்தி: இவ்விர
ண்டும் இங்ஙனம் ஒளியுமிருளும்போல் இகலி நிற்பனவாகலா
ன் அத்தன்மைத்தாய மாயை இத்தன்மைத்தாயமலமாதல்
யாண்டையதென மறுத்தவாறாயிற்று.

மற்றென்பது மலமன்றணைதலென்பதனோடியைந்து வினை
மாற்றின்கண் வந்தது.

முற்றும்மை சிறப்பும்மைகள் தொக்கன.

ஆமுந் தானுங் கட்டுரைக்கண் வந்த அசை.

வன்னி அது அதுவாதல், காட்டத்துண்மறைந்துழிக் காட்
டமேயாயுஞ் சூரியகாந்தத்துண்மறைந்துழி அதுவேயாயும் இ
வ்வாறே அவ்வவற்றின் மறைந்துழித் தானென்பதொன்றில்
லையென்னும்படி நிற்றல். அங்ஙனமாகியும் வீயாமை, கடைக
ன்முதலிய தொழிற்பாடு நிகழ்ந்தவழித் தோன்றுதலாற் பெ
ற்றாம். தன்னுண் மறைத்தல் வன்னியென்பதொன்றில்லையெ
ன்னும்படி பொதிந்துகொண்டு தானேயாதல். ஒன்றாங்காட்
டம் ஒன்றேபோல் அத்துவிதமாங் காட்டமென்றவாறு. இவ்
வாறு உவமைக்கோதிய அடைபுக்தொழிலும் இயைபும் பொரு
ட்கண்ணுங் கூறிக்கொள்க.

மாயை கன்மங்கள்போல ஆதியன்றெனக் காலத்தானும் வேற்றுமைகூறுவார் அன்றணைதலென்றார்.

இங்ஙனங் கூறிப்போந்த மலமாவது ஞானாபாவமென்பாரும், பிராந்திஞானமென்பாரும், தமோகுணமென்பாரும், பஞ்சக்கிலேசத்துள் ஒன்றாகிய அவிச்சையென்பாரும், மாயை கன்மங்களென்பாரும், சிவசத்தியென்பாரும், உயிர்க்குணமென்பாருமாய், அவ்வச்சமயநூல்பற்றி மயங்குவாருமுளர். அம்மலத்திற்குப் பற்றுக்கோடாகிய சூனியமுதலியவற்றின் வேறெனப்பட்ட ஆன்மாவும் இயற்கையாற் சடமென்பாரும், அறிவுமாத்திரையேயெனக் குணிப்பொருளன்றென்பாரும், சுதந்தரவறிவுடைத்தென்பாரும், அவ்வுடம்பளவிற்றென்பாரும், அணுவளவிற்றென்பாரும், உருவென்பாரும், அருவென்பாரும், உருவருவென்பாருமாய், இன்னும் பலதிறப்படக்கூறி மயங்குவாருமுளர். அவையெல்லாம் பொருந்தாமை ஆகமங்களுட்காண்க. ஈண்டுரைப்பிற் பெருகும்.

இச்சகசமலம் ஞானதிரோதகமாய்த் திரவியமாய் அறியாமைக்குணத்ததாய்ச் செம்பிற்களிம்புபோல உயிரின் குற்றமாய் அநாதிபந்தமாய்ச் சடமுமாய்ப் பலவுமாயின் அழிவெய்துமாகலின், அநாதிபந்தமாதல் பெறப்படாமையின்; ஒன்றேயாய் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னும் உயிர்ப்பாகுபாட்டிற்கேதுவாய் உயிர்கடோறுந் தனித்தனி வெவ்வேறாய் மறைத்து நின்று தத்தங்காலவெல்லையி னீங்குவனவாகிய சத்திகள் பலபலவுடைத்தாய் உயிர்கண் மூன்றவத்தைகளும் படுதற்கு மூலகாரணமாய் நித்தமாய் வியாபகமாய் வியாபகவுயிர் அணுத்தன்மைப்படுமாறு செய்தலின் ஆணவமென்னும் பெயர்த்தாய்ப் பசுத்துவம் பசுநிகாரம் மிருத்தியுமூர்ச்சைமலம் அஞ்சனம் அவித்தை ஆவிருதியென்றற்றொடக்கத்துக் காரணக் குறிகளுமுடைத்தாய் நிற்பதெனவும், படலம் படர்ந்த கண்

ஞாயிற்றின் சந்நிதியினிற்பினும் படலத்தான் அவ்வொளியை யிழந்து இருளினழுந்துமாறுபோல் முதல்வன் சந்நிதியினிற்பி னுஞ் சோபான்முறையின் அறிவிக்க அறியுந்தன்மைத்தாயஉயி ர் அநாதியேயறிவித்தால் அறியமாட்டாமையின் அம்மாட்டா மையான் அவ்வறிவை இழந்து அறியாமையாய் அழுந்துதலின் அஃதவ்வுயிர்க்குப் பந்தமாயிற்றெனவுமுணர்க. அநாதியே ம லத்தினீங்குதல் முதல்வன்வினையாய் அநாதிமுத்தத்தன்மை யென எண்குணங்களுள் வைத்தெண்ணப்படுவதென்பது சி வாகமங்களுக்கெல்லாம் ஒப்பமுடிந்தாற்போல அநாதியே மல த்தைப்பற்றுதல் உயிரின் வினையாய் உயிர்க்குற்றங்களுள் வை த்தெண்ணப்படுவ தென்பதூஉம் அவற்றிற்கெல்லாம் ஒப்பமு டிந்தது. ஈண்டுப்படுங் கடாவிடைகளெல்லாம் ஈரிடத்துமொ க்கும்.

☞ ௪—௫, இரண்டாமதிகரணமுடிந்தது.

இனி, 'அமைச்சரசேய்ப்பநின் றைந்தவத்தைத்தே" என்பதற்குப் பிரமாணம்.

ஒன்றணையா மூலத் துயிரணையு நாபியினில்
சென்றணையுஞ் சித்த மிதயத்தின் - மன்றவே
ஐயைந்தாங் கண்டத்து நன்னுதலில் வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு. (௬)

என்றது, அந்தக்கரணங்கள் அமைச்சாகவும், வாயில்காப் பா ரொற்றுட்கள் தூதா ளத்தாளிகள் புரோகிதர் ஐவரும் ஞானேந்திரியங்களாகவும், யானைப்படை குதிரைப்படை தே ர்ப்படை காலாள் சேனாபதியர் ஐவருங் கன்மேந்திரியங் களாகவும், சத்தாதி வசனாதி விடயங்கள்பத்து மேவலாட்க

ளாகவும், பிராணவாயு முதலிய வாயுக்கள் உறுதிச் சுற்றமாக வும் உடைய ஆன்மாவாகிய அரசன் என்றதாம். இராசா பவனிபோய்த் தன்னுடைய கோயிலுட்புகுமளவில் வாயில் தோறும் நிற்குமவர்களை நிறுத்தி அந்தப்புரத்தில் தானேபுகு மாப்போல, கருவிகரணாதிகளுடனே உணர்த்துமுறையிலே வி யாபரித்த ஆன்மா சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் து ரியாதீதமென்கின்ற அவத்தைகளைப்பொருந்தி இலாடங் கண் ட மிதயம் நாபி மூலாதாரமாகிய விடயங்களை யடையுமளவில்; அவையிற்றில் நிற்குங் கருவிகரணாதிகளை முறைமையிலே நிறு த்தி யடைவனென்றதாம்.

இது, ஆன்மஞானத்தை மலமறைத்துநின்ற அவதரத்தின் செய்தி கூறுகின்றது.

இ-ள். ஒன்ற மூலத்து ஆன்மா வொருகருவியையும்
ணையா பொருந்தா.
மூலத்து
எ-து.

அதீதத்துக்குத் தானமாகிய மூலாதாரத்தில் என்றது. க ருவிகரணாதிகள் ஒன்றுமின்றி யொன்றையுமறியாமல் பிருதிவி த்தானமாகிய மூலாதாரத்தே அவ்வியத்தனாய்க்கிடப்பனென் றதாம். எனவே, அவ்வியத்தம் அவ்விடத்தொரு கருவியாயி னவாறறிக. ஒன்றணையான் என்றது அறிகருவி யொன்றணை யானென்றதாம்.

உயிரணையு துரியாவஸ்தையில் நாபித்தானத்திலே பி நாபியினில். ராணவாயுவை வந்துபொருந்தும்.
எ-து.

நாபி துரியத்தானமாகையாலும் நாபிக்குக்கீழ் பிராணவா யு வியங்காதாகையானு மேலியங்குவதாம். அப்புவையொழி

தெழுந்திராதாகையானும் அந்த அப்புவுக்குத்தானம் நாபியா கையானும் எனவறிக. எனவே கருவி இரண்டாயிற்று.

சென்றணையு அந்தத்தானத்தை நீங்கிச்சென்று சுழுத் ளு சித்த மிதய தியி லிதயத்தானத்தே சித்தத்தைக்கூடும். த்தின். எ-து.

இதயந்தொடங்கி நாபிக்குமேல் சுழுத்தித்தானமாகையா னும், சித்த நினைவுக்கு உபாதாநமாகையானும், நினைவெழுந்தி ருக்கவேண்டுமெவதர மக்கினியெழுப்பவேண்டுமாகையானும், அக் கினிக்குத்தாந மிதயமாகையானும், என்றதாம். எனவே, கரு வி மூன்றாயிற்று.

மன்றவே ஐ நிச்சயமாகச்சொப்பனத்திற் கண்டத்தா யைந்தாங் கண் னத்தே யிருபத்தைந்து கருவியுடனேயாம். டத்து. உ-து.

சத்தாதி யைந்தும், வசனாதி யைந்தும், பிராணாதியான வாயுக்கள் பத்தும், மனாதி நாலும், புருடனுமெனவறிக.

இந்தஇருபத்தைந்து மிவ்விடத்தாமென்றது, கண்டந்தொ டங்கி யிதயமளவாகச் சொப்பனத்தானமாகையானும், அதி லே கண்டத்துக்குக்கீழ் இதயத்துக்குமேற் பாதியளவா க மனசுக்குத் தானமாகையானும், மனம் வசனமுதலாயினவ ற்றுக்கு உபாதானமாகையானும், நின்றபாதிதொடங்கி யிதயத் தளவும் புத்திக்குத் தானமாகையானும், புத்தியிலே பூதாதி யாங்காரந் தோன்றுகையானும், அந்த வாங்காரம் சத்த முதலானவற்றுக்கும் வாயுக்களொன்பதுக்கும் உபாதானமா கையானும், இவை தான் வாயுவிடமாகச் சீவிக்கையாலுமென வறிக.

நன் னுதலில் வாக்காதி மெய் யாதியாம்.எ-து. சாக்கிரத்தானமாகிய நன்ருகிய நுதலிலே வாக்குப் பாதம் பாணி பாயுரு உபத்தமாகிய கன்மேந்திரியங்களைந்தும், மெய் வாய் கண் மூக்குச் செவியாகிய ஞானேந்திரியங்களைந்துமாகிய பத்துடனுமாம்.

ஆமென்பதனை யிரண்டிடத்துங்கூட்டுக.

ஆகச் சாக்கிரத்துக்குக் கருவி முப்பத்தஞ்சாயினவாருமென்றது, நுதலிலேதொடங்கித் தாலுமூலத்தளவுஞ்சாக்கிரத்தானமாகையானும்,தைசதவாங்காரத்துக்குத்தானஞ் சோத்திராதிகளுடையதானமாகையானும், வைகரியாங்காரத்துக்குத்தானந் தாலுமூல தந்தோட்டங்களாகையானும், ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களு மிந்தஅங்காரங்களிலே தோன்றுகையானும், அவைதான் சீவிக்குமிடத் தாகாசமிடமாகச் சீவிக்கையானுமெனவறிக.

விட்டகன்று வேறு. எ-து. உணர்த்து முறைமையிற் கூடிநின்ற தத்துவத்தைச் சுத்தவித்தை-ஈசுரம்-சாதாக்கியம்-சத்தி-சிவமென்னுஞ்சுத்ததத்துவங்களைந்தும், கலை கால நியதி வித்தை யராகம் மாயையென்னும் வித்தியாதத்துவங்களாறையும், பிருதிவி அப்புத் தேயு வாயு வாகாசமென்னு மைந்தையும், விட்டு நீங்கிச் சைதந்நியரகிதனாய் எ-று.

எனவே, உணர்த்துமுறைமையிற் கருவிபதினாலு மடங்கிற்றென்பதாயிற்று.

இவையிற்றை நீங்குமவசரம் ஆன்மாவுக்குண்டாகிய அறிவு தானந்தோறுங் கெடுமெனவறிக. "புருடனேயறிவனுகிப் பொறிபுலனுகி" "படைகொடுபவனி போந்தும் பார்மன்னன் புகுதும்போது." "சாக்கிர முப்பத்தைந்து நுதலினில்" என்ருர்

வழிநூலார். சித்-ச—சு, ௩க-௩உ-௩௩—செ.

"சால்கொடுத்திருகை முட்டிவாழிய" என்னு ஞானமிர்தத்தா லிவ்விரிவுகாண்க. (சு)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். தத்துவங்கள் தொழிற்படுதற்கண்நிகழும் அவத்தை வேறுபாடு தெரித்துணர்த்தி அஃதேதுவாதலை வலியுறுத்துதனுதலிற்று. நல்நுதலில் வாக்காதி மெய்யாதி மன்ற ஏய் ஐயைந்தாம் கண்டத்தின் வாக்காதி மெய்யாதி விட்டு அகன்று வேறு ஐயைந்தாம் இதயத்திற் சித்தஞ் சென்றணையும் நாபியினில் உயிர் அணையும் அணையா மூலத்து ஒன்று என வினையும்.

இ-ள். சாக்கிரத்தானமெனப்படும் இலாடத்திற் புறவிந்திரியம் பத்தினையுந் தேற்றமாகப் பொருந்திய இருபத்தைந்து கருவி தொழிற்படும், சொப்பனத்தானமெனப்படுங் கண்டத்தின் அப்பத்தினையும் விட்டு நீங்கிவேறாய் இருபத்தைந்து கருவி தொழிற்படும், சுழுத்தித்தானமெனப்படும் இதயத்தின்அவற்றுள் இருபத்திரண்டு கருவிகளை விட்டு நீங்கி முன்னர்க் கூறப்படும் இரண்டு கருவிகளோடு கூடிய சித்தந் தொழிற்படும், துரியத்தானமெனப்படும் உந்தியிற் சித்தத்தையும் விட்டு நீங்கி முன்னர்க் கூறப்படும் புருடதத்துவத்தோடு பிராணவாயுக் கூடித்தொழிற்படும்; இக்கருவிகளொன்றும் அணையாத அதீதத்தானமெனப்படும் மூலாதாரத்திற் புருடனொன்றே நிலைபெறும். எ-று.

எனவே, இலாடத்தானமுதலிய ஐந்தினுநிற்குங் கருவிகள் முறையே முப்பத்தைந்தும் இருபத்தைந்தும் மூன்றும் இரண்டும் ஒன்றுமொன்பது போந்தவாறுணர்க.

மன்ற வென்பது தேற்றப்பொருட்டாகிய இடைச்சொல்.

ஏய்தல் பொருந்துதல்; வினைத்தொகை.

வாக்காதி மெய்யாதியை யென இரண்டாவது விரித்துரைக்க. அஃதீரிடத்துஞ் சென்றியையும்.

வருகின்ற சூத்திரத்தின் மெய் வாய் கண் மூக்கு எனச்செய்யுட்கேற்ப மெய்யை முற்கூறுதலின் அம்முறைபற்றி ஈண்டுச் செவியாதியென்னது மெய்யாதியென்றார். அவற்றொடு கூடிய இருபத்தைந்தாவன; அவ்விந்திரியம் பத்துக்கும் விடயமாகிய வசனாதி சத்தாதி பத்தும், அவற்றினுக்கு உட்கருவியாகிய அந்தக்கரணங்கணான்கும், அவற்றொடு கூடிய அவத்தையுறுவதாகிய புருடனொன்றும். அஃதவத்தையுறுதற்குரிய மதுகைக்கேதுவாய் அங்காரத்தாற் செலுத்தப்படும் பிராணாதிவாயுக்கள் பத்துமென இவை. ஈண்டுச் சத்தாதியென்றது வசனாதிபோலும் விடயங்களையெனக்கொள்க. எனவே, பூதங்களின் கூறாய் அவற்றுடனின்று தேராழிக்குத் தேருறுப்புப்போல இந்திரியங்களின் றொழிற்பாட்டுக்கு மதுகையை விளைத்து நிற்பனவாய புறக்கருவியறுபதில் ஈண்டுக் கூறிப்போந்த விடயங்கள் பத்தும் வாயுக்கள் பத்தும்ஒழித் தொழிந்த புறக்கருவிகள் நாற்பதும் அவற்றையுடைய பூதங்களைந்தும் அவற்றிற்கு வலியாயுடனிற்பனவாய சூக்குமபூதமெனப்படுந் தன்மாத்திரைகளைந்துமென்னும் ஐம்பதுகருவிகளும் கீழ்நோக்கிய சாக்கிரத்தானத்தில் தமது சத்திடங்கி விளக்கிடாகத் தொழிற்படாதொழியுமெனவும், அவை யொழிந்தவழி அவத்தைக்கேதுவாய் நின்ற ஏனைப் பொறிமுதலிய முப்பத்துநான்கும் அவற்றொடு கூடிய புருடதத்துவமும் இருவகைப்பூதங்களானும் புறக்கருவிகளானுந் தரப்படும் மதுகையின்மையின் ஆண்டுப் பொறிகளின் றொழிற்பாடு மெத்தென நிகழுமெனவுங்கொள்

௯. கலாதிகளுஞ் சுத்ததத்துவமும் அவத்தைக் கேதுவாகாமை யான் உடனெண்ணாராயினர். ஏனையவும் விரிந்த நூல்களுட்கூ றியவாறுபற்றி உணர்ந்துகொள்க.

இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ள
மிலாடத்தே யைந்தவத்தை யெய்து - மிலாடத்தே
யவ்வவ் விந்திரியத் தத்துறைகள் கண்டடைவே
யவ்வவற்றை நீங்கிலது வாங்கு. (எ)

இதுமேலா லவத்தையுந் தெரிசநாவத்தையுங் கேவல சகல சுத்தமுங் கூறுகின்றது.

இ-ள். இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ள மிலாடத்தே யைந்தவத்தை யெய்தும். இலாடத் தானத்தே சாக்கிராவத்தை யைப் பொருந்தின ஆன்மா கீழாலவத்தை யைப் பொருந்தினாற்போல அந்த விலாடத் தானந்தன்னிலே சாக்கிரமுதலாயுள்ள வைந் தவத்தையும் பொருந்தும்.

எ-து.

அஃதாவது, மலத்தினுடைய சொரூபத்திலே மறைந் தரூப சொரூபியாய் மூலாதாரத்திலே அவ்வியத்தனாய்ப் பின்னருண ர்த்து முறைமையிற் கருவிகளைக்கூடி யுணர்ந்து நிற்கின்ற ஆன் மா; அவ்விடத்தேயு மைந்தவத்தைப்படு மூலமலந் தடுத்து நிற் கவென்றதாம். எனவே மல மறைத்தலுந் தடுத்தலுமென வி ரண்டாயினவாரறிக.

ஒருவன் ஒருபொருளைப்போட்டுத்திடுக்கமெய்திமூர்ச்சித்தது அதீதம். அப்பொருளை யெவ்விடத்தே போட்டோமென்னும்

நினைவுமாத்திரந் தோன்றுமை மயங்கிநிற்பது துரியம். அதனை யின்னவிடத்திலேயாயிருக்கும் போட்டோமென் றையப்படுகின்றது சுழுத்தி. இன்னவிடத்திலே போட்டோமென்று துணிந்தவிடஞ் சொப்பனம். அப்பொருளைக் கண்டாற்போலக் கருதியவிடத்திற் சென்றல் சாக்கிரம். கண்டது சகலம். ... கலமாவது உணர்த்து முறைமையினிற்பது. இப்படி யெப்பொருட்குங் கூட்டிக்கொள்க.

இலாடத்தே அந்த விலாடத்தானத்தே யந்தந்த வவயவ்வவ் விந்திரிய த்தைகள்தோறு மந்தந்தக் கருவிகள் கூடியுத் தத்துறைகள் ம் புரிந்தும் நின்றாற்போல வவையிற்றினுடை கண்டடைவே ய ய துறைகளையுங்கண் டவையிற்றையு நீங்கி வ் வவற்றை நீங் லவ்விடத்ததுவாம். எ-று.
கிலதுவாங்கு.எ-
று.

துறையாவது, சுத்ததத்துவங்களுடனே கூடி நின்றறியுமவத்தைக ளைந்துமாம்.

அஃதாவது, சுத்தவித்தை யீசுரம் சாதாக்கியம் சத்தி சிவம் ஆகிய வைந்துடனுங் கூடி மேலாலவத்தையைத்தரிசிப்பது சாக்கிரம்.

அதிலே சுத்தவித்தைநீங்கி யீசுரஞ் சாதாக்கியஞ் சத்தி சிவத்துடனே கூடிநிற்றல் சொப்பனம்.

அதிலே யீசுரம் நீங்கிச் சாதாக்கியஞ் சத்தி சிவ மிவற்றுடனே கூடி நிற்றல் சுழுத்தி.

அதிலே சாதாக்கியம் நீங்கிச் சத்தி சிவத்துடனே கூடி நிற்றல் துரியம்.

அதிலே சத்தியும் நீங்கிச் சிவத்துடனே நிற்றல் அதீதம்.

அதீதத்திலே சிவதத்துவமு நீங்கி யருள்தாரகமாக நிற்றல் நின்மலாவத்தையாம்.

அவற்றை நீங்கிலதுவாங்கு. எ-து. திருவருள் தாரகமாமென்றதாம். எனவே நின்மலாவத்தையு மைந்தெனவறிக. இந்த நின்மலாவத்தை யைந்து முபதேசத்தாலறிக. "இருவகைச்சாக்கிராதி யவத்தைக ளியல்புதானும்" எனவும் "அறிதரு முதலவத்தை யடைதரு மிடத்தேயைந்துஞ் செறிதரும்" எனவும் "ஐந்துசாக்கிரத்தி னான்கு கனவினிற் சுழுனைமூன்று வந்திடுந் துரியந் தன்னி லிரண்டொன்று துரியாதீதம்" எனவும் வழிநூலார் கூறியவாற்றாலு மறிக. சித்-௪—௬, ௩௪-௩௫-௩௬—செ

தத்துவாதீத பரசிவன் றனது மிந்தச் சுத்தாவத்தைகளையு நீங்கி அருள் தாரகமான விடமெனவறிக. இந்த வவத்தையைந்தும் புரியுமிடத்து மயக்கவிகற்பம் வாராம லிருக்கவேண்டுகையால் கேவல சகலமுங்கூறினார். "சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்தவர்க ளுலகிற் சர்வ சங்க நிவிர்த்திவந்த தபோதனர்களவர்கள்—பாக்கியத்தைப் பகர்வதுவென்" என்றும் சித்-அ—௬, ௩௫—செ. "பொற்புறு கருவியாவும் புணராமே யறிவிலாமற்-சொற்பெறு மதீதம் வந்து தோன்றுமே தோன்றிநின்ற-சிற்பர மதனுளுள்ள செயலுறுத்திட வுதிக்கும்-தற்பரமாகி நிற்றல் சாக்கிராதீதந்தானே"; எனவும் சிவப்பிரகாசம்-உண்மை-௩௦—செ. கூறியவை யிந்த வவத்தையெனவறிக. எனவே யிதுவும் நிட்டையல்லவென்றார்.

நிட்டையாவது, சுத்தா வவத்தைகூடி அருள்தாரகமாகநின்று விசுவம் பொய்யாய்த் தன்னையுஞ் சிவனையுந் தோன்றாமல் ஞேயத்திலே யழுந்துதலாம். இது மேல்வருமாற்றாலறிக.

கேவலமாவது, கண் ணிருளைச்சேட்டித்துக் காட்சியில்லையாய்த் தானொடுங்குவதுஞ் செய்யாமல் வெறுமனே யிருளாய் நி

ன்றாற்போலக் கருவிகளுஞ் சீவியாம லவத்தைக்கும்படாம லாணவ மலமாகிய விருளு மான்மாவுங் கூடிநிற்குமவதரம். உ-ம். "அறிவிலன் மூர்த்தனித்த னராகாதி குணங்களோடுஞ், செறிவிலன் கலாதியோடுஞ் சேர்விலன்செயல்களில்லான்,குறியிலன்கத்தாவல்லன் போகத்துக் கொள்கையில்லான், பிறிவிலன் மலத்தினோடும் வியாபிகேவலத்திலான்மா"—என்பதனு லறிக. சித்-சா—சூ, ௩அ—செ.

சகலமாவது, கலாதிகளுடனே கூடிப் போக போக்கியத்திலே போவதுவருவதாய்ச் சத்தாதி விடயத்தைதே பற்றுவது விடுவதாய்க் கன்மத்துக் கிடான யோனிகளிலே பிறப்ப திறப்பதா யுழலாநிற்கும். உ-ம். "உருவினைக் கொண்டுபோகபோக்கியத் துன்னல்செப்பல், வருசெயல் மருவிச் சத்த மாதியாம் விடயந்தன்னிற், புரிவதுஞ் செய்திங்கெல்லா யோனியும் புக்குழன்று, திரிதருஞ்சகலமான வவத்தையிற் சீவன் சென்றே"—என்பதனுலறிக. சித் - சா—சூ, ௩௯—செ.

சுத்தாவத்தையாவது, கன்மசாம்மியத்தே சத்திநி பாதம் பொருந்திச் சம்பிரதாயம் பெற்று மும்மலங்களும் நீங்கியான்மபோதங்கெட்டுத் திருவருள் தாரகமாதல். இது உபதேசத்தாலறிக. "இருவினைச்செயல்களொப்பி லீசன்றன் சத்திதோயக், குருவருள்பெற்றுஞான யோகத்தைக்குறுகி முன்னர்த், திரிமல மறுத்துப்பண்டைச் சிற்றறி வொழிந்துஞானம் பெருகிநாயகன்றன்பாதம் பெறுவது சுத்தமாமே"—என்பதனுலறிக. ௪0—செ. "நீக்கமில தீதமாசு நிறைந்தகேவலமா நீர்மை, சாக்கிரங்கலாதிசேர்ந்த சகல மாந்தன்மையாகும், நீக்கமி லிரண்டுங்கூடா தொழியவோர் நிலையில் நீடுஞ், சாக்கிர வதீதஞ்சுத்தத் தகைமையதாகுந்தானே"—என்பதனுலு மறிக. சிவப்பிரகாசம் உண்மை - ௯௨—செ. "ஆன்மாவின் வடிவுதானு மநேகா

ர்த்தக்கூட்டமென்னில்" என்பது முதலாக "எங்ஙுந்தான் வி யாபியாய்நின்று" என்பது ஈறுகக்கூறுபடுத்திச் சொல்லும் பொருள்களுமவற்றின் மறுத்துரையும் "அசித்தருவியாபக ம்போல் வியாபகமருவமின்றாய் - வசித்திடவருவியாபி" "மா யையின் வயிற்றின்மன்னி வருஞ்சுகதுக்க" என்பனவற்றாலும தி௧. "சூக்குமதேகியாகித் தூலரூபத்தின்மன்னி" என்பன வற்றாலும் வழிநூலார் நிறுத்தியவாறு காண்க. சித் - சு— சூ, டு-முதல் - க௮-வரை - உ௧ - உஉ - செ. (எ

சிவஞானமுனிவர் உரை.

எ-று. உ-ம். எ-னின். அங்ஙனம் அதீதத்தை யெய்திய புருடன் மீளப் பிரேரக வவத்தையாகிய உணர்த்து முறைமை ச் சாக்கிரத்தைத் தலைப்படுமாறு அநுவாதமுகத்தான் விளக்கி அவ்விடத்தினும் முறைமையிற் செலுத்தும் பிரேரகக் கருவிக ளாந்தின் றொழிற்பாடு பற்றி ஐந்தவத்தை நிகழுமென்பதூஉம் அவை இவையென்பதூஉஞ் சுத்தாவத்தையும் இவைபோலுண் டென்பதூஉங் கூறி அதனை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம். எ-து. இலாடத் தானத்தினீங்கி ஆண்டாண்டவத்தைப்பட்டுக் கீழ்ப் போந்து மூலாதாரத்தினெய்திப்பின் மறித்தும் அவ்வாறே ஆ ண்டாண்டவத்தைப் பட்டு மேற்சென்று இலாடத்தானத்தின் உணர்த்து முறைமைச் சாக்கிரத்தைத் தலைப்பட்ட புருடன்— இலாடத்தே ஐந்து அவத்தை எய்தும். எ-து. ஆண்டுஞ் சா சாக்கிரச் சாக்கிரமுதலிய ஐந்தவத்தையுறும்:—இலாடத்தே அ வ்விந்திரியத்து அத்துறைகள் கண்டு. எ-து. அவையாவன அவ்விலாடத்தானத்தின் கண்ணே அவ்வப்பொறிகளான் அவ் வவ்விடயங்களை யுணர்ந்து—அதுவே. எ-து. அப்போதப்

போதே—அவ்வவற்றின் நீங்கல். எ-து. அவ்வவ்விடயங்களி னீங்குதலாம்.—அது ஆங்கு. எ-து. இனி முன்னர்க் கூறப்படுஞ் சுத்தாவத்தையும் இவைபோல ஐவகைப்படும். எ-று.

மேற்செல்வுழி ஆண்டாண்டுப்படுமவத்தைகளுங் கீழ்ச்செல்வுழிப் போலன்றி விசேடமின்மையின் வகுத்தோதாது இலாடத்தே சாக்கிரத்தை யெய்திப வுள்ளமென அநுவாதமுகத்தாற் கூறியொழிந்தார்.

இழியுங்காலும் ஏறுங்காலுங் கண்டத்தானத்திற் கனுக்காண்டலுண்டென்பது முறையே ஞானாமிர்தத்தினும் போற்றிப்பஃறொடையினுங் காண்க.

அவ்வவ்விந்திரியம் ஆண்டாண்டு விடயித்தற்குரிய இந்திரியம்.

அவ்வவ்விடயம் ஆண்டாண்டுப் புலனாதற்குரிய விடயம்.

கண்டு நீங்கலென விளையும்.

அது அவ்வக்காலம். ஈண்டும் அடுக்கிக் கூறிக்கொள்க.

கண்ணுருபு தொகுத்து ஏகாரம் விரித்தார்.

கண்டதென ஒருமொழியாகவைத் துரைப்பாருமுளர். குற்றியலுகரத்தின்முன் உடம்படுமெய் பெறுதற்கு ஓத்திலாமையானும் பொருட்சிறப்பின்மையானும் அஃதுரையன்மை யறிக.

அப்போதப்போதே நீங்கலாவது விடயங்களைக் கண்ட கண்டபொழுதே அவற்றை அயர்த்துவிடுதல். "ஒன்றன்பாலும் வருபயன் மாறி மாறி வந்திடும்" என வழிநூலாசிரியர் கூறியதும் இவ்வியல்பு நோக்கியென்க. "கரணந்தன்னிற் செயலுறுங் கண்டுகொண்ணீ" "உந்திடுங் கரணந்தன்னிற் செயலுறு முணர்ந்து கொள்ளே" என்பனவுமது. இந்நுட்பமு

ணர்ந்து கோடற்குத் தூலாருந்ததி நியாயம் பற்றிக் கைப்பொருளை விழ்த்தித் தெளிதன்முதலிய தூலத்துள் வைத்துக் காட்டுப. சித்-௨-சூ, ௬௪—செ. "ஒருபுலனுகரு" ௪-சூ, ௩௫.செ. "அறிதருமுதல்வ" ௪—சூ, ௩௬—செ. "உந்திடுங்கரணங்".

இனி அரூபசொரூபியாய் நிற்புழிப்படும் ஐந்தவத்தையி னியல்பு கூறுதற் கெடுத்துக்கொண்ட இவ்வதிகரணத்தின் அதனோடியைபில்லாத சூத்தத்தின்கட்படும் ஐந்தவத்தை கூறுதற்கு ஓரியைபில்லையாயினும் அவத்தையெனப்படுவன ஈண்டோதியன மாத்திரையே போலுமென மயங்காமைப்பொருட்டு வேறு மைந்தவத்தையுள அவை முன்னர்க் கூறப்படுமென்னுந் தணையே கூறுவார் அதுவாங்கு என்றெழுந்தார். இக்கருத்தே பற்றி "பிறிவிலா ஞானத் தோரும் பிறப்பற வருளாலாங்கே—குறியொடு மைந்தவத்தை கூடுவர் வீடுகூட" என்றெழுந்தார் வழிநூலாசிரியரும். சித் - ௪—சூ, ௩௫—செ

இவ்விரண்டு வெண்பாக்களானுங் கூறிப்போந்த முத்திறத்தைந்தவத்தைகட்கு முறையே மூலமாய கேவலஞ் சகலஞ்சுத்தமென்ற மூன்றனுள் வைத்துத் தன்னுண்மையெனப்படுங் கேவலத்தினியல்பு சகசமலத்துணராதென்பதனானே பெற்றாம். ஏனைச் சகலத்தினியல்பு வருகின்ற சூத்திரத்தினுஞ் சுத்தத்தினியல்பு அப்பாலைச் சூத்திரத்தினும் பெறுதும்.

☞ ௪—சூ, மூன்றாமதிகரண முடிந்தது.

☞ நான்காஞ் சூத்திர முடிந்தது.

ரு—சூத்திரம்.

விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தளந் தறியா வாங்கவை போலுந்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே. (ரு)

இச்சூத்திர மென்னுதலிற்றோவெனின்? முன்னர்க்கூறிய வான்மாவுக்குண்டாகிய லக்ஷணம் அறிவிக்கையின்பொருட்டு, (எனவே, கத்தா உபகரிக்கின்ற தன்மையும்) கன்ம மாயேய ந்திரோதாயியென்கின்ற பாசங்களினுடைய உருபங்களுஞ் சாதிக்கின்றது.

இ-ள். விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக் களந் தளந்தறியா. எ-து.	முன் சொல்லப்பட்ட ஆன்மாவாலே மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஞானேந்திரியங்கள் தத்தமக்குள்ள அறிவு களையறிந்து நிற்கச்சே ஆன்மாவை யறியா.
ஆங்கவைபோலும். எ-து.	அவ்விடத் தவைபோலும்.
தாந்த முணர்வின் றமியருள். எ-து.	ஒப்பில்லாத கத்தாவினுடைய வருளாலே ஆன்மாக்களுந் தத்தமக்குண்டாகிய அறிவையறிந்து கத்தாவை அறியாதிருக்கின்ற தன்மைகள். சத்தமக்குள்ளவாவது

ஞானேந்திரியங்கள் சத்தமுதலா யுள்ளவற்றை விஷயீக ரிக்கின்றமாத்திரம். அதுபோல ஆன்மாவு மொருவிடயத் தை யறிகின்றமாத்திரம்.

காந்தங் கண் அருளாலே ஆன்மாக்க ளறிகின்றமுறை ட பசாசத் த மை யெப்படியென்னில்? காந்தமும் அதி வை. எ-து. னுடைய சந்நிதியி லிரும்பும்போலும். எ-று.

ஞானேந்திரியங்கள் விஷயீகரிக்குமிடத்து விஷயீகரிப்பித் தவான்மாவே யறியாது, கத்தாவினுடைய அருளாலே ஆன் மாக்கள் அறிந்தறியாம லிற்குமென்றது, ஆன்மாக்கள் பசுத் துவத்தாலே சரீரத்தை கூட்டுகின்ற முறைமையுங் கன்மத் துக்கிடாகக் கலாதிகளாலே அறிகின்றமுறைமையும், அப்படி யறிந்து போகங்களைக்கூட்டிப் புசித்துநிற்கின்ற முறைமையும், பின்பு சிவத்துவத்தாலே அவையிற்றை நீக்கிச் சத்தைக்கூடு கின்ற முறைமையும், கத்தாவாலொழிந்துண்டாகாதாகையால் ஆன்மா தானறியாதென்றதாம்.

இனி, இந்திரியங்கள் விஷயீகரிக்குமாத்திரமென்றது, ஆன் மா யாதொன்றையும் உறைந்தறியினல்லது, இந்திரியங்க ளொருவிடயங்களையும் விஷயீகரித்தறியா மாத்திரத்தென்ற தாம். உறைந்தறிகையாவது ஆன்மாச் சைதந்நியங்கலையா தி மிக்கபலத்தை யுடைத்தாய் வித்தையாலே தரிசிக்கப்படு வதாம். இப்பொருள் "உயிருடனுணர்வாயி லொளியுரு வாதிபற்றி" சித் - அளவை - கூ—செ. என்பதனாலறிக.

இனிக் காந்தமும் இரும்பும்போலவென்றது காந்த மிரும் பைப்பிரேரிப்பிக்கைச்சே காந்தத்துக்கு விகார மவிகாரங்க ளின்றி யிருந்தாற்போலக் கத்தாவும் ஆன்மாக்களைப் பிரே ரிப்பிக்கைச்சே விகார மவிகாரமற் றிருப்பனென்பதுவுங் கா

ந்தத்தையொழிந் திரும்புபிரேரிப்புண்ணாதார்போலக் கத்தா வையொழிந்து ஆன்மாவுந் தானாகக் காணப்படாதென்பது வுங் கூறியதாம். "பொறிபுலன்கரணமெல்லாம் புருடனாலறி ந்தான்மாவை - யறிதரா" என்றார் வழிநூலார். சித் ,- ௫—௬, ௧—சை.

பொறிகள் ஆன்மாவாலேயறிந்து மான்மாவை யறியாதெ ன்னும் பக்கத்துக்கு, அஃதெத்தாலென்னில் ? சடமாதலாலெ ன்னு மேதுவந்ததுபோல, ஆன்மாவுங் கத்தாவாலே அறிந்து கத்தாவை யறியாதென்னும் பக்கத்துக்கு ஏது, தானாக வொ ன்றை யறியாதென்னு மேதுவும், கத்தாவினுடைய அறிவுக்கு ஆன்மஅறிவுஞ் சடத்தோடொக்குமென்பதுவும் கூறியவா றறிக. "சிவன்சீவனென்றிரண்டுஞ் சித்தொன்றுமென்னில்" என்பதனில் "இது வசித்தென்றிடிலவனுக்கிதுவுமசித்தாமே" எ ன்பதனாலறிக. சித் - ௧௧—௬, ௧0—செ.

காந்தமுமிரும்பும் உண்மைப்பிரமாணம்.

இவையிற்றுக்குப் பிரமாணம்.

சிவஞானமுனிவர் உரை.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. மேலைச்சூத்திரங்க ளின் அங்ஙனங் கூறிப்போந்த உயிரானே மெய் வாய் கண் மூ க்குச் செவியென்பன தத்தம் விடயங்களை இஃதின்னதென் று அளவிட்டறிந்தும் அங்ஙனமறியுந் தம்மையுந் தம்மை யதி ட்டித்து நின்று செலுத்தும் அவ்வுயிரையும் அறியமாட்டா அவ்விந்திரியங்கள்போல் உயிர்களுந் தமதறிவிற்கு வியா சகமாகிய முதல்வனது சிற்சத்தியான் மேற்கூறிப்போந்த இ ருவகை யஞ்சவத்தையினின்று வினைப்பயன்களை யறிந்து அநுப

விக்குந் தம்மையுந் தம்மைச் செலுத்துந் திருவருளையும் அறிய மாட்டா; உயிர்கள் அவ்வாறுணர்தல் காந்தத்தைக்கண்ட இரும்பு அதன் சந்நிதிமாத்திரையின் வலித்துக்கொள்ளப்படுமாறுபோலக் கரணத்தானன்றிச் சங்கற்பத்தான் அதிட்டிக்கு முதல்வன் சந்நிதிமாத்திரையினும் ஆகலான் அதுபற்றி முதலவன் விகாரியாதலின்று. எ - று.

ஆகலான் அதுபற்றி முதல்வன் விகாரியாத லின்றென்பது குறிப்பெச்சம்.

செவியென்பது சொல்லெச்சம்.

ஐம்பொறிகளைக் கூறியது உபலக்கணமாகலின் ஏனைக்கருவிகளும் அவ்வாறுதல் கொள்ளப்படும். அற்றாகலினன்றே "பொறிபுலன் கரணமெல்லாம் புருடனு லறிந்து" என்றார் வழிநூலாசிரியரும். சித்-நு—சூ, க—செ.

விடயங்களை யறிவுழி முதல்வன் உடனின்று செலுத்துவனாயின் அவ்விடயங்களோடொப்ப முதல்வனையும் அறிதல் வேண்டுமென்பாரை நோக்கி, அளந்தறிந்தென் றொழியாது அறியாதென்றார்.

ஆங்கவை ஒருசொன்னீர்மைத்து. தம்முணர்வின் றமியென்றது தமது முதலென்னும் பொருள்பட வந்த ஆறும் வேற்றுமைத்தொகை.

ஈண்டு அருளென்றது ஏற்புழிக்கோடலால் திரோதான சத்தியின்மேனின்றது. அருளாலெனவிரித்து அளந்தறிந் தறியாவென உவமைக்கோதிய வினையைப் பொருளினுங் கூட்டியுரைக்க.

ஐம்பொறியை யாண்டங் கரசா யுளநிற்ப
வைம்பொறிக ளுள்ள மறியாவா - மைம்பொறியிற்
காணுதேற் காணது காணுமுளங் காணுதேற்
காணுகண் கேளா செவி.

இது, இந்திரியங்கள் ஆன்மாவாலொழிந்து விஷயீகரியா தென்பதும், ஆன்மா விந்திரியங்களையொழிந்து ஒருசன்மத்தையு மறிந்து புசியாதென்பதவுங் கூறுகின்றது.

இ - ள். ஐம்பொறியையாண்டங் கரசா யுளநிற்ப வைம்பொறிக ளுள்ள மறியாவாம். எ-து. ஆன்மா வைந்திந்திரியங்களையு மேவல்கொண்டு தான் கத்தாவாய்நிற்க அந்தவிந்திரியங்களைந்தும் நா மேவல்செய்கின்ருேமென்றும், நமக்கு ஆன்மா கத்தாவென்று மறியா.

இதிலேவல்கொண்டுநிற்க வென்றது, ஆன்மா அந்த விடயங்களாய்நின்று போகங்களை புசிக்கவேண்டுகையாலு மிந்திரியங்கள் தன்மாத்திரைகளை விஷயீகரித்தாலொழிந்து ஆன்மாவும் அந்தந்த விடயங்களாய் நின்று கன்மத்துக்கேடான போகங்களைப் புசிக்க இல்லையாதலாலு மென்றதாம். ஏவல் கொள்வானொருவன் அதனுடைய பயன் கொள்வானெனவறிக. "ஆருயிர்யாதொன்முதலின்" என்னும் ஞானமிர்தத்தில் "என்னே பரதந்திரம்" என்றும் "பரதந்திரீயங்களைகழீ பந்தஞ்சித்தென நிர்குமாயின் மற்றதுமுத்திகூடுதல் முடியாது" என்றுங் கூறியவாறுகாண்க.

ஐம்பொறியிற் ஐந்திந்திரியங்களிலேநின் றறியாதாகில்
காணுதேற் கா ஆன்மாவு மொன்றையறியாது.
ணுது. எ-து.

என்றது ஆன்மா ஒருபோகத்தைப் புசிக்குமிடத்துக் கன்மத்துக்கீடாகப் பொருந்தின பொறிகளிலே யொன்றும், பூதங்களிலேந்திலே யொன்றும், மனாதிகணான்கும், கலாதிகளுந்தாங்கூடிப் புசிக்கவேண்டுகையானும், இவையிற்றையொழிந் தொருபொருளையுந் தானாக வறியமாட்டாத தன்மையானுமென வறிக.

காணும்முளங் இப்படியறிகிறவான்மா வறியாதாகிற் க
காணுதேற் கா ண்ணுங்காணுது, செவியுங்கேளாது; நின்ற
ணுகண் கேளா பொறிகளுந் தத்தம்விடயங்களைப் பொருந்
செவி. எ-து. தாது. எ-று.

என்பது ஆன்மா குழந்தைப் பருவமாயிருக்கிற அவதரத்திலும் அவத்தைகளைப் பொருந்தின அவதரத்திலும் ஐம்பொறிகளுஞ் சீவிக்கவில்லையாதலாலென வறிக.

இது ஆன்மா விந்திரியங்களுடனே கூடிநின்று காணுமென்னும் பக்கமு மிந்திரியங்களிலேநின் றறியாதாகில் அறியாதென்னும் விபக்கமுங் கூறியவாறு காண்க.

முன்னர்ச்சூத்திர மிரண்டினுங் கூறியமறுத்துரையெல்லாமிதனுடைய வுட்கிடந்தவாறறிக. அவை "அறிவிச்சைசெயல்களெல்லா" மென்பதனில் "நிகழ்புலன்கரணமெல்லாஞ் - செறிவுற்றங்கறிவுகொள்ள வேணுமோசீவனூர்க்கே". என்பனவற்றாலறிக. சித் - ச—கு, கூ—செ. (க)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். உயிர் அங்ஙன மொற்றுமைப்பட்டு நின்று செலுத்துதலும் அவை உயிரையின்றி யமையாமையும் எற்றாற் பெறுதுமென்பாரை நோக்கி ஏதுவை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். அரசு ஆய். எ-து. அரசன் அத்தாணிமண்டபத்தின்வைகித் தன்கீழ்க் கருமஞ்செய்வாரை அவரவர்க்குரிய காரியங்களிற் செலுத்தி ஆளுமாறுபோல,—உளம் ஐம்பொறியை ஆண்டு அங்கு நிற்ப. எ-து. உயிர் ஐம்பொறிகளை அவ்வவற்றிற்குரிய விடயங்களிற் செலுத்தி யாண்டு இலாடத்தானத்தினிற்றலான்,—ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம். எ-து. அரசனு லேவப்பட்டோர் ஏவிய கருமமாத்திரையி னன்றி அதிகத்திற் செல்லமாட்டாமைபோல அவ்வைம்பொறிகள் உயிரை யறியமாட்டாவாயின. அற்றேல், ஐம்பொறிகள் உயிரானன்றி யறிதல் அமையாதாயினும் உயிர் ஐம்பொறிகளா னன்றியும் அறித லமையும்போலுமெனின்;—ஐம்பொறியில் காணாதேல் காணாது காணும் உளம் காணாதேல் காணா கண் கேளா செவி. எ-து. ஒருகருமஞ் செய்தற்கண் அரசரும் அமைச்சர்முதலாயினாரும் தம்முள் இன்றியமையாத வாறுபோல ஒன்றனை விடயித்தற்கண் உயிரும் ஐம்பொறிகளுந் தம்முள் இன்றியமையா. எ - று.

அன்னவாதல் உயிர் ஐம்பொறியி னீங்கிச் சொப்பனத்தானத்தி னெய்தியவழிக் கண்டுகொள்க.

நிற்பவென்னுஞ் செயவெனெச்சம் மழைபெய்யக் குளநிறைந்தது என்புழிப்போல நிற்றலானெனக் காரணப்பொருட்டா

ய் நின்றது. இவ்வாறுரையாக்கால் இஃதேதுவின் பொருள் வலியுறுப்பதாய உதாரணமாதற்கேலாமை யறிக.

☞ ரு—கு, முதலதிகரண முடிந்தது.

மன்னுசிவன் சந்நிதியில் மற்றுலகஞ் சேட்டித்த
தென்னு மறையி னியல்மறந்தாய் - சொன்னசிவன்
கண்ணு வுளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்கா
ணெண்ணுன் சிவனசத்தை யின்று. (உ)

இது, பிரகிருதிதானே மூலம் புரியட்டகம் விகிருதியென்னு மூன்றாய், அதுதான் தூலஞ் சூக்கம் பரம் ,என்று சொல்லப்பட்டு சுத்தனாயிருந்துள்ள புருடனுடைய சந்நிதியிலே சேட்டைப்பட்டு யோனிபலவாய் விரிந்தொடுங்குகின்றதொழிந்து ஆன்மாவென்றுங் கன்மமென்றுமுண்டோ வென்போர்க்கு மறுத்து, ஆன்மா தன்னாலே விஷயீகரிக்கின்ற விந்திரியங்கள் ஆன்மாவாலே யறிகின்றேமென்பதனை யறியாதுபோலத் தானு மிப்படிக் கத்தாவால் அறிகின்றதன்னை யறியாதென்னுமிடமும், கத்தாவே யான்மாவுக்கு உபகரிக்கவேணுமென்பதுவுங் கூறுகின்றது.

இ-ள். மன்னுசிவன் சந்நிதியில் மற்றுலகஞ் சேட்டித்த தென்னு மறையி னியல் மறந்தாய். எ-று. நிலைபெற்ற சிவனுடைய சந்நிதியிலே பிரபஞ்சஞ் சேட்டைப்பட்டு வருகின்றதென்று வேதஞ்சொல்லுமென்னு மிலக்கணமு மறந்தாய்.

என்றது வேதத்தை யொருவனறிந்து அறிவிக்க அவன் கண்ணாக வொருவன் அறியவேணுமென்ற வுரையு மறந்தாயென்பதாம். அது, ஆன்மாவுமில்லை கன்மமுமில்லை பிரகிருதிமூன்றுவிதமாய்ப் புருடன்சந்நிதியில் சேட்டைப்படுமென்றாய்? அதுதானே சேட்டைப்படாது. ஆன்மாக்கள்செய்த கன்மத்துக்கீடாகச் சேட்டைப்படுத்தவேண்டும்; ஆதலால், வினையுங் கத்தாவு முண்டென்றதாம். கத்தாவே யான்மாக்களுக்கு அறிவிப்பனுகில் எல்லார்க்கும் அறிவு ஒரு தன்மையா யிருக்கவேணும், அன்றியும் கன்மங்களி லேற்றக்குறைதலுண்டாகில் அக்கன்மந்தானே யூட்டும், கத்தா வேண்டாமென்னையாகில்?

சொன்ன சிவன்கண்ணு வுளம் வினையாற் கண்டறிந்து நிற்குங் காண். எ-து. ஆன்மாக்கள் செய்தகன்மங்களையறிந் தறிவித்து நிற்பனென்று சொன்ன கத்தாவைக் காட்டாகக்கொண்டு ஆன்மாக்கள் தத்தம் வினைக்கீடாக வொருவிடயத்தைக் கண்டறிந்து நிற்கும் விசாரித்துப்பார்.

என்றது ஆதித்தன் சந்நிதியில் எல்லாமலரு மொக்கமலராதுபோல எல்லார்க்கும் அறிவொவ்வாதென்றும், பூமியி லிட்டவித்தொழிய வேறொருமுளை முளையாதாற்போலச் செய்த கன்மமொழிந்து பலியாதென்றும்; ஆன்மா வறிவிக்க வறிகையானும், அறிந்தவற்றை மறத்தலானும், அறிகின்றதன்னை யறியாமையானும், தானுகவொன்றை யறியாமையானும், அறியுமிடத்துங் கருவியும்பொருளுங் காட்டுமுதலிய வேண்டுமென்றுங் கூறியதாம். இப்பொருள் "இறைவனேயறிவிப்பானேல்" "அறிந்திடுமான்மாவொன்றை யொன்றிலறிதலானும்" "கருவியாற்பொருளாற் காட்டாற்காலத்தால" என்றார் வழிநூலார். சித் - டு—கு, உ - ௩ - ௪—செ.

என்ஞன் சி (உலகமெல்லாந் தனக்குருவமாக எண்பத்
வனசத்தை யி துநான்குநூறாயிரம் யோனிபேதங்களும் த
யின்று. எ-து. னக் கவயவங்களாகவு மிச்சாஞானக்கிரியை
களுட் கரணமாகவும்நின்று, கத்தா அளவி
றந்த ஆன்மாக்களுக்கும் அறிவைக்கொடுத்துச் சேட்டிப்பித்தா
ஞயினும் இவையிற்றை ஒன்ருக விசாரியா விப்பொழுது. எ-று.

எனவே காரணுகாரணஞகி நிற்பனென்றதாம். "நாரமேய நல்லுயிரனைத்து நாரமனமின்றினநற் - காரச்செய்தியுமன்றே—நாரமாருயிர்க்கல்லதுபி ரதற் குதவுபேருபகாரமுமின்றே" என்னும் ஞானமிர்தத்தினுமறிக. என்றது பிரபஞ்ச மிவன்கண்ணுக்குத் தோன்முதென்பதுவும், அது ஜடமாகையாலே சிற்சொருபத்தி னில்லாதென்றுஞ் சொல்லியதாம். "உலகமேயுருவமாக யோனிகளுறுப்பதாக". "இறைவன்றன்சந்நிதிக்கண் ணுலகின்றன்சேட்டை" என்ருர் வழிநூலார். சித்-டு—௫, எ - கூ—செ.

ஆன்மா கத்தாவாலே இந்திரியங்களிடமாக நின்று காணுமென்னும் பக்கமும், அஃதெத்தாலென்னில் விணைக்கிடாக வென்னு மேதுவும் வந்தவாறுகாண்க. (௨)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். தன்னுலுணரும் இந்திரியங்களை ஈண்டைக்கு உவமை கூறின அவ்விந்திரியங்கட்கு வரும்பயன் அவற்றினு லொர்றித்துக்காணும் உயிர்க்காயவாறுபோல உயிர்க்குவரும் இன்ப துன்பப்பயனும் உயிராஞெற்றித்துக்காணும் முதல்வனுக் காதல்வேண்டுமென்பாரை நோக்கி அங்ஙனமாகாமை கூறி அதனை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். மன்னு சிவன் சந்நிதியின் மற்று உலகம் சேட்டித்தது என்னும் மறையின் இயல் மறந்தாய். எ-து. ஈண்டுக் கூறிய கருதலளவையேயன்றி நிலைபெற்ற முதல்வனது சந்நிதியிற் பிரபஞ்சஞ் செயப்படுகின்றதென்றோதும் வேதப்பொருளையும் அறியாது பிணங்குகின்ற பேதாய்—உளம் சொன்ன சிவன் கண்ணு வினையால் கண்டு அறிந்து நிற்கும் காண். எ-து. உயிராவது தமக்கெனவோர் காரணமின்றித் தன்பொருட்டே அறிவனவாய அவ்விந்திரியங்கள்போலன்றி அவ்வேதத்துள் எடுத்தோதப்படும் முதல்வன் தனக்குக் காட்டாகி நிற்பத் தான்செய்த வினைக்கீடாக ஒன்றனையறிந்து நிற்கும்; இவ்வேறுபாடு அறிவாயாக.—இன்று ஆகலாற் சிவன் அசத்தை எண்ணான். எ-து. அங்ஙனங் காட்டாகி நிற்பினுந் தனது சந்நிதியின் அசத்தெல்லாஞ் சூனியமாகலான் மங்கலவடிவினனாய முதல்வன் அவ்வுயிர்போல் அவற்றை அநுபவியான். எ - று.

இதனுட் சிவனென்றது மன்னுசிவனென்புழிப் பேரின்பத்துக்குக் காரணமென்னும் பொருட்டாய்த் தனது சந்நிதிக்கண் உலகத்தைச் சேட்டிப்பித்தற்குரிய இயைபுணர நின்றது; சொன்னசிவனென்புழி முற்றுணர்வினெனன்னும் பொருட்டாய்க் காட்டாதற்குரிய அவை புணரநின்றது; எண்ணான் சிவனென்புழித் தூயதன்மையனென்னும்பொருட்டாய் அசத்தை யெண்ணாமைக்குரிய இயைபுணர நின்றது. ஆகலாற் கூறியது கூறலன்மையுணர்க. அஃது அம்முப்பொருளுடைத்தென்பது சோமசம்பு பத்ததி வியாக்கியாந முதலியவற்றுட் காண்க. சிவதத்துவ விவேகத்துள் மூவகைப்படுத்தோதிய பொருளும் இவையேயாமாறு கண்டுகொள்க.

ஈண்டு உலகமென்றது உயிர்களை.

மறையினியலும் பொருளை மறையினியலென் றுபசரித்தார்.

இரந்தது தழீஇய வெச்சவும்மை விகாரத்தாற் றொக்கது.

மறந்தாயென்பது விளியுருபேற்ற பெயர்.

ஈண்டுச் சந்நிதியென்றது அவிகாரவாதிகள் கூறும் அபிமுக மாத்திரையன்றென்பார் சொன்னசிவன் கண்ணுவென்றார். சிவசத்தி அவ்வக்காரியங்களின் உன்முகமாதலாகிய சங்கற்பமே ஈண்டுச் சந்நிதியெனப் படுமென்பதாம்.

காந்தங்கண்ட பசாசத்தவையேயென்றது ஒருபுடையுவமையாதல் பற்றியே பிறிதன்றென்பது கருத்து.

வினையாலென்றது ஐம்பொறிபோலன்றி உணர்தற் பயன் உயிர்க்கேயாதற்கேதுக் காட்டியவாறு.

கண்டறிதல் ஒருபொருட் பன்மொழி.

எண்ணல் ஈண்டநுபவித்தன் மேற்று.

இன்றென்பது சாதியொருமை.

அவனெதிர் என்பது அவாய்நிலையாய் வந்தது.

ஆகலானென்பது சொல்லெச்சம். இன்றுதல் 'யானையுஞ் சூனியஞ் சத்தெதிர்' எனபுழிப் பெறப்படும். இக்கருத்தே பற்றி "மாயை மருவிடான் சிவனவன்க—ணுறைதரா தசேதனத்தால்" என்றார் வழிநூலாசிரியரும். "உன்னுகரத்தேகிடந்தீட முறுவதெல்லா—முன்னுடையதென்னுயிர் யுற்றனையோ—மன்னுயிர்க—ளவ்வகையே காணிங் கழிவதவு மாவதுவுஞ்—செவ்வகையே நின்றசிவன் பால்'; என்றதும் இவ்வியல்பு நோக்கி. சித்-௫—௬, ௬—செ. 'இறைவன்றன்.' திருக்களிற்றுப்படியார்—அ௭.

வெய்யோ னொளியி லொடுங்கி விளங்காது

வெய்யோனை யாகாத மீன்போல - வெய்யோனிற்

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனைக்
கண்டடனுய் மன்னுதலைக் காண்.

இது, கத்தா பிரபஞ்சமெல்லாம் வேறற நிற்கின்ற முறைமையும், ஆன்மாக்கள் திரோதத்தாலே மறைப்புண்டு கேடின்றி நிற்கின்றமுறைமையும், திரோதமும் அருளென்னு முறைமையுங் கூறுகின்றது.

இ-ள். வெய்யோனொளியிலொடுங்கி விளங்காது வெய்யோனையாகாத மீன்போல. எ-து. ஆதித்தனுடைய பிரகாசத்திலே மழுங்கித் தன்னுடைய பிரகாசந் தோன்றாமல் அந்த வாதித்தனல்லவாகிநிற்கின்ற நக்ஷத்திரங்கள் பலவாறுற்போல.

ஆன்மாக்கள் பலவென்பதும், ஆதித்தனைப்போலக் கத்தா ஒருவனென்பதுவுங் கூறினார்.

வெய்யோனில். எ-து. ஆன்மாக்கள் முத்திபெறவேணு மென்னும் விருப்பத்தையுடைய கத்தாவினுடைய திரோதத்தாலே.

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனைக் கண்டு. எ-து. கண்டுங் கேட்டு முண்டுமுயிர்த்து முற்று மறிகின்ற ஐந்துவிடயங்களா லுண்டாகப்பட்ட போகங்களைப் புசித்தறிகின்றே மென்னு முறைமையும் விசாரித்து.

உடனுய் மன்னுதலைக் காண். எ-து. அப்படிக் காட்டுமாயை மறைப்புமாய் வருகின்ற கத்தாவினுடனே பொருந்துபட்டு நிலைபெற்று வருதலை விசாரித்துப்பார். எ-று.

கன்மவொப்புக்களுக் குட்டாய்ச் சாக்கிரத்தானத்திலே பொருந்துதலைப் பார் என்பாருமுளர்.

எனவே, ஆதித்தப்பிரகாசநீங்க நக்ஷத்திரம் பிரகாசிக்குமா போலத் திரோதநீங்க ஆன்மாவினுடைய சொரூபம்பிரகாசிக் குமென்றதாம். அது கன்மம் புசித்தறுமளவு மறைப்புண்டாம், கன்ம சமத்துவம்பிறந்து திருவருளே நின்றொழிந்து பிரகாசமாகாது, என்பதுவும் கூறியவாறறிக. எனவே, கத்தா ஆன்மாவையுந் தேகத்தையுங்கூட்டிப் பிரித்துக் கன்மம்புசிப்பித்து முத்தியைக்கொடுப்பனென்பதாயிற்று. "தெரிந்து கொண்டொரோவொன்ருக" என்ருர் வழிநூலார். சித்-டு-கு, அ-செ.

ஆன்மா திரோதத்தாலே யிந்திரியங்களிலே நின்று கன்மத்தைப்புசித்து சமத்துவம்பிறந்து சம்பிரதாயம்பெற்ருல்தற்சொரூபம் பிரகாசிக்குமென்னும்பக்கத்துக்கு நக்ஷத்திரமு மாதித்தனுஞ்சபக்கமாயினவாறு காண்க. (௩)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். உயிர் அங்ஙனமுணர்த்த வுணருங்கால் முதல்வனின் வேறுநின்றுணருமோ ஒன்ருய் நின்றே யுணருமோ வென்பாரை நோக்கி, அவ்விரண்டியல்பு மின்றி நின்றுணருமாறுணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். வெய்யோன் ஒளியில் ஒடுங்கி. எ-து. ஞாயிற்றினொளியினடங்கி—விளங்காது. எ-து. அதனின் வேருய் விளங்கித் தோன்றுதலின்றி—வெய்யோனை ஆகாத மீன்போல எ-து. அறுவா யொழிதலுமில்லாத நாண்மீன்கள் அஞ்ஞாயிற்ருனே ஒளியுடையவா மாறுபோல,—கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனை மெய் அவனில் கண்டு. எ-து

கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் தீண்டியும் அறியப்படு ம் ஐவகை விடயங்களையும் உயிர் மெய்ப்பொருளாகிய முதல்வனால் உணர்ந்து—உடனாய் மன்னுதலைக் காண்: எ-து. வேறாதலும் ஒன்றாதலு மின்றி அவ்விரண்டற்கும் பொதுவாய் அடங்கி உடனாய் நிலைபெறுதலை அறிவாயாக. எ-று.

உவமை யடை பொருளினும், பொருள்வினை உவமையினுஞ் சென்றியையும்.

ஐ சாரியை.

நாண்மீன் முதலியவற்றின் ஒளியெல்லாம் ஞாயிற்றினுடைய ஒளியேயென்பது வேதநூற்றுணிபாகலான் அஃதீண்டைக் குவமையாயிற்று.

உயிரென்னும் எழுவாய் மேலைவெண்பாவினின்றும் வருவித்துரைக்கப்பட்டது.

அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே
யருளு மவனன்றி யில்லை - யருளின்
றவனன்றே யில்லையருட்கண்ணார் கண்ணுக்
கிரவிபோ னிற்பனு மேய்ந்து. (௪)

இது, கத்தா பெத்தமுத்தி யிரண்டினு முபகரிக்கின்ற முறைமையும், திரோதந்தானே அருளாமென்பதுவுங் கூறுகின்றது.

இ-ள். அருளுண்டா மீசற்கு. எ-து.	கத்தாவுக்குத் திரோதசத்திபாலே மறைத்துக் கன்மங்களைப் புசிப்பிக்கின்ற தொழிந்து ஒருகாலத்து மநுக்கிரக மில்லையோ வென்னில்? அநுக்கிரக முண்டாம் கன்ம சமத்துவத்தே.

அருசத்தி. திரோதசத்தியென்றும் அருட்சத்தியென்
எ-து. று மிரண்டோவென்னில்? அப்படி மறைத்
து மலபக்குவஞ்செய்த திரோதசத்திதா
னே யந்த அருட்சத்தியாம்.

அன்றே.எ-து. அந்தவருட்சத்தி கர்த்தாவுக் கொன்றுண்
டானதென்னில்? கர்த்தா வென்றுள்ளான்
அன்றேயுள்ளது.

அருளுண் அநாதியிலே அருளுண்டாகிய
டாமீசற்க கர்த்தாவுக்கு அந்தத் திரோதசத்
துச்சத்திய திதானே யருட்சத்தி யென்பா
ன்றே.எ-து. ருமுளர்.

அருளு மவன சர்த்தாவு மருளு மிரண்டோ? அந்த அரு
ன்றியில்லை.எ-து. ட்சத்தியுங் கர்த்தாவையொழிந்து வேறாய்
நிற்றலில்லை.

அருளின் றவ கர்த்தாவு மநாதியிலே அருளையொழிந்து
னன்றே யில்லை. வேறாய் நிற்றலில்லை.
எ-து.

என்றது, சத்தியுஞ் சிவனில்லையாகிலில்லை; சிவனுஞ் சத்தியி
ல்லையாகிலில்லை யென்றதாம். அது நெருப்பு வெம்மையின்றி
யில்லை, வெம்மை நெருப்பின்றி யில்லை யென்றாற்போலக் கொ
ள்க. அஃதெப்படியென்னில்?

இரவிபோ னி ஆதித்தனும் பிரகாசமுந் தன்னிலேபே
ற்பனு மேய்ந் வித்து நின்றாற்போலக் கர்த்தாவுஞ் சத்
து. எ-து. தியுடனேபொருந்தி நீக்கமறநிற்பன். அது
காணுமா றெங்ஙனேயென்னில்?

அருட்கண்ணா ர் கண்ணுக்கிர விபோ னிற்பன். எ-து.

திரோதநீங்கியருளைத் தமக்குத் தாரகமாகப்பெற்றவர்கள் காட்சிக்கு ஆதித்தன் றன்னுடைய பிரகாசத்தாலே யிருளையோட்டிக் காட்சியையுடைய கண்ணுக்குத் தானுந் தோன்றிநின்றாற்போல; தன்னுடைய சத்தியாலே சஞ்சிதகன்மத்தையும்போக்கி மேலு மாகாமியமாய் வரும்வினையும் வாராமற் காத்துத் தன்னையுந் தரிசிப்பிப்பன் எ-று.

அஃதெப்படியென்னில்? ஆன்மாக்க ளொருதேகங்களிலே பொருந்துதலும் போகபோக்கியம் புசித்தலும் கன்மத்துக்கீடாகவொழிந் தில்லையாதலானும், கன்மந்தான் வயிந்தவமென்று சொல்லப்பட்ட நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தியாதீதம் என்னும் அத்துவாவிலேயொழிந்து கிடையில்லையாதலானும், விந்துச்சொரூபமாயிருந்துள்ள மகாமாயையையொழிந்து மாயையிலுண்டாகிய தநு கரண புவன போகங்கள் சீவியாதாகையானும், அந்த மகாமாயைதான் அவையிற்றையொழிந்து சீவியாதாகையானும், சஞ்சித கன்மங் கலாசோதனையி லொழிந்துபோகாதாகையானும், கன்மத்துக்கீடான போகங்களைப் புசிக்குமவதரந் திரோதாயியையொழிந்து புசியாதாகையானும், அது நீங்கினவிடத் தருளாய் நிற்கையானு மிவ்வாறு கூறியவாறறிக.

திரோதம் அருட்சத்தியா மென்பது சம்பிரதாயதிட்டியாலறிக.

அருள்பிரகாசித்தாற் சிவன் றன்னைத் தரிசிப்பனென்னும் பக்கத்துக்கு ஆதித்தனும் பிரகாசமுஞ் சபக்கமாயினவாறுகாண்க. "அருளது சத்தியாகு மரன்றனக்கருளையின்றி" என்றார் வழிநூலார். சித் - ௫—௬, ௯—௪. (௯)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அங்ஙனமாயினும் உயிர்கட்குப் பலவேறுவகைப்பட உணர்வு நிகழ்தலின் அஃதுணர்த்தல் வேறுபாட்டானாயதெனல்வேண்டும், வேண்டவே, நிருவிகாரியென்னுஞ் சுருதியோடு முரணி முதல்வன் விகாரியாவான் செல்லுமென்பாரை நோக்கி: விகாரியாகாமையுணர்த்தி, அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். அருள் ஈசற்கு அன்றே உண்டாம். எ-து. உயிர்கட்குப் பசுத்துவத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதற்கணுளதாகிய இரக்கம் முதல்வனுக்கு அநாதியேயுள்ளது.—அது சத்தி. எ-து. அவ்விரக்கம் வேறுபொருளன்று, முதல்வனுக்குளதாகிய சத்தியேயாம்;—அருளும் அவனன்றி இல்லை அருளின்று அவன் அன்றே இல்லை. எ-து. இரக்கமும் அவனும் குணமுங் குணியுமாகலின் அவ்வருளு முதல்வனையின்றி யமையாது, முதல்வனும் அதனையின்றி யமையானாய்;—அருட்கண்ணார் கண்ணுக்கு இரவிபோல் ஏய்ந்து நிற்கும் அரன். எ-து. ஞானக்கண்ணுடையா ருணர்விற்கு ஞாயிறு தன்னொளியோடு தாதான்மியமா யியைந்து நிற்குமாறுபோல் அவ்வருளோடு தாதான்மியமா யியைந்து நிற்பன் முதல்வன்; ஆகலாற் றன்வயத்தனாகிய அம்முதல்வன் விகாரமின்றி நின்றே தனது சத்தி சங்கற்பமாத்திரையான் அனைத்துஞ் செய்தல் கூடும். எ-று.

ஆகலாற் றன்வயத்தனாகிய அம்முதல்வன் விகாரமின்றி நின்றே தனது சத்தி சங்கற்பமாத்திரையான் அனைத்துஞ் செய்தல் கூடுமென்பது குறிப்பெச்சம்.

உம்மை எதிரது தழீஇயது.

இன்றியென்னும் வினையெச்சக் குறிப்பிலிகரஞ் செய்யுளாக லின் உகரமாய்த் திரிந்தது.

அன்றே அசை.

இவ்வியல்பு சித்தாந்த நெறியுணர்ந்தார்க்கன்றி விளங்கா தென்பார் அருட்கண்ணார் கண்ணுக்கென்றார்.

சத்தியதுண்மையும் அதனியல்பும் 'நீக்கமின்றி நிற்குமன்றே' என்பதனுள் வகுத்துரைத்தமையின் ஆண்டுக் காண்க.

☞ ௫—௬, இரண்டாமதிகரண முடிந்தது.

☞ ஐந்தாஞ்சூத்திர முடிந்தது.

சூ—சூத்திரம்.

உணருரு வசத்தெனி னுணரா தின்மையி
னிருதிற னல்லது சிவசத் தாமென
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே.

இச்சூத்திர மென்னுதலிற்றோவெனின்? சத்தாகிய சிவனுடைய உண்மையும், அசத்தாகிய பிரபஞ்சத்தினுடைய உண்மையும், கூறுபாடுசெய் தறிவித்தலைக் கருதிற்று.

இ-ள். உணருருவசத் தெனின். எ-து.	அறியப்பட்டவையெல்லாஞ் சத்தல்லவென்கையினால்.
உணரா தின்மையின். எ-து.	அறியப்படாத தில்லையாதலான்.
இருதிற னல்லது சிவ சத் தாமென. எ-து.	இந்த விரண்டு கூறுபாடு மில்லாதது சத்தாகிய சிவமென்று.
இரண்டு வகையி னிசைக்கு மன்னுலகே. எ-து.	இந்த விரண்டு கூறுப்பாட்டாலும் நிலைபெற்றவுலகஞ் சொல்லும். எ-று.

உலகம் என்றது உலகத்துள்ளோரொன விடமு மிடத்துநிகழ்பொருளுமாம்.

“உலகமென்ப துயர்ந்தோர் மாட்டே” எனவே கற்றுயர்ந்தோராம்.

அறிவினு விதுவென் றறியப்பட்டவையெல்லாம் பொய்யென்றதென்னெனில்? அவை தோன்றி நின்றிறுதலையுண்டாதலால்.

அறியப்படாதில்லையாமென்றதென்னையெனின்? ஆமைமயிர்க்கயிறும் ஆகாயப்பூவு முயற்கோடும்போலு மாதலால். "அறிவுறும்பொருளோவீச னறிவுருகவனேவென்னில்" "ஆவதாடழிவதாகி வருதலால்" "உணராதபொருள்சத்தென்னி னொருபயனில்லை." என்றார் வழிநூலார். சித் - சூ—ரு, க - உ - ௩—செ.

இவற்றிற்குப் பிரமாணம்.

சிவஞானமுனிவர் உரை.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. தம்முணர்வின் றமியாகிய முதற்பொருள் அளவைகளானறியப்படும் இயல்பிற்றெனின், அங்ஙனமறியப்படும் பிரபஞ்சம்போல் அழிபொருளாகிய அசத்தாம்; எவ்வாற்றானும் அறியப்படாத இயல்பிற்றெனின், அங்ஙனமறியப்படாத முயற்கோடுபோலச் சூனியப்பொருளாம்: ஆகலான் இவ்விரு பகுதியுமன்றி ஒருவாற்றா னறியப்படாமையும் ஒருவாற்றானறியப்படுதலுமாகிய இரண்டுவகையானுஞ் சிவசத்தாமெனக் கூறுவர் மெய்யுணர்வி னிலைபெற்றுயர்ந்தோர். எ - று.

உணருருவெனி னசத்தென மாறுக. எனினென்பது முன்னருஞ் சென்றியைந்தது.

முற்றும்மைகள் தொக்கன.

அல்லதென்பது வினையெச்சக்குறிப்புமுற்று. அன்றியாமெனை இயையும்.

ஒருவாற்றானறியப்படாமை பாசஞான பசுஞானங்களான் அறியப்படாமை. ஒருவாற்றானறியப்படுதல் சிவஞானமொன்றானே அறியப்படுதல். பாசஞான பசுஞானங்களான் அறியப்படாமையிற் சிவமாதலும், பதிஞானத்தால் அறியப்படுதலிற் சத்தாதலும் பெறப்படுமென்பார்; இரண்டுவகையிற் சிவசத்தாமென விசைக்குமென்றார். சிவசத்தென்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன்முடிபு. சடமாகிய சத்தினீக்குதற்குச் சிவசத்தென்றார். சிவசத்தென்பது சித்துச் சத்தென்னும் பொருட்டு.

எழுவாய் மேலைச்சூத்திரத்தினின்றும் வருவித்துரைக்கப்பட்டது.

இருதிறனு மன்றி இரண்டுவகையானுஞ் சித்தாதலுஞ் சத்தாதலு முடையனாய் நிற்றல் முதல்வனுக் கிலக்கணமென இலக்கணமும் இதனுட் போந்தவாறுணர்க.

முதல்வனுக்குப் பொதுவியல்பு மேற் புணருற்பவ முணர்த்து முகத்தாற் கூறிப் போந்தமையின் இது சொருபலக்கணமெனப்படுஞ் சிறப்பிலக்கணமெனக் கொள்க. அற்றாகலினன்றே இதனை இலக்கணவோத்துண் முதற்கட்கூறாது உண்மையைச் சாரவைத்து இறுதிக்கட்கூறியதூஉமென்க. இன்னும் முதல்வனுக்குளவாகிய சிறப்பியல்புக் குணங்களெல்லாம் இவ்விரண்டனுளடங்கும். அஃதறிந்தடக்கிக்கொள்க. *"தன்னாலே தனையறிந்தாற் றன்னையுந் தானே காணும்" எ-ம். †"உன்னரிய திருவருளை யொழியமல முளதென் றுணர்வரிதா மதனுண்மை தெரிவரிதா முனக்கே" எ-ம். ‡"மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை—யாயவா றுயிரின் மேவு மருளொளி யொளியாய் நிற்கும்" எ-ம். ஓதியவாற்றால் ஏனைப்பசுபாசங்களுஞ் சிறப்பியல்பு பற்றியுணர்தல் சிவஞானத்தானன்றி அமையாதாயினும் ¶"தீபமெனத் தெரிதாங்—

கொருவி யான்மாவி னுண்மை யுணர்ந்தவர் தமையுணர்ந்தோர்,—தருமிது பசுஞானம்" எ-ம். § "இவைகீழ் நாடலாலே—காதலி னொன்பிரம மென்னு ஞானங் கருதுப்சு ஞானம்" எ-ம். பொதுவியல்புபற்றி யோதுதலானும் யானிதனை யறிந்தேன் அறிகின்றிலேனென் றறியும் பாசவுணர்விற்கு அவற்றது பொதுவியல்பு விடயமாதல் கண்கூடாகப் பெறப்படுதலானும், அவை ஒருவாற்றா னுணருருவாதலு முடைமையிற் சிவசத்தாவான் செல்லாமை யறிக, சற்காரிய வாதங் கூறுஞ் சைவசித்தாந்தத்தில் அசத்தென்பது சத்துக்கு மறுதலையன்மையான் அப்பசுபாசங்கள் அங்ஙனமறிப்படும் பொதுவியல்பு பற்றி அசத்தெனப்படுமாயினுஞ் சிறப்பியல்பு பற்றி அசத்தாதல் செல்லாமையிற் சிறப்பியல்பு நோக்கும்வழி அவை சத்தாதற் கிழுக்கின்மையு மறிக. இங்ஙனஞ் செவ்வனே யிறுக்க அறியாதார் அபாவத்தி னியல்பாவது பாவத்திற்கு மறுதலைப் பொருள்போலுமென நையாயிகர் முதலியோர் மதம்பற்றி மயங்கி எல்லாப்பொருளுஞ் சத்தென்னுஞ் சித்தாந்தத்தோடு முரணுமைப்பொருட்டு ஈண்டுச் சத்து அசத்தெனப்பட்டனவும் சித்து அசித்தென்னும் பொருளவாமெனவும், சுத்தம் அசுத்தமென்னும் பொருளவாமெனவும், உரைத்திடர்ப்படுவர். காரியப்பிரபஞ்சம் ஏனைப்பசுபாசங்கள்போலன்றி இருவகையியல்பானுங் காட்சிப்புலனாய் இத்துணைப்பொழுது நிற்குமென நம்மனோரால் அறியவாராது நிலைபெறுவதுபோலத் தோன்றி விரையக் கெட்டு மறைந்துபோதற் சிறப்புடைமைபற்றி அதுவே ஈண்டு உணருருவசத்தென் றெடுத்துக் கொள்ளப்பட்டது. அசத்தெனவே அசித்தென்பதுந் தானே போதரும்.

* சிவப்பிரகாசம், உண்மை. ௨௨. தன்னறிவதனு.
† „ பொது. ௨௪. அன்னியமானவை.
‡ „ உண்மை. ௭. மாயைமாமாயை.
¶ சிவஞானசித்தி, நான்காஞ்சூத்திரம். ௨. கருவியாமனமு.
§ „ ஒன்பதாஞ்சூத்திரம், ௨. வேதசாத்திர.

அசத்தறியாய் கேணீ யறிவறிந்த தெல்லா
மசத்தாதல் மெய்கண்டா ஞயி-லசத்தலாய்
நீரி லெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரு
மோரிலிவை யின்றாமா றொப்பு. (க)

இது, தன்னைச் சிவமாகிய சத்தென்று பொருந்தியிருப்போர்க் கல்லவென்பது கூறுகின்றது.

இ-ள். அசத்தறியாய் — பொய்யைப் பொய்யென்று அறியாதவனே நீ கேளாய்.
கேணீ.
எ-து.

அறிவறிந்த தெல்லா மசத் — அறிவினு லிதுவென் றறியப்பட்டவையெல்லாம் பொய்யாம்.
து. எ-து.

ஆதல் மெய்கண்டா ஞயில். — அப்படி பொய்யாதலை உண்மையைத் தரிசித்தவ ஞராய்ந்துபார்க்கில்.
எ-து.

அசத்தலாய். — அந்தப் பொய் யல்லாதவனே!
எ-து.

இன்றாமா றொப்பு. எ-து. — அஃது இல்லையாகு முறைமைக் குவமை.

நீரி லெழுத்து. எ-து. — நீரின்க ணெழுது மெழுத் தெழுதிய வழியே யழியுமாறும்.

நிகழ் கனவும். எ-து. — மெய்யென்னும்படி கையும் மெய்யுந் தீண்டிக் கலந்த கனவில்செய்தி விழித்த கா

லத் தில்லையானவாறும்.

பேய்த்தேரும். எ-து. கானல் நீரொன்று பார்த்துப் பின்பு நிருபித்தவிடத்து நீரில்லையாய்க் கானலான வாறும்.

ஓரில். எ-து. விசாரிக்கில். எ-று.

அசத்தறியாய் என்றும் அசத்தலாயென்று மிரண்டாகிய தென்னையெனின்? அசத்துடனே கூடிநின்றும் அதனை யறியா தவனேயென்று அறியாமைக்கும், அந்த அசத்தாய்நின்றாலும் அந்தஅசத்தி லொன்றல்லை அசத்தையறிகின்றவனீ என்பதுந் தோன்றக்கூறிரு ரென்றுகொள்க. எனவே யுபதேசத்தாலொழிந் தன்னையு முனக்கு வேறாகிய தேகத்தையும் அறியாயென் றதாம். அஃதெப்படியெனில்? அறிவுக் கறிவாயிருப்பதொன் றுக்கு அறியவேண்டுவதொன் றில்லையாதலானும், அறியவல்ல வா யிருப்பதொன்றுக்கு அறிவில்லையாதலானும், அந்தவத்து வாக்குமனத்துக்கு மெட்டாமலிருப்பதொரு ஞானசொரூபி யாகையானும், உனக்குண்டாகிய வுண்மை ஞானவுபதேசத்தா லொழிந்து பிரகாசியாது; பிரகாசித்தால் அசத்துமல்லவாகி அசத்தையறிபவனுமாவை யென்பதாயிற்று.

விசுவம் பொய்யென்னும்பக்கத்துக்கு நீரிலெழுத்தும் கனவும் பேய்த்தேரும் சபக்கமாயினவாறுகாண்க. "மண்டனில்வாழ்வும் வானத் தரசயன்மாலார்வாழ்வும்" என்றார்வழிநூலார். சித் - ௬—௬, ௩—செ. (௧)

சிவஞானமுனிவர் உரை.

அசத்தறியாய் கேணீ யறிவறிந்த வெல்லா
மசத்தாகு மெய்கண்டா னுபின்—

எ-து. உ-ம். எ-னின். ஒருசாரான் அங்ஙனமாயினும் உபலத்திப்பட்டன வெல்லாம் அவ்வாறு அசத்தாமென்றற்குப் பிரமாணமென்னையென்னு நையாயிகரை நோக்கி ஏதுவை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். அசத்து அறியாய் நீ கேள். எ-து. அசத்தினியல்பை யறியாத மடவோனே யாமிறுக்கு மிறையை நீ மனம்பற்றிக் கேட்பாயாக—மெய் கண்டான் ஆயின் அறிவு அறிந்த எல்லாம் அசத்து ஆகும். எ-து. சத்தினியல்பை யறிந்தோன் ஆராய்ந்தானாயின் அறிவினாலறியப்பட்டனவெல்லாம் அசத்தேயாம். எ-று.

அறியாயென்பது விளியுருபேற்றபெயர்.

'அசத்தினியல்பை யறிந்தாயாயின் இவ்வாறு பிணங்குவாயல்லையென்பார் 'அசத்தறியாய்' என்றும், *"எந்தை தாட்பால் வணங்கித் தலைநின்று கேட்க" என்பார் 'கேணீ' என்றும், உபலத்திக்கு விடயமானவை யெல்லாம் அநுபலத்திக்கு விடயமாதல் ஒருதலையென்பார் 'அறிவறிந்தவெல்லாம்சத்தாகும்' என்றும், சத்தினியல்புணர்ந்தார்க் கன்றி அசத்தினியல்புணரவாராதென்பார் 'மெய்கண்டான்' என்றும், ஆய்தற் கருமைநோக்கி ஆயினென்றுங் கூறினார். * திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருப்பாசுரம். ச'ஆட்பாலவர்.'

அசத்தலாய், நீரி லெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேருமோரினவை யின்றாமா றெப்பு

எ-து. உ-ம். எ-னின். இரட்டுற மொழிந்துகொண்டு சா

ங்கியரை நோக்கி யுரைத்த பொருளை வலியுறுத்துத னுதலி ற்று.

இ-ள். அசத்து அலாய். எ-து. அசற்காரிய வாதி யல்லா த அறிவுடையோனே—அவை இன்று ஆம் ஆறு ஒப்பு ஓரின். எ-து. அங்ஙனந் தோன்றி மறைவனவாய பிரபஞ்சம் அசத் தாமாற்றிற்கு உவமையாராயின்,—நிகழ் நீரில் எழுத்தும் கன வும் பேய்த்தேரும். எ-து. நிகழாநின்ற நீர்மேலெழுத்துங் கனவிற் காட்சியும் பேய்த்தேருமாம். எ-று.

எனவே, அப்போதுள்ளனவாய நீர்மேலெழுத்து முதலியன வற்றை அங்ஙனே சடிதியின் மறைந்துபோதற் சிறப்புப்பற்றி அசத்தென்றல் எல்லார்க்கு மொப்ப முடிந்தமையின், அவ்விய ல்புடைய பிரபஞ்சத்தையும் அவைபோல் அசத்தென்றல் அமை யுமென்றவாறாயிற்று.

அசற்காரியவாதியை அசத்தென்றுபசரித்தார்.

நீரிலெழுத்து முதலியன பொய்யென்பாரை மறுத்தற்கு நிக ழென் றடைகொடுத்தார்: அஃதியாண்டுஞ் சென்றியையும்.

குவ்வுருபு விகாரத்தாற் றொக்கது.

இன்றென்னுமொருமை அப்பண்பின்மேனின்றது.

நீரிலெழுத்துத் தோன்றியபொழுதே மறைந்துபோதற்கும், கனாப்பொருள் முடிவுபெறுதலின்றி இடையே மறைந்துபோ தற்கும், அருஞ் சுரத்தின் முதுவேனிலின் நண்பகற் கடுமை பற்றித் தோற்றி ஞாயிற்றின் கிரணம் முகிற்படலத்தின் ம றைந்தவழித் தானு மறைந்துபோவதாகிய பேய்த்தேர் ஒருகா ரணங்காட்டி மறைந்துபோதற்கும் உவமையாயின.

இவ்வெண்பாவை "இலயித்ததன்னில்,, என்பதுபோல இங்ங

ணம் இருதொடராகவைத்துரைத்து மேற்கோளேதுக்களையும் இரட்டுறமொழிந்துகொண்டு இரண்டதிகரணப்பொருள் கோடல் ஆசிரியர் கருத்தென்பது வழிநூலாசிரியர் *"அசத்தாஞ் சுட்டி யுணர்பொரு ளான வெல்லாம்,, எ-ம். †"உலகினை யசத்து மென்பர்,, எ-ம். வேறு கூறியவாற்றானு முணர்க. இதனையறியாது இவ்வெண்பாவை ஒருதொடராகவைத் துரைப்பார்க்கு "அசத்தறியாதானே அசத்தலாய்" என்றதனால் ஒருபயன்படாமையும், ஆயின் ஓரினென்று இருகாற்கூறுதலும், அசத்தாகும் இன்றாமென்று இருகாற்கூறுதலுங் கூறியது கூறலென்னும் வழுவாதலுமறிக. இனி ஒருவாற்றானு முணரப்படாதபொருள் சூனிய மென்பது எல்லாச்சமயத்தார்க்கும் ஒப்பமுடிந்தமையின் ஆண்டதிகரணத்திற்குரிய ஐயப்பாடுமுதலியன நிகழாமையான் அதனை வேறெடுத்துரைத்து மேற்கொள்ளவேண்டாவாயினும், மந்தவுணர்வுடையார்க்கு அதன்கண் ஐயநிகழாமைப்பொருட்டு வழிநூலாசிரியர் *"உணராத பொருள்சத் தென்னி லொருபய னில்லை போலும்,, என விடுத்தொழிந்தா ரென்றுணர்க.

சித் - கூ—கூ, உ—செ. 'ஆவதாயழிவ'. ரு—செ. 'மண்டனில்'. ௪—செ.

☞ கூ—கூ, முதலதிகரண முடிந்தது.

எண்ணிய சத்தன் றசத்தன்று மென்றலென்
கண்ணி யுளதென்றன் மெய்கண்டா - னெண்ணி
யறிய விரண்டா மசத்தாதல் சத்தா
மறிவறியா மெய்சிவன் றாளாம். (௨)

இது, சிவன் ஆன்மபோகத்துக்கு மெட்டான், அருள் தாரகமாகநின்று அறியவேணுமென்கின்றது.

இ-ள். எண்ணிய சத்தன் றசத்தன்றுமென்றலென. எ-து.	நிரூபித்தறியப்பட்டதும் அல்லவென்று சொன்னால் அதினாற் பிரயோசநமென்.
கண்ணியுளதென்றன் மெய் கண்டான். எ-து.	அந்தவத்து வுண்டானதோ வில்லையானதோவென்றாயாகில்? உண்மையைத் தரிசித்தவன் கருதியுண்டென்று சொல்லப்பட்டது.
எண்ணியறிய விரண்டா மசத்தாதல். எ-து.	அப்படி யறியப்படாததுமல்ல உண்டென்றவத்துவை யறியும்படியே என்னில்? ஆன்மஞானத்தாலே நிரூபித் தறியவொண்ணாதது தனக்கு வேறாய்ப் பொய்யாதலையு முடைத்தாமாகையால். ஆனாலெப்படி யறிவதென்னில்?
சத்தா மறிவறியா மெய் சிவன். எ-து.	வாக்குக்கு மனத்துக்கு மெட்டாதானதொன்றை ஆன்மஞானத்தா லறியாமல் அருளாலே அறிகின்ற வுண்மை சிவமாம்.
சிவன் றாளாம். எ-து.	அந்த அருட்டா னேதென்னில்? சிவனுடைய திருவடியாம். எ-று.

"தத்துவஞ்சத்தசத்துச் சதசத்துமன்றென்றலென்" என்றார் வழிநூலார். சித் - சூ—சு, ௫—செ. இது சம்பிரதாயதிட்டி. (உ)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். பரப்பிரமப்பொருள் அவிச்சைவயத்தான் ஞாதாவெனவும் ஞேயமெனவும் பகுக்கப்பட்டு மு

ன்னர்க் கூறப்படுஞ் சாதகங்களி னின்றறியவும்படும், அவிச்சை நீங்கியவழி அப்பகுப்பின்மையாற் சத்தென்றுதல் அசத்தென்றுதல் ஒருவாற்றானும் ஞேயமாமாறின்றிக் கேவலஞானமாத்திரையேயாய் நிற்பதொன்றாகலான் அது கோசரமாமென்றல் பொருந்தாதென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துது னுதலிற்று.

இ-ள். எண்ணிய சத்து அன்று அசத்து அன்று ஆம் என்றால் என் கண்ணி உளது என்றல். எ-து. பரமார்த்தமாகிய பரப்பிரமப்பொருள் விவகாரத்திற் கருதப்பட்ட சத்துமன்று அசத்துமன்றென்னின் அங்ஙன மொருபொருளுண்டென்றல் யாது பிரமாணங்கருதியோ அதனைக் கூறுவாயாக. பிரமாணமுண்டெனின் அதற்கு அது பிரமேயமெனப்பட்டு ஞேயமாவான் செல்லுமென் றஞ்சிப பிரமாண மில்லையென்பையாயின்,—மெய்கண்டான் எண்ணி அறிய இரண்டு அசத்து ஆம். எ-து. சத்தினியல்பை யுணர்ந்தோன் ஆராய்ந்தறியிற் காட்சிமுதலிய பிரமாணங்கட்கு விடயமாவதூஉம் ஒருவாற்றானும் பிரமாணமல்லாத சூனியமுமாகிய இரண்டும் மேற்கூறியவாற்றான் அசத்தேயாம்.—ஆதல் சத்து ஆம் அறிவு அறியா மெய் சிவன் தாள் ஆம். எ-து. ஆதலாற் சாங்கோக்கிய முதலியவற்றுட் சத்தென்றோதப்படுஞ் சுட்டறிவினால் அறியப்படாத மெய்ப்பொருள் சைவவுபநிடதங்களினுஞ் சைவாகமங்களினும் அந்நியமின்றி நின்றுணரும் அநுபவமாத்திரையிற் கோசரிப்பதென் றோதப்படுஞ் சிவனருளாவதின்றி நீ கூறுஞ் சூனியமன்று எ-று.

அறியவென்னுஞ் செயவெனெச்சம் மழைபெய்யக் குளநிறையும் என்புழிப்போலச் செயினென்னுமெச்சப்பொருட்டாய் நின்றது. முற்றும்மை விகாரத்தாற்றொக்கது.

அசத்தாமென மாறுக.

சத்தாகிய மெய்யெனவியையும். "அடியளந்தான்றாயது,, என்றாற்போல அறிவறியாமெய்யென்றது வாளாபெயராய் நின்றது.

சிவன்றாளெனச் சிவசத்தியின்மேல் வைத்து உயர்த்துக்கூறியது உபசாரவழக்கு: "இறைவனார் கமலபாதம்,, என்பதுமது. சிவஞானசித்தி சுபக்கம், பாயிரம்—௪—செ.

இதனாற் போந்தபொருள் சத்துமன்றி அசத்துமன்றி ஒருபொருளுண்டெனின் அதற்குப் பிரமாணமென்னை? பிரமாணாதீதமாகிய சூனியமெனிற் சூனியமும் அழிபொருளுமாகியஇரண்டும் அசத்தேயென்பது மேற் காட்டினமையாற் பிரமப்பொருள் அசத்தெனப்பட்டுச் சத்தென்னுஞ் சுருதிகளோடு முரணுமாகலின் அவற்றுட் சத்தென்றோதப்படும் பரப்பிரமப்பொருளாவது உண்மைஞானத்திற் கோசரிப்பதென யாங்கூறுஞ் சிவமேயன்றி நீ கூறுஞ் சூனியமன்றென மாயாவாதியை மறுத்துக் கோசரமென்றதனை வலியுறுத்திய வாறுமென்க.

எண்ணியறிய விரண்டாமசத்தென்பதற்குப் பிறரெல்லாம் வருகின்ற வெண்பாவிற்கூறும் பொருள்படக் கூறியது கூறலாதன் மேலும்ஓரியைபின்றியுரைப்ப.

உணர்வ தசத்தாத லொன்றுணரா தொன்றை
உணருநீ தானுணரா யாகி - லுணருருவிற்
றுனிரண்டா மெய்கண்டான் றன்னை லுணர்தலாற்
றுனிரண்டாய்க் காணுன் றமி. (௩)

இதுவுமது.

இ-ள். உணர் வ தச த்து. எ-து. அறியப்பட்டவையெல்லாம் அழிந்துபோவதாகையாற் பொய்.

ஆதல். எ-து. ஆகையாலே.

ஒன் றுணரா து. எ-து. அறியப்படாத தொருபொருள் சிவம்.

ஆகில். எ-து. அஃதப்படியாகில்.

ஒன்றை யுணரு நீ தானுணராய். எ-து. ஒரு பொருளை யறிந்து பிரயோசநங் கொள்ளத்தக்க நீ யதனை யறியாயாவை.

என்றது அறியப்பட்டதுமல்ல அறியப்படாததுமல்ல வாகியபொருளை அறியத்தக்கவன் அறிந்த பிரயோசநங்கொள்ளானாகில் அவனா லொருபிரயோசநமு மிலலை. எனவே அறிவா னறியவேணுமென்றதாம்.

உணருருவி ற் ருனிரண்டாம். எ-து. நிரூபித் தறியவென்று நினையில் அது தனக்குவேறும்.

அறிவதெப்படியென்னில் ?

மெய்கண்டான் றன்னுணர்தலால். எ-து. சற்குருகடாக்ஷத்தாலே சம்பிரதாயசுத்தியுடையனாகி உண்மையைத் தரிசித்தவன் சிவனுடைய அருளாலே யுணர்வனாதலால்

தானிரண்டா சிவனைக் காணுமிடத்துத் தனித்துநின்று ய்க் காணுன்ற வேருகக் காணுன். எ-று.

மி. எ-து

என்றது, அந்நியமாய்நின்று காண்பனென்றதாம். "அறிபொருள்சித்தாய்வேரு மறிவுருப்பொருள் சத்தென்னில்" என்ருர்வழிநூலார். சித்-சூ—சு, சூ—செ.

இதவுஞ்சம்பிரதாயதிட்டியாலறிக. (ந)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். பிரகாசித்த பொருளையும் வேருராற்ருன் அறிதுமென வேட்கைசென்றுழி அவ்வாற்ருற் புதுவதாய்ப்பிரகாசிக்கவேண்டுதலிற் பிரகாசித்தினுக்கு பிரகாசிக்கவேண்டுவதில்லை யென்றல் யாண்டுஞ் செல்லாமையின் வாக்குமனுதீதமென்றல் பொருந்தாதென்பாரைநோக்கி அதனைவலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். உணர்ப அசத்து. எ-து. நின்னாலறிவனவாய கருவிகளெல்லாம் மேற்கூறியவாற்ருன் அசத்தாம். அசத்தெனவே அசித்தாதலும் பெறப்படும்.—ஆதல் ஒன்று ஒன்றை உணராது. எ-து. ஆகலான் அவற்றுள் ஒரு கருவியும் ஒன்ருகிய முதற்பொருளை அறியமாட்டாது.—உணரும் நீ தான் உணராய். எ-து. அவற்ருனறிந்து வருகின்ற நீதானும் அதனையறியமாட்டாய்:—ஆயின். எ-து. நீயேயாய்நதறிவாயாயின்,—உணரும் உனின் தான் இரண்டு ஆம். எ-து. அவ்வாறுணரப்படும் பொருள்கள்போல் உணர்கின்ற நின்னின் வேரும்.—மெய்கண்டான்றன்னுல் உணர்தலால் தான் இரண்டாய்க் காணுன் தமி. எ-து. உயிர்க்கு அறிவு விளங்கு முண்மையை அறிக்

ந்தான் தன்னறிவு அச்சிவன்றாளி னடங்கி அதுவாய் நின்று அ
களுமே அசனையுறியுமாகலான் ஏனைப்பொருள்களை யறியுமா
றுபோல வேறாய் நின்றறிவானல்லன் அத்தனி முதற்பொருளை
ன-று.

இதனாற் போந்தது சத்தாகிய சிவம் பாசஞானத்தானுதல்
பசுஞானத்தானுதல்அறியப்படாது; அறியப்படிற்குடமுதலாயி
னபோல உயிரின்வேறாய் அவிச்சையான் வருஞ்சுகதுக்கங்களை
ப் பயப்பதன்றி அவிச்சையினீங்கிய நிரதிசய வின்பத்தினைப் ப
பவாதாகலான் அவ்வுண்மையுணர்ந்தோன் ஏனையபோல அச
ந்தாதலின்றித் தனியாய் நின்ற அம்முதற்பொருளை அதனு
னேற்றித்து நின்றே காண்பனென நையாயிகர் முதலியோ
ரை மறுத்து வாக்குமனதீதமாய் நின்றே கோசரமாமென வ
லியுறுத்தியவாறுமென்க.

உணர்பவென்பது அகரவீற்று றஃறிணைப்பன்மைப் பெயர்ச்
சொல்.

ஒன்றுமென்னும் முற்றும்மை விகாரத்தாற்றொக்கது.

உனினென்னும் இன்னுருபு நீக்கப்பொருட்கண் வந்தது. ஒ
றிரட்டாமை புறனடையாற் கொள்க. தான் அசை.

பாவகமென்று ளசத்தாம் பாவநா தீதமெனிற்
பாவகமா மன்றென்னிற் பாழுவாம் - பாவகத்தை
பாவித்த றுனென்னிற் பாவகமாந் தன்னருளாற்
பாவிப்பது பரமில் பாழ். (௪)

இதுவுமது.

இ-ள். பாவக சிவனைத் தியானிக்குமிடத்து யாவனொரு மென்று வ னொருருபங்களாகத் தியானிக்கவேண்டு னசத்தா கையில் அது அவனுடைய உண்மையல்ல ம். எ-து. வாம்.

பாவநா தீத தியானங்களைக் கடந்ததொரு தியானமெ டெனிற் பாவக ன்று தியானிக்கில் அதுவுந் தியானத்திலே மாம். எ-து. யொன்றும்.

அன்றென்னிற் பாவிக்கப்படுவ தொன்றல்லவென்னிப் பா ழதுவாம். அது பாழாம்.
எ-து.

பாழாமென்றது பிரயோசநமின்றிச்சூனியமா மென்றதாம். எனவே, முத்தியினுள்ள பொருளு மில்லையென்றதாம்.

பாவகத்தைப் யாதொரு தியானத்தை தியானித்தலே அ பாவித்தல் தா வன்தானென்று பாவிப்பேனென்னில், அவ னென்னிற் பாவ னுடைய பாவகமாம்.
கமாம். எ-து.

என்றது நான்பாவிப்பதன்றி அவன்றான் பாவிக்கின்றானாகப் பாவிப்பே னென்றதாம். ஆதலால் அவனுடைய பாவக முன க்குப் பிரயோசனமில்லை யென்றதாயிற்று.

தன்னருளாற் ஆகையாலே சிவனுடைய அருளாலே தி பாவிப்பது பர யாநிக்கின்றதே மேலாகிய பொருள் இயல் மில் பாழ். பாம். அப்படி பாவித்தலில்லாதது பாழா
எ-து. ம். எ-று.

என்றது பாவனைகெட்டு பாவிப்பே னென்பையாகில் அதுவு ம்பாழாம் என்றதாம். "பாவிப்பதென்னிற் பாவம்" என்று

ர்வழிநூலார். சித் - கூ—கூ, எ—செ.

இதுவும் சம்பிரதாய திட்டியாலறிக. (ச)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். தானே கோசரமாதலன்றித் தன்னாலறிதல்கூடாமையிற் றன்னாலே தனையுணருமென்பது தன்னைப் பற்றுதலென்னும் வழுவாமாகலின், அவ்வாறன்றி வாக்குமனாதீதப்பொருள் யோகநூலிற்கூறுந் தியான பாவனைகளிற் கோசரமாமென்றலே அமைவுடைத்தென யோகமதம்பற்றிக் கூறுவாரைநோக்கித் தன்னாலன்றிக் கோசரமாகாமையை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். பாவகமேல் தான்அசத்து ஆம். எ-து. நீ கூறும் பாவனை ஏனைப்பாவகங்கள்போல மனமுதலியவற்றோடு கூடி நின்று பாவிக்கும் பாவகமெனின், அறிவினாலறியப்பட்ட சுட்டகலான் அப்பொருள் அசத்தாம்:—பாவனாதீதம் எனின் பாவம் ஆம். எ-து. கருவிகளை நீங்கிநின்று பாவிப்பதாகலின் அப்பாவனையைக் கடந்ததெனிற் கருவிகணீங்கியவழி ஒன்றுமறியுமாறின்றிக் கேவலமாமாகலான் அது பாவகமாத்திரையேயன்றிப் பயன்படுமாறில்லை:—அன்று என்னின் பாழது ஆம். எ-து. இவ்விருதிறனுமன்றி அநிர்வசனமாகப் பாவிக்கப்படுவதெனின்? அது சூனியப்பொருளாம்:—பாவகத்தைப் பாவித்தல் தான் என்னின் பாவகம் ஆம். எ-து. அவ்வாறன்றிப் பாவனைக்கெய்தாதபொருளை எய்தியதாகவைத்துப் பாவகஞ்செய்தலெனின் அது போலிப்பாவனையாதலாற் பாவனாதீதம்போலப் பாவனைமாத்திரையேயன்றிப் பயன்படுமாறில்லை. அற்றேல் ஒருவாற்றானும் பாவனைக்கெய்தாத பொருள் பாழாமெனின்;—தன் அருளால் பாவிப்பது பரம். எ-து. அப்பாவங்களை

யொழித்துத் தனது திருவருளாற் பாவிக்கப்படுவதாம் பரம்பொருள்—பாழ் இல். எ-து. ஆகலான் நீ கூறும் பாவனைக்செய்தாமைபற்றிப் பாழாதலில்லை. எ-று. தான் அசை.

பாவகத்தைப் பாவித்தலென்பது "கறைமிடறணியலு மணிந்தன்று" என்றதுபோலக் கொள்க.

மேலைவெண்பாவில் தன்னென்றது தனது சத்தியேயாகலால் தன்னைப் பற்றுதலென்னுங் குற்றமாதல் யாண்டையதென விடுப்பார் தன்னருளாற் பாவிப்பதென்றார். தனனருளை யறியுமாறும் அதனாற் பாவிக்குமாறும் ஒன்பதாஞ் சூத்திரத்துட் கூறப்படும்.

யோகநூலார் கூறும் பாவனையாவது இந்நான்கனுள் ஒன்றாகற்பாலதன்றி வேறின்மையின் நான்கினையுங் கூறி மறுத்தார்.

அறியா விரண்டல்ல னுங்கறிவு தன்னா
லறியப் படானறிவி னுள்ளா – னறிவுக்குக்
காட்டாகி நின்றானைக் கண்ணறியா மெய்யெனக்
காட்டா தறிவறிந்து கண்டு. (௫)

இதுவுமது.

இ-ள். அறியா விரண்டல்லன். — சிவன் ஆன்மாவுக் கறிவாய் நிற்கையினாலே அறிகைக்கு வேறல்லன்.
எ-து.
ஆங்கறிவு தன் — அப்படியாயினும் அவ்விடத்து அறியுங் க

ஞ லறியப்படா ற் றன்னுடைய அறிவா லறியப்படான்.
ன். எ-து.

அறிவி னுள்ளா ன். எ-து. அப்படி அறியாமையிருக்கைக்குக் காரணமெனனென்னில்? ஆன்மாவுக் குயிரா யுள்ளானாதலால். அஃதெப்படியென்னில்?

அறிவுக்குக் காட்டாகி நின் றானை. எ-து. ஆன்மாவுக்குக் காட்டாகி நின்ற சிவனை.

காட்டா தறி வறிந்து கண்டு. எ-து. ஆன்மாத் தானறிந்து கண்டு நமக்குக்காட்டாய் நிற்கின்ற தீதென்று பிரித்துக்காட்டமாட்டாது. அஃதென்போலவென்னில்?

கண் ணறியா மெய் யென்ன. எ-து. கண்ணுக்குயிராகிக் காட்சியைக்கொடுத்து நின்ற ஆன்மாவைக் கண் கண்டு காட்டமாட்டாதான தன்மைபோல. எ-று.

எனவே, அருடாரகமாய் நின்றறியவேணுமென்பதாயிற்று. "அந்நியமிலாமையானு மறிவினுணர்றலானும்" என்றார் வழிநூலார். சித் - ௬—௩, அ—௪.

அந்நியமின்றி யுயிர்க்குயிராய்நின் றுணர்த்துகின்றனென்னும் பக்கத்துக்குக் கண்போலவென்னுஞ் சபக்கங்காட்டியவா றறிக. (௫)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-வின். மேற்கூறிப் போந்த பாவனைகட் கெய்தாத பொருளைத் தன்னருளாற் பாவித்தல்வேண்டாம்; உயிர் பசுத்துவநீங்கிய காலத்துச் சிவனைப்போல முற்றுமுணர்

தன் முதலிய எண்குணங்களுமுடைய தென்று ஆகமங்களுட் கூறுதலின், ஆண்டான்மஞானஞ் சிவஞானத்தோடொப்பதன்றிப் பசுஞானமெனப்படாமையான், அவ்வறிவின் அறியபபடு ங்கோசரப்பொருளென்றலே அமைவுடைத்தென்னுஞ் சிவசம வாதிகளை நோக்கித் தன்னருளாலன்றிக் கோசரமாகாமையை வலியுறுத்து னுதலிற்று.

இ-ள். அறிய இரண்டு அல்லன். எ-து. சிவாகமங்களின் அத்துவிதங் கூறுதலின் உயிர் தன்னறிவா னறிதற்குத் தன்னின் வேறல்லனாகலானும்.—அறிவின் உள்ளான் ஆங்கு அறிவு தன்னால் அறியப்படான். எ-து. சமமாதலின்றித் தூலசூக்கும முறையாற் றன்னறிவுக்குள்ளுளனாய் நிற்றலின் அவ்விடத்துத் தன்னறிவினால் அறிய வாரானாகலானும்—அறிவுக்குக் காட்டு ஆகி நின்றானை. எ-து. தன்னறிவுக்கு வியஞ்சகமாய் நின்றறிவிக்கும் உயிர்க்குயிராய முதல்வனை—அறிவு கண்டு அறிந்து காட்டாது. எ-து. ஆன்மஞானமானது தான்கண்டறிந்து தன்குணியாகிய உயிர்க்குக் கோசரமாமாறு காட்டமாட்டாது.—மெய் அறியாக் கண் என்ன. எ-து. தன்னின் வேறின்றித் தனக்குண்ணிற்றலிற் றன்னாற் காணப்படாது தனக்குக் காட்டாகிநின்ற உயிரை யறியமாட்டாத கண்ணொளி போல். எ-று.

காட்டு முதனிலைத்தொழிற்பெயர்.

அறிவுக்குக் காட்டாகி நின்றானென்னும் பெயரடையானும் ஓரேதுக் கூறியவாறு.

கண்டறிதல் "குழிந்தாழ்ந்தகண்" என்றாற்போல ஒருபொருட்பன்மொழியாய்ச் சிறப்பின்கண் வந்தது.

மெய்யறியாக் கண்போலென இயைத்துரைக்க கண்முதலி

யவற்றை நோக்கி உயிர் சத்துச் சித்தாமென்ற வதனை மெய் யென்றார். கண் ஆகுபெயர்.

கண்ணறியா மெய்யென்பதற்குக் கண்ணையறியாத உடம்பு போலென்றுரைப்பாருமுளர். உடம்பிற்கு அறியுந் தன்மையி ன்மையானும், உடம்பிற்குக் கண் காட்டாதலு மின்மையானும் அஃதீண்டுவமையாதற் கேலாமையின், அது போலியுரையென் றொழிக.

அதுவென்னு மொன்றன் றதுவன்றி வேறே
யதுவென் றறியறிவு முண்டா - லதுவென்
றறிய விரண்டல்ல ளுங்கறிவு ணிற்ற
லறியுமறிவே சிவமு மாம். (௬)

இதுவுமது.

இ-ள். அதுவெ ன்னுமொ ன்றன்று. — சிவன் ஆன்மாவைவிட்டு நீங்கிநிற்பா னொருவனல்ல; ஆகலால் அதுவிதுவென்று சுட்டிக் காண்பதொரு பொருளல்ல.
எ-று.

அதுவன்றி வேறே யதுவென் றறியறிவு முண்டால். எ-து. — அப்படி வேறின்றி நிற்பதொன்றாகில் ஆன்மாவுஞ் சிவமு மொன்றென்றுலாகாதோ வென்னில்? அதுபொருளன்று; வேறாயிருக்கும்; அஃதெத்தாலென்னில்? அதுவென்று அறிவிக்க அறிவுண்டாதலால் ஒன்றென்று சொல்லுமிடத் தொன்றென்று சொல்லுவா னொருவனுளனாகையா லிரண்டாமென்பது போலாம்.

அதுவென் றறிய விரண்டல்ல — அஃதப்படியாகிற் பிறித்துக்காண வேண்டாவோவென்னின்? ஆன்மபோதத்தாற்

லன். எ-து. சுட்டியறிகைக் கிரண்டாய் நில்லான்.

ஆங்கறிவு ணி சிவன் யாவனென்னில்? ஆன்மாவினிட ற்ற லறியு மறி த்தே நிற்றலையுமுடையனுகிச் சகலத்தையு வே சிவமு மாம். ம் அறியும் அறிவையுடையவனே சிவனும். எ-து. எ-று.

உம்மை அசை.

ஆன்மாவுக் கறிவாய்நிற்றலாலே அவனறிவாலறியும் ஆன்மாச்சிவமுமாமென்று பொருளுரைப்பாருமுளர். காண்பானுங் காட்டுவானும்போல யாதொன்றையு மயங்கிநின் றறிகின்ற தே ஆன்மா, அறிவிக்கிறவனேசிவன், அவ னுன்னிடத்திலே நீங் காம லெப்பொழுதும் நிற்கையினுலே நீ யந்தச்சிவமென்று ம யங்கினைறதொழிந்து நீசிவனல்லை யென்பதாம். "ஒன்றெனு மதனுலொன்றென் றுரைப்பதுண்டாகையாலே—நின்றனன் வேருய்" என்ருர் வழிநூலார். சித் - ௯—௩, ௯—௪.

இதுவுஞ் சம்பிரதாயதிட்டியாலறிக.

இப்படி யிச்சூத்திரத்தில் மூன்றுமுதலுந் தரிசிப்பித்தவாறு காண்க. (௯)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம் எ-னின். அத்தன்மையனுகிய முதல்வனை த் தலைப்பட்ட உயிர் அம்முதல்வனேடு ஒன்ருய்ப் போவதே யாகலின் ஆண்டங்ஙன மறிவதூஉம் அறியப்படுவதூஉமாதல் யாங்ஙனமென்னுஞ் சிவாத்துவிதசைவர் சுத்தசைவரை நோக் கி, ஒன்ருயவழியும் அறிவதும் அறியப்படுவது முண்டென்பது ணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். அது என்னும் ஒன்று அன்று. எ-து. சத்தாகிய சிவம் ஞேயப்பொருளாய் விசிட்டமாய் நிற்பதென்பது உமக்குமாகலான் அச்சிவம் இன்னதென்றறிய வாராது அநிர்வசனமாய் நிற்பதொரு நிர்விசேடப்பொருளெனக் கொண்ட மாயாவாதத்தைப்போல அதுவென்று அநிர்வசனமாய்க் கூறப்படுவதொரு சூனியமன்று ஆகலான்—அது அன்றி வேறே அது என்று அறி அறிவும் ஆங்கு உண்டே. எ-து. அந்த ஞேயமாத்திரையேயன்றி அதனின் வேறாக வாக்கு மனாதீதமாய் நிற்பதொருபொருளென்றறிகின்ற ஞாதாவும் ஆண்டுள்ளதேயாம். அற்றேல் ஒன்றுதல் பெறப்படாதாலெனின்,—அது என்று அறிய இரண்டு அல்லன் அறிவுள் நிற்றல் அறியும் அறிவே சிவமும் ஆம். எ-து. உலகத்துப்பொருள்போல் அதுவென்று சுட்டி யறியுமாறு முதல்வன் தன்னின் வேறல்லனாய் அப்பணைந்த உப்புப்போலத் தன்னறிவின்கண் விரவி வேற்றுமைதோற்றாது நிற்றலான் அறிவிறந்தறிகின்ற அவ்வுயிர் சிவமேயாம். எ-று.

உம்மை சிவமாயுஞ் சிவமாகாமை விளக்கிநின்றது.

அதுவென்னு மொன்றன்றாகலானென ஏதும்பொருள் படக்கொண்டுரைக்க.

அறிவுமென்ற உம்மை இறந்தது தழீஇயது.

அல்லனென்பது முற்றெச்சம். வேறுமுடிபுகோடலிற் பால் வழுவாகாமை யுணர்க.

உண்டேயென்னும் ஏகாரம் தேற்றம்; ஏனையிரண்டும் அசைநிலை. நிற்றல் நிற்றலானென்றவாறு.

இவ்வெண்பாக்களைந்தும் முறையே வாக்குமனாதீதமென்றல் பொருந்தும் கோசரமாமென்றல் பொருந்தாதென்னும் மாயாவாதிகளையும், கோசரமாமென்றல் பொருந்தும் வாக்கும

ஞ தீதமென்றல் பொருந்ாதென்னும் நையாயிகர் முதலியோரையும், பாவனைக்குக் கோசரமா மென்னும் பாதஞ்சலரையும், ஆன்ம ஞானத்திற்கே கோசரமாமென்னுஞ் "சுமவாதசைவரையும், முத்தியிற் சிவமேயன்றி உயிரென வேறின்மையின் உயிர்க்குக் கோசரமாமா றியாண்டையதென்னுஞ் சிவாத்துவிதசைவர் முதலியோரையும் மறுத்து, வாக்குமனாதீத கோசரமாய் நிற்குமியல்பு வலியுறுத்தி ஒருபொருண்மேல் வந்தவாறுகாண்க.

☞ ௬—ரு, இரண்டாமதிகரண முடிந்தது.

இவ்வாறு நாலாஞ்சூத்திரமுதலிய மூன்றினும் மேற்பிரமாணத்தாற் கூறிப் போந்த பசுபாசபதிகட்கு இலக்கணங் கூறுமுகத்தான் முறையே கேவலஞ் சகலஞ் சுத்தமென்னும் மூன்றவத்தையுங் காட்டப்பட்டன.

இம்மூன்றனுட் கேவலம் மருட்கேவலமும், சகலகேவலமும், பிரளயகேவலமும், விஞ்ஞானகேவலமும், அருட்கேவலமுமென ஐவகைப்படும்.

அவற்றுள், மருட்கேவலமாவது அநாதிகேவலம். சகலகேவலமாவதுசங்கரித்தபின்னர்ப் புனருற்பவத்திற் கேதுவாய்ப்படுங் கேவலம்: ஆண்டுச் சூக்குமவைந்தொழிலுண்டென மிருகேந்திரத்துட்கூறுதலின் அநாதிகேவலத்தோடு இதனிடை வேற்றுமையாமாறு கண்டுகொள்க. பிரளயகேவலமாவது மாயையோடு இயைபின்றி ஆண்டுப்படுங் கேவலம். விஞ்ஞானகேவலமாவது மாயைகன்மங்களென்னும் இரண்டனோடும் இயைபின்றி ஆண்டுப்படுங் கேவலம். அருட்கேவலமாவது தத்துவ சுத்தியின்னர்ப்படுங் கேவலம். அது துகளறுபோதத்திற்காண்க.

இனிச்சகலமும் சகலத்திற் கேவலம், சகலத்திற் சகலம், சகலத்திற் சுத்தமென மூவகைப்பட்டு ஒரோவொன்று ஐந்துவகைப்படும். அவற்றுட் சகலத்திற்கேவலமைந்தும் "ஒன்றனையா மூலத்து" என்றதனுட்காண்க. சகலத்திற் சகலமைந்தும் "இ

லாடத்தே சாக்கிரத்தை" என்றதனுட்காண்க. சகலத்திற் சுத்தமைந்தும் "யோகிற்றருவதோர் சமாதி" என வழிநூலாசிரியர் தொகுத்தோதியது. சித்தாந்தசாராவலி, யோகபாதத்தின் வகுத்துக்கூறுதலான் ஆண்டுக் காண்க. இனிச் சுத்தமுஞ் சீவன்முத்தி அதிகாரமுத்தி போகமுத்தி இலயமுத்தி பரமுத்தியென் றைவகைப்பட்டுச் சாக்கிரமுதலியபெயர் பெறும்; அவற்றை முன்னர் வகுத்தோதுப. சிவஞானசித்தி, நான்காஞ்சூத்திரம். ௩௯—செ. 'இருவகை.'

☞ ௯—சூ, முடிந்தது.

பொதுவியல்பு—இலக்கணவியன் முற்றிற்று.

பொதுவியல்பு முற்றுப்பெற்றது.

எ—சூத்திரம்.

யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராதலின்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா. (எ)

இச்சூத்திர மென்னுதலிற்றோவெனின், மேலதற்கோர் புறநடை முன்னற்சூத்திரத்திற் கூறிய மூன்று முதலையும் விளங்கக் கூறுபடுத்திக் கூறுதலைக் கருதிற்று.

இ-ள். யாவையுஞ் சூனியஞ் சத்தெதிர். எ-து. சத்தாகிய சிவனுடைய சந்நிதியி லெல்லாஞ் சூனியமாம்.

சூனியம் - பொய். என்றது சத்தின்முன்னர் அசத்துப் பிரகாசியாதாகையானும், விசுவத்திற் பிரயோசநம் அவன்அறிகையில்லை யாகையானு மென்றதாம். ஆனால் விசுவம் நடத்தினமுறைமை யெப்படியென்னில்? இந்திரஞாலங் காட்டுவானுக் கில்லையாய்க் காண்பானுக் குண்டானவாறுபோல வெனவறிக.

ஆகலின் சத்தே யறியாது. எ-து. விசுவம் அப்படியறிந்து பொய்யாய் வருகின்றதாதலாலே சிவ னறியான்.

அசத்தில தறியாது. எ-து. விசுவந் தானே சேடமுமாய் அழியுமாகையாலே அறியாது.

இருதிற னறிவுளதிரண்டலா வான்மா. எ-து. சத்தையும் அசத்தையும் கூறுசெய்தறியும் அறிவையுளதாய்ச் சத்துமல்லவாய் அசத்துமல்லவாய்ச் சதசத்தாய் நிற்கும் ஆன்மா. எ-று.

இதற்குப்பிரமாணம் வருமாறு.

சிவஞானமுனிவர் உரை.

சிறப்பியல்பு—சாதநவியல்.

இதன் பிண்டப்பொழிப்பு. மேலைச்சூத்திரத்துட் கூறிப்போந்த இரண்டனுள் வாக்குமனாதீதமாய சிவசத்தின் சந்நிதியின் உணருருவாகிய அசத்தெல்லாம் பாழாகலிற் சத்தாகிய சிவம் அசத்தாகிய பிரபஞ்சத்தை அறிதல்செய்யாது; அசத்தாகிய பிரபஞ்சம் அறிவில்லாத சடமாகலிற் சத்தாகிய சிவசத்தை அறிதல் செய்யாது: ஆகலாற் பாரிசேடவளவையான் இருதிறனறிவுளதொன்றுண்டென்பது பெறப்படுதலின், அதுவே சத்தாதற்றன்மையும் அசத்தாதற்றன்மையுமாகிய இரண்டுமன்றிச் சதசத்தாயுள்ள உயிராம். எ-று.

இரண்டனுள் ஒன்றனைப் பிரிக்கின்றமையிற் சத்தேயென்னு மேகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

அசத்திலதாகலினென்றுரைக்க.

அசத்துச் சத்தையறியாமைக்கும் சத்தெதிர் சூனியமாதலே ஏதுவாதலமையுமாயினும், அசத்தெனப்பட்ட கருவிகண்முத்திநிலையிற் சிவகரணமாய் ஆன்மசந்நிதியையொட்டி முதல்வன்சந்நிதியி னிற்கட்பெறுமென்பாரை நோக்கி வேறுமோரேது கூறினார். இக்கருத்தே பற்றி "சத்தின்மு னிலாமையானுந் தனைக்கொடொன் றுணர்தலானும்" என விரண்டேதுவும் உ

டன்கூறினார் வழிநூலாசிரியரும். சிவஞானசித்தி, ௭—சூ, க—செ. 'அனைத்துஞ்.'

ஏற்புழிக்கோடலான் அறிதலென்றது ஈண்டநுபவ வறிவி ன்மேற்று.

இனைத்தெனவறிந்தபொருட்கு வினைப்படுதொகுதிக்கண் வேண்டப்படு முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

அந்நிய மிலாமை யரற்கொன் றறிவின்று
மந்நிய மிலானசத்தைக் காண்குவனே - லந்நியமாய்க்
காணா னவன்முன் கதிர்மு னிருள்போல
மாணா வசத்தின்மை மற்று. (௧)

இது, தன்னைச் சத்தாகிய சிவமெனக் கருதினோற்கு அஃ தல்லவென்கின்றது.

இ-ள். அந்நிய மிலாமை யரற் கொன்று. எ-து. — ஆன்மாக்கள் சிவனுக் கந்நிய மில்லாமை யிருத்தலாலே வேறல்லவொன்று.

அறிவின்றும். எ-து. — எல்லாஞ் சிவனுமாகில் அறிவானுமறி பொருளு மில்லையாம்.

அந்நியமிலானசத்தைக் காண்குவனேல். எ-து. — வேறன்றியிலேயிருந்த சிவன்றனே அசத்தினாலே அறிவனென்று நீ சொல்வாயாகில்

அந்நியமாய்க் காணான். எ-து. — அசத்தைச் சிவன் வேறாகநின்று காணான். அஃதெத்தாலென்னில்?

அவன்முன் மா　அந்தச்சிவன்முன் மாட்சிமையில்லாத அ
று　வசத்தின் சத்தில்லை. அஃதென்போலவென்னில்?
மை. எ-து.

கதிர்முன் னி　ஆதித்தனுடைய சந்நிதியிலே அந்தகார
ருள்　போல. நில்லாதாற்போல வென்றதாம். எ-று.
எ-து.

மாட்சிமை-யறிவில்லாமை. மற்று-அசை.

எனவே யறிவாரொருவன் அறிவிப்பானைக்கொண்டே யறிவு
ப்பொருளை யறியவேணு மெனபதாயிற்று.

இது, சத்தின்முன் அசத்து நில்லாதென்றதற்குப் பிரமா
ணம்.

சத்தின்முன் னசத்துநில்லாதென்னுந் துணிபொருட்பக்கத்
துக்கு, ஆதித்தனு மிருளும்போலவென்பது சபக்கமாயினவாறு
காண்க. "அனைத்துஞ்சத்தெனனி லொன்றையறிந்திடாது."
என்றார் வழிநூலார். சித் - எ—சூ, க—செ. (௧)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். சுட்டுணர்வின்மையான் முதல்வ
ன் அசத்தையறியானெனின் முற்றுணர்வுடைமைக் கிழுக்கா
மென்பாரை நோக்கி இழுக்கின்மை கூறி ஏதுவை வலியுறுத்த
னுதலிற்று.

இ-ள் அந்நியம் இலாமை அரற்கு ஒன்று உணர்வு இ
ன்று ஆம். எ-து. தன்னுள் வியாப்பியமான பசு பாசங்க
ளோடு வேற்றுமையின்றி உடனாய்நிற்றலை யுடைய முதல்வனு
க்குச் சுட்டியறியக் கிடப்பதொன்றில்லை. ஆகலான்—அந்நியம்
இலான் அசத்தைக் காண்குவனேல் அந்நியமாக் காணான்.
எ-து. அத்தன்மையனாகிய முதல்வன் அசத்தை யறியனும

வனுயின் அறிந்தாங்கறிவனன்றி நம்மனோர்போல வேறாகச்சுட்டியறிவானல்லன்—கதிர்முன் இருள்போல அவன் முன் மாணு அசத்து இன்மைமற்று. எ-து. ஞாயிற்றின்முன் இருட்டுப்போல அம்முதல்வனெதிர் நன்மையில்லாத பிரபஞ்சம் விளங்கி நில்லாதாகலான். எ-று.

எனவே, அசத்தை விடயிப்பதாகிய ஏகதேசவுணர்வு முற்றுணர்வைத் தடுப்பதாகலான், அஃதில்லாமை முற்றுணர்விற்கு மேம்பாடாவதன்றி இழுக்காகாதென ஐயமகற்றிஏதுவை வலியுறுத்தவாறு காண்க.

மாணாமை-வியாபகவுணர்விற்கு விடயமாகாமை.

இன்மை ஈண்டு விளங்காமை குறித்து நின்றது.

மற்று அசை. மற்றுக் காண்குவனேலென மேலேகூட்டி வினைமாற்றின்கண் வந்ததெனினுமமையும்.

உணர்வுங் கதிரும் ஆகுபெயர். கதிர்முன்னிருள் ஈண்டு முனையாமைமாத்திரைக்கு ஒருபுடையுவமையாயிற்றென்பது வழிநூலாசிரியர் "முளைத்திடா தசத்துச் சத்தின் முன்னிருளி முன்போல்" என்றவாற்றானறிக. சித்-எ—கூ, க—செ

☞ எ—கூ, முதலதிகரணமுடிந்தது.

பேய்த்தேர்நீ ரொன்றுவரும் பேதைக்கு மற்றதனை
பேய்த்தேரசத்தாகும் பெற்றிமையின்-வாயத்ததனை
கண்டுணர்வா ரில்வழியிற் காணு மசத்தின்மை
கண்டுணரா தில்லதெனக் காண். (உ

இது, அசத்தறியுமென்போர்க் கஃதறியா தென்கின்றது.

இது, அசத்திலதறியா தென்பதற்குப் பிரமாணம்,

இ-ள். பேய்த்தேர் நீரென்று வரும் — கானலை நீரொன்றுகருதிவருகின்ற அறிவில்லாதவனுக்குக் கிட்டிப்பார்த்தவிடத்து முன்பு தோன்றிய கானல் பொய்யாகு முறைமைபோல.

...ப்பதைக்கு மற்...ணைந்த பேய்...க்கே ரசத்தாகு... பெற்றிமையி...ர். எ-து.

...என்றது இது நீரல்லவா யிருந்தது கானலாயிருந்ததென்று...ருதலாம். மற்று-அசை.

...வாய்த் ததனை ...கண்டுணர்வா...ல்வழியிற் கா...றும். எ-து. — வாய்ப்புடைத்தாகிய அந்தவசத்தை அசத்தென்றுகருதியுணர்வாரில்லாதவிடத்து மெய்யென்று கருதும்.

...என்றது அது மெய்யாகவும் பிரயோசநமாகவுந் தோன்று...மென்றதாம்.

...அசத்தின்மை ...ண்டுணராது. ...-து. — அறிவார் பிறரில்லை, அசத்துத்தானே யறியுமென்பையாகில்? அந்தவசத்து அறிவில்லாதபடியாலே யொன்றையுங் கண்டறியாது.

...இல்லதெனக் ...ாண். எ-து. — ஆதலாலே அசத்துக் கறிவில்லையென்று விசாரிப்பாயாக. எ-று.

...வாய்த்தென்றது அருள் தாரகமாக நின்றென்றதாம். என...ப அருட்டாரகமாமளவுமெய்யாகத் தோன்றுமென்றதாம்

...இது, விசுவம் பொய்யென்னுமதற்கு அறிவில்லையென்றும்,

அருட் டாரகமாகநின்று காணுமளவும் மெய்போலத்தோன் றும் அருட்டாரகமானவிடத்துப் பொய்யாமென்றுங் கூறிய துணிபொருட்பக்கத்துக்கு, பேய்த்தேர் சபக்கமாயினவாறு காண்க. (௨)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அதனை உவமைமுகத்தான் வலியு றுத்துத லுதலிற்று.

இ-ள். பேய்த்தேர் நீர் என்று வரும் பேதைக்கு மற்று அ ணைந்த பேய்த்தேர் அசத்து ஆகும் பெற்றிமையின். எ-து. பா லைநிலத்தின்கட் காணப்படுவதாய பேய்த்தேரை நீரென்று க ருதி அதனையுண்ண வருகின்ற நீர்வேட்கையுடைய மடவோனு க்கு அதனையடுத்தவழித் தன்னாலணையப்பட்ட அப்பேய்த்தே ர் நீராதலின்றிப் பொய்யாந்தன்மைபோல,—வாய்த்து. எ-து. குரவன் அறிவுறுக்கும் உபதேசமொழி கிடைத்து—அதனைக் கண்டு உணர்வார் இல்வழியின் அசத்து இன்மைகாணும். எ-து. அவ்வசத்தி னியல்பை ஆராய்ந்தறிவாரின்றி அறியமாட்டாதா ர் உள்வழி அவர்க்கு அதன்கணறிவுள்ளதாய் மதிக்கப்படுஞ் ச த்தாந்தன்மையே காணப்படும்.—கண்டு உணர்வார் இல்லது எனக் காண். எ-து. அவ்வுபதேசமொழி கிடைத்து அத னியல்பை யாராய்ந்தறிய வல்லார்க்கு அவ்வசத்தறிவு அல்ல தேயாமென்று அறிவாயாக. எ-று.

மற்று வினைமாற்று. மை பகுதிப்பொருள்விகுதி. இன் உ வமவுருபு. வாய்த்தென்பது வாய்ப்பவென்பதன்றிரிவு. வாய் த்தல் நேர்படுதல். ஆண்டைக்கேற்புடைய வினைமுதல் அவா ய்நிலையான் வந்தது.

அசத்தின்மையாவது சத்தாந்தன்மை. நான்கனுருபு விகாரத்தாற்றொக்கது. அறிவென்பது அதிகாரத்தான் வந்தது.

☞ எ—ரு, இரண்டாமதிகரண முடிந்தது.

அருவுருவந் தானறித லாயிழையா யான்மா
அருவுருவ மன்றாகு முண்மை - அருவுருவாய்த்
தோன்றியுட னில்லாது தோன்றாது நில்லாது
தோன்றன் மலர்மணம்போற் றொக்கு. (௩

இது, தம்மைச் சத்தாகிய சிவமெனக்கருதினோர்க்கு ஆன்மவிலக்கணங் கூறுகின்றது.

இ-ள். அருவுருவந்தானறிதலாயிழையா யான்மா. எ-து. [ஆயிழையாய் மகடூஉமுன்னிலை.] இது பரமேசுரன் பரமேசுரிக்கு அருளிச்செய்தது. அருவாகிய சத்தையும் உருவாகிய வசத்தையும் அறிதலையுடையது ஆன்மா.

ஆன்மா வருவுருவ மன்றாகும். எ-து. தானந்த அருவாகிய சத்துமல்ல உருவாகிய அசத்துமல்ல.

உண்மை. எ-து. சத்தியமாகச் சொல்லில்.

அருவுருவாய்த்தோன்றி யுடனில்லாது தோன்றாது நில்லாது. எ-து. தானந்த அருவுருவத்தினுமாகி யுருவத்தினுமாகி யுருவம்போலத் தோன்றாமலுநில்லாது, உருவம்போலத் தோன்றியுநில்லாது, இரண்டினும் வேறன்றிநிற்கும்.

தோன்றன் ம அஃதெப்படியென்னில்? மலரிலே மண

லர் மணம்போ ஞ் செறிந்துநின்றாற்போலுந் தோன்றுதல்; ற் றெக்கு.எ-து. எ-று.

மலரையொழிந்து மணந்தோன்றாதுபோல வான்மாவுந் த னித்துத்தோன்றாதென்பதுவும், மணம் அந்தந்த மலர்களியல்பாய் நின்றாற்போல நின்றநின்றதேகத்தி னியல்பாய் நிற்கு மென்பதுவுங் கூறியவாறறிக.

சத்தைக்கூடிச் சத்தாகியும் அசத்தைக்கூடி யசத்தாகியும் நிற்குமெனவே ஆன்மாச் சத்தசத்தென்பதாயிற்று. "சத்தசத்தறிவதான்மா தான்சத்துமசத்துமன்று." என்றார் வழிநூலார். சித் - ௭—௬, ௨—செ.

ஆன்மா தனித்துநில்லாதென்னும் பக்கத்துக்கு மலருமணமுஞ் சபக்கமாயினவாறுகாண்க. (௩)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அம்மூன்றனுள் முன்னையதனை வலியுறுத்தி இரண்டலாமையை விளக்குத லுதலிற்று.

இ-ள். ஆய் இழை ஆய் ஆன்மா அரு உருவந்தான் அறிதல் அரு உருவம் அன்று ஆகும். எ-து. நுணுகிய நூல்களை ஆராய்வதாகிய உயிரே சத்து அசத்தென்னும் இரண்டினையும் அறிவதாகலான் அஃதவ்விரண்டுமின்றி அவற்றின்வேறாம். அற்றேல் அவ்விரண்டினையு மறியு முயிர்க்குத் தன்னுண்மையறியப்படுமோ படாதோவெனக் கடாயினார்க்குப் படுமெனிற் றன்னொடுகூளப்பட மூன்றனையு மறிவதென்னாது அவ்விரண்டனையு மறிவதாயென்றல் பொருந்தாது; படாதெனின் அறியப்படாத பொருள் சூனியமெனப்பட்டு வழுவாமாலெனின்—உண்மை அரு உருவாய்த் தோன்றி உடன் நில்லாது தோன்றாது நில்லாது மலர் மணம்போல் தொகுத் தோன்றல் எ-து. அவ்வான்மா

வினுண்மைத் தன்மை அவ்விரண்டும்போல விளங்கித் தோன்றி அவற்றோடொப்ப நிற்பதுமன்று விளங்காது சூனியமாய் நிற்பதுமன்றாய், மலரின்கண் வாசம் அவ்விருவகையுமன்றி அதன்கணடங்கித் தோன்றுமாறுபோலச் சத்திலும் அசத்திலுஞ் சார்ந்ததன்வண்ணமாய் அடங்கித் தோன்றுவதோரியல்பாம். ஆகலான், அஃதவைபோலத் தனித்தறியப்படுவதொன்றன்றி அவ்விரண்டினையுமறியுமுகத்தான் அறியப்படுவதாம். எ-று.

ஆகலான் அஃதவைபோலத் தனித்தறியப்படுவதொன்றன்றி அவ்விரண்டினையு மறியுமுகத்தான் அறியப்படுவதாமென்பது குறிப்பெச்சம்.

சுட்டுணர்விற்கு விடயமாகாமைபற்றிச் சத்தை அருவென்றும், அதற்கு விடயமாதல்பற்றி அசத்தை உருவென்றுங் கூறினார். உணருருவசத்தென்புழி உருவென்றதும் அதுநோக்கி.

செவ்வெண்தொகை விகாரத்தாற் றொக்கது. தான் அசை.

அறிதலானன்றுருமெனவிசையும்.

இழை நூலாகலான் ஈண்டுச் சாத்திரத்தையுணர்த்திற்று.

ஆய்தல்நுணுகுதல். "ஒய்தலாய்தனிழத்தல்சாஅ—யாவயினுங்குமுள்ளதனுணுக்கம்" என்றார் தொல்காப்பியனாரும்.ஆயிழையாயெனப் பொருளினுணுக்கம் நூன்மேலேற்றப்பட்டது:இரண்டாவது விரித்துரைக்க.தொல்காப்பியம் சொல் உரியியல்-௩௪.

உயிர்க்கு அறியுந்தன்மையுண்டாகலானன்றே வேதாகமமுதலிய நூல்களுமவாயினவென அதனை வலியுறுத்துவார் ஆயிழையாயான்மாவென அதனையுடம்பொடுபுணர்த்தோதினார். இக்கருத்தே பற்றி "பலகலை யுலகி னிலவுதலானும்,, என்றார் புடை நூலாசிரியரும், இவ்வாறன்றி ஆயிழையாயென மகடூஉமுன்னிலையாக்குவார்க்கு இவ்வுதாரணம் மேலதனை வலியுறுத்

துதற்செழுந்ததன்றாய்க் கூறியதுகூறலென்னும் வழுவாய் முடியுமென்றொழிக.

தேற்றேகாரம் விகாரத்தாற்றொக்கது.

அருவுருவாயென்புழி ஆக்கச்சொல் உவமைப்பொருள் குறித்து நின்றது; "ஆள்வா ரிலிமா டாவேனோ" என்றார்போல.

தொக்குத் தோன்றன மலர்மணம்போலெனக் கூட்டுக.

மயக்கம துற்று மருந்திற் றெளிந்தும்
பெயர்த்துணர்நீ சத்தாகாய் பேசி - லசத்துமலை
நீயறிந்து செய்வினைக ணீயன்றி வேறசத்துத்
தானறிந்து துய்யாமை தான். (ச)

(இது, சத்தாதல் அசத்தாதல் ஆகாமற் சதசத்தானவா றெங்ஙனேயென்போர்க்குக் கூறுகின்றது.

இ-ள். மயக்கமதுற்று மருந்திற்றெளிந்தும் பெயர்த்துணர்நீசத்தாகாய் பேசில். எ-து. ஒருபிணி வந்தடுத்தபொழுது மயக்கத்தைப்பொருந்தியும் அதற்கான மருந்து செய்ய வதனாலே தெளிந்தும் அறிவு பெயர்தலையுடையை யாதலாலே நீ சொல்லுமிடத்து அந்தச்சத்தாகாய்.

பசிவந்துற்றபொழுது மயக்கத்தைப்பொருந்தியும் புசித்தபொழுது தெளிந்தும் அறிவுபெயர்தலையுடையையென்றுமாம். எனவே கத்தா வொருதன்மைத்தான வறிவையுடையர், நீ யறிவுபெயர்தலையுடையை, ஆதலால் கத்தாவல்லை யென்றதாம்.

அசத்துமலை. எ-து. ஆனலசத்தோவெனில்? அசத்துமல்ல, அஃதெத்தாலென்னில்?

நீ யறிந்து செய்வினைக ளூஉய வன்றி வேறசத்துத் தானறிந்து துய்யாமை தான். எ-து.	நீ யுன்னுடைய வறிவாலே யறிந்துகொண்ட புண்ணியபாவங்களினுடைய பிரயோசனங்களை நீயொழிந் தனக்குவேருகிய அசத்தானது தானறிந்து சீவியாது. எ-று. தான்-அசை.

எனவே நீ சத்துமல்ல வசத்துமல்ல சதசத்தென்பதாயிற்று.

இது சம்பிரதாயதிட்டியெனவறிக. (சு)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அங்ஙனமறியுமுயிர் சிவசத்தோடொப்பச் சித்தாகுமென்பாரை நோக்கி உபதேசியாயென்றதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். மயக்கமது உற்றும் மருந்தின் தெளிந்தும். எ-து. நின்னறிவை விளக்குதற்குரிய வியஞ்சகமில்வழி ஒருவிடயத்தை இன்னதென்றறியமாட்டாது மயக்கத்தையுற்றும் பசிநோய்க்கு அன்னம்போல அம்மயக்கநோய்க்கு மருந்தாய வியஞ்சகமுள்வழி அம்மயக்கநீங்கி அதனையின்னதென்று நிச்சயித்தும்—பெயர்த்து உணர் நீ பேசில் சத்து ஆகாய். எ-து. இங்ஙனம் மாறிமாறியுணர்ந்து வருகின்ற நீ சொல்லுமிடத்துச் சிவத்தோடொப்ப அறியுஞ் சத்தியுடையாயல்லை. அற்றேல் அசத்தனோவேன் போலுமெனின்—நீ அறிந்து செய் வினைகள் நீ அன்றி வேறு அசத்துத் தான் அறிந்து துய்யாமைதான் அசத்தும் அலை. எ-து. வியஞ்சகம் உள்வழியும் நீ முன்னறிந்து செய்தவினைகளை இப்பொழுது நீயேயறிந்தநுபவிக்கவல்லையன்றி நின்னின்வேருய் அசத்தாகிய பாசம் அறிந்தநுபவிக்கமாட்டாமையான் அதனோடொப்ப அசத்தனுவாயுமல்லை—வேறு. எ-து

சத்தகுணமுடைய ஆகாயம்போல வியஞ்சகமுள்வழி அறியுமாற்றலுடைமையும் அஃதில்வழி அவ்வாற்றலின்மையுமாகிய இரண்டுமுடைய நீ அவ்விரண்டற்கும் வேருய்ச் சிதசித்தாந்தன்மையுடையை. எ-று.

மருந்திற்றெளிந்தெனவே மயங்குதல் அஃதில்வழியென்பது பெற்ரும். வியஞ்சகமில்வழித் தலைப்படுவதூஉம் அஃதுள்வழி நீங்கிநிற்பதூஉமாகிய மயக்கம் உண்டியில்வழித் தலைப்படுவதூஉம் அஃதுள்வழி நீங்கிநிற்பதூஉமாகிய இயல்புடைய பசியோடொத்தலின் அதனைப் பசிநோயாகவும், தீர்த்தலொப்புமைபற்றி வியஞ்சகத்தைப் பசிதீர்க்குமருந்தாகவும் உருவகஞ்செய்தார். இஃதேகதேசவுருவகம். மருந்தெனப் பொதுப்பட உருவகஞ்செய்தாராயினும் மறித்து மறித்துவேண்டப்படுமாறு ஈண்டைக்கேற்புடையது பசிநோய் தீர்க்கு மருந்தேயாகலின் அவ்வாறுரைக்கப்பட்டது. அது பகுதிப்பொருள்விகுதி.

உண்மை எண்ணின்கண் வந்தது. அசத்துமென்னுமும்மையிறந்தது தழீஇயிற்று.

தானென்பது முன்னையது எழுவாயுருபு படநின்றது, பின்னையது அசைநிலை.

துவ்வாமை துய்யாமை என மரீஇயிற்று.

சத்தியுடைய பொருள் சத்தும், அஃதில்பொருள் அசத்துமாகலின், அவ்வடமொழிகள் ஈண்டம்முக் கெட்டுக் குற்றியலுகரவீருய் நின்றன: "நாகணையான்?,, "பெற்றொன்றுயர்த்த பெருமான்:,, "பேதுசெய்து;,, "வாது செயத் திருவுள்ளமே,, என்புழிப்போல.

அசித்துமலையென்பது பாடமாயின், மேற்சத்தாகாவென்றதனை இசையெச்சமாகக் கொண்டு சத்தாந்தன்மையே யுடை

யாயல்லை; அதன்மேலுஞ் சித்தாமாறியாங்ஙனமென்றுரைத்து இயைத்துக்கொள்க. இவ்வாறன்றி ஈண்டுச்சத்தாகாய் அசத்து மலையென்பவற்றை மேலருவுருவ மன்றுகுமென்றதன் பொருள்படக்கொண்டுரைப்பாருமுளர். அவர் ஆண்டேயமைந்து இடந்தபொருளை மறித்துங் கூறவேண்டாமையும் பெயர்த்துணர் நீயெனவும், அறிந்து துய்யாமையெனவும், அறிவுடைமை அறிவின்மைபற்றிக் கூறும் பொருளவையாதல் செல்லாமையும் நோக்கிலர்.

மெய்ஞ்ஞானந் தன்னில் விளையா தசத்தாத
லஞ்ஞான முள்ள மணைதலா - மெய்ஞ்ஞானந்
தானே யுளவன்றே தண்கடநீ ருப்புப்போற்
றானே யுளமுளவாய்த் தான். (௫)

இதுவுமது,

இ-ள் அஞ்ஞானம். எ-து. பாசஞானமாகியவது.

மெஞ்ஞானந் தன்னில் விளையாது. எ-து, சத்தாகிய சிவனுடைய ஞானத்தைப்பொருந்தித் தோன்றாது. அஃதெத்தாலென்னில்?

அசத்தாதல், எ-து. அது பொய்யுமாய்ச் சடமுமாகையால்.

உள்ள மணைதலாம். எ-து. அந்தப் பாசஞானம் பசுஞானத்தைப் பொருந்தித் தோன்றுதலையுடைத்தாம்.

மெய்ஞ்ஞானந் தானேயுளவன்றே. எ-து. சிவனுடைய சுத்தஞான மென்றுளதென்னில்? அநாதியிலேயுளது.

உள முளவாய் பசுஞானமென்றுளதென்னில்? அதுவு
த்தான். எ-து. மப்படியநாதியே யுளவாம். அஃதென்
போலவென்னில்?

தண் கட னீ குளிர்ந்த கடலும் நீருமுப்பும்போல.
ருப்புப்போற் ற எ-று.
ன். எ-து.

என்றது கடலென்றுண்டு அன்றேநீருண்டு, நீரொன்றுண்டு அ
ன்றே யுப்புண்டு, அவைபோலப் பதிஞானமும் பாசஞானமு
மநாதியிலே யுள்ளதென்றவாறு.

கடல் பதி, நீர் பசு, உப்பு பாசம். உப்பானது நீரிலே பொரு
ந்திநிற்பதொழிந்து கடலிற் பொருந்தாதாலுற்போல் வநாதி
யிலே யொருகாலத் துண்டாயிருக்கப் பாசஞானம் பசுஞான
த்தைப் பொருந்திநிற்கும் பதிஞானத்தைப் பொருந்தாதென்
பதுந் தோன்றியவாறறிக.

சிவனென்றுளான் அன்றே யான்மாவுமுண்டு, ஆன்மாவெ
ன்றுண்டு அன்றேபாசமுமுண்டாயினும், பாசம் ஆன்மாவுட
னேகூடி நிற்பதொழிந்து கத்தாவுடனே கூடிநில்லாதென்னு
ந் துணிபொருட்பக்கத்துக்கு, கடலு நீருமுப்புஞ் சபக்கமா
யினவாறுகாண்க.

"சுத்தமெய்ஞ்ஞானமேனிச் சோதிபாலசத்தஞ்ஞான-மொ
த்துரு"; என்றுர்வழிநூலார். சித் - எ—கு, ரு—செ.

இந்தவைந் துவெண்பாவாலும், சிவன் சர்வஞ்
ஞனாகையாலே யொருகாலத்திலே அசத்தை
யசத்தென்றும் பின்பு சத்தைச் சத்தென்று
மயங்கி அறிதலில்லையாகையாலே சிவனுடை
யஞான மொருபடித்தாயிருக்குமென்பதுவும், கானலை நீரொன்
றும் பின்புகானலென்று மயங்கி யறிந்ததொழிந்து அறி வொ
ருபடித்தாயே யிருந்தாற்போல அசத்தைச்சத்தென்றும் பின்

புசத்தை யசத்தென்றும் ஒருவன்மயங்கி யறிந்தொழிந்து அதுவு மொருவழிபட்டிருக்குமென்பதுவும், அப்படிமருட்டி யறிவித்ததே பாசஞானமென்பதுவும், தெருட்டியறிவித்ததே சிவஞானமென்பதுவும், மருட்டமருணடுந் தெருட்டத்தெருண்டு நிற்கின்றதே பசுஞானமென்பதுவும் கூறி; மூன்றுமுதலையுந் தரிசிப்பித்தவாறுகாண்க. (௫)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அம்மயக்கம் அவ்வுயிரோடியையுடைய முதல்வனுக்கு முண்டுபோலுமெனவும் அதுதான் உயிர்க்கு எக்காலத்து வந்ததெனவு நிகழுங்கடாவை விடுக்குமுகத்தான் இரண்டன்பாலு முளதாமாறு வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். அஞ்ஞானம். எ-து. மேற்கூறிப்போந்த மயக்கமாவது—மெய்ஞ்ஞானந் தன்னில் அசத்து ஆதல் விளையாது. எ-து. ஒருபெற்றித்தாய அறிவெனப்படுஞ் சிவத்தினெதிர் கதிர்முன்னிருள்போல நிலையுதலில்லதாகலின் ஆண்டுளதாதலின்றி—மெய்ஞ்ஞானந் தானே உள அன்றே. எ-து அச்சிவம் என்றுள்ளது அன்றே—தான் ஏய் உளம் உளவாத்தான். எ-து. தான் பொருந்துதற்குரிமையுடைய உயிர்களுள்ளனவாக—உள்ளம் அணைதல். எ-து. அவ்வுயிர்களைப் பற்றி நிற்றல்—தண்கடல் நீர் உப்புப்போல் காண் எ-து. தண்ணிய கடலின்கணுளதாதலின்றி அக்கடலிடத்துளதாகிய நீரைப்பற்றி நிற்கு முப்புப்போலென்றறிவாயாக. எ-று.

விளையாதென்னும் வினையெச்சமறை அணைதலென்னுந் தொழிற்பெயரோடு முடிந்தது.

தானேயென்பது கட்டுரைக்கண் வந்தது. தானேயுளமுளவாத் தானென்புழித் தானென்பது முன்னையது எழுவாய் பின்னையது அசைநிலை.

ஏயுளமென்னும் வினைத்தொகை "அறிவறிந்தமக்கட்பேறு" போல நின்றது. ஏய்தற்குரிமையாவது மேற்காட்டினும்.

தண்கடனீருப்புப்போலென்றதனால் முப்பொருள்களும் வியாபக வியாப்பியங்களாய் நிற்குமாறும் பெறப்பட்டது.

இரண்டன்கண்ணும் உயிர்க்கியைபுடைமை கூறவே, இரண்டன்பாலு முளதாதலை வலியுறுத்தவாறு காண்க.

ஈண்டிருதிறனையுமறியுமறிவுளதெனவே இருதிறனாகியசத்து அசத்து எனப்பட்டனவெல்லாம் பிரமேயம், அவற்றையறியுஞ் சதசத்தாகிய உயிர் பிரமாதா, அவ்வுயிரினறிவாகிய சிற்சத்தி பிரமாணம், அவ்வறிவு நிகழ்ச்சி பிரமிதியென்பதூஉம், இருதிறனால் விளங்குமறிவுளதெனவே அவ்விரண்டனுள் அசத்தானறிவு விளங்கும் வழித் தனக்கு வேறாய் நின்று விளக்குவனவாய காட்சியநுமானமுரையெனப்படும் அசத்தாகிய பாசஞான மூன்றும், சத்தானறிவு விளங்கும்வழி அந்நியமின்றித் தனக்காதாரமாய் உடனின்று விளக்குஞ் சிவஞானமுந் தனக்கு வியஞ்சகங்களாகலான் அதுபற்றி அவையும் பிரமாணமென்று உபசரித்துக் கூறப்படுமென்பதூஉம், இருதிறனினு மறிவுளதெனவே ஈரிடத்துங் கேடின்றி அசத்தான் விளங்கி அசத்தை யறிவுழி அசத்தின்பாலும் சத்தான்விளங்கிச் சத்தையறிவுழிச் சத்தின்பாலும் அதுவதுவாய் அழுந்துமென்பதூஉம் பெறுதும். இவ்வாறன்றி வியஞ்சகங்களையே பிரமாணமென்னுந் தார்க்கிகர்முதலியோர் மதங்கள் பொருந்தாமையும் அவ்வியஞ்சகங்களானிகழும் பிரமிதிவேறுபாடும் அவற்றதியல்புகளும் ஈண்டு விரிப்பிற் பெருகும்; பௌட்கரமுதலிய சிவாகமங்களுட் கண்டுகொள்க.

எ—ரு, மூன்றுமதிகரண முடிந்தது.

ஏழாஞ்சூத்திர முடிந்தது.

அ—சூத்திரம்.

ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டந்நிய மின்மையி னரன்கழல் செலுமே.

என்பது, சூத்திர மென்னுதலிற்றோவெனின், ஆன்மாக்கள் ஞானத்தைப் பெற்றுணரு முறைமை கூறுகின்றது.

இ-ள். ஐம்புலவேடரினயர்ந்தனை வளர்ந்தென. எ-து. — ஆன்மா செவி மெய் கண் வாய் மூக்கென்னும் வேடருடனே கூடி வளர்ந்து உன்னுடைய வுண்மையை மறந்தாயென்று.

தம்முதல் குருவாய். எ-து. — தனக்குப் பிராணனாகி யுள்நின்றுபகரித்த கத்தாவே குருவாய்வந்து.

தவத்தினி லுணர்த்த. எ-து. — முன்னர்ச் சநநங்களிலே சாலோக சாமீபசாரூப்பியமாகிய பதங்களையுடையராகப் பத்தி ஞான வயிராக்கியங்களாலே கூடியிருப்பதாயுள்ள சரியைகிரியாயோகங்களைச் சாத்திரமுறைமைகளிலே நிகழ்த்தி அதுநிமித்தமாக மகத்தாகிய ஞானத்தைப் பெறுதற்கு நல்லசார்பிலே வந்தவர்களுக்கறிவிக்க.

விட்டு. எ-து. — முன்புநின்ற மருட்சியைவிட்டு.

அந்நிய மின். — எக்காலத்தும் நீக்கமில்லாமையையுடைய

மையி னரன்க, கத்தாவுடைய திருவருளைப் பெறும். எ-று ழல் பெறுமே.

எ-து.

அரன்கழல் செலுமே யென்று பாடமாயின் திரோதநீங்கி ஞானமாய்ச்செல்லுமென்க. "மன்னவன்றன்மகன் வேடரிடத்தே தங்கி" என்றார் வழிநூலார். சித் - அ—௬, ௧—௦.

இதற்குப்பிரமாணம்.

சிவஞானமுனிவர் உரை.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு.—உயிர் தான் முன்னேசெய்துகொள்ளப்பட்ட புண்ணியவிசேடத்தாற் றனக்கு அந்தரியாமியாய் இதுகாறு முன்னின்றுணர்த்திவந்த பரம்பொருளே இப்பொழுது குருவடிவமுங் கொண்டெழுந்தருளி வந்து, சிவதீக்கை செய்து, மன்னவ குமாரனாகிய நீ ஐம்பொறிகளாகிய வேடருட்பட்டு வளர்ந்து நின்பெருந் தகைமையை அறியாது மயங்கி யிடர்ப்பட்டாய்; நின்பெருந்தகைமையாவது இவ்வியல்பிற்றென் றறிவுறுப்ப அறிந்தமாத்திரையே அவ்வேடரை விட்டு நீங்கி, அந்நியமின்றி அநந்நியமாந்தன்மையின் நிலைபெற்று அம்முதல்வன்றிருவடிகளை யணையும். எ-று.

உயிரென்பது மேலைச்சூத்திரத்தினின்றும் வருவித்துரைக்கப்பட்டது.

தவத்தினிற் குருவுமாய் வளர்ந்தயர்ந்தனையென வுணர்த்தவிட்டுச் செல்லுமென இயையும்.

புலன் ஆகுபெயர்.

வளர்ந்தயர்ந்தனையென்பது ஈந்துபுகழ்பெற்றான் என்புழிப

போலக் காரணகாரியப்பொருட்டாய் நின்றது.

தம்முதலென்றது வேறுமுடிபாகலிற் பால்வழுவின்மையுணர்க.

குருவுமென்ற உம்மை உயிர்க்குயிராய் உண்ணின்றுணர்த்தியதூஉமன்றியென இறந்தது தழீஇயிற்று; சிறப்புமாம்.

அந்நியமின்மை அத்துவிதம். அஃதாவது சேறலைப் பயப்பித்தசாய் ஆண்டுளதாகிய வினையுபு.

அரனென்றது சுட்டுப்பெயர் படநின்றது.

வெண்கொற்றக்குடையும் நவமணிமுடியுஞ் சிங்காசனமும் மன்னவர்க்கேயுரிய சிறப்படையாளமாம்; அதுபோலப் பிரபஞ்சமெல்லாவற்றிற்கும் மூலகாரணமாமியல்பாகிய ஒருபெரு வெண்கொற்றக்குடையும், எவற்றையும் ஒருங்கே ஓரியல்பானறியும் பேரறிவாகிய ஒருபெருஞ் சுடர்முடியும், அங்கங்கே உயிர்க்குயிராய் நின்று எவற்றினையுஞ் செலுத்துமியல்பாகிய ஒருபெருஞ் சிங்காதனமும், பிறரொருவர்க்கின்றித் தனக்கேயுரிமையாகச் சிறந்தமைபற்றிப் பசுக்களுக்குப் பாசங்களையரித்தலான் அரனென்னுந் திருப்பெயருடைய முதல்வனை மன்னவனாகவும், அம்முதல்வனது பேரானந்தப் பெருஞ்செல்வமுழுதுந் தனதேயாகக் கொண்டநுபவிக்குஞ் சுதந்திரமுடைமையும், சித்தெனப்படுஞ் சாதியொருமையும்பற்றி ஆன்மாவை மன்னவகுமாரனாகவும், அவ்வான்மாவை அறிவுப்பெருஞ்செல்வமுழுதையும் ஆறலைத்துக்கொண்டு சிறுமையுறுத்தலும் விதிவிலக்கை யிழப்பித்து இழிதொழிலினிற்பித்தலுமாகிய இயல்புபற்றி ஐம்பொறிகளை வேடராகவும் உருவகஞ் செய்தார். இஃதேகதேசவுருவகம்.

'ஐம்புலவேடரினயர்ந்தனை வளர்ந்தென' எனவே ஐம்புலவேடரின் வளர்ந்தயர்தலும் அருவாசமுகத்தாற் பெற்றும்.

தவஞ்செய்தா ரொன்றுந் தவலோகஞ் சார்ந்து
பவஞ்செய்து பற்றறுப்பா ராகத் - தவஞ்செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றார்சூழ் சொல்லுமாங் கண்டு. (க)

இ-ள். தவஞ்செய்தாரொன்றுந் தவலோகஞ் சார்ந்து. எ-து. எக்காலமுஞ் சரியை கிரியா யோகமாகிய தவங்களைச்செய்யுமவர்கள் தாங்கள்செய்த தவத்துக்கீடாகிய சாலோக சாமீப சாரூபமாகிய வுண்மைபொருந்தி.

சார்ந்து-சார்புடையோரிடத்தே வந்துதோன்றி என்பாருமுளர்.

பவஞ்செய்து பற்றறுப்பாராகத் தவஞ்செய்த நற்சார்பில் வந்துதித்து. எ-து. அந்தமுத்திப்பதங்களினுடைய பற்றுதலையு நீக்குவாராகத் தாந்தாஞ்செய்த தவங்களினுடைய சார்புகளிலே சநநத்தையுடையராகிவந்து தோன்றி.

முன்புதவஞ்செய்து சாலோக சாமீப சாரூபமாகிய பிறவியைச்செய்த பற்றுதலைநீக்குவாராக.

ஞானத்தை நண்ணுதலைக் கற்றார்சூழ் சொல்லுமாங் கண்டு. எ-து. சிவஞானத்தைப் பொருந்துதலை வேதாகமங்களைக் கற்றுணர்ந்தோருடைய துணிவு சொல்லும் அதனைத் தரிசித்து. எ-று.

இது சாத்திரதிட்டியால் வந்ததெனவறிக. (௬)

சிவஞானமுனிவர் உரை.

, எ-து. உ-ம். எ-னின். மேற் சரியை கிரியா யோகங்களை ச் செய்தார் அவற்றான் ஞானத்தைக் காணுமுறைமை எவ்வா றென்பாரை நோக்கி அஃதாமாறுணர்த்தி ஏதுவை வலியுறுத் துத னுதலிற்று.

இ-ள். தவம் செய்தார். எ-து. சரியைமுதலியற்வறைச் செய்தார்கள்—என்றும் தவலோகம் சார்ந்து. எ-து. அவ் வத் தவப்பயன்களைப் பயப்பிக்குஞ் சாலோகாதிபதங்களை ஒருதலையாக நண்ணி ஆண்டுளவாகிய இன்பங்களை அநுபவித் து,—பற்றுப் பவம் செய்து அறுப்பார் ஆக. எ-து. முன்னு டம்பிறக்கு நாள் அடுத்த வினை காட்டுங் கதிநிமித்தம்பற்றியெ ழுந்த அவாவினை மீள நிலத்தின்கட் பிறந்தநுபவித்து நீக்கிக் கோடற்பொருட்டு—தவம் செய்த நற்சார்பில் வந்து உதித்து ஞானத்தை நண்ணுதலை. எ-து. மீளத் தவஞ்செய்தற்குரி ய உயர்ந்த குலத்தின்கண் வந்து தோன்றித் தவக்குறையான் அவ்விடயப்பற்று முறுகாவண்ணம் அறுத்துத் தத்துவஞான த்தைத் தலைப்படுவாராதலை—கற்றார் சூழ் கண்டு சொல்லுமா ம். எ-து. வீட்டுநூல்களைக் கற்றாரது சூழ்ச்சி அந்நூற் கரு த்துணர்ந்து சொல்லும். எ-று.

தவந்தானகப் பிறிதொன்று தானக இவ்வுலகத்து உடம் பொடு நின்றீட்டிய வினையெல்லாம் அவ்வுலகத்திற் செலுத்தித் தத்தம்போகங்களைப் பயந்தேவிடுமாகலான் அவற்றை ஒருநா ன்றும் பிறழமாட்டாரென்பார் என்றுந் தவலோகஞ்சார்ந் தென்றார்.

ஆகவென்னுஞ் செயவெனெச்சம் உண்ணவந்தானென்புழிப்

போலத் தற்பொருட்டாய் நின்றது.

பற்றறுதற்பொருட்டு வந்துதித்தெனவே ஆண்டுப் பற்றுச் செல்லாதவழி அவ்வுலகத்து நின்றுங்கே ஞானத்தை நண்ணு வரென்பதூஉம் பெறுதும்.

கற்றாரது சொல்லுதற்றொழில் சூழ்ச்சிமேலேற்றப்பட்டது

ஆம் அசை. நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணு தலென்ற அருத்தாபத்தியான் இழிகுலத்தோர் தத்துவஞான த்துக் குரியரல்லரென்பது பெறப்பட்டது.

பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு
மிசைத்து வருவினையி லின்ப - மிசைத்த
விருவினை யொப்பி லிறப்பி றவத்தான்
மருவுவனு ஞானத்தை வந்து. (உ)

இது, யாகாதிகன்மங்களைச்செய்து சுவர்க்காதிபோகங்களை யநுபவித்தல் நன்றென்போர்க்கு முத்தியல்லது நன்றல்லவெ ன்பதூஉம், முத்திபெறுவதென்போர்க்குக் கன்மசமத்துவத்தி லேயென்பதூஉங் கூறுகின்றது.

இ-ள். பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு மிசைத்து வருவினையி லின்பம். உலகத்தில் மேலாய்வருகின்ற எச்சியாதி கன்மங்களா லுண்டாஞ் சுவர்க்காதியின்பம் பசித்தபொழு துண்டு சிறிதுபொழு து தாகந்தீர்த்திருந்து பின்னையும் பசியை யுடையனாகின்றவனை யொக்கும்.

எ-து.

என்றது சுவர்க்காதியின்பத்தை யநுபவித்தாலு மீண்டு மிக லோகத்தே பிறக்கவேண்டுமென்று கூறியவாறும். "தானமி யாகந்தீர்த்த மாச்சிரமந்தவங்கள்" எனறுர் வழிநூலார். சித்-அ—கூ,உ௫—செ.

இப்படிச் சுகதுக்கங்களை யநுபவிக்கிறதொழிந்துகன்மமொ ருகாலத்திற் றெலையாதோ வென்கின்றுயாகில்?

இறப்பி றவத் தால். எ-து. போன சநநங்களிலே செய்த தபோபல ங்களினுலே.

இசைத்த இரு வினை யொப்பி ல். எ-து. புண்ணியபாவங்களிரண்டு மொருகாலத் தே வந்து புசிக்கைக்குச் சமமொத்தவெல் லையிலே.

மருவுவனும் ஞானத்தை வந் து. எ-து. மருட்சிரீங்கி முன்புண்டான ஞானத் தைப் பொருந்துவன். எ-று.

தபோபல மென்றது "புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கு" என்றுர் வழிநூலார். சித்-அ—கூ, கக—செ. முத்தி விடயம்பலவோ வென்னில் அது "இம்மையேயீரெட்டாண்டு" என்பதனுலறிக. கஉ—செ. கன் மசமத்துவம் என்பதற்கு "மிக் கதொருபக்குவத்தின் மிகுசத்திநிபாதம்" என்றுர் வழிநூலார். உகூ—செ. "புண்ணியமேலேனுக்குவிக்கும் பாவங்கீழ் நோக் கும்" என்பது முத்திக்கு ஏதுவாமறிக. ௩க—செ. மருட்சிரீங்கி முன்புள்ளஞானம் பொருந்துவனென்பதற்கு "சூரியகாந்தக்கல் லிடத்தே" உஅ—செ. எனவே ஞானம்பெற்றே வீடுபெறவே ணுமென்று ராயிற்று. அது "ஞானத்தால் வீடென்றே நான்ம றைகள் புராணம்" என்பதனுலறிக. உஎ—செ. சரிதைகிரி யாயோகங்களாலே ஞானம்பெறவேணு மென்றீர், அவையெ படி யவற்றின்பே றெப்படியென்னில்? "சன்மார்க்கஞ் சக மார்க்கஞ்சற்புத்திரமார்க்கந் தாதமார்க்கமென்று" கஅ—செ "தாதமார்க்கஞ் சாற்றிற் சங்கரன்றன் கோயில்" கக—செ.

"புத்திரமார்க் கம்புகலிற்" உ0—செ. "சகமார்க்கம்புலனொடுக்கி" உக—செ. "சன்மார்க்கஞ் சகலகலை புராணவேதம்" உஉ—செ. என்பனவற்றா லறிக.

அன்றியுஞ் சிவஞானத்தையுடையோர்க்கு எந்தப்பலனும் பின்பு ஞானத்தைக் கொடுக்குமென்றுமாம். அது "சிவஞானச்செயலுடையோர் கையிற்றானந் திலமளவே செய்திடினும்" என்பதனாலறிக. உகூ—செ.

இது சாத்திர திட்டியானவா றறிக. (உ)

சிவஞானமுனிவர் உரை.

எ-து உ-ம். எ-னின். சரியை முதலிய தவங்களே தத்துவஞானத்தைக் காட்டுமென யாப்புறத்தோதியதென்னை வேதத்துட் கூறிய வேள்வி முதலாயினவுந் தத்துவஞானத்தைக் காட்டுமென்றல் அமையுமெனப் பாட்டாசாரியன்மதம் பற்றிக் கூறுவாரை நோக்கி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். இசைத்து வருவினையில் இன்பம். எ-து. ஒருநல்வினைசெய்வான் றொடங்கி அறநூலையாய்வாரது உணர்வின்கண் விடயமாய் வரும்பொழுதே தம்மாற் பெறப்படுங் காமியப்பயன்களை உடன்கூறிக்கொண்டே வருகின்றனவாய வேள்வி முதலிய அறங்களின் பயனாகிய இன்பம்—பசித்து உண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும். எ-து. முன்னர்ப் பசித்துண்டு பின்னும் பசிப்பானுக்கு அவ்வுண்டியான் வருமின்பத்தை யொக்கும் ஆகலான்;—இசைத்த இருவினை இறப்புஇல் தவத்தால் ஒப்பில். எ-து. ஒருவனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்தமுறுத்துதற்கட் பொன் விலங்கும் இருப்புவிலங்கும்போலத் தம்முட் சமப்படுத்துணரப்படுவனவாகிய அறம்பாவமிரண்டுந் தம்மைப்போல் அநுபவமாத்திரையாற் கெடுதலின்றி மேன்மேன்முறுகி வளர்வனவாய சரியை முதலிய தவங்களானே நோரா

கவொத்தால்,—வந்து ஞானத்தை மருவுவன் ஆம். எ-து.
அத்தவமுதிர்ச்சியுடைமையான் முன்னர்க் கூறப்படுஞானகுரு
வைத் தேடிவந்து ஞானத்தைத் தலைப்படுவன். எ-று.

வேள்விமுதலாயினவெல்லாம் அழிதன்மாலையவாய காமியங்
களைப் பயப்பனவன்றித் தத்துவஞானத்தைப் பயவாவென்
றற்கு அவற்றை விதித்தநூல்களே சான்றென்பார் இசைத்
து வருவினையென்றும், அவை ஞானத்தைப் பயவாமைமாத்தி
ரையேயன்றித் தீவினைபோல அது நிகழவொட்டாது தடை
செய்து நிற்றலுமுடைமையின் அவற்றது கழிவேஈண்டைக்கு
க் காரணமாவதென்பார் இசைத்தவிருவினை யொப்பிலென்று
ங் கூறினார்.

ஒப்பிலென்னும் வினையெச்சம் மருவுவனென்னும் பிறவினை
முதல்வினை கொண்டது.

தேற்றவேகாரம் விகாரத்தாற் றொக்கது.

ஆம் அசை.

வருதல் இடவழுவமைதி.

பசிப்பாரென்றது ஆகுபெயர். இசைத்தவிருவினை யென
நூலின்றொழில் வினைமேலேற்றப்பட்டது. மிசைத்த விருவி
னையெனப் பாடமோதி, இருவினைகளுள் மிக்க விருவினையாகி
ய பிரமக்கொலை பரிமேதவேள்வி போல்வன தம்முள் ஒருங்
கே பயன்றருவனவாய் ஒத்தகாலத்தென் றுரைப்பாருமுளர். அ
ஃது ஈண்டைக்குப் பயன்படாமையுஞ் சித்தாந்தத்துக் கேலா
மையு மறிக.

இசைத்து வருவினையிலின்பம் பசித்துண்டு பின்னும் பசிப்
பானை யொக்குமெனவே, இறப்பிறவத்தான் மருவப்படு ஞா
னம் பசித்துண்டு பின்னும் பசித்தலில்லாத கடவுளர்க்கு அ
வ்வமிழ்த வுண்டியானுய பயனை யொக்குமென்பது உம் பெற

ப்பட்டது. படவே, அவ்வமிழ்தவுண்டி களை திரை மூப்பின்றி நிலைபெறுதலாகிய பெரும்பயனைத் தருதன் மாத்திரையேயன்றிப் பசி தீர்தலாகிய அவாந்தரப் பயனையுந் தருமாறுபோல இறப்பிறவமுந் தத்துவஞானத்தைப் பயத்தன் மாத்திரையேயன்றித் தத்தம் பதமுத்தியாகிய அவாந்தரப்பயனைப் பயத்தலும் அமைவுடைத்தாமாறு கண்டுகொள்க.

அ—கு, முதலதிகரண முடிந்தது.

மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய் - மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மந்தப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன். (௯)

இது, விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்க்குக் கத்தா வுணர்த்துமுறைமை கூறுகின்றது.

இ-ள். மெய்ஞ்ஞானந் தானே விளையும் விஞ்ஞானகலர்க்கு. எ-து. ஆணவமலமொன்றுமுடைய விஞ்ஞானகலர்க்கு மலபாசம் போக்கத்தக்கவெல்லையுண்ணின்றுணர்த்துகின்ற கத்தா வுணர்த்தத்தானே யுண்மைஞானம் விளையும். சுபாவமென ஞானமுண்டானவருக்கு மொருவனுண்டாக்கவேண்டுகையில் அவன்குருவென்றதாம்.

அந்தப்பிரளயாகலர்க்கு முன்னுணர்த்துந் தான் குருவாய் முன். எ-து. ஆணவமலமுங் கன்மமலமு முடையாராகிய அந்தப்பிரளயாகலர்க்கு உண்ணின்றுணர்த்துகின்ற கத்தா தானே தெய்வகுருவாய் வந்து முன்னின்றுணர்த்துவன்.

அஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய் மெய்ஞ்ஞானம் பின்னுணர்த்தும். எ-து.

ஆணவங் கன்ம மாயையென்னு மூன்றுமலமுங் கூடி அஞ்ஞானத்தைப் பொருந்திய வந்தச் சகலர்க்கு மானிடமான திருமேனியைத்தரித்துவந்து மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரம் என்னுஞ் சத்திநிபாதங்களுக்கிடான முறைமையாலே தீக்கைநடத்திச் சரிதை கிரியாயோகங்களிலே நிறுத்திப் பின்னர் உண்மைஞானத்தை யுணர்த்துவன். எ-று.

விஞ்ஞானகலர் பிரளயாகலர்களை விரிக்கிற் பெருகும், வந்துழிக்காண்க.

சகலர்க்குத் தீக்ஷை முறைமையிலே என்றது, நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தியாதீதமென்னுங் கலைகளிலே மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவங்களையடைத்துக் கலாசோதனைப்பண்ணிச் சுத்தனாக்கி மேலுங் கன்மம்ஏறுதபடி யுபதேசிப்பனென்பதாம். அவை, "உரைதருமிப்பசுவர்க்க முணரின்மூன்றும்" "பலவிதமாசான்பாச மோசனந்தான்பண்ணும்படி" "பாலரொடு வாலீசர்விருத்தர்பனிமொழியார்" "ஓதியுணர்ந்தொழுக்கநெறி யிழுக்காநல்ல" "அழிவிலாக்கிரியையினலாதல்" "மந்திரங்கள்முதலைந்து" "கலையந்தில்வியாத்தி" "வித்தையில்மந்திரமிரண்டு" "சாந்தியாதீதகலைதன்னில் மந்திரங்கள்" "மூன்றுதிறத்தணுக்கள் செய்யுங்கன்மங்கட்கு முன்வினையாய்" என வழிநூலார் நூற்செய்தமுறைமையறிக. சித் - அ—சூ, உ - முதல் ௧௦ - வரை.

உத்தமரானவிஞ்ஞானகலரு மத்திமரானபிரளயாகலரும் அதமரானசகலரு மிப்படியென்னு முறைமைகூறி யவர்களுக்குணர்த்துகின்ற சத்தரவே பரவர்செய்திகளறிந்துருவாவனென்பது சாத்திரதிட்டி.

இலைவிரிக்கின்ற பொருளைத் திவ்வியாகமங்களிலே கா ண்க. (௩)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். ஓரோரிடங்களிற் குருவாய்வந் துணர்த்துதலின்றியும் ஞானநிகழுமாறென்னையென்பாரை நோக்கி அதனை வரைசெய்துணர்த்தி வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். விஞ்ஞானகலர்க்குத் தானே மெய்ஞ்ஞானம் விளையும். எ-து. அம்முதல்வன், மூவகையான்மாக்களுள் விஞ்ஞானகலராயினார்க்குத் தன்மையினின்றவாறே தத்துவஞானத்தை விளைவிப்பன்:—அன்றிப் பிரளயாகலருக்குத் தான் குருவாய் முன் உணர்த்தும். எ-து. அவ்வாறன்றிப் பிரளயாகலராயினார்க்கு நாற்றோளும் முக்கண்ணுங் கறைமிடறுமுதலிய உறுப்பிற்றாய் முத்தொழினடாத்தி நின்ற தன்னியற்கை வடிவே குருவடிவாகக் காட்டி முன்னாக நின்று தத்துவஞானத்தையுபதேசித்துணர்த்துவன்:—அஞ்ஞானம் அச்சகலர்க்கு அக்குருவாய்ப் பின் மெய்ஞ்ஞானம் உணர்த்தும். எ-து. அவிச்சையையுடைய சகலராயினார்க்கு அவர் வடிவுபோலும் வடிவுடைய குருவாகி அவ்வடிவின் பின்னாக மறைந்து நின்று தத்துவஞானத்தை யுணர்த்துவன்—முன். எ-து. அவ்வேறுபாட்டை யறிவாயாக. எ-று.

முன்னென்றதனை முன்னைப்பொருளென்றுரைத்து எழுவாயாகக் கோடலுமொன்று.

விளையுமென்பது அரசனெடுத்தவாலயம் என்புழிப்போல வினைவிகுதி தொக்குநின்றது. இவ்வாறன்றி எளிதிற் சமைக்கப்படுதனோக்கி அரிசி தானே அட்டது என்றாற்போல எளிதின் விளைவிக்கப்படுதனோக்கி மெய்ஞ்ஞானந்தானே விளையுமென்று

ரெனினுமமையும். "உண்ணின்றறுத்தருளி" என்றார் புடைநூலாசிரியரும். போற்றிப்பஃறொடை.

ஈண்டு அஞ்ஞானமென்றது அவிச்சையையென்பது சகலர்க்கே அடையாமையோதியவாற்றானறிக.

அச்சகலரென்றது தவஞ்செய்தாரென மேலெடுத்துக்கொள்ளப்பட்ட சகலரென்றவாறு.

அக்குருவென்றது மேற்கோளிற் கூறிப்போந்த குருவென்றவாறு.

தானே விளையும் முன்னுணர்த்தும் பின்னுணர்த்தும் எனவே, விஞ்ஞானகலர்க்குத் தன்மையினும், பிரளயாகலர்க்கு முன்னிலையினும், சகலர்க்குப் படர்க்கையினும், நின்றுணர்த்துமென வரைசெய்தவாறு காண்க. இவற்றுள் முன்னைய விரண்டும் நிராதாரமெனவும், பின்னையது சாதாரமெனவுங் கூறப்படும்.

அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்
செறியுமா முன்பின் வினைகள் - நெறியிற் [டாங்
குறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீ
குறைவில் சகன்சூழ்கொள் பவர்க்கு (௪)

இது, வேதாகமங்களொழிந்த நூற்கள் நூலல்லவென்கின்றது.

இ-ள். அறிவி ஆன்மாக்கள் யாதொரு பொருளையும் அறி
க்கவன் விக்கவொழிந்தறியாது.
றி யறி
யாவுள
ங்கள். எ-று.

செறியுமா மு முன்புசெய்த வினைகள் பின் செறிந்து
ண் பின் வினைக வாராமிற்கும்.
ள். எ-து.

என்றது சஞ்சிதகன்மம் தீக்ஷையிலேபோம். பிராரத்தம் புசிக்கவேணுமென்றதாம்.

நெறியிற் கு பதி பசு பாசங்களைக் கூறுமிடத்துத் தி
றையுடையசொ ருந்தக்கூறுதலின்றிக் குறையுடைத்தாகிய
ற் கொள்ளார். சாத்திரங்களைச் சாத்திரமென்று கொள்
எ-து. ளாராய்.

என்றது, குறைவற்றநூல் வேதாகமங்களாதலால் அவை யொழிந்தநூல்களை நூலென்று கொள்ளார்களென்றதாம். எனவே வேதாகமத்தின் வழி வந்த நூல்களை நூலெனறதாம்.

குறைவில் சக சர்வஞ்ஞத்துவத்தினும் சர்வகர்த்தத்து
ன் சூழ் கொள்ப வத்தினும் சர்வாநுக்கிரகத்தினுங் குறை
வர்க்கு. எ-து. வில்லாத சகநாதன் அருளிச்செய்யப்பட்ட
வேதாகமங்களைச் சாத்திரமென்று கொள்
ளுணர்வார்க்கு.

கொள் பவத் எடுத்த தேகத்திலே முத்திபெறுவன்
தின் வீடாம். எ-று.
எ-து.

வேதாகமம் ஒழிந்த நூலல்லவை "இம்மையே யீரெட்டாண் டெய்தி" என்பதனில் உலோகாயதன்முதலாயினார் கூறும் நூல்கள் நூலல்லவென்பதாம். சித் - அ—சூ, கஉ—செ.

வேதாகமமே நூலென்றுகொள்ளுதல். "ஓதுசமயங்கள்". "அருமறையாக[illegible]" "வேத நூல் சைவ நூலெண்டிரண்

டேநூல்கள்" "சித்தாந்தத்தேசிவன்றன் றிருக்கடைக்கண்சேர்த்தி" என்றவழிநூலாலறிக. கங - முதல் கசு - வரை.

சர்வஞ்ஞத்துவமும் சர்வகர்த்தத்துவமும் சர்வாநுக்கிரகமுமுடைமை. "இறைவனுவான் ஞானமெல்லா மெல்லாமுந் தன்மை யநுக்கிரகமெல்லாம்". என்றதனாலறிக. கஎ—செ.

"அறிவிக்கவன்றியறியாவுளங்கள்." எனவே தனக்கெனவோரறிவில்லை குருவறிவிக்குமுறைமையொழிந் தறியார்கள். என்பதனாற் குருவுஞ் சற்குருவாகவேணும், நூலும் வேதாகமமாகவேணுமென்றதாம்.

இதுவுஞ்சாத்திரதிட்டியெனவறிக. (ச)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். விஞ்ஞானகலர் முதலிய மூவர்க்கும் ஓரியல்பா னுணர்த்தாது அவ்வாறு தன்மையினும் முன்னிலையினும் பின்னிலையுமா யுணர்த்துதல் எற்றுக்கென்பாரை நோக்கிக் காரணங் கூறி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். உளங்கள் நெறியின் அறிவிக்க அன்றி அறியா. எ-து. உயிர்களெல்லாந் தமக்குரிய படிவழியின் வைத்து முதல்வனறிவிக்க அறியுமியல்பினவன்றி ஒன்றுபோல் அறிவிக்கவறியுமியல்பினவல்ல ஆகலான்—குறைவு இல் சகன் சூழ்கொள்பவர்க்கு. எ-து. அவ்வறிவாற் குறைபாடில்லாத சகக்கடவுளது உபதேசமொழியைக் கொண்டுணருமியல்பினராகிய பிரளயாகலர் சகலர்க்கு—குறைகள் முன் பின் செறியுமாம். எ-து. அவ்வறிவித்தாலறிதலாகிய குறைகள் முன்னிலையினும் பின்னிலையினு நிகழ்வனவாம்—குறைவு உடைய சொல் கொள்ளார் கொள் பவத்தின் வீடு என். எ-து. குறைவில் சகனலாகிய குறைவினையுடைய உபதேசமொழி கொண்டுணர

வேண்டாத விஞ்ஞானகலர்க்கு முதல்வனாற் கொள்ளப்பட்ட தன்னுண்மைமாத்திரையின் விடுபயக்கு முணர்வுண்டென்றறிவாயாக. எ-று.

குறை இன்றியமையாமைப்பொருள்; அது "வினைக்குறைதீர்ந்தாரிற் றீர்ந்தன்றுலகு" என்பதனுட் பரிமேலழகருரையானுமுணர்க. திருக்குறள் ௬உ-அதிகாரம், உ—செ.

பவம், சம்பவம், உண்மை என்பன ஒருபொருட் கிளவி.

விடுபயக்குமுணர்வை வீடென்றும், சூழ்ச்சி பயக்கு முபதேசமொழியைச் சூழென்றுங் காரணகாரியமாக உபசரிக்கப்பட்டன. கொள்பவர் கொள்ளாரென்பனவும் அவை. கொள்ளார்க்கென்னு நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது. "ஐந்தவித்தானாற்றல்" என்புழிப்போல.

ஆம் விடெனவியையும். வீடாமெனப் பாடமோதுவாருமுளர்.

மேலைவெண்பாவின் முன்னுணர்த்தும் பின்னுணர்த்துந் தானே விளையுமெனக் கூறியவற்றை ஈண்டு நெறியினறிவிக்கவன்றியுறியாவாகலான் அது முன் செறியும் பின்செறியும் பவத்திருமெனக் காரணங் காட்டி வலியுறுத்தினார். இதற்குப் பிறரெல்லாந் தத்தமக்கு வேண்டியவாறே மேலைவெண்பாவோடு இயைபறவுரைத்தார். அல்லதூஉம் அறிவிக்கவன்றியறியாமை உபதேசியாய் என ஆன்மாவின்றன்னியல்பு கூறும்வழிப் பெறப்பட்டதாகலின் அதனை ஈண்டும் புனருத்தியாகக் கூறவேண்டாமையின் மேலது வலியுறுத்துதற் கேற்புடைய அறிவிக்க அறிதற்கட்படும் விசேடமாத்திரையே ஈண்டெடுத்தோதினாரென்றுணர்க. படிவழியின்வைத்தறிவிக்கவன்றியறியாமை "பந்தமும் வீடுந் தெரிபொருட் பனுவற் படிவழி சென்றுசென்றேறி" என்ப [illegible].

இல்லா முலைப்பாலு மேந்திழையார் கண்ணீரு
நல்லா யுளதாமா னீர்நிழல்போ - லில்லா
வருவாகி நின்றானை யாரறிவார் தானே
யுருவாகித் தோன்றானே லுற்று. (ரு)

இது, குருவினுடைய திருமேனி மந்திரதேகமுமல்ல மாயா தேகமுமல்லவென நின்றது.

நல்லாய்-மகடூஉமுன்னிலை.

இ-ள். இல்லா முலைப் பாலு மேந்திழையார் கண்ணீரும் உளதாம் போல். எ-து. ஏந்தினவாபரணத்தை யுடையாரிடத்துக் காண்டற்கில்லாத முலைப்பாலுங் கண்ணீருஞ் சிநேகத்தானுஞ் சோகத்தானு முண்டாகித் தோன்றினாற்போலவும்.

நீர் நிழல்போல். எ-து. நீரின்கண்ணே பார்த்தநிழல் தோன்றினாற்போலவும்.

போல் என்பதனை இரண்டிடத்துங் கூட்டுக.

இந்த மூன்றுவமை விஞ்ஞானகலர் பிரளயாகலார் சகலர் மூவர்க்கு முருவாய்நின் றுபகரிக்கு முறைமை கூறியதாம்.

இல்லா வருவாகி நின்றானை யாரறிவார் தானே யுருவாகித் தோன்றானே லுற்று. எ-து. கண்டார்க் கில்லையா யரூபசொரூபியாய் நிற்கின்ற சிவ னிப்படி மூன்றுவிதமாகத் திருமேனிகொண்டு வாரானாகில் அவனையா வர்தாம் அறிவார். எ-று.

குருதிபாலாய்த்தோன்றினாற்போல விஞ்ஞானகலர்க்குப் பிராணனாய்நின்றுபகரித்த தற்சொரூபந்தானே பின்புந் தீவிரதரமாகிய சத்திநிபாதத்தாலே போதித்துப் போதசொரூபனாகி நிற்பனென்றதாம்.

கண்ணீர் பிரளயாகலர்க்கு, அவர்களிடத்தே கலந்து நின்ற சிவன் தீவிரதரமாகிய சத்திநிபாதத்தாலே தெய்வகுருவாய்ப் போதித்துநிற்பனென்றதாம்.

நீர்நிழல் சகலர்க்கு, உயிர்க்குயிராய் நிற்கின்றசிவன் மந்த மந்ததரமென்னுஞ் சத்திநி பாதத்தாலே யவர்களைப்போலத் திருமேனிகொண்டு வருவனென்றதாம்.

அருவாய்நின்றசிவனே யுருவாகவுங் காணலாமென்னும் பக்கத்துக்கு முலைப்பாலுங் கண்ணீரும் நீரு நிழலுஞ் சபக்கமாயினவாறுகாண்க.

அருவானவ னுருவுகொள்ளவேண்டிய தென்னெனின்? அருளாலேயென்னுமேதுவும் வந்தவாறுகாண்க.

இனிச்சகலராவார் யாவரெனில்? பிரமாமுதல் எறும்பீறுகவாதலால், திவ்வியசாதியென்றும் மானுடசாதியென்றும் விலங்குசாதியென்று மூன்றுவிதமாவர். சகலர் திவ்வியசாதிக்கு மந்தச் சத்திநிபாதம். மானுடசாதிக்கு மந்ததரமான சத்திநிபாதம். விலங்குசாதிக்கு மந்தரவித்தியான சத்திநிபாதம் இப்படிவேதாகமங்களிலே கூறுமுறைமையறிக. (ரு)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அம்முத்திறத்துள் ஈண்டைக்கெடுத்துக்கொண்ட அஞ்ஞான வச்சகலர்க்கக்குருவாதல் ஏனையபோலன்மையின் உபசாரமேயன்றி ஏனையபோலுண்மையாதல்

செல்லாதென்பாரை நோக்கி உண்மையாதலை உவமைமுகத்தான்வலியுறுத்துதலிற்று.

இ-ள். நல்லாய். எ-து. அறிவால் நன்மையுடைய மாதுக்கனே—ஏந்து இழை பால் முலைப்பாலும் கண்ணீரும் இல்லா உளவாம் ஆல். எ-து. ஏந்திய விழைகளையுடையாட்குக் குழவிமாட்டுளதாகிய அருவாகிய அன்பினைப் பிறரறியுமாறு வெளிப்படுத்தும் அவ்வன்பினுருவாகிய முலைப்பாலுங் கண்ணீரும் அவண்மாட்டுக் குழவியைக் காணுமுன் இல்லாவாய்ப் பின்னுளவாம்· அதுபோல—நீர் நிழல் போல் இல்லா அரு ஆகி நின்றானை ஆர் அறிவார் தானே உரு ஆகி உற்றுத் தோன்றானேல். எ-து. நீரின்கணிழல்போல் உயிர்கண்மாட்டுப் புலப்படுதலில்லாது அருவமாய் நின்ற முதல்வனை யார்தாமறிவார், அவனே குருவடிவாய் வந்து தோன்றி நின்று உணர்த்தானாயின். எ-று.

ஒருவருமில்லையென்பதாம்.

இஃதெடுத்துக்காட்டுவமை.

இன்றியமையாமையுணர்த்துவார் தோன்றானேலாரறிவாரென எதிர்மறைமுகத்தாற் கூறினார்.

பொருளுக்கோதியதனை உவமையினுங் கூட்டி ஏற்குமாறுரைக்க.

முலைப்பாலுங் கண்ணீரும் அன்பை விளக்குமென்பது "சுரந்த திருமுலைக்கே துய்யதிரு ஞானஞ்—சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த—தனமுடையா டென்பாண்டிமாதேவி தாழ்ந்த—மனமுடையா ளன்பிருந்தவாறு." திருக்களிற்றுப்படியார். ருச—செ. என்பதனானும், "அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்—புன்கணீர் பூசறரும்."

என்பதனானுமறிக. திருக்குறள்—அ, அதிகாரம் க—செ. அவ்வி ரண்டும் அன்பின் வடிவே பிறவல்லவென்பது அன்பு நிகழ்தற் குரிய காரணமுள்வழி வெளிப்பட்டு அஃதில்வழி வெளிப்ப டாத ஒற்றுமைநோக்கிக் கண்டுகொள்க. இவ்வொற்றுமை யுண ர்த்துவார் இல்லாவா யுளவாமென்றார்.

இல்லவென்பது முற்றெச்சக்குறிப்பு.

ஆல் அசை. நீர் அகத்தியங்கு முயிர்கட்கு இடங்கொடு த்தலுண்மையான் நீரின் கண் வெளியுண்டென்பதூஉம், உண் டாகவே, ஆண்டு நீருக்கு நிழலுண்டென்பதூஉம், பெறப்பட் டன. அந்நிழல், வேறு நில்லாது நீரோடு விரவி நிற்றலின் நீர்போற் புலப்படாதாயிற்று. அதுபோலச் சிவசைதந்நிய மும் யானென்னுமுணர்விற்கு விடயமாய்ப் புலப்படும் ஆன்ம சைதந்நியத்தோடு விரவிப் புலப்படாது நிற்பதொன்றென் பார் நீர் நிழல்போலில்லா வருவாகி நின்றானையென்றார்.

☞ அ—சூ, இரண்டாமதிகரண முடிந்தது.

பன்னிறமே காட்டும் படிகம்போ லிந்திரியந்
தன்னிறமே காட்டுந் தகைநினைந்து - பன்னிறத்துப்
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்மெய்
மெய்ப்பொருட்குத் தைவமாம் மேறு. [கண்டான்

இது, ஞானதீக்கையினுடைய பெருமையும் பெத்தமுத்திகளி னுடைய நிலைகளுங் கூறுகின்றது.

முன்ன ரைந்துவெண்பாவானுந் தன் முதற்குரு வாய்த் தவச்திறுணர்த்தினமைகூறி யைம்புல ன் களினானு மயங்கித் தம்மை யுணராமைநின்ற து கூறுகின்றது.

இ-ள். பன்னிறமே காட்டும் படிகம் போ லிந்திரியந் தன்னிறமே காட்டுந் தகை நினைந்து. எ-து. — பளிங்கு பல நிறங்களையுங் காட்டுமுறைமைபோல, ஆன்மாவு மிந்திரியங்களினுடைய சொரூபங்களைக் காட்டு முறைமையை விசாரித்து.

என்றது, பளிங்கு பலநிறங்களையுங்காட்டித் தன்னுடைய நிறம் வேறாய் நின்றாற்போல, ஆன்மாவுக்குண்டாகியநிற மிந்திரியங்களுடைய நிறமல்ல; வேறாயிருந்ததென்று விசாரிக்கவென்றதாம்.

நினைந்து என்றது, இந்திரியங்களுடனேகூடி யதுவதுவாய்நின்று சீவிக்கின்றமுறைமை யறிதலாம்.

பன்னிறத்துப் பொய்யாயப் புலனை வேறுணர்ந்து. எ-து. — அப்படிப் பலகுணபேதமாய்ப் பொய்யாகின்ற விந்திரியங்களை நம்முடைய சொருபத்துக் கிவைவேறென்றுகருதி.

பொய் பொயா மெய்கண்டான். எ-து. — பொய்யைப்பொய்யென்று மெய்யைத் தரிசித்தவன்.

மெய்ப்பொருளுக் கைவமாம் வேறு. எ-து. — உண்மையாகிய சிவனுக் கடிமையாவோனென்றதாம். (வேறு என்பதற்கு இந்திரியங்களுக்கு வேறுபென்றுமாம்.) இந்திரியக்களைநீங்கத் திருவடியடைவர் எ-று.

எனவே, யான்மா விந்திரியங்களுடனே கூடிநிற்குதல் சிவ

னுடனேகூடிநிற்குத லொழிந்து தனித்துநில்லாதென்பதாம். ஊசலாடினவ னூசற்கயிறற்று லூசலுக்குந்தனக்கும் பூமியே யாதாரமானாற்போல விந்திரியங்கள்கெட்டால் சிவனேயாதாரமெனவறிக. எனவே இந்திரியங்களைநீங்கிக் கேவலசகலமாகிய மயக்கவிகற்பங்களில் தேசம் காலம் இடம் குணம் முதலாயினகருதாமல் நிட்டையடைகவென்றதாம். "அறியாமையறிவகற்றி" "தேசமிடங்காலந் திக்காசனங்களின்றி" "ஞானமதின் ஞானநிட்டையுடையோருக்கு" என்றார்வழிநூலார். சித் - அ—கூ, ௩௦ - ௩௩ - ௩௨—செ "பன்னிறங்களவைகாட்டும் படிகம்போலுள்ளம்" என்பதுமறிக. ௩௨—செ

இந்திரியங்களினுடையசொரூபத்துக்கு ஆன்மசொரூபம் வேறென்னுந் துணிபொருட்பக்ஷமும், அஃதெத்தாலென்னில் அவைபொய்யாதலாலென்னு மேதுவும், அஃதென்போலவென்னில் பஞ்சவன்னமும்படிகமும்போல வென்னுஞ்சபக்ஷமுங் காட்டியவாறறிக. (௬)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம் எ-னின். அங்ஙனங்காட்டிற்றையே காட்டிநிற்குமாயின், அவ்விந்திரியங்கள் உள்வழித் தம்முதல் குருவுமாயுணர்த்தினும் உணர்தல் செல்லாதுபோலுமென்பாரை நோக்கி உணர்தற் குபாயங்கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். பல் நிறம் காட்டும் படிகம்போல் இந்திரியம்தன் நிறமே காட்டும் தகை நினைந்து. எ-து. தன்னாற் சாரப்பட்ட பன்னிறங்களி னியல்பே தன்மாட்டுக் காட்டிநிற்கும் பொதுவியல்புடைய படிகம்போலத் தன்னாற்சாரப்பட்ட இந்திரியங்களினியல்பையே சார்ந்ததன்வண்ணமாய்த் தன்மாட்டுவி

ளக்கிநிற்குந் தனது பொதுவியல்பை முன்னர்ச் சிந்தித்தறிந்துகொண்டு பின்பு—பல் நிறத்துப் பொய்ப் புலனை வேறு உணர்ந்து. எ-து. அந்நிறங்கள் படிகத்துக்கு வேறென்றறியுமாறுபோலப் பலவகையியல்புடைய பொதுவியல்பைச் செய்யும் பொறிகளைத் தன்னின் வேறெனத்தெளிந்து—பொய் பொய்யா மெய்கண்டான். எ-து. அவற்றுனுடைய அப்பொதுவியல்பு பொய்யாயொழியுமாறு தனது சிறப்பியல்பை யுணர்ந்தானாயின்—வேறு மெய்ப்பொருட்குத் தைவம் ஆம். எ-து. அவ்வசத்தாகிய பொறிகளுக்கு வேறாகிய சிவசத்தினதியல்பு தன்மாட்டு விளங்கச்செய்யுமாகலின் அச்சிவசத்துக் கடிமையாம். எ-று.

ஈண்டுப் பொய் மெய்யெனப்பட்டன அப்பொருளவாதல் மேலே காட்டினும்.

தைவமென்பது தேவனதுடைமை யென்னும் பொருட்டாய வடமொழிப்பகுபதம்.

இதனானே கருவிகளுள்வழிக் காட்டிற்றைக் காட்டிநிற்றலின் அறிதல் செல்லாது அவை நீங்கியவழிக் கேவலமாய் மூடியுமாகலிற் றன்னுண்மையறியுமா றியாங்ஙனமென்னுங்கடாவை யாசங்கித்து அவையுள்வழியே தன்னுண்மை யறிதற்குபாயங்கூறி இதுபற்றி அவை காட்டிற்றைக் காட்டி நிற்றற் கிழுக்கில்லையென வலியுறுத்த வாறுமென்க.

மெய்ப்பொருட்குத் தைவமாமென்றதனால் [illegible] கரணத்திற்குத் தோற்றுவாய் செய்தவாறு.

☞ அ—ஞு, மூன்றுமதிகரண [illegible]

சிறைசெய்ய நின்ற செழும்புனலி னுள்ளம்
சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து - சிறைவிட்
டலேகடலிற் சென்றடங்கு மாறுபோன் மீளா
துலேவிலரன் பாதத்தை யுற்று. (எ)

இது, தேகேந்திரியங்களை வேறென்றுகண்டவன் மீண்டும் பசுகரணமாய்நில்லான் சிவகரணமாய்நிற்பனென்பதுவும், தேகாந்தத்தே திருவடியைப்பெறுகை நிச்சயமென்பதுவுங் கூறுகின்றது.

இ-ள். சிறைசெய்ய நின்ற செழும்புனலி னுள்ளம். எ-து.	அணைகட்ட அந்தவணையிலே கட்டுண்டுநின்ற வெள்ளம்போன்ற வான்மா.
சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து. எ-து.	தன்னைச் சிறைசெய்துநின்ற விந்திரியங்களை யுணருமுறைமையாலே யுணர்ந்து நீங்கி
உலேவிலரன் பாதத்தை யுற்று மீளாது. எ-து.	கேடிலாத சிவனுடைய திருவடியைக்கூடி மீண்டு மிறவாது. அஃதென்போலவென்னில்?
சிறைவிட்டலே கடலிற் சென்றடங்கு மாறுபோல். எ-து.	கட்டுண்டுநின்ற அணையைவிட் டலேயையுடைய கடலிலே சென்றடங்குதலேயுடையவாறுபோல. எ-று.

கடலிலேசென்று புக்க ஆற்றுநீர் மீண்டும் அதன்வழியேயேறினும் அந்தஉப்புநீராயே ஏறினாற்போல இந்திரியங்களுட

னேகூடிப் பசுகரணமாய்நில்லாது சிவகரணமாய்நிற்குமென்பதாம். எனவே தேகாந்தத்தே திருவடியைப்பெறுவரென்பதாயிற்று.

பசுகரணஞ் சிவகரணமாய்நிற்றலாவது, இந்திரியங்களைத் தற்சொரூபமே சொரூபமாக்கி நிற்பதேநிலை. அந்தநிலைகூடாதாகில் பசுகரணஞ் சிவகரணமாகச் சாக்கிரத்தே யதீதம்வரவிருத்தலாம். "கருவிகழிந்தாற் காணுரொன்றுமெனிற் காணூர்." "இந்நிலைதானில்லையே லெல்லாமீசன்" "சாக்கிரத்தே யதீதத்தைப்புரிந்தவர்கள்" "பன்னிறங்களவைகாட்டு"என்பதனில் "முன்னிறைநீர்சிறைமுறியமுடுகியோடி" என்றும் வழிநூலார் நூலிற்செய்தவாறறிக. சித் - அ—கு, ௩௬-௩௭-௩௫-௩௭—செ.

ஆன்மாவைச் சுத்தசலத்தோ டுவமித்தது இந்திரியங்கள் தற்சொரூபமாய்நின்ற அவதரமெனவறிக.

கடலைச் சிவனுக் குவமை நிறைவுகுறைதலின்றி யிருத்தற்கெனவறிக.

இந்திரியங்களைநீங்கினால் ஆன்மாச் சிவனைக்கூடி நீங்காதென்னும்பக்ஷத்துக்கு, சிறைவிட்டுநீங்கின வாற்றுநீர் கடலிற்சென்றடங்குமாறு எனபது சபக்ஷமாயினவாறுகாண்க. (எ)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். கருவிகணீங்கினவழி வேறு நில்லாது சிவத்தைத் தலைப்படுமாயின் அவ்வுயிர்க்குங் கருவிகணீங்கிக் கேவலத்தைத் தலைப்பட்ட உயிர்க்குப்போல மீட்சியுண்டுபோலுமென்பாரை நோக்கி அஃதின்றுமாறுகூறி மேலதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். சிறை செய்ய நின்ற செழும்புனலின் உள்ளம். எது. ஒருவன் அணையையுயர்த்துக் கட்டி ... செய்ய ஆ

ஃபடுத் தடையுண்டு தேங்கி நின்ற ஆற்றுநீர்போலக் கருவிக ளாகிய பாசஞானந் தனது வியாபகத்தைத் தடைசெய்ய அ தன்கண் ஏகதேசமாயடங்கித் தடையுண்டு நின்றவுயிர்—சி றை விட்டு அலை கடலில் சென்று அடங்கும் ஆறு போல். எ-து. அவ்வணை முறிந்து தடை தீர்ந்தவழி இடையீடன்றிக் கடலின்கண் முடுகிச் சென்று அந்நீரேயாய் அதனு ளடங்கி மறித்து வாராத ஆற்றுநீர்போல—சிறை செய் புலன் உ ணர்வில் தீர்ந்து. எ-து. கருவிகளாகிய பாசஞானத் தடையினின்று நீங்கியவழி—உலைவு இல் அரன் பாதத் தை உற்று மீளாது. எ-து. தனக்குக் கேடில்லாத சிவபிரா னது திருவடியைத் தலைக்கூடி அத்திருவடி நிறைவேயாய் அ தன்கணடங்கிப் பின் மீளுதல் செய்யாது. எ-று.

சிறைசெய்யநின்ற செழும்புனலின் உள்ளம் என்றது தொ கையுவமம். இன்—உவமவுருபு. தேக்கத்தின் மிகுதி யுணர் த்துவார் செழும்புனலென்றார்.

மலசத்திக்குக் கேடுண்மையின் அதனைத் தலைப்பட்ட உயிர் க்குக் கருவிகளின் மீட்சி கூடும்; சிவசத்திக்கு அஃதின்மையி ன் அதனைத் தலைப்பட்டவுயிர் அவ்வாறு மீளுதற்கோரிடையி ல்லையென்பார் உலைவிலரன்பாதமென விசேடித்தார்.

அடங்குமென்னும் உவமவினை பொருளினும், மீளாதென்னு ம் பொருள்வினை உவமையினுஞ் சென்றியைந்தன.

எவ்வுருவுந் தானென்னி லெய்துவா ரில்லையா
மிவ்வுருவின் வேறே லிறையல்லன் - எவ்வுருவுங்
கண்போ லவயவங்கள் காணுவக் கண்ணில்லான்
கண்பேறே காணக் கழல். (அ)

இது, ஆன்மாக்கள் சிவனைக் கூடுகின்ற முறைமை கூறுகின்றது.

இ-ள். எவ்வுருவுந் தானென்னி லெய்துவா ரில்லையாம். எ-து. — எல்லா ரூபங்களுஞ் சிவனேயென்னில் அவனைக்கூடுதற் கொருமுதலில்லையாகும்.

இவ்வுருவின் வேறே லிறையல்லன். எ-து. — இந்த ரூபங்களுக்கு வேறாய்நிற்பனென்னின் ஏகதேசியுமாய்க் கத்தாவுமல்லவாவன்.

எனவே, சர்வவியாபியென்றதாம். ஆனாலெங்குமாய் நிற்கின்ற சிவனைக் காணவேண்டாவோவென்னின்?

எவ்வுருவுங் கண்போ லவயவங்கள் காணு. எ-து. — எல்லா ரூபங்களையுங் (காணுந்தன்மையுடைய) கண்ணைப்போல நின்ற அவயவங்கள் காணாதுநின்றாற்போலச் சிவனெல்லாரிடத்தினு மொக்கநிற்கினும் ஊனக்கண்ணுடையவர்கள் காணமாட்டார்கள்.

ஞானக்கண்ணையுடையவர்கள் காண்பார்கள் என்பதாம்.

அக்கண் ணில்லான் கண்பேறே காணக் கழல். எ-து. — திமிரத்தாலே கண் மறைந்திருந்தவன் அந்தப்படலத்தைக்கீறி நீங்கினபொழுது கண்பெற்றபேறுபோலும் அந்தச்சிபாதங் காட்டக் காணுமாறு. எ-று.

என்றது அந்தத் திமிரநீங்கினகண் [illegible] ன்றவண்ணமுங் காட்டுகின்ற பிரகாசத்தினுடைய வு[illegible] பெற்றுநின்றாற்

போல ஞானதிருட்டியை ஒன்றையுங் காணமாட்டாது. என்றது.

ஆன்மா விந்திரியங்களெல்லாவற்றினு மொக்கநிற்கச்சே கண்ணுக்கே காட்சியுண்டாய் மற்றுள்ள அவயவங்களைப்பெற்றவன் தனக்குப் பிராணனாய்நிற்கின்ற சிவனையுந் தன்னையுங் காண்பனென்றதாம்.

இது, முன்வெண்பாவிற் கடலிலே யாற்றுத்தண்ணீர்சென்று கூடினாற்போல வொன்றாய்விடுமோவென்றவனுக்கு ஆகாதென்பது கூறியதாம். அஃதெங்ஙனேயென்னில்? எங்கும் வியாபித்துநிற்கின்ற வாதித்தப்பிரகாசத்தைத் திமிரத்தாற் காணாதகண் திமிரநீங்கி யந்தப்பிரகாசத்துடனே கூடினவிடத்து வேறுமல்லவாயொன்றுமல்லவாய் நின்றாற்போலச் சிவனுடைய திருவருளைக்கூடி யத்துவிதமாய் நிற்பனென்றதாம்.

சிவன் சர்வவியாபியாய் நிற்பினுஞ் சிலர் காண்பர்கள் யாவருங்காணாரென்னும் பக்ஷத்துக்குக் கண்காண்பதொழிந்து நின்றவவயவங்கள் காணாதுபோலென்பது சபக்ஷமும், ஒன்றாகாது அத்துவிதமாய் நிற்குமென்னும் பக்ஷத்துக்குக் கண்ணிற் பிரகாசமும் ஆதித்தப்பிரகாசமும்போலவென்னுஞ் சபக்ஷமும். இந்திரியநீங்கினவனுக்கு சிவனைக்காணலாமென்னும் பக்ஷத்துக்குத் திமிரநீங்கினகண்போலவென்பது சபக்ஷமாயினவாறு காண்க. "எங்குந்தானென்னினுமெய்தவேண்டா வெங்குமிலையென்னின்வேறிறையுமல்லன்" என்றார் வழிநூலார். சித் - அ—கு, ௩அ—செ. (அ)

சிவஞானமுனிவர் உரை.

எ-து உ-ம். எ-னின். மீளாதென்று விடுத்தல்வேண்டாம் எல்லாஞ் சிவமாகக் கண்டார்க்கு மீண்டாலென் மீளாக்காலென்னென்னுஞ் சிவாத்துவிதசைவரை நோக்கி அறிவின்

யாதற்கேலாமை கூறி மறித்தும் மீளாமையை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். எவ்வுருவும் தான் என்னின் தாள்எய்துவார் இல்லை. எ-து. உயிருணர்வேயன்றிப் புலனுணர்வுஞ் சிவமேயாமாயின் விசேடமின்மையாற் புலன்வழி ஒழுகுஞ் சகலநிலையைக் கைவிட்டுத் திருவடியைத் தலைக்கூடவேண்டாமையின் ஒருவரும் அதனை எய்துவாரில்லையாய் முடிந்து * "பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை யடைய முத்தி" என்னும் வேதாகமங்கள் போலியாய் முடியும்—இவ்வுருவின் வேறேல் இறை யல்லன். எ-து. அது பற்றி முதல்வன் புலனுணர்வோடியையின்றி அதனின் வேறாய் நிற்பன்என்னின் அப்புலனுணர்விற்கு அவனலாகற்பால தொன்றின்மையின் அவன் ஆண்டைக் கிறைவனல்லனெனப்பட்டு முதன்மைக் கிழுக்காய் முடியும். மற்றென்னையோ அதனியல்பென்னின்—எவ்வுருவும். எ-து. உயிருணர்வு போலப் புலனுணர்வுங் கலப்பினாற் சிவமேயாமாயினும் இரண்டுந் தம்முளொப்பனவல்ல—அவயவங்கள் கண்போலக் காணு. எ-து. உயிர்ஐம்பொறிகளினும் ஒப்ப நிற்பினும் அவற்றுண் மெய் வாய் மூக்குச் செவி நான்குங் கண்ணிந்திரியம் ஒளியான் அவ்வான்மபோதத்தோடு விரவிச் சேய்மைக்கண்ணதாகிய விடயத்தையும் வியாபித்தறியுமாறுபோல வியாபித்தறிய மாட்டாவாய்த் தம்மாட்டு வந்த விடயங்களை நின்றுங்குநின்றியைந் தறிதற்றன்மையவேயாம்.—அக்கழல் அக்கண் இல்லார் கண்பேறே காண். எ-து. அக்கண்ணினது வெற்றிப்பாட்டைக் கண்ணொளி யிழந்தாரது கண்பேற்றின்கட் கண்டறிவாயாக. எ-று. * சித்-பாஞ்சராத்திரி மறுதலை, உடு—செ.

கண்ணும் அவயவங்களும் ஆகுபெயர். கண்பேறேயென ஏழாவது தொகுத்து ஏகாரம் விரித்தார். கழலணிவார்க்கு உளதாகிய வெற்றிப்பாட்டைக் கழலெ[illegible]தார். கழல்

காலணிமணிவடம்.

ஈண்டு வெற்றியாவது ஏனை நான்கிந்திரியங்களையு நோக்கி மேம்படுதல்.

கண்போலவயவங்கள் காணு வக்கண்ணில்லார் கண்பேறே காணக் கழலென்பது முதல்வன் இரண்டினுமொப்ப விரவிநிற்பினும் உயிருணர்வுபோலப் புலனுணர்வு வியாபகவிளக்கமாதலின்றி ஏகதேசவிளக்கமாம். உயிருணர்விற்கு உளதாகிய அம்மேம்பாடு அவ்வியாபகவுணர்வை யிழந்த பசுத்துவமுடையார் மாட்டறியப்படாதாயினும் அவரது பசுத்துவநீங்கிய சிவப்பேற்றின்கணறியப்படுமென்பது தோன்ற நின்றமையின் இஃ தொட்டென்னு மலங்காரம்.

சிவமாயவழியும் புலனுணர்வு ஏகதேச விளக்கமாவதன்றி உயிருணர்வுபோல வியாபகவிளக்கமாதலில்லையெனவே, அதன்கண் மீளுதலிழுகென்பது பெறப்பட்டது. இதற்குப் பிறரெல்லாம் இயைபின்றியுரைத்தார்.

ஐம்பொறியி னல்லையெனு மந்தரங்கச் சிவனை
ஐம்பொறியை விட்டங் கணைசகலன் - ஐம்பொறியி
னீங்கானீர்ப் பாசிபோ னீங்கிமல கன்மம்போம்
நீங்கானி னீங்கு நினைந்து. (கூ)

இது, ஞானஉபதேசியாவதற்குமுன்பு கூடிநின்ற மலங்கள் பின்புங்கூடிநிற்குமாகில் அதனாற் பிரயோசனமென்னென்போர்க்கு முன்டவை தானுகமருவிநிற்பன், இப்பொழுது நீங்குகையுங் கூடுகையுமுண்டாகையாற் பிரயோசனமுண்டென்கின்றது.

இ-ள். ஐம்பொ உயிர்க்குயிராய் நின்றுபகரிக்கின்ற சிவன்
றியி ன நீ இந்தவைந்திந்திரியங்களினல்ல வேறென்

ல்லையெ றுபதேசிப்பன்.
னு மந்த
ரங்கச் சிவனை.
ஏ-து.

ஐம்பொறியை விட்டடங் கணை சகலன. ஏ-து. — அப்படியே யுபதேசிக்கைச்செயு மந்த வைந்திந்திரியங்களையும் நீங்கி யந்தரங்கமான சிவனுடனே கூடுகின்றானில்லை.

என்றது, இந்திரியங்களை வேறென்றும் யானந்தரங்கனென்றும் போதிப்பிக்கச்சே சிவனைக்கூடாமலிருக்கைக்குக் காரணமென்னென்னையாகில்?

ஐம்பொறியினீங்கான். ஏ-து. — பிராரத்தகன்மம் புசித்தறுமளவும் அந்த வைந்திந்திரியங்களையுஞ் சடக்கெனவிட்டு நீங்கான்.

நீர்ப்பாசிபோனீங்கி மலகன்மம் போம் நீங்கானில் ஏ-து. — திரோபாவமறைத்துநின்று பிரார்த்தகன்மத்தைப் புசிக்குமளவும் அந்த ஞான உபதேசத்தால் பிரயோசனமென்னென்றாயாகில்? நீரிடத்துண்டாகிய பாசி கல்லைவிட்டெறிந்தபொழுது நீங்குமாறுபோல உன்னைவிட்டுநீங்காத சிவனாலே யுன்னைவிட்டுநீங்கி மலமுங் கன்மமும் போம்.

என்றது, சிவனுடைய திருவருளைக் கூடினபொழுது நீங்கும், நீங்கினபொழுது கூடும், கல்விட்டெறிந்தபொழுது நீங்கியும், நின்றபொழுது கூடியும் நிற்குமாறுபோல வென்பதாம்.

நீங்கு நினைந்து. ஏ-து. — இப்படி மறைப்பது விடுவதாய் வருகின்ற முறைமையை நினைந்து நீ யவையிற்றை நீங்குவாயாக. ஏ-று.

என்றது, தன்னை வினையைத் தலைவனை நினையவென்றதாம் அஃதெப்படியென்னில்? சிவன்கன்மத்துக் கேடாகத் திரோப வித்துப் புசிப்பிக்கிற முறைமையும், கன்மம் போகம் வருகின்ற முறைமையும், தான் புசிக்கின்றமுறைமையும், திருவருளாலே பார்க்க அதிலழுந்துதலை நீங்கி யாகாமியமேமருமற் றேகாந்தத்தே வீடுபெறுதலுடைத்தாம். எ-று.

சிவனுடைய திருவருளைக் கூடினபொழுது மலமாயாகன்ம நீங்கும் திருவருளை நீங்கினபொழுது கூடும், என்னும் பக்கத்துக்கு, நீரும் பாசியும்போ லென்னுஞ் சபக்கமுங் காட்டியவாறறிக. "பாசிபடுகுட்டத்திற் கல்லினைவிட்டெறியப் படும்பொழுது நீங்குமது" என்றார் வழிநூலார். சித்-அ—கு, நக—செ. (க)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். சிறைவிட்டவழி அலைகடலிற்சென் றடங்குநலையன்றி ஆற்றுலலைகடற்கே பாய்ந்த நீர் அவ்வாற்றுன் மறித்தலு முண்மையின் அதுபோல அரன்பாதத்தை யுற்றவுயிருக்கு ஒரோவழி மீட்சியுமுண்டென்பது பெறப்படுதலான் அவ்வழி மீளாமை செல்லாதென்பாரை நோக்கி அம்மீட்சிக்குக் காரணமிதுவென்பதூஉம், அதனை நீக்குதற்குபாயமுங் கூறி வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். ஐம்பொறியின் அல்லை எனும் அந்த தர. எ-து. ஐம்பொறிகள்போல ஏகதேசவிளக்கமுடையாயல்லையென்றறிவுறுக்கப்படுஞ் சித்தாந்தமகாவாக்கியத்தைப் பெற்றுடைய மாணவகனே,—அங்கு ஐம்பொறியை விட்டுச் சிவனை அணை சகலன் ஐம்பொறியின் நீங்கான். எ-து. சிறைவிட் டலைகடலிற் சென்றடங்குமாறுபோலென மேற்கூறியவாறே ஐம்பொறிகளானுய புலனுணர்விற்றீர்ந்து சிவன்றிருவடியையுற்ற சகல

ன் அவ்வைம்பொறிகளான் மீளவதனை நீங்குவானல்லன்—நீர்ப்பாசிபோல் நீங்கு மல கன்மம் வரின் நீங்கானை நீங்கு நினைந்து. எ-து. கல்லெறியும் வழி நீங்கிய நீர்ப்பாசி அது விடும் வழிப் பரக்குமாறுபோல, அவ்வனையின்கணிங்கிய மலகன்மமாயைகள் வாதனைவயத்தானிகழு மயர்ச்சிபற்றிவந்து கூடுமாயின் அதுபற்றிப் பொறிவழி மீளாமல் அவ்வழியுந் தன்னைவிட்டு நீங்காத முதல்வனை முன்னர்க் கூறப்படு முபாயங்களினின்று சிந்தித்து அவற்றை நீக்கிக்கொள்ளும். எ-று.

வரினென்றதனால், வருதல் ஒருதலையன்று வாசனையுள் வழியேயென்பதுபெற்றாம்.

நீங்கியென்பது பாடமாயின், நீங்கினவாகிய மலகன்மமெனப் பெயராகவைத்துரைக்க.

சித்தாந்தத்தை அந்தமென்றது தலைக்குறை. தரம் அதன்கண்ணதாய்ச்சிறந்த ஒருவார்த்தை.

அங்கு மேற்கூறியபடி.

ஐம்பொறியை விட்டணைதற்குரியான் இவனென்பதுணர்த்துவார் சகலனென்றார்.

நீங்குமென்னும் மகரஞ் சந்தி நோக்கிக் கெட்டது. நீங்கெனவே பாடங்கொண்டு அஃதையென வேறு பிரித்து முன்னிலையேவலாக்கி அதற்கேற்ப நீங்காயெனப் பாடந் திரித்துரைப்பாருமுளர்.

மேற்கூறிய மீளாமையை வலியுறுத்துவார் ஐம்பொறியினல்லையெனு மந்ததரசிவனை ஐப்பொறியை விட்டங்கணைசகலனைம்பொறியினீங்கா னென்றும் ஒரோவழியுளதாமாயின், அதற்குக் காரணம் இஃதென்பார் நீர்ப்பாசிபோ னீங்கிமலகன்மம் வரினென்றும், அது நீக்குதற்குபாயங்கூறுவார் நீங்கானை நி

னைந்து நீங்குமென்றுங் கூறினர். மலகன்மமெனவே, இனம் பற்றி மாயையுங் கொள்ளப்பட்டது.

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்—னன்கல நன்மக்கட் பேறு" என்றாற்போல நீங்காவே நீங்கு நினைந்தென்றதனுல் வருகின்ற சூத்திரத்துக்குத் தோற்றுவாய் செய்ததுமாயிற்று.

இம்மூன்றுதாரணங்களும் முறையே திருவடிஞானத்தைப் பெற்றவுயிர் புலனுணர்வின் மீடலில்லையெவும் மீடலிழுக்காமெனவும் ஓரோவழிப் பயிற்சிவயத்தான் மீளவருமாயின் மீளாதவாறு செய்துகொள்ளற்பாற்றெனவுங்கூறித் தாய்தரையேயாமென்னும் ஏகாரப்பொருளை வலியுறுத்தி ஒருபொருண்மல் வேந்தவாறு காண்க.

அ—சூ, நான்காமதிகரணமுடிந்தது.

அ—சூ, எட்டாஞ்சூத்திரமுடிந்தது.

௯ — சூ த் தி ர ம்.

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.

இச்சூத்திர மென்னுதலிற்றோவெனின், ஆன்மா கன்மங்களுக்கீடான போகங்களினுடைய புசிப்பை யநுபவிக்கையில் அதனை ஞானதிருட்டியாலே நீங்கவேணு மென்னு முறைமை கூறுகின்றது.

இது ஆன்மசுத்தி பண்ணுதலாம்.

இ-ள். ஊனக்கண் பாச முணராப் பதியை எ-து. [ஊனக்கண்-பசுஞானம். பாசம்-பாசஞானம்] பசுஞானத்தாலும் பாசஞானத்தாலும் அறிதற்கரிதாய சிவனை.

ஞானக்கண்ணினிற் சிந்தை நாடி. எ-து. ஞானக்கண்ணாலே தன்னிடத்தே நிற்கின்றபடியை யாராய்ந்து

உராத் துனைத் தேர்த்தெனப் பாச மொருவ. எ-து. ஒருவர் ஊராததாகிவிரைந்துசெல்லுங்கானற்றேரை யொக்கும் பாசமென்று நீங்க.

தண்ணிழலா சிவன் குளிர்ந்த நிழலாவன், ம்பதி. எ-து.

விதியெண்ணு ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்கு மஞ்செழுத்தே. எ-று.
எ-து.

என்றது, பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் அறிதற்கரிய சிவனைத் திருவருளாலே கண்டு நிற்பதே நிலையாவது; அந்தநிலை கூடாமல் விசுவமேலிட்டதாகிற் கானற்றேர்போல விசுவம்பொய்யென்று நீங்க அந்தநிலையாம்: அந்த நிலைமையுங் கூடாதாகிற் ஸ்ரீபஞ்சாக்கரத்தை யுச்சரிக்கவென்றதாம்.

ஊராத்தேர் தண்ணிழலாம் என்றது, விசுவமாகிய வெய்யிலிலேநின் றலைந்தவனுக்கு அது நீங்கக் குளிர்ந்த நிழலா யிருப்பனென்றதாம். "பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரியபரம்பரனை" என்றார்வழிநூலார். சித்-சூ, க—செ.

இதற்குப்பிரமாணம்.

சிவஞானமுனிவர் உரை.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு:—குறையுணர்வாகிய பசுவறிவானும் பாசவறிவானும் உணரப்படாத முதல்வனை அவனது திருவடிஞானத்தாற் றன்னறிவின்கண்ணே யாராய்ந்தறிக. அத்திருவடிஞானத்தான் நிலமுதனாதமீறாகிய பாசக்கூட்டம் நின்றுழி நில்லாது பரந்து திரிதற்கண் அதிவேக முடைய பேய்த்தேரினியல்பிற்றாய்க் கழிவதென் றறிந்து நீங்கவே, அப்பதிஞானம் பிறவித்துயராகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும்: அவ்வாறு பாசத்தை யொருவி ஞானத்தைப் பெற்று ஞேயத்தைக் கண்டகாட்சி சலியாமைப்பொருட்டு அப்பொருள் பயக்குந் திருவஞ்செழுத்து அவ்வி

இப்படியறிந்து கணிக்கப்படும். எ-று.

ஊனமென்பது அப்பொருட்டாதல் "ஊனமேற் கிரியைவித்தை" என்பதனானறிக. சிவஞானசித்தி - சுபக்கம் - ௧—௬, ௬—௭. "ஞானமேயான".

"நன்று மன்னிது நாடாய் கூறி" என்றாற்போல நாடியென்பது இகரவீற்று முன்னிலையேவல்.

உராத்துனை ஏழாம்வேற்றுமைத்தொகை. உராவென்பது முதனிலைத் தொழிற்பெயர்; பறவாக்குளவி பாயாவேங்கையென்றாற்போல ஒருவராலுராப்படாத வேகத்தையுடைய தேரெனச் செயப்படுபொருட்கண் வந்த பெயரெச்சமறையாகக்கொண்டுரைத்து, "திருத்தார் நன்றென்றேன் றியேன்" என்றாற்போல உராவென்பது குறுக்கல்விகாரமென்பாருமுளர்.

பின் வந்தபதி ஆகுபெயர்.

நாடியோ வென்போ நரம்புசீக் கோழையோ
தேடி யெனையறியேன் றேர்ந்தவகை - நாடியரன்
றன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணு
மொன்று மெனவறிவா ரின்று. (௧)

இது, தன்னையறியுமிடத்துச் சிவனுடைய ஞானத்தாலொழிந் தறிதற்கரிதாகையாற் சிவனையறியுமிடத்து வாக்குமனத்துக்கு மெட்டாதவனாகையால் அவனுடைய ஞானத்தாலே தன்னையுங்கண்டு, தான்சுத்தனாகிய அவனையுங் காணவேணுமென்பது கூறுகின்றது.

இ-ள். நாடி முன்பு நானென்று கருதிய எலும்போ யோவெ நரம்போசீயோ கோழையோ வென்றாரா ன்போ ய்ந்து பார்த்தவிடத் தவையிற்றில் யாதெ

நரம்பு ன் றென்னை யறிகின்றிலேன். சீக்கோழையோ தேடி யென்னையறியேன். எ-து.

தேர்ந்த வகை — தெளிந்த கூறுபாட்டாலே யாராய்ந்து நாடி. எ-து.

என்றது, யாதொன்றினுடைய வுண்மையை யறியுமிடத்துச் சிவனுடைய ஞானத்தாலொழிந்து அறிதலில்லையெனுமிடமறிந் தென்றதாம். எனவே, பசுஞானத்தாலும் பாசஞானத்தாலும் யாதொன்றையும் அறியவொண்ணாதென்பதாயிற்று. "வேத சாத்திர மிருதி புராண கலைஞானம் விரும்பசபை வைகரியாதித்திறங்கள்மேலாம்—நாதமுடிவான வெல்லாம் பாசஞான கஞுசியான் மாவிவை கீழ்நாடலாலே—காதலினா னான்பிரமமென்னுஞானங் கருதுபசுஞான மிவனுடலிற்கட்டுண்—டோதியுணர்ந்தொன் றொன்றாயுற்றிடலாற் பசுவா மொன்றாகச் சிவனியல்பினுணர்ந்திடுவன் காணே" என்பதனாலறிக. சித்-கூ—சூ, உ—செ.

அரன் றன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணா ரென்னாமெனவறிவா ரின்று எ-து. — சிவனுடைய வருளாலே சிவனையுங்கண்டு தம்மையு மறியார்களாகி லெந்தப்பொருளை யாம்பொருளிது வென்றறிவார்கள் எ-று.

எனவே, ஆகமப்பொருளு மிதுவென் றறியார்களென்றதாம்.

எனவே மனவாக்குக் கெட்டானென்பதுவுங் கூறியவாறறிக.

இது, "கரணங்கள்கெடவிருக்கில் முத்தியாமென்னில்" என்னும் வழிநூலானுமறிக. "சிவனையவன்றிருவடி ஞானத்தாற்சே

ர்" என்பதனானுமறிக. சித் - க—கூ, ரு - ௭—செ.

அது சம்பிரதாய திட்டியா லறிவித்தது. (க)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். கோசரமாதல் பிறிதொன்றாற்பெறப்படாதென்றதென்னை, பசுத்துவநீங்கியவழிச் சுட்டிறந்தறிவதாகிய உயிருணர்வு திருவடிஞானத்தோ டொப்பதாகலின் அதன்கட் கோசரமாதல் அமைவுடைத்துப்போலுமென்பாரை நோக்கி அவ்வுணர்வு விளங்குமாறுணர்த்துமுகத்தான் அவரை மறுத்து ஏதுப்பொருளை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். நாடியோ என்போ நரம்புசிக் கோழையோ தேடினை அறியேன் தேர்ந்த வகை நாடி. எ-து. நாடி முதலியவற்றுள் யான்யார் என்னைத் தேடியுமறிகின்றிலே என்று இவ்வாறு தேர்கின்ற தேர்ச்சியறிவின்கண்ணே இதனைத் தெளிவிப்பதோரறிவு வேறுண்டென ஆராய்ந்துநோக்கி—அரன் றன்னாலே தன்னையுங் கண்டு தமைக் காணார். எ-து. அவ்வாறு நாடுங்கால் விளங்கித் தோன்றுவதாய முதல்வனது திருவடிஞானத்தால் முதல்வனையுமுணர்ந்து முதல்வனின் வியாப்பியமாய் நின்று அங்ஙனமறியும் பொருளாகிய தம்மையுமுணர்தலைச்செய்யாதார்—என்னும் என அறிவார் இன்று. எ-து. மற்றெவ்வியல்பினரென்று தம்மையறிய வல்லுநர் இம்முத்திகாலத்து. எ-று.

நாடியென்றது இடை பிங்கலை முதலியவற்றை. நரம்பெனவே யடங்குமேனும் தலைமைபற்றி வேறுகூறினார். சீ-புண்ணீர். கோழை-ஐ.

ஓகாரந் தெரிநிலை. என்றென்பது சொல்லெச்சம். வகை ஆகுபெயர்.

ஒற்றுமைபற்றி அரனதுஞானத்தை அரனென்றுபசரித்தார்.

உம்மை எதிரது தழீஇயிற்று. எவனென்னும் வினாவினைக் குறிப்புப்பெயர் ஈண்டாகுபெயராய் என்னெனமரீஇயிற்று. ஆம் அசை.

நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ வென்ற உபலக்கணத்தால் ஏனைத் தத்துவ தாத்துவிகங்களினும் அவ்வாறு தெரிதல் கொள்ளப்படும்.

இது தம்மையறியு மாறுணர்த்து முகத்தானே தலைவனையறிந்தபின் அறியப்படுவ தாகிய தம்மறிவு கொண்டு தலைவனையறியு மாறு யாண்டையதென மறுத்து வலியுறுத்த் வாறுகாண்க.

காட்டிய கண்ணே தனைக்காணா கண்ணுக்குக்
காட்டாய வுள்ளத்தைக் கண்காணா - காட்டிய
உள்ளந் தனைக்காணா வுள்ளத்தின் கண்ணாய
கள்வன்று னுள்ளத்திற் காண். (௨)

இது, சிவனுடைய ஞானத்தாலொழிந்து பசுபாசஞானங்களால் யாதொன்றையும் அறிதற்கரிதாகையால், அப்படியறியும் அவதரம் ஆன்மஞானசொரூபியாய்ச் சுத்தனாவனென்பது கூறுகின்றது.

இ-ள். காட்டிய கண்ணேதனைக்காணா. எல்லாத்தையுங் காட்டின கண் டன்னைக் காணமாட்டாது.

எ-

கண்ணுக்குக் காட்டாயவுள்ளத்தைக் கண்கா ணு. எ-து.	தன்னைக் காணமாட்டாததன்றியுந் தனக்குக் காட்டாகிய ஆன்மாவையுங் காணமாட்டாது.
காட்டிய வுள்ளந்தனைக் காணு. எ-து.	கண்ணுக்குக் காட்டாய்நின்ற ஆன்மாவுந் தன்னைக்காணமாட்டாது.
உள்ளத்தின் கண்ணாய கள்வனு முள்ளத்திற் காண். எ-து.	ஆன்மாவுக்குக் காட்டாய் நிற்கின்ற சிவனையுமிப்படி ஆன்மாவினிடத்தே நிற்கின்ற முறையை விசாரி எ-று.

இப்படி சுபாவங்களாற் காண்டற்கரிதாய்த் தன்னாலே தன்னைக் காணவேண்டுகையிற் சிவனைக் கள்வன்தானென்றார். எனவே சிவனுடைய ஞானத்தாலொழிந்து இந்திரியாதிகரணங்களை நீங்கித் தன்னையுங் கண்டு காட்டுகின்ற சிவனையுங் காண்பது இல்லையென்றதாம். எனவே சிவனுடைய ஞானந் தாரகமாகநின்று விசுவமேலிட்டபொழுது நீக்கவேணுமென்பதாயிற்று. "கண்டிடுங்கண் டனைக்காணு" என்றார் வழிநூலார். சித்-௯, ரு—செ.

இதுவுஞ் சம்பிரதாய திட்டியாலறிவித்தது. (உ)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். எதிர் முகத்து ஒருபொருளைக்கண்ட கண்ணே மறித்து நோக்கியவழி வெளிப் புறத்துப்பொருளையுங் காண வல்லும், அதுபோல அங்ஙனந் தேர்ந்தறிதலைச் செய்த உயிரே தெளிந்தறிதலையுஞ் செய்ய வல்லுமெனை அவையுமென்பாரை நோக்கி அதனது மாட்டாமையை விளக்கி அரன்றன்னு

லே காண்டலை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். காட்டியகண்ணே தனைக் காணு. எ-து. உயிராற் காட்டப்பட்டு ஒருவிடயத்தைக் காண்கின்ற கண்ணனது தன்னியல்பைக் காணமாட்டாது—கண்ணுக்குக் காட்டாய உள்ளத்தைக் கண் காணு. எ-து. தனக்கு அவ்விடயத்தைக் காண்பித்து முதலாய்நிற்கு முயிரையும் அதுகாணமாட்டாது—காட்டிய உள்ளம் தனைக் காணு. எ-து. அதுபோல முதல்வனால் மறைந்துநின் றுணர்த்தப்பட்டு ஒன்றனைத் தேர்ந்துணர்கின்ற உயிர் அவ்வாறே தன்னியல்பையுமறியமாட்டாது. தன்னையுணர்த்திநிற்கு முதல்வனையுமறியமாட்டாது—உள்ளத்தின் கண் ஆய கள்வன் தான். எ-து. அத்தேர்ச்சி யறிவின்கண்ணும் உடனாய்நிற்குங் கள்வன் அம்முதல்வனாகலானே—உள்ளத்தில் காண். எ-து. அவனை அவ்வறிவின்கண்வைத்து நாடித் தெளிவாயாக. எ-று.

இது சொற்பொருட் பின்வருநிலை. ஏகாரம் அசைநிலை. "முறைகாக்கு முட்டாச் செயின்" என்றாற்போலக் காணுதென்னுந் துவ்வீறு விகாரத்தாற்றொக்கது.

பின்வந்தவுள்ளம் ஈண்டுத் தேர்ச்சியறிவின்மேற்று. உள்ளத்தின் கண்ணுமென்னுஞ் சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

தோன்றாது நிற்றல்பற்றிக் கள்வனென்றார். கள்வனென்றது கண்ணுக்கு உயிர் மறைந்து நின்றே காட்டுவதாகலான் அது தன்னையும் உயிரையும் அறியமாட்டாவாயிற்று; அதுபோல முதல்வன் இதுகாறு மறைந்து நின்றே யுணர்த்துதலின் உயிர் தன்னையு முதல்வனையும் அறியமாட்டாதாயிற்றென்பதுபட நின்ற குறிப்புமொழி. உள்ளத்திற் காணவல்லார்க்கு அக்கள்வ

ந் தீர்தலின் தம்மையும் முதல்வனையுங் காண்டல் கூடுமென்பதாம். "கள்ள ரோடில்ல முடையார் கலந்திடின்-வெள்ளவெளியாமென் றுந்தீபற" என்றதும் இக்கருத்துநோக்கி. திருவுந்தியார். உ௲.

கண்ணுக்குக் காட்டாய வுள்ளத்தைக் கண் காணுமென உவமைக்கோதியவாறு பொருளினும் வருவித்துரைத்துக்கொள்க

இஃதெடுத்துக்காட்டுவமை.

☞ கூ—கு, முதலதிகரண முடிந்தது.

நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா நந்தனாய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வன் - அற்புதம்போல்
ஆனா வறிவா யளவிறந்து தோன்றானே
வானே முதல்களையின் வந்து. (௫)

இது, தத்துவசமூகம் குணத்திரயங்களை யுடைத்தாகையாற் சொரூபமாகையானும், துக்கத்திரயங்களினுடைய மயமாகையானும், சுகதுக்கத்தினுடைய தானமாகையானும், யாதொன்றுக்குங் கீழாயிருக்கையானும், ஆன்மா அவையவையாய் நிற்றலானும், இவற்றை நீங்கத் தற்சொரூபமா மென்கின்றது.

இ-ள். நிர்க்குணனாய். சாத்துவிக மிராசதந் தாமத மென்னுங் குணங்களை நீங்கி நிற்பானாய், எ-று.

நின்மலனாய். மல மாயா கன்மங்களிற் பொருந்தானாய், எ-று.

நித்தியாநந்தனாய். அழிவில்லாத சுகசொரூபனாய், எ-று.

தற்பரனாய் நி யாதொருபொருள் மேலாயுள்ளது அப்
ன்ற தனிமுதல்வ பொருட்கு மேலாயுள்ளவனாய், ஒப்பில்லா
ன். ல்-து. மல் நின்ற சிவன்;

வானே முத ஆகாயமுதலாயுள்ள தத்துவ சமூகங்களை
ல்களையில். எ- நீங்கில்,

அற்புதமாய். ஆச்சரியமாய்.
ஈ-து.

ஆனுவறிவாய். விட்டுநீங்காத வறிவாய்.
ஏ-து.

அள விறந்து வ அளவைப் பிரமாணங்களைக் கடந்து அ
ந்துதோன்றுனே ப்பாலாயெழுந்தருளி வந்து வெளிப்படா
ஏ-து. னோ? வெளிப்படுவனே. எ-று.

எனவே, தத்துவசமூகத்தை நீங்கவேணுமென்பதாயிற்று.அ
துகளங்கமா யிருப்பனவற்றைப் பார்த்து அறியுமிடத்தக் கள
ங்கமில்லாதவனாலே யறியவேண்டுகையால் தத்துவரூபம், த
த்துவ தரிசநம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசந
ம், ஆன்மசுத்தி, இவை சிவனுடைய வருளாலொழிந் தில்லை
யென்பதாயிற்று. "குறித்தடியினின்றட்டகுணமெட்டுச்சித்
தி" என்றார் வழிநூலார். சித்-க—ரு, க—செ.

இது, சம்பிரதாய திட்டியால் விரித்தது. (ரு)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அசத்தை அசத்தென்று கண்டோ
ருவியவழித் தோன்றுவது சூனியமேயன்றிப் பிறிதில்லை போ
துமென்பாரை நோக்கி, ஞான சொருபத்தினியல்பு கூறி அத

ணை வலியுறுத்துதனுதலிற்று,

இ-ள். நிர்க்குணன் ஆய். எ-து. அசுத்தப்பிரபஞ்சம்போல முக்குணரூபமாயளவிட்டறியப் படுவானுமல்லனாய்—நின்மலன் ஆய். எ-து. முக்குணங்களைக் கடந்த மிச்சிரப்பிரபஞ்சம்போல மலகன்ம காரியரூபமா யறியப்படுவானுமல்லனாய்—நித்தியானந்தன் ஆய். எ-து. மலகன்மங்களையுங் கடந்த சுத்தப்பிரபஞ்சம்போல அநித்தியாநந்தரூபனாயறியப்படுவானுமல்லனாய்—தற்பரம் ஆய். எ-து. இம்மூன்றனோடுங் கூடிப் பொதுவியல்புபற்றி அவ்வாறுணரப்படும் உயிர்போலன்றி அதற்குமேலாய்—நின்ற தனி முதல்வன். எ-து' இவ்வாறு நிற்றலான் ஒன்றனியல்புபற்றி யறியப்படாத தனிமுதலாகிய இறைவன்—வானே முதல் களையின். எ-து. ஆகாசமுதலிய அசத்தை அசத்தென்றுகண்டொருவியவழி—அளவு இறந்து அற்புதம்போல் வந்து. எ-து, பயின்றறிந்து வருந்தனது சுட்டறிவினளவினைக் கடத்தலான இன்னதென்றறியவாராத சூனியப்பொருள்போலத் தோன்றி—ஆனா அறிவு ஆய்த் தோன்றானோ. எ-து. பின்னர்ச்சுட்டிறந்தறியுந் தன்னறிவின்கணீங்காது நிலைபெறுவதாய் "சோதிக்குட் சோதியாய்" விளங்கித் தோன்றுன்கொல்லோ. எ-று. சித் - அ—கூ, ௯அ—செ. 'எங்குந்தா'

தற்பரம் தனக்குப் பரமெனவிரியும். தன்னென்றது உயிரை,

அற்புதம் ஈண்டுச் சூனியத்தின்மேற்று. முதற்கட்சூனியமாய்த்தோன்றினுஞ் சூனியமன்றென்பார் அற்புதம்போல் வந்தென்றார், ஆனாமை நீங்காமை,

ஓகாரம் எதிர்மறை' ஏகாரம் அசைநிலை.

வானே முதலெனவே தோற்றமுறைபற்றி வான் முதலா

கிய பூதங்களும், ஒடுக்கமுறை பற்றி வான்முதலாகிய ஏனைத் தத்துவங்களு மடங்கும்.

நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியானந்தனாய்த் தற்பரமா யென்புழி ஆக்கச்சொல் உண்மைகுறித்து நின்றது வடமொழிப் பதம். அறிவாயென்புழி. ஆக்கம் வேறுபாடு குறித்து நின்றது.

ஒற்றுமைபற்றி முதல்வனது ஞானத்தை முதல்வனென் றுபசரித்தார்.

சுட்டி யுணர்வதனைச் சுட்டி யசத்தென்னச்
சட்ட வினியுளது சத்தேகாண் - சுட்டி
யுணர்ந்தநீ சத்தல்லை யுண்மையைத் தைவம்
புணர்ந்ததனாற் பொய்விட்டுப் போம். (ச)

இது, ஆன்மாச் சிவரூபகமானவிடத்துச் சிவனவனொழிந்து சிவன் தோன்றுமென்றதென்னை யென்போற்குச் சர்வத்தையும் பொய்யென்றுகாண்பது சிவரூபனுமாய்ச் சுத்தனுமாய் நின்ற அவதரமென்பதுவும், அந்த அவதரத்திலன்றி யுண்மை தோன்றாதென்பதுவும், அந்த வுண்மை தோன்றினாலு மந்த வுண்மையினுடைய ஞானமுங் கர்த்தத்துவமு முண்டாகாதென்பதுவுங் கூறுகின்றது.

இ-ள். சுட்டியுணர்வதனைச் சுட்டி யசத்தென்ன எ-து. இதுவிது வென் றறியப்பட்ட வெல்லாப் பொருளையும இது பொய்யா யிருந்த தென் றறிய.

சட்ட வினியு ணது சத்தே கா ண். எ-து.
சடக்கென விப்பொழுதுள்ளதாவ துண்மையாகிய சிவம் அதனை விசாரித்துப்பார்.

என்றது, சிவசொரூபனுமாய்ச் சுத்தனுமாய்நின்று காணும் அவதரத்து அந்தந்த வுண்மையொழிந்து அசத்துத்தோனரு தென்பதாம்.

சுட்டி யுணர்ந்த நீ சத்தல்லை. எ-து.
சிவசொரூபத்தினுடனேகூடிச் சுத்தனாகி அசத்தை யசத்தென்று நீங்கினு மிதுவென் றறியப்பட்ட நீ யந்தச்சிவமாகாய்.

என்றது, சிவனுடைய கர்த்தத்துவமும் பஞ்சகிருத்தியமும் உனக்குண்டாகாது சிவசொரூபனாவையென்றதாம்.

உண்மையைத் தைவம் புணர்ந்து. எ-து.
இதனாற் பிரயோசனமென் என்கின்றாயாகில்? அந்தச்சிவனுடனேகூடித் திருமேனியாய் அந்தச்சொரூபத்தைப்பெற்று.

அதனாற்பொய்விட்டுப்போம். எ-று.
அந்தவருளாலே பொய்யை நீங்கி நில்.

எ-து.

எனவே, அந்தச்சிவனுடையரூபத்தைப் பெறுவதே சிவரூபமென்பதாயிற்று. எனவே யசத்துமேலிட்டால் இது அசத்தென்று நீங்கிற் சிவரூபமென்பதாயிற்று.

இதுவுஞ் சம்பிரதாயதிட்டியாலறிவித்தது. (௭)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். வானே முதல் களைந்தவழி அந்

னங் தோன்றுவதும் வேறென்றெனக் கோடும் ஞானசொரூபமென்றற்குப் பிரமாண மென்னையென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். சுட்டி உணர்வதனைச் சுட்டி அசத்து என்ன. எ-து. ஏகதேசவுணர்வாற் சுட்டி யுணரப்படுவதாய பிரபஞ்சத்தை மேற்கூறியவாறே ஓரோவொன்ருகச் சுட்டி அசத்தென்று கண்டு கழித்துக்கொண்டு சென்றவழி—இனிச் சட்ட உளது சத்தே காண். எ-து. முடிவின்கட் செம்மையே கோசரமாவது யாது அஃது அவ்வசத்தின் வேருகிய சத்தேயாம்; அதனை யறிவாயாக. அற்றேல் அசத்தின் வேருய் அங்ஙனந்தோன்றுஞ் சத்தாவது உயிரேயாமென அமையுமெனின்—சுட்டி உணர்ந்த நீசத்து அல்லை. எ-து. இதுகாறும் அசத்தோடு கூடிச் சுட்டியறிந்து வந்த நீ அசத்தின் வேருய் அங்ஙனந்தோன்றுஞ் சத்தாவாயல்லை. அற்றேல் இச்சுட்டுணர்வு எனக்கு நீங்குவதின்றுபோலுமெனின்,—உண்மைபைத் தைவம் புணர்ந்து. எ-து. அசத்தின்வயப்பட்டு நின்று சுட்டியறிந்து வந்த நீ அதனையொழிந்து அங்ஙனந் தோன்றிய சத்தின் வயத்தினையாய் அதனைப் புணர்ந்தால்—அதனல் பொய்விட்டுப் போம். எ-து. அப்புணர்ச்சியானே சுட்டுணர்வாகிய அப்பொதுவியல்பு நின்னைவிட்டு நீங்கும். எ-று.

என்னவென்றது உபசாரவழக்கு.

சட்டவென்பது செப்பமுணர்த்தி நிற்பதோரகரவீற்றிடைச்சொல்; அது சட்டமென இழிவழக்கின் மகரவீருய் மரீஇயிற்று.

அசத்தைப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

உண்மை சத்தென்பன ஒருபொருட் கிளவி.

சைவமாயென ஆக்கச்சொல் வருவித்துரைக்க.

புணர்ந்தாலென்பது புணர்ந்தெனத் திரிந்தது. உண்மைக் குத் சைவமாதல் புணரினென உருபு மயக்கமாகக் கொண்டுரைப்பினுமமையும்.

பற்றறக்கழிந்தொழியுமென்பார் விடுமென்றது விட்டுப்போ மென்றார்.

கண்டதை யன்றன் றெனவிட்டுக் கண்டசத்தாய்
அண்டனை யான்மாவி னாய்ந்துணரப் - பண்டணைந்த
ஊனத்தைத் தான்விடுமா றுத்தமனி லொண்கருட
சானத்திற் றீர்விடம்போற் றான். (ரு)

இது, ஆன்மாச் சிவரூபனுமாய்ச் சுத்தனுமானவிடத்து ஆன்மபாவ மில்லையென்பது கூறுகின்றது.

இ-ள். கண்ட தையன் றன் றெ னவிட்டு. எ-து. இதுவென்று காணப்பட்ட பொருளையெல்லா மிவையல்ல வல்லவென்று நீங்கி.

எனவே, மீட்சிமொழியாற் காணாதபொருளாமோவென்னில்? அதுவுமல்லவென்று கருதியென்க.

கண்டசத்தாய். எ-து. காட்டாய்நின்று தனக்குக்காட்டுகின்ற சிவசொரூபமாய்.

அண்டனையான்மாவி னாய்ந் துணர. எ-து. அண்டங்களெல்லாந் தானாய் நிற்கின்ற சிவனைத் தன்னிடத்தே யாராய்ந் தறிந்து.

ஆராய்ந்தறிந் தென்றது தனக்குபகரித்து நிற்கின்ற முறைமை.

பண்டணைந்த வூனத்தைத் தான் விடுமா றுத்தமனில். எ-து.	உத்தமகுருவினாலே தனக்நாதியிலே பொருந்தின மலமாயாகன்மங்களை நீங்குமுறைமை யெப்படியென்னில்
ஒண்கருட சானத்திற் றீர் விடம்போற் றான். எ-து.	னன்றாகியகருடத் தியானத்திலே விடந்திருமாறுபோலும். எ-று.

இது, இவனவனாகப் பாவித்தலாம். இந்தப்பாவனையே வேதாந்தத்திலு மதுநானென்னும் பாவனையாவது மென்றவாறு.

அது, தற்பதம் தொம்பதம் அசிபதம் என மூன்றாம். "கண்டவிவை" என்றார் வழிநூலார். சித்-கூ—சு, எ—செ. அநேககாலமாய் மருவிப்போந்தமையால் நீக்குதற் கரிதென்பது தோன்ற வெனவறிக. அது இப்படிப்பலவென்பாவிலும் பாச நீங்கவேணுமென்று கூறியது.

சிவசொரூபமானபொழுது மலந்திருமென்னும் பட்சத்துக்குத் தான் கருடனாகியபாவனை முற்றினபொழுது விஷந்திருமென்றுஞ் சபக்கங்காட்டியவாறறிக. வேம்புதின்ற புழுவுக்குக் கரும்புகொடுத்தாலு மதிற்பற்றாமல் வேம்பே நுகருமாறுபோல் முன்பாவு மப்படிக் கீழாய யோகங்களிலே மேலிட்டுக்கொண்டு ஒருதலை நோக்கியென்பதாம். (௫)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-வின். அசத்தை அசத்தென்று கண்டொ

ழியுமாறும், ஒழிந்தவழி உண்மையைத் தைவம் புணருமாறும், புணர்ந்தவழி, அதனாற் பொய் விட்டுப் போமாறும், யாங்ஙனமென்பாரை நோக்கி, அவற்றைத் தெரித்துணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். கண்டதை அன்று அன்று எனக் கண்டு அசத் ஆய் விட்டு. எ-து. சுட்டியுணரப்பட்ட பிரபஞ்சத்தை இது சத்தன்று இது சத்தன்றென ஒரோவொன்றாக வைத்து நோக்கி அசத்தென்றொழித்து—ஆன்மாவின் அண்டனை ஆய்ந்து. எ-து. அவ்வாறு கண்டொழிந்த தன்னறிவின்கண்ணே சுட்டுணர்வின்றி நின்ற கடவுளை ஆராய்ந்து—உணர. எ-து. சோகமெனப் பாவிப்பனாயின்—உத்தமனில் பண்டு அணைந்த ஊனத்தைத் தான் விடுமாறு. எ-து. அப்பாவகத்தான் அத்துவிதமாய் விளங்கித் தோன்று முதல்வனால் அநாதியாய்க் கூடிநின்ற பொதுவியல்பைத் தான் விட்டு நீங்குமாறு—ஒண் கருட சானத்தின் தீர்விடம்போல் தான். எ-து. ஒள்ளிய கருடதியானத்தில் விளங்கித் தோன்றுங் கருடனால் அப்பாவகன் விடத்தைத் தீர்த்துக்கொள்ளுமாறுபோலாம். எ-று.

தானென்பது முன்னையது எழுவாய். பின்னையது அசை. சானம் பாகதச்சிதைவு.

கருடத்தியானமாவது யாதெனிற் கூறுதும்; ஆதிபௌதிகம் ஆதிதைவிகம், ஆத்தியான்மிகம் எனக் கருடன் மூவகைப்படும். பொருடோறும் இவ்வாறு கண்டுகொள்க. அவற்றுள், உலகத்திற் காணப்படுங் கருடன் ஆதிபௌதிககருடன், அதற்சதிதெய்வமாகிய மந்திரம் ஆதிதைவிக கருடன், அம்மந்திரம் இடமாகநின்று மாந்திரிகனுக்குப் பயன்கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான்மிககருடன் எனப்படும். அம்மூன்றனுள் ஈண்டுக் க

ருடனென்றது கருடனுக்கு அதிதெய்வமாய மாந்திரிகனுள்ளத்தின் அதுபோல்வைத்துத் தியாநஞ்செய்து கணிக்கப்படு மந்திரரூபமாகிய ஆதிதைவிககருடனை. அதனைப்பாவித்தலாவது நாடோறும் பயின்று வந்த பயிற்சிவிசேடத்தால் அம்மந்திரரூபமே தானாக அநந்நியபாவனை செய்து தன்னறிவு அதன் வயத்தாம்படி உறைத்து நிற்றல். அவ்வாறு நின்று அம்மந்திரக்கண்கொண்டு பார்ப்பயே அஃதவ்விடவேகத்தை மாற்றுதல் ஒருதலையாகலின் அப்பாவனை ஈண்டைக் குவமையாயிற்று. புள்ளு விலங்கு மரமுதலியவற்றுக்கெல்லாம் அதிதெய்வ மந்திரமுளதென்பதூஉம், மந்திரங்களைக் கணிப்போன் படிகம்போல மந்திரசொரூபியாவனென்பதூஉம், சர்வஞ்ஞானோத்தர முதலியவற்றுட் காண்க.

இதனானே கருடபாவனை அசத்தியமென்பார் மதம் போலியாயவாறுமுணர்க. அல்லதூஉம், பாவனை போலியாயவழி அது பயன்றருமாறியாண்டையதென்றொழிக.

கூ—ரு, இரண்டாமதிகரண முடிந்தது.

அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை கண்டரனை
யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தில் - அஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்ஹோமங் கோதண்டஞ் சாதிக்கி
லண்டனாஞ் சேடனா மங்கு. (கூ)

இது, ஆன்மா வெந்தெந்தப் பொருள்களைக் கருதிற்று அந்தந்தப்பொருள்களாய் நிற்குமாகையாற் பஞ்சாக்ஷரத்தாலே யிப்படி தியானிக்க, அந்த நிலைமை யெய்துமென்பது கூறுகின்றது.

இ-ள். அஞ்செ பஞ்சாக்கரத்தாலே ஆன்மா சிவனுக்

அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை கண்டு. எ-து.

டிமையாகிய முறைமை யுணர்ந்து.

என்றது, சி-ஆகியசிவனும், வா-ஆகியவருளும், ய-ஆகியவான்மாவுக் கொருபுறமாய் நிற்க; ந-ஆகியதிரோதமும், ம-ஆகிய மலமு மொருபுறமாய்நிற்க, தான் நிற்குமுறைமையறிந்து நவ்வையு மவ்வையு நீங்கி, வவ்வே சொரூபமாய்ச் சிவனுக் கடிமையாய் நின்றதனை யுணர்ந்து என்றதாம்.

அரனை யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தில். எ-து.

அப்படியுள்ளசிவனை யஞ்செழுத்தாலே யங்கநியாசம்பண்ணி யிருதயகமலத்தே பூசித்து,

அஞ்செழுத்தாற் குண்டலியிற் செய் ஓமம். எ-து.

அஞ்செழுத்தாலே குண்டலித்தானத்தே யக்நிகாரியம்பண்ணி

கோதண்டஞ் சாநிக்கில். எ-து.

புருவமத்தியத்தே தியாநிக்கில்;

அண்டனுஞ் சேடனு மக்கு. எ-து.

மேலான சிவஞானசொரூபமா யவ்விடத் தவனுக் கடிமையுமாம். எ-று.

என்றது, பஞ்சாக்கரத்தினுண்மையைப் பார்க்கவே யஞ்ஞானமாகிய பிரபஞ்சஞ் சீவியாதென்பதுவும் சம்பிரதாய வழக்காற் காட்டியவாறு. "அஞ்செழுத்தாலான்மாவு மரனுடைமை" என்றார் வழிநூலார். சித்-கூ—சு, அ—செ. (கூ)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். இஃதவ்வாசனையை நீக்குதற்குச் சாதனமாமா றியாங்ஙனமென்பாரை நோக்கி அஃதாமாறு கூறி ஏதுவை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். உள்ளம் அரன் உடைமை அஞ்செழுத்தால் கண்டு. எ-து. உயிர் சிவனுக்குடைமையாதலை அஞ்செழுத்தை உச்சரிக்கு முறையில்வைத்து நோக்கி—இதயத்தில் அரனை அஞ்செழுத்தால் அர்ச்சித்து. எ-து. தன்னுடம்பகத்தே இதயம் உந்தி புருவநடு வென்னு மூன்றனையும் முறையே பூசைத்தானம் ஓமத்தானம் தியானத்தானமாகக் கருதிக்கொண்டு புறம்பேஞான பூசைசெய்யுமுறைப்படி, இதயபங்கயத்தில் அவ்வஞ்செழுத்தாலமைந்த திருமேனியில் அம்முதல்வனைக் கொல்லாமை ஐம்பொறியடக்கல் பொறைஅருள் அறிவு வாய்மை தவம்அன்பு என்னும் அட்டபுட்பங்கொண்டு அம்மநுவாலர்ச்சனைசெய்து—அஞ்செழுத்தால் குண்டலியின் ஓமம்செய்து. எ-து.அத்திருமந்திரத்தானே குண்டலித்தானமான உந்தியில் ஞானவனலை யெழுப்பி அதன்கண் விந்துத்தானத் தமிழ்தமாகிய நெய்யைச் சுழுமுனைநாடி இடைநாடியாகிய சுருக்குச் சுருவங்களா லோமித்து—கோதண்டம் சானிக்கில். எ-து. விந்துத் தானமாகிய புருவ நடுவிற் சிகர வகர யகரங்கண் மூன்றும் முறையே தற்பதப்பொருளும் துவம்பதப்பொருளும் அசிபதப்பொருளுமா முறைமைநோக்கி அதனாற் சிவோகம்பாவனை செய்வனாயின்—அங்கு அண்டன் ஆம் சேடன் ஆம். எ-து. அப்பாவனைக்கண் விளங்கித்தோன்றுவன், அப்பாவகன் அவனுக்குச் சேட செடி பாவகத்தால் அடிமையாவன். எ-று.

ஒழித்தலுந் தியானித்தலும் பூசைக் கங்கமெனவறிக. ஞான சொரூபம் விளங்கிய வழியும் பயிற்சிவயத்தான் ஏகதேசப்பட்டுப் புறத்திற் செல்ல நோக்குவதாய தன்னறிவை அங்ஙனமாகாதவாறு மடக்கி அகத்தே ஒரு குறியின்கணிறுத்தி நிட்டை கூடும்படி அஞ்செழுத்தோதுமுறையில் வைத்துக் கண்டு நிந்திக்கச் சிந்திக்க அஃது அந்நோக்கத்தைப் பற்றறக் கெடுத்து ஞானசொரூபத்தை இனிது விளக்கிப் பூரணநிலையிற் கொண்டு செலுத்துமாகலின்; இஃது ஈண்டைக்குச் சிறந்த சாதனமாயிற்றென்பது.

இந்துவிற் பானுவி லிராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணாம் - முந்தவே
காட்டத்தொழீஇ யென்னக் கனல்சே ரிரும்பென்ன
வொட்டாறு மோதஞ் செழுத்து. (எ)

இது, அங்கச்சிவனைத் தரிசித்தாலொழிந்து சுத்தனாகானென்பது கூறுகின்றது.

இ-ள். இந்துவிற் பானுவி லிராகுவைக் கண்டாங்கு. எ-து. கண்ணுக்குக் காண்டற்கரிதாகிய ராகு கேதுக்களைச் சந்திரனிடத்தும் ஆதித்தனிடத்துங் கண்டாற்போல,

சிந்தையிற் காணிற் சிவன்கண்ணாமுந்தவே. எ-து. தன்னிடத்தே சிவனைக்காணில் அந்தச் சிவனருளாலே சோகமெனப்பாவிக்கில் தனக்கு முதலாகிய சிவன் முனையாம்.

கண்ணிடம் என்றது காணுமிடத் தருளேதாராகமாகநின்று காண்டலால், அது காணவென்னும்பொழுது முற்பட்டு நிற்கு மென்றதாம்.

சந்திராதித்தரிடத்து ராகுகேதுக்கள் வேறாய்நின்று ஒரு காலத்தே கூடினாற்போல, ஆன்மாவுஞ் சிவனும் வேறாய்நின் றொருகாலத்தேயோ கூடுவதென்னில்? அது காணுமுறைமைக் குவமை.

இனிவேறறநின்று தோன்றுகிற முறைமைக்குவமை, ஆன்மாக்களுடைய சத்திநிபாதம் - பரிபக்குவம்.

காட்டத் தொற்றீயென்ன. எ-து. — விறகிற்பழைதாகி நிற்கும் அக்கினியென்ன.

என்றது, அநாதியிலே கூடிநின்ற அக்கினி கடைந்தபொழுது தோன்றினாற்போல ஒருவன் பரிபக்குவமறியுமளவும் ஒன்றிநின்று தோன்றுவனென்றதாம். "விறகிற்றீயினன்பாலின் றுநெய்போல் - மறையநின்றுளன்மாமணிச்சோதியா - னுறவு கொண்டுணர்வு" என்றார் ஞானாமிர்தத்தாரும் என்பதனானு மறிக.

தொல்தீ-தொறீ, இதுகெட்ட சந்தியும் விகாரமும்.

கனல்சேரிரும்பென்ன. எ-து. — அக்கினியைச்சேர்ந்த விரும்மை யக்கினி யுள்ளடக்கிக்கொண்டு தானாகிநின்றது போல.

ஆட்டானும். எ-து. — தானவனுக் கடிமையாவன்.

என்றது, அக்கினியைச்சேர்ந்தபொழுது இரும்பாந்தன்மை போய் அக்கினியேயாய் நின்றாற்போல வான்மாவை யடக்கிச்

சிவனுந் தானுகிநிற்பனென்றதாம்.

இது சிவசொரூபத்தைப் பெறுதற்குவமை.

அடிமையாமென்றது இரும்பு அக்கினியினுள்உள்ளடங்கி நின்றாற்போல நிலைபெற்றவான்மாக்களுங் கூடிநிற்பதெனவறிக.

ஓதஞ்செழுத் து. எ-து. பஞ்சாக்ஷரத்தை ஓதினு லிப்படிகூடுமாகையால் எப்பொழுதும் பஞ்சாக்ஷரத்தை யுச்சரி. எ-று.

இது பஞ்சாக்கரத்தை யுச்சரித்தாற் சிவனைக் காணலாமென்னும் பக்கத்துக்கு சந்திராதித்தர்களும், இராகு கேதுவும் சபக்கமும்; அநாதியிலே வேறறநின்று தோன்றுவனென்ற பக்கத்துக்கு, விறகுந் தீயும் சபக்கமும் :. சிவனைக்கூடிச் சிவசொரூப னுவனென்னும் பக்கத்துக்கு, அக்கினியைச்சேர்ந்த விரும்பு சபக்கமெனவறிக. (எ)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அங்ஙனம் ஒருகுறியின்கண் வைத்தன்றி முதல்வனைக் காண்டல் செல்லாதவாறும், அவ்வாறு கண்டவழி முதல்வன் தன்மாட்டு விளங்கித் தோன்றுமாறும், தோன்றியவழித் தான் அம்முதல்வனுக் கடிமையாமாறும், உவமையில்வைத்துணர்த்தி அதனை வலியுறுத்துதனுலிற்று.

இ-ள். இராகுவை இந்துவில் பானுவில் கண்டாங்கு. எ-து. அந்தரத்தியங்கு நவக்கோள்களுள் ஏனையபோலக் காணப்படாத இராகுகேதுக்களை உபராகத்திற் சந்திராதித்தர்மாட்டுக்கண்டாற்போல—சிந்தையில் காணில். எ-து. முப்பொருள்கள் யானிதனை யறிந்தேன் அறிகின்றிலேன் என்னு முணர்விற்கு விடயமாகிய பசுபாசங்களோடொப்ப வேறுணரப்படாத

முதல்வனைத் தன்னிதயபங்கயத்தின் அஞ்செழுத்தின் முறையின் வைத்துக் காணுமாயின்,—உந்தவே காட்டாக்கில் சிவன் தோன்றிக் கண் ஆம். எ-து. கோலைநட்டுக் கயிற்றினாற் சுற்றிக் கடையவே காட்டத்தினின்று அங்கி தோன்றுமாறுபோல அம்முதல்வன் ஆண்டுத்தோன்றி அறிவுக்கறிவாய் விளங்கி நிற்பன்.—தான்கனல் சேர் இரும்பு என்ன ஆள் ஆம். எ-து. அப்பொழுது தானும் எரிசேர்ந்த இரும்புபோலத் தனது சுதந்திரத்தை விட்டு அம்முதல்வனுக்கு அடிமையாம்—அஞ்செழுத்து ஓது. எ-து. ஆகலான் அத்திருவஞ்செழுத்தை விதிப்படி யோதுவாயாக. எ-று.

கேது சாயாக்கிரகமாகலின், வேறுகூறாயினார்.

கண் அறிவு.

தோன்றியாமென வியையும்.

உந்துதல் ஈண்டுக் கடைதன்மேற்று.

காட்டாக்கி வடமொழிச்சிதைவு. இரம் விகாரத்தாற் றொக்கது.

இன் உவமவுருபு.

ஈண்டும் ஓதஞ்செழுத்து என்றது வலியுறுத்தவாறு.

மண்முத லளமலர் வித்தை கலாரூபம்
எண்ணிய வீசர் சதாசிவமு - னண்ணிக்
கலையுருவா நாதமாம் விந்துவதன் கண்ணும்
நிலையதிலா மச்சிவன்றா ணேர். (௮)

இது, அந்தரியாகமாக விதயகமலத்திலே யிப்படி பூசித்த

லருள்சொரூபனுமாய்ச் சுத்தனுமாவனென்பது கூறுகின்றது.

இ-ள். மண்முதலுளல் நீளமுமாய், ஐம்பதுகோடி யோசனையகலமும் நீளமுமாய், பிருதிவிமுதலாக மாம்.எ-து. — இதய கமலத்துக்குத் தண்டெண்விரலுள்ள நீளமுமாய், ஐம்பதுகோடி யோசனை யகலமும் நீளமுமாய், பிருதிவிமுதலாக மாயையீருகிய தத்துவமுப்பத்தொன்றும்.

இதில் மாயை முட்டெனவறிக.

மலர் வித்தை. எ-து. — சுத்தவித்தை எட்டிதழா யெட்டக்கரத்தையுமுடைய தாமரைப்பூவையு முடைத்தாயிருக்கும்.

கலாரூபம். எ-து. — இவையிற்றுக்கு நிவிர்த்தி பிரதிட்டை வித்தையென்று மூன்றுகலையு முரூபமாயிருக்கும்.

என்றது, ஆன்மதத்துவ மிருபத்துநாலுக்கும் நிவிர்த்தி, வித்தியாதத்துவ மேழுக்கும் பிரதிட்டை, சுத்தவித்தைக்கு வித்தை எனவறிக.

எண்ணிய வீசர் சதாசிவ முன். எ-து. — [முன் என்றது=மேல், அம்மலர்க்கு மேலாகிய காருண்ணியம்] மேலெண்ணப்பட்ட ஈசுரதத்துவமுஞ் சதாசிவமும்.

நண்ணிக் கலையுருவாம். எ-து. — இப்படிப் பொருந்தச் சாந்தி சாந்தியாதீதமென்னுங் கலைகளி னுரூபமா யிருக்கும்,

நாதமாம். எ-து. — அதன்மே னாதசொரூபமாம்,

விந்து வதன்கண்ணும். எ-து. — அந்தவிந்துச்சத்தி யந்தநாதமிடமாக நிற்கும்.

நிலை யதிலா மச்சிவன்றானே ர். எ-து. அந்த ஞானசொரூபியாகிய சிவன் அதின் நிலையாநிற்பன், அவனை யிப்படி தியாநிக்க விவற்று ஞயிரானசிவன் றானாகிடுவன். எ-று.

எனவே, இப்படிநிற்க முன்சொன்ன நிலையிலேகூடிச் சுத்தனுவனென்பதாம்.

இப்படி யந்தரியாகமாகிய பூசைசெய வென்றவதனால் பகிரியாக பூசை செய்யவேணுமென்றில்லை. வேண்டிற்றாகில் செய் என்பது மீட்சிமொழியால் வந்தவாறறிக. எனவே யந்திரியாகமும் பகிரியாகமும் வேண்டுமெனவறிக. "நாட்டுமிதயத் தானுநாபியினிலடியாய்" "அந்தரியாகந்தன்னை முத்திசாதக மாவறைந்திடுவரதுதானு மான்மசுத்தியாகும்" "புறம்பேயு மரன்". "இந்தனத்தினெரியாலினைப் பழத்தினிரதமெள்ளின் கண்". என்றார் வழிநூலார். சித் - க—ரு, க - க௦ - கக க௨—செ.

இப்படி பலபிரகாரங்களாலுங் கூறிய ஏதுவுந் திட்டாந்தத்தாலும் ஆன்மதத்துவத்துச் சமுதாயத்தை நீங்கிப் பேரின்பத்தைப் பெறவேணுமென வறிக.

இது சாத்திர திருட்டியுஞ் சம்பிரதாய திருட்டியுமெனவறிக.

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். தத்துவ முப்பத்தாறுக்கும் மேற்பட்ட முதல்வனை இதயபங்கயத்திற்கண்டர்ச்சிக்குமாறு யாங்ஙனமென்பாரை நோக்கி அவ்விதயபங்கத்தினியல்புணர்த்தி அதனை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். நண்ணில். எ-து அவ்விதயபங்கயத்தி னியல்பை அறியப்புகின்—மண் முதல் நாளம். எ-து. நிலமுதலிய இருபத்து

நான்கு தத்துவமும் உந்தியினின்றுந் தோன்றி எண்விரலளவை த்தாயுள்ள நாளவடிவாம்:—வித்தை மலர். எ-து. வித்தியா தத்துவங்களேழுஞ் சுத்தவித்தையுமென்னும் எட்டுத்தத்துவமும் எட்டிதழ்வடிவாம்:—எண்ணிய ஈசர் சதாசிவமும் கலாரூபம். எ-து. அத்தத்துவங்களுக்கு மேலாகக் கருதப்பட்ட ஈசுரஞ் சதாசிவமென்னும் இரண்டு தத்துவமும் அறுபத்துநான்கெனப்படுங் கேசரவடிவாம்.—சத்திகலை உருவாம். எ-து. சத்திதத்துவம் அக்கேசரங்களுக்குள்ளாகிய பொகுட்டுவடிவாம்.—நாதம் அதன் கண்ணும். எ-து. சிவதத்துவம் அப்பொகுட்டிற் காணப்படும் ஐம்பத்தொரு வீசவடிவாம்.—அதில் அச்சிவன் தாள் நிலையாம். எ-து. ஆகலான் அவ்வியல்பிற்றாகிய இதயபங்கயத்தின் முப்பத்தாறு தத்துவமும் ஆசனமாகவுடைய அச்சிவனது சத்தி நிலைபெறும்—நேர். எ-து. அதனையறிந்து திருவஞ்செழுத்தால் அர்ச்சிப்பாயாக. எ-று.

இதனானே * "அண்டபிண்டமவை சமமாதலால்,, புறத்துக் காணப்படும் முப்பத்தாறு தத்துவமும் அகத்தினிற் சூக்குமமாயுண்டென்பது காட்டி முதல்வனுக்கு இந்நிலையே அந்நிலையெனத் தெளிவித்தவாறு.

* கோயிற்புராணம், பதஞ்சலிச்சருக்கம். ௭0 "வலங்கைமான்."

வித்தையென்பது இரட்டுறமொழிதலான் அவ்வாறுரைக்கப்பட்டது. சிவஞானசித்தியில் "மூட்டு மோகினி சுத்தவித்தை மலரெட்டாய்,, என்புழி மோகினிஎன்றதூஉம் ஆகுபெயரான் அதன்காரியமாய் கலாதிகளின்மேனின்றது.

இவ்வாறன்றி நிலமுதலிய முப்பத்தொருதத்துவமெனப்படும் எட்டுக்கொத்தும், எண்விரலுளவடிவும், அசுத்தமாயாதத்துவம் நாளத்துக்கும் மலருக்கும் நடுக்கண்டமாகிய கிரந்தியு

டிவும், அதற்குமேற் சுத்தவித்தையின் வாமைமுதலியவெட்டும் எட்டிதழ் வடிவுமாமென்றுரைப்பாரும்; முப்பத்தொன்றுக்குமேல் அசுத்தமாயை கிரந்தியின் அதச்சதநம், சுத்தமாயையூர்த்துவச்சதநம் அதற்குமேல் ஈசுரதத்துவத்தில் அனந்தன் முதலியவெட்டும் எட்டிதழ்வடிவம், சதாசிவதத்துவமொன்றுங் கேசரவடிவமெனக் கொண்டு அதற்கியையக் கூட்டி யுரைப்பாரும்: கலாரூபமென்றது பஞ்சகலைகளையெனவும், அஃதியாண்டுங் கூட்டியுரைக்கப்படுமெனவுங் கொண்டு, மண்முதலாமலமென்பதற்கு மண்ணாகிய நிவர்த்திகலாரூபம் நாளமும், மண்ணைமுதலாகவுடைய ஏனையிருபத்துமூன்றுதத்துவமாகிய பிரதிட்டாகலாரூபம் மலருமெனவும், வித்தையெண்ணிய வீசர் சதாசிவமும் கலையுருவமாமென்பதற்கு வித்தியாதத்துவமாகிய வித்தியாகலாரூபம் கலையெனப்படுங் கேசரமும், சுத்தவித்தையோடு கூடியெண்ணப்பட்ட ஈசுரதத்துவஞ் சதாசிவதத்துவமாகிய சாந்திகலாரூபங் கலைக்குள்ளுருவெனப்படும் பொகுட்டுமாமெனவும், நாதமாஞ்சத்தி யதன்கண்ணாமென்பதற்குச் சிவதத்துவஞ் சத்திதத்துவமாகிய சாந்தியதீதகலாரூபம் பொகுட்டின்கண்ணாகிய வீசமாமெனவும் உரைப்பாருமுளர். இவையெல்லாம் அவ்வவ்வாகமபேதம் பற்றிக் கொள்ளப்படும்.

கலை அறுபத்துநான்காகலான், அறுபத்துநான்காகிய கேசரங்களுக்குத் தொகைபற்றிக் கூறப்படும் ஆகுபெயராயிற்று.

ஈசர் ஆகுபெயர்.

கலையுரு கலைக்குள்ளுருவென உள்ளுருபு விரித்துரைக்க.

அதில் என்புழி அன் சாரியை விகாரத்தாற் றொக்கது.

இது நாளமுதலாக மேனோக்கித்தோன்றும் உலகத்துக் கம

லைப்போலாது கன்முதலாகக் கீழ்நோக்கித் தோன்றியதோ
ர் திப்பிய கமலமெனக் கொள்க.

சிவன்று எதிரிலோபாமெனவே சிவன் சத்திக்குமேலாய் நிற்
பன் என்பதூஉம் பெறப்படும்.

☞ ௯—௩, மூன்றாமதிகரண முடிந்தது.

☞ ஒன்பதாஞ்சூத்திர முடிந்தது.

சிறப்பியல்பு - சாதனவியல் முற்றிற்று.

௧௦—சூத்திரம்.

அவனே தானே யாகிய வந்நெறி
ஏகனாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.

இந்தச்சூத்திர மென்னுதலிற்றோவெனின், மலமாயாகன்மங்களை நீங்குமுறைமை கூறுகின்றது.

இ-ள். அவனே தானே யாகிய வந்நெறி யேகனாகி. எ-து. சிவன் ஆன்மாவிலே யான்மாவாய் நின்ற முறைமைபோல வான்மாவுஞ் சிவனிடத்திலேயா யேகிபவித்து.

இறைபணி நிற்க. எ-து. முன்பு தன்னுடைய செயலானவெல்லாஞ் சிவனுடைய செயலான முறைமையைக் கண்டு நிற்க.

தன்னுடைய செயலானவெல்லா மிறைவனுடைய செயலென்று நிற்கவென்றுமாம்.

மல மாயைத ன்னொடு வல்வினை யின்றே. எ-து. ஆணவமு மாயாமலமுமாகிய விவற்றுடனே மேலு மாகாமியமாகிவரும் வலியவினையு மில்லையாம். எ-று.

என்றது, சிவனுடனே யேகிபவித்து அந்தப்படியே யொழுகிநிற்கவென்றதாம். அது, யான்செய்தேன் பிறர்செயதா ரென்னறியா னென்பதின்றி நிற்கவென்றதாம். அப்படி சொருக்கற்றுநிற்கத் திருவருள்தாரகமாமெனவறிக.

இவையிற்றுக்குப் பிரமாணம்.

சிவஞானமுனிவர் உரை.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு.—ஞானக்கண்ணாற் காணப்பட்ட அம்முதல்வன் தானுடனாய் நின்றறியவும் வேறு காணப்படுமாறின்றி யானேயறிகின்றே னென்னும்படி உயிர்தானேயாய் ஒற்றுமைப்பட்டு உயிரின்வழிநின்ற அப்பெற்றிநிலைபோல் ஈண்டு உயிர் அம்முதல்வனோடுடனாய் நின்றறியினுந் தானென வேறு காணப்படுமாறின்றி அவனோடொற்றுமைப்பட்டு அவ்விறைபணியின் வழுவாது நிற்பின், மலமாயை யென்னும் இரண்டனோடு வலிய கன்மமலமும் இல்லையா யொழியும் எ-று.

அவனே தானேயென்னும் ஏகாரமிரண்டனுள் முன்னையது பிரிநிலைக்கண்ணும் பின்னையது தேற்றத்தின் கண்ணும் வந்தன.

நெறி உவமவுருபு.

மலமாயையொடு கூடிய வினையென்றாராகலின் இன்றேயென்றார்.

உவமைக்கோதியது பொருளினும், பொருளுக்கோதியது உவமையினுஞ் சென்றியைந்தன.

ஈண்டொற்றுமைப்படுதலாவது, குடமுடைந்தவழிக் குடாகாயமும் ஆகாயமும்போல ஒருபொருளாயொற்றுமைப்படுதலோ, அன்றிக் குற்றியை மகனென்பதுபோல திரிவுக்காட்சியானொற்றுமைப்படுதலோ, அன்றி மண்ணே குடமென்பதுபோல ஒன்றுதிரிந்தொன்றாயொற்றுமைப்படுதலோ, அன்றிவெள்ளையுந் தாமரையும்போலக் குணகுணித்தன்மையானொற்றுமைப்படுதலோ, அன்றித் தீயுமிரும்பும்போல ஒன்றினொன்று விர

வுதலானொற்றுமைப்படுதலோ, அன்றிப் பாலுநீரும்போலப் பிரிக்கப்படாத சையோகத்தாலொற்றுமைப்படுதலோ, அன்றிக் கருடனு மாந்திரிகனும்போலப் பாவனைமாத்திரையா னொற்றுமைப்படுதலோ, அன்றிக் காய்ந்தவிரும்பி னீர்போல வொன்றினொன்றிலயமா யொற்றுமைப்படுதலோ, அன்றிப் பேயும் பேய்பிடியுண்டவனும்போல ஆவேசத்தி னொற்றுமைப்படுதலோ, அன்றி இந்தனத்தினெரிபோல விளங்காமையா னொற்றுமைப்படுதலோ, அன்றி ஞாயிற்றினொளியின் விளக்கொளிபோலச் சத்தி கெட்டுநிற்றலா னொற்றுமைப்படுதலோ, அன்றித் தலைவனுந் தலைவியும்போல இன்பநுகர்ச்சிமாத்திரையா னொற்றுமைப்படுதலோ, அன்றி நாட்டாரிருவர்போல நட்புமிகுதியா னொற்றுமைப்படுதலோ, அன்றி ஆவும் ஆமாவும்போல ஒப்புமை மாத்திரையா னொற்றுமைப்படுதலோ, என்று அவ்வச்சமய வாதிகண் மதம்பற்றி நிகழும் இன்னோரன்ன ஐயப்பாடுகளை யெல்லாம் நீக்குதற்பொருட்டு, அவனேதானே யாகியவந்நெறியென உவமை யெடுத்துக்காட்டி யோதினார்.

ஈண்டுக் கூறிய ஒற்றுமைக்கட்படு மிபைபாவதென்னையெனின் அது வருகின்ற சூத்திரத்திற்பெறப்படும்.

நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுள முண்டாத
லானவனொன் றின்றியே தானதுவாய்-நானொருவ
னில்லென்று தானே யெனுமவரைத் தன்னடிவைத்[ன்
இல்லென்று தானு மிறை. (க)

ஆன்மபோதஞ் சீவிக்குமிடத்துப்பாசங்களை யொழிந்து சீவியாது, அப்படிச் சீவிக்குமிடத்து ஆன்மாவும் அவற்றினுடைய சொரூபங்களாயே நிற்குமாதலால் அவற்றினுடைய வுண்மையைப் பார்க்குமிடத்துச் சிவசொரூபத்தை யொழிந்து பார்த்

து நீங்கவொண்ணாதாகையாற் றன்னுடையபணி யவனுடைய பணியென்னுமிடத்துச் சிவசொரூபமாயே நிற்குமென்பது கூறுகின்றது.

இ-ள். நான வனென் றெண்ணி னர்க்கு நாடுமுள முண்டாத ரு னென வொன்றி ன்றியே தான துவாய். எ-து.

நானவனுக்குச்செய்தேன், அவனெனக்குச்செய்தானென்று கருதுமவற்கு; கருதத்தக்க ஆன்மபோத முண்டாம். அப்படி ஆன்மபோதஞ் சீவிக்குமாதலாலே சிவன் தானென்கைக்கு ஏகதேசமும் அவ்விடத்தில்லையாய், அந்த வான்மாவிலே ஆன்மாவாய் நிற்பன்.

என்றது, யான் செய்தேன் பிறர் செய்தார் யென்னறியானென்போற்கு ஆன்மபோதமே சீவித்துநிற்பது, அப்படியான்மபோதஞ் சீவிக்குமிடத்துச் சிவன் றோன்றாமனிற்ப னென்றுமாம்.

நானெனவொன் றில்லென்று தானே யெனும வரை. எ-து.

யானென வொன்றில்லையென்று மெல்லாஞ் சிவன்றானே யென்னுமவர்களை.

என்றது, நானும் பிறர்க்குச் செய்யமாட்டேன் பிறருமெனக்குச் செய்யமாட்டார், என்னது மில்லை பிறரதுமில்லை, நான்செய்வது மொன்றில்லை பிறர்செய்வது மொன்றுமில்லை, எனக்குச் செய்வானுஞ் சிவனே யெல்லாஞ் சிவனுடைய செயலேயென்று பிறர்க்குச்செய்வானுஞ் சிவனே எனநிற்கின்றவர்களென்றதாம்

தன் னடிவைத் தில்லென்று

அப்படிச் சிவபோதஞ் சீவித்தலையுடையவர்களைத் தன்னுடைய திருவடியிலே யடக்

தானு மிறை. கிக்கொண்டு யிவனுடைய செயலெல்லா மெ
எ-ம். ன்னுடையசெயலென்றும், இவனுக்குச்செய்
ய்வதெல்லா மெனக்குச்செய்வதென்றும்,
அவனுடைய போதமில்லையென்றும் தானாய் நிற்பன் சிவன்.
எ-று.

"இவனுலகிலிதமகிதஞ்செய்ததெல்லாம்""யான்செய்தேன்பி
றர்செய்தாரென்னதியானென்னும்" என்றார்வழிநூலார். சித்.
௧0—சூ, ௧ - உ—செ.

இது சம்பிரதாயதிட்டியா லறிவித்ததெனவறிக. (௧)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அங்ஙனம் பகுத்து நின்றுணருமுணர்
வை மயக்கவுணர்வென்றதென்னையென்பாரை நோக்கி ஏதுவை
வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள் நான் அவன்என்று எண்ணினர்க்கு நாடும் உளம் உ
ண்டாதல் தான் எனஒன்று இன்றியே தான் அது ஆய். எ-து.
யானென்றும் அவனென்றும் ஞாதிரு ஞேயங்களைப் பகுத்து
ணர்ந்து நிற்பார்க்கும் யானேயென நிற்பார்க்குப்போல அவ்
வாறெண்ணுகின்ற உயிருணர்வு முனைத்துத் தோன்றுமாகலா
ன், அவ்வழித் தானென்றொருமுதல் காணப்படுமாறின்றித் தா
ன் அவ்வுணர்வே யாய்—நான் என ஒன்று இல் என்று தா
னே எனுமவரைத் தன் அடி வைத்து இல் என்று தான் ஆம்
இறை. எ-து. இனி யானென்றொருமுதல் காணப்படுமாறில்லை
யென்றுணர்ந்து முழுவதுந் தானேயெனக் காணுந் தெளிவுடை
யாரைத் தனது திருவடிவியாபகத்துள் அடங்கி நிற்கச் செய்
து அவ்வாறேயாவன் முதல்வன். எ-று.

ஆய் ஆர் எனவிரண்டும். ஆயாமென்புழிச் செய்தெனெச்சம்; "நள்ளார்க்கு நஞ்சொத்து நட்டார்க் கமிழ் தொக்குமிவன்" என்றாற்போலத் தன்வினையாத லுணர நின்றது.

நாடுமுள முண்டாயவழித் தானிலனாதலும் அஃதில்வழித் தானுளனாதலும் யாங்ஙனம் பெறுதுமெனிற் காட்டுதும்:—தூலவொளியாகிய கண்ணொளியுஞ் சூக்குமவொளியாகிய விளக்கொளியும் அத்துவிதமாய்க் கலந்து நிற்குநிலை உற்று நோக்கவல்லார்க்குப் பிரித்தறிய வாராமையிற் கண்ணொளியாக்காணுங்காற் காணுந்தன்மையே முனைத்துத் தோன்றுமாகலின் அவ்வழி விளக்கொளி இருந்தும் இல்லைத்தானே, அன்றி விளக்கொளியாகக் காணுங்காற் காட்டுந்தன்மையே முனைத்துத் தோன்றுமாகலின் அவ்வழிக் கண்ணொளி இருந்தும் இல்லைத்தானே; இனிக் கண்ணொளியும் விளக்கொளியுமெனப் பகுத்துக் காணப்புகினும் காணுந்தன்மையே முற்பட்டுத் தோன்றுதலின் அவ்வழி விளக்கொளியைத் திரிவு புலனாக் காட்சிப்படுவதல்லது தெளிவுபுலனாக் காட்சிப்படுமாறில்லை. அதுபோலத் தூலவறிவாகிய உயிருஞ் சூக்குமவறிவாகிய சிவமும் அத்துவிதமாய்க் கலந்து நிற்குநிலையும் பிரித்தறிய வாராமையின் ஆண்டும் இவ்வாறே கண்டுகொள்க.

எண்ணினர்க்கென இறந்தது தழீஇயவெச்சவும்மை சந்திநோக்கி மகரங் கெட்டுநின்றது.

இக்கருத்துப்பற்றியன்றே "கண்ணொளி விளக்கின்சோதி கலந்திடுங் கருத்தொன்றன்றே" எ-ம். † "காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவு நீத்துண்மை—காண்பார்க ணன்முத்தி காணார்கள்—காண்பானுங்—காட்டுவதுங் காண்பதுவுந் தண்கடந்தைச் சம்பந்தன்—வாட்டுநெறி வாராதவர்." எ-ம். கூறினார் புடைநூலாசிரியரும். * சிவப்பிரகாசம், உண்மை. அ.

கண்ணொளிவிளக்களித்து. † விருவெண்பா. கக. அற்றேல் இவ்விரண்டனுள் யாது திரிவுகாட்சி யாது தெளிவுகாட்சியெனின்—கண்ணொளியோடு கூடியவழியும் இது விளக்கொளி இது ஞாயிற்றொளி இது திங்களொளியென அவ்வப்பெற்றியவேயாய்க் காணப்படும் விளக்கொளி முதலியவற்றின் காட்சி தெளிவுகாட்சியெனவும், அவ்வொளிகளோடு கூடியவழி அவ்வாறொருபெற்றித்தாய்க் காணப்படாத கண்ணொளியை வேறு காண்டல் திரிவுகாட்சியெனவும், கண்கூடாக விளங்கிக் கிடத்தலின் இவ்வாறே பொருளினும் வைத்துணர்ந்துகொள்க. இவ்வாறன்றி, விளக்கொளிமுன்னர்க் கண்ணொளி சத்தி மடங்கிப்போதலின் அது விளக்கொளியைப்போலக் காட்சிப்புலனாகாதாயிற்றென்றாமோவெனின்; என்னும்: என்னை? கண்ணொளி சத்திமடங்கிற்றாயின் விளக்கொளி காட்சிப்புலனாதல் பிறிதொன்றாற் பெறப்படாமையின். அற்றேல், மின்மினித் துணையாயினுந் தானே விளங்கும் இயல்பில்லாத கண்ணுக்கு ஒளிக்குணமுண்டென்பதற்குப் பிரமாணமென்னையெனின்;—அறியாது கடாயினாய்: ஆகாயத்தின்கண்ணதாகிய சத்தகுணம் வியஞ்சகத்தானன்றித் தினைத்துணையானுந் தானென விளங்குமாறின்மையின் அதுபற்றி எதிரொலிவடிவாய் அவ்வோசையை ஆகாயத்தின் குணமன்று வியஞ்சகப்பொருளின் குணமென்பார் யாருமில்லை. அதுபோலக் கண்ணின்கண்ணதாகிய ஒளியும் வியஞ்சகமுள்வழி விளங்கி அல்லுழி விளங்காமைமாத்திரையே பிறிதில்லையாகலான் அதனைக் கண்ணின் குணமன்றென்றல் அறிவிலாதார் கூற்றேயாமெனவும், அக்கண்ணொளியாவது தன்னை விளக்குதற்குரிய வியஞ்சகப்பொருள் ஏகதேசமாயின் ஏகதேசமாய்விளங்கியும் அது வியாபகமாயின் வியாபகமாய் விளங்கியும் நிற்பதோரியல்பிற்றெனவும் உணர்க. அதுதங்கனமாக, "கண்ணொளி விளக்கின் சோதி கலந்திடும்" வ

ன்றற்குப் பிரமாணமென்னை: ஒருவிடயத்தின் வீழ்ந்த பலகண்ணொளிகட்குத் தம்முள் இயைபில்லாதவாறுபோல ஒருவயிற்பட்ட கண்ணொளிவிளக்கொளிகட்குத் தம்முள் இயைபில்லையென்றலே பொருத்தமுடைத்துப்போலுமெனின்,—அஃதறியாதார் கூற்றேயாமென்றொழிக. என்னை? ஒரு விடயத்தின் வீழ்ந்த கண்ணொளிகள் தம்முள் ஒன்றனையொன்று காணுமாறுமில்லை காட்டுமாறுமில்லை யாகலான், அவை தம்முட் கலத்தற்கு ஓரியைபின்றென்பது ஒக்கும். அவ்வாறன்றிக் கண் விளக்கினைக் காண்டலும் விளக்குக் கண்ணுக்குக் காட்டலுமாகிய இயைபுண்மையானும், இவ்வியைபு தம்முட் பெறப்படாத கண்ணொளி முதலாயின ஈண்டைக்கு உவமையாதல் செல்லாமையானும், இந்திரியங்கள் தத்தம்விடயத்தோடியைந்தன்றிச் சந்நிதிமாத்திரையான் அவற்றையறிதல் செல்லாதென்பது ஆகமங்களுக்கெல்லாந் துணிபாகலானும், அத்தன்மையவாய கண்ணொளி விளக்கொளிகட்குத் தம்முட் கலப்பில்லையென்றல் காண்டல் விரோதமாகலின் இவ்வாறு உவமைக்கோதியனவெல்லாம் பொருட்கண்ணு மாமாறுணர்ந்து உய்த்துணர்த்துக்கொள்க. அற்றேல், ஈண்டெடுத்துக் காட்டிய கண்கள் தம்முள் ஒன்றனையொன்று காணுமாறின்மைபோல, உயிர்களுந் தம்முள் ஒன்றனையொன்றறியுமாறில்லைபோலுமெனின்; அறியாது கூறினாய்: கண்கள் தம்முள் ஒன்றனொன்று காணப்படுமாறில்லையென்றது விளக்கும் விடயமுங் காணப்படுமாறுபோல வேறியைந்து தனிப்பொருளாய்க் காணப்படுமாறில்லையென்றதுணையேயன்றிப் பிறிதின்மையின், விளக்கொளியைக் கண்காணுங்கால் அதுவதுவாய் நின்று காணும்பெற்றித்தாய்த் தன்னையும் அவ்விளக்கொளி வண்ணமாய்க் காண்டலுண்டென்பது கண்கூடாக அறியக்கிடத்தலின், ஏனைக்கண்களையும் அவ்வாறு காண்டலமையுமாகலான் அதுபோலத் தம்முட் டனித்தியைபி

ல்லாத உயிர்களுஞ் சிவத்தோடியைந்து நின்று தம்மையும் பிறவுயிர்களையும் இவ்வாறுணர்தல் அமைவுடைமையாமென்பது "நாடியரன்—றன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணு ரென்று மெனவறி வார்." எ-ம். * "தன்னாலே தனையறிந்தார்—றன்னையுந் தானே காணுந் தானதுவாகி நின்றே." எ-ம். * சிவப்பிரகாசம் உண்மை. உஉ. "தன்னறிவதனு" "அறிவறிவடங்கி—மன்னிட வியாபியாய வான்பயன்றோன்றும்" எ-ம். "என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டே னின்னிலை யனைத்தையுங் கண்டேனென்னே—நின்னைக் காணு மாந்தர் தம்மையுங் காணுத் தன்மை யோரே" எ-ம். பிறவும் இவ்வாறேவரும் அநுபவமுடைய தேசிகர் திருவாக்குக்களானும் இவ்வுண்மை யுணர்ந்துகொள்க.

☞ ௧௦—சூ, முதலதிகரண முடிந்தது.

நாமல்ல விந்திரிய நம்வழியி னல்லவழி
நாமல்ல நாமு மரனுடைமை - யாமென்னி
னெத்தநுவி னின்று மிறைபணியாக் கில்லைவினை
முற்செய்வினை யுந்தருவான் முன். (உ)

இது, இந்திரியங்களு நம்மதல்ல, நாமுஞ் சுதந்திரமுடையோமல்ல, நம்முடைய செயலெல்லாஞ் சிவன்செயல் என்பார்க்கு மேல் வினை யேறுதென்கின்றது.

இ-ள். நாமல்ல விந்திரியம். எ-து. இந்திரியங்கள் யாவையு நாமல்ல.

நம்வழியி ன இந்திரியங்கள் விடயத்தின்மேற் செல்லு

ல்லவழி. எ-து. இன்றசெலவும் நம்முடைய செயலல்ல.

நாமல்ல யா மும். எ-து.	நாமு நமக்கென வொரு சுதந்தரமுடை யமல்ல.
அரனுடைமை யாமென் னின். எ-து.	சிவனுடைய வடிமையாவே மென்று செ ல்விட.
எத்தநுவி னி ன்று முற்செய் வினையுந் தருவா ன் முன். எ-து.	நாமெநதெந்தத் தேகத்தையெடுத்தே ம ந்தந்தத் தேகத்தே தானு மெம்முடன் கூடி நின்று முன்புசெய்த வினைகளை யறிந்து புசி க்குமிடத்துக் கூட்டுவானுடைய வருளேதா ரகமாக நில்.
இறை பணி யாக்கு. எ-து.	நீ செய்யுஞ் செயலெல்லா மிறைவன் செ யலென்றுவை.
இல்லை வினை. எ-து.	மே லாகாமியகன்ம மேரு. எ-று.

நாமல்ல விந்திரிய நம்வழியி னல்லவழி - நாமல்ல நாமு மரனுடைமை-யாமென்னி, லில்லைவினையென்றும்; அப்படிநிற்கக் கூடாதாகில், முன்னெத்தநுவினின்று முற்செய்வினையுந்தரு வா னிறைபணியாற் கில்லைவினை என்றும், பொருளுரைப்பினு மாம்.

இல்லைவினை என்பதனை யிப்பொருட் கிரண்டிடத்துங் கூட் டுக. "இந்திரியமெனைப்பற்றி நின்றே" என்முர்வழிநூலார். சித் - ௧௦—கு, ௩—செ. எனவே, முன்புசெய்தவினைகள் தா ன்செய்தானாகவும் பிறர்செய்தாராகவும் கூறுதலால் ஏறியது, அப்படியின்றித் தாந்தாஞ்செய்த கன்மங்களைப் புசிக்குமிடத்து

ச்சிவனைகூட்டிப் புசிப்பிக்கையாலவன்செயலைக்கண்டு நிற்கப் பிராரத்தம் புசிக்கிறதொழிந்து மேலைக்கு வினையேறுதென்றது.

இதுசம்பிரதாயதிட்டியாலறிவித்தது. (உ)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். உடம்பொடு நிற்பார் நுகர்தற்கு வேண்டப்படும் பிராரத்தவினையும் அதுபற்றியேறும் ஆகாமியவினையும் ஒருதலைபானுண்மையின், இறைபணி நிற்றல்பற்றி அவை பிரவேசியாவென்றல் அமைவுடைத்தன்றுபோலுமென்பாரை நோக்கி ஏதுவை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். இந்திரியம் நாம் அல்ல. எ-து. வினைகளை நுகர்தற்கும் ஈட்டுதற்குங் கருவியாகிய இந்திரியங்கள் மாயேயமாவனவன்றி யாமாவனவல்ல—நம் வழியின் அல்ல. எ-து. அவை தொழிற்படுதலும் முதல்வன்வயத்தானன்றி நம்வயத்தானல்ல—வழிநாம் அல்ல. எ-து. வினைநிகழ்ச்சிக்கு வாயிலாகிய விடயாதிகளும் அவ்விந்திரியங்கள்போலமாயேயமாவனவன்றி யாமாவனவல்ல. அவை சேட்டித்தலும் முதல்வன்வயத்தனவன்றி நம்வயத்தனவல்ல—நாமும் அரன் உடைமை. எ-து. அவற்றொடுயைந்துநின்று வினைகளை யீட்டுதற்கும் நுகர்தற்கும்வினைமுதலாகிய யாமும் ஞானச்செய்திகளை முதல்வன் விளக்கியவழிவிளங்கி அல்லுழி விளங்குமாறின்மையான், அம்முதல்வன் வயத்தராவேமல்லது சுதந்திரராவேமல்லேம்— ஆம் என்னில். எ-து. என்றிங்ஙனம் பசுபாசங்களை தியல்பை உள்ளவாறுணர்ந்து செய்வனவெல்லாம் அவனருளின் வழி நின்றுசெய்யுஞ் செயலாகக் கண்டுகொண்டிருப்பாராயின்,—இறைபணியார்க்கு எத்தகுவின் நின்றும் வினை இல்லை. எ-து. இவ்வடிமைத் திறமுடையார் எவ்வுடம்பினின்று எவ்வினைகளைச் செய்யினும் அவ

ர்க்கு அவை பந்தமாதலில்லை—முன் செய்வினையும் தருவான் முன். எ-து.'அவ்வாகாமியவினையை அவினாபாவமாய் உடன் கொண்டு வருவதாகிய பிராரத்தவினையுந் தன்னைக் கூட்டுவிக் கு முதல்வன் சந்நிதியின் உடலூழாய்க் கழியும். எ-று.

நம் வழியினல்லவென்பது வழியென்பதனோடு கூட்டியுரைத்துக்கொள்ளப்படும்.

மகனன்று குற்றியென்றாற்போல அன்மைச்சொற்றழுவப் படும் பொருண்மேனின்றது. "அன்மைக் கிளவி வேறிடத் தானும்" என்பதோத்தாகலின்.

நின்றும் உம்மைசிறப்பு; ஏனையும்மைகள் இறந்தது தழீஇயின.

சஞ்சிதவினை தீக்கைசெய்த மாத்திரையே எரிசேர்ந்த வித்துப்போலக் கெட்டொழிதலின், ஈண்டு முற்செய்வினை யென்றது ஏற்புழிக்கோடலாற் பிராரத்தவினை மேற்றாயிற்று.

தருதல் இடவழுவமைதி.

கழியுமென்பது சொல்லெச்சம், உடலூழாயென்பது அவாய்நிலையான் வந்தது.

சார்ந்தாரைக் காத்த றலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்தான் சலமிலனாய்ச் - சார்ந்தடியார்
தாந்தானச் செய்துபிறர் தங்கள்வினை தாங்கொடுத்த
ஆய்ந்தார்முன் செய்வினையு மாங்கு. [ல்

இது, சிவன் பக்ஷபாதியல்ல வென்கின்றதும், சிவன்செய

லொழிந்து வேறுசெயலில்லை யென்பாற்கு மேல்வினை யேறு தென்பதுங் கூறுகின்றது.

இ-ள். சார்ந்தாரைக் காத்த றலைவர் கடனாதல். எ-து.	அடைந்தவர்களை யஞ்சலென்றிரக்ஷிக்கை கர்த்தாவுக்கு முறைமையாதல். அதனாலே,
சார்ந்தாரைக் காததுஞ் சலமிலனாய். எ-து.	அடைந்தவர்களை யிரக்ஷித்து (மடையாதவர்களை யிரக்ஷியா திருப்பினு மவர்களுடன்) வெறுப்பின்றி யிருப்பன்.

உம்மை-எதிர்மறை.

எனவே, யவரவர் கன்மங்களைப் புசிப்பிக்கின்றான், கன்மந் துலையொத்துத் தன்னையடைந்தோரை யிரக்ஷிக்கின்றா னென்பதாயிற்று.

சார்ந்தடியார் தாந் தானாச் செய்து. எ-து.	தன்னையடைந்த வடியார்களைத் தன்னுடைய சொரூபமேயாக்கி.
பிறர் தங்கள் வினை தாங்கொடுத்தல். எ-து.	தன்னையடையாத பிறருடைய வினைகளைப் புசிக்கும்படி கொடுத்தலை
ஆய்ந்தார்முன் செய்வினையு மாங்கு. எ-து.	ஆராய்ந்தவர்களிடத்து மேற்செய்யும் வினையில்லையாம்; அவ்விடத்து. எ-று.

அவ்விடத்தென்றது பிராரத்தகன்மம் புசிக்குமிடத்து. அஃதாவது, என்னுடையசெயலெல்லா முன்னுடையசெயலேயெ

ன்று நீ யென்னுடையவிடத்தேநின்று செய்விக்கிருய் செய்வி ன்ருயென்று தன்பணியறுக்கவென்றதாம்.

பிறர்தங்கள்வினை தாங்கொடுத்தலென்பதற்கு, பிறர்வினையாற் பிறர்க்குத் தாங்கள் வினையாற் றமக்குப் பிறர்கொடுத்தலுமென்று பொருளுரைப்பினுமாம் "சலமிலனுய்ஞானத்தாற்றனை" என்றார் வழிநூலார். சித் - கா—ரு, சு—சு.

இது, சம்பிரதாயதிட்டியா லறிவித்தது. (க)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். இறைபணியார்க்கு உளவாகிய முற்செய்வினை ஏனையோர்க்குப்போலன்றித் தருவானமுன்னுமொழியுமாயின், அங்ஙனம் இருவேறு வகைப்படச்செய்யு முதல்வன் நடுவுநிலைமையின்றிக் கோட்டமுடையனெனப்பட்டு வழுவாம்போலுமென்பாரை நோக்கி வழுவன்மை கூறி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன் ஆதல் சார்ந்தாரைக்காத்தும் எ-து. தம்மாட்டு அடைக்கலமெனச் சார்ந்தாரை அவர்க்கு வருமேதத்தை நீக்கிக் களைகணுய்நின்று காப்பது தலைமைக்குண முடையராயினுர்க்குக் கடமையாகலான், முதல்வன் ஏனையோரை யொழித்துத் தன்னைச் சார்ந்தாரை அங்ஙனம் பாதுகாப்பானுகியும்—சலம் இலன் ஆய். எ-து. அதுபற்றிக் கோட்டமுடையனல்லனுய்—சார்ந்து அடியார் தாம் தான் ஆச்செய்து பிறர் தங்கள் வினை தான் கொடுத்தல். எ-து. தன்னைச்சார்ந்து தன்னடித்தொழில் செய்வார் தன்போல் ஆகாமியவினைத்தொடக்கிலராகச் செய்து பிறர்க்கு வருமாகாமிய வினையை அவர்க்குக் கொடுப்பானுகலான்,—ஆய்ந்தார் மு

ன்செய்வினையும் ஆங்கு. எ-. அவ்விருதிறத்தோர் மாட்டும் நானுகி வந்து கூடுவதாய பிராரத்தவினையும் அவ்வாறே செய்வோர் செய்திக்குத் தக்க பயனாய் இருவேறுவகைப்பட்டுச் செய்வன். எ-று.

இறைபணியார்க்கில்லை வினை முற்செய்வினையுந் தருவான் முன்னென்றதுபற்றி ஏனையோர்க்கு நியதி செய்தூட்டி இறைபணியார்க்கு வினையின்றாகச் செய்தல் இறைவனுக்கு நடுவுநிலைமையன்றென்பாரை நோக்கி, அதனை உடன்பட்டே அமைதிகூறுவாராய், சார்ந்தாரைக் காத்தறலைவர் கடன் எனப்பழமொழியெடுத்துக்காட்டி, இஃதவ்வாறு நடுவன்மையுமன்றென வலியுறுத்துவார், சார்ந்தடியார் தாந்தானுச்செய்து பிறர் தங்கள் வினை தான் கொடுத்தல் எனவேறுவமையெடுத்துக்காட்டினார். சார்ந்தடியார் தாந்தானுச்செய்து பிறர் தங்கள்வினைதான் கொடுத்தலுண்டென்பதூஉம், அது கோட்டமின்று நடுவு நிலைமையே யாமென்பதூஉம் ஏனைச் சமயத்தார்க்கும் ஒப்பமுடிந்தமையின, அஃதீண்டைக் குவமையாயிற்று.

உம்மை சிறப்பின்கண் வந்தது.

சலம் வஞ்சனை; அஃது ஈண்டுக் கோட்டத்தின்மே னின்றது.

சார்ந்தென்னும் வினையெச்சம் அடியாரென்னும் வினைக்குறிப்பு முற்றுப்பெயர் கொண்டது. சார்ந்தவென்னும் பெயரெச்சத்தகரந் திரிந்து முடிந்ததெனினு மமையும்.

பின்வந்த தாமுந் தானும் அசை.

ஆதல் கொடுத்தலென்புழி ஆனுருபு விரித்துரைக்க.

தானுச்செய்தென்புழி ஆக்கம் உவமவுருபின்பொருள் குறித்துநின்றது.

பிராரத்தவினை அதிசூக்குமமாய் வருவதாகலின் அதனியல்பறிதல் அறிதென்பார் ஆய்ந்தார் முன் செய்வினையு மென்றார்.

உம்மை இறந்தது தழீஇயிற்று.

ஆர் வினைத்தொகை. ஆய்தல் அப்பொருட்டாகல் மேற்காட்டினும்.

இங்குளி வாங்குங் கலம்போல ஞானிபால்
முன்செய்வினை மாயை மூண்டிடினும் - பின்செய்வினை
மாயையுட னில்லாது மற்றவன்றன் மெய்ப்பொருளே
யாய வதனாலுணரு மச்சு. (௪)

இது, சஞ்சிதவினை தீக்கையிலே போம், பிராரத்தம் புசிக்கவேண்டும், மேலாகாமிய மேறாது ஞானவான்களுக் கென்கின்றது.

இ-ள். இங்குளி வாங்குங் கலம்போல ஞானிபால் முன் செய்வினை மாயை மூண்டிடினும் பின்செய்வினை மாயையுட னில்லாது. எ-து.

தீக்கையாலே சஞ்சிதகன்மங்களைப் புசிக்கப்பட்ட ஞானியிடத்தே பெருங்காயத்தை யொருபாத்திரத்தே நிறுத்திட்டுவைத்து அந்த நிறைக்கொக்க வாங்கிவிட்டாலு மதினுடைய நாற்ற மதனிலே நின்றாற்போல, முன்பு செய்ததா யிந்தத்தேகத்துக்கமைத்த பிராரத்தம் புசிக்கின்றதொழிந்து பின்புசெய்யுங் கன்மமு மதற்கேற்ற தேகமும் பொருந்தி மீண்டும் புசித்தற்கு பிராரத்த முண்டாகா. அஃதெத்தாலென்னில் ?

மற்றவன்றான் [மற்று-அசை.] அந்தஞானிதான் சிவ
மெய்ப் பொரு சொரூபமேயாய் நின்றவதனால்.
ளேயாய வதனு
ல். எ-து.

உணருமச் சத ஒன்றையுணருமளவிற் சிவகரணமாய்நின்
ஞல். எ-து. றுணருமேகிபவித்தால். எ-று.

அதனாலென்பதனை யிரண்டிடத்துங் கூட்டுக.

இப்படி இந்த மூன்றுவெண்பாவாலும் ஆகாமியகன்மங்களை
நீக்குமுறைமை கூறியவாறறிக. எனவே, தேகாந்தத்தே மு
த்தியென்பது கூறினாயிற்று. "இங்குத் தங்கிப்போம்பாத்
திரமுங் குலாலன்வினைதவிர்ந்த சக்கரமுங் கந்தித்துச்சுழலு
மா" என்றார்வழிநூலார். சித் - கo—கு, சு—செ. 'அங்கி'

சஞ்சிதந் தீக்கையாலேபோம், போனாலும் பிராரத்தம் நிற்
கும்,அருபுசிப்பற்றவெல்லையிலே வீடுபேறுமென்னும்பக்கத்துக்
கு:பெருங்காயம்வாங்கினர் பாத்திரமு மதனாற்றமு மதுதகர்ந்
தா லந்தனாற்றம் வேறொன்றிற்றோற்றுதென்பதுவும் சபக்கமா
யினவாறறிக. (ச)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். இறைபணி நிற்பார்க்குப் பிராரத்த
வினை தாக்குதலுண்டென்பதற்கு "தினைத்துணையேனும்பொ
றேன் றுப ராக்கையின் றிண்வலியே." என்றற்றொடக்கத்தா
ன் அவர் கூறுந் திருவாக்குகளே சான்றாகலின், அஃதவர்க்குச்
செய்வோர்செய்திப் பயனு யொழியுமென்றல் அமையாமையி
ன் அஃதுண்டாகவே அதுபற்றி நிகழும் ஆகாமியமும் பிறவி
க்கு வித்தாய் நிலைபெறுதலுண்டுபோலுமென்பாரை நோக்கி ஆ

ண்டுப் பிராரத்தவினை தாக்குதற் கேதுக் கூறி அதுபற்றிச் செய்வோர்செய்திப் பயனுயொழிதற்கு இழுக்கில்லையென வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். இங்குளி வாங்கும் கலம்போல. எ-து. தன்பால் வைத்தெடுக்கப்பட்டொழிந்த பெருங்காயத்தினின்றும் அதன் வாசத்தை வாங்கிக்கொள்ளும் பாசனத்தின்கண் அவ்வாசம் மங்கிப்போய் மெலிதாய்க் கந்திக்குமாறுபோல—ஞானிபால் முன் செய் வினை மாயைமூண்டிடினும். எ-து. இறை பணி நிற்குந் தத்துவஞானிக்குப் பயிற்சிவயத்தான் ஒரோவழி நாடுமுள முண்டாதலும் உண்மையின், அதுபற்றிப் பிராரத்தவினையும் அதற்கு வாயிலாகிய உடம்புமுதலிய மாயையும் மங்கிப்போய் வாசனைமாத்திரையாய் மெலிதாய் வந்து மூளுமாயினும்—பின்செய் வினைமாயையுடன் நில்லாது. எ-து. அம்மூட்சிபற்றி ஒருதலையா னிகழ்வதாகிய ஆகாமியவினை மேலைக்குவிதாய் நிலைபெற்று முறுகுதலின்றித் தனக்கு வாயிலாகிய மாயையத்தோடு கெட்டொழியும்—அவன் தான் மெய்ப்பொருளே ஆயவதனுல் மற்று அச்சு ஊரும். எ-து. இறை பணி நிற்கும் அவன் சத்தாயுள்ள சிவமேயாயவற்றுல் ஒரோவழி அவ்வாசனை பற்றிப் பிறழவரினும் பிறழவொட்டாது அவ்வச்சினையே நோக்கி நிற்பனுகலான். எ-று.

ஒளி இருளைத் துரக்குமாறுபோல அவ்வுணர்வு அவ்வாகாமியத்தைத் துரக்குமென்பதாம். "தொல்லையில் வருதல்போலத் தோன்றிரு வினையதுண்டே—லல்லொளி புரையுஞானத் தழலுற வழிந்துபோமே" எனப் புடைநூலாசிரியரோதிய நூஉம் அது. சிவப்பிரகாசம் உண்மை. ௬௧ "எல்லையில் ...

உளி ஐந்தாம்வேற்றுமை யுருபுபட நின்றது. "ம... ன் மரபுளி வழாஅ—வந்தணர் வேள்வி" என்றார்பே...

றுகரக்கேடு இலேசாற்கொள்க.

வாங்குதற்குச் செயப்படுபொருள் அவாய்நிலையான் வந்தது.

மூண்டிடினுமெனவே, மூளுதல் ஒருதலையன்றென்பது பெற்றும்.

மாவை ஆகுபெயர்.

மற்று வினைமாற்றின்கண் வந்தது.

தானென்பது அநுவதித்தற்கண் வந்த இடைச்சொல்.

பிறழ விடாமைபற்றி மெய்ப்பொருளை அச்சாக உருவகஞ்செய்தார்.

நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்ணமர் மாச்செலுத்தும் பாகரினும் - எண்ணி
யரனடி யோர்பவ ரைம்புலனிற் சென்று
மரனடி நீங்கா ரதற்கு. (ரு)

இது, ஞானிகள் விடயங்களிலேபட்டு மயங்காரகளென்பது கூறுகின்றது.

இ-ள். நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும். எ-து. அக்கினிக்குள்ளேயிருந்தாலு மிருக்கின்ற நெருப்பில்வேகாத நல்ல அக்கினித்தம்பனை யுடைய தபோதனரைப்போலவும்

பண்ணமர் மாச்செலுத்தும் பாகரினும். எ-து. பண்ணியமைந்த நல்லபுரவியைச் செலுத்துகின்ற பாகரைப்போலவும்

என்னனி யர பதிபசுபாசத்தை யாராய்ந்துணர்ந்த ப
ணடி யோர்பவு தியினுடைய திருவடிநீழலொழிந் தொரு
ர். எ-து. நிழலில்லையென்று நினைப்பவர்.

ஐம்புலனிற் ஐந்துவிடயங்களிலே சென்றார்களாயி
சென்று மரண னு மதனிலே மயங்கி ஞானவிரங்குலைந்து
டி நீங்கா ரதற் பதியுடைய திருவடியை நீங்கார்கள். எ-று.
கு. எ-து.

எனவே, திருவடியே தாரகமாக நிற்பார்க்கு வினையேறாதெ
ன்றும், இந்திரியங் கைகடந்துசெல்லாதுமீளுமென்பதுவுங் கூறி
யபக்கத்துக்கு, அக்கினித்தம்பனையுடையோரும் புரவிசெலுத்
துவோருஞ் சபக்கமாயினவாறறிக. எனவே, ஞானவீர ரெ
ப்படியிருந்தாலு மவர்க ளிந்திரியங்களிற் படாரென்றதாம்.
"அங்கித்தம்பனைவல்லார்கனல்சுடாதாகும்", "நாடுகளிற்புக்
குழன்றுங்காடுகளிற்சரித்தும்". என்றார் வழிநூலார். சித் -
க0—கு, சு - ரு—செ. ஓர்பவர் நீங்கா ரைம்புலனிற்சென்
றும் நற்றவர்போலவும் பாகர்போலவு மெனவறிக. (ரு)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். முன் செய்வினை மாயை மூண்டவழி
யும் அந்நிலையிற் பிறழாத அவ்வச்சினையே யுணர்ந்து நிற்றல் யா
ங்ஙனமென்பாரை நோக்கி உவமைமுகத்தான் அதனை வலியுறு
த்துத லுதலிற்று.

இ-ள். நண் அனல் வேவாத நற்றவர் தம்மினும் பண் அமர்
மாச் செலுத்தும் பாகரினும். எ-து. அங்கித்தம்பனத்தால் நண்
ணனல் வேவாமைக் கேதுவாகிய நற்றவமுடையார் அவ்வனலு
ட் இடப்பினுந் தந்நிறனினீங்காத வாறுபோலவும், பண்ணுதல

மரப் பரிமாவூர்தற்குரிய பாகனூல் கற்றுவல்லார் அப்பரிமாவின் வேகத்துட்படினுந் தந்திறனினீங்காதவாறுபோலவும்—எண்ணி அரன் அடி ஓர்பவர். எ-து. ஐம்புலன்களில் அகப்படாமைக்கு உபாயம் யாதென்றெண்ணி முதல்வன் திருவடியாகிய அச்சையுணரவல்லார்—ஐம்புலனில் சென்றும் அதற்கு அவர் திறன் நீங்கார். எ-து. முன் செய்வினை மாயை மூட்சிபற்றி ஐவகைப்பட்ட விடயங்களிற் சென்றாராயினும் அதனால் அவர் தந்திறலிற்றீர்ந்து பந்தத் தொடக்குறுவாரல்லர். எ-று.

பொருள்வினை உவமையினுஞ் சென்றியைந்தது.

நண்ணனல் கீழ்நீர்போல முன்பின்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத்தொகை. நள்ளனல் நண்ணனலென மரீஇயிற்று; "நீணுலகெலாம்," என்றாற்போல. தம்மால் நண்ணப்படும் அனலென்றுரைப்பினு மமையும். திருநாவுக்கரசுநாயனார் "கோயிற் குறுந்தொகை—ச.

பண்ணுதல் கதிப்பித்தல்.

இன்னிரண்டும் உவமவுருபுகள்.

உம்மை எண்ணும்மை. சென்றுமென்னு மும்மை சிறப்பு.

அதற்கென்பது உருபுமயக்கம்.

சதசத்தா மெய்கண்டான் றன்னா னுணரி
னிதமித்தல் பாசத்தி னின்றிக் - கதிமிக்
கெரிகதிரின் முன்னிருள்போ லேலாவசத்தி
னருகணையார் சத்தணைவா ரங்கு. (கூ)

இ-ஃ, ஞானவான்களிடத்து மாயாகன்ம மேலிடாதென்கின்றது கூறுகின்றது.

இ-ள். சத்சத்தா மெய்கண்டான். இது சத்தினுடைய வுண்மை இது அசத்தினுடைய வுண்மையாமென்றுகண்டு நாமிவையிரண்டினுமல்ல சதசத்தாயிருந்தேமென்றுதம்மைத் தரிசித்தவர்.
எ-து.

எனவே, பதிபசுபாசங்களைத் தரிசித்தவ ரென்பதாயிற்று.

தன்னுணரில். எ-து. யாதொரு பொருளையு மான்மபோதத்தாலே யுணராமற் சிவபோதத்தாலே யுணர்வராகில்.

இதமித்தல் பாசத்தினின்றி. எ-து. ஆணவமலத்தாலே பிரதிக்கின்றது மில்லையாம்.

ஏலாவசத்தின் பொருகணையார். எ-து. பொய்யாகிய மாயாகாரியத்தினும் பொருந்தார்.

சத்தனைவாரங்கு. எ-து. எப்பொழுதுஞ் சிவனைக்கூடிச் சிவசொரூபமாயிருப்பர்.

ஆகலாலே யவர்களிடத்து மலமாயாகன்மம் பொருந்தாது. அஃதென்போலவென்னில்?

கதிரிக் கெரி கதிரின்முன் னிருள்போல். எ-து. செலவிலேயிருந்து உட்டணம்பொருந்திய வாதித்தன்முன் அந்தகாரமில்லாதாற்போல. எ-று.

சத்தனைவாரங்கு என்பதற்கு பாசமேலிட்டதாகிற் சடக்கெனச் சிவசொரூபத்தே கூடுவதென்பாருமுளர். எனவே

ஞானத்திலே நிற்குமளவு மஞ்ஞானம் பொருந்தாதென்பதாயிற்று.

மலமேலிடாது மாயாகாரியஞ் சீவியாதென்றது, ஆதித்தன முன்னிருளுமில்லாது விளக்கும் பிரகாசியாதாற்போலவெனவறிக.

ஞானத்திலே நிற்குமளவும் பாசமேலிடாதென்னும் பக்கத்துக்கு, ஆதித்தன்முன் அந்தகாரம் நில்லாதென்னும் சபக்கமும், ஆதித்தன் நீங்கியவிடத்து இருள்மேலிடுமாறுபோல ஞானத்தை நீங்கியபோது பாசமேலிடுமென்னும் விபக்கமுங் காட்டியவாறு காண்க. (௯)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். சார்ந்ததன் வண்ணமாய்ச் சதசத்தெனப்படுமியல்புடையார் அரனடியோரினும் ஐம்புலனிற் சென்றுழி அவற்றிற்றொடக்குண்ணாது திறலுடையராதல் யாங்ஙனமென்பாரை நோக்கிச் சார்ச்சிக்கப்படும் விசேடங்கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். சதசத்து ஆம் மெய்கண்டான் சத்து அருளில் காணில். எ-து. தன்னாற் சாரப்படுவனவாகிய சத்தினும் அசத்தினும் அதுவதுவாதல்பற்றிச் சதசத்தென்னுந் தன்னுண்மையையுணர்ந்தோன் சத்தாகிய முதல்வன் றிருவருளாலல்லது ஒன்றையுங் காணானாய் அவ்வருளின் வழி நின்று காணுமாயின்—பாசத்தில் இதமித்தல் இன்றி. எ-து. அவ்வழிப்பாசமாகிய அசத்தின் இதஞ்செய்தலின்மையால்—சத்து அணைவார் கதம் மிக்கு எரி கதிரின் முன் இருள்போல் ஆங்கு ஏலா அசத்தின் அருகு அணையார். எ-து. சத்தாகிய முதல்வனைத் தலைப்பட்டு நிற்பார் சீற்றமிக் கெரியாநின்ற சுடரின்முன்னர் அந்தகாரம்போலச்

சத்தெதிர் தனது சத்தி யேற்கமாட்டாத அசத்தாய ஐம்புலனின்மாட்டெய்தி நிற்பரல்லர். எ-று:

வேறுமுடிபாகலின் ஒருமைப்பன்மை மயக்கமின்மை யுணர்க.

அருளினென்னும் இன்னுருபு ஏதுப்பொருட்கண் வந்தது.

இதமித்தல் பெயரடியிற் பிறந்த வினைப்பெயர். இதஞ்செய்தல் பற்றுச்செய்தல்.

இன்றியென்னுஞ் செயவெனெச்சக்குறிப்புக் காரணப்பொருட்டாய் நின்றது.

இன்மைக் கேதுகூறுவார் கதமிக் கெரிகதிரின் முன்னிருள்போலேயா வசத்தென்றார். கதமிக் கெரிகதிரென்றது ஒப்புமை பற்றிய உபசாரவழக்கு. "எல்லை யில்லவ னெரிதுள்ளி னாலென வெகுண்டான்" என்பதனானும் ஒப்புமையாத லுணர்க.

இதனாற் போந்தது, சத்தும் அசத்துந் தம்முட் சமமல்லவாகலான் அரனடியோர்பவர் ஐம்புலனிற் சென்றாலும் அதுபற்றி அவர் திறனீங்காரென மேலது வலியுறுத்தவாறு மென்க.

ஏகனாகிநிற்றலான் மலமின்றாதலும் இறைபணி நிற்றலான் மாயை வினைகளிலவாதலும் பெறப்பட்டமையின், மலமாயை தன்னொடு வல்வினையின்றே யென்பதனை வேறோரதிகரணமாக வைத் தோதாராயினார்.

கo—சூ, இரண்டாமதிகரண முடிந்தது.

பத்தாஞ்சூத்திரமுடிந்தது.

கக—சூத்திரம்.

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போல்
காண வுளத்தைக் கண்டு காட்டலின்
அயரா வன்பி னரன்கழ றருமே.

இச்சூத்திரமென்னுதலிற்றோவெனின் ? பரமேசுரனுடைய திருவடியைக் கூடுமுறைமை கூறுகின்றது.

இ-ள். காணுங் கண்ணுக்குக் காட்டு முளம் போல். எ-து.	காட்சியையுடைய கண்ணுக்குக் காட்டுகின்ற வான்மாப்போல.
காண வுளத்தைக் கண்டு காட்டலின். எ-து.	சிவன் ஆன்மா தேசத்தைநீங்கிச் சுத்தனுனவிடத்து ஆன்மாவைத் தானுங்கண்டு தன்னையுங் காணக் காட்டுதலாலே.
அயரா வன்பி னரன் கழ றருமே. எ-து.	அத்தன்மையை மறவாத அன்பினையுடைத்தாகத் தன்னுடைய திருவடியைக் கூட்டும். எ-று.

என்றது, முத்தான்மாக்க ளிந்திரியங்களை நீங்கித் திருவருளைத் தாரகமாகநின்று காணுமுறைமைபோ லவ்விடத்து மிந்திரியாதிகளை நீங்கித் திருவருளை தாரகமாகநின்று சீவன்முத்தரானவர்களென்றதாம். எனவே, இவ்விடத்துஞ் சிவனுடைய திருவடியைக் கூடிச் சிவாநுபவத்தைப் பெற்றிருப்பர்க

னென்பதாயிற்று. "காயமொழிந்தாற்சுத்தனாகியான்மாக் காட்டக்கண்டிருந்ததன்மையுடையகண்ணுக்— கேயுமுயிர்காட்டிடக்கண்டிடுமீதுபோல்" என்றார் வழிநூலார். சித் - கக—கூ, க—செ.

இதற்குப்பிரமாணம்.

சிவஞானமுனிவர் உரை.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு.—காட்டக்காணுந்தன்மையுடைய கண் உருவத்தைக் காணும்படி அதனோடொருங்கியைந்து நின்று காட்டி அவ்வுருவத்தைக் காண்கின்ற ஆன்மாப்போல அறிவிக்க அறியுமியல்பையுடைய அவ்வான்மா விடயத்தை யறியும்படி முதல்வன் அதனோடியைந்து நின்று அறிவித்து அறிந்து வருதலான், அவ்வத்துவித நிலையை மறவாது கடைப்பிடித்துச் செய்யும் அன்பானே அம்முதல்வன் திருவடியாகிய சிவானந்தாநுபூதியைத் தலைப்படும். எ-று.

காணுமென்னும் உவமையடை பொருளினும், கண்டென்னும் பொருள்வினை உவமையினும் சென்றியைந்தன. காணுமென்பதனை ஈரிடத்துங் கூட்டுக.

"வியர்த்து வெகுளார்விழுமியோர்" என்பதுபோலக் கண்டு காட்டலெனபது மாறிவைத்துரைக்கப்பட்டது.

இக்கருத்து நோக்கியன்றே, இதனைவிரித்துக் கூறுவான் புகுந்த வழிநூலாசிரியர் "காட்டிக் கண்டிடுமா போலக் காட்டிக்கண்டிடுவன்"-என்றதூஉமென்க. சித்-கக—கூ, க—செ.

அயராமைக்குச் செயப்படுபொருள் அதனையென்றெடுத்துக் கொள்க. அயராவன்பென்றது அயராமையானாகிய அன்பென

“ஆறுசென்ற வியர்” போல நின்றது. அது “இத்தையாயு மறிவுடையனு யன்புசெய்ய” என வழிநூலாசிரியர் 'கூறியதனானு முணர்க' சித், ௧௧—சூ, ௧—செ. “காயமொழி”.

உள்ளத்தையென்பது உருபுமயக்கம்.

அறிவிச்சைசெயல்களி னிகழ்ச்சியாகிய அயராமையும் அன்பும் செலவும முறையே காரணகாரியங்களாய் அவ்வொருபொருண்மேல் ஒருங்கு நிகழுமென்பார் அயராவன்பினரன்கழல்செலுமே யென்றார்.

இஃதென்சொல்லியவாறோவெனின்; உயிரை யின்றியமையாத கண் உருவத்தைக் காணுங்கால் உயிரினதுணர்வு கண்ணொளியெனத் தானென வேற்றுமையின்றி உடனாய் விரவி நின்று கண்ணுக்குக் காட்டியவதனைக் கண்கண்டதென்றுங் கண்ணையதிட்டித்து நின்ற உயிர் கண்டதென்றும் பகுத்தறிய வாராது இரண்டன் காட்சியும் ஒன்றனையொன்று விடாது அத்துவிதமாகி ஒருங்கே நிகழுமாறுபோல, முதல்வனையின்றியமையாது உயிர் ஒருவிடயத்தை யறியுங்காலும் முதல்வனது சிற்சத்தி ஆன்மசிற்சத்தியெனத் தானென வேறின்றி உடனாய் விரவி நிற்ப முதல்வனும் அவ்வாறு விரவிநின்று ஆன்மாவிற்கு அறிவித்ததொன்றனை அவ்வான்மா அறிந்ததென்றும், அதனையதிட்டித்து நின்ற தானறிந்தானென்றும் பகுத்தறிய வாராது, இருவரையறிவும் ஒன்றனையொன்று விடாது அத்துவிதமாய் ஒருங்கே நிகழுமாறு செய்துவரும் இவ்வுபகாரம் பெத்தமுத்தியிரண்டினும் ஒருபெற்றித்தாய் உண்மையின் ஏகனாகியிறைபணி நிற்குமுயிர். முதல்வன் அங்ஙனம் அத்துவிதமாய் உபகரித்து நிற்கு முரிமையை நோக்குமாயின் நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அப்பொருட்கட் செல்லுமிச்சை அடங்காது மீதூருமாகலின் அவ்வழி அவ்விச்சையே தானாகவிளங்கித் தோன்று

ம் பேரானந்தத்தை அநுபவிக்கப்படுமெனா அறிவிச்சைசெயல்கள் மூன்றுங்கண்டு விடயிக்குமாறுணர்த்தி அதீதநிலை யியல்பு கூறியவாறுமென்க. அத்துவிதமாவது பேதப்பொருளிரண்டுந் தம்முள் அபேதமாதற்குரிய சம்பந்தவிசேடம். இக்கருத்தேபற்றி "அறிவொளிபோற் பிறிவருமத்துவிதம்." என்றார் புடைநூலாசிரியரும். சிவப்பிரகாசம், பாயிரம். எ. "புறச்சமயத்தவர்" அங்கியும் ஒன்றிற் றங்கிநின்றல்லது தன்றொழி னடத்தாதாகலின், அதுபோல முதல்வனும் உயிரையதிட்டித்து நின்று எத்தொழிலுஞ் செய்வனென்றுணர்க. உயிர் ஒன்றனையறிதல் முதல்வன் உடனின்றறிதலையின்றி அறிவித்தன் மாத்திரையான் அமையாதென்பது "தொண்டனே விளையுமாநிளையே" "விரும்புமாவிரும்பே" "தொடருமாதொடரே" "நுகருமா நுகரே" என்றிவ்வாறு முத்திநிலைபற்றியோதிய திருவாச்குக்களானுமறிக. திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா, கோயில். கக. ௧௦. ௯. எ. இவ்வியல்புநோக்கியன்றே "அறிவானுந்தானே யறிவிப்பான் றானே" என்றோதிய அம்மை "அறிவா யறிகின்றானே" எனவுமோதியதூஉமென்க. காரைக்காலம்மையார், "அற்புதத்திருவந்தாதி." முன்னறிதல் அறிவித்தற்பொருட்டெனவும் பின் அறிவா யறிதல் விடயத்தில் அழுந்துவித்தற்பொருட்டெனவுங் கொள்க. இதனையீண்டு வைத்தார் அத்துவிதநிலை இனிது விளங்குதற்கு.

இவ்வாறன்றிக் காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம்போற் காணவுள்ளத்தைக் கண்டு காட்டலென்பதற்குக் காட்டுமுபகாரமுணர்த்தன்மாத்திரையே கருத்தென்றுரைப்பாருமுளர். இதனைக் கண்ணழித்துரைப்புழி அவனும் அவற்றது விடயத்தை யுணருமெனக் காணு முபகாரமாத்திரையே எடுத்துக்கொண்டுரைத்தல் ஆசிரியர் கருத்தன்றாகலானும், காணுமுபகாரங் காட்டு

முபகாரத்தின் பின்னர்த்தாய் நிகழுமென்பது உணர்ந்துகோட்பொருட்டுஅதுவும் உடன்கூறப்பட்டதன்றிவேறின்மையானும், அவ்வாறன்றென்பார்க்கு ஐந்தாஞ்சூத்திரத்துட்பெறப்பட்டதனை ஈண்டுக்கூறுதல் புநருத்தியாய் முடியுமாகலானும், அவருரைப்பனவெல்லாம் போலியுரையென்றொழிக. அற்றேல், முதனூலிற் பதினொராஞ்சூத்திரத்துட் காட்டுவனென்பது மாத்திரையேயன்றிக் காண்பனென்பது கூறிற்றில்லையாலெனின்; அறியாது வினாவினாய்: ஆண்டுக் காட்டுவானுமென்றவும்மை காண்பானுமாமெனா எதிரது தழீஇநிற்றலின், கூறுமை யாண்டையதென்றொழிக. அவ்வும்மைக்குப் பொருள் காணமாட்டாதார் பாடம்வேறாக ஓதுப.

ஐந்தையு மொக்க வுணரா தவற்றுணர்வ
தைந்தும்போ லின்றுணரு மாதலா — லைந்தினையு
மொன்றொன்றாப் பார்த்துணர்வ துள்ளமே யெவ்வுலகு
மொன்றொன்றாப் பார்க்கு முணர்ந்து. (௧)

இது, சிவனுஞ் சீவனுஞ் சொரூபமொன்றென்னிற் சாயுச்சியமானாலும் அடிமை உண்டென்பதுவும், கலந்தவிடத்தும் அத்துவிதமாயிருக்குமென்பதுவும், பெத்தமுத்தியிரண்டினுஞ் சிவன் பிரேரிப்பனென்பதுவும், சிவனுடைய சர்வஞ்ஞத்துவமும் பஞ்சகிருத்தியமு மிவனுக்கில்லை என்பதுவுங் கூறுகின்றது.

இ-ள். ஐந்தையுமொக்க வுணரா தவற்றுணர்வது. — பஞ்சவிடயங்களையு மொருகாலத்தே யறியாதா யவற்றுடனே கூடிநின் றறிகின்ற வான்மா.

எ-து.

ஐந்தும்போ லின் றுணரும், எ-து.	ஐந்திந்திரியங்களையும்போல் நின்று சிவனாலே யறியும்.
ஆதலால். எ-து.	அதனாலே.
ஐந்தினையு மொன்றொன்றாப் பார்த்துணர்வ துள்ளமே. எ-து.	பஞ்சவிடயங்களையு மோரொன்றாகப் பார்த்தறிவது ஆன்மாவே.
எவ்வுலகு மொன்றொன்றாப் பார்க்கு முணர்ந்து. எ-து.	எல்லாப்பொருளையுஞ் சிவனொருகாலத்தே யறிந்து பார்த்திருப்பன். எ-று.

என்றது, ஆன்மா விந்திரியங்களுடனேகூடி யிந்திரியங்களை விடயீகரிக்க அந்தந்த விடயங்களை யனுவதுவாய்நின்று சீவிக்கின்ற அவதரத்தி லிந்திரியங்கள் விடயீகரிக்க யாஞ் சிவனாலே யவற்றை யறிகின்றேமென்ப தறியாதிருந்தாற்போலச் சிவனருளுடனேகூடிக் கலந்தவிடத்தும் அறியாதிருக்கவேணு மென்பதாம்.

எனவே, முத்தியினும் அந்நியமாயிருந் தநுபவிக்கவேணு மென்பதாயிற்று. ஆதலாலே யடிமையுமாயிற்று.

சிவனெல்லாவற்றையு மொருகாலத்தே யுணர்ந்து பார்த்திருப்பனென்றதனால் சர்வபிராணிகளுக்கும் வேறறக் காட்டாநிற்பனாதலாலே யாவ ரொருவர் யாதொன்றை யுன்னினார்களந்தவுன்னினவற்றைத் தானறிந்து அவரவர்செயற்கேற்ற நு

ண்மைகளைச் செய்வனுமாயாலே யப்படி வேறறச் சிவாரூப வத்தை யளித்துநிற்ப னென்றதாம். எனவே சிவஞானத் தாலே சிவனைத் தரிசித்தவர்கள் சிவனையொழிந்து வேறொன் று பாரார்களென்பதாம்.

அப்படி யிருப்பரேயிருப்பது, அல்லது ஒன்றொன்றாகப்பா ர்த்துணர்வது ஆன்மாவினுடைய அறிவாமென்பதாயிற்று.

இப்பொருள் "பரஞானத்தாற்பரத்தைத்தரிசித்தார் பர மே பார்த்திருப்பர்பதார்த்தங்கள்பாரார்பார்க்க—வருஞான ம்பசுஞானம்". என்றார் வழிநூலார். சித்-கக—சூ, உ—செ.

இது, சம்பிரதாயதிட்டியா லறிவித்தது. (௧)

சிவஞானமுனிவர் உரை.

எ-று. உ-ம். எ-னின். அவனும் அவற்றது விடயத்தை யுடனின்றுணருமாயின் அவற்றோடு அவனிடையறிதற் கட்டும் வே ற்றுமை இல்லைபோலு மென்பாரை நோக்கி வேற்றுமையுங்கா ட்டி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். உள்ளம். எ-து. ஆன்மாவாவது—அவற்று ஐந்தும் போல் நின்று உணர்வது உணரும் ஆகலான். எ-து. சுவை யொளியூறோசை நாற்றமென்னுமைந்தினும் ஐம்பொறிபோல் அ துவதுவாய்ச் செறிந்து நின்று உணர்தற்பாலதனை உணருந்த ன்மைத்தாகலான்—ஐந்தையும் ஒக்க உணராது ஐந்தினையும் ஒ ன்று ஒன்று ஆப் பார்த்து உணர்வது. எ-து. அவ்வைம்புலன் களையும் ஒருங்கேயுணரமாட்டாது அவ்வைந்தினையும் ஒரோ வொன்றாயறிந் தநுபவிப்பதாம்—ஒன்று எவ்வுலகும் ஒன்றாய் உணர்ந்து பார்க்கும். எ-து. அதுபோலச் சார்ந்ததன்வண்ண மாய்ப் பலதிறப்படுதலின்றி என்றுமொரு பெற்றித்தாகிய சி

லும் எல்லாவுயிர்களுடைய எல்லாவிடயங்களையும் பொதுவகையான் ஒருங்கேயுணர்ந்து அவ்வுயிர்களுடனின்று சிறப்புவகையானுமறியும். எ-று.

இது சொற்பொருட்பின்வருநிலை.

சிவத்தைப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண்வந்தது.

ஒன்றென்பது குறிப்பேதுவாய்நின்ற பெயர்.

ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினான் - ஏகமா
யுள்ளத்தின் கண்ணானு ளுள்குவா ருள்கிற்றை
உள்ளத்தாற் காணானே வற்று. (௨)

இதுவுமது.

இ-ள். ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப் போகமாய்த் தான் விளைந்த பொற்பினான். எ-து.	தன்னுடைய திருட்டியுடனே யேகமாய் நின்று தான்காட்டினதன்மை யொன்றையுங் கண்டுணரப் பேரின்பமாய் விளைந்த சிவன்.

அது, ஞாதிரு ஞான ஞேயங்களுங்கூறி ஞேயத்தழுந்தல் கூறினார்.

ஏகமா யுள்ள சர்வவியாபியாய் ஆன்மாக்கள் யாவைத்

த்தின் கண்ணா கும் வேறறக்காட்டாய் நிற்கின்றவன்.
ஞன். எ-து.

உள்குவா ரு நினைந்தார் நினைந்த நினைவுகளை.
ள்கிற்றை. எ-து.

உள்ளத்தாற் தன்னுடைய வருளாலே காணாதிருப்ப காணாதே வுற் றோ தானா மதிமேல கூடிநின்று. எ-று.
று. எ-து.

எனவே பெத்தமுத்திக ளிரண்டினுஞ் சிவனேநின்று பிரேரிப்பிக்கின்றவ னென்பதுவும், அவனையொழிந்து ஆன்மாக்க ளெவ்விடத்து மொன்றையறிந்து செய்யமாட்டாதென்பது வும், பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்குத் தோன்றி மற்றவற் குத் தோன்றாமற் காட்டாய்நிற்கின்றா னென்பதுவுங் கூறிய தாயிற்று. "எவ்விடத்துமிறையடிமையின்றி யமைந்தொன் றையறிந்தியற்றிடாவுயிர்கள்" என்றார் வழிநூலார். சித்- கக—ரு, எ—௭.

இதுவுஞ் சம்பிரதாயதிட்டியாலறிக. (௨)

சிவஞானமுனிவர். உரை.

எ-து. உ-ம. எ-னின். ஆன்மா ஐம்பொறியை விடயிப்புழிப் போல முதல்வனை விடயிப்புழியும் முதல்வன் அவ்வாறுடனின்று தன்னைத் தான் விடயிப்ப னெனின் ஆன்மாச்சிரயமென் னுங் குற்றமாகலின் அது பெறப்படாமையான் அவனும் அவ ற்றது விடயத்தையுணருமென்றல் யாண்டுஞ் செல்லாதென்பா ரை நோக்கி ஆண்டும் அவ்வா றுணர்தலுண்டென்ப துணர்த் தி அதனை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். ஒன்று ஏகம் ஆய் நின்றே இணை அடிகள் உணரத் தான் போகம் ஆய் விளைந்த பொற்பினன்.எ-து. முதல்வனைச் சார்ந்தவழி அவ்வண்ணமேயாய் ஒருபெற்றிப்பட்ட ஆன்மா, அவனோடொற்றுமைப்பட்டு நின்று அவனதடியிணைகளையுணரவே, தான் அவ்வான்மாவுக்குப் பரபோகமாய் மேன்மேல் விளைகின்ற பொலிவினையுடையனாகலானும்,—உள்ளத்தின்கண் ஏகம் ஆய் ஆனான். எ-து. அங்ஙனமுணருங்கால் அவ்வான்மஞானத்தினிடத்து ஏகமாய்விட்டு நீங்காதவனாகலானும்;—உள்குவார் உள்கிற்றை உள்ளத்தான் உற்றுக் காணானோ. எ-து. கருதுவார் கருதிய பொருளாகிய தன்னை அவரறிவோடு கூடி நின்றறியான்கொல்லோ. எ-று.

போகமாய்த் தான் விளைந்த பொற்பினன், ஏகமாயுள்ளத்தின் கண்ணானன், என்னும் பெயரடைகள் ஏதுப்பொருளவாய் நின்றன; யாண்டுஞ்சேற லுணர்த்துதற்கு.

உள்குவாருள்கிற்றையென்றார் "வேண்டுவார் வேண்டியதே யீவான்" என்றாற்போல.

ஆனுருபு உடனிகழ்ச்சிப்பொருட்கண் வந்தது. ஓகாரம் எதிர்மறை.

ஆன்மாக்கள் முதல்வனை விடயிக்குங்கால் அவற்றது விடயமாகிய அவன் தன்னாலும் உடனின்றுணரப்படுவன், உள்குவாருள்கிய பொருளாகலின்,

மேலேவெண்பாவிற் கூறிப்போந்த ஐம்புலன்போலவென்று அநுமானவளவை காட்டுவார் 'உள்குவாருள்கிற்றை யுள்ளத்தானுற்றுக் காணானோவென்றும், உள்குவாருள்கிற்றுதல் ஈரிடத்து மொக்குமென்பார் 'ஏகமாய்நின்றே யிணையடிகளொன்றுணரப் போகமாய்த் தான்விளைந்த பொற்பினன்' என விடயித்த

ற்கட்படுமியல்பும்; 'ஏகமாயுள்ளத்தின் கண்ணானன்' என அறி வுவிளங்குதற்கட்படு மியல்பும் எடுத்தோதினார்.

பரபோகமாயென்னாது போகமாயென்றதும் ஒப்புமை யி னங்குதற்பொருட்டு. சேற்றுநிலமிதித்துச் சென்றானுக்கு அந் நிலம்போலப் பரபோகவிளைவு செயற்கைப்பொருளாய் நிற்ற லின்; ஆக்கமுங் காரணமும் அடுத்து வந்தது. இணையடிகளு ணருந்தோறும் போகம் மேன்மேல் விளைதல் "புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும்போகம் பின்னும்புதிதாய்—மணந் தாழ் புரிகுழலா ளல்குல்போல வளர்கின்றதே" எனவும் அ ப்பொருண்மேல் வைத்தோதிய திருவாக்கானுமறிக. திருச்சி ற்றம்பலக்கோவையார்—கூ. "உணர்ந்தார்க"

தெளிவுபற்றி விளைந்தவென இறந்தகாலத்தாற் கூறினார்

கண் கண்ணாடியினின்றுந் தன்னை விடயித்தாற்போல முத ல்வன் ஆன்மாவுடனின்று தன்னை விடயித்தல் பொருத்தமு டைமையின், ஆன்மாச்சிரயமென்னுங் குற்றம் இன்னோரன் னவற்றிற் கெய்தாதென்றுணர்க. கண்ணாடிக்குள்ளாகத் தோ ன்றுவதுபோலும் எதிர்விம்பமாவது விம்பமேயன்றி வேறன் றென்பது சிவாகம நூற்றுணிபென்க.

இதனுள் அவனும்அவற்றது விடயத்தையுணருமெனஉணர்வே பற்றியோதினாரேனும் சித் - க—கு, கூஉ—செ. "எத்திற ஞானமுள்ள தத்திற மிச்சைசெய்தி." என்பவாகலின், அவ ற்றிற்கும் இஃதொக்கும்: ஒக்கவே, பெத்தமுத்தியிரண்டினும் ஆன்மா விடயிக்கப்படும் விடயங்களை முதல்வன் உடனின்றுவி டயிப்பனென்பதூஉம், பெத்தத்தின் அவனிவனாய் நின்று விட யித்தலின் விடயங்கள்அவனுக்கன்றி இவனுக்காயின் முத்தி யின் இவனவனாய்நின்று விடயித்தலின் அவனொழிந்த விடய

ங்களெல்லாம் இவனுக்கின்றி அவனுக்காயினவென்பதூஉம் இனி துவிளங்கும். இம்முறைமை நோக்கியன்றே உலகத்துள் ஒன்றனை ஈவாரும் ஏற்பாருஞ் சிவார்ப்பணமெனக் கருதாதவழிக் குற்றமென்று ஆகமங்களோதுபதூஉம். சித்-௨—சூ, ௨௫—செ. “யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வ மாகி யங்கே —மாதொரு பாகனார்தாம் வருவர்” என்றதூஉம், அவ்வுண்மை யறிந்தவழி சிவஞானபோதம் - ௧௦—சூ, ௨-வெண்பா, ‘நாமல்ல’ “எத்தநுவி னின்று மிறைபணியார்க் கில்லைவினை—முற்செய்வினை யுந்தருவான் முன்.” எ-ம். திருவுந்தியார்-௩௩—செ. “பெற்றசிற் றின்பமே பேரின்பமாய்.” எ-ம். திருக்களிற்றுப்படியார், ௭௬—செ. “உடம்புடைய யோகிகடா முற்றசிற்றின்ப—மடங்கத்தம் பேரின்பத் தாக்கிற்”. எ-ம். “காணுங் கரணங்களெல்லாம் பேரின்பமெனப்—பேணு மடியார். எ-ம். “எல்லாஞ் சிவமாயிருந்ததே.” எ-ம்., இவ்வாறோதியதூஉமென்க.

☞ ௧௧—சூ, முதலதிகரண முடிந்தது.

அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணார்க்
கிருட்கண்ணே பாசத்தார்க் கீசன் - அருட்கண்ணாற்
பாசத்தை நீக்கும் பகலலர்த்துந் தாமரைபோல்
நேசத்த ரம்பா னினைந்து.

இது, சிவனெவ்விடத்து நிறைந்துநிற்பனாகில் யாவருங் காணவேண்டாவோ வென்பார்க்கு அவனிற்கின்ற முறைமை கூறுகின்றது.

இ-ள். அருக்க ஆதித்தன் முன்னேவந்து நின்றானாயினு
னேர் நி பிராக்காலத் திருளையொத்திருக்குங் குரு

ற்பினு ம டராயினுர்க்கு.
ல் விரு
ளே காணுர்க்கு.
எ-து.

கண்ணுக்குக்காணுர் அந்தகாரம் அதுபோல

இருட்கண் சிவனெவ்விடத்து நிறைந்துநின்ருகினு
ணே பாசத்தாற் ம் பாசபெந்திகளுக்குத் தோன்ருமலிற்பன்-
கேசன். எ-து.

இருட்கண் மறைத்தல்.

நினைந்து நேச தன்னையுள்ளபடி யுணர்ந்து சிவனேசத்
த்த றம்பால். எ- தை வைத்தவர்களிடத்து.
து.

அருட்கண்ணு ஞானதிருட்டியைக்கொடுத்து அதனு
ற் பாசத்தை நீ லே பாசத்தாலங்களை நீக்குவன்.
க்கும். எ-து.

பாசத்தாலநீங்கவே தான்தோன்றுவனென்பது மீட்சிமொ
ழியாயிற்று. அஃதென்போலவென்னில்?

தாமரை யலர் பக்குவப்பட்ட தாமரைப்பூவை யலர்த்
த்தும் பகல்போ து மாதித்தனைப்போல. எ-று.
ல். எ-து.

எனவே, பக்குவப்படாதபூவை யலர்த்தானென்னு மீட்சி
மொழியாற் பக்ஷபாதியல்லவென்பது கூறிஞர்.

பகலலர் ஆதித்தன் அலர்த்துகைக்கு
த்தும்தாம ப் பக்குவப்பட்ட தாமரைப்பூப்
ரை போ போ லென்னப்பட்ட நேசத்தை
னேசத்தா யுடையவர்க ளென்பாருமுளர்.
ர். எ-கு.

சிவன் சர்வவியாபியாய் நிற்கச்சே பாசத்திலேநிற்கிறவர்கள் காணுரென்னும் பக்கத்துக்கு ஆதித்தனும் அந்தகனும் சபக்கமாயினவாறும், பக்குவான்மாக்களைத் தன்னருளாலே யுணர்த்தித் தோன்றிநிற்பனென்னும் பக்கத்துக்குத் தாமரைப்பூவும் ஆதித்தனும் சபக்கமாயினவாறறிக. "எங்குந்தானிறைந்துசிவனின்றானுகி லெல்லாருங்காணவேவேணுந்தானென்னில்" என்றார் வழிநூலார். சித் - கக—௬, அ—செ. (௩)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-ன். அரன் கழல் சேறல் உடம்பினீங்கிய பின்னன்றி உடம்புடையவழியுங்கூடுமாயின் அது ஞாயிற்றினொளிபோல மருங்குள்ளார்க்குப் புலனுதல் வேண்டுமென்பாரை நோக்கி, அது கூடாமையுங் கூடுமாறும் உவமைமுகத்தா னுணர்த்தி ஏதுவை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். அருக்கன் நேர் நிற்பினும் காணுர்க்கு அல் இருளே. எ-து. ஞாயிறு எல்லார்க்கும் ஒப்ப நிற்பினும் அது காட்சியுடையார் கண்ணுக்கன்றி அஃதில்லாதார்கண்ணுக்கு இரவின் கண்ணதாகிய இருளேயாம். அதுபோல—ஈசன் பாசத்தார்க்கு இருட்கண்ணே. எ-து. முதல்வன் எங்கணும் ஒப்ப நிற்பினும் மலநீங்கிய முத்தர்க்கன்றி அஃதுடையார்க்கு அவன் அம்மலத்தின்கண்ணே யாவன். சீவன்முத்தரும் ஏனையோர்போல் உடலுடைமையிற் பாசத்தாராகலின் வேற்றுமையின்றாலெனின்,—பகல் அலர்த்துந் தாமரைபோல். எ-து. ஏனைத் தாமரைகளோடொப்ப ஒருங்கு நிற்பினும் பக்குவமுடைய தாமரையைக் கூம்புதலை நீக்கி அலர்த்து ஞாயிறுபோல—நேசத்தில் தண் உணர்ந்தார் பேர் அருட்கண்ணல் பாசத்தை நீக்கும். எ-து. ஏனையோர்போல் உடம்போடு நிற்பினும் பருவமுடையராய்ப்

பத்தியினுற் றன்னைமறவாதுணர்வார்க்கு முதல்வன் தனது திருவருட்பார்வையாற் பாசத்தை நீக்கி அறிவை யலர்த்தும் ஆகலான், உடம்புள்வழியும் அவர் பாசத்தாரல்லர். எ-று.

ஆகலான் உடம்புள்வழியும் அவர் பாசத்தா ரல்லரென்பது குறிப்பெச்சம்.

ஏகாரந் தேற்றம்.

திணிந்தவிருளையென்பார் அல்லிருளென்றார்.

மலத்திற்குக் கண்ணுவது அறியாமை.

காணுரும் பகலும் ஆகுபெயர்.

அருக்கன் எடுத்துக்காட்டுவமை.

தன்னையென்னும் இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது.

ஏழாம்வேற்றுமைப்பொருட்கண்வரு நேர் என்பது உருபுமயக்கமாய் நான்காவ துணர்த்திற்று.

நீக்குதலும் அலர்த்துதலும் ஏனையிடத்துஞ் சென்றியைதலின், ஈரிடத்துஞ் செயப்படுபொருளோற்பன வருவிக்கப்பட்டன.

மன்னு மிருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னு மரனே மலந்துரந்து - மன்னி
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் றான். (சா)

இது, பரமமுத்தித்திசையிலே மலநீங்குமுறைமை கூறுகின்றது.

இ-ள். மன்று) மிருளை மதி து ரந்தவா று. எ-து.	நிலைபெற்ற விருளை மதி யோட்டு முறைமைபோல.
அன்பின் மன்னு மரனே மலந் துரந்து. எ-து.	அநாதியிலே தன்னிடத்து நிலைபெற்று நிற்கின்ற கத்தா தன்னுடைய காருண்ணியத்தினாலே ஆணவமலமுதலாயினவற்றை யோட்டி.
வலித் திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல் மன்னி. எ-து.	காந்த மிரும்பை வலித்துத் தன்னுடைய வசமாக்கிக்கொள்ளுந் தன்மைபோலத் தன்னுடைய வசமாக்கிக் கொள்ளுதலைப்பொருந்தி.
சலிப்பில் விகாரியலன் முன். எ-து.	அப்படிச் செய்யுமிடத்துச் சலநமும் விகாரமு முண்டாகாதோ வென்னின்? சலித்து மிலனாகி விகாரமுமிலனாகி யிருப்பன். எ-று.

மதி யிருளைத்துரந்தாற்போல மலந்துரப்ப னென்பது மலமாயாகன்மங்கள் அநாதியாயிருந்து அவையழியுமோவென்பார்க்கு பக்குவமாயினார்க்கு அவை நீங்கிநிற்கும், கெடாது, என்பது கூறினார். அஃதெங்ஙனேயென்னில்? இருணிலைபெற்று நிற்கச்சே மதிவர நீங்கினாற்போல முதல்கெடாமல் மேலிடாமல் நிற்குமென்பதாயிற்று. "ஆணவந்தானாதியந்தமடையாதாகு மடையிலந்தவான்மாவுமழியுமென்னில்" "நெல்லுக்குத்தவிடுமிகளநாதியாயே நெல்லைவிட்டுநீங்கும்" "இரும்

பைக்காந்தம்வலித்தல்போ லிசைத்தங்குயிரை." என்றார் வழிநூலார். சித் - கக—௫, ௫- ௬ - கஉ—௫.

மலமாயாகன்ம மழியாமனிற்கச்சே பக்குவற்கு நீங்கிநிற் குமென்னும் பக்கத்துக்கு மதியு மிருளுஞ் சபக்கமாயினவா றும், பாசத்தைநீங்கத் தன்னிடத்தேகூடிக்கொண்டு சலிப்பு ம் விகாரமுமின்றி யிருப்பனென்னும் பக்கத்துக்கு, இரும்புங் காந்தமு மென்னுஞ்சபக்கமுங் காட்டியவாறுகாண்க. (௬)

சிவஞானமுனிவர்உரை.

எ-து. உ-ம். எ-னின். நேசத்திற் றன்னுணருஞ் சீவன்முத் தர்க்குப் பாசத்தை நீக்கி அறிவை யலர்த்துதல் பரமுத்தியின ன்றி இல்லையென முரணிக்கூறும் வாதிகளைநோக்கிப் பாசத் தை நீக்கி அறிவையலர்த்து முறைமை இவ்வாறென்றுணர்த்தி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். அன்பின் மன்னும் அரனே மன்னும் இருளை மதி தரா ந்தவாறு மலம் துரந்து. எ-து. உயிரைத் தானுக்கிக்கோடற்க ணுளதாகிய இச்சைமிகுதியான், அவ்வுயிரோடும் அநாதியே நி லைபெறுமுதல்வன் கண்ணின்க ணிலைபெறும் இருளைப் பிறைமதி நாடோறுஞ் சிறிது சிறிதாக நீக்கிப்போட்டுமாறுபோல், அவ்வு யிரின் கண்ணதாகிய மலசத்தியை அவ்வப்பருவந்தோறுஞ் சி றிது சிறிதாகச் சோபாநமுறையி னீக்கிப் பற்றறத் துரந்து— காந்தம் இரும்பைத் தன்னின் வலித்து வசம் செய்வான் செ ய்தல் சலிப்பு இல். எ-து. காந்தக்கல் இரும்பைத் தன்கணீர் த்துத் தன்வசமாகச்செய்தல்போல மலம் அங்ஙனந் துரக்கப் படுந் தோறும் அம்முறையே அச்சத்தி பதிவித்து உயிரைத் த ன்கண் வலித்துக்கொண்டு தன்வசமாகச்செய்து வருஞ்செய்

கையின் அவனுக்கு ஒருஞான்றுஞ் சலிப்பில்லை—விகாரி அலன் தான். எ-து. அங்ஙனஞ் சலியாது செய்து வருதல்பற்றி விகாரியாவானுமல்லன். காந்தம்போலத் தனது சந்நிதிமாத்திரையிற்செய்யும் அம்முதல்வன். எ-று.

மதியென்றது ஏற்புழிக்கோடலான் ஈண்டு வளர்பக்கத்திற் றிங்களின்மேற்றாயிற்று. "அந்த வருணனைக்கிங் காதாரமாயவல்லி—ளிந்து வெனவெறித் திட்டு" என்றதும் அது.

மலந் துரத்தல் உயிரின்செயலாகுவதன்றென்பதுபட நின்றமையின் ஏகாரம் பிரிநிலைக்கண்வந்தது.

வான் பான் பாக்குக்கள் தொழிற்பெயர் விகுதியுமாமென்பது "கரப்பாக்கறிந்து" என்பதனானுணர்க.

உவமவுருபு விரித்துரைக்க.

சலித்தல் வேசறுதல்.

செய்தற்கண்ணென்ன ஏழனுருபு விரித்துரைக்க.

மதிதுரந்தவாறு மலந்துரந்தென்றவிதனானே மலநீங்குவதுபின்னென்பார்மதம் மறுக்கப்பட்டவாறு காண்க.

சோபானமுறையி னீக்குதலானன்றே, சத்திநிபாதஞ்சிவபுண்ணியமுதலாயின நால்வேறுவகைப்பட்டதூஉம், அவற்றுள்ளும் ஓரோவொன்று நன்னான்காய்ப் பதினாறுவகைப்பட்டதூஉம், அவற்றுள்ளும் ஓரோவொன்று பலவேறுவகைப்பட்டு விரிந்ததூஉமென்க.

நசித்தொன்றி னுள்ள நசித்தலா லொன்றா
நசித்திலதே லொன்றாவ தில்லை - நசித்துமலம்

அப்பணைந்த வுப்பி னுளமணைந்து சேடமாய்க்
கப்பின்று மீசன் கழல். (௫)

இது, பரமமுத்தித்தசையில், மூன்றுமுதலினு மொன்றுங்கெடாமல், முன்புபோல நிற்பதுஞ் செய்யாமல் நிற்குமுறைமை கூறுகின்றது.

இ-ள். நசித்   சிவனுடைய சொரூபத்தைப்பெற்றுக் கூ
தொன்   டுமிடத்து ஆன்மா கெட்டுக் கூடுமென்னிற்
றி னுள்   கெடுமாகிற் கூடுகைக்கு முதலில்லையாம்.
ள நசித்
தலா லொன்று.
எ-து.

எனவே, கெடாமற்கூடுவ தில்லையாமோ வென்னில்?

நசித்திலதே   கெடுவதுமில்லையென்னில் வேறுமாய்ச்
லொன்றுவ தி   சாயுச்சியமில்லையாம்.
ல்லை. எ-து.

எனவே, கெட்டுக்கூடுவதுமில்லை, கெடாதாகிற் கூடுவதுமில்லையென்றார். ஆனாற் கூடுந்தன்மை யெப்படியென்னில்?

நசித்து மலம்.   மலமானது கெட்டு
எ-து.

அப்பணைந்த   நீருடனகூடிய வுப்புப்போல ஆன்மாச்
வுப்பி னுளமணை   சிவனைக்கூடி யடிமையாய் வேறறவிருக்
ந்து சேடமாய்   கும். எ-று.
க் கப்பின்று மீ
சன் கழல். எ-து.

மலத்தினுடைய நீக்கத்தை யிவ்விடத்துக் கெடுமென்றார்

அவ்விடத்து பதனுடைய சேட்டிப்பில்லை யாதலாலெனக்கொள்க.

அப்பணைந்த வுப்புப்போல வென்றது, நாழியுப்பும் நாழிநீருங் கூடினவிடத்து நாழியாய் நீக்கவொண்ணாதாய் மிகுதியாகாம னிற்குற்போல, வான்மாவுஞ் சிவனைக்கூடி நீக்கமற்று மிகுதியாகாம லிருக்குமென்றதாம். இது, கெட்டுக்கூடினதோ கூடிக்கெட்டதோ வென்னில்? கெட்டுக்கூடிற்றுமில்லை, கூடிக்கெட்டதுமில்லை, அவையிரண்டு மொருமாத்திரத்தே யாமென்பதுதோன்ற அப்பணைந்தவுப்பென்றார். "சென்றணையுநிழல்போலச்சிவனிற்பனென்னில்" "செம்பிரதகுளிகையினாற்களிம்பற்றுப்பொன்னாய்" "சிவன்சீவனென்றிரண்டுஞ்சித்தொன்றாமென்னிற்" இரும்பைக்காந்தம்வலித்தாற்போல் "என்பதினில்" "அப்பணைந்தவுப்பேபோல்" என்றார்வழிநூலார். சித்-கக—ரு, கூ-௧0-கக-க௨—செ.

"பசுபதியாதிப் பண்ணியபனுவல்—மதியோர்பெறுவா ரன்றதுவேனை—யொன்றென்றுயினல்லதையிரண்டொன்ற-தென்றுமாகா தெவனெனினுவது—கெட்டதுவாத லதுவாய்க்கெட்டல-தொட்டுவதிவனே வின்றேகெட்ட—தாதருனேயமாக்காணுமேவா—தமக்குமதுவாகக்கெடுமேனியினு—பின்னர்க்கெடுவ தியாதென்றேவியா—கொளக்கிடையீடாவதழிந்தாய்த்—கன்றுயழிந்ததுமன்றுமொழிந்தவை — யிரண்டுமோர்மைத்தேயெழுந்ததிபாவகை— யென்னிற்செழுந்திரட்காரிருளிரிய—நாறிக் கதிர்வாழேறொளிவிள்ள—மெய்திற்றன்றுங்கெய்தியபின்ன—ரிருளறவிரிந்தசெய்தி—செப்பினிலைமையறத்தெளிமதி—யிவனுஞ்சிவனியது" என்றஞானமிர்தத்தானுமறிக.

சிவனுமான்மாவும் வேறறக்கலந்து மிகுதியின்றி யிருக்குமென்னும்பக்கத்துக்கு, நீருமுப்பும் சபக்கமாயினவாறுகாண்க.

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எனின். உயிருக்குக் குணம்போல அநாதியாயுள்ள சகசமலம், அவ்வுயிரின் வேருய்த் தூக்கற்பாலதன்ருகலின்; மலந் தூந்தென்றது அமையாதென்னும் படாணவாதசைவரை நோக்கி அருத்தாபத்தி யளவையான் அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். நசித்து ஒன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்ரு நசித்திலதேல் ஒன்று ஆவது இல்லை. எ-து. அரன்கழல் செல்லுங்கால் அதனை ஆன்மாக் கெட்டொன்றுமோ, கெடாதொன்றுமோ வெனக் கடாயினர்க்கு; கெட்டொன்றுமெனின், ஆன்மாக்கெட்டுப்போகலான் ஒன்றமாட்டாது கெடாதொன்றுமெனிற் கெடாதவழி இருபொருளாய் நிற்றலின் ஒன்ருமாறில்லை: ஆகலான் அருத்தாபத்தியளவையானே—அப்பு அணைந்த உப்பின் மலம் நசித்து உளம் ஈசன் கழல் அணைந்து சேடம் ஆம். எ-து. உப்புத் தனது கண்டிப்புநீங்கி நீரின் ஒன்ருமாறுபோலத் தனது சகசமலங் கெட்டொழிய ஆன்மா அரன்கழலையொன்றி அவ்வரன்கழற்குச் சேடமாம்—கப்பு இன்று ஆம். எ-து. அங்ஙனஞ் சேடமாகிய ஆன்மாவுக்கு மீளக் கவர்ச்சியில்லை. எ-று.

ஒன்ருதென்னுந் துவ்விகுதி விகாரத்தாற் ஜெக்கது.

பின் வந்த நசித்தென்பது செயவனெச்சத்திரிவு.

யாதொன்று யாதொன்றன்பொருட்டேயாய்த் தனக்கெனச் சுதந்திரமின்றிநிற்கும் அஃததற்குச் சேடமென்பதறிக. "அவையுடைமை யாளாகா மங்கு" எனவோதுதலின், ஏனைப்பசுபாசங்கள் முதல்வனுக்குப் பொதுவகையாற் சேடமாமாயினு

ம் இதுபோலச் சிறப்புவகையாற் சேடமாதலின்மையின் இத னை வேறெடுத்தோதினர்.

முத்திநிலை கூறி முடிந்தமையின் இறுதிக்கட் கப்பின்ருமெ ன அவினுவிருத்தியுங் கூறினர்.

பொன்வாள்வெங் கொண்மூவிற் புக்கொடுங்கிப் போயகலத், தன்வாளே யெங்குமாந் தன்மைபோல்-முன்வாள், மலத்தின் மறைந்துள்ள மற்றுலகை யுண்டும், மலத்திரித்துச் செல்லும் வரத்து. (௬)

இது, சீவன் முத்தித்தசையும் பரமுத்தித்தசையுங் கூறுகின்றது.

இ-ள். உள்ள ஆன்மா ம். எ-து.

முன் வாள் மலத்தின் மறைந்து. எ-து. தன்னுடைய வறிவினுடைய பிரகாசம் மலங்களிலே மறைப்புண்டு.

மற்றுலகை யுண்டு. எ-து. பிராரத்தகன்மத்தைப் புசித்து.

மலத் திரித்துச் செல்லும்வரத்து. எ-து. அப்படி மறைத்துப் புசிப்பித்த மலங்களைநீங்கிச் சிவனுடனே கூட்டும் பெருமை மலத்திரித்தலென்.

இரிதல்=கெடுதல்.

பொன் வாள் வெங் கொண்மூவிற் புக்கடங் ஆதித்தன் பிரகாசம் வெவ்விய மேகத்திலே புகுந்து பிரகாசமழுங்கி யதுநீங்கிப்போகத் தன்னுடைய பிரகாச மெவ்விடத்துமா

கிப் போயகலத் யநின்ற தன்மைபோலும். எ-று,
தன்வாளேயெங்
குமாந் தன்மை
போல். எ-து.

என்றது, ஆதித்தன் பகற்காலத்திற் பிரகாசமுமின்றி யிராக்காலத்திருளுமின்றி நடுவே மேகமறைக்க வொருதன்மையாய் மக்கிநமாயிருந்த தன்மைபோல, சீவன் முத்தராயினோர் நேரே சிவப்பிரகாசமுமின்றி நேரேதிரோதாயினுடைய மறைப்புமின்றிப் பிராரத்துவகன்மம் புசித்துத் தேகாந்தத்தே முகில் நீங்கிப் பிரகாசமிருந்தாற்போலச்சிவசொரூபத்தைக் கூடிக்கலந்து வேறறநிற்ப ரெனவறிக. "தெரிவரியமெய்ஞ்ஞானஞ்சேர்ந்தவாறே சிவம் பிரகாசிக்குமிங்கேசீவன்முத்தராவர்". என்றார் வழிநூலார். சித்-கக—ரு, ச—செ.

சீவன்முத்தர் நேரே சிவப்பிரகாசமுமாகாமல் பாசத்தினுமழுந்திடாமல் நடுவேயோரவதாமாய்த் தேகாந்தமளவுநின்று போகம் புசித்துப் பின்பு சிவனைக்கூடுவர்களென்னும் பக்கத்துக்கு, மேகத்திலே மறைந்துபோ மாதித்தன் சமக்கமாயினவாறறிக.

இந்தப்படியொன்று சூத்திரத்தானு மூன்றுமுதலும் உருபதரிசசுத்தி ஞேபத்தமுந்தல்கூறி, மேல்அணைந்தோர்தன்மை கூறுகின்றார். (௬)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். நான்காஞ்சூத்திரமுதல் இதுவரையிற் கூறிப்போந்த கேவலசகல சுத்தமென்னும் முத்திறதநவத்தைகளினும் ஆன்மாத் தன்னியல்பிற்குக் கேடின்றியே நிற்குமென்பது உவமையின் வைத்துக்காட்டி, மேலதனை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். பொன் வாள் முன் கொண்மூவிற் புக்கு. எ-து ஞாயிறு காலைப்போதின் முகிற்படலத்துண் மறைந்து—ஒடுங்கி. எ-து. அம்முகிற்படலம் ஒருபுடைநீங்கியவழித் தன்னொளி ஏகதேசமாய் ஒடுங்கித்தோன்றி—போய் அகல எங்கும் தன் வாளே ஆம் தன்மைபோல். எ-து. அம்முகிற்படலம் பெருங்காற்றுணடியுண்டு முழுவதும் விட்டொழிந்தவழி எங்கணுந் தன்னொளியேயாய்த் தோன்றும் பெற்றிபோல—உள்ளம் முன் வாள் மலத்துள் மறைந்து. எ-து. ஆன்மா அநாதியே தன்னறிவு மலத்துண் மறைப்புண்டு கேவலப்பட்டு—மற்று உலகை உண்ணும். எ-து. பின்பு கருவிகளோடு கூடி ஏகதேசமாய் அறிவு விளங்கி ஐம்புலன்களை விடயிக்கும்—மலத்து இரித்து வரத்துச் செல்லும். எ-து. பின்பு அம்மலத்தை முதல்வனருளாற் பற்றறக் களைந்து வியாபகமாய் அறிவு விளங்கி அவனது சீபாதத்தையணைந்து சுத்தப்படும். எ-று.

தன்மையென்றூர் கொண்மூவிற் புக்குழியுங் கேடின்மையின்.

ஏகாரந் தேற்றத்தின்கண் வந்தது.

பின் வந்த வாள் ஆகுபெயர்.

வினைமாற்றின்கண் வந்த மற்றென்னுமிடைச்சொல் மலத்திரித்தென்பதனோடியைந்து. சாரிடையுள்வழித் தனனுருபு நிலையாதல் இலேசாற் கொள்க.

உவமைவினைகள் பொருளினுஞ் சென்றியைந்தன.

அறிவு மறைந்தும் ஒடுங்கியும் மறைப்பு நீங்கியே எங்குமாம் நிகழ்தன் மாத்திரைக்கே பொன்வாளுவமையென்பார், உலகையுண்ணும் வரத்துச் செல்லுமென வேற்றுமையும் உடன் கூறினார்.

மலநசித்தலாவது தனது மறைத்தற் சத்தி மடங்கிக் கிடப்படுதன்மாத்திரையே பிறிதன்றென்பதூஉம் உவமையாற்பெறுதும்.

☞ கக—கு, இரண்டாமதிகரண முடிந்தது.

☞ பதிஞோராஞ்சூத்திர முடிந்தது.

கஉ—சூத்திரம்.

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே.

இச்சூத்திரமென்னுதலிற்றோவெனின், மனவாக்குக்கெட்டாதசிவனைச் சிந்தித்துக் கண்டு வழிபடுமுறைமை கூறுகின்றது.

இ-ள். செம்மலர்நோன்றாள் சேர லொட்டா வம்மலங் கழீஇ. எ-து. சிவந்தகமலம்போன்ற வலிய ஸ்ரீபாதத்தைக் கூடவொட்டாத அந்தமலத்திரயங்களையும்போக்கி.

திரோபவிக்குமிடத்து அஃதொழிய வேறொன்றுமில்லையென்னும்படி திரோபவித்து, மீண்டுமநுக்கிரகிக்குமிடத்துத் தானொழிந் தில்லையென்னும்படி யநுக்கிரகிக்குமாதலால் நோன்றாள் என்றார்.

அன்பரொடு மரீஇ. எ-து. அப்படி மும்மலங்களையு நீங்கச் சீவன்முத்தராயினருடனே கூடி

மாலற நேய மலிந்தவர் வே மயக்கமறச் சிவனளவிலே சிவனேச மிகுந்தவர்களுடைய திருமேனியையும், திருக்

டமு மாலயங் கோயில்களையும், சிவனெனக்கண்டு வழிபடு
தாலு மரனுரு மென்க. எ-று.
த் தொழுமே
எ-து.

என்றது, நிட்டையிலேகூடி யநவரதமுமிருத்தலே மிகுந்தது; அதுகூடாதோர் நிட்டையுடையோருடனேகூடி மலத்திரயங்களையு நீங்கினவர்களாயுள்ள வேடத்துள்ளோரை வழிபட்டுத் திருக்கோயில் தண்டன்பண்ணுகவென்றதாம். மும்மலங்களையு நீங்கவென்றதாயிற்று.

இந்தத்திருமேனிகளை வழிபடவே மும்மலத்தையுணர்த்துமாதலாலே, அசிந்திதனாகியகத்தாவைச் சிந்திதனாகக்கண்டு வழிபடவேண்டுதலிற் கூறினார்: "செங்கமலத்தாளிணைகள்" என்றார்வழி நூலார். சித்-கஉ—சூ, க—செ.

இதற்குப்பிரமாணம்.

சிவஞானமுனிவர் உரை.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு.—அயராவன் பினான் கழலிணைந்த சீவன்முத்தனாவான் செங்கமலமலர்போல விரிந்து விளங்கிய முதல்வனது நோன்றாளை அணையவொட்டாது அயர்த்தலைச் செய்விக்கும் அவ்வியல்பினையுடைய மும்மலவழுக்கை ஞானநீராற் கழுவி, அங்ஙனம் அயராவன்பு செய்யு மெய்ஞ்ஞானிகளோடு கலந்து கூடி மலமயக்க நீங்குதலான் அன்புமிகுதலுடைய அவரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் முதல்வனெனவே கண்டு வழிபட்டுவாழும். எ-று.

எழுவாய் மேலைச்சூத்திரத்தினின்றும் வருவிக்கப்பட்டது. சீவன் முத்தனென்பது ஏற்புழிக்கோடலாற் பெறுதும்.

நோன்றாள் வினைத்தொகை. நோன்றல் பொறுத்தல். "எடுத்துச் சுமப்பானை" என்றார் புடைநூலாசிரியரும்.

கழீஇயென்றது குறிப்புருவகம்.

மாலறநேய மலிந்தவரென்றது அம்மலங்கழீஇ யன்பரோடு மரீஇயினாரென்னும் பொருட்டு சுட்டுப்பெயர் மாத்திரையாய் நின்றது.

நேயமலிதல் கூறவே, வழிபாடும் பெறப்படும்.

தான் அசை.

அம்மலங் கழீஇயென்றதனால் அறிவு வியாபரிக்குமிடமும், அன்பரோடு மரீஇயென்றதனால் இச்சை வியாபரிக்குமிடமும், தொழுமென்றதனாற் செயல் வியாபரிக்குமிடமும், பெறப்பட்டன. படவே, சீவன்முத்தர்க்கு அறிவிச்சைசெயல்கள் ஏனை விடயங்களிற் செல்லாவென்பதூஉம் பெறப்பட்டது. இம்மூன்றும் பிரிப்பின்றி ஓரிடத்தொருங்குநிகழ்வனவாகலின், விடயவேற்றுமையின்மையு முணர்க.

தொழுகவென்னாது தொழுமென்றமையின், இஃதிணைந்தோரது தன்மையென்பது பெற்றாம். அற்றாகலினன்றே இதனைச் சாதனவோத்தின் வையாது ஈண்டு வைத்தாரென்பது. இனித் தொழுமென்றதனை இரட்டுறமொழிந்துகொண்டு விகுதிப்பொருள்பட நின்ற முன்னிலையேவலாக்கியு முரைத்துக் கொள்க. என்னை? செல்வப்பெருக்கமுடையார்க்கு உணவாகிய ஆன்பால் உடம்புநோயின்றி வளர்ச்செய்யும் மருந்துமாதல்போல, இவ்வழிபாடு மலவாசனை சிறிதுந்தாக்குதலின்றிச் சிவானந்தம் மேன்மேல் வளர்ச்செய்யுஞ் சாதனமாதலுமுடைமையின், கண்ணழித்துரைபற்றி விதியாகவைத்துரைத்தலும் அதுபற்றி.

புண்ணிய பாவம் பொருந்துமிக் காமியமும்
மண்முதன் மாயைகாண் மாயையுங் - கண்ணிய
வஞ்ஞானங் காட்டுமா லாணவமு மிம்மூன்று
மெய்ஞ்ஞானிக் காகா விடு. (க)

இது, மலத்திரயங்களுள்ளளவும் ஞானங்கூடாதாகையால் அவற்றை நீங்கவேணுமென்கின்றது.

இ-ள். புண்ணியபாவம் பொருந்துமிக்காமியமும். எ-து. கன்மமலமாவது புண்ணியபாவங்களாகிய போகங்களைப் பொருந்தும்.

மண்முதன் மாயைகாண் மாயையுங் கண்ணிய. எ-து. மாயாமலமும் பிருதிவிமுதலாகிய பொய்யை மெய்யாகக்கருதி மயங்க மயக்குதலைச்செய்யும்.

அஞ்ஞானங் காட்டுமா லாணவமும். எ-து. ஆணவமலம் பொய்யாகியவற்றிலே சுபத்தையடையப்பண்ணும்.

ஆல் - அசை.

இம்மூன்று மெய்ஞ்ஞானிக் காகாவிடு. எ-து. இந்தமூன்றுமலங்களுடனே கூடி நிற்றல் உண்மை ஞானிக்கு ஆகாவாதலால் இவை நீங்கிநில். எ-று.

என்றது, அநவரதமு நிட்டைபுரியவேணு மென்றதாம்.

இது, சம்பிரதாய திட்டியாற் காட்டியது. (க)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அவை அஞ்ஞானத்திற் கேதுவாய் வந்து நுழையுமாறும், அஃது அவர்க்காகாமையுந் தெரித்துணர்த்தி; ஏதுவை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். புண்ணிய பாவம் பொருந்தும் இக்கான்மியமும். எ-து. புண்ணியபாவப்பயனும் புண்ணியபாவகாரணமாயும் பொருந்துகின்ற இக்கன்மமலமும்—மண் முதல் மாயை காண் மாயையும். எ-து. நிலமுதல் மோகினியீறுகக் காணப்படுகின்ற இம்மாயாமலமும்—கண்ணிய அஞ்ஞானங் காட்டும் இவ்வாணவமும். எ-து. சுட்டியறிவதாகிய விபரீதவுணர்வைப் பயக்கும் இவ்வாணவமலமும்—இம்மூன்றும் மெய்ஞ்ஞானிக்கு ஆகா விடு. எ-து. இம்மலங்கள் மூன்றும் மெய்யுணர்வுடைய உனக்காகாமையான் அவற்றை விடுத்தொழிவாயாக. எ-று.

எல்லாமலங்களும் பற்றறத்துடைத்து மெய்யுணர்ந்து நிட்டைகூடினார்க்கு உடம்பு நிற்குமளவும் பிராரத்தவினை அவ்வுடம்பைப் பற்றி நிற்றலான், அஃது அவர்க்கு ஒரோவழி வாசனையத்தான் இங்குளி வாங்குங் கலம்போல வந்து தாக்கும்; அவ்வழிப், * "பிற்செயாதநுபவிப்பதின்று" ஆகலின் அது சார்வாக விருப்பு வெறுப்புக்கள் உளவாம்; அவை உளவாகவே, பரமே பார்த்திருப்பார்க்கு நிலமுதலிய ஏகதேசப்பொருள் காட்சிப்படும்; படவே, அவற்றைச் சுட்டியறிவதாகிய விபரீதவுணர்வு மேற்பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்துப் பிறவிக்கு வித்தாம்: இவ்வாறிம்மூன்றும் அறிவற்றம்பார்த்து இம்முறையானே வந்து தலைப்படுமெனக் காட்டிக் கூறுவார் கன்மமாயை யாணவமென்றிம்முறையின் வைத்து அவ்வக்காரி

நிகழ்ச்சிகளை யெடுத்தோதிச் சுட்டிக்கூறினார். * சித். உ—௬
௧—செ.

இகரச்சுட்டு இடையினும் வந்திமையும்.
புண்ணியபாவமென்றது உபசாரம்.

மூன் வந்த மாயை முப்பத்தொராறென்னு முறைமைக்க
ின்ற தத்துவத்தையுணர்த்தி விடாதவாகுபெயராய்த் தன்
ாயிருகவுடைய வினைத் தத்துவங்களையுந் தழீஇயிற்று.

காண்மாயை செயப்படுபொருளோடு முடிந்த வினைத்தொ
கை.

இவை சிவ்போகப் பெருவாழ்வையிழப்பித்தலின் மெய்ஞ்
ஞானிக்காகாவாயின. மேன்மேன் முறுகுவனவாய இவற்றை
தோன்றும்பொழுதே துடையாக்கால் "களைகுநர் கை
கொல்லுங் காழ்த்த விடத்து" என்னு முறைமைத்தாய் முடி
மென்பதுபற்றி விடுவென ஈண்டுவலியுறுத்தப்பட்டது. வி
தலாவது, அவை அம்முறையானிகழ்ந்தவழி இவ்வஞ்ஞான
ஏகதேசக்காட்சியானாயதெனவும், அக்காட்சி விருப்புவெ
றுப்புக்களது தோற்றத்தானாயதெனவும், அத்தோற்றமும் பி
ாரத்த வினைநுகர்ச்சிக்கட்சென்ற தற்போகத்தாலாயதென
ும், அறிந்து அங்ஙனஞ் செல்வதாகிய தற்போதம் மூளையா
வாறு பரிகரித்துச் சிவஞானத்துளடங்கிச் சுவாநுபவம் சு
ாநுபூதியாம்படி ஞானநிலையில் உறைத்துநிற்றல்.

மாயைகன்மங்கள் அஞ்ஞானங்காட்டுதல் ஆணவமலச் சா
வானாய செயற்கையென்பதுணர்த்துதற்கு, மூன்றற்கும் பொ
வாக ஏதுவுட் கூறிப் போந்தவதனை ஈண்டாணவமாத்தி
ரைக்கே சிறந்தெடுத்தோதினார்.

☞ ௧௨—௬, முதலதிகரண முடிந்தது.

மறைப்பித்துத் தம்மை மலங்களில் வீழ்க்குஞ்
சிறப்பிலார் தந்திரத்துச் சேர்வை - மறைப்பித்துப்
பத்தரினத்தாய்ப் பரனுணர்வி னாலுணரு
மெய்த்தவரை மேவா வினை. (௨)

(இது, அன்பரோடுமரீஇ என்றதற்குப் பிரமாணம்.)

இது, ஆன்மா அரைத்தமஞ்சட்போலப் பற்றினத்தைப்பற்றுமென்பது கூறுகின்றது.

இ-ள். மறைப்பித்துத் தம்மை மலங்களில் வீழ்க்குஞ் சிறப்பிலார் தந்திரத்துச் சேர்வை மறைப்பித்து. எ-து. திருவருளில்லாத பெத்தான்மாக்கள் மலங்களிலேவிழ்ந்து தம்மையும் பாசத்தையுஞ் சிவனையும் அறியாமலிருக்கின்றவர்களாகையாலே, தம்மைச்செறிந்தவர்களையு முண்மையைப்பிறப்பித்து, மலங்களிலே விடுதலைச்செய்யுர்; சிறப்பிலார் தம்முடையவிட்டத்துக் கூடியிருத்தலை மீளவிடுத்து

பத்தரினத்தாய். எ-து. பத்தர்களுடைய கூட்டமாய்

பரனுணர்வினாலுணரு மெய்த்தவரை மேவா வினை எ-து. சிவஞானத்தாலேயுணராநின்ற உண்மைஞானிகளை ஆர்ஜநமாகியவினை கூடாதென்பதாயிற்று.

சிவஞானிக ளெப்பொழுதுஞ் சிவஞானத்தையே பிரகாசிப்பர்களாதலாலே அடைந்தவர்கள் வினையுநீக்குவர்க ளென்பதா

யிற்று. அது, "ஆன்மா மருவினதொன்றிலே மருவுமாதலா லெனவறிக." "ஈசனுக்கன்பில்லா ரடியவர்க்கன்பில்லார்" என்றார்வழிநூலார். சித்-கஉ—சூ, உ—செ.

இதுவுஞ்சம்பிரதாயதிட்டி. (உ)

சிவஞானமுனிவர் உரை.

எ-நு. உ-ம். எ-னின். அஞ்ஞானத்தை யுணர்த்து மவரோடு இணங்காமைமாத்திரையேயமையுஞ் சிவபத்தர்களோடிணங்குதல் எற்றுக்கென்பாரை நோக்கி, அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். தம்மை மறப்பித்து மலங்களின் வீழ்க்குஞ் சிறப்பு இலார் தம் திறத்துச் சேர்வை அற. எ-து. முதல்வன் காட்டியுங் கண்டும் உபகரித்து நிற்கும் அத்துவிதநிலையை மறவாது கடைப்பிடிக்குந் தமது ஞானக்கண்ணை யிழப்பித்துத் தீய நெறிக்கட் கொண்டு சென்று மலங்களாகியபிறவிக்குழியில் விழ்வித்துத் துயருறுத்துவாராகிய அன்பில்லார் கூற்றிலே தொன்றுதொட்டுப் பயின்று வந்த சேர்ச்சி யறும்படி— பத்தர் இனத்துப் பித்து ஆய்ப் பரன் உணர்வினால் உணரும் மெய்த்தவரை. எ-து. அம்மறவியைமாற்றி ஞானக்கண்ணை யுதவிப் பிறவிச்குழியினின்றுமெடுத்து நன்னெறிக்கட் செலுத்தி வாழ்விக்குஞ் சிவபத்தரது கூற்றிலே பேரன்புடையராய் அவ்வன்பு சார்பாக விளங்குஞ் சிவஞானக்கண்ணால் அந்நிலை கடைப்பிடித்துணரப் பெற்ற மெய்த்தவராயினாரை— வினை மேவா. எ-து. எல்லாவநத்தங்கட்கும் மூலமாய் வந்து சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வையைப் பயப்பிக்கும் பிராரத்தவினைகள் வாதியா. எ-று.

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ் சிறப்பில்லாரெ

ன மேற்சொல்லிய பொருளையே அநுவதித்து விதந்தோதினார்; அதனெதிர்மறை முகத்தாற் சிவபத்தரது பெருந்தகைமை யுணர்ந்துகோடற் பயனோக்கி.

மலம் ஆகுபெயர்.

வீழ்க்குமென்றது உருவகங்குறித்து நிற்றலின், அவ்வாறுரைக்கப் பட்டது.

எல்லாவற்றினும் அன்பு சிறந்தமையின் அதனைச் சிறப்பென்றார். பித்துப்போறலின், அன்பு பித்தெனப்பட்டது.

ஏனைத் தவங்களெல்லாம் மெய்யாதலின்றி மலநடையாய்ப் போதலின், பரனுணர்வினு லுணருந் தவமொன்றே மெய்த்தவமெனப்பட்டது.

வினை பால்பகாவஃறிணைப்பெயர். சிவபத்தர் மாட்டன் புடையராய் மனஞ்சொற் செய்கைகளான் அவர்வழி நிற்பார்க்கு உலகியலுணர்வு மாறிச் சிவாநுபூதியுணர்வே மேம்பட்டு நிகழும்: அது நிகழவே பௌதிக வுடம்பைப்பற்றி வரும் பிராரத்த வினைகள் அவர்க்கு நுகர்ச்சியாதல் செல்லாமையின் வாதிக்கமாட்டா: மாட்டாதொழியவே, அவை பற்றுக்கோடாக நிகழுஞ் சிறப்பில்லார் தந்திரத்துச் சேர்வை டற்றறக் கெடுமென்பார் சேர்வையறப் பித்துப்பத்தரினத்தாய்ப் பரனுணர்வினு லுணரு மெய்த்தவரை மேவா வினையென்றார். எனவே, வீட்டுணர்வை நிலைபெறுத்துஞ் சிவபத்தர்களோடிணங்கிறலன்றி வினை பற்றுக்கோடாகத் தொன்றுதொட்டுப் பயின்று வந்த சிறப்பில்லாரதிணக்கம் அருமையின், அவ்விணக்கம் ஒருதலையான் வேண்டுமென வலியுறுத்தவாறாயிற்று.

இரண்டாமதிகரண முடிந்தது.

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தம்மு ளிருத்தலாற் - றன்னுணரு
நேசத்தர் தம்பா லிகழுந் ததிநெய்போற்
பாசத்தார்க் கின்றாம் பதி. (௯)

இது, திருவேடத்தாரிடத்தே சிவன் பிரகாசித்துநிற்பனாத லா லவர்களைச் சிவனாக வழிபடவேணுமென்கின்றது.

இ-ள். தன்னுணரவேண்டித் தனதுருவைத் தான் கொடுத்துத் தன்னுணரத் தன்னு ளிருத்தலால். எ-து. [தன் பதி-தத்துவாதீதனாயிருக்கின்ற சிவன்] தன்னை யாவரு மறிதலை விரும்பித் தன்னுடைய திருமேனியைத் தனதுபத்தர்களிடத்தேகொடுத்துத் தன்னாலே யாவர்க ளியாதொன்றையு மறியும்படி யவர்களுடைய வுயிர்களுக்குயிரா யெழுந்தருளியிருப்பனாதலால்.

தன்னுணரு நேசத்தர் தம்பா லிகழுந் ததி நெய்போல். எ-து. தன்னையுணருகின்ற பத்தர்களிடத்தே தயிரின் நெய்போலத் தோன்றுவன்.

பாசத்தார்க் கின்றாம் பதி. எ-து. பாசபந்திகளுக்குப் பாலினெய்போலத் தோன்றுதலில்லையா யிருப்பன். எ-று.

எனவே, எங்கு மொக்கநிற்பன் தயிரில்நெய்போலப் பத்தர்களிடத்துத் தோன்றிநிற்பனாதலால் அவர்களைச் சிவனாகவே

வழிபடுவது நன்றென்றாயிற்று. சிவன் திருவேடத்தாரிடத்தே தோன்றிநிற்பனென்னும் பக்கத்துக்கு, தயிரின்நெய் சபக்கமாயினவாறுகாண்க. "அறிவறிவான்றனையறியவாக்கையாக்கி யங்கங்கேயுயிர்க்குயிராயறிவுகொடுத்து" எனாஉர் வழிநூலார். சித்-கஉ—கு, ந—செ. (ந)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம் எ-னின். திருவேடத்தின் இறைவன் பிரகாசமாய் நிற்குமாறு யாங்ஙனமென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். பதி. எ-து. அசிந்திதனாய் நின்ற பரம்பொருளே—தன் உணர வேண்டி. எ-து. உலகத்துள்ளார் தன்னை யறிதற்பொருட்டு—தனது உருவைத்தான் கொடுத்து. எ-து. திருநீறு கண்டிகை முதலிய திருவேடமாகிய தனது திருவடிவத்தைத் தன்னன்பர்க்குக்கொடுத்தலானும்—தன் உணர. எ-து. அவ்வன்பர் தன்னைச் சிவோகம்பாவனையால் அறியச் செய்தலானும்—தன்னுள் இருத்தலால்; எ-து. அங்ஙனம் ஒருகுறியின்கணின்றுணருமவரைத் தனது வியாபகத்துள்ளாக இருத்துதலானும்—தன் உணரும்நேசத்தர் தம்பால் ததி நெய்போல் நிகழும். எ-து. குறியுமிறந்து நின்று பின்னை யுள்ளவாறுணருமதவர்மாட்டுத் தயிரின்கண்ணதாகிய நெய்போல. விளங்கித்தோன்றும்—பாசத்தார்க்கு இன்று ஆம். எ-து. அவ்வியல்பில்லாத பாசக்கட்டுடையார் மாட்டுப் பாலின் கண்ணதாகிய நெய்போல விளங்காதுநிற்கும். எ-று.

செய்தென்பது சொல்லெச்சம்:

இருத்தல் அல்லீற்றுப் பிறவினைத்தொழிற்பெயர்.

கொடுத்துச் செய்திருத்த லானிகழுமென வியையும்.

தன்னுணருநேசத்தரெனப் பெயரடையானும் ஒரேதுக் கூறப்பட்டது. தன்னையென்னுமிரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது.

உணர்தலை மூவிடத்தோதுதலின் இஃதிங்ஙனம் வேறு வேறுரைக்கப்பட்டது.

பாசத்தார்க்கென்பது உருபுமயக்கம்.

இன்மை ஈண்டு விளங்காமைகுறித்து நின்றது.

கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தி லங்கிவே
றுண்டல்போ லின்றங் குளதாமாற் - கண்டவுருத்
தானதுவா யன்றாஞ்ஞன் றானதுவாய்த் தோன்றானே
தானதுவாய்க் காணுந் தவற்கு. (௪)

இது, திருக்கோயில் வழிபடுதல் கூறுகின்றது.

இ-ள். கண்டவுருத் தானதுவாயன்றாஞ்ஞன் எ-து. காணப்பட்ட வடிவுகளெல்லாந் தானாகி யிருந் தவையல்லவாகி நிற்கின்ற சர்வவியாபியாய சிவன்.

காட்டத்திலங்கிவேறுண்டல்போலின்றங்குளதாமால். எ-து. காட்டத்திலக்கினி வேறாக வுண்டானபடி யல்லவானாற்போல வெங்கும் வியாபித்துநின் றொருவன் தனக்கு வேண்டினபொழுது பிரார்த்தித்தவிடத்தே கடைய வந்து தோன்றினாற்போல.

கண்டதொரு மந்திரமூர்த்தமாகக் கண்டதொரு மூர்த்
மந்திரத்தால். தமாதலால் அந்தந்தவிடத்திலே.
எ-து.

தானதுவாய் அந்தஞானமே திருமேனியான ஆநந்தரு
த்தோன்றுமே. பியாய்த் தோன்றுமவிருப்பனே.
எ-து.

(ஓ-எதிர்மறை) தோன்றுவனென்பதாம்.

தானதுவாய் அந்தச் சிவசொரூபந் தானாகிநின்று காணு
காணுந் தவர்க்கு நதபோதனர்க்கு. எ-று.
கு. எ-தா.

எனவே, திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனியை மந்திரமூ
ர்த்தமாகக்கண்டு தற்பாவனையாற் பாவிக்க அந்தபாவனையிற
ந்த சொரூபந் தானாமென்றவாறு. "திருக்கோயிலுள்ளிருக்கு
ந்திருமேனிதன்னைச் சிவனெனவேகண்டவர்க்குச் சிவனுறைவ
ன்" என்றார்வழிநூலார். சித்-கஉ—கு, ௪—செ.

மந்திரமூர்த்தமான சிவலிங்கத்தே தற்சொரூபத்தைக் கா
ணலாமென்னும் பக்கத்துக்கு, காட்டமுமக்கினியுஞ் சபக்கமா
யினவாறுகாண்க. (௪)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். சங்கமவடிவிற்குக் கூறிப்போந்த இ
யல்பில்லாத தாவரவடிவின் மந்திரசாந்நித்திய முள்வழியன்
றிப் பிரகாசமாய் நிற்றல் பெறப்படாதென்பாரை நோக்கி,
சிவாலயத்தினிடத்தும் இறைவன் பிரகாசமாய் நிற்றலை வலியு
றுத்துத லுதலிற்று.

இ-ள். காட்டத்தின் அங்கி வேறு உண்டல்போல். எ-தா. வி
றகிற்றீ கடைகோலாற்கடைந்தழி வேறாய் விளங்கும், அல்லு

ழி விளங்குவதன்றுற்போல—கண்ட உருத்தான் அது ஆய் அன்று ஆனான். எ-து. உயிர்கட்குப் புத்திமுத்தி யளித்தற்பொருட்டுக் காணப்பட்ட தாவர வடிவின்கட் கலப்பினால் அதுவே தானாய் அதுவன்றி வேறு பொருளுமா மியல்புடைய முதல்வன்—கண்டது ஒரு மந்திரத்தான் நின்று அங்கு உளது ஆம் ஆல். எ-து. அதுவே தானாகக் காணாதார்க்குத் தம்மாலறியப்பட்டதொரு மந்திரசாந்நித்தியமில்வழி அவ்வடிவின்கண் விளங்காது நின்று அஃதுள்வழி விளங்கித்தோன்றும்பொருளாம்.—அது தான் ஆய்க் காணும்தவர்க்கு அது தான் ஆய்த் தோன்றுமே. எ-து. அவ்வாறன்றி அவ்வடிவே அவனாகக் காணும் உண்மைத்தவமுடையார்க்கு அப்பெற்றியனேயாய் விளங்கித் தோன்றுங் கொல்லோ. எ-று.

காணாதார்க்கென்பது சொல்லெச்சம்.

மந்திரத்தாலென்னும் பொருளைடைக்கேற்ப உவமையினும் வருவித்துரைக்கப்பட்டது.

உண்டாதல் ஈண்டு விளங்குதன்மேற்று.

ஆல் அசை. ஆனனென்பது பெயர். ஓகாரம் எதிர்மறை.

பொருண்மைபற்றி உளதெனவும் அன்றெனவும் கூறினார்.

தானதுவாயன்றானென்னும் பெயரடையான் அவரவர் பாவனைக்கேற்ப விளங்குதற்கேதுகூறியது. தானதுவா யன்றுதல் சங்கமவடிவிற்குமொக்குமேனும், தாவரவடிவின்கண் நிகழுங் கடாவை இதனானன்றி நீக்கலாகாமையின் ஈண்டுக் கூறினார். இஃதீரிடத்து மொக்குமென்பது முன்னர்ப் பெறப்படும்.

☞ ௪உ—ஞ, மூன்றுமதிகரண முடிந்தது.

அதுவிது வென்ற ததுவல்லான் கண்டா
லதுவிது வென்றதுவு மல்லான் - பொதுவதனி
லத்துவித மாத லகண்டமுந் தைவமே
யத்துவிதி யன்பிற் றொழு. (௫)

இது, சிவனுக்குப் பூசைசெய்தல் கூறுகின்றது. அஃதாவது, நாடிநரம்புமுதலாயினவற்றைத் தானென்றுவருமான்மாவை யல்லவாயிருக்கச்சே இவற்றுக்குச் செய்கிறவுபகாரம் ஆன்மாவுக்காகின்ற முறைமைபோலச் சிவனுகின்ற தற்சொரூபனு மிவ்விடங்களிலே யப்படியாகியுமா யல்லவுமாய் நிறைந்துநிற்றலெ ன்றது. இந்தச் சிவலிங்கத்துக்குச்செய்கின்ற வுபசாரமும் அவனுக்காமாகையாற் பூசைநமஸ்காரங்கள் செய்யவேண்டுமென் றதாம்.

இ-ள். அதுவிது வென்ற ததுவல்லான். எ-து. அதுவல்ல விதுவல்லவென்று நீக்கப்பட்ட தேகமுதலாயினவுமல்லன்.

கண்டா லதுவிதுவென்றதுவு மல்லான். எ-து. விசாரித்துப்பார்க்கில் அதுவல்ல விதுவல் வென்று தேகமுதலாயினவற்றைப் பிரித்து நீக்கப்பட்ட ஆன்மாவுமல்லன்,

பொதுவதனி லத்துவிதம். எ-து. பொதுவாக அவ்விரண்டினு நிறைந்துநின்று அவற்றை சேட்டிப்பித்து நிற்பன்.

ஆதல். எ-து. ஆகையாலே

அகண்டமுஞ் சர்வமுஞ் சிவமயமாம்.
தைவமே. ஏ-து.

ஏகாரம்-தேற்றம்.

அத்துவிதி ய அப்படி யந்தச்சிவலிங்கத்தினும் வேறற
ன்பிற் றொழு. க்கலந்து நிற்பன், அவனைச் சிவ நேசித்து
எ-று. ப் பூசைநமஸ்காரஞ் செய். எ-று.

இது, சம்பிரதாயதிட்டியாலறிவித்தது. (ரு)

சிவஞானமுனிவர் உரை.

எ-து., உ-ம். எ-னின். முதல்வனுக்கு அவ்வியல்பு எல்லாப் பொருட்கண்ணு முண்மையின், அவற்றுள் இவ்விடங்களின்மாத்திரையே வழிபாடு விதித்தலெற்றுக்கென்பாரைநோக்கி, அதனை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். கண்டார்க்கு. எ-து. முதல்வன் உயிர்ப்பொருள் உயிரில் பொருளெல்லாவற்றினும் நிற்குநிலைமை யறியப்பெற்றோர்க்கு—அது இது என்றது அல்லான். எ-து. கண் அருக்கன்போல் அதுவும் இதுவுமெனப் பக்கிசைத்தோதப்பட்ட பேதநிலைமையனு மல்லனாய்—அது என்றது அல்லான். எ-து. உடலுயிர்போல் அதுவேயென்றோதப்பட்ட அபேதநிலைமையனு மல்லனாய் அது இது என்றதையும் அல்லான். எ-து. குணகுணிபோல் அதுவாகிய இதுவென்று பக்கிசையாமலோதப்பட்ட பேதாபேத நிலைமையனுமல்லனாய்—பொதுவதனில் அத்துவிதம் ஆதல் அகண்டமுஞ் தைவமே. எ-து. அறிவொளிபோல் அம்மூன்றற்கும் பொதுமையான அத்துவிதநிலைமையனாதலான் எல்லாப் பொருளும் அவன் வடிவேயாமாயினும்—அத்துவிதி அன்பின் றொழு. எ-து. அவற்றுள்ளும் அன்பு விளையுமிடத்தின் வழிப

டுவாயாக அவ்வத்துவித சித்தாந்தத்தைப் பெற்றுடையோய். எ - று.

அது விதுவென்றது முன்னையது உம்மைத்தொகை; பின்னையது இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

அல்லானென்பதனை மேலுங் கூட்டி, என்றதென்பதனை அதுவென்றதனோடுங் கூட்டியுரைக்க. அல்லானென்பது முற்றெச்சக்குறிப்பு.

என்றதை ஐயீற்றுடைக்குற்றுகரம். உம்மை இறந்தது தழீஇயிற்று. பொதுவதென்னுமது பகுதிப்பொருள் விகுதி. தையமென்னுஞ் சொல்லியல்பு மேலேயுரைத்தாம். ஏகாரந்தேற்றம். ஆயினுமென்பது சொல்லெச்சம். அன்பு ஆகுபெயர். ஏழாவது விரித்துரைக்க.

“திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனி” யினன்றி “எங்குமுருக்காணவொண்ணாத பான் முலைப்பால் விம்மி யொழுகுவது போல் வெளிப்பட்டருளுவ தாகி அடிப்பட்டுவருமன்புவிளையாமையின் ஆண்டுச்செய்யும் வழிபாடே அத்துவிதஞானத்தை நிலைபெறுத்தற் பயத்ததென்பார் அத்துவிதமாதலகண்டமுந் தைவமேயென அநுவதித்து அத்துவிதியன்பிற்றொழுவென்றார். அத்துவிதியென்னும் அண்மைவிளி பயனுணர நின்ற குறிப்புப்பெயர். இதனானே விதிக்குப் பயன்கூறியதூஉ மாயிற்று. இனி அது இதுவென்பன அருவுருவாகிய திருமேனியெனக்கொண்டு அதற்கியையவுரைப்பாருமுளர். அவர், அன்பிலென்றதனை ஏதுப்பொருட்கண் வரும் ஐந்தனுருபேற்ற இயற்பெயராக வைத்துரைப்ப.

வினையா லசத்து விளைதலான் ஞானம்
வினைதீரி னன்றி விளையா - வினைதீர
ஞானத்தை நாடித் தொழவே யதுநிகழு
மானத்தா லன்பிற் றொழு. (௯)

இது, வழிபாட்டாலொழிந்து வினைநீங்கா தென்கின்றது.

இ-ள். வினையாலசத்து விளைதலான். எ-து. யாதொருவினையைச் செய்யுமிடத்து அந்தவினையினாலே அஞ்ஞானம் விளைந்து வருமாகையால்.

என்றது, மனவாக்குக்காயத்தாலொழிந்து ஒருவினையுங்கூடாது. அந்தவினையைச்செய்யுமிடத்து யான்செய்தேன் பிறர் செயதா ரென்னறியானென் றொழியவாராதாகையால் யானெனதென்ப துள்ளவளவும் வினைநீங்காதென்பதாயிற்று.

ஞானம் வினைதீரினன்றி விளையா. எ-து. அப்படியாகியவினை நீங்கினாலொழிந்து உண்மைஞானம் விளையாது.

வினைதீர ஞானத்தைநாடித் தொழவே யது நிகழும். எ-து. அந்தவினையைத்தீரத் திகழுஞ்ஞானத்தினையாய்ந்தறிந்து வழிபட வந்தச்சிவப்பிரகாசந்தோன்றும்.

ஆனத்தாலன்பிற்றொழு. எ-து. ஆகையாலன்பினையுடையாய், சிவபத்தரையுஞ் சிவலிங்கத்தையு மன்பினாற் கண்டு வழிபடுக. எ-று.

அப்படி வழிபட்டுவரவே தேகாந்தமளவும் பிராரத்தகன்ம

ம் புசிக்கவேணும், புசிக்குமிடத்து யானெனதென் றெழிய வாராது, அதுவருமளவும் வினையேறும், அந்தவினை ஞானத்தி லேநின்று நீக்கவேண்டும், அந்தஞானத்தினிற்ற லெட்பொழு துங் கூடாதாகையாற் றொண்டர்களையும் சிவலிங்கத்தையும் வழிபட வந்தவினையேறுதென்றதாம்.

ஞானத்தைநாடி என்றது கன்மம் புசித்தற்கு வருகின்றமு றைமையு மிந்திரியங்கள் விடயீகரிக்கின்ற முறைமையுந் தான் அதுவதுவாய் நிற்கின்ற முறைமையுங் கத்தா புசிப்பிக்கின்ற முறைமையு மாராயவென்றதாம்.

இது சம்பிரதாயதிட்டியாலறிவித்தது. (சு)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம். எ-னின். அசத்தாயுள்ள வன்னபேதங்களை அ சத்தென்று கண்டொருவவே, ஞானசொரூபம் உளதாய் அத் துவிதத்தையுணர்த்துமாகலான், அதன்பொருட்டு வழிபாடு வே றுவிதித்தல் எற்றுக்கென்பாரை நோக்கி, அதனை வலியுறுத்து த னுதலிற்று.

இ-ள். வினையால் அசத்து விளைதலான் ஞானம் வினைதீரி ன் அன்றி விளையா. எ-து. உடம்பின் கண்ணதாகிய பிராரத் த வாசனை உயிர்க்குத் தாக்குவதாயுள்ள துணையும், அதனான் வ ரும் விருப்பு வெறுப்புக்களும், அவை பற்றிக் காட்சிப்படும் மண் முதன் மாயைகளும், அவைபற்றி நிகழும் விபரீதவுணர்வுமாகி ய அசத்துக்கள் ஒருவிய வழியும் வந்துகூடி மேம்படுவனவாக லான்; அவ்வளவிற்கெல்லாம் மூலமாகிய பிராரத்தவாசனை ப ற்றறக் கழிந்தாலன்றி, அவ்வசத்தைக் கீழ்ப்படுத்து மெய்யுண ர்வு மேம்படுதல் கூடாதாகலின்—வினை தீர ஞானத்தை நாடி

த் தொழவே அது நிகழும். எ-று. அவ்வாசனை பற்றறக் கழிக ற்பொருட்டு அம்மெய்யுணர்வுடையானை நாடி வழிபடவே அவ்வினை நீங்கி மெய்யுணர்வு மேம்பட்டு நிகழும்—ஆனத்தால் அன்பின் தொழு. எ-து. ஆகலான் அன்பினுல் அவனை வழிபடுவாயாக. எ-று.

அசத்தைபொருவியவழி உளதாகிய ஞானசொரூபம் நிலைபெறுதல் அவ்வசத்தினது விளைவிற்கு வேராகிய வினைத்தீர்வின்கண்ணதாகலான், அவ்வினை வேரறுத்து மெய்யுணர்வை நிலைபெறுத்துதற்பொருட்டு அதனை அங்ஙனநிலைபெறுத்திஞர்மாட்டுச் செய்யும் வழிபாடு ஒருதலையான் வேண்டப்படுமென்பதாம். அற்றேல், அதன்பொருட்டு ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படியுச்சரிக்கவென்றவதுவே அதற்கமையுமெனின்,—அஃதொக்கும். அவ்வுச்சரிப்பும் இவ்வழிபாட்டையின்றியமையாதென்க. அற்றாகலினன்றே, ஆண்டஞ்செழுத் தாலெனவும், மண்முதளுளமெனவும், அகத்து வழிபாட்டை உடன் கூறியதூஉமென்பது.

விளையாதென்னுந் துவ்விகுதி விகாரத்தாற்றொக்கது.
பின் வந்த ஞானம் ஆகுபெயர்.
ஆனதனுலென்பது ஆனத்தாலென மரீஇயிற்று.

தன்னை பறிவித்துத் தான்றனைச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது - முன்னவன்றான்
தானேதானச்செய்துந் தைவமென்றுந் தைவமே
யானுற் றொழுகை வலி. (எ)

இது, தானவனானபின்பு வழிபா டென்னென்போர்க்கு அது வேணுமென்பதுவும், ஆசாரியனை சிவன் அவனை யெவ்விடத்துங் காணவேணுமென்பதுவுங் கூறுகின்றது.

இ-ள். தன்னை யறிவித்துத் தான் ருனாச் செய்தானை. எ-து. ஒன்றையு மறியாமலிருந்த வான்மாவைத் தன்னுடையவருளினலே யாணவ மாயை காமியமென்னு மூன்றையுந் தரிசிப்பித்து, தன்னைத்தரிசிப்பித்து, தன்னுடைய சொரூபமே சொரூபமாகநிறுத்திய குருபரனைச் (சிவனென்றுங் குருவென்றுந் திருவேடமென்றுங் கூறியவாறறிக.)

பின்னை மறத்தல் பிழை. எ-து. அவன் தானானபின்பு தேகமுள்ளளவு மறக்கின்றது பாதகமாம்.

அலது. எ-து. இதுவல்லதும்,

முன்னவன்ருன் ருனேதாருச் செய்துந் தைவம். எ-து. அப்படிக் குருமூர்த்தமாகிய சிவன்ருன் தன்னுடையசொரூபமே யிவனுக்குச்சொரூபமாகச் செய்தவிடத்தும் அடிமையாவன்ருே நிற்கின்ருன்.

தைவமென்றுந் தைவமே யானல். எ-து. என்றுந் தைவமேயாம். அதனலே எவ்விடத்தும் அடிமையேயானல்

தொழுகைவலி. எ-து. இவ்விடத்து மடிமையாய்நின்று தொழுகையேயன்ருே தனக்குப் பலமாவது. எ-று

எனவே, சிவனுடைய சொரூபமானவிடத்தும் பெறுவானுங் கத்தாவு மடிமையு முண்டென்னுந்துணிவும் இவ்விடத்து மப்படி யடிமையாய் நீங்காமனின்று வழிபடவேணுமென்பதுவுங் கூறினராயிற்று. "பரம்பிரமமிவனென்றும்பரசிவன்ருனென்றும்." என்ருர்வழிநூலார். சித்-சஉ—ரு, எ—செ.

இதுசம்பிரதாயதிட்டியாலறிவித்தது. (எ)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. உ-ம்: எ-னின். அங்ஙனம் பயன்பற்றி விதிக்கப்படும் வழிபாடு வேள்வி முதலியனபோலப் பயன் வேண்டாமையானாதல், பின்னர்ச் செய்து பெறுதுமென்றாதல், ஒரோவழியொழியவும் படுங்கொல்லோவென்பாரை நோக்கி; அதுசெய்யாவழிப்படுங் குற்றமும் செய்தல் கடமையாமாறும் உணர்த்தி விதித்தலை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். தன்னை அறிவித்துத் தான் தானாச் செய்தானைப் பின்னை மறத்தல் பிழை அலது. எ-து. தன்னுண்மையை அறிய மாட்டாது குருடாய்க் கிடந்த உயிர்க்குப் பலவாற்றானும் அதனைத் தெரித்துணர்த்தி எத்தனையுமெளிய அவ்வுயிரை எத்தனையுமரிய தானாம்வண்ணஞ் செய்தளித்த பெரியதோருதவியை அதன் பின்னர் மறக்குமாயின், அஃது இதற்குமுன் அறியாமையான் மறந்த குற்றம்போலத் தீர்திறனுடையதோர் குற்றமன்றாகலானும்—முன்னவனே தானே தானாச் செய்தும் தைவம் என்றும் தைவமே மானே தொழுகை வலி. எ-து. முதல்வன் அங்ஙனந் தான்றானேயாகச் செய்தாலும் இதுகாறுந் தனக்குச் சுதந்திரமின்றி முதல்வனது உபகாரத்தையின்றியமையாதாய் அடிமையாகிய உயிர் எக்காலத்தும் அவ்வாறடிமையேயாமாகலானும், தான்றானாச் செய்தளித்த அப்பெரியோனை வழிபடுதலே அவ்வுயிர்க்கு வலியாவது. எ-று.

தமதுமுதறானே குருவாகலிற் றன்றானாச் செய்தானையென்றும், முன்னை மறந்த குற்றம் அறியாது நிகழ்ந்ததாகலிற் கழுவப்படும் இஃததுபோற் கழுவப்படுவ தன்றென்பார் பின்னை மறத்தல் பிழையலதென்றுங் கூறினார். பின்னை மறத்தலென்பதனால் முன்னை மறத்தல் பெறப்பட்டது. "எந்நன்றி

கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்னுங் கருத்து நோக்கிக் கூறியதூஉமாம். திருக்குறள்- ௧௧—அதிகாரம்-௧௦—குறள்.

அலதுமெனப் பாடமோதி இது பிழையாதலன்றியுமென்றுரைப்பாரு முளர்.

ஏகாரம் முன்னையது அசைநிலை; பின்னையன தேற்றம்.

செய்தாலென்பது செய்தெனத் திரிந்தது.

உம்மை சிறப்பின் கண் வந்தது.

தான்றானுச்செய்தல் எதனையெதனைப் பற்றினும் அதுவதுவாமுயிர் தன்னையறிந்தவழி எண்குணங்களானிறைந்துதன்வண்ணமாகச்செய்தல். அங்ஙனஞ்செய்தவழியும் "உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கே யுரித்து" என்பார் சைவமென்று ந் சைவமேயென்றார். சித்-௧௧—௬, ௧௦—செ. "செம்பிரத." சைவமென்னுஞ் சொல்லியல்பு மேலே யுரைத்தாம்.

மானையென்னும் இரண்டனுருபு விகாரத்தாற்றொக்கது. மானென்பது வடசொற்றிரிபு. சுட்டு வருவிக்க.

வலிதருவதனை வலியென்றுபசரித்தார்.

இவ்வுதாரணங்கண் மூன்றானும், வழிபாட்டிற்கும் இடத்து நிகழ்பொருண்மாத்திரையேயன்றி இடவிசேடமும் பெறல்வேண்டுமென அதனை வலியுறுத்துமுகத்தானே, முறையே சிவலிங்கத்தையுஞ் சிவபத்தர் வேடத்தையுஞ் சிவதேசிகர்களையும்அறிந்து வழிபடுமாறு கூறப்பட்டது.

சிவமென்னு மந்தர சிந்தைநேர் நோக்கப்
பவமின்றாங் கண்வா சகத்திற் - சிவமுண்டா
மொன்று மிரண்டு மலத்தார்க்கிங் கொண்குருவா
லின்றிந்நூன் மும்மை மலர்க்கு. (அ)

இது, சிவனையுங் குருவையுஞ் சாத்திரத்தையு மொன்றாகநினைந்து வழிபடவேணுமென்கின்றது.

இ-ள். சிவமே சர்வான்மாக்களுக்கும் பிராணனாகியுள்ளன்னு மளாரென்னுஞ் சிவனந்ததரன். எ-து.

சிந்தை நேர் நின்றநிலையிலே திருவுளத்தடைக்கப் பிறநோக்கப் பவ வியில்லையாகும் சிவம் பிரகாசிக்குமொருமமினரும் சிவமு லத்தையுடைய விஞ்ஞானகலர்க்குப் பார்க்கண்டா மொன் ப்பவமின்றும். அமலத்தார்க்கு. எ-து.

கண்வாசகத்தில் பவமின்றும் சிவமுண்டா மிரண்டு மலத்தார்க்கு. ஒன்குருவால்சிந்தைநேர்நோக்க. எ-து.

திருநயனங்களாலேபார்க்கப் பிறவியில்லையாகும் சிவம் பிரகாசிக்குமிரண்டுமலத்தையுடைய பிரளயாகலர்க்குச் சகத்திலொண்குருவாய்ச் சிந்தைநேராகப் பார்க்க

இன் றிந் நூல் பவமின்றுஞ் சிவ மூண்டா மொன்று மிரண் டுமலத்தார்க்கு. எ-து.

இப்பொழுது சகத்திலேயவர்களைப்போலத் திருமேனிகொண் டொள்ளிய ரூபனாகிவந்து திருவுளத்தடைக்கத் திருநயனங்களாலே பார்க்க வினியசாத்திரங்களாயினவற்றையுணர்த்தப் பிறவியில்லையாகுஞ்சிவம்பிரகாசிக்கும் மூன்று மலத்தையுடைய சகலர்க்கு. எ-று.

நூலென்றது நூலையுணர்த்தவென்பதாம்.

பவமின்றாஞ் சிவமுண்டா மென்பதனை யெவ்விடத்துங்கூட் டுக.

சகலர்க் கெல்லாம்வேண்டுமென வறிக. "பரம்பிரம்மிவனென் றும்பரசிவன்றானென்றும் பரஞானமிவனென்றும்." என்றார்வழிநூலார். சித்-கஉ—கூ, எ—செ.

இதுசம்பிரதாயதிட்டியாலறிவித்தது. (அ)

சிவஞானமுனிவர் உரை.

எ-து. செ-ள் எ-னின் இங்ஙனஞ் சிவாகமத்துண்ஞானபாதப்பொருளெல்லாவற்றையும் பொது உண்மையென்றிருவகைப்படுத்துப் பிரமாணவியல் இலக்கணவியல் சாதனவியல் பயனியலென நான்கியலாக வைத்துப் போதிப்பதாகிய இச்சிவஞானபோதநூலைக் கோடற்குரிய அதிகாரிகளாவார் இவரென்ப துணர்த்துத னுதலிற்று

இ-ள். சிவம்என்னும் அந்த தர. எ-து. தான்றானச்செய்தவாற்றாற் சீவனென்னு மியல்பினீங்கிச் சிவமென்றோதப்படும் வேதாந்தத்தெளிவாகிய சித்தாந்தத்தையுடைய மாணவகனே, ஒன்றும் இரண்டும் மலத்தார்க்கு. எ-து. ஒன்றுமிரண்டுமாய மலங்களையுடைய விஞ்ஞானகலர்க்கும் பிரளயாகலர்க்கும்—சிந்தைநேர் நோக்கக் கண் வாசகத்தின் பவம் இன்று ஆம். எ-து. முறையே அறிவின்கணின்று அருட்பார்வையானோக்குதலானும் தேவகுருவாய் முன்னின்று செய்யுந் திருநோக்கம் பரிசம் வாக்கெனப்படுந் தீக்கையானும் பிறவிக்கேதுவாய பசுத்துவநீங்கிச் சிவத்துவம் விளங்குமாகலான்—மும்மை மலர்க்கு இங்கு ஒண்குருவால் இன்று இந்நூல். எ-து. அவரின் வேறாகிய மும்மலமுடையவர்க்கே உரித்து இவ்வுலகத்தநுப

வமுடைய தேசிகராற் போதிக்கப்படும் இச்சிவஞானபோத நூல். எ-று

அந்தம் வேதாந்தம், அந்ததரஞ் சித்தாந்தமாகலின், அதனைப் பெற்றுராது பெருமைகூறுவார் சிவமென்னு மந்ததரவென்ருர்.

என்னுமென்புழிப் படுசொற் ருெக்குநின்றது. சிந்தை-அறிவு. கண்ணுருபு விரித்துரைக்க.

நேர் நோக்குதல் முன்னை மருட்பார்வையை மாற்றி அருட்பார்வையா னேக்குதல். நோக்க நோக்குதலானென்க.

கண் வாசகங்களைக் கூறவே இனம் பற்றிப் பரிசமும் உடன் கொள்ளப்படும்.

பவம் ஆகுபெயர்.

இந்நூல் அநுபவமுடைய தேசிகனாலன்றி விளங்காதென்பார் ஒண்குருவாலென்ருர்.

போதிக்கப்படுமென்பது அவாய் நிலையான் வந்தது.

இன்றிந் நூலென்பது இந் நூலென்னும் பொருட்டு. இக்காலத் துரைக்கப்படு நூலெனினுமமையும். அது "தானுரைத்தானின்று" என வருகின்ற வெண்பாவாற் கூறியவாற்ருனுமறிக.

மும்மையென்றது ஈண்டெண்ணின் மேனின்றது, "தெரிமாண் டமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்" என்புழிப்போல.

நான்காவது புறனடை முடிந்தது.

பன்னிரண்டாஞ்சூத்திர முடிந்தது.

சிறப்பியல்பு - பயனியல் முற்றிற்று.

நூன்மரபு.

தனியன்.

எந்தை சனற்குமர னேத்தித் தொழுமியல்பா
னந்தி யருள்செய்த ஞானநூல்-சிந்தைசெய்திப் [
போதுரைத்தான் மெய்கண்டான் பூதலத்தோர் தா
வேது திருட்டாந்தத்தா லின்று.

இது, நூன்முறைகூறுகின்றது.

இ-ள். எந்தை சனற்குமரனேத்தித் தொழுமியல்பான். எ-து. எம்முடைய சுவாமியான சநற்குமா வான் தோத்திரங்கண் முதலாயினவ தொழுகமுறைமையாலே.

நந்தி யருள்செய்த ஞானநூல். எ-து. ஸ்ரீ நந்திதேவநாயனார் அவருக் கரு செய்த ஞானநூலை.

அது பன்னிரண்டு கிரந்த விருத்தமும்.

சிந்தைசெய்திப்போதுரைத்தான் மெய்கண்டான் பூதலத்தோர் தாமுணர. எ-து. யாம்பெற்றதெல்லாம் யாவரும்பெறு ன்பது திருவுள்ளத்தடைத்து இப்பொ அருளிச்செய்தான் தமிழ்நூலாகப் பூ ோரறியும்படி அசத்தை யசத்தெ நீக்கிச் சத்தைத் தரிசித்தவன்.

திரு... பக்ஷம் - ஏது— ...ந்தங்களா லிப்
ர ...வின் பொழுது. எ-று.
—.இ

1, பரமேச்சுரன் நந்திகேச்சுரதே... கருளிச்செய்ய
சநற்குமாரபகவானுக் கருளிச்செய் ...தப்பரம்பரையி
மய்கண்டதேவநாயனார்க் கருளிச்செய்ய, அவ ரிப்படித்
கவருளிச்செய்தாரென்றதாம்.

இவ் வுரையாசிரியர் பெயர் முதலிய.

சொல் லுண்மைச் சிவஞான போதம்
ணர்ந்த பாண்டிப் பெருமா - னருமறையின்
ந் சுவேதவந மெய்கண்டான் பேரருளா
பக் துரையெழுதி னான்.

நளாம் மெய்கண்டா னுண்டகத்தா ளேபரவப்
ரூனும் பாண்டிப் பெருமானார் - சொற்ற
ாலை மான்கானீர் காட்டளவை யீட்டின்
ப்பாலைக் கேளா முனம்.

, அகண்டபரிபூரணமாய்ச் சொரூபத் தழுந்துகலாம்,
விரிக்கிற் பெருகும். இவ்வாறு மகாவாக்கியமுறையாற்
1.

ரிய செஞ்சொற் சிவஞான போதத்
பொருளி னமுதங் - கருதிற்
யுமுண்மைப் பாண்டிப்பெருமாள் - பரிவாற்
னபோதந் தெரியவுரை செய்தான்
ிசனுணரத் தான்.

சிவஞானபோதவுரை முற்றும் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம் சிவஞானபோத விருத்தியுரை.

சிவஞானமுனிவர் சிற்றுரையிற் கூறியுள்ள
மெய்கண்டதேவர் தோத்திரம்.

சிறியவாடியிற் பெரியமால்வரைப் பொருள்செறிந்தாங்
கறிவுநூல்களின் முடிபெலாமகத் தடக்கியதோர்
நெறியினீடிய நிகழ்சிவஞான போதத்தைக்
குறியதீந்தமி ழாலுரைகுரவனைப் பணிவாம்.

நூலினை யறிந்தார்போன்று நுண்ணுணர் வுடையார்போன்று, மாலினைத் தவிர்ந்தார்போன்றும் வழியறிந் தடைந்தார்போன்று, மேலெனத் தத்தங்கோளே விதந்துரைக்கின்றார் நீங்கி, சாலவன் றருளுநூலின் றலைப்படா வுள்ளத்தாரே.

மூன்று மலங்கெடுத்து மூலமா மப்பொருளுந்
தோன்ற வருளுந்தன் றொண்டர்க்கிங் - கான்றமைந்தோர்
கைகண்ட தன்றே கடன்ஞாலத் தெப்பொருட்கு
மெய்கண்ட தேவன் விரைத்தாள்.

p

1 — 152

2 — 219
3 — 265
4 — 289
5 — 324
6 — 343
7 — 368
8 — 385
9 — 418
10 — 448
11 — 472
12 — 496